னுக்கிட்ட உடம்புமாய் பெருமாள்கண்படும்படி நின்றாரிறே. அப்படியேயிறே இவள்கையும்அஞ்ஜலியுமாயிருப்பது. "காரிகை" என்று அழகு. இவ்வழகைக்கண்டால், அவன்மேல்விழுந்தகையும் அஞ்ஜலியுமாய் நிற்கவன்றோவடுப்பது. அத்தலை இத்தலையாயிருக்கிற இவளுக்கு என்ன பெண்மையென்கிறாள். இத்தால் காயிகவ்யாபாரம் சொல்லிற்று;

(பெண்மையித்யாதி)வாசிகவ்யாபாரம்,சொல்லுகிறாள். (பெண்மையும் தன்னுடை யுண்மையுரைக்கின்றாள்) பெண்மை-ஸ்த்ரீத்வம். அதாகிறது-ஏதேனும் ஓரவஸ்த்தை பிறந்தாலும் உயிர்த்தோழிக்குங்கூட மறைக்கும்படியிறேயிருப்பது. அவளும் இவளுடைய வ்யாபாரங்களைக்கண்டு, "இவளுக்குஓடுகிறதசைஇதுவாகாதே" என்றறியுமித்தனையிறே; ஆயிருக்கப் பெற்றதாயான எனக்கும் வாய்விடாநின்றாள்; இவளுக்கு என்னபெண்மையென்கிறாள். (தன்னுடையுண்மையுரைக்கின்றாள்) தன்னுடைய உள்ளிலுண்டான வ்யாபாரம்; அதவா, தன்னுடைய "உண்மை" உண்டு-ஸத்பாவம், அத்தைச்சொல்லாநின்றாள். (க) "ஆசசக்ஷேऽத ஸத்பாவம் - ஆசசக்ஷேதஸத்பாவம்" இத்யாதி. ஸ்ரீ பரதாழ்வான் வாராநின்றானென்று ஸ்ரீ குஹப்பெருமாள் கேட்டவநந்தரம், இளையபெருமாள் செய்தத்தை யெல்லாம் சொல்லத்துடங்கினார். "வந்தபோது செய்யும்படி சொல்லுகிறதென், ஓடம்நின்றதே, கோலிருந்ததே, தானும், தன்பரிகரமும் அக்கரைப்படும்படி காண்கிறேன்" என்று ஆக்ரஹஸித்தனாயிருந்தான். அநந்தரம் ஸுமந்த்ரனுள்ளிட்டார் வந்து இளைய

"பெண்மையும்" என்ற ச (ச) காரம் விரோதத்திலேயாய், "உரைக்கப்போகாதத்தையும் உரைக்கின்றாள்" என்றாய், அத்தையருளிச் செய்கிறார் (அதாகிறதித்யாதி). பெண்மை யாவது-ஸம்ஶ்லேஷரஸஜ்ஞதையாய், அத்தையும், ததநுகுணமான தன்னுடைய ஸத்வ்ருத்திவிசேஷங்களாகிற உண்மையும் - சொல்லத்தக்க விஷயமல்லாதாக்கி, கேளாதிருக்கத்தானே யுரைக்கின்றாளென்றது கூடுமோவென்ன; கானவரான கு (ஃ) ஹப்பெருமாள், ரகுகுலத்தில்பிறந்து நாகரிகரான பரதாழ்வானுக்குத்தாமே உரைத்தாப்போலே என்றத்தை ஸம்வாதமாகவருளிச்செய்து வ்யாக்யாநம் செய்கிறார் (ஆசசக்ஷேயித்யாதி). "அத" என்றதுக்கு - ஆநந்தர்யமர்த்தமாகையாலே பூர்வவ்ருத்தத்தை யருளிச்செய்கிறார் (வந்தபோதித்யாதி). "மஹாத்மந:" என்

(க) ரா-அயோ-அசு-க.

பெருமாள் ஸ்வபாவம் போலே காண் பரதாழ்வானுடைய ஸ்வபாவ மிருப்பது. அவனை நீ காணவேணுங்காணென்ன; இவனும்போய்க் கண்டவநந்தரம் "இவருடைய ஸ்வபாவமிருந்தபடியென்" என்று ஆஶ்சர்யப்பட்டு இவருக்கு நம்மால் கொடுக்கலாம் உபஹாரமென்னென்று பார்த்து, இவருக்கு ஸத்ருஶமான உபஹாரம் - இளைய பெருமாள் ஸ்வபாவங்களா மித்தனையென்று அவற்றைச்சொல்லத் தொடங்கினான்; [ஆசசக்ஷே ஸத்பாவம்] ஸத்பாவமாகிறது-ஸத்துக் களுடையஆசாரம், (௧) సచ్ఛబ్దస్సాధువాచకః- ஸச்சப்தஸ்ஸாதுவாசகஃ" (௨) "సాధవః క్షీణదోషాస్తు-ஸாதவஃக்ஷீணதோஷாஸ்து" என்கிறபடியே ஸத்துக்களாவார் க்ஷீணதோஷரிறே. [பாவம்] ஆசாரம். ஒருவன்-அர்த்தவான், அபிஜாதன், வித்வான், என்றறிவது-அவர்களநுஷ்டானம் கொண்டிறே. அப்படியேயிறே இவருடைய அநுஷ்டாநமும். "பெருமாள் கண்வளர்ந்தருளுகைக்குப் புல்கள் அறுப்பது. படுக்கை படுப்பது. தாமரைஇலையைப்பறித்துத்தண்ணீரைமுகந்து திருவடிகளை விளக்குவது, பின்னையும் தண்ணீரைமுகந்து அமுது செய்யப் பண்ணுவது, சேஷித்தத்தை பிராட்டியை அமுதுசெய்யப்பண்ணுவது. கண்வளர்ந்தருளப்பண்ணி, கையும் வில்லுமாய்க் கொண்டு நம்மையுங்கூட அசிர்த்து நோக்குவதாய்க் காணுமவருடைய ஆசாரமிருந்தபடி" என்று அவர் வ்ருத்தாந்தத்தைச் சொல்லத்துடங்கினான். [లక్ష్మణస్య మహాత్మనః - லக்ஷ்மணஸ்யமஹாத்மநஃ] கடலைக் கையாலே இறைக்கத்துடங்கினான். [லக்ஷ்மணஸ்யம ஹாத்மநஃ ஸத்பாவம்-அப்ரமேயாய பரதாய-ஆசசக்ஷே] கழியின் பெருமையைக் கடலுக்குச் சொல்லத்துடங்கினான். பரதாயாப்ரமேயாய ஆசசக்ஷே] சேஷபூதனாநல் " நான்பணிசெய்யக்கடவேன் " என்று சொல்லியோ பணிசெய்வது; அதுகிடக்க; (௩) [అహం సర్వం కరిష్యామి - அஹம்ஸர்வம்கரிஷ்யாமி] சொல்லிற்றெல்லாம் செய்யக்கடவேனென்று ப்ரதிஜ்ஞைபண்ணி "ராஜ்யத்திலே இரீர்"என்ன;

றதுக்குத் தாத்பர்யம் (கடலையித்யாதி). "அப்ரமேயாய" என்றத்தாலே, "மஹாத்மா" என்று பரிச்சேதிக்கக் கூடாமையை விவக்ஷித்தருளிச் செய்கிறார் (கழியினித்யாதி). இளையபெருமாள் காட்டிலே ஸகலவிதகைங்கர்யங் களும்பண்ணியிருக்க, அவரைக் கழிஸ்த்தாநேயாக்கப்போமோவென்னவரு

---

(௧) (௨) (௩) ரா-அயோ-௩௧-௨௫.

மாட்டேனென்று பின்போகை-சேஷத்வக்ருத்யமோ? நெருப்பிலே புகச்சொன்னாராகில் அத்தைச்செய்தல், அதில் நன்றும்படி ராஜ்யத்திலேயிருக்கச் சொன்னாராகில், அத்தைச்செய்தல்; பின்போகச் சொன்னாராகில், அத்தைச் செய்தல்; இப்படி சொல்லிற்றுச் செய்கையன்றோ சேஷத்வக்ருத்யம். [குஹ:] நெடுநாள் பரிசயித்த பரதனுக்கு ஒருநாள் சீவித்த குஹன் சொல்லும்படியாவதே; இன்னான் இன்னார்க்குச் சொல்லுகை யென்றில்லையாகாதே; கற்றவர்களாமித்தனையாகாதே வேண்டுவது. [ஜகாத கோசர: குஹநகோசர:] "காட்டில் மரத்திலும் மட்டையிலும் பழகிப்போந்த இவன் இளைய பெருமாள் படிகளைப்பேசிப் போந்தபடி கண்டதே" என்று ருஷி கொண்டாடுகிறான். அங்ஙனன்றிக்கே பெருமாளுடைய வ்யதிரேகத்தில் தூற்றிலே தலைமடுத்துக்கொண்டு கிடந்தவன், பரதனைக் கண்டவாறே புறப்பட்டானென்னுதல்.

(வெண்ணெயுண்டித்யாதி) வாயாலே சொல்லுமளவேயோ? ஸகல கரணங்களாலும் சொல்லா நின்றாள், இவளுக்கென்ன பெண்மை யென்கிறாள். கீழ்ப்பாட்டிலே "கார்க்கடல் வண்ணர்மேலெண்ணம்" என்றவன் வடிவோடே அணையவேணுமென்று மநோரதித்து *முலையிலங்கு பூம்பயலை முன்போடவிறே இவளிருக்கிறது. "அவனுகிறான், ஒருத்தியுடைய உடைமையிலே ச(ங்)பலனாய் அது கிட்டாமையாலே களவிலே இழிந்து, அது தன்னிலும் வாயதுகையதாக அகப்பட்டு (க)"கட்டுண்டான்காண்" என்று சிலர்சொன்னால், "அங்ஙனே ஒருஸ்த்ரீ உடைமையிலே சபலனுவானொருவனைக் கப்பெற்றோமிறே. அது கிட்டாதென்று விட்டுப்போகையன்றிக்கே

ளிச்செய்கிறார் (சேஷபூதனித்யாதி). (பின்போகச்சொன்னாராகில்) என்றது- மீண்டெழுந்தருளித்தாம் அபிஷிக்தராய்ப்போகச் சொன்னாராகிலென்றபடி (சீவித்த) கண்டவென்கை.

கேவலம் வாக்வ்யாபாரமன்றிக்கே, மநஸ்ஸாலும் வெளியிடுகிறாளென்னக்கோலி, அதுக்கு அடையாளமாக வைவர்ண்யமும் போகக்கண்டோமென்கிறாளென்று விவக்ஷித்து, கீழோடுமேலெல்லாம்கூட்டித்தொகுத்தபாவத்தையருளிச்செய்கிறார் (ஸகலேத்யாதி). வைவர்ண்யம் வருகைக்கு மூலத்தைக் காட்டுகிறார் (கீழித்யாதி). மகளுடைய ஸந்தோஷ ப்ரகாரந்தன்னை விவரிக்

(க) தி-மொ-கக-ரு-ரு.

களவிலே இழியப்பெற்றேமே, அதுதன்னிலும்அகப்பட்டுக்கட்டுண்ணும்படி எளியனாகப்பெற்றேமே'' என்றவ்வபதாநங்களைக்கேட்டமாத்ரத்திலே அவ்வுடம்போடே அணைந்தால் பிறக்கும் ஆஸ்வாஸங்களடையப் பிறந்து ஸந்துஷ்டையானாள். அவாப்தஸமஸ்தகாமனானவன், ஒருத்தி உடைமையை ஆசைப்படுவதாம், ஸர்வசக்தியானவன் களவிலேஇழிவதாம்; அதுதன்னிலும் அகப்பட்டுக் கட்டுண்ணும்படி எளியனாவதாம்; இனிநமக்கொரு குறையுண்டோவென்கிறாள் ; .... (௫)

௬.—வடவரைநின்றும் வந்தின்றுகணபுரம்
இடவகைகொள்வது யாமென்றுபேசினாள்
மடவரல்மாதரென்பேதை யிவர்க்கிவள்
கடவதென் கண்டுயிலின்றிவர் கொள்ளவே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
யாம்	நாம்	பேதை	பா(ஞ)லையாய்
வட	வடக்கிலுள்ள	என்	என்னுடைய
வரைநின்றும்	திருமலையில்நின்றும்	மாதர்	பெண்ணானவ
வந்து	வந்து	இவள்	இவள் [கு
இன்று	இன்றைக்கு	இவர்க்கு	இந்த எம்பெருமானுக்
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கடவதென்	என்ன செய்யப்ராப்தியுண்டு ;
இடவகை	வாஸஸ்தாநமாக	இவர்	இந்தஎம்பெருமான்
கொள்வது	கொள்ளுகைக்காக (வந்தோம்),	இன்று	இன்றையதினம் (இவனுடைய
என்று	என்று	கண்டுயில்	நித்ரையை
பேசினாள்	சொன்னாள் ;	கொள்ளவே	கொள்வதற்குப்ரயோஜநமென். (௬)
மடவரல்	ப(ற்)வ்வையாய்		

அவ.—ஆறும்பாட்டு. கீழ்ப்பாட்டிலே "தன்னுடையுண்மையுரைக்கின்றாள்'' என்றும், "வெண்ணெயுண்டாப் புண்டவண்ணம் விளம்பினால் வண்ணமும் பொன்னிறமாவதொழியும்'' என்றும் சொன்னாய். அதிலுண்மை எது ; பொன்னிறம்போனபடியென்னெ

கிறார் (அவாப்தேத்யாதி). ... ... (௫)

அ௬.—ஆறும்பாட்டு. (வடவரையித்யாதி) "உண்மை'' என்றது ஸத்வ்ருத்திவிசேஷம். அந்தஸத்வ்ருத்திதானும் ப்ரகாரப்ரகாரிபாவாநுஸந்தாநத்தில் உறைப்பாலே அபேதாநுஸந்தாநமென்று விவக்ஷித்து விரஹதசை

ன்ன; அத்தைச்சொல்லுகிறாள். கண்ணனூரென்றாளிறே கீழ்; அந்தக் கண்ணனூரான திருவாய்ப்பாடியில் பெண்களுடைய (க) [గురవః కిం కరిష్యన్తి దగ్ధానాం విరహాగ్నినా - குரவஃ கிம்கரிஷ்யந்தி தக்த்தாநாம் விரஹாக்நிநா] என்று - "இக்குருக்கள் நம்மைச் செய்யப்புகுகிறதென்; விரஹாக்நியாலே வெந்துகிடக்கிறநம்மை ஆற்றி ஒருகுடம் நீர்சொரிவார்களோ" என்று பந்துவர்க்கங்களை நேராகவிட்டு க்ருஷ்ணனை அநுபவிக்கக் கடவதாக யமுநாதீரத்தேற வந்தார்கள்; அங்கு க்ருஷ்ணனைக்கண்டிலர்கள்; பின்பு அநுகாரத்திலே இழிந்து, "நான் நடவாநின்றேன், நீ நடைச்சக்ரவத்துப் பிடித்துக்காண் என்பது; (உ)[దుష్టకాళియ తిష్ఠాత్ర కృష్ణోఽహమితి చాపరా] துஷ்டகாளிய திஷ்ட்டாத்ர க்ருஷ்ணோஹமிதிசாபரா] என்று - "பாரடா காளியனே! நான் உன்மேலேஏறி ஆடப்புகாநின்றேன்" என்பது-இப்படிகளாலே அநுகரித்தார்களிறே. இவளும்திருவாய்ப்பாடி-திருக்கண்ணபுரமாகவும், க்ருஷ்ணன் - சவரிப்பெருமாளாகவும், அச்சவரிப்பெருமாள்-தானாகவும், அநுகரித்துப்பேசுகிறாள். (ங) "సర్వం ఖల్విదం బ్రహ్మ -ஸர்வம்கல்விதம் ப்ரஹ்ம"(ச)"అహం బ్రహ్మాఽస్మి-அஹம்ப்ரஹ்மாஸ்மி" என்று-தான் அவனாய், அவன்தானாயிறேயிருப்பது. இதிறே இவளுடையவைதிகலோகாயதமதமிருக்கிறபடி. வேறே அநுகரித்தாரும் சிலருண்டிறே. (ரு) "கடல்ஞாலம் செய்தேனும்யானேயென்னும்" என்று.

யில் அவ்வநுஸந்தாநம்வர ப்ரஸக்தியுண்டோவென்ன (கண்ணனூரித்யாதி). திருக்கண்ணபுரத்தைக் கண்ணனூராகவே தொழுவாளாகையாலே, தான் கோபிகாவஸ்த்தாபந்நையாயும், சவரிப்பெருமாளை க்ருஷ்ணனாகவும், ஊர்திருவாய்ப்பாடியாகவும், அநுஸந்தித்திருந்தவளாகையாலே அந்தப்ரஸங்கத்தில் அவர்களைப்போலே இப்பாட்டிலநுகரித்தபடி சொல்லுகிறதென்று கருத்து. "இவள் அநுகரிக்கைக்கு மூலம் - ப்ரகாரப்ரகாரிபாவத்தாலுண்டான ஐக்யம்" என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் (ஸர்வமித்யாதி). தேஹமே ஆத்மாவென்கிற சார்வாகனைப்போலே அவனே தானாகப்ரமித்தாளோவென்ன (இதிறேயித்யாதி). அநுகரிக்கிறாளாகில் ஆழ்வாரைப்போலேகாரணவஸ்துவை அநுகரியாமல், அர்ச்சாவதாரத்தை அநுகரிப்பானென்னென்ன (வேறேயித்யாதி). முன்னும்பின்னும் ஏகரூபேணவிருக்க, நடுவே அநுகாரம் பிறந்ததென்னப்

(க) வி-பு-ரு-கஅ-உஉ. (உ) வி-பு-ரு-கங-உஎ. (ங) சாந்தோ-ங-கச-க. (ச) ப்ருஹ-ங-ச-க0. (ரு) தி-வாய்-ரு-சு-க.

அவளைப்போலே ஜகத்காரணரூபியைப்பற்று மவளன்றிறே இவள். அர்ச்சாவதாரரூபியையிறே இவள்அநுகரிப்பது. இவ்வர்ச்சாவதார ரூபத்தால் பிறக்கும் அநுபவமொழிய, அந்தந்த அவதாரங்களால் பிறக்குமநுபவத்தை நாய்க்கிடவென்றிருக்குமவளிறே இவள். ஆப்பான்திருவழுந்தூரரையரும், ஆழ்வார்திருநறையூரரையரும், இப்பாட்டைஅநுஸந்தித்து "இப்பாட்டுக்கு ஒருசேர்த்தி கண்டிலோம்" என்று பட்டர்பாடேவந்து, "இப்பாட்டிருக்கிறபடியென்" என்று கேட்க; "மகளநுகாரத்தைத் தாய் அநுபாஷிக்கிறாள்" என்றருளிச் செய்தார். ஆரூடயோகராயிருப்பார் சிலர்வந்தால் (க) "యోభవాన్ యన్నిమిత్తం వా యదాగమనకారణమ్- யோபவாந்யந்நிமித்தம் வாயதாகமநகாரணம்" என்கிறபடியே "நீயார், வந்ததெங்குநின்றும்" என்று கேட்கக்கடவதிறே. அப்படியே "நீஎங்கு நின்றும் வந்தது, வந்த காரணமேது" என்ன; "வந்தது இன்னிடத்தில்நின்றும், வந்தகாரியம் இன்னது" என்கிறாள்.

வ்யா—(வடவரைநின்றும்வந்து) வடக்கில்திருமலையில்நின்றும்

போமோவென்ன; இதுஸம்ப்ரதாயஸித்தமென்று ஸம்வாதம் காட்டுகிறார் (ஆப்பானித்யாதி). அர்ச்சாவதாரத்தை அநுகரிக்கிறாளாகில், "வடவரை நின்றேனும் யானேயென்னும்" "வண்டிருவரங்கனும்யானேயென்னும்" என்றாப்போலேஅநுகரியாமல், "வடவரைநின்றும்வந்துஇன்றுகண்ணபுரமிடவகைகொள்வதுயாம்" என்று அநுகரியாநின்றாள்; ஆராகிலும் கேட்டாரோவென்ன (ஆரூடேத்யாதி). "பவாந் யாத்ருஶ:, யத்ஸ்தாநம்வா, யந்நிமித்தம்வா-வாசப்தஶ்சார்த்தே, ஆகமநஸ்ய ப்ரயோஜநதயாகாரணஞ்ச யத்" என்று ப்ரஶ்நத்ரயம் பண்ணுவாரைப்போலே, தோழிமார்இவளுடைய பொன்னிறமொழியும்படியான வடிவில் வேறுபாடுகண்டு, "எங்கேயிருந்தெழுந்தருளிற்று, எழுந்தருளின கார்யமென், தேவரீர் ஆர்" என்றார்கள். அதுக்கு உத்தரமருளிச் செய்கிறாளாக அநுவதிக்கிறாரென்று கருத்து. (வந்ததெங்கு நின்றும்) என்றவநந்தரம் "ப்ரயோஜநமென்" என்று கூட்டுவது. (அப்படி)என்றவநந்தரம் "நீர்ஆர்" என்றுகூட்டுவது. (என்ன) என்ற வநந்தரம் "நான்சவரிப் பெருமாள்" என்று கூட்டுவது.

(உ) "మాయావీ పరమానన్దం త్యక్త్వా వైకుణ్ఠముత్తమమ్॥ స్వామిపుష్కరిణీతీరే రమయాసహ మోదతే- மாயாவீபரமாநந்தம் த்யக்த்வா வைகுண்ட்ட முத்தம்।

வந்து. (க)"திருமால்வைகுந்தமே தண் திருவேங்கடமே" என்று அத்தலையைப்பற்றி வருமவளன்றேஇவள். அர்ச்சாவதாரத்தைப் பற்றுமவளிறே. அர்ச்சாவதாரத்துக்குக்கொண்டக்கோல் நாட்டின தேசமிறே திருமலை. வந்தகார்யமேதென்ன (இன்றுகணபுரமிட வகைகொள்வது யாம்) இன்று திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுவதாகக்காண்வந்தது, இதுகாண் நாம் வந்தகார்யம், இது என்னுடைய உண்மையிருந்தபடி. (என்றுபேசினாள்) "உரைக்கின்றாள்" என்றாளிறேகீழ். அத்தைப் "பேசினாள்" என்றுதாயார் சொல்லுகிறாள்.

(மடவரலித்யாதி) திருவாய்ப்பாடியில் பெண்களைப்போலேயோ? அலைவலைகளாய்ப் புறப்பட்டுப் பழிதூற்றி அநுகரித்தவர்களைப்போலேயோ? இவள் பந்துக்கள் சொன்னத்தைச்செய்துபோந்தவளன்றோ? (மடவரல்மாதர்) ப(ஞ்)வ்யையானபெண். (என்பேதை) பந்துக்களுக்கு பவ்யையாய்ப் போந்தாளென்னுமளவேயோ? பெற்றெடுத்த என்வார்த்தையல்லதறியாதவளன்றோ?. (பேதை) ப்ராப்தயௌவனையாகில் என்வார்த்தை கொள்ளாதொழியவும் கூடுமிறே; பெற்றதமப்பனுக்கும் பர்த்தாவுக்கும் வாசியறியாத பருவம்கிடீர்

ஸ்வாமிபுஷ்கரிணீதீரே ரமயாஸஹமோததே" என்று அதுக்கும் அடியுண்டாயிருக்க "அங்குநின்றும்" என்பானென்னென்ன (திருமாலித்யாதி). ஆகில் திருவரங்கத்திலுமோவென்ன ; (அர்ச்சாவதாரேத்யாதி). (உ) "செஞ்சொற்கவிகாள்" என்கிற திருவாய்மொழியில் நித்யஸூரிகளுக்கு ஆழங்கால்பட்டாமைக்கு உபதேசிக்கும்போது மற்றும் திவ்ய தேசங்களிருக்க, தெற்குத் திருமலையில் ஸௌசீல்யத்தையிறே ஆழங்காலாக வருளிச்செய்தது ; அப்படியேவடமலையும் *கானமும் வாநரமுமானவற்றுக்கும் முகங்கொடுக்குமிடமாகையாலே அச்சிலத்தில் ஆழங்கால்பட்டு மற்றொன்றைச் சொல்லானென்று கருத்து. (என்னுடைய உண்மை) என்றது-தன்பெண் தோழிமாரைக்குறித்துச்சொன்னது. இத்தால் நீயாரென்னும் ப்ரஶ்நத்துக்கு உத்தரம்சொன்னபடியாயிற்று.

இப்படி (௩) "ஸர்வ꞉ கிந்த்வேதந்நோ- குரவ꞉ கிங்கரிஷ்யந்தி" என்று புறப்பட்டுப்போய் அநுகரித்தவர்களைப்போலே அநுகரித்தாளாகில், இனி நீ கைவிடுமத்தனையன்றோ வென்னும் சங்கையிலே, "மடவரல்" இத்யாதி என்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (திருவாய்ப்பாடியிலித்யாதி). விவரணம் (அலவலையித்யாதி). (தனிசு)கடன். (பணயம்)பிச்சை.

(க) தி-வாய்-க0-எ-அ. (உ) தி-வாய்-க0-௯. (௩) வி-பு-ரு-கஅ-உஉ.

இவளுக்கு. (இவர்க்கு) அத்திருவாய்ப்பாடியில்பெண்களோடேஅநுபவித்துவைதக்த்யமூர்த்தாபிஷிக்தராயிருக்கிற இவர்க்கு. (இவள்) ஆருருக்ஷுவாயிருக்கிறஇவள். (கடவதென்) தனிசுடையார் பணயமெடுப்பாரைப்போலே இவள் கண்ணுறக்கத்தைக் கொள்ளுகைக்கு என்னப்ராப்தியுண்டு.

(கண்டுயிலின்றிவர் கொள்ளவே) அவர்களைப் போலே அலைவலையாலல், பின்புவேணுமாகில் கொள்ளுகிறார்; இன்றுஇவள் கண்ணுறக்கத்தைக் கொள்ளுகைக்கு என்ன ப்ரயோஜநமுண்டென்கிறாள். கீழ் "வண்ணமும் பொன்னிறமாவதொழியும்" என்றாள்; "அந்தபொன்னிறமாவதுஎது,ஸ்வாபாவிகமானதன்நிறமாவதெது" என்ன; (க)"யஆத்மநிதிஷ்டந்-ஆத்மநோऽந்தரः -யஆத்மநிதிஷ்டந், ஆத்மநோऽந்தர:" (உ) "யஸ்யாத்மாசரீரம்-யஸ்யாத்மாசரீரம்" என்று ஶ்ருதிகள் சொல்லுகிறபடியே சரீரசேஷத்வமும், சேஷசேஷிஜ்ஞாநமும், அந்தஜ்ஞாநத்தால் பிறக்கும்ஆநந்தமும், ஆக சேஷத்வஜ்ஞாநாநந்தங்கள்-தன்நிறமாகிறது; பொன்நிறமாகிறது-"தேவோऽஹம்,மநுஷ்யோऽஹம்" என்று ப்ரவிஷ்டசரீரங்களிலே ஆத்மபுத்தியைப் பண்ணி (ந) "து:க்காऽஜ்ஞாநமலாதர்மா:- து:க்காऽஜ்ஞாநமலாதர்மா:" என்கிற தர்மங்களையேறிட்டுக்கொள்ளுகை. ஆரூடயோகராயிருப்பார்க்குக் கிட்டாத ஸ்வபாவங்களடைய ஆருருக்ஷுவாயிருக்கிற இவளுக்குப்பிறப்பதே. இதோராஶ்சர்யமிருந்தபடி யென்னென்கிறாள். .... (சு)

மூ.—தரங்கநீர் பேசிலும் தண்மதிகாயினும்
இரங்குமோ வெத்தனைநாளிருந்தெள்கினாள்
துரங்கம் வாய்கீண்டு கந்தானதுதொன்மையூர்
அரங்கமேயென்ப திவள்தனக்காசையே. .... (எ)

பொன்னிறம் போம்படி யென்னென்னும் ப்ரஶ்நத்துக்கு " கண்டுயில்கொள்ளுகை " என்றது உத்தரமென்று விவக்ஷித்து ஸ்வாபதேசம் (கீழித்யாதி). துயில்கொண்டாளென்கையாலே தேஹாத்ம ப்ர(ப்ரு)மாதிகளாகிற அஜ்ஞாநத்தைப்போக்குகையாலே பொன்னிறம் போனபடி சொல்லிற்றாய்த்தென்றுகருத்து. பாட்டுக்கெல்லாம் பிண்டிதார்த்தமருளிச் செய்கிறார் (ஆரூடேத்யாதி). ... ... (சு)

(க) ப்ருஹ-ரு-எ-உஉ. (உ) ப்ருஹ-ரு-எ-உஉ. (ந) வி-பு-சு-எ-உஉ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தரங்கம்	திரைக்கிளப்பத்தை யுடைய	துரங்கம்	அச்வரூபியான கேசி யினுடைய
நீர்	ஸமுத்ரமானது [ம்,	வாய்	வாயை
பேசினும்	கோ(घ)ஷிக்கிலு	கீண்டு.	கிழித்து (அதனால்)
தண்	குளிர்ச்சியையுடைய	உகந்தான்அது	களித்த கண்ணனுக்கு
மதி	சந்த்ரன்	தொன்மை	பழையதான
காயினும்	காய்ந்தாலும் (இவள்)	ஊர்	கோயிலான
இரங்குமோ	இளைக்குமோ?	அரங்கமே என்	திருவரங்கமென்பதே பது
எத்தனைநாள்	நெடுநாளாக		
இருந்து	(இதுகளில்) இருந்து	இவள்தனக்கு	இவளுக்கு
என்கிறாள்	ஈடுபட்டாள்;	ஆசையே	ஆசையாயிருக்கிறது. (எ)

அவ.—ஏழாம்பாட்டு. (தரங்கமித்யாதி) "இவர்க்கு இவள் கடவதுஎன்" என்று-இவள் கண்ணுறக்கத்தை இவர்கொள்ளுகைக் குப்ராப்தியுண்டோவென்றாய், "இப்படி இவரோடும் இவளோடும் கொள் கொடையற்றே யிருக்கிறது, கார்க்கடல் வண்ணர்மேலெ ண்ணமென்றும், கண்ணபுரந்தொழுமென்றும், கண்ணபுரமென்று பேசினாளென்றும், *சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் அவனேயாம்படியன்றே அவளிருக்கிறது; அவரோடு அவளோடு ப்ராப்தியில்லையென்று சொல்லக்கடவையோ? அதுகிடக்கிடும், உன்

அரு.—ஏழாம்பாட்டு. (தரங்கநீரித்யாதி) வினவவந்தவர்கள் திருத் தாயாரைக்குறித்து நீ சவுரிப்பெருமாள்மேல் குற்றம் சொல்லியும், நறையூரர் கார்யமே நன்றாயிற்றென்றும், "உள்மெலிந்தாளிது வென்கொலோ, நோவு படுமிவளுக்கு இதுவென்" என்று ஆச்சர்யப்பட்டும், கரணத்தாலும் கண்ண புரத்தானைப் பற்றினாளென்றும், அவனே தானாக அநுகரித்தாளென்றும் சொல்லி, இவளை இப்படி படுத்துகைக்கு பஞ்சலக்ஷம் குடியில் பெண்களோ டும் கலந்து விதக்த்த(ग्ध)ரான இவர்க்கு, முக்த்தை (ग्ध) யான இவள் கண் ணுறக்கத்தைக்கெடுக்க ப்ராப்தியென்" என்றும் சொல்லிக்கொண்டிருந்தால், பெண்ணின் விரஹக்லேசம்தீருமோ? இது தீரும்படியன்றே நமக்குத்தேட்ட மென்னும் கருத்தாலே ஆக்ஷேபிக்க; அதுக்குவெறுப்பாக "இனி என்செய் வோம், படுவதெல்லாம்பட்டாள், இன்னமும் படுகிறாள்" என்கிறாளென்று ஸங்கதியை யருளிச்செய்கிறார். (இவர்க்கு இவளித்யாதி).

இவள்தானே கரணத்தையும் அத்தலைக்காகக் கொடுத்துவிட்டாளே

மகள்தான் இவ்வீடுபாடுகள்தானே பொறுக்கக்ஷமையோ" என்ன; "இவற்றுக்கு இளைக்குமவளோ இவள்" என்கிறாள்.

வ்யா.—(தரங்கநீர்பேசினும் தண்மதிகாயினுமிரங்குமோ) உறக்கம்போய் கண்ணைவிழித்துப்பார்த்தாள், பிரிந்தார் இரங்கும்நிலம் கடல்கரையாகையாலே, ஸமுத்ரதீரத்திலேயிருந்து அவன்றன்னோடு ஸம்ஶ்லேஷிக்கிறபோது பெரியஅபி(ஙி)நிவேசத்தோடேமேல்விழுந்து அணைத்ததோளுக்கு ஸ்மாரகமாயும், ஸம்ஶ்லேஷிக்கிறபோது "அடியேன், குடியேன்" என்றாப்போலே சொன்ன நீசபாஷணங்களுக்கும் ஸ்மாரகமாயும், அணைக்கிறபோதை ஸ்பர்ஶஸௌக்க்யத்தால் வந்த குளிர்த்திக்கு ஸ்மாரகமாயும் இவைநலியாநின்றால் இளைக்குமோ?. (தரங்கநீர்பேசினும்) திரைக்கிளர்த்தியை யுடைத்தானஸமுத்ரம் கோஷிக்கிலும். (தண்மதிகாயினும்) அந்தகடலிலே பிறந்தவனிறே சந்த்ரன். ஸர்வபூதஸுஹ்ருத்தான அவன்இவளளவில் பாத(ஙீ)கனைப்போலே, ஸர்வப்ராணிகளுக்கும் ஆஹ்லாதகரனான சந்த்ரன் நெருப்பைமுகந்து தூவிலும், அவன்படி இதுவானால் இவர்கள்படி சொல்ல வேண்டாவிறே. (க) "யச்சீலஸ்ஸ்வாமீ, தச்சீலாப்ரக்ருதிஃ - யச்சிலஸ்ஸ்வாமீ, தச்சீலாப்ரக்ருதிஃ" இறே.

(இரங்குமோ) இளைக்குமோ; என்றாள். இவள் இளையாமைக்கு ஹேதுவென்னென்ன; (எத்தனைநாளிருந்தெள்கினாள்) முன்பே

யென்கிறார் (கார்க்கடலித்யாதி). (அதுகிடக்கிடும்) என்றது - அவர்க்கு ப்ராப்தியுண்டாகிறது, இல்லையாகிறது, நமக்கு விசாரணீயமன்றென்கை. இனி விசாரணீயந்தானேதென்ன (உன்மகள்தானித்யாதி). (இவ்வீடுபாடுகள்) விரஹத்தாலுண்டான து:க்கங்கள். "இளைக்கு மவளோ" என்றது - விரஹக்லேசமெல்லாம்பட்டே குண்டவளின்னம் படத்தக்கவளென்றபடி.

(உறக்கம்போய்) என்றது - கீழ்ப்பாட்டில் "கண்டுயில் கொள்ள" என்றத்தைப்பற்ற. நீர் என்றபதவாஸனை (அணைக்கிறபோதையித்யாதி). "தண்" என்கிறதுக்குத் தாத்பர்யமருளிச் செய்கிறார் (அந்தவித்யாதி). (அவன்படி இதுவானால்) என்றது - கண்ணபுரத்தான்படி விரஹாக்நியைக் கொளுத்துமதானாலென்றபடி.

பேதையான இவள்நெடுநாள்விஶ்லிஷ்டையாகப் படுவதெல்லாம்பட்டாளென்கிறது. (உ) "த்ருடியுகாயதே - த்ருடியுகாயதே" என்னுமாபோலே

(க) (உ) பாக-கo-ஙக-கரு.

நெடுநாள் இவற்றின்கையிலே அடியுண்டு தகணேறின இவள்இவற்றுக்கு ஈடுபடுமோ?. "எள்குதல்" -ஈடுபடுதல். விடுநகத்தைப் பூட்டினால் அதில் பழக்கமில்லாதவன் நோவுபடுமிறே; அதிலே பழகிப் போந்தவன் விடுநகம்பூட்டினால் கட்டிக்கொள்ளாய் என்று கிடக்குமிறே.

(துரங்கமித்யாதி) இவள் இப்படி நோவுபடாநின்றால் இதுக்குப் பரிஹாரம் பண்ணவேண்டாவோ, பெற்றநீயிறே பரிஹாரம் பண்ணுவாய்; அத்தைச் சொல்லிக்காணுயென்ன; அவளுக்குப் பரிஹாரமறிவேன் நானேயிறே. (அரங்கமேயென்பதிவள் தனக்காசையே) "திருவரங்கம்" "திருவரங்கம்" என்பது இவளுக்காசை. ஆனுல் அதுசொல்லத் தட்டென்னென்ன; இவள்ஸத்ப்ரக்ருதியாகையாலே வாய்விடில் சிதிலையாகக்கூடுமென்று, வாய்க்காவலிட்டு வைப்பர்கள் பந்துக்கள்; (ஆசையே) வருந்திச் சொல்லப்புகில் அருகேயிருந்து "வாய், வாய்" என்பர்களிறே. திருக்கண்ணபுரத்தில் நிற்கிற க்ருஷ்ணனேயன்றோ இங்கும்; அவனில்காட்டில் இவனுக்குவாசியுண்டோவென்னில், (துரங்கம்வாய்கீண்டு கந்தானது தொன்மையூர்) (க) "கேஶவঃ க்லேஶநாஶநঃ- கேசவஃ க்லேசநாசநஃ" என்றுபோக(போக)விரோதியான கேசியை அழித்தவனன்றோ? ஸ்ரீப்ருந்தாவநத்திலே பெண்களும் தானுமாக அநுபவியாநிற்க, இதுக்கு விரோதியாய்வந்த கேசியின் வாயைக்கிழித்துப் பெண்களுக்கு ஒருகார்யம் செய்தானுயிருக்கையன்றிக்கே தன்னுடைய போக (போக) விரோதிபோயிற்று என்று உகந்தான்.

(தொன்மையூர்) பழையதானகோயில்; கண்ணனூரென்கிற திருவாய்ப் பாடிபோலே பழையதாய், புராணபந்தமுமாயிறேயிருப்

நெடுநாளாய் தோற்றுகையாலே என்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் (முன்பேயித்யாதி).

(இதுக்குப்பரிஹாரம்) என்றது-சவரிப்பெருமாள்காலைக்கட்டிக்கொள்ளுகை. (பந்துக்கள்) என்றது-தாய்முறையான நங்கைமார்களை. பெற்றதாயாய் ப்ரியபரையாயிருக்க, ஏகாந்தத்திலேயாகிலும் இவளாசையைத் தலைக்கட்டலாகாதோவென்ன (வருந்தியித்யாதி).

(புராணபந்தம்) புராணத்திலே ஸம்பந்தத்தை யுடைத்தாகை. தத்ப்ரதிபாத்யமென்கை. "தொன்மை" என்றுவிசேஷித்ததுக்கு ப்ரக்ருதோப

(க) நாரஸிம்ஹ-உகூ-ஙஎ.

பது. திருக்கண்ணபுரமாகிறது - ஸமுத்ரமத்யத்திலே புதிதாகக் குடியேறின த்வாரவதிபோலேயிறே; (க) "வேலைமோதுமதிள்" (உ) "வெள்ளியேய்ந்தமதிள்" என்றது-தனக்குஸ்மாரகமாய், நலிந்த சந்த்ரனுக்கும் கடலுக்கும் தோள்தீண்டியாயிறேயிருப்பது. தன்னைநோவுபடுத்தின கடலின்வாயை அடக்கும்போது கேசிவாயைக் கிழித்தவனாக வேண்டாவோ. நெருப்பைத்தூவின சந்த்ரனை ஆறவிடும்போது தக்ஷசாபத்தாலே நோவுபட, தன்னுடைய சந்த்ர புஷ்கரிணியிலே பரிசயிப்பித்து அவனுடைய க்ஷயத்தைப்போக்கின வனாகவேண்டாவோ.

(அரங்கமேயென்பதிவள் தனக்காசையே) திருக்கண்ணபுரமென்று சொன்னளித்தனை; தானனதன்மை-கோயிலையே சொல்லுகையென்கிறாள். கண்ணனூரேயது;இது-ஸ்ரீரங்கமிறே. (ங)"ஙீஜ்ஜு ஊஉபசாஜாஃ-நகஸ்ஙிந்நாபராத்யதி" என்னும்பெண்ணரசிறே. மயர்வறமதிநலம் பிறந்தால் ஆரூடயோகராயிருப்பார்க்கும் (ச) "அபஞ்சீக்ருதஸ்ருஷ்டிகள்-அபஞ்சீக்ருதஸ்ருஷ்டிகள்" என்கிற அப்ஸ்ருஷ்டி வாச்யமான மூலப்ரக்ருதியும் அதின் கார்யமான சப்தாதிகளும் போனாலல்லது அநுபவம் பூர்ணமாகாதிறே. இங்கு கடலினுடைய ஸ்த்தாநத்திலே ப்ரக்ருதி, அதில்பிறந்த சந்த்ரஸ்த்தாநே சப்தாதிகள். .... (எ)

யோகம் காட்டுகிறார் (திருக்கண்ணபுரமித்யாதி). இத்தால் கோபிகாவஸ்த்தாபன்னையான இவளுக்குத் திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணன் போக (ஃஃ) நிரவாஹகனாய், ஸ்ரீமத்த்வாரகையில் க்ருஷ்ணன் விரஹவர்த்தகனாகையாலே அவ்வூர்களும் அவனைப்போலே யிருக்குமென்று கருத்து. விரஹவர்த்தகமான படி யெங்ஙனேயென்ன (வேலைமோதுமித்யாதி). திருவரங்கம் விரஹநிவர்த்தகமானவழி என்னென்ன (தன்னையித்யாதி வாக்யத்வயத்தாலே).

எவகாரார்த்தமருளிச் செய்கிறார் (திருக்கண்ணபுரமித்யாதி). ஆசைப்படுகைக்கு பற்றுசேதென்ன (கண்ணனூரித்யாதி). அதில் அவனுக்குப்ராதாந்யம் தோற்றியிருக்கும், இதில் புருஷகார பூ (ஃ) தைக்கு ப்ராதாந்யம் தோற்றியிருக்குமென்று கருத்து. இப்பாட்டுக்கு ஸ்வாபதேசம் காட்டுகிறார் (மயர்வித்யாதி). ... ... (எ)

(க) தி-வாய்-கூ-கO-க. (உ) தி-வாய்-கூ-கO-உ.
(ங) ரா-யு-கககூ-சச. (ச) மது-க-அ.

ரூ.—தொண்டெல்லாம் நின்னடியே தொழுதுய்யுமா
கண்டு தான் கண்ணபுரம் தொழப்போயினாள்
வண்டுலாம்கோதையென்பேதை மணிநிறம்
கொண்டு தான்கோயின்மை செய்வது தக்கதே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டெல்லாம்	ஸகல பாகவதர்களும்	உலாம்	ஸஞ்சரியாநின்ற
		கோதை	குழலையுடைய
நின்	தேவருடைய	என்	என்னுடைய
அடியே	திவ்யதேசத்தையே	பேதை	முக்தை (ஜ) யான பெண்ணினுடைய
தொழுது	அஞ்ஜலிபண்ணி		
உய்யுமா	உஜ்ஜீவிப்பதை		
கண்டு	பார்த்து	மணி	மணிபோன்ற
தான்	தாமும்	நிறம்	நிறத்தை
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கொண்டுதான்	அபஹரித்து தான்
தொழ	தொழுவதற்கு	கோயின்மை	அநீதியை
போயினாள்	போனாள்;	செய்வது	பண்ணுவது
வண்டு	வண்டுகளானவை	தக்கதே	(உமக்கு) தகுமோ?.

அவ.—எட்டாம்பாட்டு. முதற்பாட்டிலே [வெள்ளியீர், தொழுத இவள்கைவளை கொள்வதுதக்கதே] என்று தொழுத இவள் கையில் வளையைக்கொள்ளுகை உமக்குத் தகுமோவென்று இவள் சொன்னவாறே "தொழுத இவள்கையில் வளையைவாங்குகை தகுதியல்ல, தப்பச்செய்தோம்" என்று இசைந்து நின்றார் சவரிப்பெருமாள்; பின்புதன்னிலே "இவர்க்கிவள் கடவதென் கண்டுயிலின்றிவர்கொள்ள" என்றும், "அரங்கமேயென்பதிவள்தனக்காசையே" என்றும் சொன்னத்தை சவரிப்பெருமாள் கேட்டார். (க) "ஸர்வத

அரு.—எட்டாம்பாட்டு. (தொண்டித்யாதி) பூர்வார்த்தத்தையெல்லாம் கடாக்ஷித்து ஸங்கதியருளிச் செய்கிறார் (முதலித்யாதி - இத்தனை யென்கிறாளென்னுமளவும்). (இசைந்துநிற்கை) நெஞ்சுநெகிழ்ந்து கொடுப்பதாகநிற்கை. (தன்னிலே) தங்களிலே. சவரிப்பெருமாள் முன்னிலையாய்த்தோற்றியிருக்கையாலே செவிப்படாமல், வினவ வந்தவர்களோடே ஏகாந்தமாகச்சொல்லச்செய்தே அவர்கேட்டபடி யென்னென்ன (ஸர்வத இத்யாதி). (தன் அபி

(க) ஷீ-கஙு-கச.

ஷ்மித்ஸ்லோகே - ஸர்வதஸ்ஸ்ருதிமல்லோகே'' என்றிருக்குமவரிறே அவர். இப்படி இவள்சொன்னவாறே ''வளைகொடுப்பதாக நினைத்திருந்தோம், இனிகொண்டு அதுகொடுக்கிறதென், இன்னம் எட்டுமதுண்டாகில் வாங்கஅமையாதோ?'' என்று சவரிப்பெருமாள்சிவட்கென்று ''உன்மகளுக்கு அரங்கமேயென்பதாசை என்றாய், அவளோடு நம்மோடு ப்ராப்தியில்லையென்றும் சொன்னாய், ஆனால் நம்மூருக்கு இவள்வருவானென், நாம்இவளைஅழைத்தோமோ, ஆசைப்பட்டவிடத்தேறப் போகலாகாதோ?'' என்ன; ''அதில்ஸம்சயமில்லை; அரங்கமேயென்பதிவள்தனக்காசை, நினைவுமதுவே, ஸ்வாபிமதஸித்திக்கு உறுப்பாக நாட்டார் செய்கிறதைக்கண்டு தனக்கும்தன்னபிமதம் ஸித்திக்குமோ? என்று தன்ஆசையாலேசெய்வான்முறைமைகண்டுபோனாளித்தனை'' என்கிறாள். கார்க்கடல்வண்ணர்மேலெண்ணமென்றென்றே இவளுக்குமனோரதம். (க) ''இலங்கொலிநீர்பெரும்பௌவம்மண்டியுண்ணபெருவயிற்றகருமுகிலேயொப்பர்வண்ணம்'' என்று கடலைப் பருகின காளமேகம்போலேயிறே பெரியபெருமாள் வடிவிருப்பது. ஆகையாலே நினைவும் அங்கேயென்னுமிடம் ஸித்தமிறே.

(தொண்டெல்லாம்) இப்பரப்பெல்லாமென்கிறாள். தொண்டர்-பகவத்பக்தர்களெல்லாம், ஆர்த்தராயும், ஆத்ம ப்ராப்தி காமராயும், பகவத்ப்ராப்திகாமராயுமிருக்குமவர்கள். இவர்களுக்கு பந்த(ஸ்த)த்திலும், ஆஸ்ரயணத்திலும் பேதமில்லையிறே. ப (ஃ) லத்திலேயிறே

மதம்) கோயிலில்வாழ்ச்சி. (செய்வான்முறைமை) செய்வார்களுக்குச்செய்யும் ப்ராப்தி. நினைவும்அதுவேயென்னப்போமோ ''கார்க்கடல்வண்ணர்மேலெண்ணம்'' என்றன்றோ சவரிப்பெருமாள் விஷயம் சொல்லிற்றென்ன வருளிச்செய்கிறார் (கார்க்கடலித்யாதி). அந்தப்பாட்டில் சவரிப்பெருமாள் விஷயமாகச்சொன்னாளேயாகிலும், சவரிப்பெருமாள் சிவட்கென்று வேறுபட்டு நிற்கையாலே, இவளும் இப்போது திருப்பித் தாத்பர்யாந்தரம் விவக்ஷித்தாளென்னலாமென்று திருவுள்ளம்.

(ஆர்த்தராயும்) என்றது - அர்த்தார்த்திகளுக்கு முபலக்ஷணம். ப்ரயோஜநாந்தரபரரையும் ''தொண்டர்'' என்னலாமோவென்ன (இவர்களுக்கித்யாதி).

(க) திருநெ-உ௪.

பேதம். ஆகையாலே "எல்லாம்" என்கிருள். "தொண்டெல்லாம்" என்று - பக்தரைக் காட்டுமோவென்னில்; "मञ्चाः क्रोशन्ति -மஞ்சா: க்ரோசந்தி" என்னுமாபோலே. (தொழுதுய்யுமாகண்டு) சதுர்வித புருஷார்த்திகளும் உன்திருவடிகளை ஆஶ்ரயித்து தந்தாம்அபிமதங்களைப் பெறக்கண்டு. (தொழுது) (க) "बद्धाञ्जलिपुटाः - பத்தாஞ்ஜலிபுடா:" என்று காயிகமான வ்ருத்தியிறே அஞ்ஜலி.

(கண்ணபுரம்தொழப்போயினுள்) நமக்கும் இங்கேகோயிலிலே சென்று புகலாமாகில் திருக்கண்ணபுரத்தைத் தொழுவோமென்று போயினுள். (நின்அடியேதொழுது) என்று உன்னையன்றே இவள் தொழுதது, திருக்கண்ணபுரத்தையிறே; யதோபாஸநமன்றோப(ஃ)லம். ஐஶ்வர்யார்த்திகள் ஐஶ்வர்ய விசிஷ்டனையிறே பற்றுவது. ஆத்மப்ராப்திகாமன்சுத்திவிஶிஷ்டனையிறேபற்றுவது. பகவத்ப்ராப்திகாமனும் (உ) "सोऽश्नुते सर्वान् कामान् -ஸோஶ்நுதேஸர்வாந்காமாந்" என்று குணவிஶிஷ்டனையிறே பற்றுவது. இவளும் இவ்வூரை ஆசைப்பட்டவளாகையாலே ஊரைத்தொழுகிருள். யத்விஶிஷ்டவஸ்துவைப்பற்றிஞல் தத்விஶிஷ்டவஸ்துவேயிறேப்ராப்யம்; க்ருஷ்ணனை ஆசைப்பட்டபெண்கள், க்ருஷ்ணன் மகனுனகாமன் காலிலே விழுந்தார்களிறே. உடையவர்பெருமாளுக்கு நெடுநாள் திருமஞ்ஜநமெடுத்து அவரை ஆஶ்ரயமாகப்பற்றி, பின்பிறே கோயிலிலே வந்

கண்ணபுரம் தொழப்போனது தனக்குமாத்ரம் கோயில்வாஸம் கிடைக்கைக்காகப் போனுளல்லள், தன்னடியாரான நமக்கும் கோயில்வாஸம் கிடைக்கும்படி கிளர்போனது என்று வ்யாக்யாதா ஈடுபடுகிருர் (நமக்குமித்யாதி). ஊரைத்தொழுதாலும் நாமன்றோபலமென்ன ; அன்றென்கிருள்(நின்னடியேயித்யாதி).ஊரைத்தொழுதாலும்ஊரேபலமாவானேன்னென்ன(யதோபாஸநமித்யாதி). அப்படியே பலமாக வேண்டுவானேன்னென்ன (ஐஶ்வர்யேத்யாதி). "ப்ராப்யாநுகுணமாகப்ராபகம்"என்றருளிச்செய்து,ப்ராபகாநுகுணமாகப்ராப்யமென்கிருர் (இதித்யாதி). ப்ராப்யாநுகுணம்ப்ராபகமென்றதுக்கு உதாஹரணம் (க்ருஷ்ணனையித்யாதி). (ரு) "आत्मा वै पुत्रनामासि -ஆத்மாவைபுத்ரநாமாஸி" என்கிறபடியே காமனைப் பற்றிஞர்களென்கை. ப்ராபகாநுகுணம் ப்ராப்யமென்றதுக்கு உதாஹரணம் (உடையவரித்யாதி). கண்ணபுரத்தைத்தொழு

(க) பார-சாந்தி-ருருஎ-சo. (உ) தை-ஆ-க-உ.
(ரு) மந்த்ரப்ர-சௌஎ.

தது. தொண்டெல்லாம் என்கிறவர்களைப்போலே ஸாதநபேதம் கொள்ளுமவளன்றேஇவள். ப்ராபகவஸ்துவேப்ராப்யமென்று, (க) *தானுகந்தவூரெல்லாம் தன்தாள் பாடித்திரியுமவளிறே. "ஒருவர்க்குரியேனோ" என்றதும் ஸாதநாந்தரங்களில்லையென்றதத்தனையிறே. (தான்போயினாள்) தொழுதாப்போலே குறியழியாமல் போரவல்லளாகிலன்றோ போவது; தொழப்புக்கு நிறத்தைக் கொடுத்துப் போருவார் போருவர்களோ? (போயினாள்) ஸ்ரீமிதிலையில் பிறந்தாரிலும், குண்டிநபுரத்தில் பிறந்தாரிலும் போனாருண்டோ? வரக் கண்டவித்தனையன்றோ செய்தது. (போயினாள்) * வேயினதோள் விசிறிப் பெடையன்னமென நடத்தவவள்போக்கு நீ காணப் பெற்றதில்லை காணென்கிறாள்.

இப்படியிருக்கிற இவள்போனால் தன்னோடொக்க ரூபஸாம்யத்தைக் கொடுக்கவன்றோஅடுப்பது. நிவாரகரில்லாத தேசத்திலே தனிநிலத்திலே அடித்துப் பறிப்பாரைப்போலே இவள்நிறத்தையும் கொள்ளவேணுமோவென்கிறாள். (வண்டுலாங்கோதையென்பேதை) இவள்மயிரைமுடித்துப்பூவைச் சுற்றிவிட்டால் வண்டுகள்பறந்து வர்த்திக்குமதுக்கு வெருவி உள்ளேபுகுரும் பருவமென்கிறாள்.

தால், அரங்கத்தில் வாஸம்வருமோவென்ன (தொண்டித்யாதி). உகந்தருளின நிலங்களெல்லாம்ப்ராப்யமும் ப்ராபகமுமாகவும் அநுஸந்திக்குமவளாகையாலே உன்னை ஒன்றுக்கு ஸாதநமென்றாலும் ஸாத்ய ஸாதநங்களுக்கு பே (தீ) த மில்லையென்று கருத்து. தேசத்தைத்தொழுகை ஸாதநாந்தரமாய் விழாதோவென்ன (ஒருவர்க்கித்யாதி). உன்னைப்ராப்யமாக்கி,தேசவாஸத்தை ஸாதநமாக்கிலிறே ஸாதநாந்தரமாவதென்றுகருத்து. திருவரங்கத்தைப்பெறுகைக்கு திருக்கண்ணபுரத்தைத் தொழவந்தாளாகில் நம்வடிவில் கண்வைப்பானென்; விஶ்லேஷித்து இப்பாடுபடுவானென்; என்னும் ப்ரஶ்நத்திலே "தான்" என்கிறானென்று விவக்ஷித்து உட்கருத்து (தொழுதாப்போலேயித்யாதி). போயினாளென்று நீசொல்லி வெறுக்கைக்கு போகாதேயிருந்தார் சிலருண்டோ? தொண்டெல்லாமன்றோ வந்துதொழுவதென்ன (ஸ்ரீமிதிலையித்யாதி). (குண்டிநநகரத்தில் பிறந்தார்) விதர்ப்பராஜன் பட்டணமான குண்டிநநகரத்திலே பிறந்த ருக்மணிப்பிராட்டி. தாத்பர்யாந்தரம் (வேயித்யாதி). (போக்கு) என்றது-போனபோக்கையென்றபடி.

மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). "பேதை" என்று ஸமபிவ்யா

(க) திரு-ரெந-சு.

(தொண்டெல்லாம்) தொண்டெல்லாம் பண்டு இவனடியைப்பற்றிக் கிடக்குமாபோலேகிடீர், தானுகந்தவூரிலே வண்டுகள் இவள் மயிரைப்பற்றி கிடக்கும்படி. இது ஒப்பனையழகிருந்தபடி. (என்பேதை) (க) "ஶஶுதா - மமஸுதா" என்கிறபடியே அபி (ஸ்ரீ) ஜாதையென்கிறாள். (பேதை) முக்த்தை (ஸ்ரீ).

(மணிநிறங்கொண்டுதான்) உன்மகள் முக்த்தையன்றோ, விதக்த்தைகளுக்கும் அவ்வருகேயன்றோ இவள் பரிமாற்றம், இவள்நிறம் கொள்ளக்குறையென்னென்ன; (உ) "நன்மணிவண்ணன்" என்கிறபடியே, உம்முடைய நிறத்தைக்கொடுக்கையன்றோ தகுவது; அது கிடக்க, முக்த்தையன்றோ, ஸ்வரூபஜ்ஞாநமில்லாதவளன்றோ, உமக்கு ஸ்வரூபஜ்ஞாநமின்றியிலே யொழியவேணுமோ?. (கொண்டுதான்) இவள் ஒப்பனையழகையும்கண்டால் ஆசைப்படுகைப்ராப்தம்; அதுகுற்றமல்ல, கொண்டால் பின்னைக்கொடாதொழிகைக்ருத்யமோ. (கோயின்மைசெய்வதுதக்கதே) ராஜநீதியில்லாதார் செய்வற்றை நீர்செய்யக்கடவீரோ? இழந்தவற்றை மீட்டுக்கொடுக்கையன்றோ ராஜக்ருத்யம்; ராஜாக்களே வழிபறிக்கை - ராஜநீதியோ? அமர்ந்தநிலத்திலேகொடுபோய் அநுபவிப்பிக்கையன்றோ தகுதியென்கிறாள். இவள் அடியில்தொழுதபோதே அமர்ந்தநிலத்திலே கொடுபோனால், இங்குநாமும் நம்முடையாரும் வாயிலே மண்ணைப் பொகட்டுக்கொள்ளவோ வென்றிறே அவனிருக்கிறது. (அ)

ஹாரலப்ய தாத்பர்யமருளிச்செய்கிறார் (தொண்டெல்லாமித்யாதி). (தானுகந்தவூரிலே வண்டுகள்) என்றது- தெய்வ வண்டுகளான எம்பெருமான்களை.

"தான்" என்றது - நீதானென்றாய், தானுக்கர்த்தம்-ஸர்வஜ்ஞதையாய், அதுக்கு உபலம்பநம்தோற்ற உக்திப்ரத்யுக்திரூபேணபா(ஷா)வம் (உன்மகளித்யாதி). (ஸ்வரூபஜ்ஞாநம்) என்றது-தன்பருவத்தைப்பார்க்க வல்லளென்கை. தானென்றத்தால் தோற்றின ஸர்வஜ்ஞதைக்கு ப்ரக்ருதோபயோகம் காட்டுகிறார் (இவளித்யாதி). மேலுக்கவதாரிகை (அதுக்கித்யாதி). திருத்தாயார் தானே தகாதென்ற அத்தை ஸர்வஜ்ஞனை அவன்செய்ய அடுக்குமோவென்ன; (இவளித்யாதி). இத்திருமொழியைத் தலைக்கட்டிவைத்துவாழலாயிருக்க, அங்கே கொடுபோனால் ப்ரயோஜநமில்லையென்று கருத்து. (அ)

(க) ரா-பா-௭௩-௨௬. (உ) ௪-திருவ-௪௭.

மூ.—முள்ளெயிறேய்ந்திலகூழை முடிகொடா
தெள்ளியளென்பதோர் தேசிலளென்செய்கேன்
கள்ளவிழ்சோலைக் கணபுரங்கைதொழும்
பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப் பெறுவரே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எயிறு	(இவளுக்கு) தந்தங்களினுடைய	என்செய்கேன்	(இவளைப்பற்றி) என்ன செய்வேன்;
முள்	அங்குரமும்	கள்	மதுவானது
ஏய்ந்தில	நிரம்பவில்லை; [கள்	அவிழ்	பெருகாநின்ற
கூழை	(இவளுடைய) குழல்	சோலை	சோலைகளையுடைய
முடி	முடிப்பதற்கு	கணபுரம்	திருக்கண்ணபுரத்தை
கொடா	பிடிகொடுக்கவில்லை;	தொழும்	தொழாநின்ற
	(இன்னமும்)		(இப்படிப்பட்ட)
தெள்ளியள்	தெளிவுடையவள்	பிள்ளையை	பிள்ளையை
என்பது	என்று சொல்லும்படியான	பிள்ளையென்று	(தன்வயிற்றில் பிறந்த) பிள்ளையென்று
ஓர்	ஒருவிதமான	எண்ண	எண்ணுவதற்கு
தேசிலள்	தேஜஸ்ஸையும் பெற்றவளன்று;	பெறுவரே	பெறுவர்களோ?.

அவ.—ஒன்பதாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே "என்பேதை மணிநிறம் கொண்டுதான் கோயின்மைசெய்வது தக்கதே" என்று நிவாரகரில்லாத தேசத்திலே வழியடிப்பாரைப்போலே முக்த்தை (ग्ध) யான இவள் நிறத்தைக் கொள்ளவேணுமோவென்று இவள் சொன்னவார்த்தையைக்கேட்ட சவரிப்பெருமாள், நீ நம்மை நியமிக்கக் கடவையோ. (க) "ஸர்வஸ்ய வஶீ-ஸர்வஸ்யேஶாந:" - ஸர்வஸ்யவஶீ - ஸர்வஸ்யேஶாந:" என்று ஸர்வர்க்கும் நியாமகராயிருக்கிறநம்மை நியமிக்கக்கடவையோ? [மடவரல்மாதரென்பேதை] என்று - உன்மகளென்றும், உனக்கு பவ்யையென்றும் சொன்னாய்; அவளைநியமித்

அரு.—ஒன்பதாம்பாட்டு (முள்ளித்யாதி) "பிள்ளையென்றெண்ணப் பெறுவரே" என்றத்தைக் கடாக்ஷித்து ஸங்கதி (கீழித்யாதி). அர்ச்சகபராதீநராயிருந்த உம்மைநியமித்தாலும் நியமிக்கலாமித்தனைபோக்கி, உம்மூரைத் தொழுதவளை நியமிக்கக் கூடாதென்று கருத்து. பல்லெழாத பருவமென்று

(க) ப்ருஹ-௬-௪-௨௨.

துக்கொள்ளமாட்டாரோ? நீநம்மைநியமிக்கப்போராய்காணென்ன; இவள் பருவமிது, பா(ஞா)வமிது; ஆனபின்பு என்னாலே நியமிக்க லாமோ விருப்பது வென்கிறாள். இவளளவு இதுவாயிருக்க, இவ ளைப்போலே அவகாஹித்தாளொரு பெண்பிள்ளை வார்த்தை யாலே சொன்னாளிறே அவளுடைய திருத்தாயார். (க) [முலையோ வித்யாதி] இவளளவு இதுவாயிருக்க, அவகாஹநமிருந்தபடி யென்; அளவன்றியிருந்ததீ என்றாளிறே. [முலையோமுழுமுற்றும்போந் தில) முலைபுரைகிறவித்தனை. வளருமளவும் செல்ல வரையிட்ட தில்லை, இதுபருவமிருந்தபடி. [திருவேங்கடமென்று கற்கின்ற வாசகமே] திருமலையை விடாமல் சொல்லாநின்றாள். இது அவ காஹநமிருந்தபடி. [இவள்பரமே] இவளளவன்றிக்கே யிருந்ததீ என்றாளிறே. அவளுடைய பருவமில்லையே இவளுக்கு; அவகாஹ நத்திலும் வாசிகமாத்ரமேயிறே அவளுக்குள்ளது. காயிகத்தால் வந்த அவகாஹநமுண்டே இவளுக்கு. பங்கு(ஙு)க்களாயிருப்பார்க் கும் அந்த(ந்த)ராயிருப்பார்க்கும் போகவொண்ணாதபடி பரமபதத் துக்கு அடுத்தணித்தாய் அர்ச்சிராதிபோலே பெரியவேற்றமேற வேண்டியிறே திருமலையிருப்பது. அத்தனை துஷ்ப்ராபமாயன்றே திருக்கண்ணபுரமிருப்பது, இருந்தபடியே எல்லார்க்கும் புக்கநு பவிக்கலாம்படியிறே திருக்கண்ணபுரமிருக்கும்படி. ஆகையால்இவ ளளவு இதுவாயிருந்தது. அவகாஹநத்திலெல்லையிதுவாயிருந்தது; ஆனபின்புஇவளைநியமிப்பாருண்டோவென்று பொதுவிலேசொல்லு கிறாள்.

பருவத்தில் குறைத்தலும், “கைதொழும்” என்று அவகாஹநத்தில் ஆதிக்ய மும் சொன்னதுக்கு வ்யாவர்த்த்யம்காட்டத் திருவுள்ளம்பற்றி அதிஷ்ட்டி கையிடுகிறார் (இவளையித்யாதி). (வார்த்தையாலே) என்றது “கற்கின்ற வாசகம்” என்றத்தைப்பற்ற. (புரைகிற) முளைக்கிற. காயிகமான அவ காஹநத்தாலுண்டான ஏற்றமன்றிக்கே, மாநஸாவகாஹநத்திலும் திருமலைக்கும் திருக்கண்ணபுரத்துக்குமுண்டான ஸ்வபாவபர்யாலோசநாரூப அவகாஹநமு முண்டென்கிறார் (பங்குக்களித்யாதி). பெறுவேனோவென்னாதே “பெறுவ ரே” என்கையாலே (பொதுவிலே) என்றது. இத்தால் (உ) “ಮಮ ಮದ್ಭಕ್ತ ಭಕ್ತೇಷು ಪ್ರೀತಿರಭ್ಯಧಿಕಾ ಭವೇತ್ - மமமத்பக்த பக்தேஷு ப்ரீதிரப்யதிகாபவேத்” என்ற உன்னாலும், இவ்வளவு அவகாஹிக்கப்போமோவென்றிருக்கிற என்னு

(க) திருவிரு-கூ௦. (உ)

வ்யா.—(முள்ளெயிறேய்ந்தில) எயிறு -தந்தம்; முள்ளெயிறு- தந்தாங்குரம். எயிறுநிரம்பிற்றில்லை. (கூழைமுடிகொடா) இவள் குழலை வாரி யெடுத்துப்பிடித்துக் கலிக்கட்டாகக் கட்டவென்று புக்கால் அதுக்குப்பிடிகொடாது. (தெள்ளியளென்பதோர் தேசிலள்) இப்படியிருந்தாலும் தன்வல்லபனைப் பத்துஇருபது பட்டினிகொண்டாளென்னும் சொல்படைத்திலள். ஸர்வஜ்ஞனவன் மதிமயங்கும்படியான தேஜஸ்ஸைப்பெற்றிலள். (என்செய்கேன்) கீழில் இவளுடைய முக்த்ததை சொல்லி மேல் இவளுடைய ப்ரபாவத்தை நினைத்து என்செய்கேனென்கிறாள். (என்செய்கேன்) இவளை நியமிக்கவடுக்குமோ? அநுவர்த்திக்கவடுக்குமோ வென்கிறாள்.

(கள்ளவிழ்த்யாதி) பூர்வாவஸ்த்தையைப்பார்த்து நியமிக்க அடாது. உத்தராவஸ்த்தையைப் பார்த்து அநுவர்த்திக்க வடுக்குமென்கிறாள். இவளை அநுவர்த்திக்க வடுக்குமென்று ஸித்தாந்திக்கிறது எதுகொண்டென்ன; இப்படிப்பட்ட பேரளவுடையளான பெரியவளன்றோவென்கிறாள். (கள்ளவிழ்சோலைக் கண்ணபுரம்) நித்யவஸந்தமானதேசம். புஷ்பங்களில் கட்டவிழ்ந்து மதுவைப்ரவஹிக்கும் சோலையையுடைத்தான தேசம். (கணபுரம்கைதொழும்பிள்ளை) (க) "బాల్యాత్ప్రభృతిసుస్నిగ్ధః- பால்யாத்ப்ருப்ருதி ஸுஸ்நிக்த்

லும், சேர்த்துவிடும் தோழிகளாலும் நியமிக்கப்படாதவளை என்வயிற்றில் பிறப்பைக் கருதி நியமிக்கவோ வென்கிறாள் என்றதாயிற்று.

(கலிக்கட்டு) குஞ்சி. தெள்ளிய தேஜஸ்ஸைப்படைத்தவள் ஜநககுல ஸுந்தரியென்று திருவுள்ளம்பற்றி, அவள் திருவடி வந்தழைத்தாலும் (உ) "తత్తస్య సదృశంభవేత్ - தத்தஸ்ய ஸத்ருஸம்பவேத்" என்றுசொல்லி (௩) "ఊర్ధ్వం మాసాన్నజీవిష్యే- ஊர்த்த்வம் மாஸாந்நஜீவிஷ்யே" என்றுநாளிட்டு (௪) "నమాంసం రాఘవో భుఙ్క్తే - நமாம்ஸம் ராகவோபுங்க்தே" என்றத்தைக் கேட்டுவைத்தும், அதுக்கும் இசைந்துவிட்டாளே, அப்படி செய்யவறியாதாளாய் தொழுதாளென்னும் தாத்பர்யத்தை ஸூசிப்பிக்கிறார் (இப்படி யித்யாதி). (பத்து இருபது) என்றது - பத்துமிருபதுமென்றபடி. வாக்யார்த்தம் (ஸர்வஜ்ஞனித்யாதி).

பல்லெழாததசையிலும் பராவண்யமுடையாருண்டே இவளுக்கேற்றமென்னென்ன (பால்யாத் ப்ரப்ருதியித்யாதி).

(க) ரா-பா-௧அ-உ௭. (உ) ரா-ஸு-௩அ-௬௭.
(௪) ரா-ஸு-௩௬-௪௧.

தஃ'' என்று பிறந்தவன்றே கால்கடையிலே தொட்டிவிட்டுவளரும்படி ஸாஶ்ஙிக்தராயிறே இளையபெருமாளிருப்பது. இப்படியிருந்த அவரும் " (க) ప్రాఞ్జలిం ప్రహ్వమాసీనమ్ - ப்ராஞ்ஜலிம் ப்ரஹ்வமாஸீநம்'' என்றுஅவனைத்தொழுதாரித்தனையிறே. அவனூரைத்தொழுமவளிறே இவள். (பிள்ளையை) இப்படிப்பட்ட பெரியமுதன்மையையுடையவளை.

(பிள்ளையென்றெண்ணப் பெறுவரே) தன்வயிற்றிலே பிறந்தாளென்கிறபந்த(బన్ధ)த்தைக்கொண்டு நியமிக்கப்பெறுவர்களோ? (எண்ணப்பெறுவரே) நினைக்கத்தான் பெறுவர்களோ? நினைத்தாளாகில் (உ) "హరిసంస్మరణం పరమ్- ஹரிஸம்ஸ்மரணம்பரம்'' என்கிறபடியே ப்ராயஶ்சித்தம்பண்ண வேண்டியிறேயிருப்பது. (உ) "కృతే పాపేఽనుతాపో వై యస్య పుంసః ప్రజాయతే। ప్రాయశ్చిత్తం తు తస్యైకం హరిసంస్మరణం పరమ్ - க்ருதேபாபே஽நுதாபோவை யஸ்யபும்ஸஃ ப்ரஜாயதே। ப்ராயஶ்சித்தந்து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம்''. [க்ருதேபாபே] ஒருத்தன் ஒருபாபத்தை புத்திபூர்வகமாகப் பண்ணுவது. [அநுதாபஃ] அநந்தரம் "தப்பச்செய்தோம், புருஷோத்தமன் அறியில்செய்வது என்'' என்று அநுதபித்தவன் ப்ராயஶ்சித்தத்துக்கு அதிகாரி. [யஸ்யபும்ஸஃ ப்ரஜாயதே] இதுக்கு இன்னாரென்றில்லை. ஆரேனுமாகவுமாம். [ப்ராயஶ்சித்தந்து தஸ்யைகம் ஹரிஸம்ஸ்மரணம் பரம்] ஸர்வபாபங்களையும் போக்குமவனை நெஞ்சாலே ஒருகால்நினைக்கவமையும். [பரம்] ப்ராயஶ்சித்தங்களில் தலையானப்ராயஶ்சித்தம் இதுவேயென்கிறது. "பெரிய திருவடி எழுந்தருளச்செய்தே ஒரு பர்வதாக்ரத்திலே வைகித்தங்கப்புக்கான்; அந்த பர்வதசிகரத்திலே ஒரு பெண்பெண்டாட்டி பகவத்குணங்களைப்பேசக்கேட்டு, 'தான் ஸ்த்ரீயாயிருக்கபகவத்பக்த(భ)ஜநத்திலே இத்தனை ருசியுண்டாவதே? இவள் ஒருபுண்யக்ஷேத்ரத்திலேயிருக்கப் பெற்றதில்லையே' என்று வெறுக்க, அநந்தரம் விடிந்தவளவிலே இவன்போகநினைக்க, இவன் சிறகுகள் உதிர்ந்து எழுந்திருக்கமாட்டாதே யிருந்தான்.'' என்று மஹாபாரதத்திலே ஆரண்யபர்வத்திலே எழுதிற்று.

ஆகவித்தால் சொல்விற்றுய்த்து "பகவத்விஷயத்திலேஒருகீற்றுப்புகுர நின்றான் யாவனொருவன், அவன் பூர்வவ்ருத்தத்தைப் பார்த்

ஸ்வாபதேசம் (ஆகவித்யாதி). ... ... (க)

(க) ரா-அ-ச-சஉ.   (உ) வி-பு-உ-கூ-சய.

துக்குறைய நினைக்கக்கடவனல்லன், அவனிருந்தபடியேஉத்தேஶ்யம் பண்ணிக்கொண்டாட வடுக்கும்'' என்கிற அர்த்தத்தை வெளியிடுகிறது. (க) ''ஸூராசாரோ உபி- துராசாரோபி'' இத்யாதி. (கூ)

மூ.—கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை
பார்மலி மங்கையர்கோன் பரகாலன்சொல்
சீர்மலி பாடலிவைபத்தும் வல்லவர்
நீர்மலி வையத்து நீடுநிற்பார்களே. (க௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்	மேகங்களாலே	சொல்	அருளிச்செய்த
மலி	வ்யாப்தமான	சீர்	காம்பீர்யமாகிற சீர்மை
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே எழுந்தருளியிருக்கிற	மலி	நிறைந்த [யாக
		பாடலிவைபத்தும்	இப்பத்துப் பாட்டையும்
எம்அடிகளை	என்ஸ்வாமிவிஷயமாய்,	வல்லவர்	அப்ய (ஸ்த) லிக்க
பார்	பூமியில் [ராய்	நீர்	கடலாலே [வல்லவர்
மலி	மிக்கபுகழையுடைய	மலி	சூழப்பட்ட
மங்கையர்	திருநகரிக்கு	வையத்து	பூமியிலே
கோன்	ஸ்வாமியான	நீடு	வெகுகாலம்
பரகாலன்	ஆழ்வார்	நிற்பார்களே	வாழப்பெறுவர்கள்(க௦)

அவ.—பத்தாம்பாட்டு. இத்தால் ''கவிபாடிற்று இன்னுரை, பாடினேன் இந்நான், என்கவிதான் இன்னது, இதுகற்றூர்க்கு பலம் இன்னது'' என்று இவைநாலையும் சொல்லுகிறுர்.

வ்யா.—(கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை) ஶ்ரமஹரமாய், தர்ஶநீயமுமாய், உபகாரகமுமான மேகஸஞ்சாரங்களையுடைத்தான தேசம். (எம்மடிகளை) அம்மேகங்களைப்போலே தர்ஶநீயமான வடிவை யுடையனுய், ஶீலவனுமாய், பரமோதாரனுமாய், தன்னை உக

அரு.—பத்தாம்பாட்டு (கார்மலியித்யாதி) ''கார்மலி'' என்றதை கண்ணபுரத்துக்கு விசேஷணமாக்கிஅர்த்தஸ்வபாவத்தாலேவந்தகுணங்களை அருளிச்செய்துகொண்டு சப்தார்த்தம் (ஶ்ரமஹரமாயித்யாதி). ''கார்மலி'' என்றதை ''அடிகளை'' என்றதுக்கு விசேஷணமாக்கி அர்த்தாந்தரம் (அம்மேகங்களையித்யாதி). அன்றிக்கே ''கார்'' என்றபதம் தத்குணவாசகமாய், அந்தகுணங்க

(க) ஸாத்வ-ஸம்-கக-உக.

வாதார் தலையிலே இடிவிழ விடக்கடவனுமான என் ஸ்வாமியை. (க) "குணைர்தாஸ்யமுபாகத:" என்றுகுணங்களுக்குத்தோற்று அடிமை புகுகிறாரல்லர் என்குடிநாதனென்கிறார். (பார்மலிமங்கையர்கோன் பரகாலன்சொல்) லோகத்தில் இருவர் கூடின விடமெல்லாம் "இதோர் அவகாஹநமே, இதொரு கவித்வமே, இவருக்கு ருஷிகள்ஒப்போ? வேதங்கள்தான் ஒப்போ? அல்லாத ஆழ்வார்கள்தான் ஒப்போ?" என்று நின்றார் நின்றபடி கொண்டாடும்படியான பெரியபுகழை யுடையவர். "பரகாலன்" என்று - பெயர்.

(சீர்மலிபாடலிவைபத்தும் வல்லவர்) தன்னைப்பொதிய வைக்கோலில்லாதபடி விளையும் செய்போலே, சப்தம் அல்பமாய், பகவத்குணங்கள் ப்ரசுரமாயிருக்கிறபாடல். "இவைபத்தும்" என்று கையிலேயிட்டுப்பார்ப்பாரைப்போலேசொல்லுகிறார். (வல்லவர்)இயலாகவுமாம், இசையாகவுமாம், ஏதேனுமொரு ப்ரகாரத்திலே வல்லவர்கள். (நீர்மலிவையத்து நீடுநிற்பார்களே) கடல் சூழ்ந்த பூமியிலே சிரகாலம் வாழப்பெறுவர்கள். இதுகற்றார்க்குப் பலம் ஸம்ஸாரத்திலிருக்கையோவென்ன; பரமபதத்திலே தெள்ளியீர் இல்லையே; தெள்ளியீருள்ளது - இங்கேயன்றோ?. (உ) "பாவோநாந்யத்ரகச்சதி" என்றுதிருவடிராமகுணங்களைக்கேட்டு, அத்தாலே பூர்ணனாய், அத்தேசத்தேயிருந்தாப்போலே தெள்ளியீரை இங்கே

ளாலே ஸம்ருத்தமான தேசமென்றும், காரானது மலிந்திருந்துள்ள தேசமென்றும் இரண்டர்த்தத்தைக் கூட்டியருளிச் செய்கிறாரென்னுதல்; மூன்றாமர்த்தம் (மேகங்களையித்யாதி). அதவா "கார்மலி" என்றது தேசத்துக்கே விசேஷணமாய், இப்படி விசேஷிக்கையாலேபலித்ததாத்பர்யமென்று ஏகார்த்தமேயாகவுமாம். (ஸாபலனுமாய்) என்றது - ஸ்வயத்நஸாத்யமன்றிக்கே தன்னடையே வர்ஷிக்கையாலே மேகங்களுக்கு ஸௌலப்யமுண்டென்று திருவுள்ளம்பற்றி. என்னழகனை யென்னாதே "அடிகளை" என்றதுக்குக் கருத்து (குணைரித்யாதி). பாரிலேபுகழ்மலிந்த என்றுக்கி "இவட்கிதுவென்கொலோ" என்றவிடத்திலும் "முள்ளெயிறேய்ந்தில" என்கிறபாட்டிலும்விவக்ஷிதமான ஆழ்வாரில் வைலக்ஷண்யத்தையுட்கொண்டுதாத்பர்யம்(லோகத்திலித்யாதி).

(பொதிய) கோட்டைகட்ட. (தெள்ளியீரை) தெள்ளியீரென்கிற திரு

(க) ரா-கி-ச-கஉ. (உ) ரா-உத்த-சா0-கச.

பாடக்கேட்டு பூர்ணராயிருக்கப் பெறுவர்கள். .... (கഠ)

பெரியவாச்சான்பிள்ளைதிருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி

எட்டாம்பத்து இரண்டாந்திருமொழி முற்றிற்று.

எட்டாம்பத்து மூன்றாந்திருமொழி,

கரையெடுத்தப்ரவேசம்.

வ்யா.—(க) "ఏతైర్నిమిత్తైరపరైశ్చ సుభ్రూస్సమ్బోధితా ప్రాగపి సాధుసిద్ధైః। వాతాతపక్లాన్తమివ ప్రణష్టం వర్షేణబీజం ప్రతిసఞ్జహర్ష- ஏதைர்நிமித்தைரபரைஸ்சஸுப்ரூஸ்ஸம்போதிதா ப்ராகபி ஸாதுஸித்தைஃ। வாதாதபக்லாந்தமிவ ப்ரணஷ்டம் வர்ஷேண பீஜம் ப்ரதிஸஞ்ஜஹர்ஷ" "கைவளைகொள்வதுதக்கதே" என்று தாயார்சொன்னவாறே, இத்தைக்கேட்டு உணர்ந்தபெண்பிள்ளை தன்கையைப்பார்த்து, "இழந்தேன்வரிவளை" என்கிறுள். கீழ்த்திருமொழியிலே "கைவளைகொள்வது தக்கதே" என்று திருத்தாயார் சொன்னுள்; அவள்பலகாலும் சொல்லக் கேட்கையாலும், இவள் அதுதன்னை வாய்வெருவுகையாலும் கீழ்பிறந்த மோஹமானதுபோய், அல்பமறிவுபிறந்து, அதுமொழியை. ... ... (கഠ)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு.—கரையெடுத்தப்ரவேசம். திருத்தாயார்வார்த்தை கேட்டுணர்ந்த மாத்ரத்துக்குத்ருஷ்டாந்தமருளிச்செய்கிருர் (ஏதைரித்யாதி). (ஸஞ்ஜஹர்ஷ) என்றவநந்தரம், "என்கிறபடியே பிராட்டி நிமித்தங்களாலே உணர்த்தப் பட்டாப்போலே உணர்த்தப்பட்டு பேசுகிருள்" என்று பூரிப்பது. இங்கே உணருகைக்கு நிமித்தமென்னென்ன; (கைவளையித்யாதி). மணிநிறங்கொண்டதும், திருத்தாயார் கீழ்த்திருமொழியில் சொன்னுளேயாகிலும் கைமேலே காணலாயிருந்தது; வளை இழப்பாகையாலே, இத்தையே பேசுகிருளென்று திருவுள்ளத்தே ஸங்க்ரஹேண வருளிச்செய்த ஸங்கதியை விஸ்தரிக்கிருர் (கீழிலித்யாதி). "கைவளைகொள்வதுதக்கதே" என்றொருகால் சொன்னதாயிருந்தாலும் "தெள்ளியீர் வளைகொள்வதுதக்கதே" "தேவர்க்கும்தேவரானவர் வளை கொள்வதுதகுமோ" என்றுப்போலே ப்ரதிபதம் ஹேதுகர்ப்பமாகையாலே பலகாலும் சொன்னவபிமதமென்கிருர் (இவளித்யாதி). "அதுதன்னையே) என்றவநந்தரம், "பரிஹரிக்கைக்கு வேங்கடம் முதலானவற்றை" என்று கூட்டுவது. ... ... *

(க) ரா-ஸு-உக-கூ.

தான் ஆஶ்வாஸத்துக்குடலாகை தவிர்ந்து, தான்படுகிற வ்யஸநத்தை அநுபாஷிக்கைக்கு உடலாக, அத்தாலே இரவல்வாயாலே தன்னிழவைச் சொல்லுகையன்றிக்கே தானே தன்னிழவுகளைச் சொல்லிக்கூப்பிடுகிறாளாயிருக்கிறது.

மூ,—கரையெடுத்தசுரிசங்கும் கனபவளத்தெழுகொடியும்
திரையெடுத்து வருபுனல்சூழ் திருக்கண்ணபுரத்துறையும்
விரையெடுத்ததுழாயலங்கல் விறல்வரைத்தோள் புடைபெயர
வரையெடுத்த பெருமானுக்கிழந்தே னென்வரிவளையே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கரை	கோ (ஃ்ஸ்) ஷத்தை	விரை	பரிமளத்தை
எடுத்த	உடைத்தாய்	எடுத்த	உடையதான
சுரி	வளைவுமுடையதான	துழாய்	திருத்துழாயின்
சங்கும்	சங்குகளையும்,	அலங்கல்	மாலையையுடையதாய்,
கனம்	செறிந்திருக்கிற	விறல்	மிடுக்கையுடையதாய்
பவளத்து	பவளத்தினுடைய	வரை	மலைபோலிருக்கிற
எழு	வளர்த்தியை யுடைய	தோள்	திருத்தோள்கள்
கொடியும்	கொடிகளையும் [தான	புடைபெயர	அசையும்படியாக
திரை	அலைகளானவை	வரை	கோவர்த்தந மலையை
எடுத்து	எடுத்துக்கொண்டு	எடுத்த	எடுத்தவனான
வரும்	வாராநின்ற	பெருமானுக்கு	பெரிய உபகாரகனான ஸர்வேஶ்வரனுக்கு
புனல்	ஜலத்தாலே		
சூழ்	சூழப்பட்ட	என்	என்னுடைய
திருக்கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே	வரி	தர்ஶநீயமான
		வளை	கைவளையை
உறையும்	நித்யவாஸம் பண்ணுகிறவனாய்,	இழந்தேனே	இழந்துவிட்டேன். (க)

வ்யா.—முதற்பாட்டு. (கரையெடுத்த) "கரை" என்று-கோஷத்துக்குப்பெயர். சங்கானது திரைமேல் திரையாகப்போந்து ஏறுகிறபோது கரையில்பார்த்து நின்றார்கள், " ஒருசங்கினுடையவளவு இருக்கிறபடியென்" என்றுசொல்லுகிற கோஷமாதல்; அன்றிக்கே

அரு.—முதற்பாட்டு. (கரையித்யாதி) "எடுத்த" என்றது - எடுவித்தவென்றாக்கி அருளிச்செய்கிறார் (சங்கானதித்யாதி).

சங்குதனக்கே ஸ்வதஃ உண்டாயிருப்பதொரு கோஷமுண்டிறே; அத்தைச்சொல்லிற்றுதல். (கனவித்யாதி)செறிந்தபவளத்தினுடைய வளர்ந்தகொடியும், திரைகளானவை எடுத்துக்கொண்டு வாராநின்ற ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம் பண்ணுகிற.

(விரையித்யாதி) பசுக்களுக்கும் இடையர்க்கும்வந்த ஆபத்தைப் பரிஹரிக்கைக்காக கோவர்த்தநகிரியைத் தோளசையும்படி யெடுத்துக்கொண்டு நின்றுறுயிற்று. மிக்க பரிமளத்தை யுடைத்தான திருத்துழாய் மாலையையுமுடைத்தாய், பெரியமிடுக்கையுமுடைத்தாய், மலைபோலேயிருக்கிற திருத்தோள்கள் அசையும்படியாக மலையையெடுத்துப் பரிஹரித்த ஆபத்ஸகனான ஸர்வேஶ்வரனுக்கு என்னுடைய தர்ஶநீயமான வளை இழந்தேன். .... (க)

மூ.—அரிவிரவுமுகில் கணத்தாலகில்புகையால் வரையோடும்
தெரிவரியமணிமாடத் திருக்கண்ணபுரத்துறையும்
வரியரவினணைத் துயின்று மழைமதத்தசிறுதறுகண்
கரிவெருவமருப்பொசித்தார்க்கிழந்தெனென் கனவளை (உ)

பதம்.	உரை.	பதம்.	உ.
அரி	கறுப்பானது	வரி	ரேகைகளையுடைய
விரவும்	(கலந்து) பரவாநின்ற	அரவின்	திருவநந்தாழ்வானுகிற
முகில்	மேகங்களுடைய	அணை	படுக்கையிலே
கணத்தால்	ஸமூஹத்தாலும்	துயின்று	கண்வளர்ந்தருளின,
அகில்புகையால்	(அவ்வூரிலுண்டான) அகிற்புகைகளாலும்	மழை	வர்ஷதாரைகள் போலேயிருக்கிற
வரையோடும்	மலையோடு	மதத்த	மதஜலத்தையுடைய
தெரிவு	பேதஜ்ஞாநமானது	சிறு	சிறுத்த
அரிய	(உண்டாக) அரிதான	தறுகண்	(க்ரௌர்யம் தோற்றும்படி பார்க்கிற) கண்களையுடையதாய்
மணி	ரத்நமயமான		
மாடம்	க்ருஹங்களையுடைய		
திருக்கண்ணபுரத்துறையும்,			

சுத்தஸ்வபாவரும் ராகப்ரதாநரும் சேர்மையிடும்படியான தேசத்திலிருந்தவனை மாத்ரமன்றிக்கே, அரியனசெய்தும் நோக்கினவனுக்கு இழந்தேன் வளையை இது வென்னென்னுமபிப்ராயத்தை ஸ்ப்புரிப்பிக்கிறார் (பசுக்களுக்குமித்யாதி). ... ... (க)

கரி	குவலயாபீடமானது	என்	என்னுடைய
வெருவ	அஞ்சும்படியாக	கன	க (ஃ) நமான
மருப்பொசித்தார்க்கு	தந்தங்களை அநாயாஸேந முறித்துப் பொகட்டவனுக்கு		வளை இழந்தேனே. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (அரிவிரவுமுகில்கணத்தால்) கறுப்பானது எங்குமொக்கப் பரந்திருக்கிற காளமேகஸமூஹங்களாலும், அவ்வூரிலுள்ளார் உண்டாக்குகிற அகில்புகையாலுண்டானஇருட்சியாலே மலைக்கும் மாடத்துக்கும் வாசிதெரிந்து ப்ரதிபத்தி பண்ணவொண்ணுதபடியாய், ரத்நமயமான மாடங்களையுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ணுகிற.

(வரியித்யாதி) நாநாவான வரிகளையுடைத்தாய், நாற்றம், குளிர்ச்சி, மென்மைகளையுடைத்தாயிருக்கிற திருவநந்தாழ்வானுகிற படுக்கையிலே கண்வளர்ந்தருளி, வர்ஷதாரைகள்போலே யிருக்கிற மதஜலத்தையுடைத்தாய் வடிவில் பெருமைக்கு ஈடாகப்பெருத்திருக்கையன்றிக்கே, ஜாத்யுசிதமாம்படிசிறுத்துக்ரௌர்யமெல்லாம் தோற்றும்படி பார்க்கிற கண்களையுடைத்தாயிருந்துள்ள குவலயாபீடமானது வெருவும்படியாக அதின்கொம்புகளை அநாயாஸேந முறித்துப்பொகட்ட அச்செயலுக்கு வளைஇழந்தேன். .... (உ)

மூ.—துங்கமாமணிமாட நெடுமுகட்டின் சூலிகைபோம்
திங்கள்மாமுகில் துணிக்கும் திருக்கண்ணபுரத்துறையும்
பைங்கண்மால்விடையடர்த்துப் பனிமதிகோள் விடுத்துகந்த
செங்கண்மாலம்மானுக்கு இழந்தேனென் செறிவளையே. (ங)

அரு.—இரண்டாம்பாட்டு. (அரியித்யாதி) "வரையெடுத்த பெருமானுக்கு" என்றுநின்றாய்; (க) "மதுராம் ப்ராப்யகோவிந்தே கதம்கோகுலமேஷ்யதி-மதுராம் ப்ராப்யகோவிந்தே கதம்கோகுலமேஷ்யதி" என்றுதிருவாய்ப்பாடியில்பெண்களெல்லாம் வளை இழந்தார்களேயென்ன; மதுரையிலும் தொடர்ந்து போந்தேனென்கிறாளென்று ஸங்கதி.

"அரி" என்று - மா, என்றாய், அத்தாலே கறுப்பை லக்ஷித்தருளிச்செய்கிறார் (கறுப்பானது) என்று. மாடங்களழகிலும், படுக்கை வாய்ப்பிலும் மீடுபட்டு களிறு தருபுணர்ச்சிகொடுத்து வளைஇழவாமை சொல்லுகிறாளென்று பாட்டுக்குத் தொகுத்தகருத்து. ... ... (உ)

(க) வி-பு-ரு-கஅ-கச.

பதம்.	உரை.
துங்க	ஶ்ரேஷ்டமாய்,
மா	பெருவிலையனை
மணி	ரத்நங்களையுடைய
மாடம்	க்ருஹங்களினுடைய
நெடு	நீண்ட
முகட்டின்	உச்சியிலிருக்கிற
சூலிகை	கூச்சானது,
போம்	(ஆகாசத்தில்) போகாநின்ற
திங்கள்	சந்த்ரனையும் [டைய
மா	பெரியவடிவையு
முகில்	மேகங்களையும்
துணிக்கும்	பேதிக்கும்படியான
திருக்கண்ணபுரத்துறையும்,	
பைங்கண்	பசுமையானகண்களையுடையதுகளாய்

பதம்.	உரை.
மால்	பெரியவடிவையுடையதுகளான
விடை	எருதுகளை
அடர்த்து	அழியச்செய்து,
பனி	குளிர்ச்சியைபண்ணக்கடவனை
மதி	சந்த்ரனுடைய
கோள்	க்ஷயத்தை
விடுத்து	போக்கி (அதனால்)
உகந்த	உகப்பையுடையனாய்
செங்கண்	புண்டரீகாக்ஷனாய்
மால்	வ்யாமோஹமுடையனா
அம்மானுக்கு	ஸர்வேஶ்வரனுக்கு[ன
என்	என்னுடைய
செறி	ஒருகாலும் கழற்றவொண்ணாமல் அமைந்த
வளை இழந்தேனே. (ங)	

வ்யா.—மூன்றாம்பாட்டு. (துங்கமித்யாதி) ஓக்கத்தையுடைத்தாய், பெருவிலையனை ரத்நங்களையுடைய மாடங்களிலுண்டான சூலமானது. (திங்களித்யாதி) சந்த்ரனையும், பெரியவடிவையுடைய மேகங்களினுடையவும் கீழ்வயிற்றை பேதி(భేద)க்கிற திருக்கண்ணபுரத்துறையும்.

அர.—மூன்றாம்பாட்டு. (துங்கமித்யாதி) நீ தொடர்ந்து மதுரையில் செய்த அபதாநத்தில் ஈடுபட்டாலும் (க) "నగరస్త్రీకలాలాపమధుశ్రోత్రేణపాస్యతి- நகரஸ்த்ரீ கலாலாபமதுஶ்ரோத்ரேண பாஸ்யதி" என்கிற பதினாறாமாயிரவர்பேச்சில் பிச்சேறியிராளோ? உன்மேலே மாலேறுமவளோவென்ன, (உ) "பின்னை கொல்" என்கிறபடியே நான் நப்பின்னையைப்போலே, "அவனேமாலேறும்படியிருந்தவளன்றோ? நானும் அவனை இழக்க வழக்குண்டோ" என்னும் கருத்தாலே விடைகொண்டத்தைச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"சூலம்" என்றது - மகுடங்களின்கூச்சு. போந்திங்கள் - போகிற திங்கள் என்னுமது ஸ்பஷ்டமென்று மேலுக்குக் கருத்தருளிச் செய்கிறார் (சந்த்ரனையுமித்யாதி).

(க) வி-பு-ரு-க௮-கச. (உ) தி-வாய்-கூ-ரு-க0.

(பைங்கண்மாலித்யாதி) பசுமையையுடைத்தான கண்களை யுடையவுமாய், பெரியவடிவையுடையவுமாயிருக்கிற ருஷபங்களை அழியச்செய்து, குளிர்ச்சியைப் பண்ணக்கடவனான சந்த்ரனுக்கு வந்தக்ஷயத்தைப்போக்கி, அதுதன்னைத் தன்பேறாக நினைத்திருக்கிற புண்டரீகாக்ஷனான ஸர்வேஶ்வரனுக்கு ஒருகாலும் கழற்ற வொண்ணாத வளையை இழந்தேன். .... (ஈ)

ஸூ.—கணமருவுமயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில்
திணமருவுகனமதிள்சூழ் திருக்கண்ணபுரத்துறையும்
மணமருவு தோளாய்ச்சி யார்க்கப் போயுரலோடும்
புணர்மருதமிற நடந்தாற்கிழந்தேனென் பொன்வளையே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கணம்	ஸமூஹமானது	மருவும்	வ்யாப்தமான
மருவும்	அதிகமாயிருந்துள்ள	தோள்	திருத்தோள்களை யுடைய
மயில்	மயில்களானவை	ஆய்ச்சி	யசோதைப் பிராட்டியானவள்
அகவும்	ஆடாநிற்பதுமாய்,	ஆர்க்க	கட்ட (உடனே)
கடி	பரிமளத்தையுடைய	உரலோடும்	உரலோடு
பொழில்	சோலைகளாலே	போய்	போந்து
சூழ்	சூழப்பட்டதாய்,	புணர்	ஒன்றாய் இணைத்துக் கொண்டிருக்கிற
நெடு	பெரிதான [தாய்	மருதம்	மருதவ்ருக்ஷங்கள்
மறுகில்	திருவீதிகளை யுடைத்	இற	முறிந்துவிழும்படி
திணம்	தார்ட்ட்ய (த்ருடத்) த்	நடந்தாற்கு	நடந்த எம்பெருமானு [க்கு
மருவும்	பொருந்தின [தால்	என்	என்னுடைய
கனம்	க(ஞ)னமான	பொன்	ஶ்லாக்யமான
மதிள்	ப்ராகாரத்தாலே		வளை இழந்தேனே. (ச)
சூழ்	சூழப்பட்டதுமான		
திருக்கண்ணபுரத்துறையும்,			
மணம்	க (ந்) ந்தத்ரவ்யங்களாலே		

"கோள்" என்று-சிறையாய், வ்யாதியாலுண்டான சிறை-க்ஷயமென்றருளிச் செய்கிறார் (சந்த்ரனுக்கு மித்யாதி). ... ... (ஈ)

அரு.—நாலாம்பாட்டு. (கணமருவித்யாதி) நப்பின்னையிடத்திற்போலே மாலேறியிருந்தவனுக்கு என்றுநின்றாய்; அவன் ஆஶ்ரிதகரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யத்தில் அதிச(ஞ்)பலனாகையாலே கட்டுண்டானோ? தெரியாதே நீ இங்ஙனே புலம்புவானென்னென்ன; அந்தகட்டோடேதானே விரோதியைப்

வ்யா—காலாம்பாட்டு. (கணமித்யாதி) திரள்மிக்கிருந்துள்ள மயில்களானவை தன்னுடைய ப்ரீதியாலே ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுநிற்பதுமாய், பரிமளப்ரசுரமான சோலையையுடைத்தாய், பெரியதிருவீதிகளை யுடைத்தாய், திண்மைமிக்கிருக்கையாலே அரணுகப்போரும்படியான மதிளையுடைத்தாயிருந்துள்ள திருக்கண்ணபுரத்துறையும்.

(மணமித்யாதி) பிள்ளைபக்கல் பரிவாலே எப்போதுமொக்க கந்த(ஃந்த)த்ரவ்யங்களாலே அலங்கரிக்கப்பட்ட தோள்களையுடையயசோதைப் பிராட்டிபோல்வார் பந்தி(ஃஸ)த்தவற்றை அறுத்துக் கொடுபோகையன்றிக்கே கட்டினஉரலையும் இழுத்துக்கொண்டுபோய். பக(ஃஃ)தத்தாதிகள்விட்ட அஸ்த்ரங்களாகிலிறே நேரே மார்வைக்காட்டி நிற்பது. பரிவுடையளாய் கட்டினதுக்குப் பண்ணலாவதொரு ப்ரதிக்ரியை இல்லை. ஆகையால் அத்தையும் இழுத்துக்கொடுபோய் இரண்டென்ன வொண்ணுதபடி நிர்விவரமாயிருக்கிற மருதுகள் முறிந்து விழும்படியாகப்போன முக்த(ஃ)னுக்கு என்னுடைய ஶ்லாக்யமான வளை இழந்தேன். .... (ச)

மூ.—வாயெடுத்த மந்திரத்தா லந்தணர்தம் செய்தொழில்கள்
தீயெடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ணபுரத்துறையும்
தாயெடுத்த சிறுகோலுக்கு உளைந்தோடித்தயிருண்ட
வாய்துடைத்த மைந்தனுக்கு இழந்தேனென்வரிவளையே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாய் எடுத்த	உச்சஸ்வரமாகச்சொல்லப்பட்ட	மறை	வேதமர்யாதையை
மந்திரத்தால்	மந்த்ரங்களாலே	வளர்க்கும்	வளர்த்துக்கொண்டு போருகிற
அந்தணர்	ப்ராஹ்மணர்கள்		திருக்கண்ணபுரத்துறையும்,
தம்	தங்களுக்கு	தாய்	தாயான யசோதைப் பிராட்டி
செய்தொழில்கள்	கர்த்தவ்யமான கர்மங்களை	எடுத்த	கையிலே எடுத்த
தீ	அக்நிகளை	சிறு	சிறிதான
எடுத்து	ஜ்வலிப்பித்து(செய்து)	கோலுக்கு	கொம்புக்கு

போக்கினவனுக்கு வரத்தட்டுண்டோவென்று ✲ உரவிடையாப்புண்ட வண்ணத்தைப் பேசுகிருளென்று ஸங்கதி.

"அகவுகை" ஆடுகையாய், அத்தையருளிச்செய்கிருர் (ஸஸம்ப்ரமேத்யாதி). "மறுகில்" என்று - வீதிக்குப்பெயர். "திணம்" - திண்மை. (ச)

உளைந்து	பயந்து	துடைத்த	தடவிக்கொள்ளுகிற
ஓடி	ஓடிச்சென்று	மைந்தனுக்கு	ஸ்வாமிக்கு
தயிர்	தயிரை	என்	என்னுடைய
உண்ட	அமுதுசெய்த	வரி	ஶ்ரேஷ்டமான
வாய்	முகமெங்கும்		வளை இழந்தேனே. (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (வாயெடுத்த மந்திரத்தால்) உச்சஸ்வரமாக ப்ரயோகிக்கிறமந்த்ரங்களாலே ப்ராஹ்மணர் தங்களுக்குக் கர்த்தவ்யமானபடியாலே அக்நியை ஜ்வலிப்பித்து வைதிகமர்யாதையை நோக்கிக்கொண்டுபோருகிற திருக்கண்ணபுரத்திலே வர்த்திக்கிற.

(தாயித்யாதி) அநுகூல ஸ்பர்ஶமுள்ள த்ரவ்ய மொழியச் செல்லாமையாலே வெண்ணெயையும் பாலையும் களவிலே அமுது செய்ய, அவை ஈட்டப்பட்ட வருத்தத்தாலே யசோதைப் பிராட்டி கையிலே கோலைக்கொள்ள "அவள்தாயிறே, அச்சமுறுத்துகைக்குச் செய்த செயலிறே" என்றறிய மாட்டாதே ஈடுபட்டோடி அமுது செய்த தயிரைக்காட்டி "நீ களவுகண்டாய்" என்பர்களென்று பார்த்து அத்தை இல்லை செய்கைக்காக முகமெங்கும் தடவிக்கொள்ளுகிற இளிம்பனுக்கு நான் இளிம்புபட்டேன்.

மூ.—மடலெடுத்தநெடுந்தாழை மருங்கெல்லாம் வளர்பவளம்
திடலெடுத்துச் சுடரிமைக்கும் திருக்கண்ணபுரத்துறையும்
அடலடர்த்தன்றிரணியனை முரணழிய வணியுகிரால்
உடலெடுத்தபெருமானுக் கிழந்தேனென்னொளிவளையே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடல்	மடல்களை	வளர்	வளராநின்றுள்ள
எடுத்த	எடுத்துக்கொண்ட	பவளம்	பவளமானது
நெடும்	நீளமான [தான	திடல்	மேடுகளிலே
தாழை	தாழைகளை யுடைய	எடுத்து	படர்ந்து
மருங்கெல்லாம்	பக்கங்களிலெல்லாம்	சுடர்	ஒளியால்

அரு.—அஞ்சாம்பாட்டு. (வாயித்யாதி) "ஒருத்தி கையிலே கட்டுண்டும், அவள் விரோதியைப்போக்கி அவளுக்குத் தன்னைத்தந்தவன், இவ்வளவான எனக்கும் உதவானோ" என்று அவனுடைய பவ்யதையிலேதுவக்குண்டு என் வளை இழந்தேனென்கிறாளென்று ஸங்கதி.

(ஈட்டப்பட்ட) திரட்டப்பட்ட. ... ... (௫)

இமைக்கும்	ப்ரகாசியாநின்ற திருக்கண்ணபுரத்துறையும்,	அணி	அழகான
ஙளைகழலும்படியாக இருந்த வென்னை. (சினமித்யாதி) சீற்றத்தையும் பெரியவடிவையுமுடைத்தான வ்ருஷபத்தினுடைய கழுத்திலேயுண்டாய் கண்ணுக்கு ஆபாஸமாய் கார்யத்தில் முடித்து விடவற்றான மணியினுடைய த்வநியானது என்னுடைய ஹ்ருதயத்தை சிதிலமாக்காநின்றது. (அனந்தலித்யாதி) அனந்தலையுடைத்தான அன்றிலினுடைய தழுதழுத்தபேச்சானது. (பாவியேனுவியை யடுகின்றதே) கண்டதுக்கெல்லாம் பாத்ய (ஙஷ்டு) கோடியிலே அந்வயிக்கும்படி மஹாபாபத்தைப்பண்ணின என்னுடைய தர்மிலோபத்தைப் பண்ணுகையிலே ஒருப்படாநின்றது. .... (கூ)

மூ.—

வார்கொள்மென்முலைமடந்தையர் தடங்கடல்வண்ணனைத்தாள்நயந்
ஆர்வத்தாலவர் புலம்பியபுலம்பலை யறிந்துமுன்னுரைசெய்த [து
கார்கொள்பூம்பொழில் மங்கையர்காவலன்கலிகன்றியொலிவல்லார்
ஏர்கொள்வைகுந்தமாநகர்புக்கிமையவரோடும் கூடுவரே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வார்கொள்	கச்சையை யுடைய	தாளை	திருவடிகளை
மென்	ம்ருதுவான [தாய்	நயந்து	ஆசைப்பட்டு
முலை	ஸ்தநங்களையுடைய	ஆர்வத்தால்	அபிநிவேசத்தாலே
மடந்தையர்	பெண்கள் [ரான	அவர்	அவர்கள்
தடம்	விசாலமான	புலம்பிய	கூப்பிட்ட
கடல்	ஸமுத்ரம்போன்ற	புலம்பலை	கூப்பீடை [ணி
வண்ணன்	திருமேனி நிறத்தை யுடையனுன எம்பெருமானுடைய	அறிந்து	அப்படியே புத்திபண்
		முன்	முதலிலே
		உரைசெய்த	கூப்பிட்ட,

தின் தாத்பர்யம் (கண்ணுக்கித்யாதி). (கார்யத்தில்) பாதி (ஙஷ்) க்கையில். "அரி" சத்ருவான வென்னுதல்; சப்தார்த்தமாய்பலிதம் (தழுதழுத்த) என்றது. நாகைத்துடர்ந்துபோகிற விடையின் மணிக்குரலும், போக (ஙஷ்) மத்யத்தில் போக (ஙஷ்) தசையில் பிரிவைஅதிசங்கை பண்ணிக்கதறும் அன்றில் குரலும் தன்நாயகன் வரவுக்கும் பிரியமாட்டாமல் கதறுகைக்கும் ஸ்மாரகமாய் பாதி (ஙஷ்) க்கு மென்று கருத்து. ... ... (கூ)

கார்கொள்	மேகஸஞ்சாரத்தை யுடையதாய்	வல்லார்	அப்ய (ஃஸி) ஸிக்க வல்லவர்கள்
பூம்பொழில்	புஷ்பச்சோலைகளை யுடையதான	ஏர்கொள்	அழகையுடைய
மங்கையர்	திருமங்கையிலுள் ளார்க்கு	வைகுந்தமா நகர்	நித்யவிபூ (ஃஸி)தியில்
காவலன்	ரக்ஷகராயிருக்கிற	புக்கு	ப்ரவேசித்து
கலிகன்றி	ஆழ்வார்	இமையவரோ டும்	நித்யஸூரிகளோடே
ஒலி	ஒலியையுடைத்தாம் படி (அருளிச்செய்த இத்திருமொழி யை)	கூடுவரே	கூடி (புநராவ்ருத்தி யில்லாத) பேற் றைப்பெறுவர்கள்.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வார்கொளித்யாதி) ப்ராப்தயௌவனைகளான திருவாய்ப்பாடியில் பெண்கள் க்ருஷ்ணன் திருவடிகளை ஆசைப்பட்டு கிட்டாமையாலே அபிநிவேசம் கரைபுரண்டுகூப்பிட்ட கூப்பீடைபுத்திபண்ணி அவ்வவஸ்தை பிறந்து கூப்பிட்ட. (கார்கொளித்யாதி) நிரந்தரம்மேகஸஞ்சாரத்தையுடைத்தானபரந்த பொழிலையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு ரக்ஷகராயுள்ள ஆழ்வார் ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த இத்திருமொழியைஅப்ய ஸிக்கவல்லார். (ஏர்கொளித்யாதி) பிரிவாற்றாமை கூப்பிடுவது தவிர்ந்து நித்யவிபூதியில் நித்யஸூரிகளோடேகூடி (க) "ஹாவு ஹாவு ஹாவு- அஹமந்நமஹமந்நம்" என்கிறபடியே ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டுக் கூப்பிட்டுப் பின்னை ஒருகாலும் புநராவ்ருத்தியில் லாதபேற்றைப் பெறுவர். .... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து அஞ்சாந்திருமொழி முற்றிற்று.

அரு.—பத்தாம்பாட்டு. (வார்கொளித்யாதி). "நயந்து" என்றதி னர்த்தம் (ஆசைப்பட்டு) என்றது. ... ... (க0)

ஜீயர் திருவடிகளே சரணம்.

(க) தை-ப்ருகு-க0-சு.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஆறுந்திருமொழி
தோண்டீருய்யும் ப்ரவேசம்.

அவ.—ஆதித்யனும் வந்து உதிக்கிறிலன்; நாழிகையும் கற்பத்திற் காட்டில் நெடிதாய்ச் செல்லாநின்றது; அநுகூலபதார்த்தங்களும் பாதகமாகாநின்றன; ஒருதுணைகாண்கிறிலேன்; ஸத்தையுங் கூட அழியுமளவாகாநின்றது; இது எவ்வளவாய்த்தலைக்கட்டுமோ? அறிகிறிலேனென்றார் கீழ்த்திருமொழியிலே; ஸம்ஸாரஸ்வபாவத்தாலே இவைதான் ஒருபடிப்பட்டு நில்லாவிறே. ஆகையாலேஆதித்யனும் ஒருகால்வந்து உதிக்கக்கூடுமிறே. இவைதான் அகஞ்சுரிப்பட்டவாறே சொன்னவார்த்தையும் செவிப்படும்; அவன் வந்திலனென்று நீர்நம்மைச் சொன்னவிடம் தப்பச்சொன்னீர்; நாம்திருக்கண்ணபுரத்திலேவந்து நிற்கிறது எதுக்காக; ஆஸ்ரிதார்த்தமாகவன்றோ இங்குவந்து நிற்கிறது; நமக்காகவென்று நீர் அறிந்தீராகில் நமக்கொருகுறைகளுமில்லை; நினைத்தவன்றே எல்லாம் செய்கைக்கு ஒருதட்டுமில்லை யென்றிருந்தீராகில், இனி அவ்வருகுள்ளவையுமெல்லாம் தன்னடையே வருகிறதென்று ஆறியிருக்க வமையாதோ வென்று அவன் ஸமாதாநம்பண்ண, ஸமாஹிதராய் ஆழ்வார்தம் இடையாட்டத்தில் தாம்கைவாங்கியிராநின்றார்; அவனேவந்து உதவுகிறிலன்; இதுஎவ்வளவாய்த் தலைக்கட்டுகிறதோவென்று ஒரு நீர்ச்சாவியாய்க்கிடக்கிற அநுகூலவர்க்கத்தைப்பார்த்து, நீங்கள்இங்ஙன்நோவுபடவேண்டா; நமக்குஉஜ்ஜீவிக்கைக்குஒருவிரகுண்டென்ன; அதாகிறது ஸர்வேஸ்வரன் நம்முடைய ரக்ஷணத்திலே உத்

அரு.—தொண்டீர்ப்ரவேசம். கீழே "பாவியேனுவியை யடுகின்றதே" என்றுநிரதிசய க்லேசத்தை யடைந்தவர், இத்திருமொழியில் "உய்யும் வகை கண்டேன்" என்று களிக்கைக்கு ஸங்கதியேதென்ன வருளிச்செய்கிறார் (ஆதித்யனுமித்யாதி). (இவைதான்)என்றது-ஆதித்யாதிகள் தானென்றபடி. (இவைதானகஞ்சுரிப்பட்டவாறே) என்றது - இவற்றாலுண்டான ஆற்றாமைகள் தான் ஸங்குசிதமானவாறே யென்கை. (சொன்னவார்த்தை) கண்ணபுரத்தான் சொல்லும்வார்த்தை யென்றபடி. (ஸமாஹிதராய்) என்றவநந்தரம் பரோபதேசம் பண்ணுகிறாரென்று ஸங்கதிகூட்டுவது. பரோபதேசப்ரகாரத்தை யருளிச் செய்கிறார் (ஆழ்வாரித்யாதி). ... ... *

யுக்தனுய்க்கொண்டு திருக்கண்ணபுரத்திலே ஸந்நிஹிதனுனன்; நாமும் அவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிப்போம்; போருங்கோளென்கிருர்.

மூ.—

தொண்டருய்யும் வகைகண்டேன் துளங்காவரக்கர் துளங்கமுன்
திண்தோள்நிமிரச் சிலைவளையச் சிறிதேமுனிந்ததிருமார்பன்
வண்டார்கூந்தல் மலர்மங்கை வடிக்கண் மடந்தைமாநோக்கம்
கண்டான்கண்டுகொண்டுகந்த கண்ணபுரம் நாம்தொழுதுமே. (க)

பதம்.	உரை.
தொண்டர்	பகவத் கைங்கர்ய பரர்களே! (நான்)
உய்யும்	உஜ்ஜீவிக்கைக்கு உறுப்பான
வகை	ஒருஉபாயத்தை
கண்டேன்	கண்டேன்;
முன்	முன்பு
துளங்கா	அச்சப்படாமலிருக்கிற
அரக்கர்	ராக்ஷஸர்கள்
துளங்க	அஞ்சும்படியாகவும்,
திண்	பலிஷ்டமான
தோள்	திருத்தோளானது
நிமிர	நிமிரும்படியாகவும்,
சிலை	தநுஸ்ஸானது
வளைய	வளையும்படியாகவும்
சிறிதே	(ஜகத்தில்) சிலராக்ஷஸர்களையே
முனிந்த	அழியச் செய்தவனும், (அதனாலுண்டான
திரு	வீரலக்ஷ்மியை [ன)
மார்வன்	திருமார்வி லுடையனு
வண்டு	வண்டுகளாலே [ய்,

பதம்.	உரை.
ஆர்	நிறைந்துள்ள [ளான
கூந்தல்	மயிர்முடியை யுடைய
மலர்மங்கை	பெரிய பிராட்டியாரோடும்
வடி	கூரிதானவாள் போலே யிருக்கிற
கண்	திருக்கண்களை யுடையளான [டும்
மடந்தை	ஸ்ரீ பூமிப்பிராட்டியோ
மா	(ஜகத்ரக்ஷணத்துக்குச்சேர்த்தியுண்டாக வேணுமென்று) மஹத்தான
நோக்கம்	ஸங்கல்பத்தை
கண்டான்	பண்ணு நின்ற வெம்பெருமான்
கண்டுகொண்டு	(ஏகாந்தமான ஸ்த்தலமென்று) கண்டு
உகந்த	ஸந்தோஷித்தருளின
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
நாம்	நாம்
தொழுதுமே	தொழுவோம். (க)

வ்யா—முதற்பாட்டு. (தொண்டர்) (க) "வழுவிலாவடிமை

அரு.—முதற்பாட்டு. (தொண்டரித்யாதி) அல்பமாக முனியவேண்டு

(க) தி-வாய்-ங-ங-க.

செய்யவேண்டும்" என்றுபாரித்துக் கொண்டிருக்கிறவர்களே! (உய்யும்வகைகண்டேன்) (௧) "அஸந்நேவ ஸ பவதி-அஸந்நேவ ஸ பவதி" என்னும் நிலைகழிந்து அவனை ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கைக்கு ஒருவிரகு கண்டேன்; அதேதுஎன்றால், (கண்ணபுரம் நாம்தொழுதும்). (துளங்காவரக்கர்துளங்க) இதுக்குமுன்பு அச்சமிருக்கும்படி புதியதுண்டறியாத ராக்ஷஸஜாதியானது அஞ்சும்படியாக. (திண்டோளித்யாதி) ப்ரதிபக்ஷமென்றால் சலியாத தோளானது நிமிரும்படியாகவும், வில்லானது வளையும்படியாகவும். (சிறிதேமுனிந்த) ஜகதுபஸம்ஹாரத்தோடே தலைக்கட்டுமளவன்றிக்கே ராக்ஷஸஜாதியளவிலே முனிந்தானாயிற்று. ஸங்கல்பத்தாலே இத்தையெல்லா முண்டாக்குமவன் சீறினால், பின்னை ஒன்றாக அழியுமத்தனையிறே. (திருமார்பன்) ஶ்ரீக்குக் குடியிருப்பான மார்வுபடைத்தவன்.

(வண்டாரித்யாதி) அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய வேணுமென்னுமதுவும் உண்டாகப் பெற்றதாயிற்று. (வண்டார் கூந்தல் மலர்மங்கை) தொழுவார் குற்றம்காண்கைக்குஅவஸரமில்லாதபடி மயிர்முடியாலே அவனைத் துவக்கும் பெரியபிராட்டியார். (வடிக்கண்மடந்தை) ஒருமயிர் முடிவேண்டாதே தன்நோக்காலே அவனை ஒடியெறிந்திட்டு வைக்கும் கண்ணையுடைய ஶ்ரீபூமிப்பிராட்டி. (மாநோக்கங்கண்டான்) (உ) "ஒண்டொடியாள்.திருமகளும் நீயுமே நிலாநிற்ப கண்டசதிர்" என்னுமாபோலே ப்ரஜைகளுடைய ரக்ஷணத்துக்கு இவர்களும் தாமுமானசேர்த்தி யுண்டாகவேணுமென்று பார்த்து வைத்தானாயிற்று. (கண்டுகொண்டித்யாதி) அவனும் நாமும் இவர்களும் சேரவர்த்திக்கைக்கு ஏகாந்தமான ஸ்த்தலமென்று உகந்த திருக்கண்ணபுரத்தைத் தொழுவோம். .... (௧)

வானென்னென்ன; (ஸங்கல்பேத்யாதி). மலர்மங்கையென்று மேலேதிருவைச்சொல்லுகையாலே இதுஶ்ரீயாக வருளிச் செய்கிறார் (ஶ்ரீரேத்யாதி).

ப்ராப்யகோடியிலேயாக வருளிச்செய்து க (ஃப) டகத்வ விவக்ஷயாதாத்பர்யாந்தரம் (தொழுவாரித்யாதி). "வடி" என்று கூர்மையாய், அத்தாலே கூரிதானவாளாய், "அதுபோலேயிருக்கும்கண்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (ஒருவித்யாதி). மலர்மங்கையோடும், வடிக்கண்மடந்தையோடும் கூடி,மஹத்தானநோக்கத்தை-ஸங்கல்பத்தை, கண்டான்-பண்ணினானென்று திருவுள்ளம்பற்றி யருளுகிறார் (ஒண்டொடியாளித்யாதி). ... ... (௧)

---

(௧) தை-ஆ-௬-௧. (உ) தி-வாய்-௪-௯-௧௦.

மூ.—

பொருந்தாவரக்கர் வெஞ்சமத்துப்பொன்ற வன்றுபுள்ளூர்ந்து
பெருந்தோள்மாலி தலைபுரளப் பேர்ந்தவரக்கர் தென்னிலங்கை[ப்பக்
இருந்தார்தம்மையுடன்கொண் டங்கெழிலார் பிலத்துப்புக்கொளி
கருந்தாட்சிலைகைக் கொண்டானூர்கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொருந்தா	பொருந்தாமலிருக்கிற	இருந்தார்தம்மை	இருந்த ராக்ஷஸர்களையும்
அரக்கர்	ராக்ஷஸர்கள்	உடன்கொண்டு	கூட்டிக்கொண்டு
வெஞ்சமத்து	யுத்தத்திலே	அங்கு	அவ்விடத்திலிருந்து
பொன்ற	முடியும்படியாக	எழில்	அழகாலே
அன்று	அக்காலத்தில்	ஆர்	வ்யாப்தமான
புள்ஊர்ந்து	திருவடியை மேல்கொண்டு	பிலத்து	பாதாளத்திலே
பெரும்	பெரிதான [யனுடை	புக்கு	ப்ரவேசித்து
தோள்	தோள்வலியையுடை	ஒளிப்ப	மறையும்படியாகவும்
மாலி	மாலியினுடைய	கருந்தாள்	வயிரம்பற்றின
தலை	தலையானது	சிலை	தநுஸ்ஸை
புரள	புரளும்படியாகவும்,	கை	திருக்கையிலே
பேர்ந்த	அவனையொழிய மற்றுமுண்டான	கொண்டான்	தரித்தவனுடைய
அரக்கர்	ராக்ஷஸர்கள்,	ஊர்	ஊரான
தென்	தெற்கு திக்கிலுள்ள	கண்ணபுரம் நாம்தொழுதுமே. (உ)	
இலங்கை	இலங்காநகரத்தில்		

அவ.— இரண்டாம்பாட்டு. அது பிராட்டி பக்கல் ஓரத்தால் செய்த செயலன்றோ, நாம் அதற்குப் பிறபாடரானோமேயென்ன; அதுவேண்டா; அவன் விரோதி நிரஸநசீலனென்கிறார்.

வ்யா.-(பொருந்தாவித்யாதி) ஸர்வதா(ஃ)நாம் அநுகூலித்தாலும்

அரு.—இரண்டாம்பாட்டு. (பொருந்தாவித்யாதி) ஸங்கதிதன்னேற்றமே காட்டுகிறார் (அதுவித்யாதி). (அது) துளங்காவரக்கனை ராவணவதம். (விரோதி)என்றது-ஆஶ்ரிதவிரோதியென்கை.

(க) "ந மே த்வேஷ்யோ உஸ்தி ந ப்ரிய:- நமேத்வேஷ்யோஉஸ்திநப்ரிய:' என்றிருக்கிற நாம்" என்று ஈஶ்வரோக்தியாகக்கணடு கொள்வது. (அநுகூலித்

(க) கீ-கூ-உரு.

பொருந்தாமையிலே நிலைநின்ற ராக்ஷஸஜாதியானது யுத்தத்திலே முடியும்படியாகத் திருவடியை மேற்கொண்டு மிக்க தோள்வலியை யுடைய மாலிதலையானது புரளும்படியாக, அவனையொழிந்த மற்று ள்ளராக்ஷஸர்கள் புற்றுப்போலே என்றுமொக்க துர்வர்க்கம்மாறுத லங்கையிலுண்டான ராக்ஷஸரையும் கூட்டிக்கொண்டு போக ([illegible]) பூமியான பாதாளத்திலே புக்கு மறைய வயிரம்பற்றித் திண்ணி தான வில்லைக் கையிலே பிடித்தவனுடைய ஊரான திருக்கண்ண புரத்தை நாம் தொழுவோம். .... (உ)

மூ.—வல்லியிடையாள் பொருட்டாக மதிள்நீரிலங்கையார்கோவை
அல்லல்செய்து வெஞ்சமத்துளாற்றல் மிகுத்த வாற்றலான்
வல்லாளரக்கர் குலப்பாவைவாட முனிதன்வேள்வியைக்
கல்விச்சிலையால் காத்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வல்லி	கொடிபோன்ற	ஆற்றலான்	பெரியோனாய்,
இடையாள்	மத்யப்ரதேசத்தை யுடையளான பிராட்டியின்	வல்லாள்	வலிய ஆண்மையை யுடையரான
பொருட்டாக	நிமித்தமாக	அரக்கர்	ராக்ஷஸர்களுடைய
நீர்	கடலை அகழாகவுடையதாய்,	குலப்பாவை	குலத்திலுண்டான தாடகியானவளை
மதிள்	மதிளையுடையதான	வாட	முடியும்படியாக
இலங்கையார்	இலங்கையிலுள்ள ராக்ஷஸர்க்கு	முனிதன்	விஶ்வாமித்ரருடைய
கோவை	நியாமகனாயிருக்கிற ராவணனை	வேள்வியை	யாகத்தை
அல்லல்செய்து	துக்கப்படுத்தி	கல்வி	தநுர்வித்யாப்யாஸதசையிலிருந்த
வெஞ்சமத்துள்	யுத்தத்திலே	சிலையால்	வில்லால்
ஆற்றல்	வலிமையால்	காத்தான்	ரக்ஷித்தவனான எம்பெருமானுடைய
மிகுத்த	அதிகனான	ஊர்	ஊரான
		கண்ணபுரம்நாம் தொழுதுமே. (௩)	

தாலும்) என்றவநந்தரம் "பொருந்தார்களேயென்று நினைத்து" என்றுபூரிப்பது. "கருந்தாள்" என்று விசேஷித்ததின் கருத்தையருளிச்செய்கிறார் (வயிரம்பற்றி) என்றது. ... ... (உ)

அவ.—மூன்றும்பாட்டு. ப்ரஸ்துதமான ராமாவதாரம் பின்னாட்டினபடி சொல்லுகிறது.

வ்யா.(வல்லியித்யாதி)கொடிபோன்றஇடையையுடையபிராட்டிக்காகக் கடலை அகழாகவுடைத்தாய், மதிளையுடைத்தான லங்கையிலுள்ளார்க்கு நான் நியாமகனல்லேனோ வென்றிருக்கிறவனை. (அல்லல்செய்து) தேரை அழித்து, வில்லைமுறித்து, அவன் முதுகுகாட்டும்படிபண்ணி எளிவரவு படுத்தினபடியைச் சொல்லுகிறது. யுத்தத்திலே இன்றுபோய் நாளைவாவென்னவல்ல வில்வலியையுடையவன். (ஆற்றல்மிகுத்த) வலிமிகுத்தபெரியோன்; கைபுகுந்த சத்ருவைக்கடுக முடித்துவிடாதே, இன்றுபோய் நாளைவாஎன்றுனிறே. நீ இளைத்த ஸமயத்திலே உன்னை அழிக்கை போராதுகாண். (க) "ఆశ్వాస్య - ஆஶ்வாஸ்ய" இவன் இளைத்தால் தன் பரிகரத்திலுள்ளாரை ஆஶ்வஸிப்பிக்குமாபோலே நீ போய் ஆஶ்வஸித்துவாவென்றுனிறே.

(வல்லாளித்யாதி) பருவம்நிரம்புகிறதற்குமுன்னே செய்த செயல் இதுவன்றோ? (வல்லாளரக்கர் குலப்பாவைவாட) வலிய ஆண்மையையுடைய ராக்ஷஸஜாதிக்காகக் கண்காட்டியானவள்முடியும்படியாக. (முனியித்யாதி) ருஷியினுடைய யாகத்தை. ஶ்ரீபரசுராமாழ்வானைவென்று தன்னதானவில்லை வாங்குவதற்குமுன்பே பிடித்தவில்லைக்கொண்டு காத்தானூர். .... (ங)

அரு.—மூன்றும்பாட்டு. (வல்லியித்யாதி) (ப்ரஸ்துதமான) என்றது - முதற்பாட்டில் ப்ரஸ்துதமானவென்கை. "நீர்மதிளிலங்கை" என்றங்வயித்தர்த்தம் (கடலையித்யாதி). "ஆற்றல்" என்று வலிமையாகக்கீழருளிச்செய்து க்ருபையாக விவக்ஷித்துத் தாத்பர்யாந்தரம் (நீஇளைத்தவித்யாதி). (க) "ఆశ్వాస్యనిర్యాహిరథీసధన్వీ తదాబలం ద్రక్ష్యసిమేరథస్థః - ஆஶ்வாஸ்யநிர்யாஹி ரதீஸதந்வீததாபலம் த்ரக்ஷ்யஸிமே ரதஸ்தஃ" என்று உக்தார்த்தத்தை ப்ரமாண ப்ரதர்ஶநபூர்வகமாக விவரிக்கிறார் (ஆஶ்வாஸ்யேத்யாதி).

ஒருவீரத்தை யநுஸந்தித்து மீளவும் ஒருவீரத்தை அநுஸந்தித்தவர்க்குக்கருத்து (பருவமித்யாதி). "பாவை" மரப்பாவை; அத்தைப்போலே தர்ஶநீயை என்று விவக்ஷித்தருளுகிறார் (கண்காட்டியான) என்று. "கல்விச்சிலை" தநுர்வித்யாப்யாஸதசையில் சிலையென்றுய், இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஶ்ரீ பரசுராமாழ்வானையித்யாதி). ... ... (ங)

(க) ராயு-ருக-கசச.

மூ.—மல்லைமுந்நீரதர்படவரிவெஞ்சிலைகால் வளைவித்துக்
கொல்லைவிலங்குபணிசெய்யக்கொடியோனிலங்கைபுகலுற்றுத்
தொல்லைமரங்கள்புகப்பெய்து துவலைநிமிர்ந்து வானணவக்
கல்லால்கடலை யடைத்தானூர்கண்ணபுரம் நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொடியோன்	க்ரூரனான ராவண னுடைய	பணி	கைங்கர்யத்தை
இலங்கை	இலங்கையில்	செய்ய	பண்ணும்படியாகவும்,
புகல்	ப்ரவேசிப்பதை	தொல்லை	பழையதான
உற்று	உத்தேசித்து,	மரங்கள்	வ்ருக்ஷங்கள் [யாக
மல்லை	அதிகமான	புக	(பறியுண்டு) புகும்படி
முந்நீர்	மூன்றுவகைப்பட்ட ஜலத்தையுடைய கடலானது	பெய்து	(ஸமுத்ரத்திலே) ப்ர வேசிப்பித்து
		துவலை	ஜல பிந்துக்களானதுக [ள்
அதர்பட	வழிபடும்படியாக	நிமிர்ந்து	கிளர்ந்து
வரி	(அழகான) வரிகளை யுடையதாய்,	வான்	ஆகாசத்தில்
		அணவ	ஸ்பர்சிக்கும்படியாகவு,
வெம்	வெம்மையை யுடைய	கல்லால்	மலைகளாலே [ம்
சிலைகால்	தநுஸ்ஸை [தான	கடலை	ஸமுத்ரத்தை
வளைவித்து	வளைத்தும்,	அடைத்தான்	கட்டினவனான சக்ர வர்த்தித் திருமக னுக்கு
கொல்லை	அரண்யங்களிலுண் டான கிளைகளிலே திரியாநின்ற	ஊர்	வாஸஸ்தாநமான
விலங்கு	வாநரங்கள்		கண்ணபுரம் நாம்தொழுதுமே. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (மல்லைமுந்நீரதர்பட) "மல்லை" என்று- மிகுதி. ஜலராசியாய்மூன்றுவகைப்பட்டஜலத்தையுடைத்தான கட- லானதுவழிபட; (க)"𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑍋𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌃-அப்ரமேயோமஹோத

அநு.—நாலாம்பாட்டு. (மல்லையித்யாதி) கீழ்ப்பாட்டில் சக்ரவர்த்தித் திருமகனுடைய வீரரஸத்தில் ஈடுபட்டுப் பேசினாராய், அவ்வளவன்றிக்கே கடலைவற்றக் கோல்தொடுப்பது, குரங்கைக்கொண்டு பணிகொள்வது, கல்லை மிதக்கப்பண்ணுவதான அத்புதரஸத்தில் ஈடுபடுகிறாரென்று ஸங்கதி.

"மல்லை" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறார் (அப்ரமேய

(க) ரா-யு-கக-ஙக.

தி:'' என்று ஒருவராலும் பரிச்சேதிக்கவரிதான கடலானது வழிப்பட. (வரிவெஞ்சிலைகால்வளைவித்து) தர்ஶநீயமான வரிகளையுடைத்தாய், பிடித்தபிடியிலே எதிரிகள் அஞ்சும்படியான வெம்மையையுடைத்தான வில்லைவளைத்து. (கொல்லைவிலங்கு பணிசெய்ய) ஒருகாலும் பூசல்கண்டறியாதே என்றுமொக்கப்பணையிலே திரியக்கடவ குரங்குகள் பணிசெய்ய; அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்த(X)ரான திருவடிதிருவநந்தாழ்வான் துடக்கமானார் செய்யக்கடவகைங்கர்யத்தை இடக்கை வலக்கைவாசியறியாத திர்யக்குக்கள்செய்ய. (கொடியோனிலங்கை புகலுற்று) அவன்பண்ணினக்ரௌர்யத்தைத்திருவுள்ளத்தாலே முன்னேட்டுக்கொண்டு கொடியோனென்கிறார். ஜநகனும் ஜநகியும் ஓரிடத்திலேயிருக்கப் பொறாத க்ரௌர்யமிறே. [இலங்கை புகலுற்று மல்லைமுந்நீர் அதர்பட வரிவெஞ்சிலைகால் வளைவித்துக் கொல்லைவிலங்கு பணிசெய்யக் கல்லால் கடலை யடைத்தானூர்].

(தொல்லைமரங்கள் புகப்பெய்து) இதுக்குமுன்பு பறியுண்டறியாத பழைய மரங்களடையப்பறியுண்டுபோம்படி அதிலேப்ரவேசிப்பித்து. (துவலைநிமிர்ந்துவானணவ) அடைக்கிறபோதைத் திவலைகளானவை கிளர்ந்து ஆகாசாவகாசத்தை இடமடைக்க, நீரிலே இட்டால் ஆழக் கடவமலைகளைக்கொண்டு கடலையடைத்த சக்ரவர்த்தித் திருமகனுக்கு வாஸஸ்தாநமான. .... (ச)

மூ.—ஆமையாகி யரியாகி யன்னமாகிஅந்தணர்தம்
ஓமமாகி யூழியாகி§ உவரிசூழ்ந்தநெடும்புணரிச்
சேமமதிள்சூழிலங்கைக் கோன்சிரமும் கரமும்துணித்துமுன்
காமன்பயந்தான் கருதுமூர்கண்ணபுரம்நாம்தொழுதுமே.(ரு)

இத்யாதி) .(க) ''“पथ्यामयान्तु प्लवङ्गमाः - பத்யாம்யாந்து ப்லவங்கமா:” என்றத்தைக் கடாக்ஷித்து வழிப்படயென்றது'' என்று திருவுள்ளம்பற்றிச் சார்த்தமருளுகிறார் (தர்ஶநீயேத்யாதி). கொல்லை - வரம்பில்லாத நிலமாய், அத்தாலே காட்டை விவக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறார் (ஒருகாலுமித்யாதி). பணை - சாகை. கொல்லைஎன்றது -மர்யாதை யில்லாமையைச் சொல்லுகிறது என்று விவக்ஷித்துத் தாத்பர்யாந்தர மருளுகிறார் (அஸ்ப்ருஷ்டேத்யாதி). அந்வயம் காட்டுகிறார் (இலங்கையித்யாதி). ... ... (ச)

(க) ரா-யு-உக-உஉ. § (பா)-உலகுசூழ்ந்த.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆமையாகி	கூர்மரூபமாய்,	இலங்கை	இலங்கைக்கு
அரியாகி	நரஸிம்ஹரூபமாய்,	கோன்	ராஜாவான ராவணனுடைய
அன்னமாகி	ஹம்ஸரூபமாய்,	சிரமும்	தலைகளையும்
அந்தணர்தம்	ப்ராஹ்மணர்களுடைய	கரமும்	தோள்களையும்
ஓமமாகி	யாகரூபமாய்,	துணித்து	அறுத்தவனை சக்ரவர்த்தித் திருமகனாய்
ஊழியாகி	காலரூபமாய்,	முன்	முன்பு
நெடும்	விசாலமாய்	காமன்பயந்தான்	காமனுக்கு உத்பாதகனுமானக்ருஷ்ணன்
உவரி	உப்புமயமான	கருதும்	விரும்பிவர்த்திக்கிற
புணரி	கடலாலே	ஊர்	திவ்யதேசமான
சூழ்ந்த	சூழப்பட்டதாய்		
சேமம்	காவலான		
மதிள்	மதிளாலே		
சூழ்	சூழப்பட்டதான		

கண்ணபுரம்நாம்தொழுதுமே. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (ஆமையித்யாதி) ஆஶ்ரித ரக்ஷணம் ஒருதலையானால் தன்னைப்பேணாதே ரக்ஷிக்கும் ஸ்வபாவனாயிற்று. (ஆமையாகி) கூர்மரூபமாய். (அரியாகி) ஹயக்ரீவமாய்; ஸிம்ஹமென்றுமாம். (அன்னமாகி) இழந்தவேதசக்ஷுஸ்ஸை மீட்டுக் கொடுக்கைக்காக அன்னமாய், ப்ராஹ்மணருடைய ஹவிஸ்ஸைக் கொள்வான்தானேயிறே. காலமே சேஷித்திருந்துள்ள காலமாகி. ஒருவருமில்லாதவன்றுதான் உளனாயிருக்குமிறே. (உவரியித்யாதி) ஓங்கினதிரைகளை யுடைத்தான உவரியான கடலாலே சூழப்பட்டிருப்பதுமாய், ஒருவராலும் ப்ரவேசிக்க வரிதான மதிளையுடைத்தான லங்கைக்கு நிர்வாஹகனை ராவணனுடைய தலைகளை அறுப்பது, தோள்களைத் துணிப்பதாய்க்கொண்டு போதுபோக்காகக் கொன்றபடி. (முனனித்யாதி) நாட்டைத்தன் வடிவாலே பகட்டித்

அரு.—அஞ்சாம்பாட்டு.(ஆமையித்யாதி). கீழ்ப்பாட்டில்அத்புதரஸத்தை யநுஸந்தித்து அவ்வளவன்றிக்கே சக்ரவர்த்தித் திருமகனுடையரௌத்ரரஸத்தை அநுஸந்திக்கப்பார்த்து, முன்னும் பின்னுமுண்டான அவதாரங்களில் வித்யாப்ரதாந போக (பூ°X) ப்ரதாநங்களிலுண்டான சாந்திரஸ ஶ்ருங்கார ரஸங்களையும் சேர்த்து அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"நெடுமுவரிப்புணரியாலே சூழ்ந்த" என்றந்வயம் திருவுள்ளம்பற்றிசப்தார்த்தமருளுகிறார் (ஓங்கினவித்யாதி). "சேமம்"என்றதுக்குத்தாத்பர்யம் (ஒருவராலுமித்யாதி). ... ... (ரு)

திரிகிற காமனுக்கும் உத்பாதகனை க்ருஷ்ணன் விரும்பி வர்த்திக்கும் தேசம். "உலகு" என்றுபாடமாகில் லோகத்தைச் சூழ்ந்த பெரிய கடலென்றபடி. .... (ரு)

மூ.—

வருந்தாதிருநீ மடநெஞ்சேநம்மேல் வினைகள்வாராமுன்
திருந்தாவரக்கர் தென்னிலங்கைச் செந்தீயுண்ணச் சிவந்தொருநாள்
பெருந்தோள்வாணற்கருள்புரிந்து பின்னைமணாளனாகிமுன்
கருந்தாள்களிறொன் றொசித்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடநெஞ்சே	ஸாதுவான மநஸ்ஸே	ஒருநாள்	ஒருகாலத்தில்
நீ	நீ	பெரும்	அதிகமான [ன
வருந்தாது	க்லேசியாமல்	தோள்	புஜங்களையுடையனு
இரு	இருக்கக்கடவை;	வாணற்கு	பாணாஸுரன் விஷயத்
நம்மேல்	நம்பக்கல்	அருள்	க்ருபையை [தில்
வினைகள்	பாபங்கள்	புரிந்து	பண்ணினபனாய்,
வாரா	வரமாட்டாது,	பின்னை	நப்பின்னைப் பிராட்டி
முன்	முன்னே	மணாளனாகி	வல்லபனுமாய், [க்கு
திருந்தா	திருந்தாமலிருக்கிற	முன்	முன்னே
அரக்கர்	ராக்ஷஸருடைய	கரும்	கறுத்திருக்கிற
தென்னிலங்கை	தெற்கிலுள்ள இலங்கையை	தாள்	கால்களையுடைய
		களிறுஒன்று	ஒருகுவலயாபீடத்தைத
செம்	சிவந்த		
தீ	ஜ்வாலையை யுடைய அக்நியானது	ஒசித்தான்	நிரஸித்தவனான கண்ணனுடைய
உண்ண	புஜிக்கும்படியாக	ஊர்	திவ்யதேசமான
சிவந்து	சீறினவனாய்,	கண்ணபுரம்நாம் தொழுதுமே.	(சா)

வ்யா.—ஆறம்பாட்டு. (வருந்தாதிருநீ) பூர்வவ்ருத்தத்தை அநுஸந்தித்து "நாமென்படக்கடவோம்" என்று க்லேசியாதே நிர்ப்பயமாக விருக்கப்பார். (மடநெஞ்சே) ஸாதுவான நெஞ்சே! உன்

அநு.—ஆறம்பாட்டு. (வருந்தாதித்யாதி) கீழ்ப்பாட்டுக்களில் தொண்டருக்கு உபதேசித்துவிட்டு ப்ரஸ்துதமான ராமக்ருஷ்ணாவதாரங்களில் விரோதி நிரஸந சீலதையை நெஞ்சுக்கும் அறிவிக்கிறாரென்று ஸங்கதி.

னையே பார்த்து பகவத்ப்ரபாவமொன்றையும் பாராத நெஞ்சே!. பாபங்களைக் கூடுபூரித்துவைத்து வருந்தாதிருக்கும்படி யெங்ஙனே யென்னில் ; (நம்மேல்வினைகள்வாரா) "நாம்பண்ணினவையன்றோ" என்று அவை நம்பக்கல் வந்துகிட்டவற்றோ ?; ந்யஸ்தப (ர்) ரரை நலியமாட்டாவிறே. (க) "நயவேனித்யாதி" (உ) "ஆரேயித்யாதி" சொல்லிக்கொள்வது. அவன் ஏறிட்டுக்கொண்டு போக்க எங்கேகண்டோமென்னில் (முன்னித்யாதி) பிராட்டி தன்ப்ரதிபந்தகத்தைப்போக்குகைக்குத்தான்யத்நித்ததுண்டோ? ப்ரதிபந்தகம் ப்ரபலமானதனையும் அவனுக்குக் கார்யம் செய்தோமாம்படியன்றோ அவன்படி. மால்யவான்போல்வார் சொன்னஹிதத்துக்குக்கேளாத ராக்ஷஸருடைய லங்கையை. (செந்தீயுண்ண) முன்பு ராவணபயத்தாலே பாகாதிகளுக்கு வேண்டுவதுஞ்சரித்துஉடம்பு வெளுத்திருக்கக்கடவ அக்நி தன்நிறம் பெற்று புஜிக்கும்படியாக, (சிவந்து) சிறி.

(பெருந்தோள் வாணற்கருள்புரிந்து) அநேகம் தோள்படைத்தோமென்று அபிமாநித்திருக்கிற பாணனுடைய தோள்களாயிரத்தையும் துணித்து, அவனுக்கு தேஹயாத்ரை நடத்தும்படியாக இரண்டு கையைக்கொடுத்தானாயிற்று. நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபனுமாய் முன்கறுத்துத்திண்ணிதான தாளையுடைய குவலயாபீடத்தை அநாயாஸேந முறித்தானூர். .... (சு)

மூ.—இலையார்மலர்ப்பூம்பொய்கைவாய் முதலைதன்னாலடர்ப்புண்டு
கொலையார்வேழம்நடுக்குற்றுக்குலைய வதனுக் கருள்புரிந்தான்
அலைநீரிலங்கைத் தசக்ரீவற்கிளையோற் கரசையருளிமுன்
கலைமாச்சிலையா லெய்தானூர் கண்ணபுரம்நாம் தொழுதுமே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொலையார்	மதித்துக்கிடக்கிற	ஆர்	வ்யாப்தமாய்
வேழம்	யானையானது,	மலர்	விகஸிதமான
இலை	இலைகளால்	பூம்	புஷ்பங்களையுடைய

நாம்பண்ணினால் நம்மைக்கிட்டவன்றோ வடுப்பதென்ன வருளுகிறார் (ந்யஸ்தேத்யாதி). திருந்தாவென்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (மால்யவானித்யாதி). தீயாகில் சிவந்திராதோ? "செம்" என்று விசேஷிப்பானேன் னென்ன வருளிச்செய்கிறார் (முன்பித்யாதி). ... ... (சு)

(க) க-திருவ-சுசு- (உ) கூ-திருவ-உஎ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொய்கைவாய்	ஸரஸ்ஸிலே(புக்குஅங்குள்ள)	தசக்ரீவற்கு	ராவணனுடைய
முதலைதன்னால்	ஒருமுதலையால்	இளையோற்கு	தம்பியானவிபீஷணாழ்வானுக்கு
அடர்ப்புண்டு	நெருக்குண்டு	அரசை	லங்காராஜ்யத்தை (கொடுத்து)
நடுக்குற்று	நடுக்கமுற்றதாய்	அருளி	க்ருபைபண்ணினவனாய்
குலைய	ஒருவ்யாபாரமின்றிக்கே இருக்கும்போது	முன்	(அதுக்கு) முன்னே
அதனுக்கு	அந்தயானையின்விஷயத்தில்	கலை	மாயாம்ருகத்தை
அருள்புரிந்தான்	க்ருபைபண்ணினவனாய்,	மா	பெரிதான
அலை	அலைகளை (எறியாநின்ற)	சிலையால்	தநுஸ்ஸினால்
நீர்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட	எய்தான்	முடித்தவனான எம்பெருமானுடைய
இலங்கை	இலங்காநகரத்துக்கு (ராஜாவான)	ஊர்	திவ்யதேசமான
		கண்ணபுரம்நாம் தொழுதுமே.	(எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (இலையித்யாதி) இலைகளால் மிக்கிருப்பதாய் பரப்புமாறப்பூத்து தர்ஸநீயமான பொய்கையிலே போய்ப் புக்கு ஒரு ஜலசரஸத்வத்தாலே நெருக்குண்டு மதித்துக் கொடு திரிகிற ஆனையானது விழுக்காடறியாதே வேற்றுநிலத்திலே புக்கு அகப்பட்டு தன்வ்யாபார மற்று முதலையினுடைய வ்யாபாரமேயாய் அத்தாலே நடுங்கிக்குலைய, அவ்வவஸ்த்தையிலே வந்து உதவினான்.

(அலைநீரித்யாதி) ராவணன் பண்ணினப்ராதிகூல்யம் தம்பியளவும் வந்தேறுவதாயிருக்கச் செய்தேயும் அத்தைப்பாராதே அவன் தம்பிக்கு ராஜ்யத்தைக்கொடுத்தானாயிற்று; அதுக்கு முன்பு தமயனுடைய வைரத்துக்குஹேதுவாய்க்கொண்டுவந்தமாயாம்ருகத்தை ஓரம்பாலே முடித்தவன். .... (எ)

அநு.—ஏழாம்பாட்டு. (இலையித்யாதி) துஷ்டமான ஓரானையைக் கொன்றத்தைக் கீழ்ப்பாட்டிலருளிச் செய்தார். அந்தப்ரஸங்கத்திலே அநுகூலமான ஆனையைக்காத்தமைதோற்ற அத்தையும், ராமாவதாரத்தில் அபதாநத்தையும் நெஞ்சுக் கறிவிக்கிறாரென்று ஸங்கதி.

முதலையென்னாதே "தன்னால்" என்றத்தாலே நிகர்ஷம்தோற்றுமென்று விவக்ஷித்தருளுகிறார் (ஒருஜலசரஸத்வத்தாலே) என்று. ... ... (எ)

மூ.—மாலாய் மனமே யருந்துயரில் வருந்தாதிருநீ வலிமிக்க
காலார்மருதும் காய்சினத்தகழுதும் கதமாக் கழுதையும்
மாலார்விடையும் மதகரியும் மல்லருயிரும் மடிவித்து
காலால்சகடம்பாய்ந்தானூர் கண்ணபுரம்நாம்தொழுதுமே.

பதம்.	உரை.
மாலாய்	பிச்சேறின
மனமே	நெஞ்சே
நீ	நீ
அரும்	(அநுபவித்து) தலைக் கட்டவொண்ணாத
துயரில்	துக்கங்களில்
வருந்தாது	க்லேசியாமல்
இரு	இரு;
மிக்க	அதிகமான
வலி	பலத்தையுடைத்தாய்
காலார்	வேரூன்றியிருந்துள்ள
மருதும்	மருதவ்ருக்ஷங்களையும்
காய்சினத்த	அதிகமானசீற்றமுடையளான [யும்
கழுதும்	பேயான பூதனையை
கதம்	கோபத்தையுடைய
மா	குதிரையையும்,
கழுதையும்	கழுதையையும்,

பதம்.	உரை.
மாலார்	பெரியவடிவையுடைத்தான
விடையும்	வ்ருஷபங்களையும்,
மத	மதத்தையுடைத்தான
கரியும்	குவலயாபீடத்தையும்,
மல்லர்	(சாணூரன்முதலான) மல்லர்களுடைய
உயிரும்	ப்ராணன்களையும்
மடிவித்து	நிரஸித்தவனாய்,
காலால்	திருவடிகளால்
சகடம்	சகடாஸுரனை
பாய்ந்தான்	(தூளாய்ப் போம்படி) நிரஸித்தவனுமான க்ருஷ்ணனுடைய
ஊர்	திவ்யதேசமான

கண்ணபுரம்நாம் தொழுதுமே. (அ)

அ௫.—எட்டாம்பாட்டு. (மாலாயித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு (க) "దివ్యం వర్షసహస్రమ్- திவ்யம் வர்ஷஸஹஸ்ரம்" என்று பதினாயிரம் ஸம்வத்ஸரம் க்லேசப்பட்டு ஸ்வயத்நநிவ்ருத்தி பிறந்தபின்வந்து உதவினான்; ஸ்ரீவிபீஷணாழ்வானுக்கு (உ) "త్యక్త్వా పుత్రాంశ్చ దారాంశ్చ- த்யக்த்வா புத்ராம்ஶ்சதாராம்ஶ்ச" என்று ப்ராப்யாபாஸங்களையும்விட்டு சரணம் புகுருகையாலே அரசளித்தான்; எனக்கங்ஙனே யிருப்பதொரு நிலையுமின்றிக்கே (௩) "చఞ్చలం హి మనః- சஞ்சலம் ஹிமந:" என்கிறபடியே நின்றவாநில்லாதஸ்வபாவத்தை யுடைத்தாயிருக்கை உண்டாகையாலே எங்ஙனே வந்திருப்பதென்ன; பாஞ்சாலிக்கு விரோதிகளென்று பேர்பெற்றவற்றை யெல்லாம்

(க) வி-தர்ம-௬௯-௬௬. (உ) ரா-யு-௧௭-௧௬. (௩) கீ-௬-௩௪.

வ்யா.—எட்டாம்பாட்டு. (மாலாயித்யாதி) "முன்பு பண்ணின பாபங்களை அநுஸந்தித்து என்படக்கடவோம்" என்று பிச்சேறின நெஞ்சே அநுபவித்துத் தலைக்கட்டவொண்ணாத துக்கங்களில் நீ க்லேசியாதிரு. என்கொண்டு வருந்தாதிருப்பதென்றால் (வலியித்யாதி) அவன்படி இதுவன்றோ? மிக்க பலத்தையுடைத்தாய் வேரூன்றியிருந்துள்ள மருதும், மிக்க சீற்றத்தை யுடைத்தாயிருக்கிற பூதனையும்; கோபத்தையுடைத்தாயிருந்துள்ள குதிரையும், கழுதையும், பெரியவடிவையுடைத்தான வ்ருஷபங்களும், மதத்தையுடைத்தான ஆனையும், மலைதுள்ளினாப்போலே கிளர்ந்துவருகிற மல்லருடைய ப்ராணன்களும் இவற்றையடைய நிரஸித்து முலைவரவு தாழ்த்ததென்று சீறிநிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய் சகடாஸுரன் துகளாய்ப் போம்படி பண்ணினவன். .... (அ)

மூ.—குன்றால்மாரிபழுதாக்கிக் கொடியேரிடையாள் பொருட்டாக
வன்தாள்விடையேழன்றடர்த்தவானோர்பெருமான்மாமாயன்
சென்றான்தூதுபஞ்சவர்க்காய்த்திரிகால்சகடஞ்சினமழித்துக்
கன்றால்விளங்காயெறிந்தானூர்கண்ணபுரம்நாம்தொழுதுமே

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றால்	கோவர்த்தநமலையால்	இடையாள்	மத்ய (ஸ்ரீ) ப்ரதேசத்தை யுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காக
மாரி	கல்மழையை	பொருட்டாக	
பழுதாக்கி	வ்யர்த்தமாம்படி பண்ணினவனாய்,	வன்	பலிஷ்டமான
		தாள்	கால்களையுடைய
கொடி	கொடிபோலே	ஏழு	ஏழான
ஏர்	அழகையுடைய	விடை	வ்ருஷபங்களையும்

கையாலும்காலாலும் கொன்றுநின்றக்ருஷ்ணன்படி அதுவாயிருக்க "உனக்கு நிலையுமுண்டாக்குவன்; நீக்லேசிப்பானென்" என்று மீளவும் நெஞ்சைத்தேற்றுகிறார் இரண்டு பாட்டிலுமென்று ஸங்கதி.

காய்தலும்-கோபமாய், சினமும்-கோபமாகையாலே(மிக்கசீற்றத்தை)என்றது. கீழ்ச்சொன்னவற்றுக்குவிசேஷணங்களிட்டு, மல்லர்க்கு விசேஷணமிடாமையாலே இவர்கள் மிடுக்கு ப்ரஸித்தமென்று திருவுள்ளமாகையாலே அதுக்குத் தாத்பர்யம் (மலையித்யாதி). ... ... (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	அக்காலத்தில்	கால்	கால்களையுடையனான்
அடர்த்த	அழியச்செய்தவனாய்,	சகடம்	சகடாஸுரனுடைய
வானோர்	நித்யஸூரிகள் பரிய விருக்கும்படியான	சினம்	சினத்தை
பெருமான்	மேன்மையை யுடையனாய்,	அழித்து	போக்கினவனாய்,
மாமாயன்	ஆஸ்சர்ய சேஷ்டிதங்களை யுடையனாய்,	கன்றால்	தேநுகாஸுரனால்
		விளங்காய்	விளவின்காயாக நின்ற வஸுரனை
பஞ்சவர்க்காய்	பஞ்சபாண்டவர்களுக்காக	எறிந்தான்	பொகட்டு நிரஸித்தவனுமான க்ருஷ்ணனுடைய
தூது	தூத (ஸூத) னாய்		
சென்றான்	(துர்யோதனன் பக்கவில்) சென்றவனாய்,	ஊர்	திவ்யதேசமான
திரி	ஊருகிற		கண்ணபுரம்நாம் தொழுதுமே. (கூ)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (குன்றாலித்யாதி) மலையைஎடுத்து இந்த்ரன் வ்யாபாரம் வ்யர்த்தமாம்படிபண்ணி, கொடிபோலே அழகிய இடையையுடைய நப்பின்னைப் பிராட்டிக்காக வலிய தாளையுடைய ருஷபங்களேழையு மழியச் செய்த. (வானோர் பெருமான்) ※ அயர்வறு மமரர்களதிபதி. நித்யஸூரிகள் பரியவிருக்கும் மேன்மையையுடைய தன்னைக்கிடீர் தன்னைப்பேணாதே இவற்றின்காலிலே பொகட்டது. (மாமாயன்) ஆஸ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். தன்னைப்பேணாதே கால்நடையே கழுத்திலே ஓலைகட்டிப் பாண்டவர்களுக்காக துர்யோதநன் பக்கலிலே தூதுபோனவன். ஊருகிற காலையுடைத்தான சகடத்தினுடைய சினத்தைப்போக்கி, இருவரும் தங்களிலே க்ருதஸங்கேதராய்வர ஒருவனைக் கொண்டு ஒருவனை நிரஸித்தவன். .... (கூ)

மூ.—கருமாமுகில்தோய் நெடுமாடக் கண்ணபுரத் தெம்மடிகளைத்
திருமாமகளாலருள்மாரிச் செழுநீராலிவளநாடன்
மருவார்புயல்கைக் கலிகன்றிமங்கை வேந்தனொலிவல்லார்
இருமாநிலத்துக்கரசாகி யிமையோரிறைஞ்சவாழ்வாரே. (கഠ)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அரு.—ஒன்பதாம்பாட்டு. (குன்றாலித்யாதி) ஸ்ரோதாக்களைக் குறித்து வ்யாக்யாதா கூடுபொடுதோற்றத்தாத்பர்யமருளுகிறார் (நித்யஸூரிகளித்யாதி). (இவற்றின்) விடைகளின். "வலியதாள்" என்றுவிசேஷிக்கையாலே(காலிலே) என்றது. ... ... (கூ)

பதம்.	உரை.
கரு	கறுத்தும்
மா	பெரிதான
முகில்	காளமேகங்களானது
தோய்	தங்கும்படியாய் [கள்
நெடு	உயரமான
மாடம்	க்ருஹங்களையுடைய
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத் திலே எழுந்தருளி யிருக்கிற
எம் அடிகளை	என்ஸ்வாமியான க்ருஷ்ணன்விஷயமாய்,
திருமாமகளால்	பெரிய பிராட்டியாருடைய க்ருபைக்கு பாத்ரரானதால்
அருள்மாரி	அருள்மாரி என்றே திருநாமமுடையராய்,
செழு	ஸம்ருத்தமான
நீர்	ஜலத்தையுடைத்தான
ஆலிவளநாடன்	திருவாலிநாட்டை யுடையராய்,
மருவார்	(வர்ஷா காலத்திலுண்டாய்) பூர்ணமான

பதம்.	உரை.
புயல்	மேகம்போல் (என்றுமொக்கக் குறைவறக் கொடுக்குமதான) [ராய்
கை	திருக்கைகளையுடைய
மங்கை	திருமங்கைக்கு
வேந்தன்	ராஜாவுமான
கலிகன்றி	ஆழ்வார்
ஒலி	ஒலியை யுடைத்தாம் படி அருளிச்செய்த இத்திருமொழியை [லவர்
வல்லார்	அப்ய (ஃஸ) ஸிக்க வல்
இருமாநிலத்துக்கு	பூலோகஸ்வர்க்க லோகங்களுக்கு
அரசாகி	ராஜாவாயிருந்து(பிறகு)
இமையோர்	நித்ய ஸூரிகள்
இறைஞ்ச	திருவடிகளில் வணங்கும்படியாக
வாழ்வாரே	வாழ்வர்கள். (க0)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) நீர்கொண்டெழுந்தகாளமேகங்கள்வந்து தோயும்படி ஓங்கினமாடங்களையுடைத்தான திருக்கண்ணபுரத்திலே என்ஸ்வாமியைக் கவிபாடிற்று. பெரிய பிராட்டியாருடைய முழுநோக்குக்கு இலக்கானபடியாலே "அருள் மாரி" என்றதுதன்னையே திருநாமமுடையராளுராயிற்று. ஜலஸம்ருத்தியையுடைத்தான திருவாலி நாட்டையுடையவர்.

என்றும் மொக்க உண்டாய், குறைவறவர்ஷிப்பதான புயலுண்டாகிலாயிற்று இவர் கைக்கு ஒப்புச் சொல்லலாவது. என்றும் மொக்கக் குறைவறக் கொடுக்கிறவர்க்கு காதாசித்கமாகத் தோற்றி ப்ராதேசிகமாக வர்ஷிக்கிறது ஒப்பாகமாட்டாதே. திருமங்கைக்கு

அரு.—பத்தாம்பாட்டு. (கருமாமுகிலித்யாதி) "புயல்" என்று-மேகமாய், அத்தை, "மருவார்" காலத்தோடு பொருந்துதலாலே பூர்ணமான தென்று

ராஜாவான ஆழ்வார் ஒலியையுடைத்தாம்படி அருளிச்செய்த இத் திருமொழியை வல்லார். (இருமாநிலத்துக்கரசாகி) (க) "ஶ்ரீமம் ஸந்ரோம் ஸ்வர்க ஶ்ரம் - பௌமம் மநோரதம்ஸ்வர்க்யம்" என்கிறபடியே அலங்காரங்களை யெல்லாம் பெற்று. (இமையோ ரிறைஞ்சவாழ் வாரே) இவ்வளவிலே போகாதே, பரமபதத்திலே போய்ப் புக்கு (உ) "பதியினில் பாங்கினில்" என்கிறபடி நித்யஸூரிகள் திருவடிகளிலே விழும்படியான பேற்றைப்பெறுவர். .... (கய)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஆறுந்திருமொழிமுற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி எட்டாம்பத்து ஏழாந்திருமொழி
வியமுடையின் ப்ரவேசம்.

அவ.—"வருந்தாதிரு" என்றார், என்னவாசிகண்டு வருந்தாதிருப்பதென்ன; பரமபதம் நமக்கு ப்ராப்யமாகிறதும் ப்ராப்யனானவன் நித்யவாஸம் பண்ணுகையாலேயன்றோ? ஆனபின்பு பிராட்டிமாரோடு சேதநரோடு ப்ரஹ்மாதிகளோடு வாசியற எல்லார்க்கும் ஒக்கப்ராப்யனானவன்றான் தனக்கு ப்ராப்யமென்று விரும்பி வர்த்

விசேஷித்ததுக்குக்கருத்து (என்றுமொக்கவித்யாதி). (அலங்காரங்களை) என்றது-சத்ர சாமராதி ராஜசிஹ்நங்களை. ... ... (கய)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு.—வியமுடையின்ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே திருக்கண்ணபுரத்தை ப்ராபகமாகத் தொழச்சொன்னார்; இதில் ப்ராப்யமென்கிறாரென்று விவக்ஷித்து ஸங்கதி யருளுகிறார் (வருந்தாதித்யாதி). (என்னவாசி) என்றது-திருக்கண்ணபுரத்தை ப்ராபகமென்னவே ப்ராப்யமான பரமபதம் கைபுகுந்ததோ வில்லையோவென்கை. ... ... *

(க) (உ) தி-வாய்-கய-க-கய.

திக்கிற தேசம் திருக்கண்ணபுரம்; ஆனபின்பு நமக்கும் அவ்விடமே ப்ராப்யமென்று அத்தேசத்தை அநுபவிக்கிறார். .... *

மூ.—வியமுடைவிடையின முடைதர மடமகள்
குயமிடைதடவரை யகலமதுடையவர்
நய†முடைநடையன மிளையவர் நடைபயில்
கயமிடைகணபுர மடிகள்தமிடமே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
இளையவர்	(திருக்கண்ணபுரத்தில் வர்த்திக்கும்)ஸ்த்ரீகளுடைய	விடை இனம்	ஏழுவ்ருஷபங்களும்
நடை	நடையழகை	உடைதர	முறியும்படியாகப்பண்ணி (அதனால்)
பயில்	(கற்றுக்கொண்டு)பழகி	மடமகள்	ஆத்ம குணோபேதையானநப்பின்னைப் பிராட்டியின்
நயம்உடை	ஆநந்தத்தை விளைவிக்குமதான	குயம்	ஸ்தநங்களாலே
நடை	நடையழகையுடைய	இடை	நெருக்கப்பட்டதாய்,
அனம்	ஹம்ஸங்களையுடையதான	தடம்	விசாலமான
		வரை	மலைபோலிருக்கிற
கயம்	பொய்கைகளாலே	அகலமது	திருமார்பை
இடை	வ்யாப்தமான	உடையவர்	உடையவரான,
கணபுரம்	திருக்கண்ணபுரமான	அடிகள்தம்	நமக்கு ஸ்வாமியான கண்ணனுடைய
வியம்	வேறுபாட்டை [து,		
உடை	உடையதுகளான	இடம்	வாஸஸ்த்தாநம். (௧)

வ்யா.— முதற்பாட்டு. (வியமுடை விடையினமுடைதர) "வியம்" என்று வேறுபாடு. அதாகிறது - கம்ஸப்ரேரிதமாய் வந்தவையிறே. அன்றிக்கே, "வியம்" என்று - ஓக்கமாய், பயாவஹமாம்படி மலைபோலே பெரியவடிவை யுடைத்தாயிருந்தபடியைச் சொல்லுதல். இப்படியிருக்கிற வ்ருஷபங்களேழும் பசளைக்கலம்போலேயுடைய. (மடமகளித்யாதி) ஆத்மகுணோபேதையான நப்பின்னைப் பிராட்டியுடைய குயங்களுண்டு - குசங்கள்; திருமுலைத்தடங்கள். அவைநெருக்குகிற மலைபோலே அகன்ற திருமார்பையுடையவன்.

அரு.—முதற்பாட்டு. (வியமுடையித்யாதி) (பசளைக்கலம்) பச்சைப்பானை. (அவைநெருக்குகிற) என்றது - அவற்றாலே நெருக்குண்கிற வென்ற

† அரும்பதாநுகுணமாக "நயமடநடை" என்றிருக்கவேணும்.

அன்றிக்கே, "குயமுடை" என்று பாடமானபோது, "குயமுடைத் தடவரை" என்கிறதை மெலித்து "குயமுடைதடவரை" என்று கிடக்கிறது.

(நயமித்யாதி) கண்டார்க்கு ஆகர்ஷகமாம்படி தர்ஶநீயமான நடையையுடைத்தான அன்னங்களானவை அங்குத்தை ஸ்த்ரீகளுடைய நடையிலே குருகுலவாஸம்பண்ணுநிற்குமாயிற்று. (கயமிடை கணபுரமடிகள்தமிடமே) பொய்கைகளாலே நெருங்கியிருந்துள்ள திருக்கண்ணபுரம் நமக்கு ஸ்வாமியானவனுடைய வாஸஸ்தாநம்.

மூ.—இணைமலிமருதிறுடெரு திறவிகல்செய்து
துணைமலிமுலையவள் மணமிகு கலவியுள்
மணமலிவிழவினொடடிய வரளவிய
கணமலிகணபுரமடிகள்தமிடமே. (உ)

பதம்.	உரை.
மணம்	கல்யாணகுணங்கள்
மலி	மேன்மேல் உண்டாகும்படியான
விழவினொடு	திருநாளிலே
அளவிய	அந்யோந்யம் கலந்திருக்கிற
அடியவர்	ஸ்ரீ வைஷ்ணவர்களுடைய
கணம்	ஸமூஹத்தாலே
மலி	வ்யாப்தமான [து,
கணபுரம்	திருக்கண்ணபுரமான
இணைமலி	நன்ருய் சேர்த்தியையுடைத்தான
மருது	மருதவ்ருக்ஷங்களானதுகள்
இற	இற்றுவிழும்படியாக (நடந்தவனுய்,)
துணைமலி	அதிகமான சேர்த்தி அழகையுடைய
முலையவள்	ஸ்தநங்களையுடையளான நப்பின்னைப் பிராட்டியினுடைய
மணமிகு	ஸ்வயம் வரத்திலுண்டான
கலவியுள்	ஸம்ஶ்லேஷத்தில் (ஆசையாலே)
எருதினொடு	வ்ருஷபங்களோடே
இகல்	யுத்தத்தை
செய்து	பண்ணினவருமான

அடிகள்தம்இடமே. (உ)

படி. (மெலித்து) மெல்லொத்தாக்கி.

"நயம்" என்றுரஞ்ஜநீயதையும் "மடம்" என்று மடப்பத்தையுமுடைய நடைஎன்று லக்ஷணயா இவ்வர்த்தம் விவக்ஷித்தருளுகிருர் (கண்டார்க்கித்யாதி). ... ... (க)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (இணைமலி) சேர்த்திமிக்கிருந்துள்ள மருதுகளானவை இரண்டும் தன்னிலொன்றென்னலாம்படிக்ருத்ஸங்கேதமாய்ப் பொருந்திநிற்கிற மருதுகள், இவன் தவிழ்ந்துபோகிற போக்கிலே இற்றுவிழும்படி. (எருதித்யாதி) ருஷபங்களோடேகூட யுத்தம்பண்ணி சேர்த்தி அழகு மிக்கிருந்துள்ளமுலைத்தடங்களையுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய ஸ்வயம்வரத்திலுண்டான ஸம்ஶ்லேஷம் பெறுகைக்காக. (மணமித்யாதி) கல்யாணங்கள்மேன்மேலுண்டாகிறதிருநாளிலே; அன்றிக்கே, "மணம்" என்று கை கோக்கைக்குப்பேராய், நெருங்கக்கோத்துக்கொண்டு ஸேவித்துநிற்கிறதிருநாளிலே. (அடியவரளவியகணமலிகணபுரம்)ஸ்ரீவைஷ்ணவர்களுடைய நெஞ்சுகலந்ததிரள் மிக்கிருந்துள்ளதிருக்கண்ணபுரம். மணமிக்க உத்ஸவத்துடனே அடியவர்கூடின வென்றுமாம். (உ)

மூ.—புயலுறுவரைமழை பொழிதரமணிநிரை
மயலுறவரைகுடை யெடுவியநெடியவர்
முயல்துளர்மிளைமுயல்துளவள விளைவயல்
கயல்துளுகணபுரமடி கள்தமிடமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முயல் துளர்	யத்நியாநின்ற களைக்கொட்டுகளை (உடையவர்கள் முகத்திலே)	மிளை	சிறுதூறிலிருந்து) புறப்பட்ட)
		முயல் துள	முசல்களானதுகள் துள்ளும்படியாகவும்,

அரு.—இரண்டாம்பாட்டு. (இணையித்யாதி). கீழ்ப்பாட்டிலே நப்பின்னைப்பிராட்டியும் தானுமாயிருக்கிற சேர்த்தியிலே அடிமைசெய்கிற * மதிமுக மடந்தையர் உண்டாகையாலே வைகுந்தமாநகர்போலே ப்ராப்யமாயிருந்ததென்று அநுபவித்தார்; இதில் இவ்விருவருமான சேர்த்தியிலே * அடியார் குழாங்கள் அடிமைசெய்கிறபடி யுண்டாகையாலே ப்ராப்யமென்றநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"இகல்" என்றதினர்த்தம் - யுத்தமென்றது. (பெறுகைக்காக) என்றதுக்கு (பண்ணி) என்ற கீழ்பதத்தோடே அந்வயம். (கல்யாணங்கள்) ஒப்பனையால் வந்தரூபகுணங்கள். "அளவிய" என்றதுக்கு அந்யோந்யம் கலந்திருக்கையாக வருளிச்செய்து, திருநாளோடு கலக்கையாக அர்த்தாந்தரமருளுகிறார் (மணமித்யாதி). "மணமலிவிழவினொடு அடியவரளவியகணமலி கணபுரம்-இணைமலிமருதிற நடந்து - துணைமலிமுலையவள் மணமிகுகலவியுளாசையாலே, எருதினோடு-இகல்செய்திருக்கிறவடிகள்தமிடமே" என்று சில பதங்களைக் கூட்டிக்கொண்டு அந்வயம் கண்டுகொள்வது. ... ... (உ)

வளம்	அழகானது [யான	மணி	(க்ருஷ்ணனையே ரக்ஷகனைப் பெறுதலாகிற) அழகையுடைய
விளை	விளையும்படி நேர்த்தி		
வயல்	கழனிகளில் (உழுகிறவர்கள்முகத்திலே)		
கயல்	மத்ஸ்யங்களானதுகள்	நிரை	பசுக்கூட்டமானது
துளு	துள்ளும்படியாகவுமிருக்கிற	மயல்	(புத்தியில்) மயக்கத்தை
கணபுரம்	திருக்கண்ணபுரமான	உற	அடைந்து (கலங்குமளவில்)
புயல்	மேகங்களில் [து,		
உறு	(இந்த்ரன்) ப்ரவேசித்து	வரை	கோவர்த்தநமலையை
		எடுவிய	எடுத்தவனாய்
வரை	கல்மயமான	நெடியவர்	ஜகத் ரக்ஷணத்தில் முக்யனான
மழை	மழையை		
பொழிதர	வர்ஷிக்கும்போது		அடிகள்தம் இடமே. (௩)

வ்யா.—மூன்றும்பாட்டு. (புயலித்யாதி) மேகத்திலேபோய் புக்கொன்றி, அவன் கல்வர்ஷத்தைவர்ஷிக்க, இந்த்ரன் கருத்தைப் பின்சென்று வர்ஷிக்குமத்தனையிறே. (மணிநிரைமயலுற) தன்னையே ரக்ஷகனாக வுடைத்தாயிருந்துள்ள பசுநிரையானது அறிவு கெட்டுக்கலங்க. "மணி" என்று - அழகாய், அதாகிறது - அவனும் ரக்ஷிக்கத்தானும் ஒருதலைபற்றுகையன்றிக்கே அவனே ரக்ஷகனும் படியிருக்கை. மலையைக் குடையாகவெடுத்துப் பரிஹரித்து ரக்ஷணத்தில் தன்னை எண்ணினால் பின்னை ஒருவரில்லாதபடி யிருக்கிறவர்.

அரு.—மூன்றும்பாட்டு.(புயலித்யாதி) கீழ்ப்பாட்டில், அடியார்கள்குழாங்களையுடைய தேசம்போலே ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியையுடைய தேசமென்றநுபவித்தார். திருவுள்ளமானது-(க)"ப஡ஹுது஦ாஸ ந்ததது஦ுஃ஖வர்ஷிணி - பஹுதாஸந்ததது஦ுக்கவர்ஷிணி" என்கிறபடியே ஃப(ஏ)வ துர்திநமேநடையாடுகிற லீலாவிபூதியிலே யிருக்கிற கண்ணபுரத்தை ப்ராப்யமென்கிறபடியென்னென்ன; அரியனசெய்து அவ்வர்ஷத்தைப் போக்குவானுள்ள தேசமாகையாலே ப்ராப்யமென்னக் குறையில்லை யென்கிறுரென்று ஸங்கதி.

இந்த்ரன் மேகத்திலேபோய் புகுகையாவதென்னென்ன வருளிச் செய்கிறுர் (இந்த்ரனித்யாதி). நெடியவரென்றதுக்குத் தாத்பர்யமருளுகிறுர் (ரக்ஷணத்திலித்யாதி).

(க) ஸ்தோத்ரரத்நம்-சக.

(முயல்துளர்மிளைமுயல்துள) யத்நியாநின்றுள்ள துளருண்டு - களைக்கொட்டு; அத்தைக்கொண்டு களைபறிக்கிறவர்கள் முகத்திலே, மிளையுண்டு-சிறுதூறு, அதில் நின்றும் புறப்பட்ட முயல்களானவை இவர்கள் முன்னேதுள்ளுமாயிற்று. (வளவிளைவயல்) அழகிய வயலிலே உழுகிறவர்கள் முகத்திலே கயல்கள் துள்ளாநிற்குமாயிற்று, குறிஞ்சிநிலமும், மருதநிலமும் கலந்தாப்போலே காணுமிருப்பது.

மூ.—ஏதலர்நகைசெய இளையவரளைவெணெய்
போதுசெய்தமரிய புனிதர்நல்விரைமலர்
கோதியமதுகரம் குலவியமலர்மகள்
காதல்செய்கணபுர மடிகள்தமிடமே. (௪)

பதம்.	உரை.
நல	நல்லதான
விரை	பரிமளத்தையுடைய
மலர்	பூவில் (இருக்கிற மதுவை)
கோதிய	பானம்பண்ணின
மதுகரம்	வண்டுகளாலே
குலவிய	சூழப்பட்ட
மலர்மகள்	பூவையிருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார்
காதல்செய்து	விரும்பிவர்த்திகும்படியான [து
கணபுரம்	திருக்கண்ணபுரமான

பதம்.	உரை.
ஏதலர்	சத்ருக்களான சிசுபாலாதிகள்
நகைசெய	சிரிக்கும்படியாக
இளையவர்	பெண்களால்
அளை	கடைந்துவைத்த
வெணெய்	வெண்ணெயை
போதுசெய்து	அமுதுசெய்து
அமரிய	பூர்ணனாய்
புனிதர்	புனிதருமான

அடிகளதம் இடமே. (௪)

(முகத்திலே) என்றதின்விவரணம் (முன்னே) என்றது. முயல்துள்ளுதலையும், கயல்துள்ளுதலையும் சொல்லுகிறவர்க்குத்தாத்பர்யமென்னென்ன வருளுகிறார் (குறிஞ்சியித்யாதி). (குறிஞ்சி)மலைச்சார்பு-கொல்லைநிலமென்கை.

அரு.—நாலாம்பாட்டு. (ஏதலரித்யாதி) கீழ்ப்பாட்டில் து:க்கவர்ஷத்தைப் போக்குமவன் நிற்கையாலே ப்ராப்யதேச மென்றுநின்றீர்; நமக்கு கிஞ்சித்கரிக்கப் பெற்றாலிறே நமக்கு ப்ராப்யதேசமாவதென்ன; அதுக்குக் குறையுண்டோ? அவன் ஆஶ்ரித கரஸ்பர்ஶமுள்ளதிலே அபிநிவிஷ்டனன்றோ? நமக்கு கிஞ்சித்கரிக்கைக்கு உறுப்பாக பிராட்டி விரும்பிவர்த்திக்கிறவிடமென்றருளுகிறாரென்று ஸங்கதி.

வ்யா.—நாலாம்பாட்டு. (ஏதலர்நகைசெய) சத்ருக்களுண்டு - சிசுபாலாதிகள்; அவர்கள் சிரிக்கும்படியாகபெண்கள் அளைந்த வெண்ணெயை அக்காலத்திலே அமுதுசெய்து அதுதனக்கு தா (ர) ரகமாயிருந்த விருப்பில் புரையற்றிருக்குமவன். (நல்விரையித்யாதி) மிக்கபரிமளத்தை யுடைத்தான பூவில் மதுபானம் பண்ணின வண்டுகளானவை தந்தாம் செருக்காலே அவற்றைக்கோதி, அது - ஆத்தஸாரமானவாறே அத்தை விட்டுப்போந்து கொண்டாடிச் சூழப்பரவாநின்றுள்ள பூவை இருப்பிடமாகவுடைய பெரிய பிராட்டியார் விரும்பி வர்த்திக்கிற திருக்கண்ணபுரம் புநிதரான வடிகளுக்கு ஸ்தாநம்.

மூ:—தொண்டருமமரரும் முனிவரும் தொழுதெழ
அண்டமொடகலிடமளந்த வரமர்செய்து
விண்டவர்படமதிளிலங்கை முன்னெரியெழக்
கண்டவர்கணபுரமடி கள்தமிடமே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கணபுரம்	திருக்கண்ணபுரமானது	செய்து	செய்து,
		விண்டவர்	சத்ருக்கள்
தொண்டரும்	ஸ்ரீ வைஷ்ணவர்களும்	பட	முடியும்படியாகவும்
அமரரும்	ப்ரஹ்மாதிதேவர்களும்	முன்	முன்பு
முனிவரும்	ஸநகாதிருஷிகளும்	மதிள்	மதிளையுடைத்தான
தொழுது	பணிந்து	இலங்கை	இலங்காநகரத்தை
எழ	உஜ்ஜீவிக்கும்படியாக	எரி	அக்நியானது
அண்டமொடு	ஆகாசத்தோடே	எழ	கிளர்ந்து வ்யாபரிக்கும்படியாகவும்
அகலிடம்	பூமிப்பரப்படங்கலும்		
அளந்தவர்	அளந்தவனும்,	கண்டவர்	பண்ணினவனுமான
அமர்	யுத்தத்தை		அடிகள்தம்இடமே. (ரு)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தொண்டருமித்யாதி) ஸ்ரீவைஷ்

(ஆடி) என்றவநந்தரம் "அவைகள்" என்றுசேஷம். ... ... (ச)

அநு.—அஞ்சாம்பாட்டு. (தொண்டருமித்யாதி). கீழ்ப்பாட்டில் பெண்கள் அளைந்த வெண்ணெயமுதுசெய்தானென்னுநின்றீர்; "அவர்கள்அவனையல்லது அறியாதபடி மிகவும் வ்யாமுக்த்தரன்றோ? நாம் கிஞ்சித்கரிக்கும்போது தாத்ருஸப்ரேமம் பிறக்கமாட்டாமையாலே செய்ததுகுற்றமாய் விழாதோ" என்று அஞ்சினநெஞ்சுக்கு அவன்ப்ரயோஜநாந்தர பரனுக்காகத்தன்னை இரப்பாளனுக்கியும், அவர்களை அழித்தும் செவ்வையாகப் பரியுமவனுயிருப்பானொருவன், அதுக்கு நமக்கஞ்சவேண்டா வென்கிறுரென்று ஸங்கதி.

ணவர்களும் ப்ரஹ்மாதிகளும் ஸநகாதிகளும் தொழுது உஜ்ஜீவிக்கும்படியாக அந்தரிக்ஷத்தோடே பூமிப்பரப்பை அளந்தவர். (அமர் செய்து) பூசல்செய்து.(க) "ஸ்ருஷ்டிஜீவம்-த்விதாபஞ்யேயம்" என்று பொருந்தாமையிலே நின்றவர்கள் முடிய; ப்ரஹ்மாதிகளுக்கும் கூடக்கணிசிக்கவரிதான ஊரை அக்நியானதுகிளர்ந்து வ்யாபரிக்கும்படி பண்ணினவர். .... (ரு)

மூ.—மழுவியல்படையுடையவனிடம் மழைமுகில்
தழுவியவுருவினர் திருமகள்மருவிய
கொழுவியசெழுமலர் முழுசியபறைவைபண்
எழுவியகணபுரமடிகள்தமிடமே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருமகள்	பெரியபிராட்டியார்	உடையவன்	உடையவனான எம்பெருமானுக்கு
மருவிய	நித்யவாஸம் பண்ணுகையாலே இளமையையுடையதாய்,	இடம்	வாஸஸ்தாநமுமான
கொழுவிய	ஸலாக்யமானதாய்	கணபுரம்	திருக்கண்ணபுரமானது
செழு	அழகியதான	மழை	ஜலத்தாலே(ஸம்ருத்தமான)
மலர்	புஷ்பங்களிலே	முகில்	மேகம்போலே
முழுசிய	மூழ்கிக்கிடக்கிற	தழுவிய	ஸமஹரமான
பறைவை	வண்டுகளுடைய	உருவினர்	திருமேனியை யுடையனான
பண்	கா (ரு) நத்தாலே		அடிகள்தம் இடமே. (சு)
எழுவிய	வ்யாப்தமாய், [தை		
மழுவு	மழுவுஎன்கிற ஆயுதத்		
இயல்படை	விதேயமான ஆயுதமாக		

வ்யா.—ஆறும்பாட்டு. (மழுவித்யாதி) மழுவைத் தனக்கு

"விண்டவர்" என்றது-நெஞ்சுவிண்டவரென்றாய், சத்ருக்களைச்சொல்லுகிறதென்றருளிச் செய்கிறார் (த்விதேத்யாதி). ... ... (ரு)

அரு.—ஆறும்பாட்டு. (மழுவித்யாதி) அவன்கலந்து பரிமாறும் ஆஸ்ரித வ்யாமுக்தனாகிலும், ஒருதலைக்காமமாய் விழாதோ? இத்தலையிலும் ப்ரேமம் விளையவேண்டாவோவென்ன; அதுக்கு அவன் திருமேனியைக் காணவே ஸகலதாபங்களும் தீர்ந்து காதலும் கடல்புரைய விளையுமென்கிறாரென்று ஸங்கதி.

(க) ரா-யு-ந-கூ-கக.

விதேயமான ஆயுதமாக வுடையவனுடைய ஸ்த்தாநம். (மழைமுகி லித்யாதி) மேகம்போலே ஸ்ரமஹரமான வடிவையுடையவர். (திரு மகளித்யாதி) பெரிய பிராட்டியார் நித்யவாஸம் பண்ணுகையாலே இளைதாய் கொழுவியதாய் அழகியதான பூவிலே முழுகின வண்டி னுடைய பண்கிளர்ந்த திருக்கண்ணபுரம் அடிகள்தமிடமே. (சு)

மூ.—பரிதியொடணிமதி பனிவரைதிசைநிலம்
எரிதியொடெனவினவியல் வினர்செலவினர்
சுருதியொடருமறை முறைசொலுமடியவர்
கருதியகணபுர மடிகள்தமிடமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுருதியொடு	நல்லஸ்வரத்தையுடைத்தான	திசை	திக்குக்கள்
அரு	அரிதாயிருக்கிற	நிலம்	பூமி
மறை	வேதங்களை	எரி	ஜ்வலியாநின்ற
முறை	முறையிலே	தீ	அக்நி
சொலும்	சொல்லாநிற்கிற	என	என்றுசொல்லப்படுகிற
அடியவர்	தாஸஜநங்களாலே	இன	இப்படிப்பட்டபதார்த்தங்களை
கருதிய	ப்ராப்யமென்று விரும்பப்பட்ட	இயல்வினர்	ப்ரகாரமாக உடையராய்
கணபுரம்	திருக்கண்ணபுரமானது		
பரிதியொடு	ஸூர்யனுடன்	செலவினர்	நடத்திக் கொண்டுபோருகிறவரான
அணி	அழகான		
மதி	சந்தரன்,		
பனிவரை	ஹிமவான் முதலான குலபர்வதங்கள்	அடிகள்தம்இடமே. (எ)	

வ்யா.—ஏழாம்பாட்டு. (பரிதியித்யாதி) ஆதித்யனோடே தர்ஸ நீயமான சந்த்ரன், குலபர்வதங்கள், திக்குக்கள், பூமி, எரிகிற அக்நி

"மழுவியல் படையுடையவனுடைய விடமான கணபுரமடிகள்தமிடம்" என்றந்வயம். ... ... (சு)

அரு.—ஏழாம்பாட்டு. (பரிதியித்யாதி) அவன்திருமேனி நமக்குக் காதல் விளைக்குமென்றாலும் போனகாலத்திலே நாம் விமுகராய்ப் போந்தபடியை நினைத்தால் அச்சமாயிருக்கிறதேயென்ன; அத்தசையிலும் நம்மைவிடமாட் டாதே ஸர்வவ்யாபகனாய் ஆபி (?) முக்க்யம் பார்த்திருந்தானவனென்று சொல்லாநின்றுகொண்டு அடியவர் பலரும் நமக்கு உசாத்துணையுண்டாகை யாலே நமக்குப் பூர்வவ்ருத்தத்தை நினைக்கவும் விரகில்லை யென்கிறாரென்று ஸங்கதி.

என்று சொல்லப்படுகிற இப்படிப்பட்ட பதார்த்தங்களைத் தமக்கு ப்ரகாரமாகவுடையராய் நடத்திப்போருகிறவர். இத்தால் ஜகதா காரதையைச் சொன்னபடி. (சுருதியித்யாதி) நல்ல ஸ்வரத்தை யுடைத்தாய் தன்னைப்பெறிலும் பெறவரிதாயிருக்கிற வேதங்களை "அவன்சேஷி, நாம் சேஷபூதர்" என்றிருக்கிறமுறையிலேசொல்லு கிற அடியார்தங்களுக்குப்ராப்யமென்று புத்திபண்ணி வர்த்திக்கிற திருக்கண்ணபுரம். (க) "வேதநாவர் விரும்பும் திருக்கண்ணபுரம்" என்னக்கடவதிறே. .... (எ)

மூ.—படிபுல்குமடியிணைப் பலர்தொழமலர்வைகு
கொடிபுல்குதடவரை யகலமதுடையவர்
முடிபுல்குநெடுவயல் படைசெலவடிமலர்
கடிபுல்குகணபுர மடிகள்தமிடமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
முடி	நாத்துமுடிகளோடே	படி	பூமியை
புல்கு	கூடியிருக்கிற	புல்கும்	அளந்துகொண்ட
நெடு	விசாலமான	அடியிணை	திருவடிகளை
வயல்	வயல்களிலே	பலர்	ஸகலரும்
படை	கலப்பையை	தொழ	ஆஸ்ரயிக்கும்படியாக,
செல	நடத்தியதாலும்	மலர்வைகு	பெரியபிராட்டியாரா
அடி	காலாலே	கொடி	லே
செல	குழப்புவதாலும் (அரு	புல்கு	ஆஸ்ரயிக்கப்பட்டதா
	கிருந்த)	தடம்	விசாலமான [ய்
மலர்	தாமரைப்பூக்களுடை	வரை	மலைபோலிருப்பதுமா
கடி	பரிமளத்தாலே [ய	அகலமது	திருமார்வை [ன
புல்கு	வ்யாப்தமான [து	உடையவர்	உடையனான
கணபுரம்	திருக்கண்ணபுரமான	அடிகள்தம் இடமே. (அ)	

"பனிவரை" என்று ஹிமவானைச் சொன்னது உபலக்ஷணமாயருளுகிறார் (குலேத்யாதி). இயல்வு - ஸ்வபாவமாய், அதினர்த்தம் (ப்ரகாரேத்யாதி) "செலவினர்" என்றதுக்கர்த்தம்(நடத்தியித்யாதி). (தன்னை)ப்ரதிபாத்யனை ஈஶ்வரனையென்றபடி. ... ... (எ)

அரு.—எட்டாம்பாட்டு. (படியித்யாதி) பூர்வவ்ருத்தத்துக்கும் நினைக்க விரகில்லை யென்னவே நெஞ்சு உகந்து, நாம்கிஞ்சித்கரித்து உஜ்ஜீவிப்போ மென்று நினைத்து கிஞ்சித்கரிக்க உபகரணங்கள் வேணுமேயென்ன; அவற்

(க) தி-வாய்-கூ-க௦-க.

வ்யா.-எட்டாம்பாட்டு. (படியித்யாதி) "படி" என்று-பூமி; அத்தை புல்கும் அடியிணையுண்டு-பூமிப்பரப்பை அளந்துகொண்ட திருவடிகள். (க) "ஸ்ஜூஸ்ஸு ... ஸங்கைஸ்ஸுராணும்" என்கிறபடியே அவற்றை யெல்லாருமொக்க விருந்ததே குடியாக ஆஶ்ரயிக்க; மலர்வைகு கொடியுண்டு - பெரியபிராட்டியார், அவள் விரும்பி அணையாநின்றுள்ள பெரியவரை போன்றிருந்த மார்வையுடையவர். (முடியித்யாதி) நடுகைக்காக எங்குமொக்கப் பரம்பிக்கிடக்கிற முடிகளையுடைத்தான பரந்தவயலிலே கலப்பையைக் கொடுபுக்குநடத்தி. (அடிசெல) அடைவிலே காலாலே ஒருகால்குழப்புவர்கள். அவ்வளவிலே இடையிலே தப்பிக்கிடந்த தாமரைப்பூவானது பரிமளத்தைப் புறப்படவிடாநிற்குமாயிற்று. .... (அ)

மூ.—புலமனுமலர்மிசை மலர்மகள்புணரிய
 நிலமகளெனவின மகளிர்களிவரொடும்
 வலமனுபடையுடை மணி வணர்நிதிகுவை
 கலமனுகணபுரமடிகள்தமிடமே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நிதிகுவை	பொற்குவைகளையுடைத்தான	புலன்	இந்த்ரியங்களானது கள்
கலம்	மரக்கலங்களாலே	மனு	அழுந்தி கிடக்கும்படியாக(அழுகையுடைய)
மனு	வ்யாப்தமான [து		
கணபுரம்	திருக்கண்ணபுரமான		

றுக்கும் குறைவில்லை. திருவுலகளந்த * பத்தியுழவன் அடிபட்ட ஆஶ்ரித முக கமலங்களோபாதி அவ்வூரில் உழவரடியாலு மடிபட்ட தாமரைப்பூ பரிமளம் அலையெறியாநிற்கும்; வேண்டினபடி இருவருமான சேர்த்தியிலே அடிமைசெய்யலாமென்று திருவுலகளந்த அபதாநத்தையும் பிராட்டியோட்டைச் சேர்த்தியையும் தாமரைகளின் ஸம்ருத்தியையும் அருளிச்செய்கிறுரென்று ஸங்கதி.

மலரிலே வைகு-வர்த்திக்கிற கொடியென்று சப்தார்த்தமாயருளிச்செய்கிறுர் (மலரித்யாதி). (முடிகளை) நாத்துமுடிகளை. "செல" என்றத்தை "படை" என்றத்தோடந்வயித்தது மாத்ரமன்றிக்கே "அடி" என்றத்தோடும் அந்வயித்துக்கொள்வதென்று திருவுள்ளம்பற்றி ப்ரதீக க்ரஹணம் பண்ணுகிறுர் (அடிசெல) என்று. ... ... (அ)

மலர்மிசை	புஷ்பத்தில் (நித்ய வாஸம்பண்ணு நிற்கிற)	மகளிர்கள்	ஸ்த்ரீத்வத்தையுடைய
		இவரொடும்	இவர்களோடும் [ரான
		வல	வலதுதிருக்கையிலே
மலர்மகள்	பெரியபிராட்டியார்	மனு	பொருந்தியிருக்கிற
புணரிய	நித்யஸம்ஶ்லிஷ்டையாயிருக்கிற	படை	திருவாழியை
		உடை	உடையனுமாய்,
நிலமகள்	ஶ்ரீபூமிப்பிராட்டியார்	மணி	நீலமணிபோலிருக்கிற
எனவின	என்றிப்படி சொல்லப்படுகிற	வணர்	நிறத்தையுடையனுன
			அடிகள்தம்இடமே. (க)

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (புலனித்யாதி) கண்டாருடைய இந்த்ரியங்கள் பிணிப்புண்ணும்படியாயிருக்கிற மலரைத் தனக்கிருப்பிடமாகவுடையளாயிருக்கிற பெரியபிராட்டியார், தன்னோடு நித்ய ஸம்ஶ்லிஷ்டையாயிருக்கிற ஶ்ரீபூமிப்பிராட்டி யென்றிப்படி சொல்லப்படுகிற நிருபாதிக ஸ்த்ரீத்வத்தை யுடையராயிருக்கிற இவர்களோடும், வலத்திருக்கையிலே மன்னுநின்றுள்ள திருவாழியை யுடையனுமாய், நீலமணிபோலே குளிர்ந்திருந்துள்ள வடிவையுடையவர். பொற்குவைமாறாத மரக்கலங்களையுடைய திருக்கண்ணபுரம். கடலொரு புறமாயிருக்கும்போலே காணும். .... (க)

மூ.—மலிபுகழ்கணபுரமுடைய வெம்மடிகளை
வலிகெழுமதிளயல் வயலணிமங்கையர்
கலியனதமிழிவை விழுமியவிசையினொடு
ஒலிசொலுமடியவ ருறுதுயரிலரே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வலி	தார்ட்ய (த்ருட) த்தாலுண்டான	வயல்	வயல்களாலே
		அணி	அலங்கரிக்கப்பட்ட
கெழு	பெருமையை யுடைய	மங்கையர்	திருமங்கைக்கு நிர்வாஹகரான
மதிள்	மதிளினுடைய		
அயல்	ஸமீபத்திலேயிருக்கிற		

அரு.—ஒன்பதாம்பாட்டு. (புலனித்யாதி) கீழில் ஆராதநோபகரணமும் குறைவற்றதேசமாகையாலே ப்ராப்யமென்றநுபவித்தார்; இதில் இருவர்க்கும் கைங்கர்ய ப்ரதிஸம்பந்தி குறைவற்ற விஷயமென்றநுஸந்திக்கிறுரென்று ஸங்கதி.

"வணர்" என்றது-வண்ணரென்றுய் (வடிவையுடையவர்) என்றது.(க)

கலியன	ஆழ்வாருடையதாய்	விழுமிய	அழகியதான
மலி	(பரமபதத்திற் காட்டில்) அதிகமான	இசையினோடு	ஸ்வரத்துடன்
புகழ்	புகழையுடைய	ஒலிசொலும்	அப்ய (஭்ய) ஸிக்கவல்லரான
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	அடியவர்	ஆஶ்ரிதர்கள்
உடைய	வாஸஸ்தாநமாகவுடைய	உறு	அநுபா(஭ா)வ்யமாய் நேர்ந்திருக்கிற
எம்அடிகளை	என் ஸ்வாமிவிஷயமான	துயர்	பாபங்களை
தமிழ்இவை	இத்திருமொழியை	இலரே	அடையார்கள். (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (மலிபுகழித்யாதி) பரமபதத்திற்காட்டில் மிக்க புகழையுடைத்தாயிருக்கிற திருக்கண்ணபுரத்தை வாஸஸ்த்தாநமாகவுடைய என்ஸ்வாமியைக் கவிபாடிற்று. வலிமிக்கிருந்துள்ள மதிளினருகே யுண்டான வயலாலே அலங்க்ருதமான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வாரருளிச்செய்தவை. (விழுமியவிசையினொடு) அழகிய இசையோடேகூட. (ஒலிசொலுமடியவர்) இத்திருமொழியை வண்குறிஞ்சி என்று சொல்லுவர்கள். இத்தை அப்ப்யஸிக்குமவர்கள். (உறுதுயரிலரே) அவர்களுக்கு (க)"அவஶ்யமநு ஭ோக்தவ்யம்- அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிற பாபங்கள் கிட்டாது.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஏழாந்திருமொழி முற்றிற்று.

அநு.—பத்தாம்பாட்டு. (மலிபுகழித்யாதி) "மலிபுகழ்" என்றதுக்கு ப்ரகரணோசிதமாகப் பரமபதத்திலும் ப்ராப்யபூமியென்னும் தாத்பர்யத்தை யருளுகிறார் (பரமேத்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அநு.—வானோர்ப்ரவேசம். தொண்டீருய்யும் வகையிலே திருக்கண்ணபுரத்துக்கு அநிஷ்ட நிவர்த்தகதயா ப்ராபகத்வத்தை யநுஸந்தித்து கீழ்த்திருமொழியிலே ப்ராப்யமென்றநுஸந்தித்தார். அவ்வளவுமன்றியே அவன்றானே உம்மைப் பெறவேணுமென்று திரியாநின்றான்; நீர் அவன்படியைக் காணீரென்று ஜ்ஞாநத்தை உண்டாக்குகையாலே அவன் படிகளையும் இத்தேசத்திலே கண்டேனென்று ஜ்ஞாநஸாதநதயா அநுஸந்திக்கிறாரென்று

(க) ப்ருஹந்நாரதீ.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து எட்டாந்திருமொழி

வானோர் ப்ரவேசம்.

வ்யா.—வானோர், திருக்கண்ணபுரம் ப்ராப்யமென்றார்கீழ்; நமக்கு ப்ராப்யமென்னுமளவேயோ? அவன் அநாதிகாலம் எதிர்சூழல் புக்குத்தட்டித்திரிய நாம் அத்தை அறியாதே யிருந்துதிரிந்தநாளில் இழவெல்லாம் தீரும்படியான தேசமன்றோவென்கிறார்.

மூ.—வானோரளவும்முதுமுந்நீர் வளர்ந்தகாலம் வலியுருவில்
மீனாய்வந்து வியந்துய்யக்கொண்ட தண்தாமரைக்கண்ணன்
ஆனாவுருவிலானாய னவனையம்மா விளைவயலுள்
கானார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானோரளவும்	தேவர்கள் எல்லையளவும்	கண்ணன்	திருக்கண்களை யுடையனாய்
முது	பழமையான	ஆனா	அழியாத
முந்நீர்	ஸமுத்ரப்ரவாஹமானது	உருவில்	ஶரீரத்தை யுடைய
வளர்ந்தகாலம்	வளர்ந்தகாலத்திலே	ஆனாயன்	இடையனாயவதரித்த
வலி	மிடுக்கையுடைத்தான	அவனை	அந்தகண்ணனை,
உருவில்	ஶரீரத்தையுடைய	அம்	அழகிதாய்
மீனாய்	மத்ஸ்யரூபமாய்	மா	பரப்பையுடைய
வந்து	வந்தவதரித்து	விளை	விளையும்படியான
வியந்து	(ரக்ஷகமாய்வைத்தகடலே வளர்ந்துவருவதைக்கண்டு) ஆஶ்சர்யப்பட்டு	வயலுள	வயல்களையுடைத்தாய்
		கான்ஆர்	காடுகள் நிறைந்த
		புறவில்	பர்யந்தங்களையுடைத்தானதிலே
உய்யக்கொண்ட	ஜகத்ரக்ஷணம் பண்ணின	கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தி
தண்	குளிர்ந்த	அடியேன்	ஶேஷபூதனான அடியேன்
தாமரை	தாமரைப்பூபோன்ற	கண்டுகொண்டேனே.	காணப்பெற்றேன். (க)

வ்யா.—முதற்பாட்டு. (வானோரித்யாதி) தேவர்கள் எல்லையளவும் செல்லக் கடல்வெள்ளம் பரந்தநாள், அத்தையடையத் தன்

ஸங்கதியை யருளுகிறார் (திருக்கண்ணபுரமித்யாதி).

னுடைய ஒருசெலுவிலே யடக்கவல்ல மிடுக்கையுடைய மத்ஸ்ய மாய்வந்து. (வியந்துய்யக்கொண்ட) நாம் ரக்ஷகமாக விட்டகடல் தானே பாத (ஸா) கமாவதே? இருந்தபடி யென்னென்று விஸ்மயப்பட்டென்னுதல்; அன்றிக்கே வேறுபட்டு. ஜகத்காரணபூதனை தான் ப்ரஹ்மாதிகளளவிலே தன்னை அமையவிட்டால் தான் நின்ற நிலைக்கு இதுசேராதாயிருக்குமிறே. அங்ஙனுமன்றிக்கே விஜாதீயமான வடிவையுடையனுகையாலே வந்த நெடுவாசியைச் சொல்லிற்றாகவுமாம். (தண்தாமரைக்கண்ணன்) (க) "மத்ஸ்ய꞉ கமலலோசந꞉ - மத்ஸ்யஃ கமலலோசநஃ" என்னக்கடவதிறே.

(ஆனுவுருவிலானுயன்) ஸதாஏகரூபமான வடிவை இதரஸஜாதீயமாக்கிக்கொண்டு வந்தவதரித்தவன். ஆனுதவுரு-கெடாதவுருவென்றபடி. அழகியதாய் பரந்திருந்துள்ள வயலையுடைத்தாய் காணுர்ந்திருந்துள்ள பர்யந்தத்தை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே. ஒருபுறம் காடாயிருக்கும்போலே காணும். (அடியேன் கண்டுகொண்டேனே) சேஷபூதனை நான் காணப்பெற்றேன். (க)

மூ.—மலங்குவிலங்கு நெடுவெள்ளம் மறுகஅங்கோர்வரைநட்டு
இலங்குசோதியார முதமெய்துமளவோராமையாய்
விலங்கல்திரியத் தடங்கடலுள்சுமந்து கிடந்தவித்தகனை
கலங்கல்முந்நீர் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மலங்கு	மத்ஸ்யவிசேஷங்கள்	இலங்கு	(போனப்ராணன்களை மீட்கைக்கீடாய்) ப்ரகாசியாநின்ற
விலங்கு	தடுமாறும்படியாக		
நெடுவெள்ளம்	ஸமுத்ரவெள்ளமான		
மறுக	கலங்கும்படியாக [து	சோதி	தேஜஸ்ஸால்
அங்கு	(ஆழத்துக்கு அவதியில்லாத) அந்த ஸமுத்ரமத்யத்தில்	ஆர்	பூர்ணமான
		அமுதம்	அம்ருதமானது
		எய்துமளவு	தோன்றும் வரையில்
ஓர்	அத்விதீயமான	ஓர்	அத்விதீயமான
வரை	மந்தரபர்வதத்தை	ஆமையாய்	கூர்மரூபியாய்க் கொண்டு
நட்டு	நிறுத்தி		

அநு.—முதற்பாட்டு. (வாஞ்ரேரித்யாதி) (செலுவிலே) கீழ்வயிற்றிலே. வேறுபாட்டை விவரிக்கிறுர் (ஜகதித்யாதி).

அம்மாவித்யாதிக் கர்த்தமருளிச் செய்கிறுர் (அழகியதாயித்யாதி). (க)

விலங்கல்	மந்தரபர்வதமானது	வித்தகனை	ஆஸ்சர்யாவஹனான எம்பெருமானை
திரிய	நான்குபக்கமும் ஸஞ்சரிக்கும்படியாக	கலங்கல்	கலங்காநின்ற
தடம்	விசாலமான	முந்நீர்	ஸமுத்ரததையுடைய
கடலுள்	ஸமுத்ரத்தில் (அந்த பர்வதத்தை)		
சுமந்துகிடந்த	த (்) ரித்துக்கொண்டு கிடந்தவனாய், (ஆகையாலே)		

கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (உ)

வ்யா.—இரண்டாம்பாட்டு. (மலங்குவிலங்கு நெடுவெள்ளம்) ஜலப்ராசுர்யமுள்ள விடத்தில்போலே காணும் மலங்குகள் தான் வர்த்திப்பது. உள்ளுக்கிடந்த பதார்த்தங்களடங்கலும் அங்கே இங்கே தடுமாறும்படி கடல்குழம்ப, அங்கு ஆழத்துக்கு அவதியில்லாத விடத்திலே மலையைக்கொடுபுக்கு நிறுத்தி, போனப்ராணன்களை மீட்கைக்கீடான தேஜஸ்ஸையுடைத்தான அம்ருதமானதுதோற்றுமளவும் நீருக்கிறுயாதவடிவையுடைய ஆமையாய், மலைதிரிந்துவரும்படியாகப் பரப்பையுடைத்தான கடலிலே அதுக்கு தா(ு)ரக பூதனாய்க்கொண்டு கிடந்த விஸ்மயநீயனை. (கலங்கலித்யாதி) கடல் ஒரு புறமாயிருக்கும்போலே. .... (உ)

மூ.—பாராரளவும் முதுமுந்நீர் பரந்தகாலம் வளைமருப்பில்
ஏராருருவத்தேனமா யெடுத்த வாற்றலம்மானைக்
கூராராரலிரைகருதிக் குருகுபாயக் கயலிரியும்
காரார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பாராரளவும்	பூமிப்பரப்படங்கலும்	மருப்பில்	கொம்பையுடைய
முது முந்நீர்	ஸமுத்ரமானது	ஏர்	அழகால்
பரந்தகாலம்	சூழ்ந்தகாலத்தில்	ஆர்	பூர்ணமான [தான
வளை	வளைந்திருக்கிற	உருவத்து	ஶரீரத்தையுடைத்

அரு.—இரண்டாம்பாட்டு. (மலங்கித்யாதி) எதிர்சூழல்புக்குத் திரிகிற அவதாரங்களில் தமக்கு ஜ்ஞாந ப்ரதாநம் பண்ணுவதாக வேதப்ரதமான அவதாரத்தை யறிந்தபடியை யருளிச்செய்தாரிழ்; தம்முடைய ஸகலபாரத்தையும் ப (்) ரிக்கப் பிறந்தானென்று மலைசுமந்த கூர்மரூபியைக் கண்டபடியை யருளுகிறுரென்று ஸங்கதி.

(மலங்குகள்) மத்ஸ்யவிசேஷங்கள். "அங்கு" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யமருளுகிறுர் (ஆழத்துக்கித்யாதி). ... ... (உ)

ஏனமாய்	வராஹரூபியாய் (அந்த பூமியை)
எடுத்த	எடுத்து வந்தவனாய் (அதனாலே)
ஆற்றல்	மிக்க வலிமையை யுடையனான
அம்மானை	ஸர்வேஶ்வரனை,
கூர்ஆர்	மிகவும் தீக்ஷ்ணமான (மூக்கையுடைத் தான)
குருகு	நாரைப்பக்ஷியானது
ஆரல்	மத்ஸ்யங்களை
இரை	ஆஹாரமென்று
கருதி	எண்ணி (அந்தமத்ஸ்யங்களின்மேல்)
பாய	பாயும்போது
கயல்	மத்ஸ்யங்களானதுகள்
இரியும்	ஓடாநிற்குமதாய்,
கார்	மேகங்களாலே
ஆர்	வ்யாப்தமான
புறவில்	பர்யந்தங்களையுடையதுமான

கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (ங)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (பாராரித்யாதி) பூமிப்பரப்பையடையக் கடல்கொண்டகாலத்து வளைந்த கொம்பையுடைய ஏனமாய். (ஏராருவத்து) ஆயிரம்பண்ணை ப்ரளயம் கொண்டாலாகாதோ இப்படி அழகுநிறைந்தவராஹ விக்ரஹத்தை ஒருகால் காணலாமாகில். (எடுத்தவாற்றலம்மானை) அண்டபித்தியிலே சென்று சேர்ந்த பூமியை இடந்தெடுத்துக் கொண்டேறுகைக்கீடான வலியையுடைய ஸர்வேஶ்வரனை.

(கூராரித்யாதி) கூரியவாயலகையுடைத்தான குருகானது ஆரலை ஆமிஷமென்று புத்திபண்ணிப்பாய கயல்களானவை இரியாநிற்கும். (காராரித்யாதி) மேகங்களினுடைய நிரந்தரஸஞ்சாரத்தை யுடைத்தான பர்யந்தத்தோடுகூடின திருக்கண்ணபுரத்திலே. (ங)

மூ.—

உளைந்தவரியும் மானிடமுமுடனாய்த் தோன்றவொன்றுவித்து
விளைந்தசீற்றம் விண்வெதும்ப வேற்றோனகலம்வெஞ்சமத்து
பிளந்துவளைந்தவுகிரானைப் பெருந்தண் செந்நெற்குலைதடிந்து
களஞ்செய்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (ச)

அரு.—மூன்றாம்பாட்டு.(பாரித்யாதி) தம்முடைய பா(ர)ரங்களைச்சுமக்கும்படியே யன்றிக்கே ஸம்ஸார ப்ரளயத்தில் நின்று மெடுக்கவல்லவனென்று வராஹாவதாரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

ஆழ்வாருடைய ஈடுபாடுதோற்றத் தாத்பர்யமருளுகிறார் (ஆயிரமித்யாதி). (பண்ணை) ப்ரகாரம்.

(இரியாநிற்கும்) ஓடாநிற்கும். பயத்துக்கு த்ருஷ்டாந்தம் (கடலையித்யாதி). ... ... (ங)

பதம்.	உரை.
உளைந்த	ஸகலரையும் பயப்படுத்துமதான
அரியும்	ஸிம்ஹரூபமும்
மானிடமும்	மனுஷ்யரூபமும்
உடனாய்	பொருந்தும்படி
ஒன்றுவித்து	சேர்த்து
தோன்ற	நரஸிம்ஹனாய்த்தோன்
விளைந்த	அப்போதுண்டான[ற,
சீற்றம்	சீற்றத்தைக்கண்டு
விண்	தேவலோகமெல்லாம்
வெதும்ப	நடுங்கும்படியாக
வெம்சமத்து	யுத்தத்திலே
வேற்றோன்	சத்ருவான ஹிரண்ய
அகலம்	மார்வை [னுடைய
பிளந்து	இருகூறாய்ப்பிளந்து (அதனால்)

பதம்.	உரை.
வளைந்த	வளைந்துகிடக்கிற
உகிரானை	திருவுகிரையுடையவனை எம்பெருமா
பெரும்	பெருத்ததாய் [னை
தண்	அழகியதான
செந்நெல்குலை	செந்நெல்குலைகள்
தடிந்து	(வெட்டினபிறகும்) வயிரம்பற்றி
களம்செய்	பரிமாற்றம்மாறாமலிருக்கிற
புறவில்	பர்யந்தங்களையுடைத்தான

கண்ணபுரத்து அடியேன் கண்டு
கொண்டேனே. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (உளைந்தவித்யாதி) தன்னுடைய தோற்றரவிலேசத்ருபக்ஷமானது குலைந்தோடும்படியிருக்கிற ஸிம்ஹமும், உளமயிருமாய், மநுஷ்யவேஷமும் சேராதவடிவிரண்டும்சேர்ந்துதோன்ற, அப்போது பிறந்தசீற்றத்தைக்கண்டு ரக்ஷ்யகோடியிலே அந்வயித்ததேவலோகம்."எவ்வளவாய்த்தலைக்கட்டுகிறதோ?" என்றஞ்ச; வேற்றோனுண்டு - சத்ருவான ஹிரண்யன்; அவனுடைய மார்வை யுத்தத்திலே பிளந்து வளைந்த திருவுகிரையுடையவனை. (பெருந்தணித்யாதி) பெருத்தழகியதாயிருந்துள்ள செந்நெற் குலைகளை வயிரத்தை வெட்டுமாபோலே வெட்டி பரிமாற்றம் மாறாத பர்யந்தத்தையுடைத்தான. .... (ச)

அநு.—நாலாம்பாட்டு. (உளைந்தவித்யாதி) ஸம்ஸார ப்ரளயத்தில்நின்ற தம்மை யெடுக்கவல்லவன்படியை அநுஸந்தித்தவுடனே ஸம்ஸாரபீஜமான அஹங்காராதி விரோதிகளை நகாக்ரத்தாலே போக்க வந்தானென்று * நரங் கலந்த சிங்கத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"உளைந்த" - உளையப்பண்ணின வென்றாகி அருளுகிறார் (தன்னுடைய வித்யாதி). "தடிந்து" என்றபத வாஸனையை அருளுகிறார் (வயிரமித்யாதி). "களஞ்செய்" என்றவர்த்தமாநார்த்தமருளுகிறார் (பரிமாற்றம்மாறாத) என்று.

மு.—

தொழுநீர்வடிவில் குறளுருவாய் வந்து தோன்றிமாவலிபால்
முழுநீர்வையம் முன்கொண்ட மூவாவுருவிலம்மானை
உழுநீர்வயலுள் பொன்கிளைப்பவொருபால் முல்லைமுகையோடும்
கழுநீர்மலரும் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொழும்	ஸகலரும் வணங்கும் படியான	அம்மானை	ஸர்வேஶ்வரனை
நீர்	நீர்மையையுடைய	உழுநீர்	உழுகையே ஸ்வபாவமாக உடைத்தான
வடிவில்	வடிவையுடைத்தான	வயலுள்	வயல்களிலே
குறளுருவாய்	வாமந வேஷத்தை யுடையவனுய்க்கொண்டு	பொன்	பொன்னானது
		கிளைப்ப	விளையும்படியாகவும்,
		ஒருபால்	ஒருபக்கத்தில்
வந்துதோன்றி	வந்தவதரித்து	முல்லை	முல்லை புஷ்பமும்
மாவலிபால்	மஹாபலி பக்கல்	முகை	கருமுகில் புஷ்பமும்
முழுநீர்	ஸமுத்ரத்தாலே சூழப்பட்ட	கழுநீர்	செங்கழுநீரும்
		மலரும்	விகஸிக்கும்படியானதுமான
வையம்	லோகத்தை		
கொண்ட	யாசித்துப் பெற்றவனு	கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (ரு)	
மூவா	ஸதா ஏகரூபமான [னை		
உருவில்	விக்ரஹத்தையுடைய		

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (தொழுநீரித்யாதி)(க)"ஶஙகா:ப்ரஹ்ம..." அவசர: ப்ரதி பேதிரே" என்கிறபடியே கண்டார்க்குத் தொழுதல்லது நிற்கவொண்ணுத வடிவையுடைய வாமநவேஷத்தையுடையனுய் வந்தவதரித்து, கடல்சூழ்ந்த ராஜ்யம் மஹாபலியதாய், அவன் பக்கலிலேதான்இரந்துபெற்றுனும்படி பெற்ற.(மூவாவுருவிலம்மானை) ஸதா ஏகரூபமான விக்ரஹத்தையுடைய ஸர்வேஶ்வரனை. தோன்றுகிற வாமநவேஷமன்று கிடீர் இவனுக்கு நிலைநின்ற வடிவென்கி

அரு.—அஞ்சாம்பாட்டு. (தொழுநீரித்யாதி) தம்முடைய விரோதியை நகாக்ரத்தாலே போக்கினவளவேயன்றிக்கே (க)"அடிக்கீழ் கொள்ளுமப்பன்" என்கிறபடியே தம்மைத் திருவடிகளின்கீழ்வைத்துக்கொள்ள வந்தவனென்று ஸ்ரீவாமநாவதாரத்தை அநுஸந்திக்கிருரென்று ஸங்கதி.

கண்டார்தொழுகையே நீர்மையாய் ஸ்வபாவமாயிருக்கிற வடிவென்று

(க) பார-உத்யோ.

ரூர். (உழுநீர் வயலுள்பொன்கிளைப்ப) உழுகையே ஸ்வபாவமாக வுடைத்தான வயலிலே பொன்னானது வந்துதோன்றும். பொன் படுகுட்டமாயிற்று. பொன் படாதிடமடைய முல்லை, கருமுகை, செங்கழுநீர் இவையெல்லாம் மலராநிற்குமாயிற்று. .... (ரு)

மூ.—வடிவாய்மழுவே படையாக வந்து தோன்றிமூவெழுகால்
படியாரரசு களைகட்ட பாழியானை யம்மானைக்
குடியாவண்டு கொண்டுண்ணக் கோலநீலம்மட்டுகுக்கும்
கடியார்புறவில் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வடி	கூரான	வண்டு	வண்டுகள்
வாய்	முகத்தையுடையதான [தை	குடியா	(தாரபுத்ராதிகளோடு) கூட்டமாக
மழுவே	மழுவென்கிற ஆயுதத்	கொண்டு	மதுவைக்கொண்டு
படையாக	ஆயுதமாக வுடைய பரசுராமனாய்	உண்ண	புஜிக்கும்போதும்
		கோலநீலம்	அழகிய நீலோத்பலமா [னது
வந்துதோன்றி	வந்தவதரித்து	மட்டு	மதுவை
மூவெழுகால்	இருபத்தொருபடிகால்	உகுக்கும்	ப்ரவஹியாநிற்குமதாய்
படி	பூமியில்	கடி	பரிமளத்தால்
ஆர்	நிறைந்து கிடக்கிற	ஆர்	வ்யாப்தமான
அரசு	க்ஷத்ரியர்களை	புறவில்	பர்யந்தங்களை யுடையதுமான
களைகட்ட	நிரஸித்த		
பாழியானை	பலத்தையுடையவ	கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (சு)	
அம்மானை	ஸர்வேஶ்வரனை, [ஞானை		

வ்யா.— ஆறும்பாட்டு. (வடிவாயித்யாதி) வடித்தவாயை யுடையமழுவே ஆயுதமாகவந்து தோன்றி இருபத்தொருபடிகால்

விவக்ஷித்தருளுகிறார் (அவஶா இத்யாதி). (பொன்படுகுட்டம்) பொன் விளையுமாகரம். ... ... (ரு)

அரு.—ஆறும்பாட்டு. (வடிவாயித்யாதி) தன்னடிக்கீழ் கொள்ளுமவனே யன்றிக்கே, ப்ரக்ருதி ப்ராக்ருதங்களாயுள்ள ஸகல ப்ரதிபந்தகங்களையும் அறுக்க வல்லவனென்று ஸ்ரீபரசுராமாழ்வானை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(வடித்த) கூராக்கின. குட்டிகளோடும் பார்யைகளோடும் உண்ண

பூமி நெளியும்படியாகவந்து தோன்றின க்ஷத்ரியகுலத்தை அறுத்துப்பொகட்ட வலியையுடைய ஸர்வேஶ்வரனை. (குடியாவித்யாதி) பசல்களோடும் குட்டிகளோடும் வண்டுகள்வந்துபுஜிக்க, பின்னையும் தர்ஶநீயமான நீலமானது மதுவை ப்ரவஹியாநிற்கும். கடலிலே ஒரு சிறுங்கையை புஜிக்குங்காட்டில் கடல்வற்றுதிறே. பரிமளப்ரசுரமான பர்யந்தத்தையுடைய திருக்கண்ணபுரம். .... (சு)

மூ.—

வையமெல்லாமுடன் வணங்க வணங்காமன்னனாய்த்தோன்றி
வெய்யசீற்றக்கடியிலங்கை குடிகொண்டோட வெஞ்சமத்து
செய்தவெம்போர்நம்பரனைச் செழுந்தண்கானல் மணநாறும்
கைதைவேலிக் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வையமெல்லாம்	உலகமெல்லாம்	வெஞ்சமத்து	க்ரூரமானயுத்தத்திலே
உடன்	உடன்பட்டு	வெம்	க்ரூரமான
வணங்க	திருவடிகளில் ஆஶ்ரயிக்கும்படியாய்	போர்	யுத்தத்தை
வணங்கா	(தான் ஒருவரையும்) வணங்காதவனான	செய்த	பண்ணின
மன்னனாய்	சக்ரவர்த்தித் திருமகனாய்	நம்	நம்முடைய
தோன்றி	வந்தவதரித்து	பரனை	ஸ்வாமியை
வெய்ய	கடுமையான	செழும்	அழகியதாய்
சீற்றம்	சீற்றத்தையுடைத்தான	தண்	குளிர்ந்ததான
கடியிலங்கை	அரணைப் போரும்படியானமதிளையுடைய லங்காநகரத்திலுள்ளார்	கானல்	நைதல் நிலத்தையும்
குடிகொண்டு	பார்யா புத்ராதி குடிகளுடன்	மணம்நாறும்	மிககபரிமளத்தையுடைத்தான
ஓட	ஓடும்படியாக	கைதை	தாழையையும்
		வேலி	வேலியாக வுடைத்தான
		கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (எ)	

வுண்ணவற்றுதோவென்ன வருளுகிறார் (கடலிலேயித்யாதி). ... ... (சு)

அநு.—ஏழாம்பாட்டு. ஸகலப்ரதிபந்தகங்களும் போக்குமளவன்றிக்கே தன்னையேநாளும் நான்வணங்கும்படி தன்சேஷித்வம்தோற்றவந்தவனென்று சக்ரவர்த்தித் திருமகனை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"எல்லாம்" என்றதுக்குக் கருத்தருளுகிறார் (உகந்தாரித்யாதி). (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வையமித்யாதி) உகந்தாருடன் உகவாதாருடன் வாசியறதன்னை வணங்கத் தான் ஒருவரையும் வணங்காத ராஜனைத்தோன்றி, வெவ்விய சீற்றத்தையுடைய கடியிலங்கை குடிகொண்டோட யுத்தத்திலே வெவ்விய போரைப்பண்ணின நம்முடையஸ்வாமியை. (செழுந்தணித்யாதி) அழகிய குளிர்ந்த நெய்தல்நிலத்தையும் பரிமளத்தையுமுடைத்தான தாழையையும் வேலியாகவுடைத்தான திருக்கண்ணபுரம். (எ)

மூ.—

ஒற்றைக்குழையும் நாஞ்சிலுமொருபால் தோன்றத்தான்தோன்றி
வெற்றித்தொழிலார் வேல்வேந்தர் விண்பாற்செல்லவெஞ்சமத்து
செற்றகொற்றத் தொழிலானைச் செந்தீ மூன்றுமில்லிருப்ப
கற்றமறையோர் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒற்றை	ஒருகாதில் தொங்குகிற	கொற்ற	ஜயத்தையே
குழையும்	குண்டலம் (ஒருபக்கத்	தொழிலானை	தொழிலாக வுடையவனை
ஒருபால்	ஒருபக்கத்தில் [திலும்)	செம்	சிவந்த ஜ்வாலைகளோடு கூடிய
நாஞ்சிலும்	கலப்பையும்	தீமூன்றும்	(கார்ஹஸ்த்யாதி)மூன்று அக்நிகளும்
தோன்ற	தோன்றும்படி	இல்	க்ருஹங்களில்
தான்	தாமே	இருப்ப	இருக்க
தோன்றி	பலராமனைத்தோன்றி	கற்ற	வேத ஶாஸ்த்ரங்களை கற்றவர்களான
வெற்றி	ஜயத்தையே	மறையோர்	ப்ராஹ்மணர் வர்த்திக்கிற
தொழிலார்	வ்யாபாரமாக வுடைய	கண்ணபுரத்து அடியேன்கண்டு கொண்டேனே. (அ)	
வேல்	ஆயுதத்தைதரியாநின்ற		
வேந்தர்	ராஜாக்கள்		
விண்பால்	வீரஸ்வர்க்கத்துக்கு		
செல்ல	செல்லும்படியாக		
வெஞ்சமத்து	யுத்தத்திலே		
செற்ற	அழியச்செய்வதாலுண்டான		

அ௩.—எட்டாம்பாட்டு. (ஒற்றையித்யாதி) கையும் கலப்பையுமாய்ப் பிறந்த நம்பி மூத்தபிரான் விஜயத்திலே தாம்தோற்று "ஜிதம் தே- ஜிதந்தே" என்னப்பண்ணினனென்று அவ்வவதாரத்தையநுஸந்திக்கிறாரென்றுஸங்கதி.

வ்யா.—எட்டாம்பாட்டு. (ஒற்றைக்குழையுமித்யாதி) ஒரு காதுக்குழையும் கலப்பையும் ஒருபால்தோன்றத்தான் வந்து வெற்றியே தொழிலாகவுடைய வேலையுடைய ராஜாக்கள் விண்ணிலே செல்ல, யுத்தத்திலேசெற்ற வெற்றியைத் தொழிலாகவுடையவனை. (செந்தீயித்யாதி) த்ரேதாக்நிகள் தங்கள் க்ருஹங்களிலேயிருக்கை. த்ரேதாக்நி முகத்தாலே பகவத்ஸமாராதநம் பண்ணுகையாலே ஹவிஸ்ஸைக் கொள்ளத் தங்கள் க்ருஹங்களுக்குள்ளே ஸர்வேஶ்வர னெழுந்தருளியிருக்கும்படி கற்றப்ராஹ்மணர். .... (௮)

மூ.—

துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந்துய்யப் பாரதத்துள்
இவரித்தரசர்தடுமாற விருள்நாள்பிறந்த வம்மானை
உவரியோதம் முத்துந்தவொருபா லொருபாலொண்செந்நெல்
கவரிவீசும் கண்ணபுரத்தடியேன் கண்டுகொண்டேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துவரி	இலவந்தம் பூப்போலேயும்	இருள்	நன்றாய் இருண்ட
கனி	கோவைப்பழம்போலேயும் (இருக்கிற)	நாள்	க்ருஷ்ணபக்ஷாஷ்டமியில்
வாய்	திருவதரத்தை யுடையளான	பிறந்த	அவதரித்தவனான
நிலமங்கை	ஸ்ரீபூமிப்பிராட்டியான	அம்மானை	ஸ்வாமியான கண்ணபிரானை
துயர்	கஷ்டமானது [வள்	உவரி	ஸமுத்ரத்தினுடைய
தீர்ந்து	நிவ்ருத்தமாகி	ஓதம்	அலைகளானதுகள்
உய்ய	உஜ்ஜீவிக்கும்படி	ஒருபால்	ஒருபக்கத்தில்
பாரதத்துள்	பாரதயுத்தத்திலே	முத்து	முத்துக்களை
இவரித்த அரசர்	எதிரிட்டராஜாக்கள்	உந்த	ஒதுக்கும்படியாகவும்
தடுமாற	தடுமாறும்படியாக	ஒருபால்	ஒருபக்கத்தில்
		ஒண்	அழகிதான

(ஒருகாது) என்றது கலப்பையை ஒருதோளிற் சுற்றிக்கொண்டு புறப்படுகையாலே ஒருகாதிற்குழையே புறம்புள்ளாருக்கு தோற்றுமென்னும் கருத்தாலே யென்றுகொள்வது. (விண்ணிலே) வீரஸ்வர்க்கத்திலே. "செற்ற" நசிப்பித்த. "மறையாளர்" என்னவமைந்திருக்க, "கற்ற" என்கையாலே ததர்த்தஜ்ஞாநநிஷ்டராம்படி கற்கை பலிக்கையாலே, அத்தை அருளுகிறார் (த்ரேதாக்நிமுகத்தாலே யித்யாதி). ... ... (௮)

செந்நெல்	செந்நெலானது	கண்ணபுரத்து அடியேன் கண்டு
கவரி	சாமரங்களை	கொண்டேன். (கூ)
வீசும்	வீசாநிற்குமதான	

வ்யா.—ஒன்பதாம்பாட்டு, (துவரிக்கனிவாயித்யாதி) இலவந் துவரிகள்போலேயும் கோவைக்கனிபோலேயு மிருக்கிற வாயை யுடைய நிலமங்கை க்லேசம்கெட்டு உஜ்ஜீவிக்கைக்காக. (பாரதமித் யாதி) பாரதஸமரத்திலே இவரித்தரசர் என்னுதல்; அன்றியே பாரதத்திலே அரசர்தடுமாற இவரித்தென்னுதல். இவர்தல் - ஏறு தல். (இருள்நாள்பிறந்த வம்மானை) அபரபக்ஷத்திலே அஷ்டமியிலே நள்ளிருளிலே பிறந்தவனை. (உவரியித்யாதி) ஓரருகு கடல் திரை யானது முத்தைத்தள்ள; ஓரருகு அழகியசெந்நெலானது கவரியெ றட்டும் கண்ணபுரம். .... (கூ)

மூ.—மீனோடாமை கேழலரிகுறளாய் முன்னுமிராமனாய்
தானாய்பின்னுமிராமனாய் தாமோதரனாய்க் கற்கியும்
ஆனான்றன்னைக் கண்ணபுரத்தடியன் கலியனொலிசெய்த
தேனாரின்சொல் தமிழ்மாலை செப்பப்பாவம்நில்லாவே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மீனோடு	மத்ஸ்யரூபியாயும்	பின்னும் இரா மனாய்	பலராமனாயும்
ஆமை	கூர்மரூபியாயும்	தாமோதரனாய்	க்ருஷ்ணனாயும்
கேழல்	வராஹரூபியாயும்	கற்கியும்	கற்கியாயும்
அரி	ந்ருஸிம்ஹனாயும்	ஆனான் தன்னை	அவதரித்தருளின எம்பெருமானை
குறளாய்	வாமநனாயும்	கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே (ஸேவித்து)
முன்னும்இரா மனாய்	பரசுராமனாயும்	அடியன்	சேஷபூதரான
தானாய்	சக்ரவர்த்தித்திருமகனாயும்		

அ நு.—ஒன்பதாம்பாட்டு. (துவரியித்யாதி) தம்மை ஜிதமென்னப் பண் ணின நம்பிமூத்தபிரானை அநுஸந்தித்துத் தம்முடைய ஸகலபாரங்களும் தீர்க்கப் பிறந்தகண்ணனை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(இலவந்துவரிகள்) என்றது - முன் இலவமரத்திற்சிவந்த பூவென்றபடி. "இருளையுடையநாள்" என்று விசேஷித்ததுக்கு ப்ரமாண ப்ரஸித்தியுமுட் கொண்டு தாத்பர்யமருளுகிறார் (அபரேத்யாதி). (எறட்டும்) வீசும், ... (கூ)

கலியன்	ஆழ்வாராலே	சொல்	சொற்களை யுடையது மான
ஒலி	ஒலியுடன்		
செய்த	அருளிச் செய்யப்பட்டதாய்	தமிழ் மாலை	இத்திருமொழியை
		செப்ப	அப்ய (ஸ்ஸ) ஸிக்க
தேன்	அம்ருதத்தாலே	பாவம்	பாபமானது
ஆர்	பூர்ணமான	நில்லாவே	நிற்கமாட்டாது. (கo)
இன்	அழகிதான		

வ்யா.—பத்தாம்பாட்டு. (மீனோடித்யாதி) மத்ஸ்யாதிதசாவதாரங்களையும்பண்ணி ஜகத்ரக்ஷணம்பண்ணின தன்னைத் திருக்கண்ணபுரத்திலே கண்டடிமைபுக்க ஆழ்வாரருளிச்செய்த தேனொடொத்த நல்லசொல்லையுடையதமிழ்மாலை சொல்லப் பாவமானதுபோம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து எட்டாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

எட்டாம்பத்து ஒன்பதாந்திருமொழி
கைம்மானம் ப்ரவேசம்.

வ்யா.—தாம் நெடுங்காலமிழந்த விழவுகளெல்லாந்தீர திருக்கண்ணபுரத்திலே தம்மை அநுபவிப்பதாக வெழுந்தருளி யிருந்தானென்றார் கீழ்த்திருமொழியிலே; இதில் இப்படி என்னிழவெல்லாம் தீர்க்கவந்தெழுந்தருளி நிற்கிற திருக்கண்ணபுரத்திலே கருவரைபோல் நின்றானுக்கு அடியேன் வேறொருவர்க்குரியேனல்லேனென்கிறார்.

அரு.—பத்தாம்பாட்டு. (மீனோடித்யாதி) "ஆர்தல்" பொருந்துதலாய், அத்தால்பலிதம் (ஒத்த) என்றது. ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

கைம்மானம் ப்ரவேசம்.—கீழ்த்திருமொழியில் அவனுடைய பலபடிகளையும் காட்டுகையாலே ஜ்ஞாநப்ரதாநதேச மென்றார். அந்த ஜ்ஞாநகார்யமான க்ருதார்த்ததாநுஸந்தாநத்தாலே இனி ஒருவர்க்கும் சேஷமன்றென்றநுஸந்திக்கிறாரென்று ஸங்கதியை அருளுகிறார் (தாமித்யாதி).

மூ.—கைம்மானமதயானை யிடர்தீர்த்தகருமுகிலை
மைம்மானமணியை யணிகொள்மரதகத்தை
எம்மானையெம்பிரானை யீசனையென்மனத்துள்
அம்மானையடியே னடைந்துய்ந்துபோனேனே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கை	துதிக்கையினுடைய	அணிகொள்	அழகுடையதான
மானம்	பெருந்தன்மையை யுடையதான	மரதகத்தை	மரதகமணிபோன்றவனாய்,
மத	மதித்திருக்கிற [ய	எம்மானை	எனக்குஸ்வாமியானவனாய்,
யானை	கஜேந்த்ராழ்வானுடை		
இடர்	(முதலையால் நேர்ந்த) துக்கத்தை	எம்பிரானை	எனக்கு உபகாரனனை
		ஈசனை	ஸர்வேஶ்வரனாய்
தீர்த்த	போக்கினவனாய்,	என்	என்னுடைய
கருமுகிலை	காளமேகம்போன்ற வடிவையுடையனாய்,	மனத்துள்	ஹ்ருதயத்திலே (நித்யவாஸம்பண்ணுகிற)
		அம்மானை	ஸர்வேஶ்வரனை
மை	மைபோன்ற நிறத்தை யுடைய,	அடியேன்	சேஷபூ (ஶூ) தனனை
		அடைந்து	ஆஶ்ரயித்து [நான்
மானம்	பெருவிலையனான	உய்ந்து போனேனே	உஜ்ஜீவித்துப்போனேன். (க)
மணியை	மணிபோன்றவனாய்,		

வ்யா.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி) முன்கைமிடுக்காலே எல்லாவற்றையும் தூக்கி அடித்துப் பொகடுகிறோமென்றிருக்கிறபெருந்தன்மையையுடையமதயானையைஇடர்தீர்த்த, காளமேகம்போன்றவடிவையுடையவனை. மைபோன்ற நிறத்தையுடைய பெருவிலையனான மணிபோன்றவனை. அழகிய மரதகத்தை; அவ்வடிவழகாலே என்னையெழுதிக்கொண்டவனை. எனக்கு உபகாரகனான ஸர்வேஶ்வரனை. (என்மனத்தித்யாதி) என்நெஞ்சிலே யிருக்கிற ஸர்வேஶ்வரனை. அடைந்து உஜ்ஜீவித்துப்போனேன். .... (க)

அரு.—முதற்பாட்டு. (கைம்மானமித்யாதி) "மானம்" பேரளவாய்; இப்படி விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (முன்கையித்யாதி). "மானம்" பெருமையாய், அதின் தாத்பர்யம் (பெருவிலையனாய்) என்றது. ... ... (க)

மூ.—தருமானமழைமுகிலைப் பிரியாது தன்னடைந்தார்
வருமானம்தவிர்க்கும் மணியை யணியுருவில்
திருமாலையம்மானை யமுதத்தைக் கடல்கிடந்த
பெருமானை யடியேனடைந் துய்ந்து பிழைத்தேனே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தரு	கல்பகதருபோன்றவ ஞய்,	திருமாலை	ஸ்ரீயஃபதியாய்,
மானம்	பெரிதான [ஞய்,	அம்மானை	எனக்கு ஸ்வாமியாய்,
மழைமுகிலை	காளமேகம் போன்றவ	அமுதத்தை	அம்ருதம்போன்றவஞ
பிரியாது	ஒருகாலும்பிரியாமல்	கடல்	திருப்பாற்கடலிலே [ய்
தன்னடைந் தார்	தன்னைச்சேர்ந்தவர்க ளுக்கு	கிடந்த	கண் வளர்ந்தருளுகிற வனுமான
வரும்	வரும்படியான	பெருமானை	ஸர்வாதிகஞன எம்பெ ருமானை
மானம்	அவமாநங்களை	அடியேன்	தாஸபூதஞன நான்
தவிர்க்கும்	போக்குமதான	அடைந்து	ஆஶ்ரயித்து
மணியை	சிந்தாமணிபோன்றவ	உய்ந்து	உஜ்ஜீவித்து
அணி	அழகிதான [ஞய்,	பிழைத்தேனே	பிழைக்கப் பெற்றேன்.
உருவில்	வடிவையுடையரான		

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தருமான மித்யாதி) அபேக்ஷித்தார்க்கு அபேக்ஷிதங்களைக் கொடுக்கக் கடவதாயிருந்துள்ள கல்பக தருபோலவும், அபேக்ஷாநிரபேக்ஷமாகக் கொடுக்கக் கடவதான பெரிய மேகம்போலவுமானவனை. தன்னைச்சேர்ந்தார்க்குவரும் அவமாநங்களைப்போக்கும் மணியை. "மணியை" என்கிறது - சிந்தாமணியை. அழகியவடிவையுடைய ஶ்ரியஃபதியை; ஸர்வசேஷியை. என்னைச் சாவாமைக் காத்தவனை; என்னுடைய ரக்ஷணத்திலே உத்யுக்தஞய்க்கொண்டு திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளுகிற ஸர்

அநு.—இரண்டாம்பாட்டு. (தருமானமித்யாதி) ஆனைக்கூக்குரல் கேட்டோடி வந்தபடியைக் கீழருளிச்செய்தார்; ஆனைக்கூக்குரல் கேட்கவேணுமென்று அணித்தாகக்கிடந்த கிடையைஅநுபவித்து க்ருதார்த்தஞனேனென்கிறரென்று ஸங்கதி.

தருவைப்போலவும், மானமழை முகில்போலவுமானவனையென்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளுகிறர் (அபேக்ஷித்தார்க் கித்யாதி). ப்ரக்ருதோப

வாதிகளை. ப்ரஹ்மாதிகளுக்காகக் கடலிலேவந்து கண்வளர்ந்தருளின பெரியவனை. அடியேனடைந்துய்ந்து பிழைக்கப்பெற்றேன்.

மூ.—விடையேழன்றடர்த்து வெகுண்டு விலங்கலுறப்
படையாலாழி தட்ட பரமன் பரஞ்சோதி
மடையார்நீலம்மல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக் கடியேனொருவர்க் குரியேனோ. (௩)

பதம்.	உரை.
அன்று	அந்தகாலத்திலே
விடைஏழ்	ஏழுவ்ருஷபங்களையும்
வெகுண்டு	சீறிக்கொண்டு
அடர்த்து	நிரஸித்தவனாய்,
விலங்கல்	த்ரிகூடபர்வதத்தில்
உற	சேரும்படியாக
படையால்	வாநரஸேனையால்
ஆழி	ஸமுத்ரத்தில்
தட்ட	ஸேதுபந்தநம்பண்ணினவனாய்,
பரமன்	ஸர்வஸ்மாத்பரனாய்,
பரஞ்சோதி	பரமதேஜோரூபியாய்,
மடை	மடைகளிலே
ஆர்	பரந்திருக்கிற
நீலம்	நீலோத்பலங்களாலே
மல்கும்	வ்யாப்தமான
வயல்	வயல்களாலே
சூழ்	சூழப்பட்ட
கண்ணபுரம் ஒன்று	திருக்கண்ணபுரமொன்றையே
உடையானுக்கு	(நித்யவாஸமாக) உடையனான எம்பெருமானுக்கு
அடியேன்	சேஷபூ (ஙூ) தனான நான்
ஒருவர்க்கு	வேறுசிலர்க்கு
உரியேனோ	பவ்யனாவேனோ? (௩)

அவ.—மூன்றும்பாட்டு. இதுதான் உமக்கு எத்தனைகுளிக்கு நிற்குமென்ன; நான் பிறர்க்குரியேனல்லே னென்கிறார்.

வ்யா.—(விடையித்யாதி) சீறி ருஷபங்களேழையும் நெரித்து த்ரிகூடசிகரத்திலே சென்றுகிட்டும் படியாக ✻ கானவெண்குரங்கும் முசுவும் படையாகக் கொண்டு கடலை யடைத்த. அன்றிக்கே அஸ்தமய பர்வதத்திலே ஆதித்யனஸ்தமித்தா னென்னும்படி திருவாழியாலே ஆதித்யன் தேஜஸ்ஸைத்தடுத்து மறைத்த. (பரமன்) ஸமாதிக தரித்ரன். (பரஞ்சோதி) பிராட்டிக்கு வந்த ப்ரதிபந்தகத்தைப் போக்கி அத்தால் வந்த தேஜஸ்ஸையுடையனாயிருக்கிறவன்.

(மடையித்யாதி) மடைகளடைய மிக்கநீலத்தை யுடைத்தான

யோகியாக தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்த மருளுகிறார் (ப்ரஹ்மாதீத்யாதி). ... ... (௩)

வயலாலே சூழப்பட்ட திருக்கண்ணபுரத்தைத்தனக்கு வாஸஸ்தா நமாக வுடையவனுக்கு. ஸ்ரீவைகுண்ட்ட நாதனுயிருக்கு மிருப்புக் கவ்வருகே ஒன்றுபோலே காணுமிது. (அடியேன்) சேஷபூதனான நான். (ஒருவர்க்குரியேனோ) வேறுசிலர்க்கு உரியேனல்லேன். இத் தால் தம்ஸ்வரூபம் சொல்லுகிறார். பிறர்க்குரியேனல்லேனென்னு மிடம் சொல்லுகிறார். அஸாதாரண விபூதியுக்தனானவனுக் கென்னு மிடம் சொல்லுகிறார். .... (௩)

மூ.—மிக்கானைமறையாய் விரிந்தவிளக்கையென்னுள்
புக்கானைப்புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை
தக்கானைக்கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த
அக்காரக்கனியை யடைந்துய்ந்து போனேனே. (ச)

பதம்.	உரை.
மிக்கானை	ஸர்வாதிகனாய்,
மறையாய்	வேதப்ரதிபாத்யனாய்,
விரிந்த	பரிச்சேதிக்க வொண்ணாதவனாய்,
விளக்கை	விளக்குபோல் ஸ்வயம் ப்ரகாசனாய்,
என்	என்னுடைய
உள்	ஹ்ருதயத்திலே
புக்கானை	புகுந்தவனாய் (அதனாலுண்டான)
புகழ்சேர்	புகழையுடையனாய்
பொலிகின்ற	ப்ரகாசியாநின்ற
பொன்மலையை	பொன்மலைபோன்றவனாய்,
தக்கானை	க்ருபாவானாய்,
கடிகை	திருக்கடிகையாகிற
தடம்	விசாலமான
குன்றின்	மலையினுடைய
மிசை	சிகரத்தில்
இருந்த	எழுந்தருளி யிருக்கிற
அக்காரக்கனியை	சர்க்கரையைப்போலவும் கோவைப்பழம் போலவும் போ(க்ய)க்யபூதனான எம்பெருமானை
அடைந்து	ஆஸ்ரயித்து
உய்ந்து போனேனே	உஜ்ஜீவிக்கப் பெற்றேன். (ச)

அநு.—மூன்றும்பாட்டு. (விடையித்யாதி) ஸங்கதிதன்னை யருளுகிறார் (ஸ்ரீவைகுண்ட்டேத்யாதி). (அஸாதாரண விபூதியுக்தன்) என்றதுக்கு "வானவர்நாடு" என்னும்படியான பரமபதமன்றிக்கே *நான்முகனூர்பெற்ற நாடான லீலாவிபூதியுமன்றிக்கே, *தானுகந்தவூர் திருப்பதிகளாகையாலே இதுவே அவனுக்கு அஸாதாரண விபூதியென்று கருத்து. ... ... (௩)

அநு.—நாலாம்பாட்டு. (மிக்கானையித்யாதி) "ஒருவர்க்குரியேனோ" என்றார்கீழ். அதுக்கடி அவனுடைய நிரதிசயபோக்யதையென்று அக்காரக் கனியை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

வ்யா.—நாலாம்பாட்டு. (மிக்கானை) ஸர்வாதிகனை. (மறையாய் விரிந்தவிளக்கை) வேறொன்றால் காணவேண்டாதே தனக்குத் தானே ப்ரகாசகமாயிருப்பது. ப்ரமாணங்களாலே அறியப்பார்க்குமன்று அவற்றாலே ப்ரகாசிக்கிற மேன்மைக்கு எல்லையன்றிக்கேயிருப்பது. (என்னுள்புக்கானை) என்ஹ்ருதயத்திலே தானே புகுந்தவனை; "ஒருஸம்ஸாரி சேதநனுடைய ஹ்ருதயத்திலே அவனுக்கபேக்ஷையின்றிக்கே யிருக்கத்தானே போய்புகுவதே? இதொரு நீர்மை யிருக்கும்படியே" என்று இருந்ததேகுடியாக எல்லாரும் மொக்கச்சொல்லுகையாலே வந்தமிக்கபுகழையுடையனாய்க்கொண்டு உஜ்ஜ்வலனாயிருக்கிறவனை, பரமதார்மிகனை. திருக்கடிகையாகிற மலையின்மேலே அக்காரம்போலேயும் கனிபோலேயும் நிரதிசயபோக்யனாயிருக்கிறவனை. .... (ச)

மூ.—வந்தாயென் மனத்தேவந்து நீபுகுந்தபின்னை
எந்தாய் போயறியாயிதுவே யமையாதோ
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக்கிடந்துகந்த
மைந்தாவுன்னையென்றும் மறவாமைப் பெற்றேனே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எந்தாய்	எனக்கு ஸ்வாமியானவனே!	போய்அறியாய்	நித்யஸூரிகள் பக்கல் போவதாகவும் நினைக்கிறிலை;
வந்தாய்	(நானிருந்தவிடத்தே) வந்தாய்;	இதுவே	(இனி) இந்தபேறே
என்	என்னுடைய	அமையாதோ	போதாதோ?;
மனத்தே	ஹ்ருதயத்திலே	கொந்து	கொத்துக்களாலே
நீ	நீயே	ஆர்	பூர்ணமாய்
வந்து	கிட்டி	பைம்பொழில்	அழகியதான சோலைகளாலே
புகுந்தபின்னை	ப்ரவேசித்தபிறகு	சூழ்	சூழப்பட்டதான
		குடந்தை	திருக்குடந்தையில்

"விளக்கு" என்றதுக்குத் தாத்பர்யம் (வேறொன்றாலித்யாதி). மறைக்கு ப்ரதிபாத்யனாய், அத்தாலும் ஆராலும் பரிச்சேதிக்கப் போகாதபடி விரிந்தவனென்று சப்தார்த்தமாய்தாத்பர்யமருளுகிறார் (ப்ரமாணங்களாலே யித்யாதி). புகழித்யாதிக்குக் கீழ்பதத்தைக் கடாக்ஷித்துத் தாத்பர்யமருளுகிறார் (ஒருவித்யாதி). "தக்கான்" - தகவுடையவன் என்றுக்கித் தாத்பர்யமருளுகிறார் (பரமதார்மிகனை) என்று. ... ... (ச)

கிடந்து	கண்வளர்ந்தருளி	என்றும்	என்றைக்கும்
உகந்த	(அதனால்) உகப்பையு	மறவாமை	மறவாமலிருக்கும்படி
மைந்தா	மைந்தனே? [டைய		யாய்
உன்னை	உம்மை	பெற்றேன்	ப்ராபித்தேன். (ரு)

அவ.—அஞ்சாம்பாட்டு. நாம் என்னஉபகாரம்பண்ணினோமாக‌த்தான் இப்படிகிடந்து படுகிறதென்ன;

வ்யா.—(வந்தாயித்யாதி) இதுக்கு மேற்பட நீ பண்ணக் கடவதொருஉபகாரமுண்டோ? (வந்தாய்) நானிருந்தவிடம்தேடி நீயே வந்தாய். இவன் வந்திடுவானுக்கென்றுமிராத என்ஹ்ருதயத்திலே நீயேவந்து புகுந்தபின்பு, என்ஸ்வாமியானவனே! நித்யஸூரிகள் பக்கல் போவதாகவும் நினைக்கிறிலே. (இதுவேயமையாதோ) இனி இதுக்குமேற்பட ஒருவனுக்குப் பேறுகையாவதென்? கொத்துக்கள் மிக்கு அழகியதாயிருந்துள்ள பொழிலாலே சூழப்பட்ட திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளி. "நாம் ஆஶ்ரிதர்க்கு உறுப்பாகப் பெற்றோமிறே" என்று அத்தாலே உகந்து இவர்களுக்கு விடவொண்ணாதபடி நவீக்ருதமான யௌவநத்தை யுடையனாயிருந்தவனே! இப்படி உபகாரகனை உன்னை மறவாதொழியப் பெற்றேன். நீயோ தீரக்கழிய உபகரித்து நின்றாய்; நான் அந்த உபகாரத்தை மறவாதொழியப் பெற்றேன். இனிஇதுக்குமேற்பட பேறுண்டோ?

மூ.—எஞ்சாவெந்நரகத்தழுந்தி நடுங்குகின்றேற்கு
அஞ்சேலென்றடியேனை யாட்கொள்ளவல்லானை
நெஞ்சேநீநினையாதிறைப்போது மிருத்திகண்டாய்
மஞ்சார்மாளிகைசூழ் வயலாலிமைந்தனையே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எஞ்சா	(ஒருகாலும்) குறைவில்லாத	அஞ்சேல்	"பயப்படாதேகொள்"
வெம்	வெவ்வியதான	என்று	என்று சொல்லி
நரகத்து	நரகத்திலே	அடியேனை	சேஷபூதனை என்னை
அழுந்தி	ஆழங்கால்பட்டு	ஆட்கொள்ள	தாஸபூதனாக ஆக்கிக்கொள்ள
நடுங்குகின்றேற்கு	நடுங்குகிற எனக்கு	வல்லானை	ஸமர்த்தனாய்,

அரு.—அஞ்சாம்பாட்டு. (வந்தாயித்யாதி) பாட்டுக்கெல்லாம் தொகுத்துத் தாத்பர்யம் (இதுக்கித்யாதி). "பெற்றேன்" என்கிற ஸ்வரத்துக்குடலாகக் கருத்தருளுகிறார் (நீயோவித்யாதி). ... ... (ரு)

மஞ்சு	மேகம் (வரையில்)	மைந்தனை	ஸ்வாமியை
ஆர்	வ்யாப்தமான	நெஞ்சே	மனமே
மாளிகை	க்ருஹங்களால்	நீ	நீ
சூழ்	சூழப்பட்டதாய்	இறைப்போது	க்ஷணகாலமும்
வயல்	வயல்களோடே கூடினதுமான	நினையாது	நினையாமலே
ஆலி	திருவாலியில் எழுந்தருளி யிராநின்ற	இருத்திகண்டாய்	இராநின்ருய். (சு)

அவ.—ஆறும்பாட்டு. நெஞ்சைப்பார்த்து அதினுடைய நினைவைக்காதாசித்கமாக்கி அவன் நமக்கு உபகரித்துநின்ருன். நீ தப்பச் செய்யாநின்ருயென்கிருர்.

வ்யா.— (எஞ்சாவித்யாதி) யமன் தண்டலாளுல் பண்ணின பாபத்தைக் கணக்கிட்டு அதுக்குத் தக்கபலத்தை அநுபவிப்பித்து பின்னை விட்டடிப்பார்கள்; அங்ஙனன்றிக்கே ஸம்ஸாரத்துக்கே ஹேதுவான பாபத்துக்கு ஓரவதியில்லாமையாலே ஒருகாலும் குறைந்துகாட்டாதாயிற்று. ஒருகாலும் குறையாதே யிருக்கிற ஸம்ஸாரத்திலே தரைகாணவொண்ணுதபடி அழுந்தி, நடுங்குகிற வென்னை, "நானுண்டே, நீ அஞ்சாதேகொள்" என்று. (அடியேனை யாட்கொள்ளவல்லானை) க்ஷத்ரிய புத்ரன்தலையிலே முடியை வைத்தாப்போலே.

(நெஞ்சே நீ நினையாதிறைப்போதுமிருத்திக்கண்டாய்)நீஜ்ஞாநப்ரஸரத்வாரமன்ருே? "நீ நினை" என்று என்னைப்ரேரிக்கவேண்டாவோ? ஒருக்ஷணகாலமும் நீ நினையாதேயிராநின்ருய். (மஞ்சாரித்யாதி) நினைக்க அருமைப்படவேண்டும்படி அவன்றன்னை யரியனுக்கித்தான் நீ நினையாதிருக்கிருயோ?. மேகபதத்தளவும் ஓங்கின மாடங்கள் சூழ்ந்திருப்பதாய், வயலோடு கூடின திருவாலி யிலே வந்து ஸந்நிஹிதனை மைந்தனையே. .... (சு)

அரு.—ஆறும்பாட்டு.—(எஞ்சாவித்யாதி) கீழ்தாத்பர்ய மருளிச்செய்து சப்தார்த்தமருளுகிருர் (ஒருகாலுமித்யாதி). "அடியேன்" என்றத்தாலே ஆட்கொள்ள ப்ராப்தனென்னுமது தோற்றுமென்று த்ருஷ்டாந்தமருளுகிருர் (க்ஷத்ரியேத்யாதி). ... ... (சு)

மு.—பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும் நின்றடியேனுக்கு
உற்றானாய்வளர்த் தென்னு யிராகி நின்றானை
முற்றா மாமதிகோள் விடுத்தானை யெம்மானை
எத்தால்யான் மறக்கேனிது சொல்லென்னேழைநெஞ்சே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெற்றார்	பித்ராதிகள்	நின்றானை	இருக்குமவனாய்,
பெற்று	அடியேனை (பெற்ற பின்பு)	முற்றா	பருவம் நிரம்பாத
		மாமதி	சந்த்ரனுடைய
ஒழிந்தார்	(யௌவந விரோதியென்று) பொகட்டுப் போனார்கள்;	கோள்	க்ஷயத்தை
		விடுத்தானை	போக்கினவனுமான
		எம்மானை	என்ஸ்வாமியை
பின்னும்	பின்பு	எத்தால்	எந்தமார்க்கத்தாலே
அடியேனுக்கு	சேஷபூதனான எனக்கு	யான்	நான்
உற்றானாய்	ஸகலவிதபந்துவாய்	மறக்கேன்	மறப்பேன்; [தான்
நின்று	நின்று	இது	இந்தவிஷயத்தை
வளர்த்து	உஜ்ஜீவிப்பித்து (அத	என்	என்னுடைய
என்	என்னுடைய [னால்)	ஏழை	அஜ்ஞதையையுடைய
உயிராகி	ப்ராணபூதனாய்க் கொண்டு	நெஞ்சே	மனமே!
		சொல்	நீசொல்லு. (எ)

அவ.—ஏழாம்பாட்டு. உமக்கித்தனை அதிமாத்ர நிர்பந்த மென்னென்ன; இவ்விஷயத்தை விட்டுப்போய் பின்னை நீ ஆரை நினைக்கவிருக்கிறாய்;என்? புறம்பு நினைக்க ஒருவருமில்லையோ வென்னில்; இது வன்றோ புறம்புள்ளார்படி.

வ்யா.—(பெற்றார் பெற்றொழிந்தார்) பித்ராதிகள் ராகாந்தராய் ப்ரஜைகளை உத்பாதித்து யௌவந விரோதி யென்று பொகட்டுப் போக நிற்பர்களாயிற்று. பின்னையும் இவனுக் கொரு உறவு முறை யொழியச் செல்லாதிறே பண்ணிப் போந்த வாஸனையாலே, அவ்வளவில் அவர்கள் வழியாலேநின்று முகம்கொடுக்குமாயிற்று. தன் கைபார்த்திருக்கவேண்டும்படியான பருவத்தையுடைய வெனக்கு

அரு.—ஏழாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) "உற்றானாய்" என்று விசேஷித்ததுக்குக் கருத்தருளுகிறார் (பின்னையுமித்யாதி). வாக்யார்த்தமருளுகிறார் (தன்கையித்யாதி).

* எல்லா உறவு முறையும் தானேயாய் நின்று நோக்கி. (என்னுயிராகின்றானை) தாய் தகப்பன் பொகட்டவன்றும் நான் ஜீவிக்க வேணுமென்றிருக்குமிறே இச்சேதநன்தான்; அப்படி தனக்குப் பரிவனுனதானையும் நோக்கினானுயிற்று.

பருவம் நிரம்பாதசந்த்ரனுக்கு வந்த க்ஷயத்தைப்போக்கித்தன்னுடைய ரக்ஷகத்வத்தைக்காட்டி என்னையெழுதிக்கொண்டவன். (எத்தால்யான் மறக்கேன்) பண்ணின உபகாரம் அளவுபட்டு மறக்கவோ? புறம்பேயும் ஒரு புகலுண்டாய் மறக்கவோ? (இது சொல்லென் னேழை நெஞ்சே) ஸம்ஸாரத்தே சில விடவுமாய் பற்றவுமாயிருக்கிற விருப்பைக் கொண்டு பகவத்விஷயத்தை மறக்கலாமென்றிருக்கிற நீ சொல்லு. .... (எ)

மூ—கற்றார்பற்றறுக்கும் பிறவிப்பெருங்கடலே
பற்றுவந்தடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை
வற்றாநீர்வயல்சூழ் வயலாலியம்மானைப்
பெற்றேன் பெற்றதுவும் பிறவாமைப்பெற்றேனே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அடியேன்	நான்	நீர்	ஜலஸம்ருத்தியை யுடைத்தான
கற்றார்	ஜ்ஞாநிகள்		
பற்று	ஸங்கங்களை [மதான	வயல்	வயல்களாலே
அறுக்கும்	நிவர்த்தித்துக்கொள்ளு	சூழ்	சூழப்பட்ட
பிறவி	ஸம்ஸாரமாகிற [திலே	வயலாலி	திருவாலியில் எழுந்தருளி யிருக்கிற
பெரும்கடலே	பெரிதான ஸமுத்ரத்	அம்மானை	ஸர்வேஶ்வரனை
பற்று	ஒருநிமித்தமாக	பெற்றேன்	ப்ராபித்தேன்;
வந்து	வந்து	பெற்றதுவும்	அந்தபேற்றையும்
பிறந்தேன்	ஜநித்தேன் ;	பிறவாமை	(விச்சேதம் பண்ணக்கடவ) மறுபிறப்பில்லாதபடி
பிறந்தபின்னை	பிறந்தபின்பு		
வற்றா	ஒருநாளும் வற்றுமலிருக்கிற	பெற்றேன்	அடைந்தேன். (அ)

"முற்று" என்றதுக்கர்த்தம் (பருவமித்யாதி). இதுசொல்லென்னும்படி பிடிக்கைக்கு நெஞ்சுசொல்லமாட்டுமோ வென்னும் சங்கை தீரத்தாத்பர்யமருளுகிறார் (ஸம்ஸாரத்தையித்யாதி). "ஏழை" என்று - அஜ்ஞதையாய், அதின்தாத்பர்ய மென்னவுமாம். ... ... (எ)

அவ.—எட்டாம்பாட்டு. உமக்குஉற்றுனாய்நின்றவன்பண்ணின வுபகாரந்தானென்னென்ன; ஸ்வாநுபவத்துக்கு விச்சேதம் வாராத படிபண்ணித் தந்தவனன்றோ வென்கிறார். அதுக்கு உம்முடைய பக்கல் உள்ளதென்னென்னில்;

வ்யா.—(கற்றாரித்யாதி) அறிவுடையார் (க) "இங்நின்றநீர்மை யினியாமுறாமை" என்றுகழித்துக்கொள்ளத்தேடும் ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலேதிரைமேல் திரையாகக்கொண்டுபோந்து எறடுமா போலே ஒருஜந்மம் ஒருஜந்மத்திலே தோள்மாற * மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்துபோந்தேன்; இப்படிப்பிறந்து போராநிற்கச் செய்தே நான்பிறந்த ஸம்ஸாரத்திலே அவன்வந்து ஸந்நிஹிதனாகை யாலே அவனைப் பெற்றுக்கொண்டு நின்றேன்.

(வற்றாநீரித்யாதி) ஒருநாளும் நீர்மாறாத வயல்சூழ்ந்த திரு வாலியிலேநிற்கிற ஸர்வேஶ்வரனைப் பெற்றேன். (பெற்றதுவும்) அந்தபெற்ற பேறுதானும். (பிறவாமைபெற்றேன்) இப்பேற்றுக்கு விச்சேதத்தைப் பண்ணக்கடவஜந்மம் மறுவலிடாதபடி பெற்றே னென்னுதல்; அன்றிக்கே இப்பேற்றுக்கடியாக என்பக்கல் ஒருநன் மை பிறவாதிருக்கச்செய்தே பெற்றேனென்னுதல்; அங்ஙனன்றிக்கே பெற்றேனென்னும் உபகாரஸ்ம்ருதியும் வர்த்தியாதபடி பெற்றே னென்னுதல்; உபகாரஸ்ம்ருதி அநுவர்த்தித்தவன்று ப்ரத்யுபகாரம்

அரு.—எட்டாம்பாட்டு. (கற்றாரித்யாதி) (விச்சேதம் வாராதபடி) என்ற துக்கும் "பிறவாமை" என்கிற பதத்துக்குச் சொன்னயோஜனைக்கும் சேரத் தாத்பர்யங்கண்டு கொள்வது. அதாவது - இனி ஒருபிறப்பும் வாராதபடி யென்னும்பக்ஷத்தில், அநுபவவிச்சேதத்துக்கு ப்ரஸக்தியில்லாதபடி யென் கிறது; நன்மை - பிறவாமை யென்கிற பக்ஷத்தில் நாம்பண்ணின நன்மை யாலே அநுபவம் வந்ததாகில் வேண்டினபோது அநுபவிக்கவும், மற்றைப் போது ஆறியிருக்கவுமாயிருக்கையாலே விச்சேதப்ரஸக்தியுண்டு. உபகார ஸ்ம்ருதிபிறவாமையென்கிற பக்ஷத்தில் ப்ரத்யுபகாரம் தேடித்தடுமாறவேண் டுகையால் விச்சேத ப்ரஸக்திவரும். ஆகையால் இம்மூன்று யோஜனைக்கும் அநுகுணமாக இப்படி தாத்பர்யம் கொள்ளவேணுமென்கை.

"பற்றாவந்து" நிமித்தமாகவந்து என்றாய்அத்தைஉபபாதிக்கிறார்(திரை யித்யாதி). மேலுக்கவதாரிகை (இப்படியித்யாதி). ... ... (அ)

(க) திருவி-க.

தேடி நெஞ்சாறல் படவேண்டும்படி யிருக்குமிறே. அதுவேண்டாதே "ப்ராப்தம்இது" என்றிருக்கும்படி உபகரித்தாளுயிற்று.

மூ.—கண்ணூர்கண்ணபுரம் கடிகை கடிகமழும்
தண்ணூர்தாமரைசூழ் தலைச்சங்கமேல்திசையுள்
விண்ணோர்நாண்மதியை விரிகின்றவெஞ்சுடரை
கண்ணூரக்கண்டுகொண்டு களிக்கின்றதிங்கென்றுகொலோ. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்	கண்களுக்கு	நாள்மதியை	சந்த்ரனைப்போலே நித்யாநுபாவ்யனாய்,
ஆர்	பூர்ணவிஷயமான	விரிகின்ற	உதயமாகாநின்ற
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்திலும்,	வெம்	வெவ்வியதான
கடிகை	திருக்கடிகையிலும்,	சுடரை	தேஜஸ்ஸையுடைய ஸூர்யனைப்போன்ற ப்ரதாபமுடைய எம்பெருமானை
கடி	பரிமளத்தால்		
கமழும்	வ்யாப்தமாய்		
தண்	குளிர்ச்சியால்		
ஆர்	பூர்ணமுமான	இங்கு	இவ்விடத்திலேயே
தாமரை	தாமரைகளாலே	கண்ணூர	கண்களுக்கு பூர்ணமாக
சூழ்	சூழப்பட்ட	கண்டு	ஸேவித்து
தலைச்சங்கம்	தலைச்சங்காட்டில்	களிக்கின்றது	ஆநந்திப்பது
மேல்திசையுள்	மேல்பார்ஶ்வத்திலும்	என்றுகொலோ	எந்தகாலம். (கூ).
விண்ணோர்	நித்யஸூரிகளுக்கு		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணூர்கண்ணபுரம்) கண்டார்க்குக்கண்மாறவைக்க வொண்ணுதபடியான திருக்கண்ணபுரம், திருக்கடிகை, பரிமளத்தைப் புறப்படவிடாநிற்பதாய், ஶ்ரமஹரமான தாமரைகளாலே சூழப்பட்ட தலைச்சங்காட்டில் மேல்பார்ஶ்வத்தில். (விண்ணோர்நாண்மதியை) நித்யஸூரிகளுக்கு என்று மொக்க அநுபாவ்யனானவனுயிற்று இங்கேவந்து ஸுலபனுனன். (விரிகின்ற வெஞ்சுடரை) உதயகாலத்தில் ஆதித்யனைப்போலே ப்ரதாபம்

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கண்ணூரித்யாதி) நெஞ்சும் தாமுமாய் உசாவிக்கொண்டு அநுபவியாநின்ருர்கீழ். இப்படியிருக்கச்செய்தே கண்கள்தான் யுகபத்அநேக திவ்யதேசங்களையும் ஸாக்ஷாத்கரிக்க வேணுமென்ருசைபட்டு அது இங்குபிறவாமையாலே பதறுகிருரென்று ஸங்கதி.

கண்ணுக்குப் பரிபூர்ணமானவிஷயமென்ருய், தாத்பர்யமருளுகிருர் (கண்டாரித்யாதி).

விஞ்சியிருப்பது, கண்ணாலே முகக்கலாயிருப்பது. (கண்ணித்யாதி) ஒருதேசவிசேஷத்திலேபோனால் ஸதாதர்ஶநத்தாலே(௧) "ஹாஉஹாஉஹாஉ ஹாஉஹாஉஹாஉ - அஹமந்நமஹமந்நம்" என்று களிக்குமதை இங்கே கண்ணாலேகண்டு களிக்கப்பெறுவதுஎன்றோ வென்கிறார். இங்கே கண்ணாலே காண்கையாவதென்னென்னில்; இவருடைய த்வரை யிருக்கிறபடியிறே. .... (௯)

மூ.—செருநீர்வேல்வலவன் கலிகன்றிமங்கையர்கோன்
கருநீர்முகில்வண்ணன் கண்ணபுரத்தானை
இருநீரின் தமிழின்னிசைமாலைகள் கொண்டுதொண்டீர்
வருநீர்வையமுய்ய இவைபாடியாடுமினே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கரு	கறுத்தும்	இரு	அதிகமான
நீர்	ஜலபரிதமுமான	நீர்	நீர்மையுடையதாய்
முகில்	மேகம்போன்ற	இன்	இனியதான
வண்ணன்	திருமேனி நிறத்தை யுடையரான	தமிழ்	தமிழ்ரூபமான
		இன்	இனியதான
கண்ணபுரத் தானை	திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளி யிருக்கிற சவரிப்பெருமாள் விஷயமாக,	இசை	காநரூபமான
		மாலைகள்கொண்டு	மாலாரூபமான ப்ரபந்தத்தைக்கொண்டு
		தொண்டீர்	கைங்கர்ய பரர்களான நீங்கள்
செரு	யுத்தம் செய்கையே		
நீர்	ஸ்வபாவமாகவுடைய	வரும்	(பூமிப்பரப்படங்கலும் சூழ்ந்து) வாராநின்ற
வேல்	வேலாயுதத்தை		
வலவன்	வலது திருக்கையிலுடையராய்,	நீர்	கடலாலே சூழப்பட்ட
		வையம்	லோகங்கள்
மங்கையர்	திருமங்கைக்கு	உய்ய	உஜ்ஜீவிக்கும்படி
கோன்	ராஜாவான	இவை	இப்ப்ரபந்தத்தை
கலிகன்றி	ஆழ்வார் (அருளிச் செய்த)	பாடி	காநம்செய்து
		ஆடுமினே.	ஆடக்கடவீர்கள். (௧௦)

(என்னென்னில்) என்றது-காண்கைக்குத் தடையென் னென்றபடி. (த்வரை) என்றது - நினைத்தபோதே அங்கேபோய் காணவேணுமென்னும் த்வரை யென்கை. ... ... (௯)

(௧) தை-ப்ருகு-ய-௬.

வ்யா.—பத்தாம்பாட்டு. (செருநீர் வேல்வலவன்) செருச்செய்கையை ஸ்வபாவமாகவுடைய வேல் கை வந்திருக்குமவருமாய், ப்ரதிபக்ஷநிரஸநஸ்வபாவருமாய், திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான ஆழ்வார் ஶ்ரமஹரமான வடிவையுடைய சவரிப்பெருமாளையாயிற்றுக் கவிபாடிற்று.

(இருநீரித்யாதி) விஷயவைலக்ஷண்யத்தையொழியவே மிக்க நீர்மையை யுடைத்தாயிருக்கிற இன்தமிழாகிற இசைத்தொடையைக்கொண்டு கைங்கர்ய ருசியுடையரான நீங்கள் கடல்சூழ்ந்தபூமியிலே இவற்றைப்பாடுவது ஆடுவதாய் உஜ்ஜீவித்துப்போகப் பாருங்கோள். அன்றிக்கே (க) "ஸர்கேபிநோபஜாயந்தே ப்ரளயேநவ்யதந்திச - ஸர்க்கேபிநோபஜாயந்தே ப்ரளயேநவ்யதந்திச" என்கிறபடியே வரக்கடவதான ப்ரளயத்திலேபுக்கு அழுந்திநோவுபடாமே நீங்கள் இவற்றைக்கொண்டு பாடுவதாடுவதாக உங்கள்ஸஞ்சாரத்தாலே ஜகத்தை உஜ்ஜீவிப்பிக்கப் பாருங்கோளென்னுதல். .... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து ஒன்பதாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
எட்டாம்பத்து பத்தாந்திருமொழி
வண்டார் ப்ரவேசம்.

வ்யா.—கண்ணாலேகண்டு களிக்கின்ற திங்கென்று சொல்லிநின்

அரு.—பத்தாம்பாட்டு- (செருவித்யாதி) "வருநீர்" பூமிசூழ்ந்துவருகிற நீரானகடலென்றும், மேலேவரக்கடவ நீர்ப்ரளயஜலமென்றும் இரண்டர்த்தமருளுகிறுர் (கடலித்யாதி வாக்யத்வயத்தாலே). "வையத்திலே நீங்கள் உய்ய" என்று முந்தினயோஜனைக்கு சப்தார்த்தம். ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு.—வண்டார் ப்ரவேசம். "கண்ணரைக்கண்டு களிக்கின்ற திங்கென்ற

(க)

ருரே; கண்ணாலே கண்டுகளிக்கை பேறுனால் அதுக்குத்தன்கைபார்த் திருக்கவேண்டும்படி யிருக்கிறவனைக் கேட்போமென்று பார்த்து நீ சொல்லென்கிறுர். உம்முடைய அநந்யகதித்வத்தை ஆவிஷ்கரித்து கைங்கர்யத்தையொழியச் செல்லாத உம்முடைய சாபலத்தை ஆவிஷ்கரித்தநீர், கைங்கர்யம் பெற்றீரே; வாசிகமான வடிமைசெய்யா நின்றீராகில் இனிவேண்டுவதுண்டோவென்று அத்தை இவர் திருவுள்ளத்திலேபடுத்த, அத்தாலே இனியராய்த்தலைக்கட்டுகிறுர்.*

மூ.—வண்டார்பூமாமலர்மங்கை மணநோக்கம்
உண்டானே உன்னையுகந் துகந்துன்றனக்கே
தொண்டானேற்கு என்செய்கின்றாய் சொல்லுநால்வேதம்
கண்டானே கண்ணபுரத்துறையம்மானே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வண்டு	வண்டுகளாலே	கண்டானே	வெளியிட்டவனுமான
ஆர்	பூர்ணமாய்	கண்ணபுரத் துறை	திருக்கண்ணபுரமென்கிற திவ்யதேசத்தில் வர்த்திக்குமவ
பூ	அழகியதாய்		
மா	பரப்புடையதுமான		
மலர்	புஷ்பத்தில் நித்ய வாஸம்பண்ணுநின்ற	அம்மானே	ஸ்வாமியே! [ஞனை
		உன்னை	உம்மை
மங்கை	பெரியபிராட்டியாருடைய	உகந்துகந்து	மிகவும் உகந்து
		உன்றனக்கே	உனக்கே
மணம்	மங்களாவஹமான	தொண்டானேற்கு	அடிமைசெய்யவேணுமென்றிருக்கிறஎனக்கு
நோக்கம்	வீக்ஷணத்தை		
உண்டானே	(தாரகமாக) உடையவனாய்,	என்செய்கின்றாய்	(நீ) என்னசெய்வதாய் நினைத்திருக்கிறாய்
நால்	நான்குவிதமான	சொல்லு	சொல்லவேணும். (க)
வேதம்	வேதங்களையும்		

வ்யா.—முதற்பாட்டு. (வண்டாரித்யாதி) வண்டுகள் ஜாதியாகப்படிந்திருப்பதாய், தர்ஸநீயமாய் பிராட்டிக்கு நினைத்தபடி

கொலோ" என்றுவிடாய்த்தவர் "காட்டினாய் கண்ணபுரத்துறை யம்மானே" என்று களிக்கப்ரஸக்தி யென்னென்னும் சங்கையிலே ப்ரஸக்தியைக் காட்டாநின்றுகொண்டு ஸங்கதியருளுகிறுர் (கண்ணாலேயித்யாதி). களிக்கப் பெறுதநாளிலே சொல்லாநின்றுரென்று கீழோடேஅந்வயம். (அதுக்கு) காலாவதிக்கு. ... ... *

வர்த்திக்கைக்கீடான பரப்பையுடைத்தான தாமரைப்பூவையிருப் பிடமாகவுடைய பெரியபிராட்டியாருடைய நோக்கை தா(ஞு)ரகாதி களாகவுடையவனே! (உன்னை) அவளோடுகூடி யிருக்கிறஉன்னை. ப்ரஹ்மசாரி யெம்பெருமானை யன்றுய்த்து இவர்உகந்திருப்பது. (உகந்துகந்து) மிகவுமுகந்து. (உன்றனக்கே தொண்டானேற்கு) தாயும் தமப்பனும் சேரவிருக்க அநுவர்த்திப்பாரைப்போலே, அவ னுமவளுமான சேர்த்தியிலே அடிமைசெய்ய வேணுமென்றுய்த்து இவர் ஆசைப்பட்டிருப்பது. பிராட்டியும் அவனுமான சேர்த்தி யிலே அடிமைசெய்யவேணுமென்னும் சாபலத்தையுடைய எனக்கு.

(என்செய்கின்றாய் சொல்லு) நீ செய்தருளப் பார்த்ததென் சொல்லு. ப்ராப்யப்ராபகங்களிரண்டும் அவளும் அவனுமானசேர்த் தியிலேயாயிற்று இவர்நினைத்திருப்பது. உபாய பா (ஞு) வத்தில் குறைவறவிருக்கிற நீ செய்தருளுவதாக நினைத்திருக்கிறதென் சொல்லு. (என்செய்கின்றாய் சொல்லு) தம்முடைய உகப்பைப் பேற்றுக்குப் பரிகரமாக நினைத்திருக்கிறிலர்; அவன் நினைவே பேற் றுக்குப் பரிகரமாக நினைத்திருக்கையாலே சொல்லுஎன்கிறார். (நால் வேதம்கண்டானே)ப்ரளயகாலத்தில் இவற்றினுடையஆநுபூர்வியை ஸ்மரித்திருந்து வெளியிடுகையிறே-இவற்றைக் காண்கையாவது. நித்யமானவேதத்தில ஸாக்ஷாத்காரத்துக்கு மேற்படவில்லையிறே. அன்றிக்கே பட்டர் அருளிச்செய்தாராகச் சிறியாத்தான்பணிக்கும் படி; "இதுகர்த்தரி அன்று, கர்மணிகிடாய்" என்றுப்ராப்யப்ராபகங்

அரு.—முதற்பாட்டு. (வண்டாரித்யாதி). "மணமான" மங்களாவஹ மான நோக்கமென்றர்த்தம் விவக்ஷித்து தா(ஞு) ரகாதிகளென்று ஆதிபத ப்ர யோகம் பண்ணுகிறாரென்று கண்டுகொள்வது. உனக்கென்றதே "உன்ற னக்கு" என்றத்தாலே தோன்றின ஸம்பந்தவிசேஷத்தை ஸத்ருஷ்டாந்த மாக வருளுகிறார் (தாயுமித்யாதி).

(குறைவறவிருக்கிறநீ) என்றது-புருஷகாரத்தோடு கூடியிருக்கிற நீ யென்கை. "சொல்" என்று நிர்பந்திக்கக் கூடுமோவென்ன அவன் நினை வைக்கேளாதே நீராமையாலே கேட்கிறாரென்று விவக்ஷித்துத் தாத்பர்ய மருளுகிறார் (தம்முடைய வித்யாதி). (இது) என்றது - "கண்டான்" என்ற பதத்தை. (கர்மணிகிடாய்) என்றது-காணப்பட்டானென்று சொன்னபடி கிடாயென்கை. ... ... (க)

களிரண்டும் அவனே யென்னுமிடத்தையாயிற்று வேதங்கள் வெளியிட்டது. (கண்ணபுரத்துறையம்மானே) ப்ரமாணங்களிலே கேட்டுப்போகையன்றிக்கே கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி திருக்கண்ணபுரத்திலேவந்து ஸுலபனான நீ சொல்லு. .... (௧)

மூ.—பெருநீரும்விண்ணும் மலையுமுலகேழும்
ஒருதாராநின்னுளொடுக்கிய நின்னையல்லால்
வருதேவர்மற்றுளரென் றென் மனத்திறையும்
கருதேன்நான் கண்ணபுரத்துறையம்மானே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?		மற்று	வேறான
பெருநீரும்	ஸமுத்ரத்தையும்	தேவர்	தேவதைகள்
விண்ணும்	ஆகாசத்தையும்	உளர்	இருப்பர்கள்
மலையும்	மலைகளையும்	என்று	என்பதையே
உலகுஏழும்	ஸப்தலோகங்களையும்	நான்	நான்
ஒருதாரா	ஒருமாலையாக	என்	என்னுடைய
நின்னுள்	உன்னிடத்திலேயே	மனத்து	மனதில்
ஒடுக்கிய	சேர்ப்பித்துக் கொண்ட	இறையும்	கொஞ்சமும்
நின்னையல்லால்	உன்னைவிட்டு	கருதேன்	நினைத்தறியேன். (உ)
வரும்	("நானேப்ராப்யன்" என்று) வாராநின்ற		

அவ.—இரண்டாம்பாட்டு. "உன்றனக்கே தொண்டானேன்" என்றீரே; இங்ஙன்சொல்லுவானென்? புறம்பே ஆஸ்ரயிப்பாரும் ஆஸ்ரயணீயருமாயன்றோ விருக்கிறதென்ன; அவர்கள் செய்தபடி செய்கிறார்கள்; எனக்கு முன்னம் இதர விஷயங்களில் புத்தியில்லையென்கிறார்.

வ்யா.—(பெருநீருமித்யாதி) கடலும் ஆகாசமும் குலபர்வதங்களும் லோகங்களேழும் இவற்றையடையப்ரளயத்தில். (ஒருதாரா) ஒருமாலையாக. (நின்னுளொடுக்கிய) ஒருபூவை விழுங்கினாப்போலேயாயிற்று வருத்தமற்றிருந்தபடி. அன்றிக்கே (ஒருதாரா) ரக்ஷணத்துக்குத் தனிமாலையிட்டு நிற்கிறவனே! இவற்றையடையவும் திருவயிற்றிலேவைத்து நோக்கின உன்னையல்லது.

அரு°—இரண்டாம்பாட்டு (பெருநீருமித்யாதி) (என்றீரே) என்றவநந்தரம் "இதுக்குமறுமாற்றம் காணாமையாலே" என்றுகூட்டுவது.(என்ன)என்றதுக்கு - ஈஸ்வரனுக்கபிப்ரேதமாகக் கொண்டென்று கருத்து.

ஸம்போதநயாக வர்த்தமருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி). ... (உ)

(வருதேவரித்யாதி) ப்ரளயம் வந்தபோதாக உன்வயிற்றிலே போய்ப்புக்கு நீ வெளிநாடுகொணப் புறப்படவிட்டவாறே நான் ஆஶ்ரயணீயனென்று வருவதொருதேவதை யுண்டாக நான் அறியேன். (இறையும்) பூர்வபக்ஷத்வேநவும் நினைத்தறியேன். (கண்ணபுரத்துறை யம்மானே) ப்ரளயாபத்தைப் பரிஹரித்து இன்று ஆஶ்ரயணீயனென்னுமிடம் தோற்ற நீ வந்து ஸந்நிஹிதனாக நானெங்ஙனே வேறுசிலரை ஆஶ்ரயணீய ரென்றிருக்கும்படி. ஸம்ஸாரப்ரளயத்தைப் பரிஹரிக்கைக்காகவிறே நீ இங்குவந்து நிற்கிறது. (உ)

மூ.—மற்றுமோர்தெய்வமுள தென்றிருப்பாரோடு
உற்றிலேனுற்றது முன்னடியார்க்கடிமை
மற்றெல்லாம்பேசிலும் நின்திருவெட்டெழுத்தும்
கற்றுநான் கண்ணபுரத்துறையம்மானே. (ங)

பதம்.	உரை.
	கண்ணபுரத்துறையம்மானே?
மற்றும்	"உன்னைவிடவேறான
ஓர்தெய்வம்	ஒருதெய்வமானது
உளது	உண்டு"
என்றிருப்பாரோடு	என்றுசொல்லுமவர்களோடு
உற்றிலேன்	ஸம்பந்தமுடையேனல்லேன்;
நான்	அடியேன்
நின்	உம்முடைய
திருவெட்டெழுத்தும்	திருவஷ்டாக்ஷரத்தை
கற்று	அப்யஸித்து (அந்த திருவஷ்டாக்ஷரம்)
மற்றெல்லாம்	மற்றுமுள்ள அநேகார்த்தங்களை
பேசிலும்	சொல்லிற்றேயாகிலும்
உற்றதும்	(நான்) அர்த்தமாக உணர்ந்து அறுதியிட்டது
உன்	உம்முடைய
அடியார்க்கு	சேஷபூதர்களான பாகவதர்களுக்கே
அடிமை	சேஷபூதனாயிருப்பதுதான். (ங)

அவ.—மூன்றும்பாட்டு. வேறுசிலரை ஆஶ்ரயணீயரல்லரென்று நினைத்திருக்குமளவேயோ? தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமில்லை. ஸாத்விகரையொழியக் காலம் செலுத்தவும் மாட்டேனென்கிறார். (க)* எண்ணுதமானிடத்தை யெண்ணுமவனுமல்லேன். * (உ) பேராளன் பேரோதும் பெரியோரை யொருகாலும் பிரியுமவனல்லேனென்கிறார்.

அரு.— மூன்றும்பாட்டு. (மற்றுமித்யாதி) இவர்சொல்லாலேதானே உக்தார்த்தத்தை த்ருடீகரிக்கிறார் (எண்ணுதவித்யாதி).

(க) கக-கூ-எ. (உ) எ-ச-ச.

வ்யா.—(மற்றுமோர்தெய்வ முளதென்றிருப்பாரோடுற்றிலேன்) தேவதாந்தர ஸ்பர்ஶமுடையாரோடு எனக்கொரு ஸம்பந்தமுமில்லை. (உற்றதுமித்யாதி) அவர்களைவிட்டு உன்னளவில் நின்றவனுமல்லேன். இவ்வநுஷ்டாநம் தான் நீர் எங்கேயார் சொல்ல பரிக்ரஹித்தீரென்ன; நீ சொன்ன முதல் வார்த்தைக்கு அர்த்தமாக நான் நினைத்திருப்பது இதுவென்கிறார். இதுபின்னை அநேகார்த்தங்களைச்சொல்லுமே? ஜீவஸ்வரூபத்தைச் சொல்லும், நம்முடைய ஸ்வரூபத்தைச் சொல்லும்; ஜீவவஸ்துக்களுக்கும்நமக்குமுண்டான ஸம்பந்தத்தைச் சொல்லும்; ப்ராப்திபலமான கைங்கர்யத்தளவும் வந்திருக்குமேயென்ன; அது அநேகார்த்தங்களைச் சொல்லிற்றேயாகிலும் அதில்எங்குமாக நான் அறுதி யிட்டிருக்குமர்த்தம்-அநந்யார்ஹஶேஷத்வம்; அதுதான் ததீயஶேஷத்வ பர்யந்தமாயல்லதிராது.

(ஸ்பர்ஶமுடையாரோடே) என்றது "மற்றுமோர் தெய்வமுடையாரோடு" என்றதே, "உளதென்றிருப்பாரோடு" என்கையாலே மாநஸஸ்பர்ஶமுடையாரென்கை. "மற்றெல்லாம்" இத்யாதிக்கு உக்திப்ரத்யுக்திமுகேந தாத்பர்யமருளுகிறார் (இவ்வநுஷ்டாநமித்யாதி). (முதல்வார்த்தை) என்றது - (க) "நான்கண்டுகொண்டேன் நாராயணாவென்னும் நாமம்" என்னும்படி உபக்ரமத்தில் சொன்னதிருமந்த்ரம். (ப்ராப்தி) என்றது - ஶேஷஶேஷிபாவ ஸம்பந்த நிபந்தநமான முறையென்கை. (எங்குமாக) ஸகலபதார்த்தங்களிலுமாக. (அறுதியிட்டு) என்றது - ஜ்ஞாதவ்யதயா அறுதியிட்டுவென்கை. ஜீவஸ்வரூபம் ஆஶ்ரயதயா ப்ரஸக்தமாகையாலும், பகவத்ஸ்வரூபம் விஷயதயா சொல்லவேண்டுகையாலும், தத்விஷயகைங்கர்யம் ஶேஷத்வகார்யமாகத் தன்னடையே வருமாகையாலும், அநந்யார்ஹஶேஷத்வமே ஜ்ஞாதவ்யமாகையால், அது-பாகவதபர்யந்தமானாலிறே நிலைநிற்பது; ஆகையாலேஉன்னடிமையாகையாயிற்று ப்ராதாந்யேந தோற்றுமர்த்தமென்று இவ்வாக்யத்துக்குத்தாத்பர்யம்.

"நின்திருவெட்டெழுத்தும் கற்றுநான் வல்லது" என்றதுக்கு நீஎன்னை உனக்கே அடிமையென்னுமர்த்தத்தை அறிவிப்பிக்கிறவார்த்தையிலேதானே "அடியார்க்காட்படுத்த வல்லவார்த்தை இது" என்று நான்தானே அர்த்தம் பண்ணவல்லது அது, என்று சப்தார்த்தம் விவக்ஷித்துகீழ் உக்தி ப்ரத்யுக்திரூபேண தாத்பர்யமருளிச்செய்து, கீழ்மேல்பாட்டுக்களில் ரீதியைவிடமாட்டாமல் "கண்ணபுரத்துறையம்மானே" என்று ப்ரதீகம் க்ரஹித்துத்தாத்பர்யமருளிச்செய்ய, அதுக்குமேலே எழுத்துக்கற்றதும், "நான்வல்லது கண்ணபுரத்து

(க) க-க-க.

(கண்ணபுரத்துறை யம்மானே) இதுவன்றோ நீ இங்குவந்திருந்து ஓதுவித்தவர்த்தம். கீழும்கண்ணபுரத்துறையம்மானேயென்று போருகையாலே இதுவும் அப்படி நடத்தப் பார்க்குமன்று அக்ஷரமேறிவரும். அதுக்காக "கற்றுநான்வல்லது கண்ணபுரத்தானே" என்னுதல். அன்றிக்கே ரீதிபேதம் பிறவாமைக்காக "கண்ணபுரத் துறையம்மானே! நின்திருவெட்டெழுத்தும் கற்றுநானுற்றதும் உன்னடியார்க்கடிமை" என்றுவது. "உன்னளவில் நின்றவனல்லேன்" என்றபோது, "அவன் திருவுள்ளமென்படுகிறதோ?" என்று நஞ்சீயரருளிச்செய்ய; பிள்ளை "* அல்லிக்கமலக்கண்ணனாகிறான்" என்றருளிச்செய்தார். (௧) "நீக்கமில்லாவடியார் தமடியாரடியாரெங்கோக்கள்" என்று இவர் பாகவதசேஷத்வத்தளவிலே நின்றவாறே, அவன் * அல்லிக் கமலக்கண்ணனானான். ப்ரபந்நனுடைய லக்ஷணமாகிறது - ஸ்ரியஃபதியே உபாயோபேயங்களென்றிருக்கையும், தேவதாந்தர ஸ்பர்ஶமும், தாமஸபுருஷர்களோடு ஸம்பர்க்கமுமின்றிக்கே யிருக்கையும். பாகவதரையொழியச்செல்லாமையுண்டாயிருக்கையும். தர்மியை அநுபந்தித்திருக்கும் தர்மங்களை

றையம்மானே" என்று சேரப்பிடித்துக் கொள்ளுமளவிலே பதினாறு எழுத்தாய்விழுகையாலே கீழ்அடிகளில் ஸங்க்யைக்கு ஏற்றம் வருமென்று காட்டா நின்றுகொண்டு ரீதிபேதத்தை அங்கீகரித்து "கண்ணபுரத்தாய்" என்று பாடத்தைக் காட்டுகிறார் (கீழுமித்யாதி). இப்பக்ஷத்தில் "அதுநான் வல்லது" என்றத்தைவிட்டு பன்னிரண்டு எழுத்தாகவே அநுஸந்திப்பதென்று திருவுள்ளம். இப்படி பாடமே பஹுகோசஸித்தம். முந்தினது உண்டானவிடத்தில் கண்டுகொள்வது. அவனருளிச்செய்த திருமந்த்ரத்துக்கு ப்ராப்தமானவர்த்தம் - பகவதநந்யார்ஹசேஷத்வமாயிருக்க, இவருக்குக் கருத்தாகவெண்ணிற்று-அவனடியார்க்கடிமையானால், அவனுக்கு முகச்சுளிப்பு வாராதோவென்ன; வாராது; ப்ரத்யுத ஆநந்தமேயுண்டாமென்று ஸம்வாதமுகேந தாத்பர்யமருளுகிறார் (உன்னளவிலித்யாதி). மூன்று பாட்டாலும்பலித்த ப்ரமேய விசேஷந்தன்னையருளுகிறார் (ப்ரபந்நனுடையவித்யாதி). பாகவதர்களை யொழியச் செல்லாமை ஸ்வரூபமானால், திருமந்த்ரத்தில்இத்தை சப்தார்த்தமாகச்சொல்லாமல்போவானென்னென்னவருளுகிறார் (தர்மியையித்யாதி). பகவத்விஷயத்தில் அநந்யார்ஹசேஷத்வம் சொன்னபோதே அவ

(௧) தி-வாய்-அ-௧௦-௧௦.

நேரே வ்யவஹரித்ததில்லையேயாகிலும் தர்மியைச் சொன்னபோதே தர்மங்களுமெல்லாம் சொல்லிற்றாமிறே. .... (௩)

மூ.—பெண்ணா ளாள் பேரிளங்கொங்கையினாரழல்போல்
உண்ணாநஞ்சுண்டு கந்தாரை யுகந்தேன்நான்
மண்ணாளா வாணெடுங் கண்ணி மதுமலராள்
கண்ணாளா கண்ணபுரத்துறையம்மானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மண்ணாளா	ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கு வல்லபனாய்	பேர்	பெரிதாயும்
		இளம்	இளமையுடையது மான
வாள்	ப்ரகாசமாயும்		
நெடும்	விசாலமுமான [யளாய்	கொங்கையின்	ஸ்தநத்திலிருக்கிற
கண்ணி	திருக்கண்களையுடை	ஆர்	பூர்ணமாய்
மது	மதுஸ்யந்தியான	அழல்போல்	அக்நிபோன்றதாய்
மலராள்	புஷ்பத்தில் வாஸம் பண்ணுமவளான பெரியபிராட்டியாருக்கு	உண்ணா	ஒருவராலும் புஜிக்கப் படாததுமான
		நஞ்சு	விஷத்தை
		உண்டு	புஜித்து (பூதனையை முடித்து, அதனால்)
கண்ணாளா	வல்லபனுமான		
கண்ணபுரத்துறையம்மானே!			
பெண்	ஸ்த்ரீரூபமாய்	உகந்தாரை	உகப்பையுடைய உன்
ஆளாள்	வடிவுடையளானபூதனையினுடைய	நான்	நான் [னை
		உகந்தேன்	ஸந்தோஷித்தேன்(௪)

அவ.—நாலாம்பாட்டு. அக்குணங்களெல்லா முண்டானாலும் நாம் விரும்பியிருத்தல் வலியபுருஷகாரமுண்டாதல்செய்தவன்றன்றோ, அதுகார்யகரமாவது வென்ன; நஞ்சு தா (தூ) ரகமான உனக்கு ஆகாதில்லை; பிராட்டிமார் எனக்குப் புருஷகாரமானபின்பு என் கார்யத்துக்குக் குறையுண்டோவென்கிறார்.

வ்யா.—(பெண்ணாளாள்) பேயாயிருந்துவைத்துப் பெண்ணாளாள். நிருபாதிக ஸ்த்ரீத்வமுள்ளது யசோதைப் பிராட்டிக்கிறே. அவளாகத்தன்னைபா(பா)வித்துவந்தாளாயிற்று.(பேரிளங்கொங்கை)

ளுக்கு அநங்யார்ஹரான இவர்களை யொழியச் செல்லாமை சொல்லிற்றாமென்றுகருத்து. ... ... (௩)

அரு.—நாலாம்பாட்டு. (பெண்ணித்யாதி) கீழ்மூன்று பாட்டோடும் ஸங்கதிகாட்டுகிறார் (இக்குணங்களித்யாதி).

பெருமையையும் இளமையும் இரண்டும் அருளிச்செய்ததுக்குத் தாத்

ஏறிட்டுக்கொண்டதொழியபேயான படியாலே முலைபெருத்திருக்கு மிறே. யசோதைப் பிராட்டியாக வநுகரித்து வருகையாலே இளமையும் கிடக்கும். அக்நிகல்பமான விஷமாயிற்று; நெருப்பைவாயிடுவார் இல்லையிறே; (உண்ணாநஞ்சு) அறிவுடையார் புஜித்தறியாத விஷத்தை தா (र) ரகமாக புஜித்து ப்ரதிகூலையான பூதனையை முடித்து "அநுகூலர்விரோதிபோகப் பெற்றோம்" என்று உகந்த வுன்னை உகந்தேன்நான்.

(மண்ணாளாவித்யாதி) விஷம்தாரகமான உனக்கு ஆகாதாரில்லை. நீ கைவிடப்பார்க்குமன்றும் விடவொண்ணாத புருஷகாரமுண்டு. (மண்ணாளா) பொறைதானாயிருக்கை. தான் பொறையாளாயிருக்குமளவன்றிக்கே, செய்தகுற்றங்களை அவன் திருவுள்ளத்திலே படாதபடி,(௧) "न कश्चिन्नापराध्यति-நகஸ்சிந்நாபராத்யதி" என்று அவனையும் பொறுப்பிக்குமவளாயிற்று. நோக்காலும் போக்ய(भोग्य)தையாலும் அவன் தன்வழியே போம்படி நியமிக்குமவளாயிற்று. (கண்ணபுரத்துறையம்மானே) இவையெல்லாம் உண்டானாலும் கார்யமாகாதிறே நீ தூரஸ்த்தனாயிருந்தாயாகில்; அக்கண்ணழிவையும் அறுத்துவைத்தாயே. .... (௪)

மூ.—பெற்றாரும் சுற்றமுமென்றிவை பேணேன்நான்
மற்றாரும் பற்றிலேனாதலால் நின்னடைந்தேன்
உற்றானென் றுள்ளத்து வைத்தருள் செய்கண்டாய்
கற்றார்சேர் கண்ணபுரத்துறை யம்மானே. (ரு)

பர்யமருளிச்செய்கிறார் (ஏறிட்டித்யாதி). விஷத்தைபுஜித்தாலும் உகப்பு வருமோவென்ன வருளிச்செய்கிறார் (ப்ரதிகூலையித்யாதி).

"வாணெடுங்கண்ணி" இத்யாதிக்குத் தாத்பர்யமருளுகிறார் (தானித்யாதி). திருவுள்ளத்தில்படாதபடி நோக்காலுமித்யாதியை ஏகமாக அந்வயித்துக்கொள்வது. இப்படிமயக்கி அவனை வசீகரிக்கவல்லாளோவென்ன வருளுகிறார் (நகஶ்சிதித்யாதி). (அவனையும்) என்றது- சொல்மிறுங்களனை திருவடியையுமென்றபடி. ... ... (௪)

அரு.—அஞ்சாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) "கீழேதேவதாந்தரங்களிலும் தேவதாந்தர ஸம்பந்திகளிடத்திலும் பற்றிலேன்" என்றீராகிலும் சரீரஸம்பந்திகளிடத்திலும் ரக்ஷகத்வ ப்ரதிபத்தியும், ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமும் தீர்ந்தாலிறே அதிகாரிபூர்த்தியுள்ளது. அதுவேண்டாவோவென்று பகவத

---

(௧) ரா-யு-௧௧௬-௪௪.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கற்றார்சேர்	(ஸகலசாஸ்த்ரங்களை யும்)கற்றவர்வர்த்தி க்கிற	ஆதலால்	ஆகையால்(நிராலம்பனு னநான்)
கண்ணபுரத்துறையம்மானே?		நின்னடைந் தேன்	உம்மையே ஆஶ்ரயித் தேன் (ஆகையால்)
நான்	அடியேன்	உற்றான்	"இவன் நமக்கு உறவா னவன்"
பெற்றாரும்	மாதாபித்ராதிகளும்	என்று	என்று
சுற்றமும்	உறவாளிகளும்	உள்ளத்து	உம்முடைய திருவுள் ளத்திலே
என்றிவை	என்றிப்படிப்பட்டவர் களை எல்லாம்	வைத்து	வைத்துக்கொண்டு (அ டியேன் பக்கல்)
பேணேன்	பந்துக்களாக விரும்ப மாட்டேன்;	அருள	க்ருபையை
மற்றாரும்	மற்றுயாரிடத்திலும்[ன்	செய்கண்டாய்	செய்தருளவேணும்.
பற்றிலேன்	ஸங்கமுடையேனல்லே		

அவ.—அஞ்சாம்பாட்டு. நாமும் உகந்து, வலியபுருஷகாரமு முண்டாய், ஸுலபனுமானாலும் நீர்புறம்பு பற்றற்று அகிஞ்சநராய் வருமன்றன்றோ அதுகார்யகரமாவதென்ன; என் குறையறுத்து வைத்தேன்; நீ உன்தலையில் குறைகிடவாதபடி பரிஹரித்துக்கொள் ளாயென்கிறார்.

(பெற்றாரித்யாதி) நான் வேறுசிலரை பந்துக்களென்று நினைத் திருப்பதில்லை. (மற்றாரும் பற்றிலேன்) ஐயோ? இவனுக்குப்புறம் பொருவருமில்லை யென்பாரையு முடையேனல்லேன்; புறம்பொரு வருமில்லையாகில், நீர் உண்டேயென்ன; நானும்எனக்குக் கழுத்துக்க ட்டி. (ஆதலால் நின்னடைந்தேன்) நிராலம்பநனாய் விழுமவனுக்கு ஒருதரையிலே விழவேணுமே. (க) "ஸதம் நிபதிதம் பூமௌ" - ஸதம் நிபதிதம்பூமௌ".

பிப்ராயத்தைக் காட்டாநின்று கொண்டு ஸங்கதியருளுகிறார் (நாமுமித்யாதி). (அகிஞ்சநராய்) என்றது "மற்றாரும்" என்றவிடத்தில் தாமும் அந்விதராகை யாலே ஸ்வரக்ஷணத்தில் ஸ்வாந்வயமற்றவரென்கை.

நின்னடைந்தேனென்ன வமைந்திருக்க "ஆதலால்" என்றுவிசேஷித் தவருக்குக்கருத்தை யருளுகிறார் (நிராலம்பநேத்யாதி).

(க) ரா-ஸு-ரு-அ-ரு-௨.

(உற்றுனென்றுள்ளத்துவைத்து) "இவன்நம்மைவிட்டுப் புறம்பேபோய் படக்கடவதெல்லாம் பட்டான்" என்று உன்திருவுள்ளத்திலேகொண்டு என்பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும்' அன்றிக்கே "என்னாலறுத்துக் கொள்ளவொண்ணுத ஸம்பந்தம்உன் கையதன்றே? இவன்கீழ் விட்டுப்போந்த உறவுமுறையெல்லாம் நாமேயன்றே" என அறித்தைத் திருவுள்ளத்திலேகொண்டு என் பக்கலிலே க்ருபையைப்பண்ணி யருளவேணும். என்றுன் இங்ஙனே செய்யவேண்டுகிறதென்னென்ன; (கற்றரித்யாதி) நீ வர்த்திக்கிற ஊரிலுள்ளார் விழுந்தவேடெடுத்து வாசித்தறிவாருண்டோ? அறிவுடையார்க்கெல்லாம்படவேண்டாவோ? (க) "ஆர்யேண கருணம் கார்யம்- ஆர்யேண - கருணம் - கார்யம்" என்னக்கடவதிறே என்று ஜீயரருளிச்செய்தவார்த்தை. அவர்கள்பக்கல் வேண்டாதவற்றைக் கிடந்து ஆராயாநிற்கிறதென்? நம்ஸ்வரூபத்துக்கீடாகச் செய்யவேண்டுவதுகிடக்க ஆராய்ந்தால் கைவிடவொண்ணுதவற்றை ஆராய்கிறதென்? .... (ரு)

மூ.—ஏத்தியுன்சேவடி யெண்ணியிருப்பாரை
பார்த்திருந்தங்கு நமன்றமர்பற்றுது
சோத்தம்நாமஞ்சுதுமென்று தொடாமைநீ
காத்திபோல் கண்ணபுரத்துறையம்மானே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறையம்மானே?		எண்ணிஇருப் பாரை	(நித்ய கைங்கர்யம்செய்யவேணுமென்று) எண்ணி இருக்குமவர்களை
உன்	உம்முடைய	நமன்றமர்	யமபடர்கள்
சேவடி	திருவடிகளை		
ஏத்தி	ஸ்தோத்ரம் செய்து		

"உற்றுன்" என்றதுக்கு துக்கங்களையுற்றுனென்றும், எனக்கு உறவானவனென்றும் இரண்டர்த்தமருளுகிறுர் (இவனித்யாதி வாக்யத்ரயத்தாலே). ஸம்வாதமுகேநதாத்பர்யமருளுகிறுர் (அறிவுடையார்க்கித்யாதி). (க) "பாபாநாம் வா சுபாநாம்வா" பாபாநாம் வா சுபாநாம்வா" என்றெடுத்தஶ்லோகத்துக்கு அர்த்தத்தை யுட்கொண்டு தாத்பர்யமருளுகிறுர் (அவர்கள் பக்கலித்யாதி). (நம்ஸ்வரூபத்துக்கு) என்றது - ஆர்யரான நம்முடைய விசேஷஜ்ஞதைக்கென்றபடி. ... ... (ரு)

(க) ரா-யு-கக௬-௪௪.

பார்த்திருந்து	(ஸரீரவியோகஸமயம்) பார்த்திருந்து	நாம்	"நாம்
அங்கு	அந்த அந்திமதசையில்	அஞ்சுதும்	பயப்படுகிறோம்"
பற்று	கிட்டாமல்	என்று	என்று
சோத்தம்	சோத்தமென்றுதாழ்ந்தார் சொல்லும் சப்தத்தைச் சொல்லி	தொடாமை	ஸ்பர்ஸியாமலிருக்கும்படி
		நீ	தேவரீர்
		காத்திபோல்	காத்திருப்பாய்போலும்.

அவ.— ஆறும்பாட்டு. நீ என்குற்றங்கள்பாராதே என்னைக் கொள்ளுமளவுபோராது; செய்த குற்றங்கள் ஆராய்வதாக நீ இட்டயமாகிகளும் என்பக்கல் வாராதபடி பண்ணவேணுமென்கிறார்.

வ்யா.—(ஏத்தியித்யாதி) உன் திருவடிகளை ஏத்தி (௧) "வழுவிலா வடிமை செய்யவேண்டுநாம்" என்கிற மநோரதத்தையுடையராயிருக்குமவர்களை. (பார்த்திருந்து) அவர்களுடைய சரீரவிஸ்லேஷஸமயம் பார்த்திருந்து. அவ்வவஸ்த்தையிலே அந்திமஸமயத்திலே யமபடர்வந்துகிட்டாதே.

(சோத்தநாமஞ்சுதுமென்று) அவர்கள் அநுகூலராயிருப்பாரைக்கண்டால் சொல்லுவன இச்சப்தங்கள். (௨) "இறைஞ்சியும் சாதுவராய்ப்போதுமின்கள்" என்கிறபடியே, "அவர்களைக்கண்டால் நாங்கள் அருகுவாரோம்" என்று கடக்கப் போம்படியாயன்றோ உன்ஸ்வபாவம். (கண்ணபுரத்துறையம்மானே) அவ்வவளவுகளறிந்து நோக்குகைக்காகவன்றோ இங்குவந்து நிற்கிறது. (௬)

மூ.—வெள்ளைநீர்வெள்ளத்தணைந்த வரவணைமேல்
துள்ளுநீர்மெள்ளத் துயின்ற பெருமானே
வள்ளலே யுன்றமர்க்கென்றும் நமன்றமர்
கள்ளர்போல் கண்ணபுரத்துறையம்மானே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெள்ளை நீர்	திருப்பாற்கடலினுடைய	வெள்ளத்து	வெள்ளத்திலே
		அணைந்த	அணைத்துக் கொண்டு கிடக்கிற

அரு.—ஆறும்பாட்டு. (ஏத்தியித்யாதி) உன் சேவடியெண்ணியிருப்பாரை நீ காத்திருப்பாயென்று அந்யாபதேசேந வநுஸந்தித்தது - ஸ்வகதமான தசையென்று விவக்ஷித்து ஸங்கதியருளுகிறார் (நீ யித்யாதி).
அவ்வவளவுகள் - அந்தந்த அவஸ்த்தைகள். ... ... (௬)

(௧) தி-வாய்-௩-௩-௧. (௨) ௪-திருவ-௬அ.

அரவணைமேல் — திருவநந்தாழ்வான் மேலே
துள்ளும் — துள்ளாநின்ற
நீர் — திவலைகள் (ஸ்பர்ஶிப்பதால்)
மெள்ள — மெள்ள
துயின்ற — திருக்கண் வளருமவனாய்,
பெருமானே — ஸர்வாதிகனாய்,
வள்ளலே — உதாரனுமான
கண்ணபுரத்துறை யம்மானே?
உன்றமர்க்கு — உன்னடியார்பக்கல்
என்றும் — எந்த காலத்திலும்
நமன்தமர் — யமபடர்கள்
கள்ளர்போல் — சோரரைப்போல் மறைந்துவர்த்திப்பர்கள்.

அவ.—ஏழாம்பாட்டு. அவர்கள்கிட்டாமையேயோ? உன் ப்ரபாவத்தாலே அவர்களுக்கு மறைந்து வர்த்திக்கவேண்டும்படியாயன்றோ இருக்கிறதென்கிறார்.

வ்யா.—(வெள்ளையித்யாதி) திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வான்மேலே. (துள்ளுநீர்) கடலில் சிறுதிவலைகளானவை திருமேனியில் ஸௌகுமார்யத்துக் கிடாகவந்து துடைகுத்த. (மெள்ளத் துயின்ற பெருமானே) ஆர் யமவஶ்யராகிறார்; ஆர்கூப்பிடுகிறார், என்றுகூக்குரல்கேட்கும்படி செவிதாழ்த்துக்கொண்டு மெள்ள கண்வளரும் ஸர்வாதிகனே!

(வள்ளலே) ஆஶ்ரிதவிஷயத்தில் பண்ணின ஔதார்யவெள்ளமிருந்தபடியென். (உன்றமர்க்கென்றும்) உன்னுடையாரைக் கண்டால் யமபடர்கிட்டாமையேயோ? மறைந்தன்றோ வர்த்திப்பது. (கண்ணபுரத்துறையம்மானே) காக்கிற நீ ஸந்நிஹிதனாயிருக்க, அவர்கள் எங்ஙனே வெளியிலே திரியும்படி. .... (எ)

மூ.—மாணிகிவையமளந்ததுவும் வாளவுணன்
பூணாகங்கீண்டதுவுமீண்டு நினைந்திருந்தேன்
பேணாதவல்வினையே னிடரெத்தனையும்
காணேன்நான் கண்ணபுரத்துறையம்மானே. (அ)

அரு.—ஏழாம்பாட்டு. (வெள்ளையித்யாதி) ஸங்கதியை யருளுகிறார் (அவர்களித்யாதி). அவர்கள் - யமபடர்.

துள்ளுநீராலே மெள்ளத் துயிலுகிறானென்று விவக்ஷித்து நீராலே துயிலுகையை வெளியிடுகிறார் (கடலித்யாதி). ... ... (எ)

அரு.—எட்டாம்பாட்டு. (மாணிகியித்யாதி) "ஈண்டு" என்றது நீட்டிக்கிடக்

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?		ஈண்டு	இப்போது
மாணுகி	(நீர்முன்பு) ப்ரஹ்ம சாரியாய்	நினைந்திருந்தேன்	நினைத்திருந்தேன்; (அதனால்)
வையம்	லோகங்களை	பேணாத	(ஆத்மாவுக்கு ஒருஹிதமும்) செய்யாதவனாய்
அளந்ததுவும்	அளந்துகொண்டதை[யும்,		
வாள்	வாளாயுதமுடையனு	வல்வினையேன்	கொடிய பாபங்களைப் பண்ணினவனுமா[ன
அவுணன்	ஹிரண்யனுடைய [ன		
பூண்	ஆபரணங்களாலே (அலங்க்ருதமான)	நான்	அடியேன்
ஆகம்	மார்வை	இடர்எத்தனையும்	ஸகலபாபங்களையும் (இப்போது)
கீண்டதுவும்	கிழித்ததையும் (நான்)	காணேன்	காணவில்லை. (அ)

அவ.—எட்டாம்பாட்டு. நீபாபங்களைக் கனக்கக்கூடுபூரித்து வைக்கஅதினுடையப(ஃ)லாநுபவத்தைப்பண்ணுவிக்குமவர்களுக்கு மறைந்து வர்த்திக்கைக்கு வேண்டுகிற ஹேதுவென்னென்ன; நீ ஆஶ்ரிதர்க்காக உன்னை அர்த்தியாக்கின படியையும், விரோதிநிரஸந சீலனுயிருக்கிறபடியையும் அநுஸந்தித்தேன். அவைவாஸனையோடே போய்நிற்கக் கண்டேனென்கிறுர்.

வ்யா.—(மாணுகி) உண்டென்று இட்டபோதோடு இல்லையென்று தள்ளிக் கதவையடைத்தபோதோடு வாசியற முகமலர்ந்து போம்படி இரப்பிலேதகணேறினவடிவையுடையனுய் பூமிப்பரப்பையடைய அளந்துகொண்டதும், சிறுக்கனுக்காக ஸாயுதனுன ஹிரண்யனுடைய ஆபரணங்களாலே அலங்க்ருதமான மார்வைக்கிழித்ததுவும். (ஈண்டுநினைந்திருந்தேன்) நீமுற்காலத்திலே செய்தசெயலை நான்இப்போது நினைத்திருந்தேன்.

(பேணுதவித்யாதி) தேஹாத்வ்யதிரிக்தமா யிருப்பதோர் ஆத்மாஉண்டென்று அதுக்கொருநன்மைபாராதே, தேஹாத்மாபிமாநியாய் மஹாபாபங்களைத் திரட்டினநான், அவையடங்கலும் நிஶ்

கிறதாய், அதுதானும்இன்று மென்றபடியாகையாலே இப்படிவிசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (நீயித்யாதி).

ஆத்மாவைப்பேணுதவனுய் வல்வினையேனுனவென்று அர்த்தம்விவக்ஷித்தருளுகிறுர் (தேஹாதீத்யாதி). போக்குமவன் கிட்டிநிற்கையாலே போம்

ஶேஷமாகப்போய்க்கொடுநிற்கக்கண்டேன். (கண்ணபுரத்துறையம்மானே) போக்குமவனளவுக்கு ஈடாயன்றோ போமதினளவு இருப்பது. .... (அ)

மூ.—நாட்டினாயென்னையுனக்கு முன்தொண்டாக
மாட்டினேனத்தனையே கொண்டென்வல்வினையைப்
பாட்டினாலுன்னை யென்னெஞ்சத்திருந்தமை
காட்டினாய் கண்ணபுரத்துறையம்மானே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ணபுரத்துறை யம்மானே?		வல்வினையை	கொடியபாபங்களை
முன்	ப்ரதமத்திலே	மாட்டினேன்	போக்கினேன்; (மேலும்)
என்னை	அடியேனை	பாட்டினால்	அடியேன் பாடின பாட்டினால்
உனக்கு	உமக்கு	என்	என்னுடைய
தொண்டாக	தாஸ பூ (஭ூ) தனாக	நெஞ்சத்து	மனதில்
நாட்டினாய்	ஸ்திரப் படுத்தினாய்; (பிறகு அடியேன்)	உன்	உம்முடைய
அத்தனையே கொண்டு	அந்தக்ருபாவி சேஷத்தைக்கொண்டே	இருந்தமையை	இருப்பை
என்	அடியேனுடைய	காட்டினாய்	அறிவித்தாய். (கூ)

அவ.— ஒன்பதாம்பாட்டு. உம்முடையவிரோதி போனபடிதானென்? நீர்பெற்ற பேறுதானென்னென்ன;

வ்யா.—(நாட்டினாயென்னை யுனக்குமுன் தொண்டாக) முந்

பாபங்கள் தூரப்போயிற்றென்று தாத்பர்யத்தை யருளுகிறார் (போக்குமவனித்யாதி). ... ... (அ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (நாட்டியித்யாதி). முதற்பாட்டுத்துடங்கி இவ்வளவும், கைங்கர்யத்தில் தம்முடையசாபல்யத்தையும், தம்முடையஅநந்யகதித்வாதிகளையும், அவனுக்குத்தாம்அறிவிப்பித்து "இப்படிப்பட்ட எனக்கு கண்ணாலே உன்னைக் கண்டுகளிக்கப்பெறுகையென்று சொல்" என்றுகேட்க, ஈஶ்வரனும் இவர்திருவுள்ளத்திலே களிப்புண்டாம்படி அடிமைகொண்டமையை அறிவிப்பித்து, இத்தையும் அவர் திருப்பவளத்தாலே கேட்கவேணுமென்று ஆசையாலே கேட்கிறானாக கீழ்ப்பாட்டோடே ஸங்கதியை தர்ஶிப்பிக்கிறார் (உம்முடைய வித்யாதி).

முன் என்னை உனக்கு நாட்டினாயென்று யருளுகிறார் (முந்துறவித்யா

துறமுன்னம் நீசெய்தது இவனை நம்முடையானென்று அங்கே நாட்டுங்களென்றாய். நீ எனக்கு ப்ரதமஸுக்ருதமாகச் செய்தது இவனை நம்முடையனாக அங்கே நாட்டுங்களென்று சொன்னாய். (மாட்டினேனித்யாதி) நானும் அவ்வளவைக்கொண்டு உன்னைப்பற்றின ராஜகுலத்தாலே அநாதிகாலம் புத்திபூர்வகமாகப்பண்ணின பாபங்களை நிஶ்ஶேஷமாகப் போக்கினேன்.

(பாட்டினாவித்யாதி) விரோதிபோகப் பெற்றவளவேயோ? அதுபோனால் பெறக்கடவ கைங்கர்யத்தையும் பெற்றேன். வாசிகமானவடிமையும் செய்யப்பெற்றேன். நாம்பாடின கவியினுடைய மதிப்பிருந்தபடியால், இதுநம்மால் வந்ததாகக்கூடாது; உள்ளேயிருந்து பாடுவிக்கிறானொருத்தனுண்டென்றறிந்த விதுகொண்டே நீ என்ஹ்ருதயத்திலேயிருக்கிற விருப்பை நிஶ்சயிக்கலாம்படி பண்ணினாய். (கண்ணபுரம்) இவரைப்பாடுவித்த மூக்கோட்டையிருந்தபடி. .... (கூ)

மூ.—கண்டசீர்க் கண்ணபுரத்துறையம்மானை
கொண்டசீர்த்தொண்டன் கலியனொலிமாலை
பண்டமாய்ப்பாடுமடியவர்க் கெஞ்ஞான்றும்
அண்டம்போயாட்சி யவர்க்கதறிந்தோமே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கண்ட	கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படியான	உறை	நித்யவாஸஸ்தலமாக வுடையரான
சீர்	ஸம்பத்தையுடைய	அம்மானை	ஸர்வேஶ்வரனை,
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தையே	கொண்ட	(எல்லாரும் நெஞ்சிலே) கொள்ளும்படியான

தி). (என்றாய்) என்றவநந்தரம் "என்கை" என்றுசேஷம். ஏதத்விவரணம் (நீ எனக்கித்யாதி). (அங்கே) என்று அடிமையெழுதிக்கொள்ளும் அக்கணக்குத் திட்டத்திலென்கை. தொகைமுறியான எட்டெழுத்தில் முதலெழுத்திலேதானே பகவதநந்யார்ஹ சேஷபூதரிலே நீருமொருவரே என்று அறிவிப்பித்தானென்று திருவுள்ளம்.

மலையாளத்தில் "மூக்கோட்டை" என்கிறவூரை நினைத்தால் கவிகளுக்

சீர்	வைபவமுடைய	அடியவர்க்கு	தாஸ பூ)தர்களு
தொண்டன்	பகவத் கைங்கர்ய ஸ்ரீ யை யுடையரான	எஞ்ஞான்றும்	எந்தகாலத்திலும் [க்கு
		அண்டம்போய்	பரமபதத்தில்சென்று
கலியன்	ஆழ்வாராலே	ஆட்சி	ஆளுகைஉண்டாகக் கடவது;
ஒலி	ஒலியுடன் அருளிச் செய்யப்பட்ட	அவர்க்கு	இத்தை அப்யஸித்த வர்களுக்கு
மாலை	மாலாரூபமான இத் திருமொழியை	அது	அந்தபேறுஸித்திக்கு மென்பதை
பண்டமாய்	நிதியாகக்கொண்டு		
பாடும்	பாடுமவர்களான	அறிந்தோம்	அறிந்தோம். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கண்டசீரித்யாதி) உண்டான ஸம்பத்தை ப்ரமாணங்களிலே கேட்டுப் போகையன்றிக்கே கண்ணாலே கண்டநுபவிக்கலாம்படி நிரவதிக ஸம்பத்தை யுடைத்தான திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ணுகிற ஸர்வேஶ்வரனை. (கொண்டசீர் தொண்டன்) ஆழ்வாருடைய ஶ்ரீவைஷ்ணவ ஶ்ரீயைச் சொன்னால் அதிலே சிலர்விப்ரதிபத்தி பண்ணுகையன்றிக்கே "ஆழ்வாராகில் தொண்டர்" என்று எல்லாரும் நெஞ்சிலே கொள்ளும்படியான நன்மையை யுடையராயிருப்பாராயிற்று. இதில் விமதி விஷயமன்றிக்கேயிருக்கை. ஆழ்வார் ஒலியையுடைத்தாக வருளிச்செய்தமாலை.

இவற்றை நிதியாகக்கொண்டு பாடுமடியார்களுக்கு காலதத்வமுள்ளதனையும் (க)"ஆண்மின்கள்வானகம்" என்கிறபடியேபரமபதம்

குப் பாட்டுக்கிளம்புமாபோலே இவருக்கும் திருக்கண்ணபுரத்தை நினைத்தால் பாட்டுக்கிளம்புமாகையாலே இவரைப் பாடுவித்த மூக்கோட்டை என்கிறது.

அரு.—பத்தாம்பாட்டு. (கண்டவித்யாதி) "கண்ட"என்றத்தாலே பரமபதத்தை வ்யாவர்த்திக்கிற தென்றருளுகிறார் (உண்டானவித்யாதி). (விமதி) விப்ரதிபத்தி.

பண்டமாவது - பண்டே அமர்ந்திருக்கிற வைப்பாகச் சேமித்ததாக்கியருளுகிறார் (இவற்றையித்யாதி). ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

(க) தி-வாய்-கo-கூ-கூ.

ஆட்சியாகக்கடவது. (அதறிந்தோமே) ஸர்வேஶ்வரன் என் பக்கல் பண்ணின ஓரமிருந்தபடி கண்டேனுக்கு இத்தை அப்ய(ஷ்ஞ)ஸித்தவர்களுக்கும் அவ்வளவு சென்றல்லது பர்யவஸிக்க வொண்ணாதென்னுமிடத்தை அழகிதாகவறிந்தோம். (அண்டம்) ஆகாசம்; பரமாகாசம். * * * * * * * * * (௰)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி

எட்டாம்பத்து பத்தாம்திருமொழி

முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
ஒன்பதாம்பத்து முதல்திருமொழி
வங்கமாமுந்நீர் ப்ரவேசம்.

வ்யா.—"பாட்டினாலுன்னை யென்னெஞ்சத் திருந்தமை காட்டினாய்" என்றுபாடின கவிதன்னை நீரேமதிக்கும்படி கவிபாடவல்லீருமா யிருந்தீர்; (க) "தானுகந்த வூரெல்லாம் தன்தாள்பாடி" என்கிறபடியே எங்கும்புக்கநுபவிக்க வேணுமென்னு மபிநிவேச முண்டாயிருந்தது. இங்கிருக்கும் நாள்தானே (உ) "வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்றுஎல்லாவடிமையும்செய்யவேணுமென்று நீர்மநோரதித்திருந்தபடியே கவிபாடி அடிமைசெய்கிறீர். பின்பு இத்தேஹாவஸாநத்திலே அவ்வருகே கொடுபோய் (ங) "𑌅𑌹𑌮𑌨𑍍𑌨 𑌮𑌹𑌮𑌨𑍍𑌨 𑌮𑌹𑌮𑌨𑍍𑌨𑌮𑍍 - அஹமந்நமஹமந்ந மஹமந்நம்" என்று நீர் பேசும்பேச்சு தன்னையும் அங்கேகேட்கிறோம். "ஆனபின்பு உமக்கோரிடத்திலும் ஒருகுறைகளுமில்லை; நாம்உகந்த நிலங்களெங்கும் புக்குக்கவிபாடும்" என்று தான்திருக்கண்ணங்குடியிலே நிற்கிற நிலையைக் காட்டிக்கொடுக்கக் கண்டு (ச) "வெள்ளை நீர்வெள்ளத்தணைந்த வரவணைமேல்" என்கிறபடியே நம்முடைய ரக்ஷணத்திலே உத்யுக்தராய்க்கொண்டு திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருளினவன்றானே இங்கே திருக்கண்ணங்குடியிலே வந்து ஸந்நிஹிதனானானென்று அங்கே கவிபாடி அநுபவித்து ஹ்ருஷ்டராகிறார். *

அரு.—வங்கமாமுந்நீர் ப்ரவேசம். கீழிரண்டு திருமொழிகளோடும் இத்திருமொழிக்கு ஸங்கதியருளுகிறார் (பாட்டினாலித்யாதி). (அபிநிவேசமுண்டாயிருந்தது) என்றது - "கண்ணார் கணபுரம்கடிகை" என்கிற பாட்டைக் கடாக்ஷித்து. "உன்றனக்கே தொண்டானேற் கென்செய்கின்றாய்" என்று கைங்கர்யசாபலத்தை ஆவிஷ்கரித்தமையைப் பற்றவருளுகிறார் (இங்கித்யாதி). ... ... *

(க) திருநெ-சு. (உ) தி-வாய்-ங-ங-க. (ங) தை-ப்ரு-க0-சு (ச) அ-க0-எ.

மூ;—

வங்கமாமுந்நீர் வரிநிறப்பெரியவாளரவினணைமேவிச்
சங்கமாரங்கைத் தடமலருந்திச் சாமமாமேனியென்தலைவன்
அங்கமாறைந்துவேள்வி நால்வேதமருங்கலை பயின்றெரிமூன்றும்
செங்கையால்வளர்க்கும் துளக்கமில்மனத்தோர் திருக்கண்ணங்குடி
[யுள்நின்றானே.

பதம்.	உரை.
வங்கம்	மரக்கலங்களை யுடைய தாய்
மா	பெரிதான
முந்நீர்	ஸமுத்ரத்திலே
வரி	(அநேகமான) வரிகளை யுடையராய்
நிறம்	அழகிய நிறத்தை யுடையராய்
பெரிய	(பெருமாளும் பிராட்டியும் சேரவர்த்திக்கைக்கீடான) பரப்பை யுடையராய்
வாள்	(மென்மை முதலான) குணங்களை யுடையருமான
அரவின் அணை	திருவநந்தாழ்வானாகிற படுக்கையில்
மேவி	திருக்கண் வளர்ந்தருளுகிறவராய்,
சங்கம்	ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானாலே
ஆர்	நிறைந்த
அம்	அழகிதான
கை	திருக்கைகளை யுடையராய்,
தடம்	விசாலமான
மலர்	தாமரைப்பூவை
உந்தி	திருநாபீ (ி) கமலத்திலேயுடையராய்,
சாமம்	நீலமேகஶ்யாமளமான
மாமேனியன்	பெரிய திருமேனியை யுடையருமாய்,

பதம்.	உரை.
என் தலைவன்	எனக்கு ஸ்வாமியான ஸர்வேஶ்வரன்,
அங்கம்ஆறு	ஆறுவிதமான ஶிக்ஷாதி அங்கங்களிலும்
ஐந்துவேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களிலும்
நால்வேதம்	நாலுவகைப்பட்ட வேதங்களிலும்
அரும்	அருமையான வேதார்த்தங்களைத் தெரிவிக்கும்
கலை	இதிஹாஸாதிகளிலும்
பயின்று	(அப்யஸித்து) பழகினவர்களாய்,
எரிமூன்றும்	கார்ஹஸ்த்யாதி மூன்றக்நிகளையும்
செம்	செம்மையுடைய
கையால்	கைகளாலே
வளர்க்கும்	ஆதா (நு) நம்பண்ணுமவர்களாய்,
துளக்கம்இல்	(ஸர்வேஶ்வரனே ரக்ஷகன் என்றமார்க்கத்தில் நின்றும்) சலியாத
மனத்தோர்	மனதையுடையருமானவர்கள் வர்த்திக்கிற
திருக்கண்ணங் குடியுள்	திருக்கண்ணங்குடி என்கிற திவ்யதேசத்திலே
நின்றானே	எழுந்தருளி இருக்கின்றான்.

வ்யா.—முதற்பாட்டு. (வங்கமாமுந்நீர்) மரக்கலங்களையுடைத்தான பெரியகடலிலே. கடலுக்குச் சிறப்பாக இட்டுச் சொல்லக்கடவதிறே மரக்கலங்களை. (வரியித்யாதி) நாநாவான வரிகளையும் அழகிய நிறத்தையுமுடையனாய், பிராட்டிமாருக்கும் தனக்கும் நினைத்த பரிமாற்றங்களெல்லாம் பரிமாறுகைக்கீடான பரப்பையுமுடையனாய், மென்மை, குளிர்ச்சி, நாற்றம் துடக்கமானவற்றையு முடையனான திருவநந்தாழ்வான்மேலே படுக்கை வாய்ப்பாலே பொருந்திக் கண்வளர்ந்தருளி, அழகிய திருக்கையிலே ஏந்தின ஸ்ரீபாஞ்சஜந்யத்தையுமுடையனாய், ஜகத்காரணமான தாமரைப்பூவைத் திருநாபியிலே யுடையனுமாய், கண்டார் கண்குளிரும்படி ஸ்ரமஹரமான திருமேனியையுடைய என் ஸர்வாதிகன்.

(அங்கமித்யாதி) ஸீக்ஷாதிகள், பஞ்சமஹாயஜ்ஞம், நாலுவகைப்பட்ட வேதம், வேதார்த்தத்தை விசதீகரிக்கக் கடவதான இதிஹாஸாதிகள் இவற்றிலே வாஸனையுடையருமாய், ஸ்தநந்தயப்ரஜையை உணர்ந்து நோக்கும்தாயைப்போலே அக்நித்ரயத்தையும் ஆதா(த)நம்பண்ணிநோக்கும் கையையுடையருமாய், "ஒருகர்மத்தை அநுஷ்டியாநின்றோம், அதுநமக்கு ரக்ஷகமன்று, ஸர்வேஸ்வரனே ரக்ஷகன்" என்றிருக்குமிருப்பில் குலைத்தலுடைய நெஞ்சை யுடையரன்றிக்கே யிருப்பாருமானவர்கள் வர்த்திக்கிற திருக்கண்ணங் குடியிலே நின்றானே. .... (௧)

மூ.—

கவளமாகதத்தகரியுய்யப் பொய்கைக் கராம்கொளக் கலங்கியுள்நினைந்து
துவளமேல்வந்துதோன்றி வன்முதலைதுணிபடச் சுடுபடைதுரந்தோன்
குவளைநீள்முளரிக் குமுதமொண்கழுநீர்கொய்மலர் நெய்தலொண்கழனித்
திவளும்மாளிகைசூழ் செழுமணிப்புரிசைத்திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

அரு.—முதற்பாட்டு. (வங்கமாவித்யாதி) திருப்பாற்கடலிலே வங்கங்களுண்டோ வென்னவருளுகிறார் (கடலுக்கித்யாதி). "தடம்" என்று மலருக்கு விசேஷணமிட்டத்தாலே ப்ரஹ்மாவுக்கு உத்பத்திபலிக்கையால் அத்தையருளுகிறார் (ஜகதித்யாதி).

"அருங்கலை" என்றது - அருமையான பதார்த்தங்களை விசதீகரிக்கும் கலையென்று விவக்ஷித்தருளுகிறார் (வேதேத்யாதி). ... ... (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வளம்	கவளங்களையுடையதாய்	துரந்தோன்	ஏவினவனான எம்பெரு
	[யதுமான		மான்,
மாகதத்த	அதிகமதத்தையுடை	குவளை	குவலயங்களென்ன
கரி	யானையை	நீள்	நீண்ட
பொய்கை	ஸரஸ்ஸிலிருக்கிற	முளரி	தாமரைகளென்ன
கராம்	முதலையானது	குமுதம்	ஆம்பலென்ன
கொள	(வாயில்) கொள்ளும்	ஒண்கழுநீர்	செங்கழுநீரென்ன
	போது (அந்தயா	கொய்	பறிக்கைக்கு யோக்ய
கலங்கி	கலக்கமுற்று [னை)		மான
உள்	மநஸ்ஸில் [து	மலர்	புஷ்பங்களையுடைய
நினைந்து	எம்பெருமானைச்சிந்தித்	நெய்தல்	நெய்தல் புஷ்பங்க
துவள	துவளும்போது		ளென்ன (இவைக
உய்ய	அதுஉஜ்ஜீவிக்கும்படி	ஒண்	தர்சநீயமான [ளாலே)
மேல்வந்து	ஸரஸ்ஸின்மேலே வந்	கழனி	வயல்களையுடையதாய்,
தோன்றி	தோன்றினவனாய், [து	திகழும்	ப்ரகாசியாநின்ற
வன்	த்ருடமான மனதை	மாளிகை	க்ருஹங்களென்ன
	யுடைய	செழுமணி	ரத்நமயமான
முதலை	முதலையானது	புரிசை	மதிள்களென்ன
துணிபட	துண்டாய் அறும்படி		(இவைகளாலே)
சுடு	ஜ்வலியாநின்ற	சூழ்	சூழப்பட்டதுமான
படை	திருவாழியை	திருக்கண்ணங்குடியுள் நின்றானே.	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (கவளமித்யாதி) கவளம்கொண்டிருப்பதாய், மிக்க மதத்தை யுடைத்தாயிருக்கிற ஆனையானது தன்செருக்காலே தன்நிலமல்லாத பொய்கையிலேபுக்கு, தன்நிலமாகையாலே நினைத்தபடி வ்யாபரிக்கவல்லமுதலையின்வாயிலே அகப்பட்டு, தன்னால் பரிஹரித்துக்கொள்ள வொண்ணாமையாலே கலங்கி

அவ.—இரண்டாம்பாட்டு. (கவளமித்யாதி) கையும் ஸ்ரீபாஞ்சஜந்யமாய்க்கொண்டு படுக்கைகொண்டவனென்று கவிபாடினார்கீழ்; இதில்கையும் திருவாழியுமாய்ப்புறப்பட்டுப(ப)க்தரக்ஷணம்பண்ணினபடியைக்கவிபாடுகிறாரென்று ஸங்கதி.

"மாகதத்த"-மிக்க சினத்தையுடையவென்றாய்ப்பலிதம் (மிக்கவித்யாதி).

(க)"ஸுநஸாஉபி ஸ்ம்ஸ்தநஸ்-மநஸா உசிந்தயத்தரி" என்கிறபடியே நெஞ்சால் நினைக்க, ஆகாசாவகாசத்தைவெளியடைத்துக்கொண்டுவந்து தோற்ற, சா(ஸ)பந்தாலே திண்ணியநெஞ்சையுடைய முதலை (உ) "ஸிம்ஹம்ஸிம்ஹம் - சிங்கம்பிங்கம்" என்கிறபடியே துணிபடும்படி ப்ரதிபக்ஷத்தின்மேலே நெருப்பையுமிழா நின்றுள்ள திருவாழியை ஏவினவன். (குவளையித்யாதி) குவளை, தாமரை, ஆம்பல், செங்கழுநீர், பறிக்கைக்கு யோக்யமான மலரையுடைத்தான நெய்தல்இவற்றாலே தர்ஶநீயமானவயலை யுடைத்தாய், ஒளிவிடாநின்றுள்ள மாளிகைகள், ரத்நமயமான மதிள்கள் இவற்றையுடைத்தான திருக்கண்ணங்குடியுள் நின்றானே. .... (உ)

ஏ.—

வாதைவந்தடரவானமும்நிலனும் மலைகளுமலைகடல்குளிப்ப
மீதுகொண்டுகளும் மீனுருவாகி விரிபுனல் வரியகட்டொளித்தோன்
போதலர்புன்னைமல்லிகை மௌவல் புதுவிரை மதுமலரணைந்து
சீதவொண்டென்றல் திசைதொறுங்கமழுந்திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வாதை	(ப்ரளயத்தில்) நலிவா[னது]	மீனுருவாகி	மத்ஸ்யரூபமாய்,
வந்து	மேலேவந்து	விரி	பரப்பையுடைய
அடர	வ்யாபிக்க	புனல்	நீரை
வானமும்	ஆகாசமும்	வரியகட்டு	அழகிய தன்வயிற்றிலே
நிலனும்	பூமியும்	ஒளித்தோன்	அடக்கினவனான எம்பெருமான்
மலைகளும்	மலைகளும்		
அலை	அலையை எறியாநின்ற	போது	காலத்திலே
கடல்	ஸமுத்ரத்திலே	அலர்	விகஸிக்கிற
குளிப்ப	முழுகிக் கிடக்கும்போது (இவற்றை)	புன்னை	புன்னை
		மல்லிகை	மல்லிகை
மீதுகொண்டு	தன்மேல் ஏறிட்டுக்கொண்டு [யுடைய	மௌவல்	முல்லை (இவைகளினு[டைய)
		புது	நவீநமான
உகளும்	ஸந்தோஷத்தை	விரை	பரிமளத்தையும்

"கவளமா கதத்தகரியைப் பொய்கைக்கராங்கொள, அதுகலங்கி உள்நினைந்து துவளும்போது அதுமேல்வந்து தோன்றி" என்றந்வயம். (உ)

(க) வி-தர்-கூ-எஎ. (உ) ரா-யு-கச-கஉ.

மது	தேனையுமுடைய	தென்னல்	தென்னல்காற்றனது
மலர்	புஷ்பங்களிலே [தான	திசைதோறும்	திக்குக்கள் தோறும்
அணைந்து	ஸம்பந்தித்து	கமழும்	வ்யாபரிக்கும்படியான
சீத	குளிர்ந்ததாய்	திருக்கண்ணங்குடியுள் நின்றானே.	
ஒல்கு	மந்தமாக ஸஞ்சரிக்கிற		

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வாதையித்யாதி) எங்குமொக்க ப்ரளயமாய் நலிவானதுமேலிட, ஆகாசமும் பூமியும் குலபர்வதங்களும் கடலிலேபுக்கு அகப்பட, இவற்றையடையத்தன்மேலே ஏறிட்டுக்கொண்டு தரிக்கவற்றாய், பெரியகளிப்பையுடைய மத்ஸ்யரூபியாய் பரந்தபுனலைத் தன்செலுவிலேகதேசத்திலே அடக்கினவன். (போதித்யாதி) காலத்திலே அலருகிற புன்னை மல்லிகை மௌவல் இவற்றினுடைய செவ்விப்பரிமளத்தையும் தேனையுமுடைத்தான மலரிலே புக்கு அதின்வெக்காயம் தன்மேற்படாதபடிபோந்து குளிர்ச்சியையுடைத்தாய் மந்த(ந்)ரமாக ஸஞ்சரிக்கிற தென்றலானது திக்குக்கள் தோறும் கமழாநின்றுள்ள. திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (௩)

மூ.—

வென்றிசேர்திண்மை விலங்கல்மாமேனி வெள்ளெயிற்றொள்ளெரித்தறுகண்
பன்றியாயன்றுபார்மகள் பயலைத்தீர்த்தவன் பஞ்சவர்பாகன்
ஒன்றலாவுருவத்துலப்பில் பல்காலத்துயர்கொடி யொளிவளர்மதியம்
சென்றுசேர்சென்னிச்சிகர நன்மாடத்திருக்கண்ணங் குடியுள்நின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வென்றிசேர்	ஜயமுடையதாய்,	எரி	அக்நிக்கு ஸமாநமான
திண்மை	வன்மையையுடைய	தறு கண்	க்ரூரத்ருஷ்டியையுமுடைய
விலங்கல்	மலைபோலே [தாய்,		
மா	பெரிதான	பன்றியாய்	வராஹமாய் [த்திலே
மேனி	வடிவையும்	அன்று	ப்ரளயம்கொண்டகால
வெள்	வெளுத்திருக்கிற	பார்மகள்	ஸ்ரீ பூமிப்பிராட்டியினுடைய
எயிறு	தந்தங்களையு முடைய		
ஒள்	அழகிதான [தாய்,		

அ௩.—மூன்றாம்பாட்டு. (வாதையித்யாதி) ஒருநீர்ப்புழுவால் வந்த நோவைப் பரிஹரித்த வளவன்றிக்கே ப்ரளயாபத்திலகப்பட்ட ஜகத்தின் நோவைப் பரிஹரித்தானென்று கொண்டாடுகிறாரென்று ஸங்கதி.

(செலுவில்) கீழ்வயிற்றிலே. (மௌவல்) முல்லை. ... ... (௩)

பயலே	வைவர்ண்யத்தை
தீர்த்தவன்	போக்கினவனாய், [கு
பஞ்சவர்	பஞ்சபாண்டவர்களுக்
பாகன்	ஸாரதியாய் நின்றுஉபகரித்தவனுமான எம்பெருமான்
ஒன்றலா	அநேகமான
உருவத்து	வடிவையுடைத்தாய்
உலப்புஇல்	முடிவின்றிக்கே
பல்காலத்து	அநேககாலம் செல்லுவதாய்
உயர்	உயர்ந்திருந்துள்ள
கொடி	கொடிகளானவை
ஒளிவளர்	மிக்கதேஜஸ்ஸையுடைய [வும்
மதியம்	சந்த்ரமண்டலத்தள
சென்று	கிட்டி
சேர்	சேரும்படி
சென்னி	உந்நதங்களான [ய்
சிகரம்	சிகரங்களையுடையதா
நல்	அழகிதான [ய
மாடம்	க்ருஹங்களையுமுடை

திருக்கண்ணங்குடியுள் நின்றானே.

வ்யா.—நாலாம்பாட்டு. (வென்றியித்யாதி) வெற்றியையுடைத்தாய், திண்ணிதாய், மலைபோலே பெரியவடிவையும் வெளுத்த எயிற்றையுமுடைத்தாய், அக்நிகல்பமாய் ஜாத்யுசிதமான வட்டணித்த கண்ணிணையுமுடைத்தான வராஹமாய்; பூமியை ப்ரளயங்கொண்டதென்று அத்தைஎடுத்து ஸ்ரீபூமிப்பிராட்டிக்குவந்த வைவர்ண்யத்தைப் போக்கினவன்; பாண்டவர்களுக்கு ஸாரதியானவன். (ஒன்றலாவித்யாதி) நாநாவான வடிவையுடைத்தாய் முடிவின்றிக்கே அநேககாலம் செல்லுவதாய் உயர்ந்திருந்துள்ள கொடிகளானவை சந்த்ரமண்டலத்தளவிலே சென்றுசேரும்படி ஓங்கின சிகரங்களையுடைத்தாய், அழகிய மாடங்களையுடைய திருக்கண்ணங்குடியுள் நின்றானே. .... (௪)

மூ.—

மன்னவன்பெரியவேள்வியில் குறளாய்மூவடி நீரொடுங்கொண்டு
பின்னுமேழுலகுமீரடியாகப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்
அன்னமென்கமலத்தணி மலர்ப்பீடத்தலைபுனலிலைக் குடைநீழல்
செந்நெலொண்கவரியசைய வீற்றிருக்கும் திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

அநு.—நாலாம்பாட்டு. (வென்றியித்யாதி) கீழே - ஒருப்ரளயாபத்ரக்ஷணம் பண்ணினவனென்றார்; அவ்வளவேயோ? அடிபட்டுஉருமாய்ந்தபூமியை உத்தரித்தும், அதின்பா(ஞா)ரத்தை இறக்கியும், ரக்ஷித்தவனென்றுஸ்தோத்ரம் பண்ணுகிறரென்று ஸங்கதி.

"தறுகண்" என்றதினர்த்தம் (வட்டணித்த) என்றது. "சென்னி" என்றதினர்த்தம் (ஓங்கின) என்றது. ... ... (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மன்னவன்	மஹாபலியினுடைய	நிமிர்ந்தான்	வளர்ந்தவனான எம்பெருமான்.
பெரிய	பெரிதான	அன்னம்	ஹம்ஸமான
வேள்வியில்	யாகத்திலே	மென்	ம்ருதுவான
குறளாய்	வாமநரூபியாய்சென்று	கமலத்து	தாமரையிலுண்டாய்
நீரொடு	(அவன் கொடுத்த) நீரோடு	அணி	அழகிதான
		மலர்பீடத்து	புஷ்ப பீடத்திலே
மூவடியும்	மூன்றடியையும்	அலை	அலையெறியாநின்ற
கொண்டு	ஸ்வீகரித்து	புனல்	ஜலத்திலுண்டான
பின்னும்	பிறகு	இலை	இலையாகிற
ஏழுலகும்	ஏழுலோகங்களையும்	குடை	குடையினுடைய
ஈரடியாக	இரண்டடியாலே அளப்பதாக	நீழல்	நிழல் கீழே
		செந்நெல்	செந்நெலானது
பெரும்	பரந்திருக்கிற	ஒண்	அழகிய
திசை	திக்குக்கள்	கவரி	சாமரத்தை
அடங்கிட	(திருவடிகளுக்குள்ளே) அடங்கும்படியாக	அசைய	வீசும்படியாக
		வீற்றிருக்கும்	இருக்கும்படியான
		திருக்கண்ணங்குடியுள் நின்றானே.	

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (மன்னவனித்யாதி) மஹாபலியுடைய, அர்த்தித்தார் அர்த்தித்ததெல்லாம் கொடுக்கிறயாகத்திலே வாமந வேஷத்தைப் பரிக்ரஹித்துக்கொண்டு போய்புக்கு, அவன் வார்த்த நீரோடு மூன்றடியையும்கொண்டு ஸ்வீகரித்து, அநந்தரம் பூமிப் பரப்பையடைய இரண்டடியாலே அளப்பதாகப் பரந்ததிக்குக்களடங்கலும் திருவடிகளுக்குள்ளே அடங்கும்படி வளர்ந்தவன். (அன்னமித்யாதி) அன்னமானது தன்கால் பொருக்கும்படி ம்ருதுவான கமலத்திலேயுண்டான அழகியபீடத்திலே அலைகிற புனலிலேயுண்

அநு.—அஞ்சாம்பாட்டு (மன்னவனித்யாதி) பூபாரத்தை இறக்கினமாத்ர மன்றிக்கே, அந்யசேஷமாய்போன லோகங்களையும் அடிக்கீழ்கொண்டவனன்றோவென்று புகழுகிறாரென்றுஸங்கதி.

வேள்விக்குப் பெருமையாவதென்னென்னவருளுகிறார் (அர்த்தித்தாரித்யாதி). மஹாபலிதானே அபீஷ்டதாநம் பண்ணுகையாலுண்டான பெருமையென்றுகருத்து. ... ... (ரு)

டான இலையாகிற குடைநிழல்கீழே செந்நெலானது சாமரம்வீச, ஐச்வர்யத்தாலுண்டான வ்யாவ்ருத்தியடையத் தோற்றும்படி யிராநின்றதாயிற்று. .... (௫)

மூ.—

மழுவினலவனியரசை மூவெழுகால்மணிமுடி பொடிபடுத்துதிர
குழுவுவார்புனலுள்குளித்துவெங்கோபம்தவிர்ந்தவன்குலைமலிகதலி
குழுவும்வார்கமுகும் குரவுநற்பலவும் குளிர்தருசூதமாதவியும்
செழுமையார்பொழில்கள் தழுவுநன்மாடத்திருக்கண்ணங்குடியுள்நின்றனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மூவெழுகால்	இருபத்தொருபடிகால்	கமுகும	பாக்கு மரங்களும்
அவனி	பூமியில்	குரவும்	குராமரங்களும்
அரசு	ராஜாக்களுடைய	நல்பலவும்	நல்லபலாமரங்களும்
மணிமுடியை	மணியினலலங்கரித்த	குளிர்	குளிர்த்தியை
மழுவினால்	பரசுவால் [தலைகளை	தரு	தரும்படியான
பொடிபடுத்து	பொடியாகச்செய்து (அவர்களுடைய)	சூதம்	மாமரங்களும்
உதிரக்குழுவு	ரக்தஸமூஹமாகிற	மாதவியும்	குருக்கத்திமரங்களும் (ஆகிய இவைகளுடைய)
வார்புனலுள்	ப்ரவாஹத்திலே	செழுமை	செழிப்பால்
குளித்து	ஸ்நாநம்பண்ணி	ஆர்	நிறைந்துள்ள
வெம்கோபம்	மிக்ககோபத்தை	பொழில்கள்	சோலைகளாலே
தவிர்ந்தவன்	போக்கினவனான பரசு ராமன்,	தழுவும்	சூழப்பட்டதாய்,
குலைமலி	குலைகளாலேநிறைந்த	நல்	நல்லதான
கதலி	வாழைகளுடைய	மாடம்	க்ருஹங்களையுடையதுமான
குழுவும்	தோப்பும்		
வார்	உயர்ந்திருக்கிற		திருக்கண்ணங்குடியுள் நின்றனே.

அ௩.—ஆறாம்பாட்டு. (மழுவினாலித்யாதி) குணலேசமுள்ள மாவலியைத் தலையறுக்க மாட்டாதே தன்னை இரப்பாளனாக்கி லோகரக்ஷணம் பண்ணினனென்றீர்; அப்படி குணலேசமும் தேடிக்காணாதே தூர்மாநிகளாய், அதிலும் தோற்றாரை நிர்மூலமாக்கி லோகரக்ஷணம் பண்ணுமவனன்றோ வென்று சொல்லுகிறாரென்று ஸங்கதி.

வ்யா.—ஆரும்பாட்டு. (மழுவினால்) மழுவைக்கொண்டு பூமியில் ராஜாக்களை இருபத்தொருபடிகால் அறுத்து, அவர்களுடையருதிர வெள்ளத்திலே குளித்து, உதகக்ரியையும்பண்ணி மிக்ககோபம் தவிர்ந்தவன். குலைமிக்கவாழைத்தோப்பும், திரண்டுஉயர்ந்தகமுகும், குரவும், நன்றானபலாவும், குளிர்ந்தநிழலைத்தருகிற மாவும், குருக்கத்தியும் அழகுமிக்கிருந்துள்ள பொழில்கள் சூழ்ந்திருப்பதாய், அழகிய மாடங்களையுடைத்தான, திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (௬)

மூ.—

வானுளாரவரைவலிமையால் நலியும்மறிகடலிலங்கையார்கோனைப்
பானுநேர்சரத்தால்பனங்கனிபோலப்பருமுடியுதிரவில்வளைத்தோன்
கானுலாமயிலின்கணங்கள்நின்றாடக் கணமுகில்முரசநின்றதிரத்
தேனுலாவரிவண்டின்னிசைமுரலும் திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானுளாரவரை	இந்த்ராதி தேவர்களை	வளைத்தோன்	வளைத்தவனான சக்ரவர்த்தித்திருமகன்,
வலிமையால்	மிடுக்காலே	கான்	காட்டிலே
நலியும்	ஹிம்ஸியாநிற்பானாய்	உலா	ஸஞ்சரியாநின்ற
மறி	திரைக்கிளப்பத்தையுடைய	மயிலின்	மயில்களினுடைய
கடல்	ஸமுத்ரத்தால் சூழப்பட்ட	கணங்கள்	கூட்டங்கள்
இலங்கையார் கோன்	லங்கைக்கு நிர்வாஹகனான ராவணனுடைய	நின்றாட	நின்றாடும்படியும்
பரு	த்ருடமான	கணமுகில்	திரண்டமேகங்கள்
முடி	ஶிரஸ்ஸுகள்	முரசம்	வாத்யம்போல்
பானு	ஸூர்ய கிரணம்போல்	நின்றதிர	த்வநிக்கும்படியும்
நேர்	தீக்ஷ்ணமான	தேன்	தேனிலே
சரத்தால்	அம்புகளாலே	உலா	ஸஞ்சரித்தும்
பனங்கனிபோல	பனம்பழம்போல்	வரி	அழகியதான
உதிர	அறுந்துவிழும்படி	வண்டு	வண்டுகள்
வில்	தநுஸ்ஸை	இன்	இனிய
		இசை	கானத்தை
		முரலும்	பண்ணும்படி மிராநின்ற
		திருக்கண்ணங்குடியுள்	நின்றானே.

"கால்" ஸங்கேதம். ... ... (௭)

வ்யா.—ஏழாம்பாட்டு. (வானுளாரித்யாதி) தன்மிடுக்காலே காவலாகவைத்த இந்த்ராதிகளையும் நலியாநிற்பானாய், திரைக்கிளப்பத்தையுடைத்தானகடலை அகழாகவுடைத்தான லங்கைக்கு நிர்வாஹகனாயிருக்கிற ராவணனை ஆதித்யகிரணம்போலே கூரியஅம்புகளாலே வரப(ஃ)லத்தாலேபூண்கட்டின முடிகளானவை பனம்பழம்போலே உதிரும்படி வில்லைவளைத்தவன். (கானித்யாதி) காட்டிலே திரியக்கடவதான மயில்களினுடைய திரள்களானவை ஆட, திரண்ட மேகங்கள் வாத்யம்போலே த்வநிக்க, மதுபாநமத்தமான வண்டுகள் இனியஇசைபாடா நின்றுள்ள, ராவணனோடு பொருதஶ்ரமம் ஆறும்படி ஆடல்பாடல்கேட்டுப்போதுபோக்கியிருக்கலானதேசமாயிற்று.

மூ.—

அரவுநீள்கொடியோனவையுளாசநத்தை யஞ்சிடாதேயிடவதற்குப்
பெரியமாமேனியண்டமூடுருவப் பெருந்திசையடங்கிட நிமிர்ந்தோன்
வரையின்மாமணியும் மரதகத்திரளும்வயிரமும் வெதிருதிர்முத்தும் [னே
திரைகொணர்ந்துந்தி வயல்தொறும்குவிக்கும் திருக்கண்ணங்குடியுள் நின்ற

பதம்.	உரை.	பதம்.	உரை.
அரவு	ஸர்ப்பத்தை	பெரிய	பெரிதாய் வளர்ந்த
நீள்கொடி	நீண்டத்வஜத்திலுடை	மாமேனி	பெரியவடிவானது
யோன்	ய துர்யோதநன்	அண்டம்	அண்டத்தில்
		ஊடுருவ	உள்ளே தைக்கும்படி
அவையுள்	அந்தஸபையில்	பெரும் திசை	பெரிய திக்குக்களும்
ஆசநத்தை	பொய்யாஸநத்தை	அடங்கிட	(தன்னிலே) அடங்கும்படியாக
அஞ்சிடாதே	அஞ்சாமல்		
இட	இடும்போது	நிமிர்ந்தோன்	வளர்ந்தவனான க்ருஷ்ணன்,
அதற்கு	அதற்காகவே		

அநு.—ஏழாம்பாட்டு. (வானுளாரித்யாதி) ஆஸுரப்ரக்ருதிகளான ராஜலோகத்தை வென்றபடி அநுஸந்தித்தார்கீழ்; இவ்வளவேயோ? கைவிஞ்சி பெருமிடுக்கனாய், தலைபத்துப் படைத்தவனையும்வென்று லோகரக்ஷணம் பண்ணினானென்று ஏத்துகிறாரென்று ஸங்கதி.

வானுளாரையென்னாதே, "அவரை" என்று விசேஷிக்கையாலே பலித்தையருளுகிறார் (குவாலாகவைத்த) என்று; திக்பாலகதயாப்ரமாணப்ரஸித்தரென்று கருத்து. " பானு " என்று - பாநுவென்றாய், அதினர்த்தம் (ஆதித்யன்) என்று. ... ... (எ)

வரையின்	ஸஹ்யபர்வதத்திலிருக்கிற	உதிர்	உதிர்த்தாநின்றுள்ள
மா	ஶ்ரேஷ்ட்டங்களான	முத்தும்	முத்துக்களையும்,
மணியும்	ரத்நங்களையும்,	திரை	அலைகளானவை
மரதகத்திரளும்	மரகதக் கூட்டங்களையும்,	கொணர்ந்து	கொண்டுவந்து
வயிரமும்	வயிரங்களையும்,	உந்தி	தள்ளி
வெதிர்	மூங்கில்கள்	வயல்தொறும்	கழனிகள்தோறும்
		குவிக்கும்	குவிக்கும்படியான
		திருக்கண்ணங்குடியுள்நின்றானே.	

வ்யா.—எட்டாம்பாட்டு. (அரவுநீள் கொடியோன்) ஸர்ப்பத்வஜனென்னக்கடவதிறே துர்யோதநனை. அவன்றன் ஓலக்கத்தினுள்ளே ஆஸநத்தை "ஜகத்துக்கு வேர்ப்பற்றானவனை அழிக்கப்புகாநின்றோம்" என்று கூசாதேயிட, அதுவே ஹேதுவாகப் பெரியவடிவானது அண்டாவகாசத்தை ஊடுருவ திக்குக்கள் தன்பக்கலிலே அடங்கும்படியாக வளர்ந்தவன். (வரையித்யாதி) ஸஹ்யபர்வதத்திலிருக்கிற ரத்நங்கள், மரதகத்திரள், வயிரமென்கிற ரத்நவிசேஷங்கள், மூங்கிலுதிர்த்த முத்துக்கள், இவற்றை திரைகளானவை தன்னிலடங்காமையாலே கொடுவந்துதள்ளி வயல்களிலே குவியாநிற்கும்.

மூ.—

பன்னியபாரம் பார்மகட்கொழியப் பாரதமாபெரும்போரில்
மன்னர்கள்மடிய மணிநெடுந்திண்டேர் மைத்துனர்க்குய்த்தமாமாயன்
துன்னுமாதவியும் சுரபுன்னைப்பொழிலும்சூழ்ந்தெழு செண்பகமலர்வாய்
தென்னவென்றளிகள் முரன்றிசைபாடும் திருக்கண்ணங்குடியுள்நின்றானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பன்னிய	(பொறுக்கமாட்டாதென்று)சொல்லப்பட்ட	ஒழிய	போம்படி
பாரம்	பூபா(ர)ரமானது	பாரதமாபெரும்போரில்	மஹாபாரதயுத்தத்திலே
பார்மகட்கு	ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு	மன்னர்கள்	ராஜாக்கள்
		மடிய	முடியும்படியாக

அநு.—எட்டாம்பாட்டு. (அரவித்யாதி) வானுளாரைநலிந்தவன்றன்னை வென்றபடி சொன்னார்கீழ். இதிலும் ஆஶ்சர்யாவஹமான ஸர்வேஶ்வரனை தன்னையும் வஞ்சிக்கத்தேடின துஸ்ஸபாமத்யத்திலே அவ்வஞ்சநத்திலகப்படாதே வளர்ந்தக்ருஷ்ணைபதாநத்தை ஸ்துதிக்கிறாரென்று ஸங்கதி.

"அவை" என்றதினர்த்தம் -(ஓலக்கம்) என்றது. ... ... (௮)

மணி	மணிமயமாய்	சூழ்ந்து	சூழப்பட்டதாய்,
நெடும்	நீண்டதாய்	எழு	வ்ருத்தியை யடையா நின்ற
திண்	த்ருடமான	செண்பகமலர்	செண்பகபுஷ்பத்திலே
தேர்	தேரை	வாய்	
மைத்துனர்க்கு	அர்ஜுநனுக்காக	தென்னவென்	தென்னவென்று ஸ்வ
உய்த்த	நடத்தினவனும்	று	ரத்தோடே
மாமாயன்	ஆஶ்சர்யசேஷ்டித முடைய எம்பெருமான்	அளிகள்	வண்டுகள்
துன்னு	நெருங்கின	முரன்று	வ்யக்தமாய்
மாதவியும்	மாதவியாலும்,	இசைபாடும்	காநம்பண்ணுகின்ற
சுரபுன்னை	ஸுரபுன்னையினுடைய	திருக்கண்ணங்குடியுள் நின்றானே.	
பொழிலும்	சோலைகளாலும்		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (பன்னியவித்யாதி) எல்லாம்பொறுக்கத்தக்க பூமிதானே "என்னால் பொறுக்கப்போகாது" என்று கூப்பிடும்படி விஞ்சினபா(ர)ரமானது ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு வாராதபடி மஹாபாரதயுத்தத்திலே ராஜாக்களானவர்கள் முடியும்படியாக அர்ஜுநன்முன்னே நின்று தேரை நடத்தினவன். (மாமாயன்) ஆஶ்சர்யகுண சேஷ்டிதங்களையுடையவன்; நெருங்கினமாதவியும், சுரபுன்னைப்பொழிலும், சுற்றிலேஓங்கின செண்பகங்களையு முடைத்தாய், அவற்றிலே படிந்தவண்டுகளானவை முரன்று இசைபாடா நின்றுள்ள திருக்கண்ணங்குடியுள் நின்றானே. (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (பன்னியவித்யாதி) தூதுபோகையிலுண்டான ஆஶ்சர்யத்தை யருளிச் செய்தார்கீழ்; அதுக்கும் இசையாத மூர்க்கராகையாலே அவர்களைத் தேர்க்காலாலே அழித்த வாஶ்சர்யத்தை யநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"பன்னிய" என்றது - சொல்லப்பட்ட என்றாய், தாத்பர்யம் (எல்லாமித்யாதி). செண்பகங்களில் வண்டுகள்படிந்தால் முடியுமென்று கவிஸமய ஸித்தமேயாகிலும், இங்குதிவ்யதேசத்திலிருக்கையாலேப்ராதிகூல்யமின்றிக்கே அநுகூலித்தமையுண்டாகையாலே அருளுகிறாரென்று திருவுள்ளம். (௯)

மூ.— [அ

கலையுலாவல்குல்காரிகை திறத்துக்கடல் பெரும்படையொடும்சென்
சிலையினாலிலங்கை தீயெழச்செற்ற திருக்கண்ணங்குடியுள்நின்றானை
மலைகுலாமாடமங்கையர் தலைவன் மானவேல் கலியன்வாயொலிகள்
உலவுசொல்மாலை யொன்பதோடொன்றும் வல்லவர்க்கில்லை நல்குரவே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
கலை	பரியட்டமானது
உலா	நடையாடுகிற
அல்குல்	நிதம்ப ப்ரதேசத்தையுடைய
காரிகைதிறத்து	அழகிய பிராட்டி நிமித்தமாக
கடல்	ஸமுத்ரத்திற் காட்டில்
பெரும்	பெரிதான
படையொடும்	ஸேநையோடு
சென்று	போய்
சிலையினால்	பாணத்தால்
இலங்கை	லங்கையை [யாக
தீஎழ	நெருப்புக்கிளரும்படி
செற்ற	அழித்த
திருக்கண்ணங்குடியுள்நின்றானை	திருக்கண்ணங்குடி என்னும் திவ்யதேசத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஷயமாய்,
மலைகுலாமாடம்	மலைபோன்ற மாடங்களையுடைய
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்
தலைவன்	ப்ரதாநராய், [க்கு
மானவேல்	அபிமாநஜநகமானவேலையுடைய
கலியன்	ஆழ்வார்
வாயொலிகள்	ஒலிகளையுடைத்தாகவருளிச்செய்தவையாய்
உலவு	ஸலக்ஷணங்களான,
சொல்மாலை	சப்தஸந்தர்பமான பாசுரங்களுடைய
ஒன்பதோடொன்றும்	இப்பத்தையும்
வல்லவர்க்கு	அப்ய (ஸ்) ஸிக்கவல்லவர்களுக்கு [து
நல்குரவு	பகவத்தாரித்ர்யமான
இல்லை	கிடையாது (௧௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (கலையித்யாதி) பிராட்டியுடைய பரியட்டப்பண்பிலே தோற்றுப் பெரியபடைவெள்ளத்தோடே முதலிகளோடேசென்று ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கழியாத ஊரை வில்லாலே அக்நிகிளரும்படியாகச்செற்ற திருக்கண்ணங்குடியுள்நின்றானை. மலைபோலேயிருந்துள்ள மாடங்களையுடைத்தான திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரானவர், பிடித்தார்க்குத் தம்அபிமாநத்தைப்பிறப்பிப்பதானவேலையுடைய ஆழ்வார் ஒலியையுடைத்தாக வருளிச்

அரு.—பத்தாம்பாட்டு. (கலையித்யாதி) (பண்பிலே) அழகிலே. கடலில் காட்டில் பெரியபடையென்று திருவுள்ளம்பற்றி (பெரியவித்யாதி). "படையோடும்" என்ற ச (ஸ) காரார்த்தம் (முதலிகள்) என்றது. உலாவுகை -

செய்தவையாய், (உலவுசொல்மாலை) லக்ஷணங்களில்குறையற்றிருந்துள்ள இப்பத்தையும் அப்யஸிக்கவல்லார்க்கு பக(ஓ)வத்தாரித்ரயமில்லையென்கிறார். .... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
ஒன்பதாம்பத்து முதல்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்து இரண்டாந்திருமொழி
பொன்னிவர் ப்ரவேசம்.

வ்யா.—"மன்னர்கள்மடிய மணிநெடுந்திண்டேர் மைத்துனர்க்குய்த்த மாமாயன்" என்று அவனுடைய ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை யருளிச்செய்தார் கீழ்த்திருமொழியில்; இங்கே அவனோடே நினைத்த பரிமாற்றமெல்லாம் பரிமாறலாமென்று திருநாகையிலே போய்ப்புக்கார்; அங்குநிற்கிறவனுடைய பருவத்தையும் மேன்மையையும் வடிவழகையும் ஒப்பனையையும் கண்டார். அவன்பக்கலிலே கிட்டி எல்லாவடிமையும்செய்ய வேணுமென்னும்படியானஅபேக்ஷை பிறந்து, அபேக்ஷைக்கநுரூபமாக (க) "[illegible] - க்ரியதாமிதிமாம் வத" என்றொருவார்த்தை அருளிச்செய்யக் கண்டிலர். விஷயம் ஸந்நிஹிதமாயிருக்க நினைத்தபரிமாற்றம் பெறாமையாலே அவஸந்நராய், அவ்வழகுதான் உருவு வெளிப்பாடாகநலிய, அத்தாலே நலிவுபட்டு கலங்தவள் பேரநின்றவநந்தரம் "அவனழகு மறக்கவொண்ணாதபடி உருவு வெளிப்பாட்டாலே நலிய நோவுபடாநின்றேன்காண்" என்று தோழிக்குச் சொல்லுகிறளொரு பிராட்டிபாசுரத்தாலே தாம் மநோரதித்த கைங்கர்யம் பெறாதேயிருந்து நோவுபடுகிறபடியைச் சொல்லுகிறாளாயிருக்கிறது. .... *

நாட்டில் நடையாடுகையாய், அத்தால்பலிதம்(லக்ஷணங்களிலித்யாதி)."நல்குரவு" என்றதினர்த்தம் (பகவத்தாரித்ர்யம்) என்றது. ... ... (கo)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு.—பொன்னிவர் மேனியின் ப்ரவேசம். (இங்கே) இவ்விபூதியிலே.

(க) ரா-ஆ-கரு-எ.

மூ.—

பொன்னிவர்மேனி மரதகத்தின்பொங்கிளம் சோதியகலத்தாரம்
மின்னிவர்வாயில்நல்வேதமோதும் வேதியர் வானவராவர்தோழீ
என்னையும்நோக்கியென்னல்குலும்நோக்கிஏந்திளங்கொங்கையும்நோக்குகின்
அன்னையென்நோக்குமென் றஞ்சுகின்றேனச்சோவொருவரழகியவா. [றார்

பதம்.	உரை.	பதம்.	உரை.
இவர்	இந்த எம்பெருமானுடைய		(இவர்)
மேனி	திருமேனியானது	என்னையும் நோக்கி	என்னையும் குளிரப்பார்த்து
பொன்	பொன்போலிராநின்றது	என்	என்னுடைய
மரதகத்தின்	மரகதமணியினுடைய	அல்குலும்	நிதம்பப்ரதேசத்தையும்
பொங்கு	பரவாநின்ற	நோக்கி	பார்த்து
இளம்சோதி	இளகியதேஜஸ்ஸையுடைய	ஏந்து	உந்நதமாய்
அகலத்து	திருமார்விலிருக்கிற	இளம்	இளமையான
ஆரம்	ஹாரமானது	கொங்கையும்	ஸ்தநங்களையும்
மின்	மின்போலே இராநின்றது;	நோக்குகின்றார்	கடாக்ஷியா நின்றார்.
தொழீ	ஸகியே!		(இது விஷயத்தில்)
இவர்	இவர்,	அன்னை	மாதாவானவள்
வாயில்	வாயில்	என்நோக்கும்	என்னபார்க்கிறாளோ
நல்வேதம்	ஸாமவேதத்தை	என்று	என்று
ஓதும்	உச்சரிக்கிற	அஞ்சுகின்றேன்	பயப்படுகிறேன்;
வேதியர்	ப்ராஹ்மணரோ?	ஒருவர்	இவர் ஒருவருடைய
வானவர்ஆவர்	தேவராயிருப்பாரோ?	அழகியவா	அழகுஇருந்தபடி(காண்)
		அச்சோ	ஆஶ்சர்யம். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (பொன்னித்யாதி) பொன்னிவரென்றுநிர்வஹிப்பர் பிள்ளையமுதனார், (௧) "எண்ணும், பொன்னுருவாய்" என்னுமாபோலே ஸ்வரூபபரமாக்கி. அன்றிக்கே (பொன்னிவர்மேனி) இவருடைய வடிவைப்பார்த்தவாறே (௨) "சுட்டுரைத்தநன்பொன்னுன் திருமேனியொளியொவ்வாது" என்கிறபடியே நன்றான பொன்னென்னலாயிரா நின்றது. அத்தைநீக்கி உள்ளேபார்த்த

அரு.—முதற்பாட்டு. மேலுக்கவதாரிகை (அத்தையித்யாதி). (அத்தை) ஆபரணசோபை (ஙூ) யாலுண்டான ஸமுதாய சோபையை. "நல்" என்று

(௧) திருநெ-௧. (௨) தி-வாய்-௩-௧-௨.

வாறே தோற்றுகிறவடிவிருக்கிறபடி. (மரதகமித்யாதி) மரதகத்தினுடைய விஸ்த்ருதமாய் கண்ணாலே முகக்கலாம்படியான புகரையுடைத்தான திருமார்விலேசாத்தின ஆரம் மின்போலேயிராநின்றது. (இவர்வாயில் நல்வேதமோதும் வேதியர்) இவர்வாயிலுச்சரிக்கிறதும் ஸாமவேதமாயிராநின்றது. (வானவர்)(க)"రాజర్షిదేవప్రతిమౌ-ராஜர்ஷிதேவப்ரதிமௌ" என்னுமாபோலே வடிவழகைப் பார்த்தவாறே ராஜாக்களோடொக்கச் சொல்லலாயிராநின்றார். ஸமாசாரத்தைப் பார்த்தவாறே ப்ராஹ்மணரோடொக்கச் சொல்லலாயிராநின்றார். மேன்மையைப் பார்த்தவாறே தேவர்களோடொக்கச் சொல்லலாயிராநின்றார். விஷயம் குறைவற்றிருந்தது. நீ அப்போது நிற்கப்பெறாததுகாண் குறை.

இப்படி விலக்ஷணமாயிருப்பானொருவன் உன்னோடேவந்து கலந்தானாகில் பிறந்தபடிசொல்லிக்காணாய்; அவன்உன்பக்கல்செய்ததென்னென்ன; நீசெய்ததென்னென்ன; (என்னையுமித்யாதி) மர்மங்களிலே கடாக்ஷியாநின்றார். பார்த்தபார்வை ஒருகால் மாறவைக்கிறிலர். நீ பின்னைச்செய்ததென்னென்ன; (அன்னையென்நோக்குமென்றஞ்சுகின்றேன்) இப்பார்வைக்கு நானும் கூட்டென்று பார்க்கிறாளோ வென்றஞ்சுகின்றேன். (அச்சோ வொருவரழகியவா) அவன்பார்வையும் அவள் பார்வையும் ஆனதாகிறது; அப்போதை அழகிருந்தபடிகாண். .... (க)

விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (இவரித்யாதி). இவ்விபூதியிலே சேதநருடைய கிஞ்சித்காரத்தையும் பாரதந்த்ர்யத்தையும் ததநுகுணமான பக்திவிசேஷங்களையுமே பார்த்திருக்குமவனன்றிக்கே யிருக்கச்செய்தேயும், ஸம்பந்தஜ்ஞாநத்திலுறைப்பில்லாமையாலே அவற்றைக் காக்கமாட்டாதே உபாயாத்ய(ధ్య)வஸாயத்துக்கு அஞ்சிச் செய்ததெல்லாம் ஸ்வரூபவிருத்தமாய் விழுமோவென்னும் பீ(భీ)தியால் இருந்துவிட்டும், அவன் ஸௌந்தர்யத்திலே ஈடுபடும்படியை ஸ்வாபதேசமாகத் திருவுள்ளம்பற்றி அந்யாபதேசத்திலே "தோழீ" என்றுஸம்போதிக்கைக்குக்கருத்து (விஷயமித்யாதி).

நோக்குகின்றாரென்று வர்த்தமாநார்த்தம் (பார்த்தவித்யாதி). "நானும் கூட்டு" என்றத்தால்-என்னிசைவும் ஸாதநமென்று சொல்லுவளோ என்றதாயிற்று. (ஆனதாகிறது) என்றது -இவ்விரண்டுக்குள்ளே எது கார்யகரமாகிறதோ? அது ஆகிறதென்று தோழிக்கு ஸங்கேதமாகச் சொன்னபடி. ... (க)

(க)

மூ.—

தோடவிழ்நீலமணம் கொடுக்கும்சூழ் புனல்சூழ்குடந்தைக்கிடந்த
சேடர்கொலென்று தெரிக்கமாட்டேன் செஞ்சுடராழியும்சங்குமேந்
பாடகமெல்லடியார் வணங்கப்பன்மணி முத்தொடிலங்குசோதி [தி
ஆடகம்பூண்டொரு நான்குதோளுமச்சோ வொருவரழகியவா.

பதம்.	உரை.
தோடு	(இவர்) இதழ்கள்
அவிழ்	மலராநின்ற
நீலம்	நீலமானது
மணம்	பரிமளத்தை [ய்
கொடுக்கும்	புறப்படவிடாநிற்பதா
சூழ்	பரவியிருக்கிற
புனல்	ஜலத்தாலே
சூழ்	சூழப்பட்டதுமான
குடந்தை	திருக்குடந்தையிலே
கிடந்த	கண்வளர்ந்தருளுகிற
சேடர்கொல்	யுவாக்கள்
என்று	என்று
தெரிக்கமாட்டேன்	தெரிந்துகொள்ளமாட்டுகிறிலேன் (இவர்)
செம்	சிவந்த
சுடர்	தேஜஸ்ஸை யுடைய
ஆழியும்	திருவாழியையும்
சங்கும்	பாஞ்சஜந்யத்தையும்

பதம்.	உரை.
ஏந்தி	தரித்துக்கொண்டு
பாடகம்	பாடகமுடையதாய்
மெல்லடியார்	ஸுகுமாரமான அடிகளையுடையவர்கள்
வணங்க	திருவடிகளில் விழும்படியாக [டும்
பன்மணி	பலவித ரத்நங்களோ
முத்தொடு	முத்துக்களோடும்
இலங்கு	ப்ரகாசியாநின்ற
சோதி	புகரையுடைய
ஆடகம்	பொன்னை திருவாபரணங்களை
பூண்டு	தரித்துக்கொண்டும்
ஒரு	அத்விதீயமான
நான்குதோளும்	நாலுதிருத்தோள்களையுமுடையராயிராநின்றார்.

அச்சோ ஒருவர் அழகியவா.

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தோடவிழித்யாதி) தோடலரா நின்றுள்ள நீலமானது பரிமளத்தைப் புறப்படவிடாநிற்பதாய் பரந்தபுனலாலே சூழப்பட்டிருந்துள்ள திருக்குடந்தையிலே கண்

அ.—இரண்டாம்பாட்டு. (தோடித்யாதி) தோழியானவள், "நீகண்ட போதே நீராராயிருந்தீர்; உம்மதெவ்வூர்" என்று கேட்டிலையோவென்ன; அவரையாரென்று நான் கேட்கமாட்டிற்றிலேனாகிலும், அடையாளம் சொல்லுகிறேன்; ஆராவமுதாழ்வார் போலேயிருந்தது; அதுக்கடையாளமென்னென்ன; திருவாழி திருச்சங்குகளுண்டென்கிறாளென்று ஸங்கதி.

வளர்ந்தருளின யுவாக்களென்னலா யிராநின்றார். (செஞ்சுடராழி யும் சங்குமேந்தி) ஒப்பித்துக்கொண்டிராநின்றார். திருவாழியையும் பாஞ்சஜந்யத்தையும் கையிலேயுடையராயிராநின்றார்.

(பாடகமெல்லடியார்வணங்க) யுவாக்கள் தங்களொப்பனைகண்டு காலிலே விழும்படியிருக்குமவர்கள் காலிலேவிழும்படி யிராநின்றார். (பன்மணியித்யாதி) பலரத்நங்கள் முத்துக்கள்இவற்றோடேகூட மிக்கபுகரையுடைத்தான ஆபரணங்களாலே ஒப்பித்துமிராநின்றார். ஒப்பனைதான் வேண்டாதபடியா யிராநின்றது திருத்தோள்களைக் கண்டவாறே. (அச்சோவொருவரழகியவா) இவ்வழகு நம்மால் பேசப்போகாது. விஸ்மயப்பட்டு விடுமித்தனை. .... (உ)

மூ.—

வேயிருஞ்சோலை விலங்கல்சூழ்ந்த மெய்யமணாளரிவ்வையமெல்லாம்
தாயினநாயகராவர் தோழீ தாமரைக்கண்களிருந்தவாறு
சேயிருங்குன்றம்திகழ்ந்தவொப்பச் செவ்வியவாகி மலர்ந்தசோதி
ஆயிரந்தோளொடிலங்கு பூணு மச்சோவொருவரழகியவா (ந)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேய்	மூங்கிலினுடைய	தாமரைக்கண் கள்	தாமரைபோன்ற கண் கள்
இரும்	விஸ்த்ருதமான	இருந்தவாறு	இருந்தபடி (என்);
சோலை	சோலையையுடைத் [தான	சேய்	உயர்ந்ததுகளாய்
விலங்கல்	மலைகளாலே	இரும்	பரந்திருப்பதான
சூழ்ந்த	சூழப்பட்ட	குன்றம்	மலைகள்
மெய்யம்	திருமெய்யத்திற்கு	திகழ்ந்தவொ ப்ப	விளங்கினாற்போலே
மணாளர்	நிர்வாஹகராய்	செவ்வியவாகி	செவ்வையை யுடைத் [தாய்
இவ்வைய மெல்லாம்	இந்தபூமிப் பரப்படங் கலும்	மலர்ந்த	பரவின
தாயின	அளந்துகொண்ட	சோதி	புகரையுடைத்தான
நாயகராவர்	ஸ்வாமியாயிராநின்றார்;		
தோழீ	ஸகியே		

(தோடலராநின்றுள்ள) தோடு - உயர்த்தியும், கிளர்த்தியும், இளமையு மாய், இங்கு இளமைசொல்லுகிற தென்றருளுகிறார் (யுவாக்கள்) என்று.

"பாடகமெல்லடியார்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (யுவாக்க ளித்யாதி). "ஆடகம்" என்றது - ஹாடகமென்றாய், பொன்னுனவாபரணங் களைச் சொல்லிற்றாக வருளுகிறார் (பலவித்யாதி). ... ... (உ)

ஆயிரந்தோ ளொடு	ஆயிரம் திருத்தோள்க ளோடு	பூணும் தோள்வளையும் (உடையராய் இரா நின்றார்) ;
இலங்கு	ப்ரகாசியாநின்ற	அச்சோ ஒருவர் அழகியவா.(௩)

வ்யா.—மூன்றாம்பாட்டு. (வேயித்யாதி) மூங்கிலினுடைய பரந்தசோலையை யுடைத்தான மலைகளாலே சூழப்பட்ட திருமெய்யத்திலே வந்து சாய்ந்தருளின நிர்வாஹகரானவர். (இவ்வையமித்யாதி) பூமிப்பரப்பையடைய அநாயாஸேந அளந்துகொண்ட ஸ்வாமிகளென்னலாயிரா நின்றார் நீர்மைபார்த்தவாறே. (தாமரைக்கண்களிருந்தவாறு) புண்டரீகாக்ஷனாயிரா நின்றாரென்று சொல்லலாயிரா நின்றார்.

(வேயித்யாதி) ஓங்கியிருப்பதாய் பரந்திருப்பதான மலை விளங்கினாற்போலே செவ்வையையுடைத்தாய் மிக்கபுகரை யுடைத்தான ஆயிரம் தோளையுமுடையராய், அத்தோள்கள்தோறும் தோள்வந்தியை யுடையராயிராநின்றார். கீழேநான்கு தோளுமென்னச் செய்தே ஆயிரந்தோளென்கிறது-ஆயிரம்தோளானால் கண்டநுபவிக்கும் கரணங்கள் அநேகம் கொண்டநுபவிக்க வேண்டும்படி யிராநின்றாரென்கை. (அச்சோவொருவரழகியவா) ஓரொப்பனைவேணுமோ? அவ்வடிவழகுதானே அமையாதோ? .... (௩)

மூ.—

வம்பவிழும்துழாய்மாலைதோள்மேல் கையனவாழியும் சங்குமேந்தி
நம்பர்நம்மில்லம் புகுந்துநின்றார் நாகரிகர்பெரிதுமிளையர்
செம்பவளமிவர்வாயின்வண்ணம் தேவரிவரதுருவம்சொல்லில்
அம்பவளத்திரளேயுமொப்ப ரச்சோ வொருவரழகியவா. (௪)

அரு.—மூன்றாம்பாட்டு. (வேயித்யாதி) நீரே அதுகண்டபோதே ஒருவரென்றறுதியிட வேண்டாவோ என்ன; ஆராவமுதாழ்வாரைப்போலே இரா நின்றாரென்கிறாள். ''மெய்யாகச் சொல்லாய்'' என்னவே மெய்யமணாளரை நினைத்து அவரே இவளுக்காக வேணுமென்று நிர்ணயித்தவளாகச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

நான் ''மெய்யாகச்சொல்லாய்'' என்ன; நீயும் மெய்யமணாளரென்கிறாய்; இதுவென்; நீ முகம் பார்த்திலையோவென்ன; நாணம்ஒட்டாமையாலே கடைக்கணித்துப் பார்த்தால் தாமரைக்கண்களாயிருந்த வர்ணத்தைக் கொண்டு அவராக வேணுமென்கிறேனென்னுமது தோன்றவருளுகிறார் (புண்டரீகேத்யாதி).

(தோள்வந்தி) தோள்வளைகள். (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வம்பு	பரிமளத்தை	இவர்	இவருடைய
அவிழும்	புறப்படவிடாநின்ற	வாயின்	திருவதரத்தினுடைய
துழாய்மாலை	திருத்துழாய்மாலையை	வண்ணம்	வர்ணமானது
தோள்மேல்	திருத்தோள்களில் (தரியாநின்றார்);	செம்பவளம்	சிவந்த பவளம்போலிரா நின்றது;
கையன	திருக்கையில்	தேவர்	ஸகலருக்கும் ஸ்வாமியானவர்;
ஆழியும்	திருவாழியையும்		
சங்கும்	பாஞ்சஜந்யத்தையும்	இவரது	இவருடைய
ஏந்தி	தரித்துக்கொண்டிரா நின்றார்;	உருவம்	திருமேனியின் ஸ்வரூபத்தை
நம்பர்	விஸ்வஸநீயராய்	சொல்லில்	சொல்லுமளவில்
நம்மில்லம்	நம்முடைய இருப்பிடத்தில்	அம்	அழகிதான
புகுந்து	ப்ரவேசித்து	பவளத்திரளேயும்	பவழக்கூட்டத்தோடு
நின்றார்	நிற்கின்றார்;	ஒப்பர்	ஸாம்யமுடையராயிரா நின்றார்
நாகரிகர்	நாகரிகரான ரஸிகராகவும்,		
பெரிதும்	மிகவும்		
இளையர்	இளம்பருவமுடையராயிரா நின்றார்;		அச்சோ ஒருவர் அழகியவா. (ச)

வ்யா.—நாலாம்பாட்டு. (வம்பவிழுமித்யாதி) திருமேனியில்ஸ்பர்ஶத்தாலே பரிமளத்தைப் புறப்படவிடா நின்றுள்ள திருத்துழாய் மாலையைத் தோளிலே யுடையராயிரா நின்றார்; ஐஶ்வர்யஸூசகமான மாலையிருந்தபடி. (கையனவாழியும் சங்குமேந்தி) ஈஶ்வரத்வஸூசகமான திவ்யாயுதங்களைத் தரித்துக் கொண்டிரா நின்றார். (நம்பர்)ஒப்பனையழகைக்கண்டவாறே நமக்குப்பற்றப்படுமவரென்று தோற்றும்படி யிரா நின்றார். விஶ்வஸநீயரென்றபடி. (நம்மில்லம் புகுந்துநின்றார்) "நற்சரக்கன்றோ" என்று தேட்டமாயிருக்கிறதில்லை. (நாகரிகர்) நாகரிகராய் பரமரஸிகராயிரா நின்றார்.

அரு.—நாலாம்பாட்டு. (வம்பித்யாதி) தோழியும் தானுமாய் திருவாழியைப்பேச, அவளும் பா(ஞ)வநாப்ரகர்ஷத்தாலே முன்னிலையாய் தோற்றக் கண்டதெல்லாம் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

கேவலம் மாலையென்னாதே "துழாய்" என்றதுக்குக் கருத்து (ஐஶ்வர்யேத்யாதி). எல்லாம் புகுருகைக்கு ஹேது-நாகரிகத்வமென்று விவக்ஷித்துத் தாத்பர்யம் (பரமேத்யாதி).

(பெரிதுமிளேயர்) நம்பருவத்தில் விஞ்சியிருப்பதுவுமில்லே. இவர்திருவதரமிருக்கும்படியைப் பார்த்தவாறே சிவந்தபவளமென்னலாம்படியிருந்தது. (தேவரிவர்) இதரவிஸஜாதீயருமாயிருந்தார்; மநிச்சரோடு கூட்டலாயிருக்கிறிலர். (உருவம்சொல்லில்) இவர் வடிவிருந்தபடியைச் சொல்லில் எங்குமொக்கஸ்ப்ருஹணீயமாயிரா நின்றது. (அச்சோவொருவரழகியவா) உபமாநமில்லாத விஷயத்தில் உபமாநம்சொல்லவிருப்போமோ? .... (ச)

மூ.—

கோழியும்கூடலும் கோயில்கொண்ட கோவலரே யொப்பர்குன்றமன்ன
பாழியந்தோளுமோர் நான்குடையர் பண்டிவர்தம்மையும் கண்டறியோம்
வாழியரோவிவர் வண்ணமெண்ணில் மாகடல்போன்றுளர் கையில்வெய்ய
ஆழியொன்றேந்தியோர் சங்குபற்றி யச்சோ வொருவரழகியவா. (ரு)

பதம்.	உரை.
கோழியும்	உறையூரையும்
கூடலும்	மதுரையையும்
கோயில்கொண்ட	வாஸஸ்தாநமாகவுடைய
கோவலரே ஒப்பர்	இடையர் (ராஜாக்கள்) என்றுசொல்லலாயிராநின்றார்;
குன்றமன்ன	பர்வதத்தோடொத்த
பாழி	வலிமையையுடைய
அம்	அழகிதாய்
ஓர்	அத்விதீயமான
நான்குதோளும்	நான்கு திருத்தோள்களேயும்
உடையர்	உடையராயிருந்தார்;
பண்டு	இதுக்குமுன்பு
இவர்தம்மையும்	இவரை
கண்டறியோம்	நாம்பார்த்ததில்லே;

பதம்.	உரை.
வாழியரோ	பல்லாண்டுசொல்லப்படுமவரோ?
இவர்வண்ணம்	இவர்வடிவின்படியை
எண்ணில்	சொல்லப்புக்கால்
மா	பெரிதான
கடல்போன்றுளர்	ஸமுத்ரம்போலேஇராநின்றார்;
கையில்	ஒரு திருக்கையிலே
வெய்ய	ஜ்வலியாநின்ற
ஆழிஒன்று	ஒருதிருவாழியை
ஏந்தி	தரித்துக்கொண்டு,
ஓர்	(ஒருதிருக்கையில்)அத்வீதீயமான
சங்கு	பாஞ்சஜந்யத்தையும்
பற்றி	தரித்துக் கொண்டிராநின்றார்;

அச்சோஒருவர் அழகியவா. (ரு)

---

* மூலேயோமுழுமுற்றும் போந்திலாதாப்போலே, மோவாயுமெழுந்ததில்லேயென்று விவக்ஷித்துக்கருத்து (நம்மில்லமித்யாதி). (இருப்போம்) என்று வநந்தரம் "இதுவென்ன ஆஸ்சர்யம்" என்று கூட்டுவது. ... ... (ச)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (கோழியித்யாதி) உறையூரையும் மதுரையையும் வாஸஸ்தாநமாகவுடைய கோவலரென்று சொல்லவுமாயிராநின்றார். "கோழி" என்கிறது-உறையூரை. "கூடல்" என்கிறது-மதுரையை. இவற்றை வாஸஸ்தாநமாகவுடைய ராஜாக்களென்று சொல்லவுமாயிராநின்று ரென்னவுமாம். முற்பட்ட யோஜநைக்கு அவ்விடங்களில் உகந்தருளி நிற்கிறவர்களைச் சொல் லிற்றுகிறது. (குன்றமித்யாதி) மலையோடொத்த திண்ணியதாயிருக்கிற திருத்தோள்கள் நாலையுமுடையராயிருந்தார். (பண்டிவர் தம்மையும் கண்டறியோம்) இதுக்குமுன்பு கண்டறியாதாராயிராநின்றார்.

(வாழியரோ) பல்லாண்டு பல்லாண்டென்று சொல்லுவது: இவர்வடிவிருக்கும் படியைச் சொல்லப்புக்கால் கடல்போலே யிராநின்றது. ப்ரதிபக்ஷத்தைக் கனலெழக்காய்கிற திருவாழியை ஒருகையிலே ஏந்தி, (ஓர்சங்குபற்றி) தமக்கடங்காத பாஞ்சஜந்யத்தை மற்றைக்கையிலே யுடையராயிருந்தார். (அச்சோ வொருவரழகியவா) இத்தைச்சொல்லி நம்மால்கரையிலே நிற்குமத்தனையல்லது நம்மால் உள்ளிழிந்து பேசப்போகாது. (௫)

மூ.—

வெஞ்சினவேழவெண்மருப்பொசித்தவேந்தர் கொலேந்திழையார்மனத்தை
தஞ்சுடையாளர் கொல்யானறியேன் தாமரைக்கண்களிருந்தவாறு
கஞ்சனையஞ்சமுன்கால் விசைத்தகாளையராவர் கண்டார்வணங்கும்
அஞ்சநமாமலையேயு மொப்ப ரச்சோ வொருவரழகியவா. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெம்	(இவர்) க்ரூரமான	ஒசித்த	முறித்தவனை
சினம்	கோபத்தையுடைய	வேந்தர்கொல்	ராஜாவோ?
வேழம்	குவலயாபீடத்தினுடைய	ஏந்திழையார்	தரிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய ஸ்திரீகளுடைய
வெண்	வெண்மையான		
மருப்பு	தந்தத்தை		

அரு.—அஞ்சாம்பாட்டு. (கோழியித்யாதி) இவர்நாகரிகரென்னுநின்றாய், இவருடைய நாகரிகத்வம் நீ கண்டபடி யென்னென்றால் சொல்லுகிறளென்று ஸங்கதி.

கோபாலத்வவிவக்ஷயா அருளிச்செய்து, பூ(பூ)பாலத்வ விவக்ஷயாவருளுகிறார் (கோழியித்யாதி). ... ... (௫)

மனத்தை	ஹ்ருதயத்தை
தஞ்சு	ஆதாரமாக
உடையாளர்	உடையவரோ?
கொல்	(என்னும்படியிரா நின்ருர்;)
யான் அறியேன்	நான் அறிகிறிலேன்;
தாமரைக்கண்ங்கள்	தாமரைபோன்றதிருக்கண்கள்
இருந்தவாறு	இருந்தபடி (என்;)
முன்	முன்பு
கஞ்சனை	கம்ஸனை
அஞ்ச	நடுங்கும்படியாக
கால்	திருவடிகளாலே
விசைத்த	உதைத்தவனுன
காளையராவர்	யுவாவாகஇராநின்ருர்;
கண்டார்	கண்டவர்களெல்லாரும்
வணங்கும்	வணங்கும்படியான
அஞ்சநமாமலை	அஞ்சநமலைபோலே
யேயுமொப்பர்	யுமிராநின்ருர்;

அச்சோ ஒருவர் அழகியவா. (௬)

வ்யா.—ஆரும்பாட்டு. (வெஞ்சினமித்யாதி) வெவ்வியசினத்தையுடைத்தாயிருக்கிற குவலயாபீடத்தினுடைய கொம்பை முறித்து, அச்செயலாலே பெண்பிறந்தார்க்கு தநமான நெஞ்சுகளை எழுதிக்கொண்டராஜாக்களென்றுசொல்லலுமாயிராநின்ருர். (ஏந்திழையாரித்யாதி) ஒப்பித்திருக்கிற பெண்களுடைய நெஞ்சைத் தமக்கு அபாஶ்ரயமாக வுடையவர்போலே யிராநின்ருர். (யானறியேன்) என்னலொன்றும் சொல்லலாயிருக்கிறதில்லை, (தாமரைக்கண்களிருந்தவாறு) அதுதன்னை நோக்காலேதெரிவியாநின்ருர்; நானும் என்னுடைமையும் நீ இட்டவழக்கன்றோ வென்ருப்போலே யிராநின்றது, நோக்கைப்பார்த்தவாறே.

அ௫.—ஆரும்பாட்டு. (வெஞ்சினமித்யாதி) கோவலரென்று க்ருஷ்ணன் நீழேப்ரஸ்துதனுனவாறே, அவனுடைய ஆண்பிள்ளைத்தனத்தையும்சொல்லி ஈடுபடுகிருளென்று ஸங்கதி.

(அபாஶ்ரயமாக) என்றது-பெண்களின்நினைவேதனக்கு நிர்வாஹகமென்று அவர்களுக்குத் தன்னை எழுதிக்கொடுத்தவனென்றபடி. "வேந்தர்கொல்" என்றும், "தஞ்சுடையாளர்கொல்" என்றும்சொன்னஸம்ஶயத்துக்குத் தாத்பர்யம்-பெண்களை ஸ்வாதீந மாக்கிக் கொண்டவனே? அன்றிக்கே பெண்களுக்குத் தான் பரதந்த்ரனே? என்று நிஶ்சயிக்கப் போகாமையாலே, அத்தாலே, "யானறியேன்" என்கிருளென்று விவக்ஷித்து அருளுகிருர் (என்னலித்யாதி). இப்படி கோடித்வயத்தைச் சொல்லிஸம்ஶயிக்கைக்கு வ்யாமகதர்மங்களென்னென்ன; நாயநபாஷையும்,பருவத்தில் துடிப்பும்,வடிவுமென்கிருரென்று விவக்ஷித்துத்தாத்பர்யம் (அதுதன்னையித்யாதி வாக்யசதுஷ்டயத்தாலே). ... ... (௬)

(கஞ்சனை) ப்ரபலப்ரதிபந்தகங்களைப்போக்க வல்லரென்று தோற்றும்படியா யிராநின்றார், பருவத்தைப்பார்த்தவாறே. (கண்டாரித்யாதி) ஓர்அபி (ஓ) ஸந்தியின்றிக்கே யிருக்கச்செய்தே (க) "...- அவஶாஃ ப்ரதிபேதிரே" என்கிற படியே கண்டாரைத் தன்வசமாக்கித்தன்காலிலே விழவிட்டுக்கொள்ள அஞ்ஜநகிரி போலேயுமிராநின்றார். (அச்சோவொருவரழகியவா) வாக்குக்குஅவிஷயமான விஷயத்திலே நான் எத்தைச்சொல்லுவது. .... (கூ)

மூ.—

பிணியவிழ்தாமரை மொட்டலர்த்தும் பேரருளாளர் கொல்யானறியேன் [ம்
பணியுமென்னெஞ்சமிதென்கொல் தோழீபண்டிவர்தம்மையும் கண்டறியோ
அணிகெழுதாமரை யன்னகண்ணு மங்கையும் பங்கயமேனிவானத்து
அணிகெழுமாமுகிலேயு மொப்ப ரச்சோ வொருவரழகியவா. (எ)

பதம்.	உரை.
பிணி	முகுளீபாவமாகிற கட்டானது
அவிழ்	அவிழும்படி
தாமரைமொட்டு	தாமரை புஷ்பத்தை
அலர்த்தும்	விகஸிக்கப்பண்ணும் ஸூர்யனைப்போலே
பேரருளாளர் கொல்	பெரியக்ருபையுடையவரோ?
யான்அறியேன்	நான் அறிகிறிலேன்; (இவரை)
என்னெஞ்சம்	என்னுடைய மநஸ்ஸானது
பணியும்	வணங்காநின்றது;
தோழீ	ஸகியே
இதென்கொல்	இதென்னமோ?
பண்டு	இதற்குமுன்பு
இவர்தம்மையும்	இவரை
கண்டறியோம்	நாம்கண்டதில்லை;
கண்ணும்	(இவருடைய) திருக்கண்களும்
அணி	அழகிதாய்
கெழு	நெருங்கின
தாமரையன்ன	தாமரைபோலிராநின்றது;
அம்	அழகிதான
கையும்	திருக்கைகளும்
பங்கயம்	தாமரைபோலிராநின்றது;
மேனி	திருமேனி விஷயத்தில்
வானத்து	ஆகாசத்தில்
அணி	அழகாய்
கெழு	நெருங்கியிராநின்ற
மாமுகிலேயு மொப்பர்	நீலமேகம்போன்றவரா யிராநின்றார்.

அச்சோஒருவர் அழகியவா. (எ)

அநு.—எழாம்பாட்டு. (பிணியித்யாதி) தோழியானவள் நீ இப்படி கண்ணன் கண்ணிலும் சொல்லிலும் ஈடுபடாநின்றாய்; எனக்கு முன்னிலையாக

(க) பார-உத்யோ.

வ்யா.—ஏழாம்பாட்டு. (பிணியித்யாதி) ஆதித்யன தன்னுடைய உஷ்ணகிரணங்களாலே தாமரைகளிலுண்டான பூவை அலர்த்தக்கடவனுயிருக்குமிறே. அங்ஙனன்றிக்கேக்ஷீணபாபரானவர்களுடையஹ்ருதயகமலத்துக்கு விகாஸத்தைப்பண்ணிக்கொடுக்கும்பெரியகருணையை யுடையராயிராநின்ருர். (யானறியேன்) என்னுல்இவர்படி பரிச்சேதிக்கலாயிருக்கிறதில்லை. (பணியுமென்நெஞ்சம்) என் பக்கலொரு நினைவின்றிக்கே யிருக்கச்செய்தே என்நெஞ்சானது வணங்கி நில்லாநின்றது. (இதென்கொல்தோழி) உன்னையறியாமை வருவதொரு நன்மைஇல்லையிறே எனக்கு. நாம் இவரிடையாட்டம் நினைத்தறிவுதோமோ? (பண்டிவரித்யாதி) பழைமையாலே செய்கிறதொன்றும சொல்லவுமாயிருக்கிறதில்லை.

(அணியித்யாதி) திரளச் செறியப்பூத்த தாமரை யென்னலாயிருக்கிறது - திருக்கண்களும் அணைக்கக் கணிசிக்கிறகைகளும். (மேனியித்யாதி) வடிவைப் பார்த்தவாறே மேகசகலங்களன்றிக்கே எல்லா மொன்றாகத்திரண்டு வர்ஷிக்கையிலே ஒருப்பட்ட மேகம்போலே யிராநின்றது. (அச்சோவொருவரழகியவா) விஸஜாதீயத்துக்கு ஸஜாதீயங்களிலே சிலவற்றைச் சொன்னவிடம்; என் சொன்னேமானேம். .... (௭)

அவன்தோற்றிக்காணேன்; உனக்கிது பாவநாப்ரகர்ஷமாகவேணும்; இது உனக்கு வருகைக்குக் காரணமென்; சேர்க்குமவளான எனக்குத் தெரியாதபடி வந்தவழியென்னென்ன; அவர்தம்முடைய பரிபூர்ணக்ருபையாலே என் நெஞ்சை வசீகரித்தாராகவேணும், என்று பேரருளாளரென்றபடியைப்பேசி ஈடுபடுகிறளென்று ஸங்கதி.

“மொட்டலர்த்தும்” என்னவமைந்திருக்க “பிணியவிழ்” என்று விசேஷித்ததுக்கு - வ்யாதிபோனதாமரை; கேவலம் தாமரையன்று என்கிற வழியாலே தாத்பர்யம் (ஆதித்யனித்யாதி வாக்யத்வயத்தாலே). அன்றிக்கே “பிணி” என்று-கட்டாய், அது-அவிழும்படி மொட்டலர்த்தும் ஸூர்யஸத்ருமுனை பேரருளாளனென்று அருளிச்செய்து, அர்த்தாந்தரம் (அங்ஙனன்றிக்கேயித்யாதி). என்னவுமாம்.

“அச்சோ” என்றது-விஷாதத்துக்கு ஸூசகமென்று விவக்ஷித்தருளுகிருர் (விஸஜாதீயத்துக்கித்யாதி). ... ... (௭)

மூ.—

மஞ்சுயர்மாமதி தீண்டநீண்டமாலிருஞ்சோலை மணாளர்வந்தென்
நெஞ்சுள்ளும்கண்ணுள்ளும்நின்றுநீங்கார்நீர்மலையார் கொல்நினைக்கமாட்டேன்
மஞ்சுயர்பொன்மலைமேலெழுந்த மாமுகில்போன்றுளர்வந்துகாணீர்
அஞ்சிறைப்புள்ளுமொன்றேறிவந்தா ரச்சோவொருவரழகியவா.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு	மேகபதத்தளவும்	நினைக்கமாட்டேன்	(இவரை) நான்பரிச்சேதிக்கமாட்டுகிறிலேன்,
உயர்	உயர்ந்திருப்பதாய்,	அம்	அழகான
மாமதி	சந்த்ரன்	சிறை	சிறகுகளையுடைய
தீண்ட	ஸ்பர்சிக்கும்படி	புள்ஒன்று	பெரியதிருவடியின்மேலே
நீண்ட	உந்நதமான	ஏறி	வீற்றிருந்து
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலைமலையில்	வந்தார்	எழுந்தருளுகிற இவர்
மணாளர்	ஸம்போகாநுபவம் பண்ணுமவர்	மஞ்சு	மேகபதத்தளவும்
வந்து	தாமேவந்து	உயர்	உந்நதமான
என்	என்னுடைய	பொன்மலை	பொன்மலையிலே
நெஞ்சுள்ளும்	ஹ்ருதயத்தினுள்ளும்	எழுந்த	கிடந்த
கண்ணுள்ளும்	கண்களிலும்	மாமுகில்போன்றுளர்	பெரியமேகம்போலே இராநின்றார்
நின்று	நியதமாய்நின்று	வந்துகாணீர்	(நீங்களும்) வந்துபாருங்கோள்.
நீங்கார்	க்ஷணமும் பிரிகிறிலர்;		
நீர்மலையார்கொல்	திருநீர்மலையை வாஸமாக வுடையவர்போலே யிராநின்றார்;		

அச்சோ ஒருவர் அழகியவா. (௮)

அ௫.—எட்டாம்பாட்டு. (மஞ்சித்யாதி) தோழியும் தானுமாய் இப்படி பேரருளாளரின்படி சொல்லாநிற்கச்செய்தே, மற்றைத்தோழிமாரும் தாய்மார் அயலகத்தாரெல்லாரும் "இதுவென்னம்புதுமை" என்று விஸ்மயப்பட்டு இவளை நிஷேதிக்க ஒருப்படவே, எம்பெருமானும் திருவடி திருத்தோளிலேறி வருவதாகத்தோற்ற, அத்தைக்கண்டு "இவர் தெற்குத்திருமலையிலும் வந்தாரோ? நீர்மலையிலும் வந்தாரோ" என்று சொல்லாநிற்கச்செய்தே அணித்தாகக்கொண்டு பேரருளாளர்தானென்று, வந்து காணுங்களென்றுஎல்லாரையும் அழைக்கிறாளென்று ஸங்கதி.

வ்யா.— எட்டாம்பாட்டு. (மஞ்சித்யாதி) மேகபதத்தளவும் செல்ல ஓங்கி, சந்த்ரன் வந்து தீண்டும்படியான ஒக்கத்தையுடைத்தான திருமலையை வாஸஸ்த்தாநமாகக்கொண்டு அங்குத்தைக்கு போ(ஸ்ரீ)க்தாவானவர். (வந்தித்யாதி) அங்குத்தைக்குக் கடவராயிருக்கிறவர் தாமே வந்து என்னுடைய ஸர்வ கரணங்களையும் விரும்பி க்ஷணகாலமும் விடுமவரா யிருக்கிறிலர்; திருநீர் மலையை வாஸஸ்த்தாநமாக வுடையவர் போலே யிராநின்றார்; என்றால் பரிச்சேதிக்கலாயிருக்கிறிலர்.

(மஞ்சுயரித்யாதி) மேகபதத்தளவும் செல்ல ஓங்கி யிருப்பதொரு பொன்மலையிலே படிந்ததொரு மேகம்போலேயிராநின்றார். இங்கு பொன்மலையாயிருக்கிறார்தாம் ஆரென்னில்; அஞ்சிறைப் புள்ளுமொன்றேறி வந்தார் வந்து காணீர் - என்னை விலக்கப்பார்க்கிற நீங்களும் வந்து காணுங்கோள், உங்களாலே தான் விடலாமாகில். (அச்சோவொருவரழகியவா) திருவடி திருத்தோளிலேயிருந்தால் இருக்கு மழகுதான் இப்படியேயோ?

மூ.—

எண்டிசையு மெறிநீர்க்கடலு மேழுலகு முடனே விழுங்கி [ன்
மண்டியோராலிலைப்பள்ளிகொள்ளுமாயர்கொல் மாயமறியமாட்டே
கொண்டல்நன்மால்வரையேயுமொப்பர் கொங்கலர்தாமரைக்கண்ணும்வாயும்
அண்டத்தமரர்பணியநின்று ரச்சோவொருவரழகியவா. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எண் திசையும்	எட்டுத் திக்குக்களிலும்	ஓர் ஆலிலை	ஒரு ஆலந்தளிரிலே
எறி	பரவாநின்ற	பள்ளிகொள்ளும்	ஶயநித்துக்கொண்டிருக்கிற
நீர்	ஜலஸம்ருத்தியையுடைத்தான	ஆயர்கொல்	ஆஶ்சர்ய பூதரென்று தோற்றவிராநின்றார்;
கடலும்	ஸமுத்ரங்களையும்	மாயம்	(இவருடைய) மாயை
ஏழுலகும்	ஸப்தலோகங்களையும்	அறியமாட்டேன்	அறிகிறிலேன்; [யை
உடனே	ஒரேகாலத்தில்		
விழுங்கி	விழுங்கி திருவயிற்றிலே வைத்து		
மண்டி	(ஒருவராலும்) எழுப்பவொண்ணாதபடி		

"அச்சோ" என்றது - ஹர்ஷத்திலேயாக்கியருளுகிறார் (திருவடியித்யாதி).

கொண்டல்	மேகத்தோடேயும்	கொங்கலர்	பரிமளப்ரசுரமான
கல்	அழகிய	தாமரை	தாமரைபோலே யிரா நின்றது;
மால்	பெரிதான	அண்டத்தமர	நித்யஸூரிக ளெல்லார் ரும் [நின்றார்;
வரையேயும்	மலேயோடேயும்	பணியநின்றார்	ஆஶ்ரயிக்கும்படியிரா
ஒப்பர்	ஸத்ருஶராயிராநின்றார்;	அச்சோ ஒருவர் அழகியவா.	(க)
கண்ணும்	(இவருடைய) திருக் கண்களும்		
வாயும்	திருவதரமும்		

அவ.—ஒன்பதாம்பாட்டு. (எண்டிசையுமித்யாதி) முகத்திலே விழித்தவாறே ஆபத்ஸகரென்று தோற்றும்படி யிராநின்றார்.

வ்யா.-திக்குக்களெட்டிலும்வந்து அலேயெறியாநின்றுள்ளகடலும், எல்லா லோகங்களேயும் ஒருகாலே திருவயிற்றிலே வைத்து மௌக்த்த்யத்தாலே ஒருவராலெழுப்பவொண்ணாதபடி ஒருபவனை ஆலந்தளிரிலே பள்ளிகொள்ளுகிற ஆஶ்சர்யபூத னென்று தோற்றும்படி யிராநின்றார். கண்டவாறே இவருடைய அக(ஷ்)டித க(ஷ்)டநா ஸாமர்த்தியம் எனக்குத் தோற்றா நின்றது. ஆகிலும் ஆஶ்சர்யங்கள் எனக்குத் தெரிகிறதில்லே.

(கொண்டலித்யாதி) வடிவைப் பார்த்தவாறே மேகம்போலேயும் (க)"நின்ற குன்றத்தினைநோக்கி நெடுமாலேவா" என்கிறபடியே மலேபோலேயும் சொல்லலாயிராநின்றார். (கொங்கலரித்யாதி). பரிமளத்தைப் புறப்பட விடாநின்றுள்ள தாமரைபோலே யிராநின்றது திருக்கண்களும் திருவதரமும். (அண்டத்தமரர் பணிய நின்றார்) மேன்மையைப்பார்த்தவாறே நித்யஸூரிகளும் வந்து ஆஶ்ரயிக்கும்படி யிராநின்றார். (அச்சோவொருவரழகியவா) மேன்மையையுடையார் கிட்டுகிற விஷயமென்று நமக்குக்கைவாங்கலா யிருக்கிறதில்லே வடிவழகைப் பார்த்தவாறே. .... (க)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (எண்டிசையுமித்யாதி) எல்லாருமொரு மிடறாய், இவளை அலேக்கப்பார்த்த ஆபத்திலே திருவடிமேலேறி வந்து தோற்றினவாறே ஆபத்ஸகனென்றுதோற்றி, இது இவனுக்கு ஆபால்யஸித்தமென்று நின்றாளென்னும் ஸங்கதியை ஸ்புரிப்பிக்கிறார் (முகத்திலேயித்யாதி).

"மண்டி" என்றதினர்த்தம் (எழுப்ப வொண்ணாதபடி) என்றது.

(க) தி-வாய்-ச-ச-ச.

மூ.—

அன்னமுங்கேழலும் மீனுமாய வாதியை நாகையழகியாரைக்
கன்னிநன்மாமதிள் மங்கைவேந்தன்காமருசீர்க்கலிகன்றிகுன்று
இன்னிசையால் சொன்ன செஞ்சொல்மாலையேழுமிரண்டுமோரொன்றும்வல்
மன்னவராயுலகாண்டு மீண்டும்வானவராய்மகிழ்வெய்துவரே. [லார்

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
அன்னமும்	ஹம்ஸரூபியாயும்
கேழலும்	வாராஹரூபியாயும்
மீனும்	மத்ஸ்யரூபியுமாய்
ஆய	ஆகாநின்ற
ஆதியை	ஜகத்காரண பூதனை
நாகை	திருநாகையிலே
(ஓதிநாமமித்யாதி) அவன்பண்ணின ப(ஃ)க்திகொண்டு பெறலாமென்றிருந்தோம். அதல்லவிறே ஶாஸ்த்ரங்களில் சொல் லுகிறபடி. இனி ஶாஸ்த்ரோக்தமான பக்த்யாத்யுபாயங்களைக் கண் ணழிவற அநுஷ்ட்டித்து அவனைப் பெறக்கடவோமென்கிருள். அவ னுடைய அங்கீகாரத்தாலே பெறலாமென்னும் விஶ்வாஸம் கொண் டிருந்தோம். அது - கார்யமாகாதபின்பு இனி ஏதேனுமொரு க்ரியாமாத்ரத்தைப்பற்றுமத்தனையிறே. (ஓதிநாமம்) எல்லாம் செய் தாலும் (க) "ஸததம் கீர்தயந்த:- ஸததம் கீர்தயந்த:" என்கிறதுக்கு ஒரு ப(ஃ)லமின்றிக்கே இராதிறே. (குளித்து) அவன் விஷயீ காரத்தாலே பெறுமது தப்பிற்றே. இனி ஸாதநாநுஷ்ட்டாநம் கொண்டே பெறவேண்டியிருந்ததே? அவை அநுஷ்ட்டிக்கும் போது அதிகாரிகளாகவேணுமே. அதுக்கீடாகக்குளிக்கக்கடவோம். உருவியிருந்த நம் தலைகளைக்கொண்டு அவனைப் பணியக்கடவோம். (ஒளிமாமலர்ப்பாதம்) ப்ராப்யமானதுவே - ப்ராபகமென்றிருக்கு மதுதவிர்ந்து, இத்தை நம்தலையிலேஏறிட்டுக்கொள்ளக் கடவோம்; அதுக்கீடாக இரண்டாகாரமுண்டேயாகிலும் போக்யமான ஆகார

அன்புதானுமிவளுக்கு ப்ராப்யருசியில் புகுமென்று அவன் தாராதிராஞே வென்ன வருளுகிறார் (இவளித்யாதி).

"ஒளிமாமலர்ப்பாதநாளும் பணிவோம்" என்றதுக்கு "போக்யதாபுத்தி பண்ணுமல், ப்ராபகத்வபுத்தி பண்ணிப்பணிவோம்" என்று ஸ்வகதஸ்வீகார ரூபப்ரபத்தியும் சொன்னதாக விவக்ஷித்து ஒருயோஜனை அருளிச்செய்து, போக்யதா புத்தியாலே ப்ராப்யமென்று நினைத்து தத்ஸித்த்யர்த்தம் கேவ லம் ஸாதநாந்தரங்களையே பண்ணுவோமென்கிறுளென்று யோஜநாந்தரம் விவக்ஷித்துப் பாட்டுக்குத் தொகுத்தபாவமருளுகிறார் (அவன்பண்ணின வித் யாதி). (அவன்பண்ணின) என்றது - அவன் நமக்குண்டாம்படி பண்ணின ஸாத்யபக்தியென்கை. ஶாஸ்த்ரங்களிலே சொல்லுகிற ஸித்தஸாதநத் தையே பற்றவொண்ணுதேவென்ன (அவனுடைய வித்யாதி). (எல்லாம் செய்தாலும்) அவன் எட்டாதபடித்திலும்.

(க) கீ.௯-௧௪.

மொன்றுமே உள்ளதென்று நினைத்திருக்கக் கடவோம்.

(இனிநாளும்பணிவோம்) தேஹயாத்ரையில் அந்வயிக்குமன்றிறே அவ்வடைவு, தப்பினவன்றைக்கு ப்ரத்யவாயமின்றிக்கே யொழிவது. "கெடுவாய்! அரைக்ஷணம் தாழ்க்குங்காட்டில் குணுதிகவஸ்துவை இங்ஙனே அழிக்கலாமோ?" என்று தோழிசொல்ல. (நமக்கே நலமாதலில்) ஓங்காண்; இதுக்குமுன்படங்க அவ்விஷயத்தை நோக்கியுண்டாயிறே; இனியுள்ள காலமெல்லாம் நமக்கே நன்மைபார்க்கக்கடவோம். (க)"தஸ்மிந் ஸம்ஸ்ருஷ்டே - தத்தஸ்யஸத்ருஸம்பவேத்" என்றிருந்து நாம்ஜீவித்தது அமையும். (ஆதுதாரானெனிலும்)எல்லாம்செய்தாலும்இவனால் (உ)"[illegible]-பக்த்யாத்வநந்யயா ஶக்ய:" என்கிறத்தைத் தவிர்க்க வொண்ணாதே. தன்னையேபற்றிப் பெறவிருப்பார்க்கன்றோதன்னைக்கொடாதொழியலாவது. (அன்றியுமன்பராய்) அதெல்லாம்கிடக்க,நமக்குத்தான் பேற்றுக்கு வழிஇதுகாண். தந்திலனாகில் தவிருகிறான். நம் ஸ்வரூபத்தை அழித்துக்கொடுநின்றால் பின்பு அவன் ஜீவிக்கும்படி காண்கிறோம். இவ்வன்புதனக்கு உபயாகாரத்வமுண்டிறே. அதில் 'இப்போது ப்ரகரணத்துக்குச் சேரும்படியாக ஸாதநத்திலே கொள்ளவமையும். இவள் இப்படி பாரிக்கச்செய்தேயும் பிற்காலித்தாள்போலே காணுமவள். (மாதேபோது) என்கிறாள். (அவன் மன்னுபுல்லாணிக்கே) எல்லாம் செய்தாலும் அவன் ஆஸநத்தைக் கிளப்பும்போது நம் ஆற்றாமைவேணுங்காண். .... (கூ)

மூ.—இலங்குமுத்தும் பவளக்கொழுந்து மெழில்தாமரைப்
புலங்கள்முற்றும் பொழில்சூழ்ந்தழகாய புல்லாணிமேல்
கலங்கலில்லாப் புகழான் கலியனொலிமாலை
வலங்கொள் தொண்டர்க்கிடமாவது பாடில்வைகுந்தமே.

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

தோழியானவள் ஹிதபரையாய், இவள் ஸ்வரூபத்தைப் பேணவேணுமென்று பிரிவில் கண்டவளவில், நம்மைஸ்வரூபத்தைப் பேணிவாராதே மன்னியிருக்கிறானே; இனி நாம் என் செய்வோம்; ஸாதநாந்தரங்களைவிட்டும், ஆற்றாமை அவரறியும்படி ஸ்வரூபாநுரூபமாகத் தொழுவோம் வா என்கிறார்களென்று விவக்ஷித்து "அவன் மன்னு" என்றுவிசேஷித்ததுக்குக் கருத்து (எல்லாமித்யாதி). ... ... (கூ)

(க) ரா-ஸு-நக-நO. (உ) கீ-கக-ருச.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இலங்கு	ப்ரகாசியாநின்ற	புகழான்	கீர்த்தியை யுடைய ரான
முத்தும்	முத்துக்களையும்	கலியன்	ஆழ்வார் (அருளிச்செய்த)
பவளக்கொழுந்தும்	பவளத்துளிர்களையும்	ஒலிமாலை	சப்தஸந்தர்பரூபமான இப்பாசுரங்களில்
எழில்	அழகிய	வலங்கொள்	ஏதேனுமொரு விதமாக அந்வயித்த
தாமரைப்புலங்கள்	தாமரைப் பொய்கைகளையுமுடைய	தொண்டர்க்கு	பக்தர்களுக்கு
பொழில்	சோலைகளாலே	இடமாவது	வாஸஸ்த்தாநமாவது
முற்றும்	எங்கும்	பாடு இல்	து:க்கரஹிதமான
சூழ்ந்து	சூழப்பட்டதாய்	வைகுந்தமே	வைகுந்த மாநகரம்.
அழகாய	அழகிதான		
புல்லாணிமேல்	திருப்புல்லாணிவிஷய		
கலங்கல்இல்லா	கலக்கமில்லாத [மாய்		

வ்யா.—பத்தாம்பாட்டு. (இலங்குமுத்தும் பவளக்கொழுந்து மெழில் தாமரைப் புலங்கள் முத்தும் பொழில் சூழ்ந்தழகாயபுல்லாணிமேல்) இந்த தேசலைலக்ஷண்யமாயிற்று இவர்தம்மை இங்ஙன் கவிபாடுவித்தது. உஜ்ஜ்வலமாகாநின்றுள்ள முத்தும், அழகிய பவளக்கொழுந்தும்; தன்பரப்புமாறச் செவ்விபெற அலர்ந்ததாமரைப் பொய்கைகளையுமுடைத்தான சோலைகளாலே சூழப்பட்ட திருப்புல்லாணி மேலேயாயிற்றுக் கவிபாடிற்று. (கலங்கலில்லாப் புகழான்) கவிபாடினவர் தம்முடையஸ்வபாவமிருக்கிறபடி. பரஹிம்ஸைபண்ணித் திரியுமதிற்காட்டில் அஹங்காரகர்ப்பமான க்ரியா கலாபங்களாலே பெறவிருக்குமது நன்றாயிற்று. அது தன்னையும் கழித்து அவன்றன்னாலே அத்தைப் பெறுமதே நன்றாகச்சொல்லி அத்

அரு.— பத்தாம்பாட்டு. (இலங்கித்யாதி) (பொய்கைகளை) என்றது-தாமரைக்குளங்களென்கிறது. புலங்கள்தாமரைவயலாய் "எழில்தாமரை" என்கிற விசேஷண ப(உ)லத்தாலே* கம்பீராம்பஸ்ஸமுத்பூதத்வம்சொல்லவேண்டுகையாலே லக்ஷணைவ்ருத்தியாலே வயலுக்கருகிருந்த பொய்கைகளைச் சொல்லிற்றென்றபடி. ஆழ்வார்(க) "[illegible] - தத்தஸ்ய ஸத்ருஹம்பவேத்" என்றாப்போலே அவனைவரப்பார்த்திராதே கலங்கித்தாமேதொழுகையோடே புறப்படும்படி கலங்கியிருக்க, இவருக்குக் கலக்கமில்லாதமை எங்ஙனேஎன்ன; (பரஹிம்ஸையித்யாதி). (அவன்றன்னாலே பெறுகையாவது) அவன்தர

தையும் கீழிலவையோடொக்கக்கழித்து, ப்ராப்யத்தில்த்வரையாலே வந்த அலமாப்பையுடையராகையாலே வந்தபுகழாயிற்று; புகழுக்கு கலக்கமில்லாமையாகிறது இவ்வளவும் வருகையாயிற்று.

(கலியன்ஒலிமாலை) (௧) "முநிப்ரணீதம் - முநிப்ரணீதம்" என்னுமாபோலே ஆப்தவசநமாயிருக்கை. (வலங்கொள் தொண்டரித்யாதி) இப்பத்துப்பாட்டையும் அதிகரிக்கவுமாம்; அன்றிக்கே ஒருபாட்டை அதிகரிக்கவுமாம். அதில் அர்த்தாநுஸந்தாநம் பண்ணவுமாம்; அதில் இசையை அப்யஸிக்கவுமாம். இவ்விசைதன்னைஒருவன் பாடாநின்றால் அதில் அஸஹமாநனுமதின்றிக்கே யொழியவுமாம். ஏதேனும் ஓராகாரத்திலே அந்வயமே வேண்டுவது; அவர்களுக்கு வாஸஸ்தாநமான தேசம்- துக்ககந்தரஹிதமான நித்ய விபூதியே. இத்தை இங்கே அப்யஸிக்க, அவர்கள் இங்குத்தைத் தனிமைதீர, அர்ச்சிராதிமார்க்கமே அங்குள்ளார் கொண்டாடப்போய், நித்யவிபூதியிலேபுக்கு நித்யாநுபவம் பண்ணப்பெறுவர். .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
ஒன்பதாம்பத்து மூன்றாந்திருமொழி முற்றிற்று.

பெறுதலைப் பார்த்திருக்கக் கடவோமென்றறியிருந்து, தன் ஸ்வரூபத்தைப் பேணியிருக்கை யென்றபடி.

"வலங்கொள்ளுகை"-விளையவருகையாய், ஏதேனுமாக ஓரந்வயமுண்டான தொண்டர்க்கு, இடமாவது-வைகுந்தம். இனிபாடினார்க்கு, இல்லைகுந்தமே. அதில் விவாதமில்லையென்று விவக்ஷித்து அருளுகிறார் (இப்பத்தித்யாதி).

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு;—காவார்ப்ரவேசம். கீழில் திருமொழியில் புல்லாணியைத் தொழப்போக ஒருப்பட்டவள்போய் அநுபவிக்கவொண்ணாதோ?. நேர்பட்டதுதப் ரேஷணுதிகளைச் சொல்வானென்னென்னும் சங்கையாலே ஆற்றாமையின்

---

(௧) ரா-பா-உ-௪௪.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

ஒன்பதாம்பத்து நான்காந்திருமொழி

காவார் ப்ரவேசம்.

வ்யா.—காவார்ப்ரவேசம். திருப்புல்லாணியேறப்போகவேணு மென்றுகொண்டு உத்யோகித்துக் கால்நடைதாராமல் தளர்ந்து, உண்ணப்புக்கவன் சோற்றிலே தோஷதர்சநம்பண்ணினால் "எல்லா முண்டு சமைந்தோம்" என்னுமாபோலே தொடங்கினதெல்லாம் அழகி தாகத் தலைக்கட்டினோமென்று, கண்ணால்கண்டபக்ஷிகளைத் தூது விடுவது, முன்புள்ளார் நோவுபட உதவினபடி சொல்லுவது, பந் துக்கள் ஹிதவசநம் கேளாதபடியான தசையைச் சொல்லுவதாய்த் தலைக்கட்டுகிறது. .... *

மூ.—காவார் மடல்பெண்ணை யன்றிலரிகுரலும்
ஏவாயினூடியங்கு மெஃகிற் கொடிதாலோ
பூவார் மணங்கமழும் புல்லாணிகைதொழுதேன்
பாவா யிதுநமக்கோர் பான்மையே யாகாதே. (க)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மடல்	மடலையே நிரூபகமாக வுடைய	கொடிது	கொடிதாய் பாதியா நின்றது
பெண்ணை	பனைமரங்களிலிருக்கிற	ஆல்	கஷ்டம்;
அன்றில்	அன்றில் பக்ஷிகளு டைய	பூ	பூக்களில்
காவு	சோலைகளிலே	ஆர்	ஸம்ருத்தமான
ஊர்	நிறைந்திருக்கிற	மணம்	பரிமளத்தால்
அரி	தழுதழுத்த	கமழும்	மணம்மிக்கிருந்துள்ள
குரலும்	த்வநியும்,	புல்லாணி	புல்லாணியென்கிற திவ்யதேசத்தை
ஏவாயின்	காமசரங்களால் ஏவப் பட்ட புண்வாயின்	கைதொழுதேன்	(ஆசைப்பட்டு) பணிந்தேன்.
ஊடு	மத்யத்தில்	பாவாய்	ப்ரதிமைபோன்ற ஸகியே!
இயங்கும்	ஸஞ்சரிக்கிற	இது	இதுவானது
எஃகில்	வேலைக்காட்டில்	நமக்கு	நமக்கு
		ஓர்	ஒரு
		பான்மையே ஆகாதே	ஸ்வபாவமாய் விட்டதே?

மிகுதியால் போகமாட்டாதே, கைக்கொடுக்கிற தோழியும் ஸ்தப்தையாகப் படுகிறுளென்று ஸங்கதி யருளுகிறார் (திருப்புல்லாணி யித்யாதி).

அவ.—முதற்பாட்டு. (காவாரித்யாதி) பிரிந்த நிலத்தில் இருக்கவொண்ணுதொழிவது; போகத்தொடங்கினதேசத்திலேபோய்ப் புகவொண்ணுதொழிவது; நம்தசை இருக்கபடிஎன்? என்கிறாள்.

வ்யா.—(காவார்மடல்பெண்ணை யன்றிலரிகுரலும்) தாய்மார் ஹிதவசநத்துக்குமேலே இதுவும்வேணுமோ? (அன்றிலரிகுரலும்) அன்றிலினுடைய ப்ரணயகத்க (ஹ்ல) தமான பேச்சென்னுதல்; அரிகுரலென்னுதல்; (க) "என்னுடைய நெஞ்சுக்கோரீர் வாளாமென் செய்வேன்" என்னுமாபோலே. ஒன்றே ஆற்றவொண்ணுதிருக்க, எங்குமதுவேயாவது. ஒருமடலே எங்குமொக்கச் சோலைசெய்திருக்கிறபடி. மடற்பெண்ணையையுடைத்தான சாவிலே ஆர்ந்த அன்றிலென்னவுமாம். லங்கையடைய ராக்ஷஸரென்னுமாபோலே. தார்மிகராயிருப்பார் வைத்த தண்ணீர்ப் பந்தலிலே வழியடிக்காரர் ஒதுங்குமாபோலே, மடலெடுத்தாகிலும் பிழைக்க நட்டபனையிலே அன்றில்வந்து குடிபுகுந்தது. ப்ரபந்நரும் பலியாததசையிலே செய்யுமதொன்றிறே அவன் தன்ஸ்வரூபத்தோடு சேரச்செய்யாவிட்டால் இவன் தன்ஸ்வரூபத்தை அழித்தாலும் பெறப்பார்க்குமே.

அரு.—பாட்டுக்குத்தொகுத்த பா(வா)வ மருளுகிறார் (பிரிந்தவித்யாதி).

முதற்பாட்டு. (காவாரித்யாதி) "குரலும்" என்கிற ச(ஸ)காரம்-அநுக்த ஸமுச்சயமாகத் தாத்பர்யம். (அரி) என்றது இருளாய், அத்தாலே அவ்யக்தமானபடியைவிவக்ஷித்துப்பலிதார்த்தம் (ப்ரணயகத்கதமான) என்று. அரிகிற குரலென்று அர்த்தாந்தரம் (அரிகிறவித்யாதி). மடலையே நிருபகமாகவுடைய பெண்ணையிலே இருக்கிற அன்றிலின் குரலானது காவெல்லாம் ஆர்ந்திருக்கிறதென்று, "காவார்" என்றத்தைக்குரலுக்கு விசேஷணமாக்கியருளுகிறார் (ஒன்றே இத்யாதி). (அதுவே)-குரலே. காவுபோலேயான மடலென்று மடலுக்கு விசேஷணமருளுகிறார் (ஒருவித்யாதி). அன்றிலுக்கே விசேஷணமாக்கி மூன்றும் யோஜநை (மடலித்யாதி). பனைபானபோதே மடலுண்டாயிருக்குமே, மடலென்று விசேஷித்ததுக்குக் கருத்தென்னென்ன வருளுகிறார் (தார்மிகரித்யாதி). கீழ்ச்சொன்ன வர்த்தத்தை உபஸம்ஹரித்துக்கொண்டு மடலெடுக்கை தண்ணீர்போலே தாரகமோவென்னும் சங்கையைப் பரிஹரிக்கிறார் (மடலித்யாதி வாக்யத்வயத்தாலே). ஸ்வரூபஹாநிவாராதோ? அது

(க) பெரி-தி-மடல்-அரு.

(ஏவாயினூடியங்கும்) காமசரங்களாலே புண்பட்டிறே உடம்படையக்கிடக்கிறது. ஸுப்ரஹ்மண்யன் கையில்வேல், ஸ்ரீபரகாலாமாழ்வான் கையிலம்பு, இவற்றாலே துளைப்புண்டமலைகளிலே பக்ஷிகள் ஸஞ்சரிக்குமாபோலேயாயிற்று. அம்புவாய்களைப் புதுப்புண்செய்துகொடு காணும் போகிறது. (எஃகிற்கொடிதாலோ) எஃகிலேக்காட்டிலென்னுதல்; எஃகுபோலேயென்னுதல். இத்வ்யாதியாற்றும்போது வேலிலேவைத்து ஆற்றவேண்டும்படியிருக்கை. லௌகிகாக்நியிற்காட்டில் நரகாக்நி கொடிதாயிருக்குமிறே.

(பூவார் மணங்கமழும் புல்லாணி கை தொழுதேன்) பரிமளம் அஸஹ்யமாகாததேசம் தேடிப்புக அழகிதாக ஆசைப்பட்டேன். விரோதியான இந்நிலத்தைவிட்டு ப்ராப்ய தேசத்திலேபோய்ப்புக அழகிதாகக்கோலினேனென்கிறாள். (பாவாய்) இதற்குத்தான் இவள் சொல்லுகிறது-இவளுடைய பாரவஶ்யம் கண்டு †தானிழந்து இவள் வ்யாபரிக்கவேண்டும்படியாயிற்று அவள் இருக்கிறது. (௧) [யாமுடைத்துணையென்னும் தோழிமாரும்] நாமமாத்ரமேகாணு முள்ளது. நாயகன்பிரிந்ததுக்கு நோவுபடுமித்தனை இவளுக்குள்ளது. இவளாற்றாமைக்கும் அவன்வாராமைக்கும் இரண்டுக்கும் நோவுபடவேணுமே அவளுக்கு. இது ஒருபாசுரமிட்டுச் சொல்லவொண்ணாது காணும். பிரிந்தநிலத்தில் இருக்கவொண்ணாதே ஒழிவது. ப்ராப்ய தேசத்திலேபோய்ப்புக வொண்ணாதொழிவது; உசாத்துணையின்றிக்கே ஒழிவதான தசையிறே நமக்கு; இழவில் வந்தால் இருவர்க்கு மொத்திருக்குமிறே.

செய்யும்படி என்னென்ன வருளுகிறார் (அவனித்யாதி).

ஏவப்பட்ட புண்வாயினுடைய, ஊடு-மத்யத்திலே, இயங்கும்-ஸஞ்சரிக்கும், எஃகில் கொடிதாலோ என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாகத் தாத்பர்யம் (காமசரங்களித்யாதி).

ஸ்வாபதேசம் (விரோதீத்யாதி). "தோழி" என்னாதே மரப்பாவையாக்கிச் சொன்னதுக்குக்கருத்து (இதற்கித்யாதி). (தானிழந்து) தான்பாரவஶ்யத்தை தான்விட்டு. எடுத்த பாசுரத்திலே "என்னும்" என்றதுக்குக் கருத்து (நாயகன் பிரிந்ததுக்கு நோவுபடுமித்யாதி). (அவன் வாராமைக்கும்) என்றதுக்கு இருவருமாயிருக்குமிருப்புத் தனக்கு உத்தேஶ்யமாகையாலே வாராமையால் தனியே இதுவுமொருதுக்கம் இவளுக்குண்டென்று கருத்து.

---

(௧) தி-வாய்-௯-௯-௫.　　† (பா) தானிருந்து.

(ஓர்பான்மையே யாகாதே) மாறாடி வருவதுமன்றிக்கே இது ஸ்வபாவமாய் விட்டதே. நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணா நின்றார்கள். இவ்வருகுள்ளார் விஷயங்களிலே அந்யபரராகா நின்றார்கள். மூன்றும் விபூதியாகப்பண்ணி விட்டதாகாதே நோவுபடுத்துகைக்கு நம்மையென்கிறாள். .... (௧)

மூ.—முன்னம்குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த
மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்
பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள் புல்லாணி
அன்னமாய் நூல்பயந்தார்க் காங்கிதனைச்செப்புமினே. (௨)

பதம்.	உரை.
பொன்னங்கழி	பொன்னங்கழி என்கிற நீர்க்கால்களையுடைய
கானல்	கடல் கரை நிலங்களிலிருக்கிற
புள்ளினங்காள்	பக்ஷிகளே !
முன்னம்	முன்பு
குறளுருவாய்	வாமநாவதாரம் செய்தருளினவனாய்(மஹாபலி பக்கல்)
மூவடிமண்	மூன்றடிகளால் அளக்கக்கூடிய பூமியை
கொண்டு	இரந்து பெற்று
அளந்த	(த்ரி லோகங்களையும்) அளந்தவனான

பதம்.	உரை.
மன்னன்	ராஜாதி ராஜனான எம்பெருமானுடைய
சரிதைக்கே	செயலுக்கே
மாலாகி	(நான்) பிச்சேறினவளாய்
பொன்	நிறத்தை
பயந்தேன்	இழந்தேன்; தசையை
இதனை	(என்னுடைய) இந்த
புல்லாணி	புல்லாணி என்கிறதிவ்ய தேசத்தில்
அன்னமாய்	ஹம்ஸரூபியாய்
நூல்	வேதங்களை (ப்ரஹ்மாவுக்கு)
பயந்தார்க்கு	கொடுத்தவரான எம்பெருமானுக்கு
ஆங்கு	(பிராட்டிக்காக வந்திருக்கும்) அவ்விடத்தில்
செப்புமினே	அறிவியுங்கள். (௨)

அவ;—இரண்டாம்பாட்டு. நோவுபடுகை நமக்கே ஸ்வபாவமாய் விட்டதென்று ஒருவார்த்தைசொல்லிப் பின்புபேசாதேயிருக்கும் ப்ரக்ருதியன்றே. தானிருக்கிற விடத்தே வர்த்திக்கிற சிலபக்ஷிகளைத் தூதுவிடுகிறாளாயிற்று.

"பான்மை" என்றதுக்குத் தாத்பர்யமருளிச்செய்து "ஓர்" என்றதுக்குத் தாத்பர்யம் (நித்யஸூரிகளித்யாதி). ... ... (௧)

அரு.—இரண்டாம்பாட்டு. (முன்னமித்யாதி). ஸங்கதியருளிச்செய்து

அவ;— (முன்னமித்யாதி) ஸுலபனல்லாதவனை ஆசைப்பட்டு உடம்பு வெளுத்திருக்கிறேனோ? அதுதான் பரத்வமென்னும்படி யிருக்கிற விடத்தே என்தசையை அறிவியுங்களென்கிறாள்.

வ்யா - (முன்னம் குறளுருவாய்) காலவிப்ரகர்ஷம் போக்கி தேச விப்ரகர்ஷமல்ல கிடீர் இழக்கைக்கு. பாவியேன், இன்றன்றோ அவ் வடிவுகொள்ள வடுப்பது. ஒருநீர்ச்சாவிகிடக்கக் கடலிலே வர்ஷிப் பதே? ஆறுபுகாவிட்டாலும் வர்ஷியாவிட்டாலும் கடலுக்குக் குறையில்லையிறே. காலப்ரத்யாஸத்தியாலே பல்லிலேபட்டுத் தெறி த்ததென்கிறாள். (குறளுருவாய்) அப்ராக்ருத ஸம்ஸ்த்தாநத்தைக் கண்ணாலே முகக்கலாம்படியாக்கினபடி. (மூவடிமண்கொண்டள ந்த) த்ரைலோக்யத்துக்கு அவ்வருகும் நித்யவிபூதியும் தன்னதா யிருக்கிறவன் கிடீர் மூவடியை இரந்தான். இரந்ததுவும், மண் ணளந்ததுவும் மிகைகாணும். அவ்வடிவைக் கண்டபோதே ஆத் மாத்மீயங்களை இவனதாக்கினாளாயிற்று அவன். (க) "ద్త్తమస్యాభయంమయా-தத்தமஸ்யாபயம்மயா" என்னுமாபோலே. (உ) "రాఘవంశరణంగతః-ராகவம் சரணம்கதஃ" என்றதுக்குள்ளே பெருமாள் அங் கீகாரமுமுண்டு, நடுவு காலக்ஷேபம் மஹாராஜர் அநுமதி பெறு கைக்காகவாயிற்று.

(மூவடிமண்கொண்டளந்த மன்னன்) அவன்பக்கலிலே இரந்து பெற்று வளர்ந்து அளந்து கொண்டானாயிற்று. அவனுடைய

தொகுத்தபாவம் (ஸுலபனித்யாதி). (அதுதான்) வாமநாவதாரந்தான். (முன்னம்) என்றதுக்கு-சி(-ஞ)ரகாலமாகவும், ஸமீபகாலமாகவுமிரண்டு தாத் பர்யம்விவக்ஷித்து முந்தினத்தை யருளுகிறார் (காலவிப்ரகர்ஷமித்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே). ஸாபேக்ஷரான தாமிருக்க, நிரபேக்ஷரான ஸம்ஸாரிகள் தலையிலே பாதபற்பைவைப்பதே யென்றுகருத்து. இரண்டாம் தாத்பர்யம் (காலப்ரத்யாஸத்தியித்யாதி). அந்த அபதாநம் அநுஸந்தாநவைசத்யத்தாலே ஸந்நிஹிதமாகத் தோற்றிற்றென்று திருவுள்ளம். மஹாபலியைப்போலே கண்டபோதே கார்யம் செய்தாருண்டோவென்ன; (த(ஐ)த்தமித்யாதி). கண்ட மாத்ரத்திலே கொடுத்ததில்லையே; போதுபோக்கியன்றோகொடுத்த தென்ன (ராகவமித்யாதி).

மன்னனாயிருந்து இரக்கக்கூடுமோ? "படைஎடு" என்று கொள்ளவேண் டாதோ என்ன (அவனுடைய வித்யாதி). வென்றுவாங்கினால் அவனுடைய

(க) ரா-யு-கஅ-௩௪. (உ) ரா-யு-௧௭-௧௬.

அபி (?) மாநத்தோடே சேர்க்கைக் கொள்ளுகைக்காக இரந்தாளு யிற்று. (மன்னன்) (க) "ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம் - ராஜாதிராஜஸ்ஸர்வேஷாம்" (உ) "விஷ்ணுர்ப்ரஹ்மமயோமஹாந் - விஷ்ணுர்ப்ரஹ்ம மயோமஹாந்" (ங) "ஈஶ்வரம்தம்விஜாநீமஸ்ஸவிபுஸ்ஸப்ரஜாபதி:-ஈஶ்வரம்தம்விஜாநீமஸ்ஸவிபுஸ்ஸப்ரஜாபதி:" என்னுமாபோலே. (மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்) அந்யார்த்தமான செயலிலே நிறமிழந்தேன். இந்த்ரனுக்காகச் செய்தசெயலென்று தோற்றிற்றில்லை காணும் இவர்க்கு. (ச) "உன்னைப் பிரமாணித்தார் பெற்றபேறு" ஆஶ்ரிதரெல்லார்க்குமாகச் செய்தசெயலென்றிருக்கிறார். தன்னுருக்கெடுத்து வேற்றுருகொள்ளுவது, இரப்பது, அளப்பதான செயலிலே யாய்த்து விவர்ணையாயிற்று.

(பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள்) தானிருக்கிற விடத்துக்கு அணித்தாகப் பொன்னங்கழியென்றொரு நீரோடுகாலுண்டு போலே. ஏகதேசவாஸித்வத்தால்வந்த ஸம்பந்தங்கொண்டு தன் கார்யம் அவற்றுக்குச் செய்யவேணுமென்றிருக்கிறாள். அதுக்கு மேலே பிரிந்தாரைச்சேர்க்கும் சிறப்புடையவராயிற்று. முன்பு போனவனைப்போலே தனிபோகவேண்டாவிறே உங்களுக்கு. (புல்லாணி யன்னமாய் நூல்பயந்தாற்கு) இவை தூதுபோகச் சமைந்தாப்போலேயாய்த்து அவன் கிட்டவந்திருக்கிறபடியும்.

தேசத்தை இவன் வாங்கிக்கொண்டானென்பர்கள். அதில்லாதபடி செய்தானென்கை. "இந்த்ரனுக்காகச் செய்தசெயலிலே நான் எதுக்காக மாலேறினேன்" என்று வெறுப்பிலே தாத்பர்யமருளி, செயலென்று தாத்பர்யாந்தரம் (இந்த்ரனுக்கித்யாதி). "சரிதைக்கே" என்ற அவதாரணத்துக்குத் தாத்பர்யம் (தன்னுருவித்யாதி).

"புள்" என்றத்தாலே திர்யக்த்வம் விவக்ஷித்து, ராமாவதாரத்திலே திர்யக்குக்கள்-கரியாகையாலே, அத்தைப்பற்ற ஹார்த்தபாவம் (அதுக்கித்யாதி). (போனவனைப் போலே) தன்னைவிட்டுப் போன நாயகனைப்போலே. இத்தால் இந்த பதத்துக்குத் தாத்பர்யம் சொல்லிற்று.

அன்னமானது-க்ஷீரநீரவிபாகம் பண்ணவல்லதாகையாலே, நீரக்ஷீரங்கள் போலே, நானும் தானுமாக வந்தக் கலவியைப்பிரித்தானென்று வெறுப்பிலே

† (பா) தன்னுருக்கொடுத்து. (க) (உ) (ங) (ச) உ-திருவ-சுக.

(அன்னமாய் நூல்பயந்தாற்கு) பிரிக்கவல்லார்க்கு இழந்தவேத சதுஷ்ஸை ப்ரஹ்மாவுக்காக மீட்டுக்கொடுத்தபடியைச் சொல்லுகிறது. அதாகிறது - இங்கு இழந்த நிறம் பழையபடியே தரவல்லனென்கை. (அன்னமாய்) தூதுபோகிறஉங்களுக்கு அஞ்சவேண்டா; ஸஜாதீயராயிருப்பார். (ஆங்கிதனைச் செப்புமினே) ஒருத்தி நிறம் மீட்கைக்காக வந்திருக்கிற விடத்தே அறிவியுங்கள். ஒருத்திக்கே கார்யம் செய்யக்கடவோமென்னும் நியதியுண்டோ?. (இதனை) தன் தசைதன்னைப் பாசுரமிட்டுச்சொல்லவொண்ணாதுபோலே காணும். (செப்புமினே) செப்பிக் கொடுவரவேண்டா; அறிவித்துவிட அமையும். .... (உ)

மூ;—வவ்விதுழாயதன்மேல் சென்றதனிநெஞ்சம்
செவ்வியறியாது நிற்குங்கொல் நித்திலங்கள்
பவ்வத்திரையுலவு புல்லாணி கைதொழுதேன்
தெய்வச்சிலையார்க்கென் சிந்தைநோய் செப்புமினே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துழாயதன்மேல்	திருத்துழாயின் (ஒரு பாகத்தை)	உலவு	ஸஞ்சரியாநின்ற
வவ்வி	பிடித்துக்கொண்டு	புல்லாணி	திருப்புல்லாணியை
தனி	தனியாயே	கைதொழுதேன்	அஞ்ஜலி பண்ணினேன்;
சென்ற	(அவன் பக்கல்) போன	என்	(அப்படிப்பட்ட) என்னுடைய
நெஞ்சம்	என் மநஸ்ஸானது	சிந்தைநோய்	மநோவ்யாதியை
செவ்வி	(என்னுடைய) அழகை	தெய்வச்சிலையார்க்கு	அழகிய தநுஸ்ஸையுடைய எம்பெருமானுக்கு
அறியாது	(அழியுமென்று) அறியாமல்	செப்புமினே	அறிவியுங்கள். (௩)
நிற்குங்கொல்	(அங்கேயே)நிற்குமோ?		
நித்திலங்கள்	முத்துக்களை யுடைய		
பவ்வத்திரை	ஸமுத்ரத்தின் அலைகள்		

அவ;—மூன்றும்பாட்டு. கீழ்என்னுடைய உடம்பில் நோவை அறிவியுங்களென்றாள். இங்கு என்னுடைய சிந்தாவ்யதை(தா)யை அறிவியுங்களென்கிறாள்.

தாத்பர்யம் (பிரிக்கவித்யாதி). தாத்பர்யாந்தரம் (இழந்தவித்யாதி). (ஒருத்தி) பிராட்டி. இத்தால் "ஆங்கு" என்றதுக்குக் கருத்துச் சொல்லிற்று. ... (உ)

அரு.—மூன்றும்பாட்டு. (வவ்விய்த்யாதி). துழாயை இவர் புஜித்து, அவ்வழகை அநுபவித்து, அதின்மேல் சென்ற என்னை விட்டுத் தனியே

வ்யா;—(வவ்வித்துழாயதன்மேல் சென்ற தனிநெஞ்சம்) நாயகன் பிரிந்துபோகிறபோது தோளிலிட்டதொருமாலையிலே ஒரு தலையைப் பிடித்துக்கொடு போய்த்ததாயிற்று, நெஞ்சு அவன்பக்கல் அணுக்கத்தைக்கொண்டு இத்தலையை உதறிப்போனபடி. (செவ்வியறியாது நிற்குங்கொல்) நம்மாள் அங்கே நின்றதாகில் ஆசையற்று வந்தாலன்றோ நமக்கு முடியலாவது என்றிருக்கிறுளென்றிருக்கிறதோ? (நிற்குங்கொல்) நிற்குமோ என்றபடி.

(நித்திலங்களித்யாதி). (க)"விரவிமுத்தம் நெடுவெண்மணல்மேல் கொண்டு வெண்டிரை புரவியென்னப்புதம் செய்துவந்துந்து புல்லாணியைத் தொழுதுமெழு" என்று அழகிதாக ஆசைப்பட்டேன். (தெய்வச்சிலையார்க்கென் சிந்தைநோய் செப்புமினே) ஒருத்தியுடைய சிந்தாவ்யதையைப் போக்கவென்றே விற்பிடித்தவர்க்கு என்னுடைய சிந்தாவ்யதையையு மறிவியுங்கள். (என் சிந்தைநோய்) அவளத்தனைக்ரமப்ராப்தி பொறுத்திருக்கு மவளன்றிறே இவள்.

மூ;—பரியவிரணியனதாக மணியுகிரால்

அரியுருவாய்க்கீண்டா னருள்தந்தவாநமக்குப்
பொருதிரைகள் போந்துலவுபுல்லாணி கைதொழுதேன்
அரிமலர்க்கண் ணீர்ததும்ப வந்துகிலும் நில்லாவே. (ச)

போன நெஞ்சமானது என்னுடைய செவ்வி அழியுமென்றறியாதே நிற்குமோ வென்றுசப்தார்த்தம் திருவுள்ளம்பற்றிபாவம்(நாயகனித்யாதி). (ஒருதலையை) என்றது-"மேல்" என்றத்தைப்பற்ற. பிரிந்துபோகும்போது தோளிலிட்ட மாலையைக்கண்டிருந்த படியாலே "பரவி நெஞ்சே தொழுதுமெழு" என்று சொன்னவுடனே, தான் என்னைவிட்டுத் தனியே புறப்பட்டுப்போகையாலே எனக்குக்கால்நடை தாராதேகிடந்து படுகிறேனென்கையாலே, இத்தையெல்லாம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் (அவன்பக்கலித்யாதி). (அணுக்கத்தை) அந்தரங்கதையை. நெஞ்சு உன்னுடைய படியறியாதே அங்கேதானே நிற்பானென்னென்ன; (நம்மாளித்யாதி).

நித்திலங்களை - முத்துக்களையுடைத்தான ஸமுத்ர தரங்கங்களென்று விசேஷித்ததுக்குக் கருத்து (விரவியித்யாதி). (அவளத்தனை) - பிராட்டியத்தனை. ... ... (ஙூ)

(க) கூ-ஙூ-அ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பரிய	(வரபலத்தால்)பருத்த	போந்து	வந்து
இரணியனது	ஹிரண்யனுடைய	உலவும்	ஸஞ்சரியாநின்ற
ஆகம்	மார்வை	புல்லாணி	திருப்புல்லாணியை
அரியுருவாய்	நரஸிம்ஹரூபியாய்	கைதொழுதேன்	அஞ்ஜலி பண்ணினேன்;(இப்படிப்பட்டஎன்னுடைய)
அணி	அழகான	அரி	வண்டுகள் (படிந்த)
உகிரால்	நகங்களாலே	மலர்	புஷ்பம்போன்ற
கீண்டான்	கிழித்த ஸ்வாமியான	கண்	கண்களில்
நமக்கு	நம் திறத்தில் [வன்	நீர்	ஜலமானது
அருள்தந்தவா	க்ருபைபண்ணினபடி, என்;	ததும்ப	தளும்பும்படியாகவும்,
பொரும்	ஸ்பர்த்தை பண்ணிக் கொண்டு வருகிற	அம்	அழகிதான
திரைகள்	ஸமுத்திரத்தினலைகளானவை	துகிலும்	வஸ்த்ரமும்
		நில்லாவே	(அரையில்) தங்காதபடியாகவுமிராநின்றது.

வ்யா.—நாலாம்பாட்டு. (பரியவிரணியனதாகம்) ஸ்வாமி ஒருவன் உண்டென்னும் ப்ரதிபத்தியுண்டாய், அவனைப் பெறவேணுமென்னும் மேன்மையும்தன்நெஞ்சிலே கிடந்துவளர்ந்த உடலன்றே. "எனக்கு மேற்பட்டானொருவனுளன்" என்றிராமையாலே அவனைப் பெறவேணுமென்றிருக்கு மதுவுமில்லையே. இனி தேஹாதிரிக்தமாயிருப்பதொரு வஸ்துஉண்டென்னும் ப்ரதிபத்தியுமில்லை. தேஹாத்மாபிமாநியாயிருப்பானொருவனுகையாலே கேவலம் சரீரத்தையே வளர்த்தானித்தனையாயிற்று. ஆக "சேஷிஒருவனுளன்" என்றும், "காண்கிற சரீரத்துக்கு அவ்வருகாயிருப்பதொரு வஸ்து உண்டு" என்றும் இராமையாலே வரப(ப)லத்தாலே தடிப்பித்தானாயிற்று. இதுவெல்லாங்கூடி திருவுகிரும்கூட்டியாய்த் தலைக்கட்டிற்று.

அரு.—நாலாம்பாட்டு. (பரியவித்யாதி) கீழிரண்டுபாட்டாலே தூதுவிட்டாள். இதில், முன்புஅவன்தன் படியைச் சிலர்க்குச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"பரிய" என்று விசேஷித்ததுக்குக்கருத்து (ஸ்வாமீத்யாதி-தடிப்பித்தானாயிற்றென்னுமளவும்). உட்கருத்தருளுகிறார் (இதுவித்யாதி).

(அணியுகிறால்) கண்டுகொண்டிருக்கத் தருமவற்றைக்கிடீர் இவனுக்கு உடலாக்கிற்று. நாய்ச்சிமாரோட்டை ஸம்போகத்திலும் வ்யாபரிக்கப் பொருதவற்றைக் கிடீர் முறட்டுடம்பிலே கொண்டு வ்யாபரித்தது. (அரியுருவாய்க் கீண்டான்) இவன் எவ்வடிவைச் சொல்லுமென்றறியாமையாலே, நரத்வஸிம்ஹத்வங்க ளிரண்டையும் சேர்த்துக்கொண்டு வந்து தோற்றினுயிற்று. நரஸிம்ஹத்தினுடைய சீற்றத்தைக் கண்டவாறே உடல்பதம் செய்தது; அநாயாஸேந கிழித்துப் பொகட்டான். (அருள்தந்தவா நமக்கு) ஒரு பாலனுக்குத் தமப்பன் பகையாக உதவிக்கார்யம் செய்தவன், அபலைக்குத் தன்னைப் பெருமையால் வந்தவ்யஸநத்துக்கு வாசிவைத்து உதவினபடிகாண்.

(பொருதிரைகள் போந்துலவு புல்லாணி கைதொழுதேன்) "பொருதுமுந்நீர்க் கரைக்கேமணியுந்துபுல்லாணி தொழுதுமெழு" என்று எல்லாம் செய்து சமைந்தோம். (அரிமலர்கண்ணீர் ததும்ப அந்துகிலும் நில்லாதே) கடல்திரைகள் வந்து ஸஞ்சரியா நிற்கக் கடலும் திரையும் கண்டுகூட அநுபவிக்க வேணுமென்று ஆசைப்பட்டோம்; இதுவாகில் இவளுக்குத் தேடிப்போக வேணுமோ? என்று என்னுடம்பிலே கண்ணநீரையுமுண்டாம்படி பண்ணினுன்.

மூ.—வில்லாலிலங்கை மலங்கச்சரந்துரந்த
வல்லாளன்பின்போன நெஞ்சம்வருமளவும்
எல்லாருமென்றன்னையேசிலும் பேசிடினும்
புல்லாணியெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே. (௫)

"அணி" - அழகும், ஸௌகுமார்யமும். இவற்றை அடைவே அருளுகிறுர் (கண்டித்யாதி வாக்யத்வயத்தாலே). (இவன் எவ்வடிவைச் சொல்லுமென்று அறியாமையாலே) என்றதுக்கு - ஹிரண்யன் வரங்களில் அகப்படாத வடிவாக வேண்டுகையாலே, நரனென்றும் சொல்லக்கூடாதே, ஹரியென்றும் சொல்லக்கூடாதே, இப்படிப்பட்டவடிவை ஒருகாலும் கண்டறியாமையாலே தனக்கென்றிருக்க வேணுமென்று கருத்து.

அரியானது - வண்டானது, படிந்தமலர்போன்றகண்ணீர், ததும்ப-தளும்ப; அம் - அழகிதானதுகிலும் நில்லாதென்று சப்தார்த்தம் திருவுள்ளம் பற்றி கண்ணீரைச் சொன்னதுக்குத் தாத்பர்யம் (கடலித்யாதி). ... (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வில்லால்	தநுஸ்ஸினுல்	எல்லாரும்	ஸகலரும்
இலங்கை	லங்கையானது	என்றன்னை	என்னை
மலங்க	கலங்கும்படியாக	ஏசிலும்	பழித்தாலும்,
சரம்	பாணங்களை	பேசிடினும்	பலவகையாகச்சொன்னுலும் (நான்)
துரந்த	ஏவினவனுன		
வல்லாளன்	ப(ல)ஶாலியானஎம்பெருமானுடைய	புல்லாணி	திருப்புல்லாணியில் எழுந்தருளி யிருக்கிற
பின்	பின்னே		
போன	போயிருக்கிற	எம்பெருமான்	எம்பெருமானுடைய
நெஞ்சம்	(என்) மநஸ்ஸானது	பொய்	பொய் வார்த்தைகளை
வருமளவும்	திரும்பி வருகிற பர்யந்தம்	கேட்டு	கேட்டு
		இருந்தேனே	தரித்திருந்தேனே.

அவ;—அஞ்சாம்பாட்டு. இவளுடைய பந்துக்களுடையத் திரண்டு நாங்கள் சொன்னவார்த்தை கேளாதே அவன் வார்த்தை கேட்டாயிறே. நாங்கள் சொன்னதுவே மெய்யாய், அவன்சொன்ன வார்த்தை பொய்யானபடி கண்டாயே; இனிநாங்கள் சொன்னத்தைக் கேட்கவல்லையேஎன்ன; அப்படியே செய்கிறோம், அவன்பின் போன நெஞ்சை மீட்டாலென்கிருள்.

வ்யா.—(வில்லாலிலங்கைமலங்க) வரங்கொடுத்ததேவதைகளுடைய அஸ்த்ரத்துக்கு அழியாதவரை மநுஷ்யத்வத்துக்கு ஏகாந்தமான வில்லாலே அழித்தானுயிற்று. மநுஷ்யரை அவமதிபண்ணியிருக்கையாலே இவர்களால் படாதொழிகைக்கு வரம் கொண்டிலனுயிற்று. கையில்வில்லாலே ஒருவர்கூறை எழுவருடுக்கப் பண்ணினபடி. (சரந்துரந்த வல்லாளன்) விடுகிறவன் ப(ல)லத்துக்குத்

அந;—அஞ்சாம்பாட்டு. (வில்லாலித்யாதி) கீழ்ப்பாட்டிலே "அருள்தந்தவாநமக்கு" என்று வ்யங்க்யமாக நன்றாக வருளிச்செய்தானென்று வெறுக்க, அத்தைக்கேட்டவர்களெல்லாரும் இதுவே இவளை மீட்கைக்கு அவஸரமென்று பஹுஜநமாகத்தங்கள் வார்த்தையைக் கேட்கச் சொன்னூர்களாக, அதுக்குத்தான்சொல்லுகிறதாகஸங்கதியருளுகிரூர் (இவளுடைய வித்யாதி).

(படாதொழிகைக்கு) - நஶிபாதொழிகைக்கு. வல்லாளன்பின்போனது வாராது என்று நிஶ்சயித்தே இப்படி சொல்லுகிருளென்று தாத்பர்யமருளு

தக்கபடியிறே அம்புதைப்பது. (வல்லாளன் பின்போனநெஞ்சம் வருமளவும்) இனிநான் உங்கள் வார்த்தை கேளேனென்கிறாள். அவன்வார்த்தை பொய்யென்றவர்களுக்கு ஒருவழியாலே மெய்யென்னுமிடத்தைக் காட்டுகிறாள். அவனுடைய வ்யாபாரங்கள் அநுஷ்ட்டாநபர்யந்தமாகக்கண்டுகொள்ளுங்கள்; நெஞ்சுபோயிற்றென்கிறாள். அவன்பின்போனஹ்ருதயம் வருமளவும்.

(எல்லாருமென்றன்னை யேசிலும் பேசிடினும் புல்லாணியெம்பெருமான்பொய் கேட்டிருந்தேனே) தோழிமார் "இதுகார்யமன்று" என்னவுமாம்; தாய்மார் "இதுகார்யமன்று" என்னவுமாம், இரண்டுக்கும் ப(ஃ)லமொன்றே; இவர்கள் வேண்டாவென்ன போதாக இவள்விடவேண்டுவதுமில்லை. இவர்கள் ப்ரவர்த்தித்த போதாக இவள்புகவேண்டுவதுமில்லை. (புல்லாணியெம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே) நாட்டில் பொய்மெய்கள்கொண்டு கார்யமுண்டோ? அவன்பொய்யாகையாலேயன்றோ எனக்கு ஆகர்ஷகமுமாயிருக்கிறது. ரக்ஷணத்திலே தீக்ஷித்திருக்கிறவனுடைய பொய்யே. அவனுடைய பொய்யைக்கேட்டு அத்தாலே தரித்திருந்தேன்.

மூ.—சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்மறைந்தான்
அழன்றுகொடிதாகி யஞ்சுடரில் தானடுமால்
செழுந்தடம் பூஞ்சோலைசூழ் புல்லாணி கைதொழுதேன்
இழந்திருந்தே னென்ற னெழில்நிறமும் சங்குமே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுழன்று	(மேருவைச்) சுழல வருகிறவனாய்,	போய்	சென்று
இலங்கு	ப்ரகாசத்தைப்பண்ணுகிறவனான	மறைந்தான்	அஸ்தமித்தான்;
வெம்கதிரோன்	உஷ்ணகிரணனான ஸூர்யன்	அம்சுடர்இல்	அழகிய கிரணங்களையுடைய சந்த்ரன்
தேரோடும்	(தன்) ரதத்தோடும்	அழன்று	வெப்பத்தையுடைய
		கொடிதாகி	க்ரூரனாய் [னாய்,
		தான்	தான்

கிறார் (இனியித்யாதி). கீழ்வாக்யவிவரணம் (அவனுடைய வித்யாதி). சப்தார்த்தம் (அவனித்யாதி). பேசிலுமென்றதுக்குத் தாத்பர்யம் (இவர்கள் ப்ரவர்த்திப்பிக்க வித்யாதி).

"புல்லாணி யெம்பெருமான்" என்றத்தைக் கடாக்ஷித் தருளுகிறார் (ரக்ஷணத்திலேயித்யாதி). (பொய்யே) பொய்யன்றோ இதுவென்கை. (௫)

அடும்	பாதியாநின்றான்;	புல்லாணிகைதொழுதேன்;	
ஆல்	கஷ்டம்;	என்தன்	(அப்படிப்பட்ட) என்னுடைய
செழும்	செழுமையையுடைய		
தடம்	தடாகங்களாலும்	எழில்நிறமும்	அழகிய நிறத்தையும்
பூம்சோலை	பூக்களையுடைய பொழில்களாலும்	சங்கும்	சங்குவளையையும்
		இழந்திருந்தேன்	இழந்துவிட்டேன்.
சூழ்	சூழப்பட்ட		(௬)

அவ;—ஆரும்பாட்டு. நமக்கு ஆஶ்வாஸத்தைப் பண்ணக்கடவனானவன் போய்க்கொடு நின்றான், நலிவார் பெருத்திரா நின்றது. அநுபவிக்கலான நிலத்தில் போய்ப் புகப்பெற்றிலோம்; இங்குள்ளவையும் நம்மை விட்டுப்போகா நின்றதென்கிறாள்.

வ்யா.—(சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய் மறைந்தான்) மேருவைச் சுழலவருவானாய், ப்ரகாஶத்தைப் பண்ணக் கடவனான வெவ்வியனான ஆதித்யனானவன் தன் ரதத்தோடே மறைந்தான். "சுழன்று" என்கிறது-ஜ்யோதிஶ்சக்ரத்தின் படியாலே என்னவுமாம். (௧) "ஒளியவன் விசும்பியங்கும் தேரும்போயிற்று" என்னக் கடவதிறே; நாயகன் கலந்து பிரிந்து போம்போது பார்த்து நிற்குமாபோலே, ஆதித்யன் போகிறபோது பார்த்து நின்றாள் போலே காணும். (அழன்று கொடிதாகி யஞ்சுடரில் தானடுமால்) அழகிய சுடரையுடையவனென்று சந்த்ரனைச்சொல்லுகிறதாயிற்று. அழற்றியையுடையனாய், தன்ஸ்வாபாவம் வேறுபட்டு ஶீதகிரணனானவன் முடியாநின்றானாயிற்று.

அரு·—ஆரும்பாட்டு. (சுழன்றித்யாதி) புல்லாணி யெம்பெருமானுடைய பொய்யே உனக்கு தாரகமாகில், அத்தைக்கொண்டு ஆறியிருக்கவொண்ணாதோவென்ன; ஆறியிருக்கும்படி எங்ஙனே யென்கிறாளென்றும் ஸங்கதியையுட்கொண்டு பாட்டுக்குத் தொகுத்த பாவமருளுகிறார் (நமக்கித்யாதி).

லோகத்ருஷ்ட்யா சுழலுகையை அருளிச்செய்து, ஶாஸ்த்ரத்ருஷ்ட்யா மேரு ப்ரதக்ஷிணத்தைச் சொன்னதாகத் தாத்பர்யம் (சுழன்றென்கிற வித்யாதி). மதுராநகரத்துக்குப் புறப்பட்டபோது க்ருஷ்ணனுடைய தேரைப் பார்த்திருந்த கோபிமாரைப்போலே, இவளும் நாயகன் பிரிகிறபோது தேரைப் பார்த்தாளாகத் திருவுள்ளம்பற்றி, அத்தாலே இங்கேயும் "தேரோடும் போய் மறைந்தான்" என்கிறாளென்றருளுகிறார் (நாயகனித்யாதி).

---

(௧) அ-டு-உ.

(செழுந்தடமித்யாதி) நானும் தானுமாய் நீர்விளையாடட்டாட வும்(க)"த்வதுத்ஸங்கஸமாவிஷ்டா-தவாங்கேஸமுபாவிஶம்" என்றுசொல் லுகிறபடியே, தன்மடியிலே சாயவும், பூம்பந்தெறிந்து விளையாட வும், அழகிதாகப் பாரித்தேன். (உ) "கள்ளவிழும் மலர்க்காவியும்" என்றாப்போலே நினைத்தவையெல்லாம் தலைக்கட்டினேமே? (இழந் திருந்தேனித்யாதி). தன்னோட்டை ஸம்ஶ்லேஷத்தாலே நிறமு மிரட்டித்துத் தன்பக்கலுள்ள ஆபரணங்களும் என்பக்கலிலே யாக வேணுமென்றாசைப்பட்டு, பரிசை யாசைப்பட்டு முதலை இழப் பாரைப்போலே முன்புள்ளவற்றையும் இழந்துவிட்டேன். (சு)

மூ;—கனையாரிடிகுரலின் கார்மணியின் நாவாடல்
தினையேனும் நில்லாது தீயில் கொடிதாலோ
புனையார் மணிமாடப் புல்லாணி கைதொழுதேன்
வினையேன்மேல் வேலையும் வெந்தழலே வீசுமே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கனைஆர்	(கர்க்கர) சப்தத்தால் நிறைந்ததாய்,	கொடிது	கொடிதாய் பாதியா
இடிகுரல்	இடிபோன்றத்வநியை யுடையதாய்	ஆல்	கஷ்டம். [நின்றது;
கார்	கறுத்திருக்குமதான	புனைஆர்	மிக்கவழகியதான
மணியின்	(ருஷபத்தின் கழுத்தி லிருக்கும்) மணியி னுடைய	மணிமாடம்	மணிமயமான மாடங் களையுடைய
		புல்லாணி கைதொழுதேன்;	
நாஆடல்	நாக்கின் சலநமானது	வினையேன் மேல்	பாவியான என்மேலே
தினையேனும்	ஒருதினையளவும் (கொஞ்சமும்)	வேலையும்	ஸமுத்ரத்தின் அலைக ளும்
நில்லாது	நில்லாமல் (பின்வாங் காமல்)	வெம்தழலே	க்ரூரமான நெருப்பை யே
தீயில்	அக்நியைக்காட்டிலும்	வீசுமே	வீசாநின்றது. (எ)

"என் என்றும்," "தன் என்றும்" சொன்ன இரண்டு பதத்தாலும், அவ னுடைய எழில்நிறமும் சங்கமுந்தான் ஆசைப்பட்டிருந்தவளாகையாலே, என்னுடையவும் தன்னுடையவும் எழில்நிறமும் சங்கமும் இழந்திருந்தே னென்று சப்தார்த்தமாய் தாத்பர்யம் (தன்னோட்டை யித்யாதி). ... (சு)

(க) ரா-ஸு-ரு-அ-கச. (உ) கூ-ரு-சு.

வ்யா.—எழாம்பாட்டு. (கனையாரித்யாதி) மிகவும் கர்க்கரமாய், இடிபோலே யிருந்துள்ள சப்தத்தையுடைய ருஷபத்தினுடைய கறுத்த மணியினுடைய நாவிலுண்டான ஸஞ்சாரமானது. அந்த நாருகளை சேக்கள் அடருகிறபோது அவை ஓடுகிறது, தலைமகன் மேல்விழத்தான் இருய்க்கும்படிக்கு ஸ்மாரகமாய் நலியா நின்றதாயிற்று. (க) "పురస్కృత్యరథే సీతాంవృషభో గోవధూమివ -புரஸ்க்ருத்ய ரதே ஸீதாம்ருஷபோகோவதூமிவ" என்னக் கடவதிறே. (தினையேனும் நில்லாது தீயில் கொடிதாலோ) ஒரு தினையளவும் பிற்காலியாதே அக்நியிற் காட்டில் கொடிதாகா நின்றது. அக்நி தண்ணீரென்னும் படியாயிற்று இதின் வெம்மை. அது உடம்பில் சுடுமத்தனையிறே, இது அகவாயிலே புக்கழிக்கவற்றிறே.

(புனையாரித்யாதி) ஸௌபரி ஐம்பது வடிவுகொண்டு புஜித்தாப்போலே, ரத்நங்களாலே பண்ணப்பட்ட மாடங்கள்தோறும் தானுமவனுமாய் அநுபவிக்கக்காணும் கோலிற்று. அதெல்லாம் செய்து சமைந்தேன். (வினையேன்மேல் வேலையும்) அப்ராப்யத்தை ஆசைப்படும்படியான பாபத்தைப்பண்ணின என்மேலே. (வேலையும் வெந்தழலே வீசுமே) இந்தத்வநிக்கு சேஷித்ததுண்டாகக்கொண்டு ப்ரமியாநின்று. இவள்தன் விரஹாக்நி தன்மேலே படாதபடி கடக்க நின்று வீசாநின்றதாயிற்று. .... (எ)

மூ.—தூம்புடைக்கைவேழம் வெருவமருப்பொசித்த
பாம்பினணையானருள் தந்தவா நமக்குப்
பூஞ்செருந்திப்பொன்சொரியும் புல்லாணிகைதொழுதேன்
தேம்பலிளம்பிறையு மென்றனக் கோர்வெந்தழலே. (அ)

அரு.—எழாம்பாட்டு. (கனையாரித்யாதி) சீதகிரணன் பாதியாநின்றான்; என்றாய். நிலாமுற்றத்தைவிட்டுஉள்ளேவரலாகாதோவென்ன; செவிவழியே வ்ருஷபத்தின்மணியும், வேலையும் நெருப்பைச் சொரியாநின்றதென்கிறாளென்று ஸங்கதி.

மாடங்களையுடைய புல்லாணியென்று பன்மையை விவக்ஷித்து உட்கருத்து (ஸௌபரீத்யாதி). (செய்து சமைந்தேன்) - செய்து தலைக்கட்டினேனென்று; வ்யங்க்யம் என்கிறாள் என்று சேஷம். (அப்ராப்யத்தை) என்றது-ப்ராப்தமஸுக்யத்தை யென்றபடி. ... ... (எ)

பதம்.	உரை.
தூம்புடை	தூம்புபோன்றதுளைகளையுடைத்தான
கை	துதிக்கையையுடைய
வேழம்	குவலயாபீடமானது
வெருவ	அச்சமுறும்படி
மருப்பு	தந்தங்களை
ஒசித்த	பிடுங்கினவனான
பாம்பினணையான்	திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரன்
நமக்கு	நம்விஷயத்தில்
அருள்தந்தவா	க்ருபைசெய்தபடி என்;
பூ	அழகிய
செருந்தி	செருந்திவ்ருக்ஷங்களானவை
பொன்	பொன்போன்ற புஷ்பங்களை
சொரியும்	உதிர்த்தாநின்றுள்ளதான
புல்லாணி கைதொழுதேன் ;	
தேம்பல்	இளமையால் மிக்க கார்ஶ்யத்தையுடைய
இளம்பிறையும்	பாலசந்த்ரனும்
என்தனக்கு	என்விஷயத்தில்
ஓர்	அத்விதீயமான
வெம்தழல்	வெப்பத்தையுடைய நெருப்பு போலிராநின்றான். (அ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (தூம்புடைக்கை வேழம்வெருவமருப்பொசித்த) தூம்புபோலே துளையையுடைத்தான கையையுடைய ஆனையானது வெருவும்படிக்கீடாக அதின்கொம்புகளைப் பறித்தானாயிற்று. (பாம்பினணையானருள் தந்தவாநமக்கு) ப்ரபல விரோதிகளை ஆற்றி, உகந்தார்க்குத் தன்னைக்கொடுக்கக் கடவனாக ஆசைப்பட்ட நமக்கு நம் விரோதிகளைமாற்றி நமக்கு தன்னைத் தந்தபடி காண். (பூஞ்செருந்தியித்யாதி) போக ([illegible]) யோக்யமான தேசத்தேறப்போய்ப்புக வரிதாகாநின்றது. அதுக்குமேலே விரோதிகளானவை வளர்ந்து செல்லாநின்றது. சந்த்ரனும் தன்குறையாற்றிக் கொள்ளமாட்டாதே என்னை நலியவல்லனாகாநின்றான். (அ)

அரு.—எட்டாம்பாட்டு. (தூம்பித்யாதி) வினையேனென்று நீ வெறுத்துக்கொள்ளுவானென்? தானே நம்விரோதிகளைப்போக்கி அருளுவனென்று தேறியிருக்க வொண்ணாதோவென்று சிலர்சொல்ல, நன்றாக வருள்செய்தானென்று பாலசந்த்ரனுக்கும் நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

(தந்தபடிகாண்)என்றவநந்தரம், "இப்படி நோவுபடுகிறது" என்றுசேஷம். (மாட்டாதே) என்றவநந்தரம் "இருந்தாலும்" என்று சேஷம். இத்தால் "தேம்பல்" என்று-இளமையால் பலித்த கார்ஶ்யத்தால் வந்த அலைச்சலையுடையவனென்று விசேஷித்ததுக்குக் கருத்துச் சொல்லிற்றாயிற்று. ... (அ)

மூ;—வேதமும்வேள்வியும் விண்ணுமிருசுடரும்
ஆதியுமானு னருள்தந்தவா நமக்குப்
போதலரும்புன்னைசூழ் புல்லாணிகைதொழுதேன்
ஓதமும் நானு முறங்காதிருந்தேனே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேதமும்	வேதங்களையும்,	அருள்தந்தவா	க்ருபைசெய்தபடி
வேள்வியும்	யாகாதிகளையும்,	போது	புஷ்பங்கள் [என்?
விண்ணும்	(அதற்குப்பலபூமியான) ஸ்வர்க்காதிகளையும்,	அலரும்	மலர்ந்திருக்கிற
		புன்னை	புன்னைமரங்களால்
இருசுடரும்	லோகப்ரகாசகரானசந்த்ரஸூர்யர்களையும் (கார்யமாகவுடையனாய்)	சூழ்	சூழப்பட்ட
		புல்லாணி கைதொழுதேன்;	
		நானும்	(அப்படிப்பட்ட) நானும்
ஆதியும்ஆனன்	(அவ்வழியாலே)ஜகத்காரணபூதனுமான எம்பெருமான்	ஓதமும்	ஸமுத்ரத்தின் அலைகளோடும்
நமக்கு	நம்விஷயத்தில்	உறங்காதிருந்தேன்	கண்ணுறங்காமலிருக்கிறேன். (௯)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (வேதமித்யாதி) ஜகத்துக்குக்கண் காட்டியாக வேதத்தைஉண்டாக்கி, அத்தாலே ப்ரதிபாத்யனை தன்னைக் கிட்டுகைக்கு ஸாதநமாக யாகாத்யுபகரணங்களையுமுண் டாக்கி, அதுக்குப்ப(ஃ)லபூமியான ஸ்வர்க்கங்களையுண்டாக்கி, ஜகத் துக்குப்ரகாஶத்தைப் பண்ணக்கடவரானசந்த்ரஸூர்யர்களையுமுண் டாக்கி, அவ்வழியாலேஜகதாகாரனாயிருக்கிறவன். (அருள்தந்தவாந மக்கு) அபேக்ஷியாதிருக்க இவற்றையுண்டாக்கினவன் அபேக்ஷை யுடைய நம்கார்யம் செய்தபடிகாண். ஸாமாந்யத்திலே பண்ணக் கடவது விசேஷத்திலின்றிக்கே யிருப்பதே? நாட்டுக்கு இட்ட அஂ

அரு.—ஒன்பதாம்பாட்டு. (வேதமித்யாதி). "அருள் தந்தவா நமக்கு" என்று அவனை வெறுக்கக்கூடுமோ? ஸகல ஜகதுபகாரகனன்றோ வென்ன; அது அங்ஙனேயாகிலும் எனக்கு உபகரித்தபடி இதுகாணென்று இரக்கமற்ற மையைச்சொல்லுகிறாளென்றுஸங்கதி.

கீழ்வாக்யவிவரணம் (நாட்டுக்கித்யாதி). அஂகம்(விலக்ஷணமான தாங்யர் திகள்). ... ... (௯)

கம் அந்தஃபுரத்துக்கு அரிதாவதே? (போதலரித்யாதி) போக([illegible]) யோக்யமான தேசத்திலே தானும் நானுமாக விடிவிளக்கு வைத்து உறங்காதே அநுபவிக்கக் கோலினேன். இனி இவனுக்கு உறங்காதிருக்கவன்றோவேண்டுவதென்று ஓதத்தை ஆளாகவிட்டுப் போனான். .... (கூ)

மூ.—பொன்னலரும்புன்னைசூழ் புல்லாணியம்மானை
மின்னிடையார்வேட்கை நோய்கூரவிருந்ததனைக்
கன்னவிலும்திண்டோள் கலியனொலிவல்லார்
மன்னவராய்மண்ணாண்டு வானாளு முன்னுவரே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொன்	பொன் போன்ற புஷ்பங்களை	கல்	கல்என்று
		நவிலும்	ஸ்துதிக்கும்படியான
அலரும்	அலர்த்தாநின்ற	திண்	பலிஷ்டமான
புன்னை	புன்னைமரங்களால்	தோள்	திருத்தோள்களையுடைய
சூழ்	சூழப்பட்ட		
புல்லாணியம்மானை	திருப்புல்லாணியிலெழுந்தருளியிருக்கும் எம்பெருமான் விஷயமாக	கலியன்	ஆழ்வார் (அருளிச்செய்த)
		ஒலி	இத்திருமொழியை
		வல்லார்	அப்ப்யஸித்தவர்கள்
மின்னிடையார்	பெண்பிறந்தாருக்கு	மன்னவராய்	அரசர்களாகி
		மண்	பூமியை
வேட்கை	ஆசையாகிற	ஆண்டு	அநுபவித்து
நோய்	மநோவ்யாதியானது	வான்	பரமபதத்தையும்
கூர இருந்த	மிகும்படியிராநின்ற	ஆளும்	ஆளும்படியாக
தனை	இருப்பை,	உன்னுவர்	பெறுவர்கள். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (பொன்னலரும்புன்னைசூழ் புல்லாணியம்மானை) நித்ய வஸந்தமான திருப்புல்லாணியை வாஸஸ்த்தாநமாகவுடையவனை. (மின்னிடையார் வேட்கைநோய்கூர விருந்ததனை) பெண்பிறந்தார்க்கு நோய்மிகும்படியாய்த் தங்கி யிருக்கிற விருப்புத்தான். (கன்னவிலுமித்யாதி) வ்யஸநங்களுக்கெல்லாம்

அநு.—பத்தாம்பாட்டு.(பொன்னலருமித்யாதி) “அலரும்”என்றுவர்த்தமாநநிர் தேசத்துக்குத்தாத்பர்யம் (நித்யேத்யாதி). “கல்”என்று, நவிலும்படியான-ஸ்துதிக்கும்படியான, திண்ணியதோளென்று சப்தார்த்தமாய், தாத்பர்யம் (வ்யஸநங்களுக்கெல்லாமித்யாதி). யுத்தவ்யஸநங்களுக்கென்கை. (கo).

ஜீயர்திருவடிகளேசரணம.

ஆடல் கொடுக்கவல்ல தோள்மிடுக்கையுடையரான ஆழ்வாரருளிச்செய்த திருமொழியை அப்யஸிக்கவல்லார் இங்கும் குறைவற அநுபவித்து, அங்கும் குறைவற அநுபவிக்கப் பெறுவர்கள். .... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
ஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்து அஞ்சாந்திருமொழி
தவளப்ரவேசம்.

வ்யா.—(க)"அஹமஸ்ம்யபராதாநாமாலய:- அஹமஸ்ம்ய பராதாநாமாலய:" ஆத்மாவுக்கு ஜ்ஞாநாநந்தாதிகள் நிரூபகமாயிருக்கை தவிர்ந்து, அபராதங்களையிட்டு நிரூபிக்கும்படியாயிற்றுத் துருப்பற்றிக்கிடந்தபடி. "ஜ்ஞாதாஹம், பகவச்சேஷைகரஸோஹம்- ஜ்ஞாதாஹம், பகவச்சேஷைக ரஸோஹம்" என்றிறே ஸ்வரூபமிருப்பது. ஆகையிறே (உ) "ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே - ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே" என்று ஸ்வரூபாபத்தி மோக்ஷமாகச் சொல்லுகிறது. இத்தால் இவனுக்கு ப்ரக்ருதிஸம்பந்தம் வந்தேறி யென்னுமிடம் சொல்லுகிறது. ரத்நாதிகளைச்சாணையிலே ஏறிட்டவாறே புகர்பெறுநின்றது. வந்தேறியாகையிறே அழுக்குக்கழிகிறது. அசித்ஸம்ஸர்க்க

அரு.—தவளவிளம்பிறையின் ப்ரவேசம்;—பாத (ஞூ) கபதார்த்தத்துக்கு அஞ்சி, திருக்குறுங்குடியிலே கொடுபோய்விடச் சொல்லுகிறது- ஆத்மஸமர்ப்பணமாகையாலே, அந்தஆத்மஸமர்பணத்தின்ஸ்வரூபத்தை விஸ்தரேண ப்ரமாணார்த்தோபந்யாஸ முகேந வருளுகிறார் (அஹமஸ்மீத்யாதி). ஆத்மஸ்வரூபம் ஜ்ஞாநாதிகளை இட்டு நிரூபிக்கவேண்டியபடியிருக்குமென்றதுக்கு ப்ரமாணோபபத்திகளை அருளுகிறார் (ஜ்ஞாதேத்யாதி வாக்யத்வயத்தாலே). "ஜ்ஞாநாதிகள்-ஸ்வபாவம்; ப்ரக்ருதிஸம்பந்தம்-வந்தேறி" என்னுமதுக்குஜ்ஞாபகமேதென்ன (ரத்நாதிகளையித்யாதி). ரத்நாதிகளுக்கு அழுக்குக் கழிந்தாலும், அநாதியான அசித்ஸம்பந்தம் கழலக்கூடுமோவென்ன ; (அசித்ஸம்ஸர்க்கமித்யாதி). அநாதியாகச்சொன்ன ப்ரமாணந்தானே அந்தவத்தாகச் சொல்லுகை

(க) அஹிர்பு-ருகூ-ரு அ. (உ) சாந்தோ-அ-கஉ-உ.

கமஅநாதியாயிருக்கச்செய்தேஅந்தவத்தாகவும்குறைவற்றிருந்தது. (க) [అకిఞ్చనః - அகிஞ்சநஃ] இப்படி அபராதங்களுக்கு கொள்கல மாகாநின்றேனென்கிற அநுதாபமின்றிக்கே இருக்கை. [అనన్యగతిః - அநந்யகதிஃ] இப்படி ஒரு கைம்முதலுமில்லாதபின்பு இவன் தயநீய னென்று இரங்கி கைக்கொள்ளுகைக்கு தேவரையொழியவேறொருவ ரில்லை. புகுவாசலற்றபடி.

(உ) [త్వమేవోపాయభూతో మే భవ - த்வமேவோபாயபூதோமேபவ] ஆராய்ந்துபார்த்தவிடத்து நானும் எனக்கின்றிக்கே இருந்து. பிறரும் எனக்கின்றிக்கே யிருந்தபின்பு, நீ ஒருவனுமே உபாயமாக வேணும். [ఇతి ప్రార్థనామతిః - இதிப்ரார்த்தநாமதிஃ] இது புரு ஷார்த்தமாய்த் தலைக்கட்டுகைக்கு இந்தபுத்தி விசேஷமே வேண்டு வது. ஆத்மஸத்தையோபாதியிறே ஸ்வீகாரமும். (ங) [మామ్-மாம்] என்னை-ஏகமென்றுப்போலேயிருக்கிறது. [శరణాగతిరిత్యుక్తా - ஶரணாகதிரித்யுக்தா] இது-சரணாகதியென்று சொல்லப்பட்டது. [సా - ஸா] அந்தஶரணாகதியானது. [దేవేऽస్మిన్ ప్రయుజ్యతామ్-தேவேஸ்மிந்ப்ரயுஜ்யதாம்] சரண்யனான ஸர்வேஶ்வரன்பக்கலிலே இதுசெய்யவடுப்பது. ஒரோவ்யக்திகளிலும் இதுதானே ஹாநஹேதுவாகா நின்றதிறே. நீர்மையாலே ரக்ஷிப்பாருமுண்டோ?

யாலே கழலக்குறையென்னென்று கருத்து. (அநுதாபமின்றிக்கே) என்ற ச(ஃ)காரத்தாலே, கர்மாத்யுபாயாந்தரங்களில்லை யென்னுமிடம் கிம்புநர் ந்யாயஸித்தமிறே யென்று ஸூசிதமாகிறது.

(நீ ஒருவனுமே)என்கிறஏவகாரத்தாலே ப்ரார்த்தநாமதியினுடைய உபா யத்வமும் தவிர்க்கப்படுகிறதென்றுவிவக்ஷித்தது.ஆனால் இப்ப்ரார்த்தனைதான் வேண்டுவானென்னென்னவருளுகிறார் (இதுவித்யாதிவாக்யத்வயத்தாலே). இப்படிஸ்வீகாரத்தில் உபாய பாவம்தவிர்த்தவிடமுண்டோவென்ன (மாமித் யாதி). ஶரண்யனை இவ்விஷயத்திலேதானே செய்யவேணுமோ? மற்றைய விஷயத்தில் பலியாதோவென்ன (ஒரோவித்யாதி). ப்ரபத்தி வ்யாஜமாத்ர மாய், ஶரண்யனுடைய குணமே ஹேதுவாகையாலே, ஶரண்யனுடைய தோஷமே ஹாநஹேதுவாய், இது அதுக்கும் வ்யாஜமாகக் காண்கையாலே பலித்ததில்லை யென்றுகருத்து. ஶரண்யனுடைய குணத்தாலே பலித்த விடத்தை யருளுகிறார் (நீர்மையாலே யித்யாதி).

(க)ஸ்தோ-ர-உஉ. (உ) அஹி-ஸம்ஹி-ஙஈ-ஙஅ. (ங) கீ-கஅ-சுசு,

கீழே சில பக்ஷிகளைத் தூதுவிட்டு, நெஞ்சைத் தூதுவிட்டு அவை மீண்டு வருவதற்கு முன்னே பாத (ஃ) க பதார்த்தங்கள் கையிலே நலிவுபட்டு, தாய்மார் தோழிமாரடைய ஹிதம்சொல்லி மீட்கப்பார்க்க, உங்களுடைய ஹிதவசநம் கேட்டுமீளாதபடி நெஞ்சு அவன் பின்னே போயிற்று; அதுவருமளவும் அவன்சொன்ன வார்த்தையை விஸ்வஸித்திருக்குமத்தனை யென்று துணிந்தவிடத்திலும், அவன்வரக்கண்டிலள். இவ்விடம் ஒருத்தியுடைய ஆற்றுமையைப் பரிஹரிக்கைக்காக வந்திருந்த விடமாகையாலே அங்கு ஆறியிருக்கவுமாம்; இது அங்ஙனன்றிக்கே நம்முடைய துஃக்க நிவ்ருத்திக்காக வந்திருக்கிற தேசமிறே. ஆனபின்பு திருக்குறுங்குடியிலே என்னைக் கொடுபோய்ப் பொகடுங்கள்; கால்நடைதருவாரென்கிறாள். .... *

அதாவது - இக்ஷ்வாகுவம்ஶத்து ராஜாவான சிபி சக்ரவர்த்தி யென்கிறவன் தப்பாமல் ப்ரஜைகதரக்ஷணம் பண்ணிக்கொடு வருகிறகாலத்திலே, இவனைச்சோதிக்கைக்காகதேவர்களும்யமனுமாகக்கூடி, யமன்பக்ஷியாக, தேவர்கள் அத்தைத் துரத்திக்கொடுவாரா நிற்கச்செய்தே, இந்த பக்ஷி சக்ரவர்த்தியை வந்து சரணமடைய, அப்போது தேவர்கள் எங்களுக்கு அந்த பக்ஷியைக் காட்டித் தரவேணுமென்ன; சரணம் புகுந்தத்தை நான் காட்டித்தாரேனென்ன; ஆனால் அந்தபக்ஷியத்தனை மாம்ஸம் உன்சரீரத்திலே அறுத்துத் தாவென்ன; அவனும் அதுக்கிசைந்து ஒருதராசிலே பக்ஷியைவைத்து மற்றைத் தராசிலே மாம்ஸத்தை அறுத்துவைக்க, பின்னேயுமது தாழ்ந்து கொடுக்கையாலே சதையுள்ள வளவும் அறுத்தறுத்துவைக்க, அதுவும்போராமையாலே தானும் அந்தத்தட்டிலேஏற, அவ்வளவிலே ஸந்தோஷித்துப் புஷ்ப வர்ஷம் வர்ஷித்து வேண்டிய வரங்களும் கொடுத்துப் போனார்கள். அப்போது அவன் நீர்மையாலே ரக்ஷித்தானென்றபடி.

ஆகையாலே இதரரிடத்தில் பலித்ததும் பலியாததுமாயிருக்கும்; இவ்விஷயமே பலவ்யாப்தமென்று கருத்து. இவ்வாத்மஸமர்பணந்தானும் திருப்புல்லாணி யெம்பெருமான் விஷயத்திலாக வொண்ணாதோ? * ஏழையேதலனிலே பண்ணினதே அமையாதோ? என்னும்ஶங்கையிலே வருளுகிறார் (கீழேயித்யாதி). (இவ்விடம்) திருப்புல்லாணி. (ஆறியிருக்கவுமாம்) அவன் வாராதே யாறியிருக்கவுமா மென்றபடி. ... ... *

மூ.—

தவளவிளம்பிறை துள்ளுமுந்நீர்த் தண்மலர்த் தென்றலோடன்றி லொன்றித்
துவளவென்னெஞ்சகம் சோரவீரும் சூழ்பனிநாள் துயிலாதிருப்பேன் [னை
இவளுமோர் பெண்கொடியென்றிரங்கா ரென்னலமைந்து முன்கொண்டுபோ
குவளைமலர்நிறவண்ணணர் மன்னு குறுங்குடிக்கே என்னையுய்த்திடுமின். (௧)

பதம்.	உரை.
தவள	(மிக்க நிர்மலமான)
இளம்பிறை	பால சந்த்ரனும்,
துள்ளும்	துள்ளா நின்றுள்ள அலைகளையுடைய
முந்நீர்	ஸமுத்ரமும்,
தண்	குளிர்ந்து ப்ரமஹரமான
மலர்	புஷ்பங்களில் வ்யாபரீத்த
தென்றலோடு	தக்ஷிண மாருதத்தோடு
அன்றில்	அன்றில் பக்ஷியும்,
ஒன்றி	ஒருகூட்டமாய்ச் சேர்ந் [து
என்	என்னுடைய
நெஞ்சகம்	ஹ்ருதயமானது
துவள	துர்பலமாம்படியாகவும்
சோர	வாடும்படியாகவும்
ஈரும்	பாதியாநின்றதுகள்;
சூழ்	எங்கும் பரவிக்கிடக்கிற
பனி	பனியையுடைய
நாள்	காலத்தில்

பதம்.	உரை.
துயிலாது இருப்பேன்	கண்ணுறங்காம லிருப் [பேன்;
இவளும்	"இவளும்
ஓர்	ஒரு
பெண்கொடி	லதைபோன்ற அபலை
என்று	என்று [யன்றோ?"
இரங்கார்	க்ருபைபண்ணுகிறிலர்;
என்	என்னுடைய
நலம்ஐந்தும்	(ஶ்ரோத்ராதிகளால் வரும்) ஐந்துஜ்ஞாந [ங்களையும்
முன்	முன்னமே
கொண்டுபோன	அபஹரித்துப்போன
குவளைமலர் நிறம்	குவலய புஷ்பத்தின் நிறம்போன்ற
வண்ணர்	திருமேனிநிறத்தையுடையஎம்பெருமான்
மன்னு	பொருந்திவர்த்திக்கிற
குறுங்குடிக்கே	திருக்குறுங்குடி என்கிற திவ்யதேசத் [தேற
என்னை	என்னை
உய்த்திடுமின்	கொடுபோய்ச்சேர்த்துவிடுங்கள். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (தவளவித்யாதி) ஒருவிஷயத்தை ஆசைப்பட்டுப் பெறுதேயிருக்கிற நமக்கு நாட்டுப்பகையாய் விட்

அரு.—முதற்பாட்டு. (தவளமித்யாதி) கீழ்த்திருமொழியில் சொன்ன பாத (ஞா) க பதார்த்தங்களைச் சேரவநுஸந்தித்துத் தாத்பர்யம் (ஒருவிஷ

டது. (தவளவிளம்பிறை) அறநிர்மலமாய், தன்பருவம் நிரம்பாதே எல்லார்க்குமொக்க, வைத்த கண்வாங்காதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படியான தர்ஸநீயமான சந்த்ரன். (துள்ளுமுந்நீர்) அக்நி போலே. (க) "ஏஷைவாஶம்ஸதே லங்காம் - ஏஷைவாஶம்ஸதேலங்காம்" என்னுமாபோலே, நான், நானென்று முற்பட்டுக்கொண்டுவருகிற சிறுதிவலையை யுடைத்தானகடல். (தண்மலர்த்தென்றலொடு) ஸரஸமான மலரிலே போய்ப்புக்கு. (உ) "பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட:- பத்மகேஸர ஸம்ஸ்ருஷ்ட:" என்கிறபடியே அதுதன்னிலும் ஆழவிழியில் வெக்கை தட்டுமென்று பார்த்துத்தாதையும் சுண்ணத்தையும் ஏறிட்டுக் கொண்டு பரிமளத்தைக் கொடுவந்து தோற்றின தென்றலோடே கூட. (அன்றில்) அவைபோலே ஒருவிசேஷணமிட்டு விசேஷிக்க வொண்ணாதே ஸத்ரீவதம்பண்ணவல்ல அன்றில். (ஒன்றி) அராஜகமான தேசத்தில் வன்னியரடையத் தங்களிலே கைசெய்து கிழோலைவிட்டு நாலுவாசலையும் வந்து பற்றுமாபோலே. இவை இப்படி எல்லாம் கூடித்திரண்டு ஒருமுகம்செய்து செய்கிறதுதானென்னென்னில்;

(துவளவித்யாதி) முன்பே விரஹத்தாலே தரைபற்றியிருக்கிற என்னுடைய ஹ்ருதயமானது துவளும்படியாகவும் சோரும்படியாகவும் ஈராநின்றது. ம்ருதுவாயிருப்பதொரு கொழுந்தைநெருப்பிலே இடுவாரைப்போலே ஈரும். எதிர்த்தலையில்எளிமை கண்டவிது தனக்கிடமாக நலியாநின்றதாயிற்று. (சூழித்யாதி) எனக்குத்தான் ஒருவர்தேட்டமாயோவிருக்கிறது. (ந) "ஒழுகுநுண்பனிக் கொடுங்கிய பேடையையடங்க வஞ்சிறை கோலித்தழுவுநள்ளிருள்" என்கிறபடியே அணைத்த நாயகனுடைய கைக்குள்ளே அடங்க வேண்டுங்காலத்திலே அவனைப் பிரிந்து பாத (ஜ) க பதார்த்தங்களின்கையிலே அகப்பட்டுக் கண்ணுறங்காதே யிருக்கிற என்னை.

யாதி). "துள்" என்றதுக்குத் தாத்பர்யம் (அக்நியித்யாதி). அக்நிபோல "பாத (ஜ) கமாய்க்கொண்டு" என்று சேஷம். (கைசெய்து) - வ்யூஹம் செய்து. (கிழோலை)-ரஹஸ்யமாக ஓலைஎழுதுகை. (நாலுவாசல்) என்றதுக்கு- சக்ஷுஸ் த்வக் க்ராண ஸ்ரோத்ரங்களைச் சொன்னபடி.

(தேட்டமாயோ) என்றது - பாத (ஜ) கரை வேறே தேடவேண்டி

(க) (உ)ரா-கி-க-எக. (ந) அ-ரு-அ.

(இவளுமோர் பெண்கொடி யென்றிரங்கார்) இவளொரு அபலையன்றோ? இதுக்கெல்லாம் இவள் ஆடல் கொடுக்கவல்லளோ? என்று நம்பக்கலிலே க்ருபை பண்ணுகிறிலன். அன்றிக்கே தம்மைப் பிரிந்து பத்துமாஸம் ஜீவித்திருந்தவளோபாதியாக நினைத்திரா நின்றார். (என்நலமித்யாதி) "என்நலமைந்தும்" என்கிறவிது-ஶ்ரோத்ராதிகளால் வருமறிவையென்னுதல்; அன்றிக்கே,(க)"என்நலனும்-என் நிறைவும்" என்கிறத்தை என்றமுதினார். (குவளையித்யாதி) இவை கொடுபோகைக்கிட்ட மருந்தாயிற்றிது. வடிவைக்காட்டிக் கண்டதடையப் பகையாம்படிபண்ணிப்பொகட்டுப்போன இவ்விடம் போலன்றிக்கே இவைதான் அநுகூலமாம்படி அவன் நித்யவாஸம் பண்ணுகிற தேசத்திலே கொடுபோய்ப் பொகடுங்கள். .... (க)

மூ.—

தாதவிழ்மல்லிகை புல்லிவந்ததண் மதியி னிளவாடையின்னே
ஊதைதிரிதந்துழறியுண்ண வோரிரவு முறங்கே னுறங்கும்
பேதையர்பேதைமையாலிருந்துபேசிலும்பேசுகபெய்வளையார்[மின்
கோதைநறுமலர்மங்கைமார்பன் குறுங்குடிக்கே என்னையுய்த்திடு

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாது	தாதுகளானவை	இளவாடை	இளமையானவாடையாகிற
அவிழ்	நெகிழாநின்றுள்ள		
மல்லிகை	மல்லிகை புஷ்பங்களினுடைய	ஊதை	குளிர்காற்றானது
		இன்னே	இப்படியே
புல்லி	புறவிதழ்களில்	திரிதந்து	அங்குமிங்கும் ஸஞ்சரித்து
வந்த	ஸம்பந்தித்த		
தண்மதிஇன்	குளிர்ந்த சந்த்ரனுடைன் (கலந்த)	உழறி	தொகைத்து
		உண்ண	முடிக்க,

யோவென்கை. "இவளும்" என்றச(உம்)காரத்தாலேலோகத்தில் பாலைகளோபாதிஎன்றும் ஸூசிதமாய்த்தாத்பர்யமருளிச்செய்து, இவளும்என்றத்தாலே அவளோபாதி இவளுமென்றாக்கி அர்த்தாந்தரமருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி). "நலம்" என்று பக்தியாய், அதுதானும் ஜ்ஞாநமேயாகையாலே வருளுகிறார் (ஶ்ரோத்ரேத்யாதி). "என்நலனுமென்நிறைவுமென் சிந்தையுமென்வளையுங் கொண்டென்னையாளுங்கொண்டு" என்கிறவிடத்தில் சொன்ன அவற்றை விவக்ஷித்தருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி). குறுங்குடிக்கே குடிபோந்தால் பிறை முதலானவை பாதியாதோவென்ன (வடிவையித்யாதி). ... (க)

(க) தி-நெ-உரு.

ஓரிரவும்	ஒருராத்ரியிலும் கூட	பேசிலும்	பழிப்பாகச்சொல்லிலும்
உறங்கேன்	உறக்கமின்றிக்கே கிடக்கிறேன்;	பேசுக	சொல்லுகிறார்கள்;
பெய்	இடப்பட்ட	நறு	பரிமளிதமான
வளையார்	வளையையுடையராய்,	மலர்	புஷ்பத்தில் வாஸம் செய்கிற
உறங்கும்	உறக்கத்தையே தேட்டமாக வுடைய	கோதை	மயிர்முடியையுடைய
பேதையர்	அறிவுகேடர்கள்	மங்கை	பெரியபிராட்டியாரை
பேதைமையால்	(தங்கள்) அஜ்ஞாநத்தால்	மார்பன்	திருமார்பிலே யுடையரான எம்பெருமான் வர்த்திக்கிற
இருந்து	(உறங்காதே) இருந்து	குறுங்குடிக்கே என்னைஉய்த்திடுமின்.	

வ்யா.—இரண்டாம்பாட்டு. (தாதவிழ்த்யாதி) மல்லிகையானது - தாதவிழ்கிற வளவிலே போயணைந்தது; அது உஷ்ணிக்குமே; அந்த வெக்கையைச் சந்த்ரனோடே கலசி ஆறி அநுகூலமாய்க்கொண்டு மந்தமாக ஸஞ்சரிக்கிற வாடையாகிற. (ஊதை) "ஊதை" என்று - குளிர்காற்றுக்குப்பெயர். "ஊதையும், கூதையும்-குளிர் பனிக்காற்று" என்னக்கடவதிறே. வாடைநலிகிறபடி எங்ஙனேயென்னில்; (இன்னே) என்னுமித்தனை. வாடைநலிகிறபடியைச் சொல்லில் வாய் வேம். (திரிதந்துழறியுண்ண) ஆனைக்கண்டமத்தகஜம்போலே கால்வாங்கினபோதே அங்கே இங்கே ஸஞ்சரித்துத் துகைத்து முடிக்க; (ஓரிரவு முறங்கேன்) ஒருபோதுஉறக்கத்தோடு செலுத்தி, மற்றொருபோது கண்ணுறங்காதே நோவுபடுகையன்றிக்கே, காலமெல்லா முறக்கமின்றிக்கே நோவுபடுகிறேன்.

அரு;—இரண்டாம்பாட்டு. (தாதித்யாதி) நீ "நாட்டைப் பகைத்து என்னைக் குறுங்குடிக்கே உய்த்திடுமின்" என்றாய்; உன்னைப்போலே அபிமதரைப் பிரிந்தாரில்லையோ? அவர்கள் இத்தனை நோவுபட்டு உறங்கார்களோ? நாங்கள் உன்னைக் கொடுபோனால் ஏசுவர்கள் என்றறியிருக்கலாகாதோ என்ன, அறியாதார் ஏசினால் நமக்கென்ன குறையென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

விசேஷித்துக் கேட்டதற்கு ஸாமாந்யமாக "இன்னே" என்பானென்னென்ன வருளுகிறார் (வாடையித்யாதி). "உழறி" என்றதினர்த்தம் (தொகைத்து) என்றது. கீழ்ப்பாட்டில் சூழ்பனிநாளென்றாள்; இதில் ஓரிரவுமென்றதுக்குக் கருத்து (ஒருபோதித்யாதி).

(உறங்கும்பேதையர்) அபிமதரைப் பிரிந்தால் வரும் க்லேசமறியாத அறிவுகேடரானவர்கள் காற்றுக்கு இறாயாதே, அது வரும் வெளிநிலம் தேடிப் படுக்கைபடுப்பார்களாயிற்று ; அவர்கள் தந்தாமுடைய அறிவுகேட்டால் "இவள்-வாடைக்கிடையாநின்றாள், கண்ணுறங்குகிறிலள், அவன்றான் வருமளவும் ஆறியிருக்கிறிலள்" என்றவிது தன்னை குணஹாநியாக நினைத்துப்பழிசொல்லிலும் சொல்லுகிறார்கள். (பெய்வளையார்) கையில் வளை தொங்குவார் சொல்லும் வார்த்தைகொண்டு நமக்குக் கார்யமென்? (கோதையித்யாதி) நம்முடைய ப்ராவண்யத்தை குணஹாநியாக உபபாதிக்கையன்றிக்கே (௧) "[illegible] - நகஶ்சிந்நாபராத்ய்யதி" என்று பொறுப்பித்து அவன் திருவடிகளோடே சேர்க்குமவள் இருந்தவிடத்தே கொடுபோய்ப் பொகடுங்கள். .... (௨)

மூ.—

காலையும்மாலை யொத்துண்டுகங்குல் நாழிகையூழியில் நீண்டுலாவும்
போல்வதோர் தன்மைபுகுந்துநிற்கும்பொங்கழலேயொக்கும்வாடைசொல்லில்
மாலவன்மாமணிவண்ணன் மாயம்மற்றுமுள வவை வந்திடாமுன்
கோலமயில்பயிலும்புறவில் குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின் (௩)

உறங்குமென்றத்தாலே உறக்கமே தேட்டமானவர்களென்றுதோற்றுகையாலே அருளுகிறார் (அபிமதரையித்யாதி). "பெய்வளையரான பேதையர்-தங்கள் பேதைமையாலே உறங்காதேயிருந்துபேசினார்களாகிலும்" என்று சப்தார்த்தம் விவக்ஷித்து, அவர்கள் பேசுமவைதானும் "வாடையுண்ண" என்றும், "உறங்கேன்" என்றும், "இப்படிஎன்" என்றும், சொன்னபதங்களால் ஸித்தமாமவற்றை அருளுகிறார் (இதுதன்னையித்யாதி). பெய்கை-இடப்படுகையாய், இடப்பட்டவளையை யுடையவர்கள்" என்றத்தாலே நாயகவைலக்ஷண்யஜ்ஞாநம் ஸ்ப்புடீக்ருதமென்றுவிவக்ஷித்தருளுகிறார் (கையிலித்யாதி). கோதையாலே மயிர் முடியென்றும், அவற்றையுடைய மங்கையென்றும் சப்தார்த்தமாய், இப்படி விசேஷித்தத்தாலே தன்னுடைய போக்யதையால் அவனை வசீகரித்து நம்கார்யம்செய்யவல்லவளென்று பலிக்கையாலே இத்தையருளுகிறார் (நம்முடைய வித்யாதி). ... ... (௨)

அரு.—மூன்றாம்பாட்டு (காலையித்யாதி). "பேசிலும் பேசுக" என்று இத்தனைபதறுவானென்? போதுவிடியாதோ? அதுவே போதுபோக்கியிருக்கலாம்; இந்த ராத்ரியினுச்சியானவன்றோ இதுக்குப் பொறுத்திருக்கவடுக்கும்

---

(௧) ரா-யு-௧௧௬-௪௪.

பதம்.	உரை.
காலையும்	ப்ராத:காலமும்
மாலை	அந்திப்பொழுதுபோல்
ஒற்றுண்டு	பாதகமாய்க்கொண்டு
கங்குல்	ராத்ரியில் [ம்,
நாழிகை	நாழிகையானது
ஊழியில்	கல்பத்திற் காட்டில்
நீண்டு	தீர்க்க (ஹ்ஸ்வ) மாகி
உலாவும்போல்வது	ஸஞ்சரிக்கிறுப்போ லிருக்கிற
ஓர்	ஒருவிதமான
தன்மை	ஸ்வபாவத்தை
புகுந்தும்	புகுந்ததாகவும்
நிற்கும்	ஆகாநிற்கிறது ;
வாடை	வாடைக்காற்றானது
சொல்லில்	(அதின் பாதகமானபடியைச்) சொல்லுமளவில்
பொங்கு	வ்ருத்தியை யடையாநின்ற
அழலேஒக்கும்	படபாமுகாக்நிபோலிராநின்றது ;

பதம்.	உரை.
அவன்	அந்த எம்பெருமான்
மால்	மிகவும் பெரியவனுகவும்,
மாமணிவண்ணன்	ஶ்லாக்யமான மணிபோன்ற வடிவுடையனுகவுமிராநின்ருன் ;
மாயம்	(அவன் விபூதியில்) பாதகமான ஆஶ்சர்ய பதார்த்தங்களும்
மற்றும்உள	அநேகம் உண்டு;
அவை	அவைகள்
வந்திடாமுன்	(பாதிப்பதற்காக) வருவதற்கு முன்
கோல	தர்ஶநீயமானமே
மயில்	மயில்களானது
பயிலும்	நெருங்கி வர்த்திக்கிற
புறவில்	பர்யந்தங்களையுடைய
குறுங்குடிக்கே என்னைஉய்த்திடுமின்.	

வ்யா.—மூன்றும்பாட்டு; (காலையும் மாலையொற்றுண்டு) காலையிலும் மாலையில் போலேயிருக்க, பாதித்து முடியாநின்றது. காலையும் மாலைபோலே பாதக (ஸாத்ய)மாகாநின்றது. (க) "காலையரும்பி - மாலையரும்" என்கிறபடியேயாயிருக்கிறபடியே யிருக்கிறதில்லை. ஏக

என்ன; அது அங்ஙனல்லவென்று அவற்றின் படிகளைச்சொல்லுகிருளென்று ஸங்கதி.

(காலையிலும்) என்றதுக்கு முன்பே "பாத(ஸாத்ய)கவர்க்கம்" என்று சேஷம். அர்த்தாந்தரம்(காலையுமித்யாதி). யுவதிகளுக்கு காமநை-காலையில் அல்பமாய், மாலையிலன்ருே அதிகமாவது, ததநுகுணமாயிராதோ? பாதை(ஸாத்ய)யுமென்ன வருளுகிருர் (காலையித்யாதி). "காலைபரும்பி" என்றதுக்கு யுவதிகளுடைய ஆற்ருமையை புஷ்பஸாமாதியாலே தமிழர் இப்படி வ்யவஹரிப்பாரென்றுகருத்து. "கங்குல்நாழிகையானது-ஊழியில்நீண்டுலாவும்போல்வதோர்தன்மை தன்னி

(க)

ரூபமாய் நலியாநின்றது. ராத்ரியில் நாழிகையானது கல்பத்திற் காட்டிலும் நெடிதாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிறுப்போலே யிருக்கிற ஸ்வபாவமானது கிட்டி நில்லாநின்றது. (பொங்கித்யாதி) வாடை பாதகமாகிறபடி தானே பேச்சுக்கு நிலமல்ல; சொல்லில், படபாமு காக்நிபோலே இராநின்றது.

(மாலவன்) அவனுகிறுன் - சாலப்பெரியானொருவனிறே. அவனுக்கு இவற்றுக்கு இடையவேண்டாவே. (மாமணிவண்ணன்) பெரியவனென்று கைவாங்கவொண்ணுதே? மேல்விழுந்து பெற வேண்டும்படியான வடிவைப்படைத்தவன். (மாயம்மற்றுமுள) அவன்விபூதியில் ஆஶ்சர்யமான பாத(ஜ)க பதார்த்தங்களுக்கு எண்ணில்லை. அன்றில், தென்றல், கடலோசை என்றுப்போலே சொல்லுகிற வற்றுக்கு ஓர் எண்ணில்லையிறே. (அவைவந்திடாமுன்) அவைநலிய அபக்ரமித்ததத்தனை. அவைவந்து நம்மைமுடித்துத் தலைக்கட்டுவதுக்குமுன்னே. (கோலவித்யாதி) நம்மினமுள்ளவூரிலே கொடுபோய்ப் பொகடப்பாருங்கள். தர்ஶநீயமான மயில் நெருங்கி வர்த்திக்கிற பர்யந்தத்தை யுடைத்தான திருக்குறுங்குடியிலே கொடுபோய்ப் பொகடப்பாருங்கள். .... (௩)

மூ.—

கருமணிபூண்டுவெண்ணுகனைந்து காரிமிலேற்றணர் தாழ்ந்துலாவும்
ஒருமணியோசை யென்னுள்ளந்தள்ள வோரிரவுமுறங்காதிருப்பேன்
பெருமணி வான வுருச்சிவைத்த பேரருளாளன்பெருமைபேசிக்
குருமணிநீர்க்கொழிக்கும் புறவில்குறுங்குடிக்கே யென்னையுய்த்திடுமின். (ச)

டத்திலே புகுந்ததாகாநிற்குமென்று சேஷம் திருவுள்ளம் பற்றியருளுகிறுர் (ராத்ரியிலித்யாதி). (ஸ்வபாவமானது) என்றவநந்தரம் தன்னைஎன்றுசேஷம். தன்னை-நாழிகையை என்கை.

அவன்மால் என்றந்வயித்துப்பெருமையைச்சொன்னதுக்கு உட்கருத்து (அவனித்யாதி), அளகபாரத்தாலே மயிலென்றும், ஸ்த்ரீகளைச் சொல்லுகை யாலே நம்மினமென்றது. ... ... (௩)

அரு. — நாலாம்பாட்டு. (கருமணியித்யாதி) திவாராத்ரவிபாகமற, காமமை-ஏகரூபமாய், அத்தாலே காலமும் நெடிதாகத் தோற்றி, பாதகபதார்தமும் நலியாநின்ற தென்றுய், எல்லாவற்றுக்கும் நெஞ்சிறே மூலம்; ஆகையாலே

பதம்.	உரை.
கரு	கறுத்த
மணி	மணிகளை
பூண்டு	தரியாநின்றும், [ளை
வெண்நாகு	வெளுத்தபசுங்கன்றுக
அணைந்து	ஸம்ச்லேஷியாநின்றும்,
மூர்த்தியைக்கைதொழவும்முடியுங்கொலென் மொய்குழற்கே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	ஶத்ருபக்ஷமான துர்யோதநாதிகள் மிகைத்தவன்று	தீர்த்தனை	பரமபவித்ரனாய்,
		பூ	தர்ஶநீயமான
		பொழில்	சோலைகளாலே
பார்த்தனுக்கு	அர்ஜுநன்பக்கலிலே	சூழ்	சூழப்பட்ட
அருளி	க்ருபை பண்ணி	திருமாலிருஞ் சோலை	திருமாலிருஞ்சோலையிலே
பாரதத்து	பாரதயுத்தத்திலே		
ஒரு	அத்விதீயமான	நின்ற	வந்து ஸந்நிஹிதனான
தேர் முன்நின்று	ரதத்தின் முன்னே நின்று	மூர்த்தியை	ஸர்வேஶ்வரனை
		என்	என்வயிற்றில் பிறந்த
காத்தவன்தன்னை	(அந்த அர்ஜுநனை) நோக்கினவனாய்,	மொய்குழற்கு	அடர்ந்த கூந்தலையுடைய இவளுக்கு
விண்ணோர்	நித்யஸூரிகளுக்கு		
கருமாணிக்க	நீலபர்வதம்போல் அநு	கைதொழவும்	அவனைத்தொழுதலும்
மாமலையை	பாவ்யமான வடிவையுடையனாய்,	முடியுங்கொல்	தலைக்கட்டுமோ?.(அ)

அரு;—ஏழாம்பாட்டு. (புள்ளித்யாதி) தாத்பர்யமருளிச்செய்து சப்தார்த்தமருளுகிறார் (தெளிந்தவித்யாதி). "வணங்கித்தொழ" என்கையாலேமநோரதம் இவளுக்கிதுவேயென்றருளுகிறார் (அந்தவித்யாதி). ... ... (எ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (பார்த்தனுக்கன்றருளி) சத்ருபக்ஷமான துர்யோதநாதிகள் மிகைத்தவன்று, க்ருஷ்ணன் அர்ஜுநன் பக்கலிலே க்ருபையைப்பண்ணி பாரதஸமரத்திலே சத்ரு நிரஸநத்துக்குப் பரிகரமான தேரிலே ரதியைச் சிறுமவனுக்குத் தானிலக்காய்க்கொண்டு உடம்புக்கிடாதே வெறுங்கையோடேநின்று, அவனை நோக்கினவனை. ஒருவிபூதிக்காக முன்நின்றபடி சொல்லுகிறது. இப்படி சத்ருக்கள் முன்னே தன்னை அழிவுக்கிட்டவனை. இப்படி நோக்கினவன்றானென்னில்; (விண்ணோரித்யாதி) நித்யஸூரிகள் பரிந்து நோக்க, அவர்களுக்கு அநுபாவ்யமாய், ஶ்ரமஹரமாய், ஸ்ப்ருஹணீயமான வடிவை யுடையனாயிருக்கிறவனை.

(தீர்த்தனை) அவர்களுக்கு அவ்வடிவை அநுபவிக்கைக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற விருப்பு - தன்பேறாகையால் வந்த சுத்தியையுடையவனை. (பூம்பொழிலித்யாதி) அவர்களநுபவித்த வடிவழகை இங்குள்ளார் இழவாதபடி தனக்கு வாஸஸ்தாநமாகப் போரும்படி தர்ஶநீயமான பொழிலாலே சூழப்பட்ட திருமலையிலே நிற்கிற ஸர்வேஶ்வரனை. (கைதொழவித்யாதி) தன்மயிர்முடியாலே இவனைத்துவக்கவல்ல இவள் அவனைத் தொழுதாளாய்த் தலைக்கட்டவல்லளேயோ?. .... (அ)

மூ;—வலம்புரியாழியனை வரையார்திரடோளன்றன்னைப்
புலம்புரிநூலவனைப்பொழில் வேங்கடவேதியனைச்
சிலம்பியலாறுடைய திருமாலிருஞ்சோலைநின்ற
நலந்திகழ்நாரணனை நணுகுங்கொலென்னன்னுதலே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வலம்புரி	வலம்புரிச்சங்கையும்	புலம்புரி	கண்டாரிந்த்ரியங்கள் தன் பக்கல்துவக்கும்படியான
ஆழியனை	திருவாழியையுமுடையனாய்,	நூலவனை	திருயஜ்ஞோப வீதத்தை யுடையனாய்,
வரைஆர்	மலைபோலே		
திரள்	திரண்டிருந்துள்ள		
தோளன் தன்னை	திருத்தோள்களை யுடையனாய்,		

அரு.—எட்டாம்பாட்டு. (பார்த்தனுக்கித்யாதி) பார்த்தன்தேரூர்ந்தது ஒருபார்த்தனுக்காகவோ? ஸ்ரீபூமிப்பிராட்டிக்காகவும், தேவர்களுக்காகவுமன்றோவென்ன; அது உபலக்ஷணமென்கிறார் (ஒருவித்யாதி). ... ... (அ)

பொழில்	சோலைகளுக்கு	நின்ற	வந்து ஸந்நிஹிதனாய், எழுந்தருளிய,
வேங்கடம்	திருவேங்கடமலையிலே நின்றருளுமவனாய்,	நலம்திகழ்	நன்மைவிளங்காநின்ள்ள
		நாரணனை	ஸ்ரீமந்நாராயணனை
வேதியனை	வேதைகஸமதிகம்யனாய்,	என்	என்வயிற்றில் பிறந் வளாய்
சிலம்பு இயல் ஆறுஉடைய	நூபுரங்களையுடைத்தான	நல்நுதல்	விலக்ஷணமான நெ றியையுடையளா இவள்
திருமாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலையிலே	நணுகும்கொல்	(அவனைக்) கிட்டிவி வல்லளேயோ. (

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (வலம்புரியித்யாதி) ஆஶ்ரித ரக ணத்துக்கிடான பரிகரத்தை யுடையவனை. அப்பரிகரத்தை யொழி யவும் ரக்ஷிக்கைக்கிடான கோலமுடைக்கை யுடையவனை. ரக்ஷித்தில னேயாகிலும் விடவொண்ணாதபடி கண்டாரிந்த்ரியங்கள் தன் பக்க லிலே துவக்கைக்கிடான திருயஜ்ஞோபவீதத்தை யுடையவனை ரக்ஷிக்கைக்குப் பாங்காக ரக்ஷ்யவர்க்கமுள்ள விடங்தேடி, வேதைக ஸமதிகம்யனாய்வைத்துக் கண்ணுக்கிலக்காம்படி திருமலையிலே நின் வனை. அது தன்னைப் பரத்வத்தோடொக்கச் சொல்லலாம்படி எத்தனையேனும் சாலத்தன்னியர்க்கும் முகம் கொடுத்துக்கொ இத்திருமலையிலே நிற்கிற நீர்மையில்ஏற்றத்தையுடையவனை. நித்ய ஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்கமுகம் கொடுத்துக்கொண்டி ருக்கிற விடமிறே இவ்விடம். ஸ்வர்க்கத்தில் அப்ஸரஸ்ஸூக்கள் வ தாஶ்ரயிக்க, அவர்களுடைய சிலம்பினுடைய ஸ்வபாவத்தை யுடை

அ;—ஒன்பதாம்பாட்டு. (வலம்புரியித்யாதி) கோவலனானவன் * மந் பாய் வடவேங்கடவனாகையாலே, வடமாமலையப்பனை அநுபவித்துக்கொண் தென்திருமாலிருஞ்சோலை மலையில் அழகரையும் சேர்த்து அநுஸந்திக்கி றென்று ஸங்கதி.

"புலன்களனைத்தன் பக்கலிலே, புரியும்படியான்-திரும்பும்படியான்" என்று சப்தார்த்தமாய் தாத்பர்யம் (ரக்ஷித்திலனித்யாதி). "அப்ஸரஸ்ஸூ கள் ஆஶ்ரயிப்பார்கள்" என்று சேஷம்பூரித்து, வாக்யத்வயமாக யோஜிப்பத (ஸ்வபாவத்தை) - சப்திக்கையை. ... ... (

ந்தான ஆற்றையுடைய திருமலையிலேவந்து நிற்கிறகல்யாணகுணங்
ளாலும் உஜ்ஜ்வலிதனாகாநின்றுள்ள ஸர்வாதிகனை ஸர்வேஶ்வர
னக் கிட்டுகைக்கு யோக்யமான அழகையுடைய இவள் அவனைக்
ட்டிவிட வல்லளேயோ?. .... (க)

மூ;—தேடற்கரியவனைத் திருமாலிருஞ்சோலை நின்ற
ஆடல்பறவையனை யணியாயிழை காணுமென்று
மாடக்கொடிமதிள்சூழ் மங்கையார் கலிகன்றிசொன்ன
பாடல்பனுவல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே.

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம். (கo)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தேடற்கு	(ஸ்வயத்நத்தாலே) தேடுகைக்கு	கொடி	கொடிகளோடு கூடின
அரியவனை	அஶக்யனாய்,	மதிள்	திருமதிள்களாலே
திருமாலிருஞ் சோலை	திருமாலிருஞ் சோலையிலே	சூழ்	சூழப்பட்ட
நின்ற	வந்து ஸந்நிஹிதனாய்,	மங்கையார்	திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரதாநரான
ஆடல்பறவை யனை	பெரிய திருவடியை வாஹநமாகவுடையனை ஸர்வேஶ்வரனை	கலிகன்றி	கலியன்
அணி ஆய்	தரிக்கப்பட்டனவான	சொன்ன	அருளிச்செய்த
இழை	ஆபரணங்களையுடையளான விவள்	பாடல்	பாடலான
காணும் என்று	காணுமென்று,	பனுவல்பத்தும்	பாசுரங்களின் பத்தையும்
மாடம்	மாடங்களில் நாட்டின	பயில்வார்க்கு	அப்யஸிப்பார்க்கு
		பாவங்கள்	ப்ராப்தி ப்ரதிபந்தகங்களான பாபங்கள்
		இல்லை	கழியப்பெறும். (கo)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேடற்கரியவனை) தானே தன்னைக் கொடுவந்து காட்டில் காட்டுமத்தனையல்லது, ஸ்வயத்நத்தால் ஒருவராலும் ப்ராபிக்க அரிதானவனை. (திருமாலித்யாதி) திருவடி திருத்தோளிலே ஏறித் திருமலையிலே வந்து தன்னைத்தானே கொடுவந்து காட்டினவனை. அவனைக்காண்கைக்கிடாகத் தன்னை அலங்கரித்துக்

அரு.—பத்தாம்பாட்டு. (தேடற்கித்யாதி) "அணி-தரிக்கப்பட்ட, ஆய்-ஆன, இழைகளையுடையவள்" என்றாய் தாத்பர்யம் (அவனையித்யாதி). "காணு

கொண்டிருக்கிற இவள் சாறுமென்று, மாடக்கொடிகளோடுகூடின மதிள்கள் இவற்றாலே சூழ்ந்திருக்கிற திருமங்கையிலுள்ளார்க்கு ப்ரகாசரான ஆழ்வாரருளிச்செய்த பாடலான பனுவல்பத்தையும் அப்யஸிப்பார்க்கு ப்ராப்திப்ரதிபந்தகங்களடங்கலும்போம். காணுங்கொலோ என்கிற ஸம்சயம் இவர்தம்மோடேயாய், இவருடைய ப்ரபந்தத்தை அப்யஸிப்பார்க்கு ப்ராப்தியில் ஒருகண்ணழிவில்லை.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

ஒன்பதாம்பத்து ஒன்பதாம்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஒன்பதாம்பத்து பத்தாந்திருமொழி

எங்களெம்மிறை ப்ரவேசம்.

வ்யா.—எங்களெம்மிறையின் ப்ரவேசம்:—ஸர்வாபேக்ஷிதப்ரதனாய்க்கொண்டு திருமலையிலே வந்து நிற்கிற நிலையை அநுஸந்தித்தார்கீழ். அத்தனைபோதுவான நிலைதவிர்ந்து ஆஶ்ரிதர்க்கே ஸ்வமாய்க்கொண்டு திருக்கோட்டியூரிலே எழுந்தருளி நிற்கிற நிலையை அநுஸந்திக்கிறார். அவன் பண்டு, பெற்ற தமப்பன் பகையாக

ம்'' என்றது - காணுங்கொலோ என்று ஸம்ஶயித்து நிஶ்சயித்த நிஶ்சயமென்று திருவுள்ளம்பற்றி யருளுகிறார் (காணுங்கொலென்கிறவித்யாதி). ஸம்ஶயபூர்வகமாக நிஶ்சயிக்கவேண்டாதே, முதலடியிலேதானே நிஶ்சிதமென்கை. ... ... (க௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு;—எங்களெம்மிறையின் ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே ''மூவரில் முதல்வன்'' இத்யாதியாலே பொதுவாக ஸகலருக்கும் உபகரித்தபடிகளை அநுஸந்தித்தவர்-இத்திருமொழியிலே ''எங்களெம்மிறை'' என்றுஉபக்ரமித்தபடியைத்திருவுள்ளம்பற்றி-ஸங்கதியருளுகிறார் (ஸர்வேத்யாதி).(ஸர்வாபேக்ஷிதப்ரதனாய்) என்றது -ஸர்வருக்கும் அபேக்ஷிதங்களைக்கொடுப்பானாய் என்கை. அநாத(ர)ர்க்கெல்வம்பானபடியை உபபாதித்துக்கொண்டு நிகமிக்கிறார் (அவ

ஶ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்குதவி, அவன் விரோதியைப்போக்கி *அதிருங்கழல் பொருதோளிரணியனாகம் பிளந்தரியாய், உதிரமளைந்தகையோடே நிற்கிற தேசமென்றும், அவன் தான் அநேகமவதாரங்கள்பண்ணி ஆஶ்ரிதர்க்கு உதவினவனென்றும் நினைத்து, அத்தனை பொதுவான நிலைதவிர்ந்து ஆஶ்ரிதர்க்கே ஸ்வம்மாய்க்கொண்டு திருக்கோட்டியூரிலே எழுந்தருளி நிற்கிறவனுடைய ஸௌலப்யத்தை அநுஸந்தித்துப்ரீதராய்அநுபவிக்கிறார். ப்ரஹ்லாதாதிகளுக்கு (௧)"మత స్సర్వ మహం సర్వమ్-மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்" என்னலாம்படி ஹ்ருதயத்தை விடாதேயிருந்து ப்ரஸாதத்தைப்பண்ணுமவன் திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானென்கிறார். ....

மூ;—

எங்களெம்மிறையெம்பிரா னிமையோர்க்கு நாயகனேத்தடியவர்
தங்கள்தம்மனத்துப் பிரியாதருள்புரிவான்
பொங்குதண்ணருவிப்புதம்செய்யப் பொன்களேசிதறவிலங்கொளி
செங்கமலமலரும் திருக்கோட்டியூரானே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எங்கள் எம் இறை	எங்களுக்கு அஸாதாரண ஸ்வாமியாய்,	அருள்புரிவான்	(அவர்களுக்கு)ப்ரஸாதத்தைப் பண்ணுமவனான எம்பெருமான்,
எம்பிரான்	எங்களுக்கு அஸாதாரணோபகாரகனாய்,	பொங்கு	கிளர்த்தியையுடையதாய்
இமையோர்க்கு	நித்யஸூரிகளுக்கு	தண்	குளிர்ந்திருந்துள்ள
நாயகன்	நிர்வாஹகனாயும்,	அருவிசெய்ய	அருவிகளோடொத்த (அருவிகள் நீர்மாறாதே ஒழுகுமாபோலே)
ஏத்து	ஸ்தோத்ரம் பண்ணாநின்றுள்ள	புதம்	மேகங்களானவை
அடியவர்தங்கள் தம்	அடியார்களுடைய	பொன்களே	பொன்களையே
மனத்து	நெஞ்சிலே	சிதற	சிந்த
பிரியாது	பிரியாதேயிருந்து		

னித்யாதி). முதற்பாட்டில்ப்ரமேயத்தையருளுகிறார் (ப்ரஹ்லாதேத்யாதி). ப்ரஹ்லாதன்நிமித்தமாக ருஷிகள் கோஷ்ட்டிபண்ண; அதுக்காகப்ரத்யக்ஷமாகைபாலேதிருக்கோட்டியூரென்றுபேராகையாலே (ப்ரஹ்லாதாதிகளுக்கு) என்று.

(௧) வி-பு-௧-௧௯-௮௫.

(அத்தாலே) இலங்குஒளி — மிக்க ஒளியையுடைத்தாய்,	அலரும் — (மாறுதே) அலராநின்றுள்ள
செம்கமலம் — செந்தாமரைமலர்களானவை	திருக்கோட்டியூரானே — திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானவன். (௧)

வ்யா.—முதற்பாட்டு. (எங்களித்யாதி) எங்களிலே விரிந்த சொல்லு "எம்" என்று; எங்கள் ஸ்வாமியென்றபடி. (எம்பிரான்) உபகாரகன். (இமையோர்க்குநாயகன்) ❋ அயர்வறுமமரர்களதிபதி. அயர்வறுமமரர்களதிபதியாயிருந்து ஆஸ்ரிதரான எங்களுக்கு ஸ்வாமியாய், உபகாரகனுமாய். (ஏத்தடியவர்தங்கள்தம்மனத்து) "அடியவர்தங்கள்" என்றது - அடியவர்க்கென்றபடி. தம்திருநாமத்தைச் சொல்லி ஏத்தும்படியாக நெஞ்சைப்பிரியாதேயிருந்து அவர்களுக்கு ப்ரஸாதத்தைப் பண்ணுமவன். பொங்கென்று - மேலுக்கு. புதம்-அம்புதம்;- ஆகிறது-மேகம்.

(பொங்குதண்ணருவிப்புதம்செய்ய) கிளர்ந்து ப்ரமஹரமான அருவிகள் நீர்மாறுதே ஒழுகுமாபோலே. (புதம்பொன்களேசிதற) மேகம் பொன்களையே சிந்த. அத்தாலேமிக்க ஒளியையுடைத்தாய், செந்தாமரைகள் மாறுதே அலர்ந்ததிருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானவன். .... (௧)

அரு;-முதற்பாட்டு.(எங்களித்யாதி). "எங்கள்"என்றும், "எம்"என்றும் புநருக்தமன்றோவென்ன (எங்களிலேயித்யாதி). "எங்கள்" என்றபதத்தில்அர்த்தத்தைத்தானேவிவரிக்கிறசொல்லென்றபடி. இரண்டுபதம்சொன்னதுக்குப்ரயோஜநம் (எம்மென்றித்யாதி). அஸாதாரண்யம்தோற்ற "எம்மிறை" என்று விசேஷித்தாரென்றுகருத்து. "எம்பிரான்"என்றவிடத்திலும், "எம்" என்றது அஸாதாரண்யத்யோதகமென்று விவக்ஷித்தருளுகிறார். (உபகாரகன்) என்று. "தங்கள்" என்றும், "தம்" என்றும் இரண்டிருக்கையாலே, இதுவும் விரிந்த சொல்லாகை உசிதமென்று விவக்ஷித்து, அடியவரானதங்களுக்கே, அஸாதாரணமான-பவ்யமானவென்று விவக்ஷித்தருளுகிறார் (அடியவரித்யாதி).

(பொங்கென்று)என்றது-"பொங்குதண்ணருவி" என்றதென்றபடி.(மேலுக்கு) என்றது-புதமென்கிறபதத்துக்கு மேலேயிருக்கிற செய்யவென்கிற பதத்துக்கென்றபடி. இப்படிஅந்வயித்தக்ரமத்திலே அர்த்தமருளுகிறார் (கிளர்ந்தித்யாதி). "செய்ய" என்றது-ஒத்தவென்றாய், (ஒழுகுமாபோலே) என்றது. (௧.

மூ;—எவ்வநோய்தவிர்ப்பானெமக்கிறையின்னகைத்துவர்வாய்நிலமகள்
செவ்விதோயவல்லான் திருமாமகட்கினியான் [தம்
மௌவல்மாலைவண்டாடும் மல்லிகைமாலையோடு மணைந்தமாரு
தெய்வநாறவரும் திருக்கோட்டியூரானே. (௨)

பதம்.	உரை.
எமக்கு	எனக்கு
இறை	வகுத்த ஸ்வாமியாய்,
எவ்வம்	து:க்காவஹமான
நோய்	வியாதிகளை
தவிர்ப்பான்	போக்குகைக்காக,
இன்நகை	புன்சிரிப்பையும்
துவர்வாய்	சிவந்த அதரத்தையு முடைய
நிலமகள்	ஸ்ரீ பூமிப்பிராட்டியி னுடைய
செவ்வி	செவ்வியை
தோயவல்லான்	அநுபவிக்கவல்லனாய், (அத்தாலே)
திருமாமகட்கு	பெரியபிராட்டியாருக்கு
இனியான்	போக்யபூதனான எம்பெருமான்,
வண்டு	வண்டுகளானவை
ஆடும்	(மதுபாநார்த்தமாக) ஆடாநின்றுள்ள
மௌவல்மாலை	ஜாதிமல்லிகைப் பூமாலையோடும்
மல்லிகைமாலையோடும்	மல்லிகைப்பூமாலையோடும்
அணைந்த	கூடியணைந்த
மாருதம்	காற்றானது
தெய்வம் நாற வரும்	அப்ராக்ருதமான பரிமளத்தை கந்தி(ப்பி)க்கவந்துலாவா நிற்கிற
	திருக்கோட்டியூரான். (௨)

அவ.—இரண்டாம்பாட்டு. நம்முடைய து:க்கங்களையெல்லாம் போக்குகைக்காகப் பிராட்டிமாரோடேகூடத் திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானனென்கிறார்.

வ்யா;— (எவ்வநோயித்யாதி) எனக்கு வகுத்த ஸ்வாமியாகை

அரு;—இரண்டாம்பாட்டு. (எவ்வநோயித்யாதி). கீழ் தமக்குஅஸாதாரணஸ்வாமியாய் அருள்புரிவானென்றருளிச் செய்தார். இதில் புருஷகாரஸம்பத்தி குறைவற்றிருக்கையாலே நம் து:க்கங்களெல்லாம் போக்குமென்று அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதியை உட்கொண்டு அவதாரிகையருளுகிறார் (நம்முடையவித்யாதி).

"எமக்கிறை - எவ்வநோய் தவிர்ப்பான்" என்றந்வயித்து, எவ்வம் - து:க்கமாய்த்தாத்பர்யம் (எனக்கித்யாதி). வண்டோடு-மௌவல் இத்யாதிக்கந்வ

யாலே நம்முடைய துக்காவஹமான வ்யாதியைப்போக்கும் ஸ்வபாவனாய். (இன்னகைத்துவர்வாய்) இனியநகையையும் சிவந்த அதரத்தையுமுடைய ஸ்ரீபூமிப்பிராட்டியுடைய செவ்வியை அநுபவிக்க வல்லனாய், அத்தாலே பெரியபிராட்டியாருக்குஇனியன். (௧) "ந கச்சிந் நாபராத்யதி" என்றுகுற்றம்பொறுப்பிப்பாளொருத்தியும், பொறைக்கு உவாத்தாயிருப்பாளொருத்தியுமாகக் கூடி இனியனாயிருக்கிறவன். (மௌவலித்யாதி) மௌவல் மாலையோடும் மல்லிகைமாலையோடும் மதுபானம்பண்ணின வண்டுகள் ஆடாநின்றன. இவற்றோடேகூடி அணைந்தமாருதமுண்டு-காற்று, அது அப்ராக்ருதமான பரிமளத்தை கந்தி (ஸ்ப்ருஷ்டி) க்கவந்து உலாவாநிற்கும் திருக்கோட்டியூரானே. .... (௨)

மூ;—வெள்ளியான்கரியான்மணிநிறவண்ணன்விண்ணவர்தமக்கிறையெமக்
ஒள்ளியானுயர்ந்தா னுலகேழுமுண்டுமிழ்ந்தான் [தசை
துள்ளுநீர்மொண்டுகொண்டு சாமரைக்கற்றை சந்தனமுந்திவந்
தெள்ளுநீர்புறவில் திருக்கோட்டியூரானே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வெள்ளியான்	(க்ருதயுகத்திலே) வெளுத்த நிறத்தையுடையனாய்,	எமக்கு	எனக்கு
கரியான்	(கலியுகத்திலே) கறுத்த நிறத்தையுடையனாய்,	ஒள்ளியான்	தன்னழகைக் காட்டித்தந்தவனாய், (ப்ரளயகாலத்திலே)
மணிநிறவண்ணன்	(த்வாபரயுகத்திலே) பாசியின் பசும்புறம் போன்றநிறத்தையுடையனாய்,	உலகு ஏழும்	ஸப்தலோகங்களையும்
விண்ணவர் தமக்கு	நித்ய ஸூரிகளுக்கு	உண்டு	திருவயிற்றிலேவைத்து நோக்கி
இறை	நிர்வாஹகனாய்,	உமிழ்ந்தான்	(பிறகு) வெளிநாடு காண உமிழ்ந்தஸர்வேஸ்வரன்,
உயர்ந்தான்	ஸர்வஸ்மாத்பரனாய், (இப்படியிருந்தும்)	துள்ளும் நீர்	குறுந்திவலைகளையுடையநீரானது [ய
		சாமரைக்கற்றை	சாமரத்திரளையும்
		சந்தனம்	சந்தநத்தையும்

யம் திருவுள்ளம்பற்றி யருளுகிறார் (மௌவலித்யாதி). ... ... (௨)

(௧) ரா-யு-௧௧௩-௪௪.

மொண்டுகொ இழுத்துக்கொண்டு	தெள்ளும்நீர் கொழிக்கும்ஸ்வபாவத்
ண்டுவந்து வந்து	தையுடைய
உந்தி அசை தள்ளி அலையாநிற்ப	புறவில் பர்யந்தத்தையுடைத்
தாய்	தான
	திருக்கோட்டியூரான். (௩)

அவ;—மூன்றும்பாட்டு. அவ்வோயுகங்கள் தோறும் ஆஶ்ரயிப்பார் உகந்த திருநிறத்தைத்தானும் உகந்துகொண்டு ப்ரளயாத்யாபத்துக்களிலும் உதவும்ஸ்வபாவனானவன் திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானென்கிறார்.

வ்யா;—(வெள்ளியானித்யாதி). க்ருதயுகத்திலே வெளுத்த நிறத்தையுடையனாய், கலிகாலத்தில் ஏதேனும் வடிவுகொண்டாலும் விரும்புவாரில்லாமையாலே கறுத்ததிருநிறத்தையுடையனாய், த்வாபரத்திலே நீலநிறத்தை யுடையனாய், அயர்வறுமமரர்களதிபதியாய், ஸர்வாதிகனாய்வைத்து, எனக்குவைத்தகண்வாங்கவொண்ணாதபடி தன்னழகைக்காட்டி, ப்ரளயாபத்தில்ஜகத்தைஉண்டு ஆபத்ஸகனாய் உமிழ்ந்தவன்.

“ துள்ளுநீர் ” என்று - மேலுக்கு. குறுந்திவலைகளையுடைய திரைகளாலே நீரானது சாமரத்திரளையும் சந்தநத்தையும் இழுத்துக்கொடுவந்து தள்ளி அலையாநிற்பதாய்; (தெள்ளுநீர் புறவில்) கொழிக்கும் ஸ்வபாவத்தையுடைய பர்யந்தத்தோடேகூடின திருக்

அ௩;-மூன்றும்பாட்டு. (வெள்ளியானித்யாதி) பிராட்டிமார் அருகேயிருக்கையாலே நம்முடைய துக்கங்களைத் தீர்ப்பானென்றார் கீழ் ; அதுக்கடியான ஆபத்ஸகத்வத்தை அருளிச்செய்கிறரென்று ஸங்கதி திருவுள்ளம் பற்றி அவதாரிகை யருளுகிறார் (அவ்வோவித்யாதி).

(கறுத்த திருநிறத்தை) என்றது - * முழுதும் நிலைநின்ற கொண்டல் வண்ணமான ஸ்வாபாவிகவர்ணத்தைச் சொன்னபடி. (நீலநிறத்தை) என்றது - * பாசியின் பசும் புறம் போன்ற நிறமென்கை. “உயர்ந்தான் - எமக்கொள்ளியான் ” என்றந்வயித்தருளுகிறார் (ஸர்வேத்யாதி).

(மேலுக்கு) என்றது- “அசை ” என்கிற பதத்துக்குச் சேஷமென்றபடி. “ சாமரைக் கற்றை சந்தனம் மொண்டுகொண்டுவந்து துள்ளு நீராய், - துளி துளியான நீராய், அசைந்து துள்ளுகை ஸ்வபாவ மாகவுடைத்தான புறவில் ” என்று அந்வயம் திருவுள்ளம் பற்றித் தாத்பர்யம் (குறுந் திவலையென்று தொடங்கி, ஊரானே என்னுமளவும்). அந்வயம் முன்புபோலே தானே

கோட்டியூரானே. (தெள்ளுநீர்) தெளிந்த நீரையுடைய பர்யந்தமென்னுமாம்; (துள்ளுநீர்) கொழித்துவருகிற நீரானது. .... (௩)

மூ;—

ஏறுமேறியிலங்குமொண்மழுப்பற்று மீசற்கிசைந்துடம்பிலோர்
கூறுதான்கொடுத்தான் குலமாமகட்கினியான்
நாறுசெண்பகமல்லிகைமலர் புல்கி யின்னிளவண்டுநன்னறும்
தேறல்வாய்மடுக்கும் திருக்கோட்டியூரானே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏறு ஏறி	வ்ருஷபத்திலேயேறி	இனியான்	இனியனாயிருந்துள்ள ஸர்வேஶ்வரன்,
இலங்கும்	உஜ்ஜ்வலமாய்	இன்	தர்ஶநீயமாய்
ஒண்	அழகிதான	இள	பால்யாவஸ்த்தமான
மழு	‘மழு’ என்னும் ஆயுதத்தை	வண்டு	வண்டானது
பற்றும்	கையிலேத்திக்கொண்டிராநின்ற	நாறு	பரிமளத்தையுடைய
		செண்பகம்	செண்பகப்பூவையும்
ஈசற்கு	ருத்ரனுக்கு	மல்லிகைமலர்	மல்லிகைப்பூவையும்
இசைந்து	திருவுள்ளமொருப்பட்டு	புல்கி	தழுவி
		நன்னறும்	மிகவும்விலக்ஷணமான
உடம்பில்	தன்திருமேனியில்	தேறல்	தேனிலே
ஓர்கூறு	ஒருபாகத்தை	வாய்	வாயைவைத்து
கொடுத்தான்	கொடுத்தருளினவனாய்,	மடுக்கும்	உட்கொள்ளாநின்றுள்ள,
குலமாமகட்கு	பெரியபிராட்டியார்க்கு		திருக்கோட்டியூரான். (௪)

அவ;—நாலாம்பாட்டு. பிராட்டியோடொக்க ருத்ரனுக்கும் திருமேனியிலே இடங்கொடுத்த சீலவான் திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானானென்கிறார்.

திருவுள்ளம்பற்றி “துள்ளுநீர்” என்றதுக்கும், “தெள்ளுநீர்” என்றதுக்கும் அர்த்தாந்தரமருளுகிறார் (தெளிந்தவித்யாதி). ... ... (௩)

அந;—நாலாம்பாட்டில். (ஏறுமித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆபத்ஸகத்வாதி குணங்களைச் சொன்னார். தாழ்ந்தார்க்கு முகம் கொடுத்து ஆபத்தைப் போக்குமோவென்ன; ஸுசீலனென்கிறாரென்று திருவுள்ளம்பற்றி அவதாரிகையருளுகிறார் (பிராட்டியித்யாதி).

வ்யா;—(ஏறுமித்யாதி) வ்ருஷபத்திலேயும்ஏறி, உஜ்ஜ்வலமான அழகிய மழுவைப்பற்றும் ருத்ரனுக்கு; ஸர்வேஸ்வரன் திருவடியை வாஹநமாகவுடையனாயிருக்குமாகில் ஓர் எருத்தை ஏறி, அவன் திருவாழியைப்பிடிக்குமாகில் ஒருமழுவைப்பிடித்து இப்படி துர்மாநியான ருத்ரனுக்கு துர்மாநம்பார்த்து உபேக்ஷியாதே இசைந்து திருமேனியிலே ஒருகூறுகொடுத்தவன். (குலமித்யாதி) பெரியபிராட்டியாருக்கு (க) "பித்தர்பனிமலர்மேல் பாவைக்கு" என்கிறபடியே அவளோடொக்க இவனுக்கும் திருமேனியிலே இடம் கொடுத்தவன். "நாறுசெண்பகம்" என்றுமேலுக்கு, பரிமளத்தையுடைத்தான செண்பகப்பூ, மல்லிகை இவற்றைத்தழுவி, இவற்றால்வந்த உஷ்ணமாற்றுகைக்கு தர்ஸநீயமாய் பால்யாவஸ்த்தமானவண்டு அறவிலக்ஷணமான தேனிலே வாயை மடாநிற்கும் திருக்கோட்டியூரானே. .... (௪)

மூ;—

வங்கமாகடல்வண்ணன் மாமணிவண்ணன் விண்ணவர்கோன்மது
தொங்கல்நீண்முடியான் நெடியான்படி கடந்தான் [மலர்
மங்குல்தோய் மணிமாடவெண்கொடிமாகமீதுயர்ந்தேறிவானுயர்
திங்கள்தானணவும் திருக்கோட்டியூரானே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வங்கம்	மரக்கலங்களையுடைய	விண்ணவர்	நித்ய ஸூரிகளுக்கு
மாகடல்	மஹார்ணவம்போன்ற	கோன்	ஸ்வாமியாய்,
வண்ணன்	திருநிறத்தையுடைய	மது	தேனையுடைத்தான
மா	ஸ்லாக்யமான [வனாய்,	மலர்த்தொங்கல்	பூமாலையோடுகூடிய
மணி	நீலமணிபோன்ற	நீள்	ஆதி(௲)ராஜ்யஸூசக
வண்ணன்	திருநிறத்தையுடைய னாய்,		மான

"இசைந்து" என்றுவிசேஷித்த துக்குக்கருத்தென்னென்னவருளுகிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி). (மேலுக்கு) என்றது - நாறு செண்பக மலர் புல்கி என்ற வளவை உட்கொண்டு, வண்டென்றபதத் துக்கு மேலே அந்வயித்துக் கொள்வதென்கை. இதுக்கநுகுணமாக தர்ஸநீயமாய், (பால்யாவஸ்த்தமான வண்டு) என்று வாக்யத்தைமுந்துற அந்வயித்து, பரிமளேத்யாதியை அநுஸந்திப்பது. பருகும் என்னாதே, "மடுக்கும்" என்றதுக்குத் தாத்பர்யம் (இவற்றாலித்யாதி). ... ... (௪)

(க) திருநெ-௧௮.

முடியான்	திருவபிஷேகத்தை யுடையனாய்,	வெண்	வெளுத்த
நெடியான்	ஸர்வாதிகனாய்,	கொடி	த்வ (ஃ) ஜ படங்களானவை
படி	பூமிப்பரப்படங்க	மாகம்மீது	ஆகாசத்தின்மேலே
கடந்தான்	தன் திருவடிகளால் அளந்து கொண்ட ஸர்வேஶ்வரன்,	உயர்ந்து ஏறி	உயரப்பரந்து
		வான் உயர்	ஸ்வர்க்கத்திலே வர்த்திக்கிற
மங்குல்	மேகங்கள்	திங்கள்தான்	சந்த்ரனை
தோய்	தவழப்பெற்ற,	அணவும்	சென்று ஸ்பர்ஶியாநிற்கிற
மணி	ரத்நமயமான		
மாடம்	மாடத்திலே கட்டின		திருக்கோட்டியூரான். (௫)

அவ;—அஞ்சாம்பாட்டு. பண்டு பூமியை அளந்துகொண்டவன் இப்போது திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானனென்கிறார்.

வ்யா;—(வங்கமித்யாதி) மரக்கலங்களையுடைய மஹார்ணவம் போலேயுமாய், ஶ்லாக்யமான நீலமணிபோலேயிருக்கும் திரு நிறத்தை யுடையனாய்; (விண்ணவர் கோன்) இவ்வடிவை நித்யஸூரிகளுக்கு போக்யமாகக்கொடுத்த அயர்வறுமமரர்களதிபதியாய். (மது மலரித்யாதி) தேனையுடைத்தான பூமாலையோடேகூடின ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை யுடையனாய், ஸர்வாதிகனாய், பூமியெல்லாம் தன்கால்கீழே இட்டுக்கொண்டவன். "மங்குல்" என்று மேலுக்கு. மேகத்தில் சென்று கிட்டி மணிமயமான மாடத்திலே கட்டின வெள்ளைக்கொடி ஆகாசத்தின்மேலே உயரப்பரந்து ஸ்வர்க்கத்திலே வர்த்திக்கிற சந்த்ரனைச் சென்று ஸ்பர்ஶியாநிற்கும். (வானுயர்திங்கள்) மிகவுமுயராநின்ற சந்த்ரனை அணையாநின்றதிருக்கோட்டியூரானே!. .... (௫)

அ௫;—அஞ்சாம்பாட்டு (வங்கமித்யாதி) கீழ்ச்சொன்ன ஸௌஶீல்யத்தை பரத்வமென்னும்படி, ஸம்ஶ்லிஷ்டட ஸண்டாள விபாக(ஃX)மறவந்த நிரவதிக ஸௌசில்யத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

"மாகமீதுயர்" என்று விசேஷிக்கையாலே இதுக் குறுப்பாக "மங்குல் தோய்" என்றது கொடிபதத்துக்கு விசேஷணமாக அநுஸந்திப்ப தென்று விவக்ஷித்து அந்வயம் காட்டுகிறார் (மங்குலென்று மேலுக்கு என்று). வான் பதத்துக்கு அர்த்தாந்தரம் (மிகவுமித்யாதி). ... ... (௫)

மூ;—காவலனிலங்கைக்கிறைகலங்கச் சரம் செலவுய்த்துமற்றவன்
ஏவலம்தவிர்த்தானென்னை யாளுடையெம்பிரான்
நாவலம்புவிமன்னர் வந்துவணங்க மாலுறைகின்றதிங்கெனத்
தேவர்வந்திறைஞ்சும் திருக்கோட்டியூரானே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காவலன்	ஜகத்துக்குரக்ஷகன் தானே யென்றிருக்கு [மவனாய்	எம்பிரான்	அஸாதாரணோபகாரகனான ஸர்வேஶ்வர [ன்,
இலங்கைக்கு	லங்கைக்கு	மால்	"எம்பெருமான்
இறை	நிர்வாஹகனான ராவணன்	உறைகின்றது	வந்து ஸந்நிதி பண்ணுவது
கலங்க	முடியும்படிக்கீடாக	இங்கு என	இவ்விடத்திலே" என்று
சரம்	பாணங்களை	நாவலம்புவி	ஜம்பூத்வீபத்திலுள்ள
செலவுய்த்து	செல்லநடத்தி	மன்னர்	ராஜாக்கள்
மற்று	மேல்	வந்து	வந்து
அவன்	அந்த ராவணனுடைய	வணங்க	ஆஶ்ரயிக்க, (அத்தைக்கண்டு)
ஏவலம்	எய்யவல்ல மிடுக்கை	தேவர்	ப்ரஹ்மாதி தேவர்களு [ம்
தவிர்த்தான்	கழித்தருளினவனாய் (அச்செயலாலே)	வந்து	வந்து
என்னை	அடியேனை	இறைஞ்சும்	ஆஶ்ரயியாநிற்கிற
ஆளுடை	அடிமைகொண்ட	திருக்கோட்டியூரான். (௯)	

அவ;—ஆறும்பாட்டு. ராவணன் மிடுக்கையழித்த தசரதாத்மஜன் இப்போது திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானானென்கிறார்.

வ்யா;—(காவலனித்யாதி) ஈஶ்வரனோடொக்க நானும் காவலனென்று திக்பாலகர்களைத் தவிர்த்து ஜகத்துக்கு ரக்ஷகன் தானேயாய், லங்கைக்கு நிர்வாஹகனானவன் மலங்கும்படிசரங்களைச்செல்லநடத்தி ராவணனுடைய "எய்யவல்லார் என்னோடொப்பாரில்லை" என்னும்மிடுக்கைத் தவிர்த்து, அச்செயலாலே என்னை அடிமை

அநு;—ஆறும்பாட்டு. (காவலனித்யாதி) கீழ்ப்பாட்டில் ஸௌஶீல்யத்தை அநுஸந்தித்தவர், இப்பாட்டால் விரோதியை நிரஸிப்பானென்று அவனுடைய சக்தியை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

கொண்டிருக்கும் உபகாரகனானவன். "நாவலம்" என்றுமேலுக்கு. ஜம்பூத்வீபத்தில் ராஜாக்கள்வந்து ஆஶ்ரயிக்க,"ஸர்வேஶ்வரன்வந்து ஸந்நிதிபண்ணுகிறதிங்கே" என்று ப்ரஹ்மாதிகள்வந்து ஆஶ்ரயிக்கும் திருக்கோட்டியூரானே. .... (௬)

மூ;—

கன்றுகொண்டுவிளங்கனி யெறிந்தானிரைக் கழிவென்றுமாமழை
நின்றுகாத்துகந்தான் நிலமாமகட்கினியான்
குன்றின்முல்லையின்வாசமும் குளிர்மல்லிகை மணமுமளைந்திளம்
தென்றல்வந்துலவும் திருக்கோட்டியூரானே. (௭)

பதம்.	உரை.
கன்றுகொண்டு	வத்ஸாஸுரனைக் கொண்டு
விளங்கனி	விளாவின் கனியாய் நின்ற அஸுரனை
எறிந்து	உதிரவெறிந்து,
ஆநிரைக்கு	பசுக்களின் திரளுக்கு
அழிவு என்று	தீங்கு வருமென்று
மாமழை	மஹாவர்ஷத்தை
நின்று	(மலையையெடுத்து) ஒருபடிப்பட நின்று
காத்து	(பசுக்களை) ரக்ஷித்து
உகந்தான்	(ஆஶ்ரித விரோதி போக்கப் பெற்றோமென்று) திருவுள்ள முகந்தவனாய்
நிலமாமகட்கு	பூமிப்பிராட்டிக்கு

பதம்.	உரை.
இனியான்	(பூபாரத்தைப்போக்குகையாலே) இனியனான ஸர்வேஶ்வரன்
இளம்	இளமைதங்கிய
தென்றல்	தென்றல் காற்றானது
குன்றில்	மலையிலுண்டான
முல்லையின்	முல்லைப்பூவின்
வாசமும்	பரிமளத்தையும்
குளிர்	குளிர்ந்த
மல்லிகை	கொடிமல்லிகையின்
மணமும்	பரிமளத்தையும்
அளைந்து	தழுவி முழுசிக்கொண்டு
வந்து	நாற்புறமும் வந்து
உலவும்	உலாவாநின்றுள்ள

திருக்கோட்டியூரான். (௭)

அவ;—ஏழாம்பாட்டு. கன்றும் விளாவாயும் வந்த அஸுரர்களால் வரும் நலிவைப்போக்கி, கோவர்த்தநோத்தரணம்பண்ணின

(மேலுக்கு) என்றதுக்கு - "நாவலம் புவிமன்னர் வணங்க" என்றத்தை "இங்கென" என்றதுக்குமேலே அந்வயிப்பதென்று கருத்து. "மாலுறைகின்றது இங்கென, நாவலம்புவி மன்னர்வணங்க, அத்தைக்கண்டு தேவரும் வந்திறைஞ்சும் திருகோட்டியூர்" என்றந்வயம் திருவுள்ளம் பற்றி பலிதமான தாத்பர்யமருளுகிறார் (ஜம்பூவித்யாதி) ... ... (௬)

மஹாபதாநத்தையுடையவன், இப்போது திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானென்கிறார்.

வ்யா;—(கன்றித்யாதி) கன்றைக்கொண்டு விளாவை உதிர வெறிந்து, க்ருத்ரிமத்தால்வந்த இரண்டஸுரர்களையும் ஒன்றையிட்டொன்றை முடித்தவன். பசுக்களுக்கழிவு வருமன்று மஹாவர்ஷத்தை மலையை எடுத்துக்கொண்டு நின்று காத்து "இவற்றுக்குறுப்பாகப்பெற்றோம்" என்று உகந்தவன். (நிலமாமகட்கினியான்) பசுக்களையும் இடையரையும் காத்தால் உகப்பாள் - ஸ்ரீபூமிப்பிராட்டியிறே. பூபாரத்தைப் போக்குகையாலே ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு இனியனானவன். "குன்றின்" என்று மேலுக்கு. (குளிர்குன்றின் முல்லை) குளிர்ந்தமலையிலுண்டான முல்லையின்பரிமளமும். மல்லிகையின்பரிமளமும் அன்றிக்கே, குளிர்ந்த மல்லிகையின் பரிமளமும் அளைந்து ம்ருதுவான தென்றல் வந்து ஸஞ்சரியாநிற்கும் திருக்கோட்டியூரானே. .... (௭)

மூ;— [ந்து

பூங்குருந்தொசித்தானை காய்ந்தரிமாச்செகுத்தடியேனை யாளுகஉங்கென்னுள் புகுந்தானிமையோர்கள் தம்பெருமான்
தூங்குதண்பலவின் கனித்தொகுவாழையின் கனியொடுமாங்கனி
தேங்குதண்புனல் சூழ்த்திருக்கோட்டியூரானே. (அ)

அநு;—எழாம்பாட்டு. (கன்றித்யாதி) கீழ்ச்சொன்ன சக்திமத்வம் அகடித கடநாரூபேண விருக்குமென்றத்தை அநுஸந்திக்கிறரென்று ஸங்கதி.

விளங்கனி எறிந்ததும், மழைகாத்ததும் நிலமா மகளுக்கு இனியனாகைக்கு ஹேதுக்களென்று வ்யுத்க்ரமேண உபபாதிக்கிறார் (பசுக்களையு மித்யாதி வாக்யத்வயத்தாலே). (குன்றின் என்றது மேலுக்கு) என்றதுக்கு - அளைந்து என்றும்) அளவையும் "இளம் தென்றல்" என்றபதத்துக்கு மேலே அந்வயிப்பதென்கை. மல்லிகைக்குக் குளிர்ச்சிகூடாமையாலே, குளிர்பதத்தை-குன்றின் பதத்திலே அந்வயித்தருளிச்செய்து, கொடிமல்லிகைதான் குளிர்ச்சியுடைத்தாயிருக்கு மென்று அர்த்தாந்தரம் (அன்றிக்கேயித்யாதி). ... (௭)

அநு;—எட்டாம்பாட்டு. (பூமித்யாதி) கீழ், "விளங்கனி எறிந்து" என்று சொன்னது-ஒன்றுமேயோ, அநேக விரோதிகளெல்லாம் நிரஸித்துத் தம்திருவுள்ளத்திலிருந்தானென் றநுஸந்திக்கிறரென்று ஸங்கதி.

பதம்.	உரை.
பூ	பூத்துக்கிடந்த
குருந்து	குருந்தை
நுசித்து	(எளிதாக) முறித்து,
ஆனை	குவலயாபீடத்தை
காய்ந்து	சீறி (முடித்து),
அரி	வேகத்தை யுடைய
மா	குதிரைவடிவங் கொண்ட கேசியை
செகுத்து	கொன்று,
அடியேனை	அடியேனை
ஆளுகந்து	அடிமைகொள்ள விரும்பி
இமையோர்கள்தம்	நித்யஸூரிகளுக்கு
பெருமான்	நிர்வாஹகனை (மேன்மையைப் பாராதே)
ஈங்கு	இந்த ஸம்ஸாரத்திலே
என்னுள்	என்னுள்ளே

பதம்.	உரை.
புகுந்தான்	ப்ரவேசித் தருளின ஸர்வேச்வரன்,
மாங்கனி	மாம்பழமானது
தூங்கு	(பழுத்துத்) தொங்கா நின்றும்
தண்	அழகிதாயுமிருந்துள்ள
பலவின்கனி	பலாப்பழங்களோடும்
தொகு	திரட்சியை யுடைய
வாழையின் கனியோடும்	வாழைப்பழங்களோடும் கூட
தேங்கு	(வந்துவிழுந்து) தேங்கா நிற்பதாய்
தண்	ப்ரமஹரமான
புனல்	ஆறுகளாலே
சூழ்	சூழப்பட்டிருந்துள்ள
திருக்கோட்டியூரான். (அ)	

அவ;—எட்டாம்பாட்டு. குருந்து துடக்கமான விரோதிவர்க்கத்தைப் போக்கின க்ருஷ்ணன் இப்போது திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனானனென்கிறார்.

வ்யா.—(பூங்குருந்தித்யாதி) பூத்தகுருந்தை அநாயாஸேந முறித்து குவலயாபீடத்தை முடித்து. (அரிமா) வேகத்தையுடைத்தான கேசியைக்கொன்று. பச்சைக்குதிரை என்னவுமாம. (அடியேனையித்யாதி) என்னை அடிமைகொள்ளவிரும்பி * அயர்வறு மமரர்களதிபதியான மேன்மைபாராதே ஸம்ஸாரத்திலே என்னுள்ளே புகுந்தான். "தூங்கு" என்று மேலுக்கு. இற்றுவிழப் புகுகிறதோ என்னும்படி, பழுத்துத்தூங்கா நின்று அழகிதான பலாப்பழம், திரட்சியையுடைத்தான வாழைப்பழம், இவற்றோடேகூட மாம்பழம் வந்து விழுந்துதேங்கி ப்ரமஹரமான புனல்சூழ்ந்த திருக்கோட்டியூரானே!

---

* (தூங்கென்றுமேலுக்கு) என்றதுக்கு "ஓடு" என்றவளவும்-மாங்கனி என்ற பதத்துக்குமேலே கூட்டுகவென்று கருத்து. .... (அ)

மூ;—

கோவையின்தமிழ்பாடுவார் குடமாடுவார் தடமாமலர்மிசை
மேவுநான்முகனில் விளங்குபுரிநூலர்
மேவுநான்மறைவாணரை வகைவேள்வியாறங்கம் வலலவர்தொழும்
தேவதேவபிரான் திருக்கோட்டியூரானே! (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கோவை	கோர்வையை யுடைத்	நான்மறை	நாலுவகைப்பட்ட வேதங்களுக்கும்
இன்	இனிய [தாய்	வாணர்	வ்யாஸபதம் செலுத்த வல்லர்களாய்
தமிழ்	தமிழாலான இத்திரு மொழியை	ஐவகைவேள்வி	பஞ்சமஹாயஜ்ஞங்களும்
பாடுவார்	பாடுமவர்களாய்	ஆறுஅங்கம்	ஆறுவகைப்பட்ட வேதாங்கங்களும்
குடமாடுவார்	குடக்கூத்தைஆடுமவர்	வல்லவர்	கைவந்திருக்கும் ப்ரா ஹ்மணர்கள்
தடம்	விசாலமாய் [களாய்	தொழும்	ஆஸ்ரயிக்கிற
மா	பெரிதான	தேவதேவபி ரான்	ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணீயரான நித்யஸூரிகளுக்கு ஸ்வாமியான ஸர் வேஸ்வரன்,
மலர்மிசை	திருநாபீகமலத்திலே		திருக்கோட்டியூரான். (௯
மேவு	பிறந்த		
நான்முகனில்	சதுர்முகனிற்காட்டில்		
விளங்கு	உஜ்ஜ்வலமான		
புரிநூலர்	யஜ்ஞோபவீதத்தை யுடையராய்		
மேவும்	தன்னையுள்ளபடி பேசவல்ல		

அவ;—ஒன்பதாம்பாட்டு. தான் தன்னை ஸர்வப்ரகாரத்தா லும் அநுபவிக்கைக்கிடான பக்தியை யுடையராய், ப்ரஹ்மாவோடு ஸமாநரான ப்ராஹ்மணருக்கு ஆஸ்ரயணீயனாய்த் திருக்கோட்டியூர் லே வந்து ஸந்நிஹிதனானனென்கிறார்.

அநு;—ஒன்பதாம்பாட்டு. (கோவையித்யாதி) விரோதி நிரஸநசீலன் தம் திருவுளளத்திலிருந்தானென்றுமநுஸந்தித்தார். இப்படி என்னுள் புகுந் தது திருக்கோட்டியூரிலே பக்தர் ஆஸ்ரயிப்பாரில்லாதவனாயல்ல; பலரும் தொழுவார் இருக்க, தம்முடைய திருவுள்ளத்தில் புகுந்தானென்று மஹோப காரத்தை அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

வ்யா.—(கோவையித்யாதி) கோவையை யுடைத்தாய், இனிய தமிழான இத்திருமொழியைப் பாடுவார், செருக்காலே திருவாய்ப் பாடியில் படியாகக் குடக்கூத்தையாடுவாராய், திருநாபி கமலத்திலே பிறந்த சதுர்முகனிற்காட்டில் உஜ்ஜ்வலிதமான யஜ்ஞோபவீதத்தை யுடையரான ப்ராஹ்மணர். (மேவுநான்மறையித்யாதி) தன்னை உள்ளபடிபேசவல்ல வேதங்களுக்கு வ்யாஸபதம் செலுத்துவாராய், பஞ்சமஹாயஜ்ஞம், அங்கங்களாறும் கைவந்திருக்கிறவர்கள் ஆஸ்ரயிக்கிற. (தேவதேவபிரான்) ப்ரஹ்மாதிகளுக்கு ஆஸ்ரயணீயரான அயர்வறு மமரர்களுக்கு ஸ்வாமியானவன் இங்கேவந்துவர்த்திக்கிறவன். .... (௯)

மூ;—ஆலுமாவலவன் கலிகன்றிமங்கையர் தலைவனணிபொழில்
சேல்கள்பாய் கழனித்திருக்கோட்டியூரானை
நீலமாமுகில்வண்ணனை நெடுமாலையின்தமிழால் நினைந்தவிந்
நாலுமாறும் வல்லார்க்கிடமாகும் வானுலகே. (௰)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆலும்	ஸரஸ ஸஞ்சாரத்தை யுடைத்தான	கழனி	வயலையுமுடைத்தான
மா	குதிரையை	திருக்கோட்டியூரானை	திருக்கோட்டியூரிலே ஸந்நிஹிதனாய்,
வலவன்	நடத்தவல்லராய்,	நீலம்	நீலமாய்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு	மா	ஶ்லாக்யமான
தலைவன்	நிர்வாஹகரான	முகில்	மேகம்போன்ற
கலிகன்றி	ஆழ்வார்	வண்ணனை	திருநிறத்தை யுடையனாய்,
அணி	அழகிய	நெடுமாலை	வ்யாமுக்த(☨)னை ஸர்வேஶ்வரனை
பொழில்	சோலைகளையும்		
சேல்கள்	மத்ஸ்யங்களானவை		
பாய்	பாயாநின்றுள்ள	இன்	இனிய

(தான்) என்றது - தேவதேவபிரானென்றபடி. (கோவை) - ஒருகோர்வையாயிருக்கை. (இத்திருமொழி) என்றதுக்குத் திருக்கோட்டியூர் விஷயமானதாகையாலே, அங்குள்ளார் பக்தியாலே இத்தைக்கேட்டால் விடாதே பாடுவாரென்னும் கருத்தாலேயாகலாமென்று கருத்து. ... ... (௯)

தமிழால்	தமிழைக்கொண்டு	வல்லார்க்கு	கற்கவல்லவர்களுக்கு
நினைந்த	நினைந்த	வானுலகு	பரமபதமானது
இந்நாலுமாறும்	இப்பத்துப் பாட்டுக்களையும்	இடம்ஆகும்	இருப்பிடமாகும். (க0)

அவ;—பத்தாம்பாட்டு. ஆழ்வாரருளிச்செய்த இப்பத்தும் வல்லார்களுக்குப் பரமபதமே வாஸஸ்த்தாநமென்கிறார்.

வ்யா.—(ஆலுமாவித்யாதி) ஸாஸஞ்சாரத்தை யுடைத்தான குதிரையை நடத்தவல்ல ஆழ்வார். ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணுநின்ற குதிரையை நடத்தவல்ல ஆழ்வார்; திருமங்கைக்கு நிர்வாஹகரானவர், ஸம்ஸாரத்துக்கு ஆபரணமாம்படி அழகிய பொழிலேயும் சேல்கள் பாயாநின்றுள்ள வயலேயுமுடைய திருக்கோட்டியூரை யுடையனாய், நீலமாய் ஸ்லாக்யமான முகில்போலே யிருக்கும்திருநிறத்தையுடையனை ஸர்வேஸ்வரனை இனியதமிழைக்கொண்டு ஸம்ஸாரதாபம் தீரும்படியாக நினைத்த. (நீலமாமுகில்வண்ணனை) ஸ்ரமஹரமான வடிவையுடையவனை. அத்தாலே என்னை முறைஅறிவித்தவனை. வ்யாமுக்த(்)னவனை. (நினைந்தவிந்நாலுமாறும் வல்லார்) தமக்கினிதானவாறே பிரித்தநுபவிக்கிறார். இது கற்றவர்களுக்கு இடமாவது பரமபதம். .... (க0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
ஒன்பதாம்பத்து பத்தாந்திருமொழி
முற்றிற்று.

அரு.—பத்தாம்பாட்டு. (ஆலுமாவலவனித்யாதி) ஆலும்படி நடத்தவல்லவனென்னுதல்; ஆலாநிற்கிற குதிரையென்னுதல்; இவற்றையருளுகிறார் ஸாஸேத்யாதி வாக்யத்வயத்தாலே). "வண்ணம்" என்றது நிறமென்றாய், முகில்த்ருஷ்டாந்தம் நிறத்தாலே என்றருளிச்செய்து, வண்ணபதம் திருமேனிக்குவாசகமாய் அர்த்தாந்தரமருளுகிறார் (ஸ்ரமேத்யாதி). "மால்" என்றதுக்கர்த்தாந்தரம் (வ்யாமுக்தனவனை) என்றது. ... ... (க0)

பெரிய திருமொழி
ஒன்பதாம்பத்து
முற்றிற்று.

ஸ்ரீமதே ராமாநுஜாயநம:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி

பத்தாம்பத்து முதல்திருமொழி

ஒருநல்சுற்றம் ப்ரவேசம்.

வ்யா;—தன்னை உகந்தார்க்குத்தான்ஆஶ்ரயணீயனாய் திருக்கோட்டியூரிலே ஸுலபனானபடியை அநுஸந்தித்துத்தமக்கு நித்யகைங்கர்யம் பண்ணவேணுமென்னு மபேக்ஷையிலே கண்ணழிவில்லாமையாலும், அவன் தன்னைஉகந்தாரைப் பரமபதத்திலே கொடுபோய், நித்ய கைங்கர்யம்பண்ணுவித்துக்கொள்ளும் நிருபாதிகபந்துவாகையாலும், திருப்பதிகளை அநுபவித்த ஆழ்வார் பரமபதத்துக்கும் போகக்கணித்தென்று அத்யவஸித்து, நவோடையானபெண் பிறந்தகத்தினின்றும் புக்ககத்துக்குப்போம்போது ஜந்மபூமியிலுள்ள உறவுமுறையாருள்ளிடமெங்கும் புக்கு முகம் காட்டுமாபோலே குணாநுபவம் பரமபதத்துக்கு மொக்குமே; ஆகையாலே சில திருப்பதிகளிலேபுக்கு, இங்குபுக்கோம்; இனி, இன்னதிருப்பதியிலே புகவேணுமென்று இப்படியே உகந்தருளின தேசங்களெங்கும் முகங்காட்டப்பார்க்கிறார்.

நமக்கு ப்ராப்யபூமியைத் தருவானாய், தானே ப்ராப்யனானவனைத் திருநீர்மலையிலே கண்டோம். இனி, திருக்கண்ணமங்கையிலே காணக்கடவோமென்கிறார். .... *

மூ;—ஒருநல்சுற்றமெனக் குயிரொண்பொருள்
வருநல்தொல்கதியாகிய மைந்தனை
நெருநல்கண்டது நீர்மலை யின்றுபோய்
கருநெல்சூழ்கண்ணமங்கையுள் காண்டுமே.

அநு;—ஒருநல்ப்ரவேசம்;—"வாடினேன்" என்று துடங்கி இவ்வளவும் வரத் திருப்பதிகளை அநுபவித்தவர், மீளவும் திருப்பதிகளைத்திரள அநுபவிப்பானென்னென்ன; அருளுகிறார் (தன்னையித்யாதி). (எங்கும்புக்கு). என்றவநந்தரம் "குணாநுபவம் பண்ண" என்று சேஷம். இத்தால் சொல்லிப் போகைக்காகவும் குணாநுபவத்துக்காகவும் மீளவும் அநுபவிக்கிறாரென்று ஸங்கதித்வயம் சொல்லிற்றாயிற்று. ... ... *

அநு;—முதற்பாட்டு. (ஒருநல்சுற்றமித்யாதி) முதற்பாட்டுக்குத் தாத்பர்யம் (நமக்கித்யாதி). இப்பதத்துக்குத் தொகுத்த பாவம் (தானேயித்யாதி).

பதம்.	உரை.	பதம்.	உரை.
நல்	(தானே ஆபத்துக்கு வந்து உதவும்) நன்மையையுடைய	கதி	ப்ராப்யபூமியைத் தருவானாய்,
ஒருசுற்றம்	அத்விதீயமான பந்து	ஆகியமைந்தனை	நவயௌவந யுக்தமான விக்ரஹத்தை யுடையனான எம்பெருமானை
எனக்கு	அடியேனுக்கு [வாய்,		
உயிர்	ஆத்மாவாய்,	நெருநல்	நேற்று
ஒண்	மேன்மையான (ஸத்தையைவிளைக்குமதான)	கண்டது	ஸேவித்தது
		நீர்மலை	திருநீர்மலையிலே;
பொருள்	புருஷார்த்தத்தைத் தருமவனாய்	கருநெல்	கருவடைந்தபயிர்களாலே
		சூழ்	சூழப்பட்ட
வரு	(சரீரவியோகத்துக்குப் பிறகு) வரக்கவ	கண்ணமங்கையுள்	திருக்கண்ணமங்கையிலே
நல்	விலக்ஷணமாய் [தாய்	இன்றுபோய்	இன்றைக்குப்போய்
தொல்	நித்யாநுபாவ்யமான	காண்டும்	ஸேவிப்போம். (௧)

வ்யா;—முதற்பாட்டு. (ஒருநல்சுற்றம்) தானே ஆபத்துக்கு வந்துதவும் ஸர்வவித பந்துவுமான ஸ்வபாவனுமாய். (சுற்றம், நல்சுற்றம், ஒருநல்சுற்றம்) குடல்துடக்கு, தன்னையழியமாறியும் ரக்ஷிக்கும் சுற்றம், சுற்றமென்றால் வேறொரிடத்தில் போகாதசுற்றம். (சுற்றம்) சுற்றமல்லாதாரை வ்யாவர்த்திக்கிறது. (நல்சுற்றம்) ஸ்வப்ரயோஜநபரரை வ்யாவர்த்திக்கிறது. (ஒரு நல்சுற்றம்) ஓரோப்ராப்தியேயன்றிக்கே எல்லாப்ராப்தியும் ஏகாஶ்ரயத்திலேயாயிருக்கிறபடி. மாத்ருத்வம் பிதாவுக்கில்லை. பித்ருத்வம் மாதாவுக்கில்லையிறே. (எனக்குயிர்) எத்தனையேனும் பந்துக்கள் எல்லாரும்கூட உண்டானாலும் தான் தனக்கானபடியாக மாட்டார்களிறே. ஸுகதுக்கங்கள் தனக்கே அநுபவிக்கவேணுமிறே. எனக்கு ஆத்மாவுமாய்; (ஒண்பொருள்) இது ஸத்தையை யுண்டாக்கு

பிறித்தெடுத்தக்ரமத்திலேஅர்த்தமருளுகிறார் (குடலித்யாதிவாக்யத்ரயத்தாலே). கீழ்ச்சொன்ன வர்த்தத்தை வ்யாவர்த்யப்ரதர்ஶநமுகேந விவரிக்கிறார் (சுற்றமல்லாதாரை யித்யாதி வாக்யச்துஷ்டயத்தாலே). ஒண்மைக்கர்த்தமருளிச்செய்கிறார்(இதுவித்யாதி). லௌகிகார்த்தத்தைவ்யாவர்த்திக்கிற

மர்த்தம். தான்மரிக்குமிறே அர்த்தநிமித்தமாக. புருஷார்த்தோப யோகியான அர்த்தமுமாய்;

(வருநல்தொல்கதி) இதுக்குமுன்பு ஸம்ஸாரத்திலிருக்கும்படி. இனி, பரமபதப்ராப்தியிருக்கும்படி சொல்லுகிறது. இங்கே அர்த்த புருஷார்த்தம் தந்துவிடுகையன்றிக்கே, சரீரஸமநந்தரம் வரக்கடவதாய், அறநன்றுனதொல்கதி - ஆத்மாநுபவமாத்ரமன்றிக்கே இவ் வாத்மாவினுடைய ஸ்வரூபத்துக் கநுரூபமான ப்ராப்ய பூமியைத் தருவானாய், தானேப்ராப்யமாய்; (தொல்கதி)ஸ்வாபாவிகமாயிருந் துள்ள ஸ்வரூபாவிர்ப்பாவம். (ஆகிய மைந்தனை) நவயௌவநயுக்த விக்ரஹத்தை யுடையவனை. (ஆகிய மைந்தனை) ஸர்வசக்தி பதார்த் தங்களிலும் விஸஜாதீயமான மிடுக்கை யுடையனாய், உபாயமான வனை யென்னுதல்; எல்லாப்புருஷார்த்தங்களும் தானே தரவல்ல மிடுக்கன். ஸர்வ சக்தியாகையிறே, உபாயபாவம் தானே நிர்வஹிக் கக் கடவனாயிருக்கிறது.

"நெருநல்" என்று மேலுக்கு. நேற்றுத்திருநீர்மலையிலே கண் டோம். இன்று போய், கருவுடைந்த நெற்பயிரோடு கூடின வய லையுடைய திருக்கண்ணமங்கையிலே காணக்கடவோம். இன்று

படியைக் காட்டுகிறார் (தானித்யாதி). உயிர்பத ஸமபிவ்யாஹாரலப்யார்த்த த்தை அருளிச்செய்து, "எனக்கு" பதத்தைக் கடாக்ஷித்து ஒண்மைக்கர்த் தாந்தரம் (புருஷார்த்தேத்யாதி). (அர்த்தமும்) என்றத்தாலே அந்தவர்த் தத்துக்கு நிர்வாஹகனாய், அத்தால் தத்ப்ரத(ஃ)னென்று கருத்து.

ஸங்கதியைக்காட்டித் தாத்பர்யமருளுகிறார் (இங்கேயித்யாதி). அற நன்றுனமையை உபபாதிக்கிறார் (ஆத்மாநுபவேத்யாதி). (தருவானாய்) என் றத்தாலே கதிபதத்துக்கு ப்ராபகத்வமருளிச்செய்து, அர்த்தாந்தரம் (ப்ராப்ய மாய்) என்றது. தொல்பதத்துக்குத் தாத்பர்யமருளிச்செய்துகொண்டு, கதி பதத்துக்கு மூன்றும் யோஜநையருளுகிறார் (ஸ்வாபாவிகேத்யாதி). (ஸ்வ ரூபாவிர்ப்பாவம்) குணாஷ்டக ஸ்வரூபாவிர்ப்பாவ நிர்வாஹகனென்றபடி.. (ஸர்வசக்தி பதார்த்தங்களிலும்) என்றது-ஸர்வங்களாய், சக்திமத்துக்களான பதார்த்தங்களிலு மென்றபடி.

(மேலுக்கு என்றதுக்கு) "இன்றுபோய்க் கண்ணமங்கையுள் காண்டுமே" என்று காலதேசம் காண்கை அடைவுபடவிருக்குமாபோலே, இங்கும் அந் வயிக்கவேணுமென்று திருவுள்ளம்பற்றி, "கண்டது" என்றபதத்துக்கு மே லேயிருக்கிற "நீர்மலை" என்கிற பதத்துக்கு முன்னே கூட்டுவதென்றுகருத்து.

அதுகாண்பதும் காணக்கடவதும் இவ்வோவிடங்களையாயிருக்கை. (கருநெல்சூழ் கண்ணமங்கை) நித்யரும் முக்தரும் என்றும் பஞ்ச விம்ஶதி வார்ஷிகராயிருக்குமாபோலே, இங்குத்தை வயலும் நித்யமாகக் கருவடைந்தபயிராயிருக்கை. அங்குள்ளதெல்லாம் இவருக்கு ப்ராப்யமாயிருக்கிறபடி. அநுபூதமாய் ஸ்ம்ருதி விஷயமாயிருப்பதும், அநுபாவ்யமாயிருப்பதும் இவருக்கு உகந்தருளினநிலம். (க)

மூ;—பொன்னைமாமணியை யணியார்ந்ததோர்
மின்னைவேங்கடத் துச்சியில் கண்டுபோய்
என்னையாளுடையீசனை யெம்பிரான்
றன்னையாம்சென்றுகாண்டும் தண்காவிலே. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொன்னை	பொன்போலே ஸ்ப்ருஹணீயனாய்,	கண்டு	(முன்பு) ஸேவித்து, (இன்றைக்கு)
மா	பெருவிலையனான	போய்	போய்
மணியை	மணிபோலே ஶ்லாக்யனாய்	என்னை	அடியேனை
அணிஆர்ந்தது	அழகுமிக்கிருப்பதாய்	ஆளுடை	அடிமையாகவுடையனாய்
ஓர்	ஏகரூபமான	ஈசனை	நியாமகனாய்,
மின்னை	மின்னல்கொடிபோலே உஜ்ஜ்வலனான ஸர்வேஶ்வரனை	எம்பிரான் தன்னை	எனக்கு உபகாரகனுமான ஸர்வேஶ்வரனை
வேங்கடத்துச் சியில்	திருமலையின் உச்சியிலே	யாம்	நாம்
		தண்காவிலே	திருத்தண்காவிலே
		சென்று	அருகேசென்று
		காண்டும்	ஸேவிக்கக் கடவோம்.

அவ;—இரண்டாம்பாட்டு. ஸர்வைஸ்ஸ்ப்ருஹணீயனானவனைத் திருமலையிலே கண்டோம்; இனித்திருத்தண்காவிலே சென்று காணக்கடவோமென்கிறார்.

வ்யா;—(பொன்னையித்யாதி) பொன்போலே ஸ்ப்ருஹணீயனாய், பெருவிலையனாய், ஶ்ரமஹரமான மணிபோலே ஶ்லாக்யமா

(என்றது)என்கிறது-என்றதாவதென்றபடி.பலிதமேதென்றுகருத்து. "காண்டும்" என்ற வாக்யத்தை விவரிக்கிறார் (அநுபூதமாயித்யாதி). ... ... (க)

அரு;—இரண்டாம்பாட்டு. (பொன்னையித்யாதி) கீழ்ப்பாட்டிலே ஸர்வவித பந்துத்வம் அநுஸந்தித்தார்; இதில் திருமேனியொளியை அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

னவனாய், அழகுமிக்கு ஏகரூபமான மின்போலே உஜ்ஜ்வலனானவ னைத் திருமலையினுச்சியிலே கண்டு. "போய்" என்றுமேலுக்கு. இன் று போய் என்னை அடிமையாகவுடையவனாய், எனக்குநியந்தாவாய், எனக்கு உபகாரகனுமானவனை நாம் சென்று திருத்தண்காவிலே காணக் கடவோம். .... (௨)

மூ;—வேலையாலிலைப் பள்ளிவிரும்பிய
பாலையாரமுதத்தினைப் பைந்துழாய்
மாலையாலியில்கண்டு மகிழ்ந்துபோய்
ஞாலமுன்னியைக் காண்டும்நாங்கூரிலே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேலை	ப்ரளயார்ணவத்திலே	ஆலியில்	திருவாலியிலே
ஆலிலை	ஆலந்தளிரிலே	கண்டு	(முன்பு) ஸேவித்து
பள்ளி	திருக்கண்வளர்ந்தரு ளுகையை	மகிழ்ந்து	உகந்து, (இன்றைக்கு)
விரும்பிய	விரும்பினவனாய், [ய்	ஞாலம்	ஜகத்துக்கு
பாலை	பால்போலே இனியனா	உன்னியை	த்யே (தீ) யனான ஸர்வேஶ்வரனை
ஆர்அமுதத்தி னை	அபரிச்சேத்யமான அம் தம்போலே ரஸ்ய னாய்,	நாங்கூரிலே	திருநாங்கூரிலே
பைந்துழாய்	அழகிய திருத்துழாய்	போய்	சென்று
மாலை	மாலையணியுமவனா ன ஸர்வேஶ்வரனை,	காண்டும்	ஸேவிக்கக்கடவோம்.

அவ.—மூன்றும்பாட்டு. வடதளசாயியானவனைத் திருவாலி யிலே கண்டோம்; இனித்திருநாங்கூரிலேசென்று காணக்கடவோ மென்கிறார்.

வ்யா;—(வேலையித்யாதி) கடலிலே ஒருபவனாயிருப்பதொரு ஆலிலையிலே கண்வளர்ந்தருளுகையை விரும்பின ஸர்வவிதபோக்

"ஓர்" என்றதினர்த்தம்-(ஏகரூபமான) என்றது. (மேலுக்கு என்றது க்கு)-"போய்" என்றபதத்தை "சென்று" என்ற பதத்தோடு கூட்டுவதெ ன்று கருத்து.

அரு;—மூன்றும்பாட்டு. (வேலையித்யாதி) நின்றநிலையில் போக்யதை யை அநுபவித்து, ஆலந்தளிரில் கிடையழகை அநுபவித்து இனியராகிறு ரென்று ஸங்கதி.

(கடலிலே) ப்ரளயார்ணவத்திலே. "பைந்துழாய்" பசுமையையுடைய

யனானவனை. கண்வளர்ந்தருளுகை தமக்குப்பால்போலவும் அம்ருதம்போலவும் ரஸித்தபடி. (பைந்துழாயித்யாதி) அந்தரஸ்யதையிலுண்டான ஏத்தம்போலே ஐஸ்வர்யஸூசகமாய், அழகிதான திருத்துழாயையுடைய ஸர்வேஸ்வரனை. "ஆலியில்" என்று-மேலுக்கு. திருவாலியிலேகண்டுகொந்துபோய், ஜகத்துக்குத்யே(ஹ்ரீ)யனானவனை. (ஞாலமுன்னியையித்யாதி) வரையாதே இன்னாரென்னாமல் ஆஸ்ரயிக்கும்படி யிருக்கிறவனைத் திருநாங்கூரிலே காணக்கடவோம்.

மூ;—துளக்கமில்சுடரைஅவுணனுடல்
பிளக்கும்மைந்தனைப் பேரில்வணங்கிப்போய்
அளப்பிலாரமுதை யமரர்க்கருள்
விளக்கினைச்சென்று வெள்ளறைக்காண்டுமே. (ச)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துளக்கம்இல்	விச்சேதமில்லாத	ஆரமுதை	அபரிச்சேத்யமான போக்யதையையுடையனாய்
சுடரை	ஒளியையுடையனாய்,		
அவுணன்	ஹிரண்யனுடைய		
உடல்	சரீரத்தை	அமரர்க்கு	நித்யஸூரிகளுக்கு
பிளக்கும்	பிளக்கவல்ல	விளக்கு	ப்ரகாசகமாய்
மைந்தனை	மிடுக்கையுடையனான ஸர்வேஸ்வரனை	அளப்புஇல்	அபரிச்சேத்யமான
		அருளினை	அருளாயிருக்கிறவனை
பேரில்	திருப்பேர் நகரிலே	வெள்ளறை	திருவெள்ளறையிலே
வணங்கிப்போய்	(முன்பு) வணங்கி, (இன்றைக்கு)	சென்று	போய்
		காண்டும்	ஸேவிக்கக்கடவோம்.

அவ;—நாலாம்பாட்டு. ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுக்கு விரோதியான ஹிரண்யனைப் போக்கினவனைத் திருப்பேரிலே கண்டோம்; இனிப்போய் திருவெள்ளறையிலே காணக்கடவோமென்கிறார்.

திருத்துழாயென்றாய், இதுமாலாகைக்கு ஹேதுவென்று தாத்பர்யம் (அந்தவித்யாதி).

(மேலுக்கு என்றதுக்கு)-"போய்" என்னுமளவும் - "ஞாலமுன்னியை" என்றபதத்துக்கு மேலில் கூட்டுவதென்றுகருத்து. ... ... (ரு)

அரு;—நாலாம்பாட்டு. (துளக்கமித்யாதி) நிரதிசயபோக்யதையைக் கீழே அநுபவித்தார்; அதுக்குவரும் விரோதியைப் போக்குவானும் தானே என்கிறாரென்றுஸங்கதியைஉட்கொண்டருளுகிறார் (ஸ்ரீப்ரஹ்லாதேத்யாதி).

வ்யா;—(துளக்கமித்யாதி) காற்றால், மற்றொன்றால் விச்சேதிக்கப்போகாதே "ஜ்வலந்தம்" என்கிறபடியே ஏகரூபமான ஒளியையுடையனாய், ஹிரண்யனுடைய உடலைப்பிளக்கவல்லஸர்வசக்தியைத் திருப்பேர்லே வணங்கிப்போய். "அளப்பில்" என்று - மேலுக்கு. அபரிச்சேத்யமான போக்யதையையுடையனாய், அத்தை அயர்வறுமமரர்களுக்கு அநுபவிக்கக்கொடுத்து அத்தாலேஉஜ்ஜ்வலனானவனை. (அமரர்க்கருள் விளக்கினை) நித்யஸூரிகளுக்கு ப்ரகாசகமாயிருப்பதோரருளாயிருக்கிறவனைத் திருவெள்ளறையிலே காணக்கடவோம். .... (௪)

மூ;—சுடலையில்சுடுநீறனமர்ந்ததோர்
நடலைதீர்த்தவனை நறையூர்க்கண்டென்
உடலையுள்புகுந் துள்ளமுருக்கியுண்
விடலையைச்சென்றுகாண்டும் மெய்யத்துள்ளே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுடலையில்	ஶ்மஶாநபூமியிலே	என்	என்னுடைய
சுடுநீறன்	சுட்டசாம்பலைப் பூசியிருக்கிற ருத்ரன்	உடலையுள்	சரீரத்துக்குள்ளே
அமர்ந்தது	அநுபவித்த	புகுந்து	ப்ரவேசித்து
ஓர்	அத்விதீயமான	உள்ளம்	நெஞ்சை
நடலை	க்லேஶத்தை	உருக்கி உண்	உருக்கிஉண்கிற
தீர்த்தவனை	தவிர்த்தருளின ஸர்வேஶ்வரனை	விடலையை	விதக்த (ஃ) னை ஸர்வேஶ்வரனை
நறையூர்	திருநறையூரிலே	மெய்யத்துள்	திருமெய்யத்தில்
கண்டு	(முன்பு) ஸேவித்து, (இன்றைக்கு),	சென்று	போய்
		காண்டும்	ஸேவிக்கக்கடவோம்

(மேலுக்கு) என்றது - "ஆர்" என்று அபரிச்சேத்யதையைச் சொல்லியிருக்கையாலே "அளப்பில்" என்கிறவிசேஷணம் அருள்பதத்தோடே கூட்டுவதென்றுகருத்து. "மைந்தனை, ஆரமுதை, அமரர்க்குஅளப்பிலருள்விளக்கினைப்பேரில் வணங்கிப்போய்ச்சென்று வெள்ளறைக் காண்டும்" என்றந்வயத்திலே திருவுள்ளம். தன்னை அநுபவிக்கக் கொடுக்குமதுக்கு மேற்பட அருளுக்கு அளப்பில்லாமை - வேறில்லாமையால், அத்தை அருளுகிறார் (அத்தையித்யாதி). "அருளாகிற விளக்கு" என்று ஒருயோஜனை அருளிச்செய்து, "விளக்கான அளப்பிலருள்" என்று யோஜநாந்தரம் (நித்யேத்யாதி). (ஒரு) என்று அளப்பில்லாமையாலே பலிதம். ... ... (௪)

அவ;—அஞ்சாம்பாட்டு. ருத்ரனுடைய சாபத்தைப்போக்கினவனைத்திருநறையூரிலே கண்டோம். இனிப்போய்த் திருமெய்யத்திலே காணக்கடவோமென்கிறார்.

வ்யா;—(சுடலையித்யாதி) ஶ்மசாநபூமியில் பஸ்மோத்தூளிதனாகிறது - சுடலையில் சுட்டசாம்பலைப் பூசியிருக்கிறவனென்றபடி; அவன், (அமர்ந்ததோர்நடலை) அவனநுபவித்த க்லேசத்தைத் தவிர்த்தவனைத் திருநறையூரிலேகண்டு. "என்னுடலை" என்று - மேலுக்கு. என் சரீரத்துக்குள்ளே புகுந்து நெஞ்சையுருக்கி உண்கிற விதக்த்த ([illegible]) னைத் திருமெய்யத்திலே காணக்கடவோம். (விடலை) என்று பாலைநிலத்தில் தலைமகனைச்சொல்லுகிறது. இப்பாலையான பூமியைத் தனக்கிருப்பிடமாக்கினபடியாலே பாலைநிலமான ஸம்ஸாரத்துக்குத் தலைவனானவனைத் தம்முடைய ஹ்ருதயத்திற் காட்டில் பாலைநிலமில்லை யென்றிருக்கிறார். .... (௫)

மூ;—வானையா ரமுதந்தவள்ளலைத்
தேனை நீள்வயல்சேறையில் கண்டுபோய்
ஆனைவாட்டியருளு மமரர்தம்
கோனை யாம்குடந்தைச்சென்று காண்டுமே. (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வானையார்	தேவலோகத்திலுள்ளார்க்கு	கண்டுபோய்	(முன்பு) ஸேவித்து,
அமுதம்	அம்ருதத்தை	ஆனை	குவலயாபீடத்தை
தந்த	கொடுத்தருளின	வாட்டி	கொன்று
வள்ளலை	உதாரனாய்,	அருளும்	(ப்ரஹ்மாதிகளுக்குக்குடியிருப்பைக்) கொடுத்தருளினவனாய்,
தேனை	தேன்போலே ரஸ்யனான ஸர்வேஶ்வரனை		
நீள்	நீண்ட	அமரர்தம்	நித்யஸூரிகளுக்கு
வயல்	வயலையுடைய	கோனை	நியந்தாவான ஸர்வேஶ்வரனை
சேறையில்	திருச்சேறையிலே		

அரு;—அஞ்சாம்பாட்டு. (சுடலையித்யாதி) தன்னுடைய நிரதிசய போக்யமானவடிவை அயர்வறு மமரர்களுக்கு முற்றூட்டாக அருளுவானென்றார்கீழ்; ஹேயனானவனுக்கும் ஆட்த்துக்கு உதவுகையாலே ஸௌஶீலனானவன்றானே என்னுடைமையை அநுபவிக்கிறானென்று ஸங்கதி.

"ஜ்ஞாநியை விக்ரஹத்தோடே ஆதரிக்கும்" என்னக்கடவதிறே. (மேலுக்குஎன்றதுக்கு) "உடலை" என்றத்வீதியாந்தபதம் "உருக்கி" என்றபதத்தோடு ஸம்பந்திக்குமென்றுகருத்து. (என்சரீரத்தினுள்ளே) என்றது-பலிதார்த்தம்.

யாம்	நாம்	சென்று	போய்
குடந்தை	திருக்குடந்தையிலே	காண்டும்	ஸேவிக்கக் கடவோம்.

அவ;—ஆரும்பாட்டு. ப்ரயோஜநாந்தரபரர்க்கும் அபேக்ஷிதம் செய்யும் பரமோதாரனைத் திருச்சேறையிலே கண்டோம். இனித் திருக்குடந்தையிலே காணக்கடவோமென்கிறார்.

வ்யா;—(வானையாரித்யாதி) தேவலோகம் க்ருதக்ருத்யமாம்படி அம்ருதத்தைத்தந்த உதாரனாய், தன்னை உகந்தார்க்குத் தானே போக்யனானவனை. (வானையித்யாதி) நித்யஸூரிகளுக்குத் தன்னைக் கொடுக்குமாபோலே எனக்குத் தன்னைத்தந்தஉபகாரகனை. தேன்போலே ரஸ்யனானவனை. நீண்டவயலையுடைய திருச்சேறையிலேகண்டு. "ஆனை" என்று - மேலுக்கு. குவலயாபீடத்தைக் கொன்று ப்ரஹ்மாதிகளுக்குக் குடியிருப்புக்கொடுத்து அவர்களுக்குத்தானே சேஷியென்னுமிடத்தை ப்ரகாசிப்பித்தவனை யான்குடந்தைச்சென்றுகாண்டுமே. .... (௬)

மூ;—கூந்தலார்மகிழ்கோவலனாய் வெண்ணெய்
மாந்தழுந்தையில்கண்டு மகிழ்ந்துபோய்
பாந்தள்பாழியில் பள்ளிவிரும்பிய
வேந்தனைச்சென்றுகாண்டும் வெஃகாவுளே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கூந்தலார்	கூந்தலையுடைய ஸ்த்ரீகள்	மாந்து	அமுதுசெய்து வர்த்திக்கிற ஸர்வேஶ்வரனை
மகிழ்	உகக்கும்படியான	அழுந்தையில்	திருவழுந்தூரில்
கோவலனாய்	கோ (ஸ்ரீ) பனாய்,	கண்டு	(முன்பு) ஸேவித்து
வெண்ணெய்	வெண்ணெயை	மகிழ்ந்து	ஆநந்தித்து,

அநு:—ஆரும்பாட்டு. (வானையித்யாதி) தம்மை அவனநுபவித்தபடியை அநுஸந்தித்தார்கீழ். அநந்யப்ரயோஜநரான தம்முடைய விடத்தில் இப்படி வ்யாமுக்த (ஸ்) னனமையைச்சொல்லவேணுமோ? ப்ரயோஜநாந்தரபரர்க்கும் உடம்புநோவக் கடல்கடைந்து அமுதமளித்தானென்று ஸங்கதியை ஸூசிப்பிக்கிறார் (ப்ரயோஜநாந்தர பரர்க்குமித்யாதி).

*(மேலுக்கு)என்றது - "யாம்" என்கிறபதம்-கர்த்ருபதமாகையாலே, அது க்கு மேலுக்கு என்கை. ... ... (௬

பதம்	உரை
	(இன்றைக்கு)
போய்	சென்று
பாந்தள்	திருவநந்தாழ்வானாகிற
பாழியில்	படுக்கையிலே
பள்ளி	திருக்கண்வளர்ந்தருளுகையை
விரும்பிய	விரும்பியருளின
வேந்தனை	ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரனை
வெஃகாவுளே	திருவெஃகாவிலே
சென்று	கிட்டி
காண்டும்	ஸேவிக்கக்கடவோம்.

அவ;—ஏழாம்பாட்டு. க்ருஷ்ணனாய் அநுகூலஸ்பர்ஶமுள்ள வெண்ணெயை விழுங்கினவனைத் திருவழுந்தூரிலே கண்டோம்; இனிப்போய்த் திருவெஃகாவிலே காணக்கடவோம்.

(கூந்தலாரித்யாதி) நல்ல கூந்தலையுடைய ஸ்த்ரீகளுக்கும்போக்யனாய், கோ(ரீ)பனாய் வெண்ணெயை அமுதுசெய்து வர்த்திக்கிறவனைத் திருவழுந்தூரிலேகண்டு உகந்துபோய். "பாந்தள்" என்று-மேலுக்கு. "பாந்தள்" என்று-பாம்பு. "பாழி" - படுக்கை. திருப்பாற்கடலிலே திருவநந்தாழ்வானாகிறபடுக்கையிலே கண்வளர ஆதரித்த ஸர்வரக்ஷகனானவனை. *வெஃகாவில் துயிலமர்ந்தவேந்தனை. (காண்டும் வெஃகாவுளே) கண்வளரக்காணலாவது திருவெஃகாவிலே.

மூ;—பத்தராவியைப் பான்மதியையணித்
தொத்தை மாலிருஞ்சோலைத் தொழுதுபோய்
முத்தினை மணியை மணிமாணிக்க
வித்தினைச்சென்று விண்ணகர்க்காண்டுமே. (அ)

பதம்.	உரை.
பத்தர்	பக்தர்களுக்கு
ஆவியை	ஆத்மாவாய்,
பால்	நிஷ்களங்கனான
மதியை	சந்த்ரனைப்போலே ஸதாத்ரஷ்டவ்யனாய்,
அணித்தொத்தை	ஆபரணமாலைபோலே ஸ்ப்ருஹணீயனான ஸர்வேஶ்வரனை
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலையிலே
தொழுதுபோய்	(முன்பு) ஸேவித்து,
	(இன்றைக்கு)

அரு;—ஏழாம்பாட்டு. (கூந்தலித்யாதி) தேவர்களுக்கு அமுதமளித்தவன்றான் ஆஶ்ரித கரஸ்பர்ஶமுள்ள த்ரவ்யமல்லது தரியாதானாய், இடைச்சிகளுக்கு ஸுலபனானவனென்று அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

(பாந்தளென்று மேலுக்கு) என்றது - "காண்டுமே" என்றபதத்துக்கு மேலான "வெஃகாவுளே" என்றபதத்துக்கு என்கை. ... ... (எ)

முத்தினை	முத்துப்போலே குளிர்ந்திருக்குமவனாய்,	மாணிக்கம்	மாணிக்கம்போலே தர்ஶநீயனாய்,
மணியை	நீலமணிபோல் ப்ரமஹரமான வடிவையுடையனாய்,	வித்தினை	ஸர்வகாரண பூதனான ஸர்வேஶ்வரனை
மணி	பெருவிலையனான	விண்ணகர் சென்று	திருவிண்ணகரிலே போய்
		காண்டும்	ஸேவிக்கக் கடவோம்.

அவ;—எட்டாம்பாட்டு. தன் திருவடிகளுக்கு நல்லார்க்கு ஆத்மாவானவனைத் தெற்குத்திருமலையிலே கண்டோம். இனிப் போய்த் திருவிண்ணகரிலே-காணக் கடவோமென்கிறார்.

வ்யா;—(பத்தராவியை யித்யாதி) தம்திருவடிகளுக்கு நல்லரானவர்களுக்கு ஆத்மாவானவனை; தாரகனாய்த் தன்னையொழியச் செல்லாதபடி யிருக்குமென்கை. அன்றிக்கே (க) "ஜ்ஞாநீத்வாத்மைவமே மதம் - ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" என்கிறபடியே ஸ்நேஹிகளாயிருப்பாரைத் தனக்குத் தாரகமாகவுடையனாயிருக்கு மென்னுதல்; ஆவியாகக் கண்ணுக்குத்தோற்றாதபடி யிருக்கையன்றிக்கே, மறுவற்ற சந்த்ரனைப்போலே ஸதா த்ரஷ்டவ்யனாய், பூமிக்கெல்லாம் ஆப்யாயநம் பண்ணுமவனை. (அணித்தொத்தை) ஆபரணமாலையை. பொன்னரிமாலையைப்போலே; அன்றிக்கே (மணித்தொத்தை) நீலமணிமாலைபோலே ப்ரமஹரமான வடிவையுடையவனை - தெற்குத் திருமலையிலே கண்டுபோய்.

(முத்தினை) என்று-மேலுக்கு. முத்துப்போலே உடம்பிலே அணைந்தால் விடாய் கெடும்படி குளிர்ந்திருக்குமவனை; நீலமணிபோலே கண்ணுக்கு ப்ரமஹரமான வடிவை யுடையனாயிருக்கை.

அநு.—எட்டாம்பாட்டு. (பத்தராவியையித்யாதி) கோபிமார்க்கேபவ்யனாயிருந்தபடியேயன்றிக்கே, ஆஶ்ரிதர்க்கெல்லாம் தாரகாதிகளானவனென்று அநுஸந்திக்கிறாரென்று ஸங்கதி.

பால்போன்றமதிஎன்றாய், அத்தால்பலிதம்(மறுவற்றசந்த்ரனை) என்றது. ஆபரணரூபமாலை என்றத்தை விசேஷிப்பிக்கிறார் (பொன்னரி) பொன்மணி மாலையென்கை. பாடாந்தரத்தில் பொருளருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி).

(முத்தினையென்று மேலுக்கு) என்றது - வித்தினை யென்னுமளவும் "சென்று" என்றத்தோடே அந்வயியாமையாலே விண்ணகர்பதத்துக்கு மேலான பதத்தோடே அந்வயிக்குமென்கை. ... ... (அ)

(க) கீ-எ-௧அ.

பெருவிலையனை மாணிக்கம் போலே தர்ஶநீயமாயிருக்கும் வடிவழகே யன்றிக்கே, இதுக்கெல்லாம் ஸர்வகாரணபூ(஭ூ)தனையிருக்கிறவனை. விண்ணகர்காண்டுமே. .... (அ)

மூ;—கம்பமாகளிறஞ்சிக் கலங்கவோர்
கொம்புகொண்ட குரைகழல் கூத்தனைக்
கொம்புலாம்பொழில் கோட்டியூர்க்கண்டுபோய்
நம்பனைச்சென்றுகாண்டும் நாவாயுளே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கம்பம்	நடுக்கத்தை விளைக்குமதாய்	கூத்தனை	தர்ஶநீயமாக நடந்தவனை ஸர்வேஶ்வரனை,
மா	பெரியவடிவை யுடைத்தான	கொம்புஉலாம்	தழைத்த கிளைகளால் நிறைந்துள்ள
களிறு	குவலயாபீடமானது	பொழில்	சோலைகளையுடைய
அஞ்சி	பயப்பட்டு	கோட்டியூர்	திருக்கோட்டியூரிலே
கலங்க	கலங்கி முடியும்படி	கண்டுபோய்	(முன்பு) ஸேவித்து, (இன்றைக்கு,)
ஓர்கொம்பு	(அதின்) கொம்பை	நம்பனை	ஆஶ்ரிதர்களுக்கு விஶ்வஸநீயனை எம்பெருமானை
கொண்ட	வாங்கி முறித்தெறிந்தவனாய்,	நாவாயுள்	திருநாவாயிலே
குரை	ஒலியாநின்றுள்ள	சென்று	போய்
கழல்	வீரக்கழலையுடையனாய்,	காண்டும்	ஸேவிக்கக் கடவோம்.

அவ;—ஒன்பதாம்பாட்டு. குவலயாபீடத்தின் கொம்பைப் பறித்தவனைத் திருக்கோட்டியூரிலே கண்டுபோய், திருநாவாயிலே காணக்கடவோமென்கிறார்.

வ்யா.—(கம்பமித்யாதி) தன்னைக் கண்டார்க்கு நடுங்கவேண்டும்படியாய் பெரியவடிவையுடைய குவலயாபீடம் - தன்னைக்கண்டார் படும்நடுக்கத்தைத்தான்பட்டு அஞ்சிக்கலங்கிப்போம்படி, அதின்கொம்பை அநாயாஸேந வாங்கி, ஒலியோடுகூடினவீரக்கழலையுடையனாய், தர்ஶ

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. (கம்பமித்யாதி) ஆஶ்ரிதர்க்கெல்லாம் தாரகாதிகளானவளவே யன்றிக்கே, ஆஶ்ரித விரோதிகளை அழியச்செய்கையாலே வீரக்கழலிட்டுத் திரிகிறனென்று ஸங்கதி.

நீயமாக நடந்தவனை. அன்றிக்கே, மத்தமாய் கம்பத்தைப் பிடுங்கிக்கொண்டு ஸஞ்சரிக்கிற ஆனையானது பயப்பட்டுக் குலையும்படி, அதின்கொம்பைப்பறித்து அக்கொம்புகளைக்கையிலே ஆயுதமாகக் கொண்டு, கம்ஸன் மற்றையாரைத் துடர்ந்து கொடுதிரிகிறபோது ஆபரணங்களால் வந்தத்வநியை யுடைத்தான திருவடிகளை வீசிக் கொண்டு நடந்தபோது, வல்லாராடினாற்போலேயாயிற்றிருந்தபடி.

(கொம்புலாவித்யாதி) நித்யவஸந்தமாய், தழைத்த பொழிலை யுடைய திருக்கோட்டியூரிலே கண்டுபோய் எல்லாத்தசையிலும் இவ்வாத்மாவுக்குத் தஞ்சமானவனைத் தன்னைவிஶ்வஸித்தார் உகக்கும் திருநாவாயிலே காண்டும். .... (௯)

மூ;—பெற்றமாளியைப் பேரில்மணாளனைக்
கற்றநூல்கலிகன்றி யுரைசெய்த
சொல்திறமிவை சொல்லிய தொண்டர்கட்கு
அற்றமில்லை யண்டமவர்க்காட்சியே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.
பெற்றம்	பசுக்களை
ஆளியை	நோக்குவனாய்,
பேரில்	திருப்பேர் நகரில் எழுந்தருளியிருக்கிற
மணாளனை	மணவாளப்பிள்ளையான ஸர்வேஶ்வரன்விஷயமாய்,
நூல்	சாஸ்த்ரங்களை
கற்ற	அப்யஸித்த
கலிகன்றி	ஆழ்வார்
உரைசெய்த	அருளிச்செய்த
இவை	இந்த
சொல்திறம்	ஶப்தராஶியை
சொல்லிய	ஓதவல்ல
தொண்டர்கட்கு	ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
அற்றம்இல்லை	(பகவதநுபவத்தில்) விச்சேதமில்லை;
அண்டம்	பரமபதமானது
அவர்க்குஆட்சி	அவர்களிட்ட வழக்காயிருக்கும். (௧௦)

* கம்பபதத்துக்கும் கழல்பதத்துக்கும் அர்த்தாந்தரமருளுகிறார் (அன்றிக்கே யித்யாதி). ... ... (௯)

அ௫;—பத்தாம்பாட்டு. (பெற்றமித்யாதி) "மாளிகை" என்றுபாடமாய், "பேரில்" என்றதுக்கு விசேஷணமாக்கியருளிச்செய்தது, "ஆளியை" என்று

வ்யா;—பத்தாம்பாட்டு. (பெற்றமித்யாதி) "பெற்ற" என்று-பெருமையாய், மாளிகைக்கு விசேஷணமாகவுமாம். "பெற்றமாளிகை" என்று - பாடமாகில், பசுக்களை நோக்குமவனையென்றது. (கற்றநூல்) திருமந்த்ரம் கற்றவிடத்திலே கற்குமித்தனையிறே அல்லாதவையும்; சாஸ்த்ர மர்யாதை தப்பாதபடிசொன்ன சப்தராசிரத்நக்குவைபோலே இவைசொல்லும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு விச்சேதமில்லை. (க) "ந ச புநராவர்த்ததே – நசபுநராவர்த்ததே" (உ) "ஆண்மின்கள் வானகம்" என்கிறபடியே நித்யாநுபவம் பண்ணலாம் தேசத்தை ஆளுவர்கள். .... (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து முதல்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து இரண்டாந்திருமொழி
இரக்கம் ப்ரவேசம்.

வ்யா.—திருப்பதிகளை அநுபவித்தார்கீழ்; அதுதலைக்கட்டி அவதாரங்களிலே போந்தநுபவிக்கிறார். இதிலே தமக்கபிமதமான ராமவிஜயத்தை எதிரிகள் மேலெழுத்திட்ட பாசுரத்தாலே அநுபவிக்கிறார். அங்குத்தை விஜயம் தமக்கிஷ்டமாகையாலே அந்த விஜயத்

யாடாந்தரமருளுகிறார் (பெற்றமித்யாதி). *மயர்வற மதிநலம் பெற்றாராயிருக்க இவரை "கற்றவர்" என்னக்கூடுமோவென்ன (திருமந்த்ரமித்யாதி). சொல்திறமித்யாதிக் கர்த்தமருளுகிறார் (சாஸ்த்ரமர்யாதையித்யாதி). ... (க௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு;—இரக்கம் ப்ரவேசம்.—"வாடினேன்" என்றுதுடங்கி-இவ்வளவும் வரத்திருப்பதிகளெல்லாம் ப்ராதாந்யேந அநுபவித்தவர், இனிமேல் *மற்றமுளவளவாக விபவங்களிலே ப்ராதாந்யம் தோற்றப்பாடி அநுபவிக்கிறாரென்று பேடிகாஸங்கதியருளுகிறார் (திருப்பதிகளையித்யாதி). அதில் இத்திருமொழிக்கு ஸங்கதியருளுகிறார் (இதிலித்யாதி). (மேலெழுத்திட்ட பாசுரத்தாலே) என்றது - "பொங்கத்தம்பொங்கு" என்று வாத்யமடித்தமைக்கு

(க) சாந்தோ-அ-கரு-க. (உ) தி-வாய்-க௦-கூ-சு.

துக்கு இலக்காய்த், தோற்றராக்ஷஸர்தசைபிறந்து, பிராட்டிமார் தசைபிறந்து பேசுமாபோலே தாமானதன்மை தோற்றாதே, தோற்றராக்ஷஸர் பாசுரத்தாலேராமவிஜயத்தைப்பேசி அநுபவிக்கிறார்.*

மூ;—இரக்கமின்றி யெங்கோன்செய்ததீமை
யிம்மையே யெமக்கெய்திற்றுக்காணீர்
பரக்கயாமின்றுரைத்தென் இராவணன்
பட்டன னினியாவர்க்குரைக்கோம்
குரக்குநாயகர்கா ளிளங்கோவே
கோலவல்விலி ராமபிரானே
அரக்கராடழைப்பாரில்லை நாங்க
ளஞ்சினோம் தடம்பொங்கத்தம்பொங்கோ. (௧)

பதம்.	உரை.
எம்	எங்களுக்கு
கோன்	ஸ்வாமியான ராவண[ன்
இரக்கம்இன்றி	தயையில்லாமல்
செய்த	செய்த
தீமை	தீமையானது
எமக்கு	எங்களுக்கு
இம்மையே	இஹலோகத்திலேயே
எய்திற்றுக்காணீர்	பலித்துவிட்டபடியைக்காணுங்கோள்;
இன்று	இப்போது
யாம்	நாங்கள்
பரக்க	விரிவாக
உரைத்து	சொல்லி
என்	பயனென்?;
இராவணன்	ராவணனானவன்
பட்டனன்	மாண்டுபோனான்;
இனி	இனிமேல்
யாவர்க்கு	யாருக்கு
உரைக்கோம்	(இத்தைச்) சொல்லுவோம்?;

பதம்.	உரை.
குரக்குநாயகர்காள்	வாநரயூதபதிகளே!
இளங்கோவே	இளையபெருமாளே!
கோலம்	தர்ஶநீயமாய்
வல்	வலிமையுடைத்தான
வில்	வில்லையுடைய
இராமபிரானே	சக்ரவர்த்தித் திருமக[னே!
அரக்கர்	ராக்ஷஸஜாதியில்
ஆடு அழைப்பார்	வெற்றிசொல்லக்கட[வார்
இல்லை	இல்லை;
நாங்கள்	(தோற்ற) நாங்கள்
அஞ்சினோம்	பயப்படாநின்றோம்; (தோற்ற எங்களுக்கு)
பொங்கத்தம் பொங்கோ.	"பொங்கத்தம் பொங்கம்" என்கிற ஜயஸூசக வாத்யத்தின் சப்தாநுகாரம்
தடம்	ஒத்தது. (௧)

ஸூசகமான சப்தோச்சாரணம் பண்ணிக்கொண்டு திரிகிற எங்களுக்கு, தடம்-ஒத்ததென்று சொல்லுகையைக் கடாக்ஷித்து, அதுக்குப் பலிதமான வர்த்தம் சொன்னபடி. ... ... *

வ்யா.—முதற்பாட்டு. (இரக்கமித்யாதி) பெருமாளையும் பிராட்டியையும் சேரக்கண்டால் (௧) "வடிவாய் நின்வலமார்பினில்வாழ்கின்றமங்கையும் பல்லாண்டு" என்கிறபடியே மங்களாசாஸநம் பண்ண ப்ராப்தமாயிருக்க, மிதுநத்தைப் பிரித்த நிர்தயனான ராவணன் செய்ததீமை. (௨) "இஹைவ ஫லமஶ்நுதே- இஹைவபலமஶ்நுதே" என்கிறபடி இஹலோகத்திலே எங்களுக்குப் பலித்தது. பல சொல்லியென்? தான்செய்ததப்பின்பலம்தானே அநுபவித்தான். அன்றிக்கே, இன்னார் பட்டாரென்றறியாமையாலேராவணன் பட்டானென்னவுமாம். பிற்பட்டகாலத்திலே சொல்லுகிறாராகையாலே இவர்க்கு அவன் பட்டானென்று சொல்லவுமாம். இனி இத்தை ஆர்க்கு இருந்து சொல்லுவோம். வாநரயூதபதிகாள்! இளையபெருமாளே!

அரு;—முதற்பாட்டு. (இரக்கமித்யாதி) "இரக்கம்" என்னில் - ஸ்நேஹமாதல், தயையாதல் விவக்ஷித்து இரண்டையும் அருளிச்செய்து, தாத்பர்யமருளுகிறார் (பெருமாளையுமித்யாதி). (ப்ராப்தமாயிருக்க) என்றவநந்தரம் "இதுக்கு உறுப்பான ப்ரேமமின்றிக்கே" என்றுசேஷம். "யாம் அவன் தீமைகளைப் பரக்க நின்றுசொல்லி யென்" என்று சப்தார்த்தம் விவக்ஷித்தருளுகிறார் (பலவித்யாதி). அரக்கர் பட்டபடிகளைப் பரக்கச்சொல்லியென், என்றர்த்தாந்தரமருளுகிறார் (அன்றிக்கேயித்யாதி). (அறியாமையாலே) என்றது - ப்ரயோஜநாபாவத்தாலே விசாரியாமையாலே யென்கை.

"எங்களையொழியக்கொலையவனை" என்று மேலே-ராவணனை நிரஸிக்குகை சொல்லியிருக்க, இங்கே ராவணன் பட்டானென்று சொல்லக்கூடுமோவென்னும் சங்கையிலே, (௩) "நேயமஸ்தி புரீலங்கா- நேயமஸ்தி புரீலங்கா" என்கிற ந்யாயத்தாலே தீமையின் ப்ராபல்யத்தாலே ஸித்தவத்கரித்து அருளிச்செய்தாரென்றும், மற்றும்படுகிற ராக்ஷஸரெல்லாம் பட்டபடியைக் கண்டால், இனிராவணன் பட்டானென்றது-கைமுதிகந்யாயத்தாலே ஸித்தமன்றோவென்றும் இரண்டுவிதமாகப் பரிஹாரமருளிச்செய்து, இப்பாட்டிலே ராவணன் பட்டபின்பு சொல்லுகிறவர்கள் பாசுரமென்றும், அப்பாட்டில் - ராவணன் படுவதற்குமுன்புள்ள காலத்தில் ... சொன்னால் விரோதமில்லையென்று திருவுள்ளம்பற்றி. ஆனால் அதிலே ... முந்துறச் சொல்ல வடுப்பது; இத்தையே இவர் முந்துற அருளிச்செய்வானென்னென்கிற சங்கையிலே அருளுகிறார் (பிற்பட்டவித்யாதி). இத்தால் ராமவிஜயத்தில் இவர்க்குண்டான ஆசையாலே இத்தையே முந்துறவருளிச் செய்தாரென்று கருத்துச் சொல்லிற்றாயிற்று.

(௧) திருப்பல்லாண்டு-௨. (௨) (௩) ரா-ஸு-௩௩-௨௫.

தர்ஸநீயமானவலியையுடைத்தான வில்லையுடைய சக்ரவர்த்தித்திரு மகனே !.

(அரக்கராடழைப்பாரில்லை) "ராக்ஷஸரில் இனி ஆடுபோலேகூப்பிடக்கடவாரில்லை" என்று பட்டர் அருளிச்செய்தாரென்று நஞ்ஜீயரருளிச் செய்வர். "இது ஓரர்த்தமாயிராமையாலே, இங்ஙனே இதுசொன்னலோ" என்று, நான் கேட்டேன் ; சொல்லலாகாதோ என்ன; "ஆடு" என்று-வெற்றி; இந்தராக்ஷஸஜாதியில் வெற்றிசொல்லக் கடவாரில்லை என்கிறதென்ன; "இதுவேயிறே பொருளென்று அருளிச்செய்தார்" என்று பிள்ளையருளிச்செய்வர். (அஞ்சினோமித்யாதி) எதிரிகளைவென்று அவர்கள் வெற்றியாலே தூர்யகோஷத்தைப் பண்ணுவித்து அதுக்கிடாக ஆடும் கூத்துப்போலே தோற்றவர்கள் தோல்வியாலே பறையடிக்க ஆடுவதொருகூத்துண்டு ; அந்தச்சப்தாநுகாரம் - "பொங்கத்தம் பொங்கு" என்கிறவிது. (௧)

(ஆடுபோலே கூப்பிடக்கடவாரில்லை) என்றது-ஒருநொண்டியாடுஸிம்ஹத்தைக்குறித்து "ఏకసింహం భక్షయామి - ஏகஸிம்ஹம் நபக்ஷயாமி" என்று சொன்னதுண்டென்று லௌகிகமான கதையுமுண்டிறே. அந்த ஆடுபோலேயும் தைர்யமில்லை யென்றுகருத்து. (இது ஓரர்த்தமாய்) என்றது - இதுவே-பதத்துக்கு அர்த்தமென்று நிர்பந்தமில்லாமையாலேயென்கை. ஆழ்வார்கள் பாசுரங்கள் அநேகார்த்தகர்ப்பங்களாகையாலே இன்னமும் பதார்த்தம்சொல்லலாமென்று திருவுள்ளமென்று கருத்து.

(வெற்றிசொல்லக்கடவாரில்லை)என்றதுக்கு-நாமும் "வெற்றிபெறவாருங்கோள்" என்று அழைக்கைக்கு ஒருவருமில்லையோவென்றுகருத்து. (இதுவேயிறே பொருள்) என்றது-கொண்டாட்டத்திலே. இத்தனை இவ்வர்த்தத்தை வ்யாவர்த்திக்க வில்லையென்று கருத்து. "பொங்கத்தம் பொங்கோ-தடம்" என்றந்வயம். "பொங்கத்தம் பொங்கம்" என்று-லக்ஷணயா சொல்லக்கடவ வாத்யமே பேசினோமான எங்களுக்கு, "தடம்-ஒத்தது" என்று சப்தார்த்தம் விவக்ஷித்து, அதின் ஸ்வரூபத்தை யருளுகிறார் (எதிரிகளையித்யாதி). (ஆடுவதொருகூத்து) என்றது - "குழமணிதூரம்" என்றகூத்தென்று கருத்து. (அந்த) என்றது - அவ்வாத்யத்தினுடைய என்கை. இரண்டு பர்யாயம் "பொங்கத்தம்பொங்கம்" என்னத்துடங்கினவாய் அஞ்சினபடிக்கு ஸூசகமாக "பொங்கோ" என்று குறைத்து நிர்த்தேசித்தாரென்று திருவுள்ளம். ... (௧)

மூ;—பத்துநீண்முடியு மவற்றிரட்டிப்
பாழித்தோளும் படைத்தவன் செல்வம்
சித்தம் மங்கையர்பால் வைத்துக்கெட்டான்-
செய்வதொன்றறியா வடியோங்கள்
ஒத்ததோளிரண்டு மொருமுடியும்
ஒருவர்தம் திறத்தோமன்றி வாழ்ந்தோம்
அத்தவெம்பெருமா னெம்மைக் கொல்லேல்
அஞ்சினோம்தடம் பொங்கத்தம் பொங்கோ. (௨)

பதம்.	உரை.
நீள்	நீண்ட
பத்துமுடியும்	பத்துத்தலைகளையும்
பாழி	பலிஷ்டமாய்
அவற்று இரட்டி	தலைகளின் கணக்குக்கு இரட்டித்த கணக்கையுடைய
தோளும்	(இருபது) தோள்களையும்
படைத்தவன்	உடையனான ராவணனானவன்,
மங்கையர்பால்	ஸ்த்ரீகள் பக்கலிலே
சித்தம்	மநஸ்ஸை
வைத்து	செலுத்தி
செல்வம்	(தன்) ஸம்பத்தை
கெட்டான்	அழித்தான்;
செய்வதொன்று அறியா	இதிகர்த்தவ்யதா மூடர்களாய்

பதம்.	உரை.
அடியோங்கள்	அத்தலைக்கு ஶேஷபூதரான நாங்கள்
தோள் இரண்டும்	இரண்டுதிருத்தோளும்
ஒருமுடியும்	ஒரு திருமுடியுமாய்
ஒத்த	விக்ருதவேஷரல்லாத
ஒருவர்தம்	ஒப்பற்றபெருமானுடைய
திறத்தோம் அன்றி	இடையாட்டமுடையோமல்லாமையால்
வாழ்ந்தோம்	கெட்டோம்;
அத்த	எங்களுக்கு ஜநகனானவனே!
எம்பெருமான்	எங்கள்நாதனே!
எம்மை	எங்களை
கொல்லேல்	கொல்லாதொழியவேணும்;

அஞ்சினோம் தடம்பொங்கத்தம் பொங்கோ. (௨)

அ௩;—இரண்டாம்பாட்டு. (பத்தித்யாதி). "యచ్ఛీలస్స్వామీ-తచ్ఛీలోదాసః- யச்சீலஸ்ஸ்வாமீ - தச்சீலோதாஸஃ" என்கிறபடியே நீங்களும் அவனைப் போலே தீமைசெய்தீர்களோவென்ன; அவன் தலைப்பத்துப் படைத்தோமென்று தீமைகளைச் செய்தான்; எங்களுக்குக் குற்றமில்லை யென்று விண்ணப்பம் செய்கிறார்களென்று ஸங்கதி.

"இராவணன்" என்று சொல்லலாயிருக்க, இப்படி விசேஷித்ததுக்கு ப்ரக்

வ்யா;—இரண்டாம்பாட்டு. (பத்துநீண்முடியும்) (க) "வாக்ய முக்தம் தசாநந - வாக்யமுக்தம் தசாநந" என்கிறபடியே "உனக்கு அவர்காலிலேவிழப் பத்துத்தலையுண்டு; அஞ்ஜலிபண்ணுகைக்கு இருபதுகையுண்டு; அவரைச் சரணம்புகவல்லையே" என்றானிறே விபீஷணாழ்வான். பத்துத்தலையும், வலியையும், பெருமையுமுடையனாய், இருபது தோளையுமுடையனானவன் விஷயப்ரவணனாய்த் தன் ஸம்பத்தை அழித்தான். (செய்வதித்யாதி) ரக்ஷகனானவன்போகையாலே செய்வதறியாத நாங்கள். அறிவுகேடரான நாங்கள். இரண்டு தோளும் ஒருமுடியும் விக்ருத வேஷரல்லாத பெருமாளைப் பெருமையாலே கெட்டோம். "வாழ்ந்தோம்" என்று-க்ஷேபரம்.

அன்றிக்கே, இரண்டுதோளும் ஒருமுடியுமாயிருக்கிற நாங்கள் ஒருவரிடையாட்டத்தோமல்லேமாகையால், நாங்கள் விஷய ப்ரவணரல்லாமையாலே வாழந்தோம்; அன்றிக்கே (உ) "...

ருதோபயோகம் காட்டுகிறார் (வாக்யமித்யாதி). (விபீஷணாழ்வான்) என்றவநந்தரம் "அப்படியே சொல்லுகிறார்கள்" என்று சேஷம். இத்தால் பத்தும் பத்தாக வாழ்வுக்கு உடலாயிருக்கக் கெட்டானென்று வெறுக்கிறாரென்று கருத்து. பாழிபதத்துக்கு - மிடுக்கும், பெருமையு மிரண்டர்த்த மென்று விவக்ஷித்து, சப்தார்த்தமருளுகிறார் (பத்தித்யாதி). "செல்வம்-கெட்டான்" செல்வத்தைக் கெடுத்தானென்று திருவுள்ளம். (போகையாலே) கெட்டுப் போகையினாலே. "ஒன்று" என்றதாலே-தவிர்வது மறியோ மென்னுமது பலிக்கையாலே, பலிதார்த்தம் (அறிவித்யாதி).

ராமாவதாரத்துக்கே "தோளிரண்டும் ஒருமுடியும், ஒருவராய் - அத்விதீயரான, தம்முடைய - தேவருடைய, திறத்தோமன்றி - இடையாட்டத்தோமன்றிக்கே"-என்று வாக்யார்த்தமாய் அருளுகிறார் (இரண்டித்யாதி). "ஒத்த" என்றது-லோகத்தாரோ டொத்த வென்றாய், "முடியும்" என்றவநந்தரம்- "உடையோமாகையாலே" என்று சேஷபூரணமும் திருவுள்ளம்பற்றி யோஜிக்கிறார் (அன்றிக்கேயித்யாதி). இப்பக்ஷத்தில் ராவணனைப் பத்தித்யாதியாலே வர்ணித்தது - கேட்டுக்குடலாக யோஜநாந்தரம் கண்டு கொள்வது. "ஒத்த தோள்" ஒரு தோளுக்கொத்த என்றும், "ஒருவர்தம் திறத்தோமாய் வாழ்ந்தோம்" என்று முந்துறத்தாத்பர்யமருளுகிறார் (அன்றிக்கே பரம்பரேத்யாதி). அழகைக்கண்டு எல்லாரும் உஜ்ஜீவித்தோமென்று கருத்து.

(க) ரா-யு-௧௬-௧௧. (உ) ரா.

ஸ்ரீ-ப்ரஸ்பரஸ்ய ஸத்ருஶௌ" என்கிறபடியே ஒன்றுக்கொன்று ஒப்பாயிருக்கிற தோளிரண்டையும், ஒருதிருவபிஷேகத்தையுமுடையராயிருக்கிற உம்மைக்கண்டு அடியரான நாங்கள் ஒருவர் இருவரன்றிக்கே எல்லாரும் ஒக்கவாழ்ந்தோம். கண்டென்கிற விடமத்தனையும் அத்யாஹரித்துக்கொள்வது. (அத்த) எமக்குஜநகனானவனே! (எம்பெருமான்) எங்கள்நாதனே! எங்களைக் கொல்லாதொழியவேணும். "அஞ்சினோம்" என்றுரைக்கொல்லுகை உனக்குப்போருமோ?.

மூ;—தண்டகாரணியம் புகுந்தன்று
தையலைத் தகவிலியெங்கோமான்
கொண்டுபோந்து கெட்டா னெமக்கிங்கோர்
குற்றமில்லைக்கொல்லேல் குலவேந்தே
பெண்டிரால்கெடு மிக்குடிதன்னைப்
பேசுகின்றதென் தாசரதீயுன்
அண்டவாணருகப்பதே செய்தாய்
அஞ்சினோம் தடம்பொங்கத்தம்பொங்கோ. (௩)

பதம்.	உரை.
தகவுஇலி	நிர்க்ருணனான
எம்கோமான்	எங்களுக்கு நியாமகனாயிருந்த ராவணன்
அன்று	(நீங்கள்) காட்டிலே தாபஸரா யிருக்கும் போது
தண்டகாரணியம்	தண்டகாரண்யத்தில்
புகுந்து	ப்ரவேஶித்து
தையலை	பிராட்டியை
கொண்டு போந்து	அபஹரித்துவந்து
	(அக்குற்றமடியாக)
கெட்டான்	முடிந்துபோனான்;
இங்கு	இவ்விஷயத்தில்

பதம்.	உரை.
எமக்கு	எங்களுக்கு
ஓர்குற்றம்	ஒருகுற்றமும்
இல்லை	கிடையாது;
குலம்	(நிரபராதரை நலியா இக்ஷ்வாகுவின்) வம்ஶத்துக்கு
வேந்தே	தலைவராய் [மாளே!
தாசரதீ	தசரதபுத்ரரான பெரு
கொல்லேல்	கொல்லாதொழியவேணும்.
பெண்டிரால்	ஸ்த்ரீசாபல்யத்தாலே
கெடும்	கெடக்கடவ
இக்குடி தன்னை	இந்தராக்ஷஸ ஜாதியைப்பற்றி
பேசுகின்றது	பேசலாவது
என்	என்ன இருக்கிறது?

உன் தேவரீருக்கு (இஷ்ட அண்டவாணர் தேவர்கள் [ரான) உகப்பதே உகக்கக்கடவகார்யத் தையே | செய்தாய் செய்துவிட்டாய்; அஞ்சினோம் தடம்பொங்கத்தம் பொங்கோ. (௩)

வ்யா;—மூன்றாம்பாட்டு. (தண்டகாரணியம்புகுந்து) தானிருந்த விடத்திலே அவர்வந்து அடைமதிள்படுத்த அபகாரம்பண்ணினானென்று, காட்டிலே தாபஸவேஷத்தோடே திரியாநிற்க, அங்கே வந்து பிராட்டியைப்பிரித்து நிர்க்ரு(ஷ்)ணனானையல் †கெட்டுப்போனான். நாங்கள் செய்ததொரு குற்றமில்லை. எங்களைக் கொல்லாதொழியவேணும். நிரபராதரைக்கொல்லாத இக்ஷ்வாகுவம்சத்திலே பிறந்ததுக்குத்தலையன்றோநீர். விஷயப்ரவணராய் கெடக்கடவ இஜ்ஜாதியை எத்தைச் சொல்லுவது. ஸ்வர்க்கத்துக்கு வன்னியமறுத்தவன் மகனே! உனக்கு இஷ்டரான தேவர்கள் உகந்ததே செய்து விட்டாய். .... (௩)

மூ;—எஞ்சலிலிலங்கைக்கிறை யெங்கோன்
தன்னைமுன்பணிந்து எங்கள்கண்முகப்பே
நஞ்சுதானரக்கர்குடிக்கென்று
நங்கையை யவன்றம்பியேசொன்னான்
விஞ்சைவானவர் வேண்டிற்றேபட்டோம்
வேரிவார்பொழில் மாமயிலன்ன
அஞ்சலோதியைக் கொண்டுநடமின்
அஞ்சினோம்தடம்பொங்கத்தம் பொங்கோ. (௪)

அரு;—மூன்றாம்பாட்டு. (தண்டகாரணியமித்யாதி) கீழ்ப்பாட்டில் "மங்கையர்பால்" என்று-ஸாமாந்யேந தேவதாஸ்த்ரீகள் முதலானார் பக்கல் சித்தம் வைத்த தப்பைச் சொன்னார்கள்; இதில் நேரே பெருமாள் விஷயத்திலே தானே நிரக்கழியப்பண்ணினகுற்றத்தைப்பேசுகிறார்களென்றுஸங்கதி.

(ஜாதியை) ஜாதிக்கு என்கை. தசரதன் சம்பராஸுர நிரஸநம் பண்ணமையைத் திருவுள்ளம்பற்றி யருளுகிறார் (ஸ்வர்க்கேத்யாதி). ... (௩)

அரு;—நாலாம்பாட்டு. (எஞ்சலித்யாதி). எமக்கு இங்கோர் குற்றமில்லையென்று நின்றிகோள்; அவன் தையலைக்கொண்டு போந்தானாகில் நீங்கள் அவனுக்கு ஹிதம் சொல்லாதே எதிரம்பு கோத்துவந்தது குற்றமன்றோவென்ன; தம்பியே சொல்லிக்கேளாதே கெட்டவன்-எங்கள் வார்த்தையைக்கேட்கப் புகுகிறானோ என்கிறார்களென்று ஸங்கதி.

† (பா) கொடுபோனான்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
எஞ்சல் இல்	(யுத்தோபகரணங்களால்) குறைவற்ற	சொன்னான்	சொன்னான்;
இலங்கைக்கு	லங்காநகரத்துக்கு	விஞ்சைவானவர்	வித்யாதரர் முதலான தேவர்கள்
இறை	நிர்வாஹகனாய்	வேண்டிற்றே	ப்ரார்த்தித்தபடியே
எம்	எங்களுக்கு	பட்டோம்	(நாங்கள்) அநர்த்தப் பட்டோம்;
கோன் தன்னை	ஸ்வாமியான ராவணனை	வேரி	பரிமளத்தை யுடைத்தாய்
முன்	நாங்கள் ஓலக்கம் கொடுத்துக் கொண்டிருக்கிற காலத்திலே	வார்	பரந்திருந்துள்ள
அவன் தம்பியே	அந்தராவணனுடைய தம்பியான ஸ்ரீவிபீஷணாழ்வான்தானே	பொழில்	சோலையிலுள்ள
எங்கள்	எங்களுடைய	மாமயில் அன்ன	மயில்போலிருப்பவளாய்
கண்முகப்பே	கண்ணெதிரில்	அஞ்சு	(இருட்சி, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு என்று) ஐந்து வகைப்பட்ட
பணிந்து	ராவணன் காலிலே விழுந்து	அல்	இருண்ட
நங்கையை	கல்யாணகுணங்களால் பூர்ணையான இப்பிராட்டியை	ஓதியை	மயிர்முடியை யுடையளான பிராட்டியை
அரக்கர்குடிக்கு	"ராக்ஷஸ குலத்துக்கு	கொண்டு நட	கொண்டுபோங்கோள்;
நஞ்சுதான் என்று	விஷம் இடாய்" என்று	மின்	

அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ. (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (எஞ்சலில்) "எஞ்சல்" என்று ஸங்கோசம். பிராட்டியைக்கொண்டு புகுந்தானாய், "இவ்வூரிலே வந்து இவளை மீட்கவல்லாருண்டோ?" என்று குறைவற்றானாயிருந்த ராவணனை நாங்களடைய ஓலக்கம் கொடுத்துக்கொண்டிருக்க, எங்கள் முன்னே அவன்காலிலேவிழுந்து, கல்யாணகுணங்களால் பூர்ணையாயிருக்கிற இவளை "ராக்ஷஸகுலத்துக்கு நஞ்சுஇடாய்" என்று ஸ்ரீ விபீஷணாழ்வான் சொன்னான்.

(ஸங்கோசம்) என்று-குறைவாய், யுத்தோபகரணங்களாலே குறைவற்ற இலங்கை என்றாய், தாத்பர்யமருளுகிறார் (பிராட்டியித்யாதி).

"விஞ்சிவானவர்" என்று - வித்யாதரராய், அத்தாலே தேவ ஜாதிக்கு உபலக்ஷணம். பரிமளத்தையுடைத்தாய் பரந்த பொழிலில் தன்நிலத்தில் மயில்போலேயிருக்கிற (அஞ்சலோதியை) சுருண்டு நெய்த்துப்பரிமளிதமாய், என்றுப்போலே அஞ்சுவகைப்பட்டிருப்பதாய், இருண்டிருந்துள்ள மயிர்முடியையுடைய பிராட்டியைக் கொடுபோங்கோள். "அஞ்சு" என்று-அஞ்சுவகைப்பட்டிருக்கை. "அல்" என்று-ராத்ரி. அத்தால் இருட்சியை நினைக்கிறது. "ஓதி" என்று - மயிர்முடி. .... (௪)

மூ;—செம்பொன் நீண்முடி யெங்களிராவணன்
சீதையென்பதோர்தெய்வம் கொணர்ந்து
வம்புலாம்கடிகாவில் சிறையா
வைத்ததே குற்றமாயிற் றுக்காணீர்
கும்பனோடுநிகும்பனும் பட்டான்
கூற்றம் மானிடமாய்வந்து தோன்றி
அம்பினாலெம்மைக் கொன்றிடுகின்றது
அஞ்சினோம் தடம்பொங்கத்தம்பொங்கோ. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்	செவ்விதான	காவில்	அசோக வநிகையிலே
பொன்	பொன்னால் செய்யப்பட்டதாய்	சிறையா	சிறையிலிருப்பாம்படி
நீள்	நீண்டிருப்பதுமான	வைத்ததே	வைத்திருந்த விதுதானே
முடி	கிரீடத்தையுடையனாய்	குற்றமாயிற்று	தப்பாய்த்தலைக் கட்டிற்று;
எங்கள்	எங்களுக்கு நியந்தா	க்காணீர்	
இராவணன்	ராவணனானவன்[வான		(அக்குற்றமே ஹேதுவாக,)
சீதை என்பது	"பிராட்டி" என்கிற	கும்பனோடு	கும்பனும்
ஓர் தெய்வம்	ஒரு தேவதையை	நிகும்பனும்	நிகும்பனும்
கொணர்ந்து	கொண்டு வந்து	பட்டான்	மாண்டு போனார்கள்;
வம்பு உலாம்	புதுமை மாறாதேயிருப்பதாய்	கூற்றம்	(ராவணன் கையிலே முன்பு தோற்ற) ம்ருத்யுவானவன்
கடி	பரிமளத்தை யுடைத்தான		

(என்றுப்போலே) என்றது-செறிவையும் மென்மையையும் ஸூசிப்பிக்கிறது. (௧) "செறிமென் கூந்தல்" என்னக்கடவதிறே. "மாமயில்" என்ற த்ருஷ்டாந்த பலத்தாலே நீட்சிஸித்தமென்று திருவுள்ளம்பற்றி, மற்றவற்றைப் பிரித்தருளிச் செய்தார். ... ... (௪)

(௧) பெரி-தி-௧-௧-௪.

மானிடமாய் மாநுஷ வேஷத்தைப் பரிக்ரஹித்து	எம்மை எங்களை
வந்துதோன்றி (இவ்விடத்தில்) வந்து தோன்றி	கொன்றிடுகின் நலியாநின்றான்;
அம்பினால் பாணத்தினால்	ஈது அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ. (௫)

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (செம்பொனித்யாதி) ஶ்லாக்யமான திக்விஜயம்பண்ணிக்கவித்த முடியையுடையனானஎங்களுடைய ராவணன், பிராட்டியென்றொரு தேவதையைக்கொண்டுவந்து. (வம்பித்யாதி) புதுமைமாறாதே யிருப்பதாய், பரிமளத்தையுடைத்தான அசோகவநிகையிலே, பெருமாளுக்கும் அவளுக்குமேகாந்தமாகவநுபவிக்கலாம் தேசத்திலே அவர்பக்கல் நின்றும்பிரித்து, அவளைத் தனியே வைத்தவிது குற்றமாய், அதுவே ஹேதுவாக கும்பநிகும்பர்கள் பட்டார்கள்.

(கூற்றமித்யாதி) ராவணன்கையிலே முன்புதோற்ற ம்ருத்யுவானவன் வந்து; ராவணன் தேவர்களை நெருக்கிவரக்கொண்டு மநுஷ்யர்களை அநாதரித்தான்; அத்தாலே அந்தம்ருத்யு - மாநுஷவேஷத்தைப் பரிக்ரஹித்துத்தோன்றி, அந்தமனிச்சுக்கு ஏகாந்தமான அம்பாலே எங்களைக்கொல்லுகிறவித்தனை. .... (௫)

மூ;—ஓதமாகடலைக் கடந்தேறி
	புயர்கொள்மாக்கடிகாவை யிறுத்துக்
காதல்மக்களும் சுற்றமும் கொன்று
	கடியிலங்கை மலங்க வெரித்துத்
தூதுவந்தகுரங்குக்கே உங்கள்
	தோன்றல்தேவியை விட்டுக்கொடாதே
ஆதர்நின்று படுகின்றதந்தோ
	அஞ்சினோம்தடம்பொங்கத்தம் பொங்கோ. (௬)

அ;—அஞ்சாம்பாட்டு. (செம்பொனித்யாதி) ராவணன் ம்ருதப்ராயனென்று பிராட்டியைக் கொண்டு நடமின் என்றார்கள். அவன் ம்ருதப்ராயனானைக்கு உடலாக ப்ரபல வீரர்கள் பட்டபடியைச் சொல்லி முதலிகளைக் குறித்து பயத்தை அறிவிப்பிக்கிறார்களென்று ஸங்கதி.

பட்டபின்புசொல்லுவார் பாசுரம் கீழேயென்னும்பக்ஷத்திலே, இப்பாட்டுத் துடங்கி ராவணவதாத்பூர்வம் என்று கொள்ளவேணும். கடிகாவில் வைத்தது சிறையாமோ வென்ன வருளுகிறார் (பெருமாளுக்கித்யாதி), (௫)

பதம்.	உரை.
ஓதம்	அலையெறிகிற
மாகடலை	பெருங்கடலை
கடந்து	தாண்டி,
ஏறி	அக்கரைப்பட்டு
உயர்கொள்	ஒக்கத்தையுடைத்தாய்
மா	பரந்த
கடி	பரிமளிதமாயிருந்துள்ள
காவை	சோலையையுடைய அசோகவநிகையை
இறுத்து	முறித்து,
காதல்	(ராவணனுடைய) ஸ்நேஹ விஷயரான
மக்களும்	அக்ஷகுமாரன் தொடக்கமான புத்ரர்களையும்
சுற்றமும்	அந்தரங்க கிங்கரர்களையும்
கொன்று	கொன்று,
கடி	காவல்களையுடைத்தான
இலங்கை	லங்கையானது
மலங்க	கலங்கும்படி

பதம்.	உரை.
எரித்து	(அக்நியாலே) தஹித்து,
தூதுவந்த	(பிராட்டி பக்கல்) தூது சொல்லவந்த
குரங்குக்கே	ஒரு குரங்கின் (ஹநுமான்) கையிலேயே
உங்கள்	உங்களுக்கு
தோன்றல்	ஸ்வாமியான பெருமாளுடைய
தேவியை	தேவியான பிராட்டியை
விட்டுக்கொடாதே	விட்டுக்கொடாமல்
ஆதர்	இளிம்பரான நாங்கள்
நின்று	இப்படி துவண்டு நின்று
படுகின்றது	அநர்த்தப்படவேண்டிற்று;
அந்தோ	ஐயோ!

அஞ்சினோம் தடம் பொங்கத்தம் பொங்கோ. (௬)

வ்யா;—ஆறும்பாட்டு. (ஓதமாகடலையித்யாதி) அலையெறிகிற பெருங்கடலைத் தன் கவட்டின்கீழேயாம்படி கடந்து அக்கரைப் பட்டு. (உயர்கொளித்யாதி) ஒக்கத்தையுடைத்தாய் பரந்து பரிமளிதமாயிருந்துள்ள சோலையையுடைய அசோகவநிகை, அத்தை

அந;—ஆறும்பாட்டு. (ஓதமித்யாதி). "கூற்றம் மானிடமாய் வந்து தோன்றிக்-கொன்றிடுகின்றது" என்றுசொல்லாநின்றீர்கள்; ஒருகுரங்குவந்து ஊரைச்சுட்டபோதே அஞ்சி, ஸந்தி ([illegible]) பண்ணிக்கொள்ள வொண்ணாதோ? *க(×)தேஜலே ஸேதுபந்தம்போலே ஹதசேஷராய் இப்போது கூப்பிடுவா னென்னென்ன; இங்ஙனே விவேகமுண்டாகில் இத்தனைவருமோ என்கிறார்க ளென்று ஸங்கதி.

(கவட்டின்கீழே)-தப்படிக்குள்ளே யென்கை. (சோலை) என்றத்தைப் பிரித்து வாக்யபேதமாக்கி, "இப்படி வைலக்ஷண்யத்தை யென்றத்தை" எ

முறித்து. (காதன்மக்களித்யாதி) ராவணனுக்கு ஸ்நேஹ விஷயமான அக்ஷயகுமாரன் முடக்கமானபுத்ரர்களையும், அவனுக்குஅந்தரங்கரான கிங்கரர் முடக்கமானுரையுங் கொன்று.

(கடியிலங்கையித்யாதி) அரணையுடைத்தாய், அக்நியும்புகுர அஞ்சியிருக்குமிவ்வூர் - ஒருவர்கூறை எழுவருடுக்கும்படி அக்நியை ப்ரவேசிப்பித்து. (தூதுவந்தவித்யாதி) "வெறுங்கையே தூதுவந்தானொருவன்செய்தது இதுவானல், நாம் இவளைக்கொண்டிருப்போமல்லோம்" என்று அவன்கையிலே பிராட்டியை விட்டுக்கொடாதே. (ஆதரித்யாதி) "ஆதர்" என்று - இளிம்பரென்றபடி. இளிம்பரான நாங்கள் இப்படிப்படாநின்றோம். (அஞ்சினேம்) அச்சமில்லாத அன்று பட்டத்தை இன்று படவேணுமோ? .... (சு)

மூ;—தாழமின்றி முந்நீரை யஞ்ஞான்று
தகைந்ததேகண்டு வஞ்சிநுண்மருங்குல்
மாழைமான்மடநோக்கியை விட்டு
வாழகில்லா மதியின்மனத்தானை
ஏழையை யிலங்கைக் கிறைதன்னை
யெங்களையொழியக் கொலையவனைச்
சூழுமாநினை மாமணிவண்ணா
சொல்லினேம் தடம் பொங்கத்தம்பொங்கோ. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மாமணி வண்ணா!—;		மான்	மானினுடைய
தாழம் இன்றி	விளம்பமில்லாமல்	மடம்	ம்ருதுவான
முந்நீரை	கடலை	நோக்கியை	நோக்கையுமுடைய ளான பிராட்டியை
அஞ்ஞான்று	அன்றைக்கு		
தகைந்ததே	அணைசெய்த தொன்றையே	விட்டு	பெருமாள் ஸந்நிதியிலே ஸமர்ப்பித்துவிட்டு
கண்டு	கண்டு,		
வஞ்சி	வஞ்சிக்கொடிபோலே	வாழகில்லா	வாழமாட்டாத
நுண்	ஸூக்ஷ்மமான	மதி இல் மனத்தானை	மதிகேடனுமாய்
மருங்குல்	இடையையும்		
மாழை	முக்த (X) மான		

ன்று அத்யாஹரித்துக்கொள்வது. (புத்ரர்களை) என்றது-மந்த்ரி புத்ரர்களையென்கை. (க) "సప్త మన్త్రిసుతానపి। శూరమక్షఞ్చ- ஸப்த மந்த்ரிஸுதாநபி। சூரமக்ஷஞ்ச" என்னக்கடவதிறே. ... ... (சு)

(க). ரா-பா-எடு.

ஏழையை அஜ்ஞ (அப்ராப்தவிஷயத்திலே சாபலத்தைப்பண்ணுமவ)னாய்	கொலையவனை வதம்பண்ண ப்ராப்தனான ராவணனை
இலங்கைக்கு லங்காநகரத்துக்கு	சூழும் ஆ "சூழ்த்துக்கொள்ளும் ப்ரகாரத்தை
இறைதன்னை நிர்வாஹகனாக அபிமானித்திருப்பவனாய்	நினை நினைத்தருளவேணும்" (என்று)
எங்களை ஒழிய (குற்றமற்ற) எங்களை நீக்கி	சொல்லினோம் சொன்னோம்; தடம்பொங்கத்தம் பொங்கோ. (எ)

வ்யா;—ஏழாம்பாட்டு. (தாழமின்றி) அக்கரைப் படுக்கைக்கு ஒரு கடல் இடைச்சுவராய்க் கிடந்ததென்னு. விளம்பமின்றிக்கே. (அஞ்ஞான்று தகைந்ததே கண்டு) கடலை அணைசெய்ததொன்றுமே கண்டு. இத்தைக்கண்டால் இவன் நம்மை அழிக்க வல்லனென்று இருக்கவேண்டாவோ?. (வஞ்சியித்யாதி) "இவள் வடிவழகுக்கு அவன் வேணுமத்தனையல்லது, நமக்குத்தகாள்" என்று பார்த்து, இவளை விட்டு வாழமாட்டாத மதிகேடனை.

(ஏழையை) அப்ராப்தவிஷயத்திலே சாபலத்தைப்பண்ணுமவனை. (இலங்கைக்கிறை தன்னை) இதொன்றையுமாயிற்று புத்திபண்ணியிருந்தது. நான் இவ்வூர்க்கதிபதி-நிர்வாஹகனென்று; இதொன்றையுமே நினைத்திருந்தான். (எங்களையொழியக் கொலையவனை) குற்றம நின்ற விடத்தே வதம் பண்ணப் பார்த்தருள வேணும்.

அரு;—ஏழாம்பாட்டு. (தாழமித்யாதி) "உங்கள தோன்றல் தேவியை விடக்கொடாதே" என்று முதலிகளைப்பார்த்துக்கூப்பிடச்செய்தேயும், ராமசரவர்ஷம் மாறுதே நடக்கையாலே, பெருமாள் ஸந்நிதியிலேவந்து, ராவணனுடைய மதிகேட்டையும்சொல்லி, அவனையன்றோ கொல்லவடுப்பது என்று விண்ணப்பம் செய்கிறார்களென்று ஸங்கதி.

"மாமணிவண்ணா" என்றத்தைகடாக்ஷித்துப் பிராட்டியை வர்ணித்ததுக்குக் கருத்தருளுகிறார் (இவளித்யாதி).

"எங்களையொழியக் கொலையவனை" என்றெடுத்த ப்ரதீகம் "சூழுமாநினை" என்னுமளவுக்கும் உபலக்ஷணமென்று, எல்லாவற்றுக்கும் பலிதமான தாத்பர்யமருளுகிறார் (குற்றமித்யாதி). "இறைதன்னை - எங்களையொழியக் கொலையவனை என்னுமவனை, சூழுமா - சூழ்த்துக்கொள்ளும் ப்ரகாரம், நினைத்தருளவேணும்" என்று சப்தார்த்தம் கண்டுகொள்வது- ... ... (ஏ)

(சொல்லினோம்) நாங்கள் அறியாமல் கொலையுண்டோமாகாமல் சொன்னோம். .... (௭)

மூ;—மனங்கொண்டேறும் மண்டோதரிமுதலா
அங்கயல்கண்ணினார்க ளிருப்பத்
தனம்கொள்மென்முலை நோக்கமொழிந்து
தஞ்சமே சிலதாபதரென்று
புனங்கொள்மென்மயிலைச் சிறைவைத்த
புன்மையாளன் நெஞ்சில் புகவெய்த
அனங்கனன்ன திண்டோ ளெம்மிராமற்கு
அஞ்சினோம் தடம்பொங்கத்தம் பொங்கோ. (௮)

பதம்.	உரை.
மனம்கொண்டு	(தன்னுடைய) ஹ்ருதயத்தை அபஹரித்து
ஏறும்	(நெஞ்சுக்குப்) பொருந்தியிருப்பவர்களான
மண்டோதரி முதலா	மந்தோதரி முதலான
அம்	அழகிய
கயல்	கயல் போன்ற
கண்ணினார்கள்	கண்ணழகையுடைய மஹிஷிகள்
இருப்ப	இருக்கச்செய்தே,
தனம்கொள்	(தனக்கு) ஸர்வஸ்வமாய்
மெல்	ம்ருதுவான
முலை	(அவர்களுடைய) முலைகளிலே
நோக்கம்	பேணுதலை
ஒழிந்து	விட்டு,
தஞ்சம்	("பிராட்டிக்குத்) தஞ்சமாய் வருவார்
சிலதாபதரே என்று	சிலதாபஸரன்றோ? (அவர்கள் சரக்கென்") என்றுகருதி,
புனங்கொள்	அரண்யத்திலேயிருக்கிற
மென்மயிலை	அழகிய மயில்போன்ற பிராட்டியை
சிறைவைத்த	சிறையிலேவைத்தவனாய்
புன்மையாளன்	நீசமான நினைவையுடையனான ராவணனுடைய
நெஞ்சில்	நெஞ்சிலே
புக	உறைக்க
எய்த	எய்யவல்லராய்,
அனங்கன் அன்ன	ஸாக்ஷாந்மந்மதன் போன்றவராய்,
திண்தோள்	திண்ணிய தோளையுடையராய்,
எம்	எங்களைக்காக்க வல்லருமான
இராமற்கு	பெருமாளுக்கு
அஞ்சினோம்	பயப்பட்டோம்;
தடம்பொங்கத்தம் பொங்கோ. (௮)	

௮௫;—எட்டாம்பாட்டு. (மனம்கொண்டேறு மித்யாதி) பெருமாள் ஸந்நிதியிலேவந்து "எங்களையொழிய அவனைக்கொலை" என்னவே, அநந்தரம் ராவணனைவென்று கொன்றபடியைக்கண்டு மிகவுமஞ்சி, முதலிகளைக் குறித்து

வ்யா;—எட்டாம்பாட்டு. (மனங்கொண்டேறும்) தனக்கு போக்யமானவிஷயமில்லாமைகெட்டானல்லன். ஹ்ருதயத்தைஹரிக்க வல்லவர்களாய், நெஞ்சுக்குப் பொருந்துவர்களுமான மண்டோதரி துடக்கமான அழகிய கயல்போலேயிருக்கிற கண்ணழகையுடையவர்களிருக்க, தனக்குத்தநமாய், ஸர்வஸ்வமாயிருக்கிற அவர்கள் முலைகளைப்பாராதே "இவனுக்குத் தஞ்சமாய் வருவார் சில தாபஸரன்றோ? அவர்களில் சரக்கென்" என்று பிராட்டியைச்சிறைவைத்த ராவணனுடைய தப்ப நினைத்த நெஞ்சிலே. (புகவெய்த) உறைக்க எய்ய வல்லனாய், அழகிய வடிவையும், திண்ணிய தோளையுமுடைய பெருமானுக்கு அஞ்சினோம். .... (அ)

மூ;—புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப்போதில்
பொங்கெரிக் கிரைகண்டவ னம்பில்
சரங்களே கொடிதாயடுகின்ற
சாம்பவானுடன்நிற்கத் தொழுதோம்
இரங்குநீ யெமக் கெந்தைபிரானே
இலங்குவெங்கதிரோன் சிறுவா
குரங்குகட்கரசே யெம்மைக்கொல்லேல்
கூறினோம் தடம்பொங்கத்தம் பொங்கோ. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஓர்மாத்திரைப் போதில்	ஒருகண்ணிமைப் பொழுதில்	அம்பில்	அம்புகளிலுங்காட்டில்
புரங்கள்மூன்றும்	த்ரிபுரங்களையும	கொடிதாய்	கொடியதாயிருக்கிற
பொங்கு	வ்ருத்தியடையாநின்று	சரங்களே	ராமபாணங்களே
எரிக்கு	அக்நிபகவானுக்கு[ள்ள	அடுகின்ற	நலியாநின்றன;
இரைகண்டவன்	இரையாகக்கண்ட (தஹித்த) ருத்ரனுடைய	சாம்பவான்	ஸ்ரீஜாம்பவான்
		உடன்நிற்க	புருஷகாரமாகக்கூட நிற்க

விண்ணப்பம் செய்கிறார்களென்று ஸங்கதி.

ராவணன் மனத்தைக் கொள்ளவும், அவன் மனத்திலேறவும் வல்லளான மண்டோதரி என்றுக்கி அருளுகிறார் (ஹ்ருதயத்தையித்யாதி). இத்தால்கண்டபோதே சி(-ஏ)த்தாபஹாரிகளாய், உத்தரோத்தரம் ப்ரீதிவர்த்தகருமாயிருப்பர்களென்றதாயிற்று. (சரக்கு)என்று- சௌர்யாதிகளென்றபடி. (அ)

தொழுதோம் வணங்காநின்றோம்;
எந்தைபிரானே எங்கள்நாயகனே!
இலங்கு லோகத்துக் கடைய
ப்ரகாசகனான
வெங்கதிரோன் ஆதித்யனுடைய
சிறுவா மகனான ஸுக்ரீவனே!
குரங்குகட்கு வாநரயூத (ப) பதி
அரசே யே!
எமக்கு எங்கள் திறத்திலே
இரங்கு இரங்கியருள வேணும்;
எம்மை எங்களை
கொல்லேல் கொல்லாதொழிய
வேணும்;
கூறினோம் எங்களால் சொல்லலா
வதைச்சொன்னோம்;
தடம்பொங்கத்தம் பொங்கோ. (௯)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (புரங்கள் மூன்றும்) த்ரிபுரதஹநம் பண்ணின ருத்ரன் அம்புகளிலுங்காட்டில் கொடிதாயிருக்கிற ராம சரங்கள் எங்களை முடியாநின்றன. வ்ருத்த(த)ராய், நன்மை தீமைக ளுக்குக்கடவ ஸ்ரீஜாம்பவான், மஹாராஜர் புருஷகாரமாகத் தொ ழுதோம்; எங்களுக்கு இரங்கவேணும்; எங்கள் நாயகனே! லோகத் துக் கடைய ப்ரகாசகனான ஆதித்யன் மகனன்றோ நீர். ஸர்வநிர்வா ஹகரன்றோ; (கூறினோம்) நாங்கள் சொல்லச் செய்தே எங்களைக் கொல்லில் உமக்கு அவத்யமாம். .... (௯)

அநு:—ஒன்பதாம்பாட்டு- (புரங்களித்யாதி) கீழ்ப்பாட்டில் முதலிகளைப் பார்த்து முறையிடச்செய்தேயும், அவர்கள் - பரதந்த்ரர்களாகையாலே தங்க ளுக்கு அரசரான மஹாராஜரை ஆஶ்ரயிக்கச்சொல்ல, இவர்களும் புருஷகார த்தை முன்னிட்டுக்கொண்டு பெருமாளுடைய அம்பின் தீக்ஷ்ணதையைச் சொல்லி இரங்கச்சொல்லுகிறார்களென்று ஸங்கதி.

ராவணவதாநந்தரம் ராமபாண ஸஞ்சாரமில்லாவிட்டாலும், பயகாதரதை யாலே முன்பு ப்ரயோகித்தபடி நெஞ்சிலே கிடந்து, இப்போதும் தோற்றுகை யாலே (க) "ఆనయైనం హరిశ్రేష్ఠ - ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட" என்றவரா கையாலே, நமக்குப்பெருமாள் இரங்குகைக்கு மஹாராஜர் பரிக்ரஹம் வேணு மென்று சரணம் புகுகிறார்களென்று கருத்து. "ஏகமாத்ரோச்சாரணகாலம்- 'ஒருமாத்திரைப்போது' என்றது" என்று - சப்தார்த்தம் விவக்ஷித்து பலி தார்த்தமருளுகிறார் (த்ரிபுரேத்யாதி). அங்கதாதிகள் இருக்க, ஜாம்பவானைப் புருஷகாரமாக்குவானென்னென்ன வருளுகிறார் (வ்ருத்த (த) ராயித்யாதி).

(க) ரா-யு-௧௮-௩௪.

மூ;—அங்கு வானவர்க் காகுலம் தீர
அணியிலங்கை யழித்தவன் றன்னைப்
பொங்குமாவலவன் கலிகன்றி
புகன்ற பொங்கத்தங்கொண் டிவ்வுலகினில்
எங்கும்பாடி நின்றாடுமின் தொண்டீர்
இம்மையேயிடரில்லை இறந்தால்
தங்குமூரண்டமே கண்டுகொண்மின்
சாற்றினோம் தடம்பொங்கத்தம்பொங்கோ. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
தொண்டீர்	பகவத்பக்தர்களே!,
அங்கு	தேவலோகத்திலுள்ள
வானவர்க்கு	தேவதைகளுடைய
ஆகுலம்தீர	மனக்குழப்பம் தீரும்
அணி	தர்ஶநீயமான [படி
இலங்கை	லங்கையை
அழித்தவன் தன்னை	அழித்த சக்ரவர்த்தித் திருமகனை,
பொங்கு	கிளர்த்தியையுடைய
மா	"ஆடல்மா" என்னும் குதிரையை
வலவன்	நடத்தவல்லரான
கலிகன்றி	ஆழ்வார்
புகன்ற	அருளிச்செய்த
பொங்கத்தம் கொண்டு	"பொங்கத்தம் பொங்கோ" என்ற வெற்றிப் பாசுரங்களைக் கொண்டு
இவ்வுலகினில்	இந்தப்பூலோகத்தில்
எங்கும்	எல்லாவிடத்திலும்
பாடிநின்று	பாடிக்கொண்டு
ஆடுமின்	கூத்தாடுங்கோள்;
இம்மையே	இந்தஜந்மத்தில்
இடர்இல்லை	உங்களுக்கு வருவதொரு துன்பமில்லை;
இறந்தால்	ஶரீரம்நஶித்தால் (பிறகு)
தங்கும்ஊர்	தங்குமிடம்
அண்டமே	பரமபதமே;
கண்டுகொண்மின்	(இத்தை அபநுவத்தாலே) அறிந்துகொள்ளுங்கள்;
பொங்கத்தம் பொங்கோ	"பொங்கத்தம் பொங்கம்" என்கிற சப்தாநுகாரம்(உங்களுக்கு)
தடம்	ஒத்தது(என்றத்தை)
சாற்றினோம்	(எல்லாரு மறிய) சொன்னோம். (கo)

அநு;—பத்தாம்பாட்டு. (அங்கித்யாதி) மஹாராஜர் ஸந்நிதாநத்திலே கூறினோமென்று சொல்லச்செய்தேயும், இவர்களாலே கூத்துக் காணக்கடவராய் வார்த்தை சொல்லாமலிருக்க, அந்தக்கோஷ்டியிலே எல்லாரும் அறிய

வ்யா.—பத்தாம்பாட்டு. (அங்குவானவரித்யாதி) தேவஜாதி குடிகிடக்கும்படி தர்ஶநீயமான லங்கையை அழித்த சக்ரவர்த்தித் திருமகனைக் கவிபாடிற்று. அவனைப்போலே ஆண்பிள்ளையானவராயிற்றுக்கவிபாடினார். (புகன்ற) சொன்ன. (தொண்டீர்)-அந்தரங்கஷலர்க்கே கண்ட பாசுரமன்று இது. (க) "ஜயந்-ஜிதம்தே" என்றால் எல்லாருக்கும் சொல்லவேணுமிறே. இச்சரீராநந்தர மிருக்கு மிடம் பரமபதம். அதுதான் அநுபவத்தாலே அறிந்து கொள்ளுமத்தனை. எல்லாருமறியச் சொன்னோம். .... (௧௦)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து இரண்டாம் திருமொழி முற்றிற்று

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து மூன்றாம்திருமொழி
ஏத்துகின்றோம் ப்ரவேசம்.

வ்யா;—குணலைக் கூத்துப்போலே தோற்றார் தோல்விக்கீடாகக் குழமணிதூரக் கூத்தென்று ஒருகூத்துண்டுஆடுவது; அத்தை ராக்ஷ

"பொங்கத்தமென்று சொன்னோம்" என்று-தங்கள் பயத்தாலே சொன்ன பாசுரத்தை யருளுகிறார்; இத்திருமொழிக்குப் பலத்தையும் தாமான தன்மையிலே சொல்லி விடுகிறாரென்று ஸங்கதி.

"அங்குவானவர்" என்கிறது - மெல்லொத்தென்று திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளுகிறார் (தேவேத்யாதி). (எல்லாருமறியச் சொன்னோம்) என்றது - "பொங்கத்தம் பொங்கோதடம்" என்று எங்களுக்குத் தக்கதென்று, நீங்களெல்லாரும் அறியச்சொன்னோமென்று வாநரஸேனையைக் குறித்துச் சொன்னபடி. ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு;—ஏத்துகின்றோம் ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே எல்லாரு மறியப் பற்றி அடிக்கிறோமென்று சொன்ன வளவிலேயும், மஹாராஜர் கூத்துக் காணவேண்டியிருக்க, அவ்வளவிலே வாநரஜாதி ஜாதிப்பகையாலே நலியப் புகுர, ரஸாவஹமாகக் கூத்தாடக்கடவோ மென்கிறார்களென்று ஸங்கதியை உட்கொண்டு "குழமணிதூரம்" என்கிறத்தை விவரித்தருளுகிறார் (குணலைக் கூத்தித்யாதி). ... ... *

ஸர்செய்தபடியைப்பேசி அவர்கள்,பாசுரத்தாலே பகவத்விஷயத்தை அநுபவிக்கிறார். .... *

மூ:—ஏத்துகின்றோம் நாத்தழும்ப இராமன்திருநாமம்
சோத்தநம்பி சுக்கிரீவா வும்மைத்தொழுகின்றோம்
வார்த்தைபேசீரெம்மை யுங்கள்வானரங் கொல்லாமே
கூத்தர்போல வாடுகின்றோம் குழமணிதூரமே. (க)

பதம்.	உரை.
இராமன்	சக்ரவர்த்தித்திருமகனுடைய
திருநாமம்	திருநாமங்களை,
நா	நாக்கானது
தழும்ப	தழும்பேறும்படி
ஏத்துகின்றோம்	ஸ்துதியாநின்றோம்;
நம்பீ	ஆண்பிள்ளைத் தனத்தாலேபூர்ணரான
சுக்கிரீவா	மஹாராஜரே!
சோத்தம்	இதோரஞ்ஜலி;
உம்மை	உம்மை
தொழுகின்றோம்	திருவடிகளில்விழுந்து வணங்காநின்றோம்;
உங்கள்	நீங்களிட்டவழக்காயிராநின்ற

பதம்.	உரை.
வானரம்	வாநரவீரர்கள்
எம்மை	எங்களை
கொல்லாமே	கொல்லவொண்ணாத[படி
வார்க்கைபேசீ	(முகப்பிலேபரிவுதோன்றும்படிஎங்களோடே) வார்த்தை சொல்லவேணும்.
கூத்தர்போல	கூத்தாடுவாரைப்போலே
குழமணிதூரம்	குணலைக்கூத்துப்போலேயிராநின்ற தொருகூத்தை
ஆடுகின்றோம்	ஆடாநின்றோம். (க)

வ்யா;—முதற்பாட்டு. (ஏத்துகின்றோமித்யாதி)நாத்தழும் பெழும்படிஏத்துகின்றோம், ஏத்தாதிருக்கவொண்ணாதவிஷயத்தை. (க) ‘‘రామో రామో రామఇతి- ராமோராமோ ராமஇதி’’, ‘‘சோத்தம்’’ என்று அஞ்ஜலிபண்ணுவார் அதுக்கு உசிதமாகச்சொல்லுவதொரு பாசுரம். (நம்பீ) ஆண்பிள்ளைத் தனத்தாலே பூர்ணரான உமக்குச் சிலரைக்கொன்று வருவதோரேற்றமுண்டோ ?. (உம்மைத்தொழுகின்றோம்) பெருமாள் திருநாமத்தையே சொல்லி ஏத்துவார்க்கு உம்

அரு;—முதற்பாட்டு. (ஏத்துகின்றோ மித்யாதி). ‘‘இராமன்’’ என்ற பதத்துக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஏத்தாது) என்று. ஏத்தப்பண்ணும் என்னுமதுக்கு ப்ரமாணம் (ராமஇத்யாதி). ஒருவர் திருநாமத்தைச் சொல்லுகையும் மற்றொருவரைத் தொழுகையும் கூடுமோவென்ன வருளுகிறார் (பெரு

(க) ரா-யு-க௩க-கoச.

மை ஆஶ்ரயிக்க வேணுமிறே. அவர் இசைந்தாலும் (க) “வத்⁴யதாம்- வத்த்யதாம்” என்று நீர் சொன்னால் உம்மை இசைப்பித்து (உ) “ஆநய - ஆநய” என்று உம்மைவிட்டு அழைப்பித்துக்கைக் கொள்ள வேண்டுகையாலே.

“முன்பு பிராட்டியைப் பிரித்தபையலுக்குப்பரிகாரமாய் நின்று, இன்றுவந்துஅநுகூலிக்குங்காட்டில் ரக்ஷிக்கையாவதென்” என்று பேசாதேநின்றார்; அவ்வளவிலேமுதலிகள்வந்து கைக்கொள்ளப் புக்கார்கள்.(வார்த்தைபேசீர்) அல்லாததுபார்த்துக் கொள்ளுகிறோம்; எங்களோடே வார்த்தை சொல்லவமையும், ராஜாவோடே வார்த்தை சொல்லுகிறவர்களென்று முதலிகள் சொல்லாதபடி; என்கிறார்கள். (கூத்தர்போலே) பண்டே சிக்ஷித்து வைத்தவர்கள் போலே ஆடுகின்றோம்; எங்கள் செயலறுதியாலே. .... (க)

மூ;—எம்பிரானே யென்னையாள்வா யென்றென்றலற்றாதே
அம்பின்வாய்ப் பட்டாற்றகில்லா திந்திரசித்தழிந்தான்
நம்பியநுமா சுக்கிரீவா வங்கதனே நளனே
கும்பகர்ணன் பட்டுப்போனான் குழமணி தூரமே. .... (உ)

மாளித்யாதி). இத்தால் உமக்கு இஷ்டமென்று “ராமன்” என்கிற திருநாமத்தைச் சொன்னோ மத்தனையென்று கருத்து. அவரையே தொழவொண்ணாதோவென்ன (அவரித்யாதி).

“தொழுகின்றோம்” என்றவநந்தரம் “கூத்துக் காணவேண்டிப்பேசாதிருக்க, இவர்களை அநாதரித்தாராகக் கொண்டு † புதுமையாராயாதுமுதலிகள் நலியத் துடங்கினார்களென்று ஸங்கதியை அருளுகிறார் (முன்பித்யாதி).

(நின்றார்) என்றவநந்தரம் “ஆகக்கொண்டு” என்று சேஷம். ... (க)

அநு;—இரண்டாம்பாட்டு. (எம்பிரானேயித்யாதி) கீழ்ப்பாட்டிலே “குழமணி தூரமே யாடுகின்றோம்” என்ன; ஹநுமத் ப்ரப்ருதிகள்-நீங்களும் ராக்ஷஸராயிருந்து இங்ஙனே கூத்தாடுகை உசிதமோ? கரவதாதிகளாலே ப்ரஸித்த பௌர்யரான பெருமாளிருக்கச் செய்தேயும், இந்த்ரஜித்ப்ரப்ருதிகள் வணங்காமல் போவானென்னென்ன; வணக்கம் அவன் ஜந்மப்ரப்ருதி அறியாமை துர்மாநத்தாலே பட்டான்; எங்களுக்கு அங்ஙனேபடவேண்டுவதில்லை யென்கிறாரென்று ஸங்கதி.

(க) ரா-யு-கஎ-உக. (உ) ரா-யு-கஅ-ஙச. † (பா) அதுவுமாராய்ந்து.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இந்திரசித்து	இந்த்ரஜித்தானவன்	ஆற்றகில்லாது	ஆற்றமாட்டாமல்
எம்பிரானே	"எனக்குஉபகாரகனானவனே!,	அழிந்தான்	முடிந்து போனான்;
என்னைஆள்வாய்	என்னை யடிமைகொள்ளுமவனே!"	நம்பி	குணபூர்ணரான
என்றென்று	என்றிப் புடைகளிலேயுண்டா னபாசுரங்	அநுமா	சிறியதிருவடியே!
அலற்றாதே	வாயால்பாடாதே[களை	சுக்கிரீவா	மஹாராஜரே!
அம்பின்வாய்	பாணத்தின்வாயிலே	அங்கதனே	அங்கதரே!
பட்டு	அகப்பட்டு	நளனே	நளரே!
		கும்பகர்ணன்	கும்பகர்ணனானவன்
		பட்டுப்போனான்	மாண்டு போனான்;
			குழமணிதூரமே. (உ)

வ்யா;—இரண்டாம்பாட்டு. (எம்பிரானே) "எனக்கு உபகாரகனானவனே! என்னைஅடிமை கொள்ளுகிறவனே!" என்று இப்பாசுரங்கள்வாயில் படாமையாலே, தான் அம்பின்வாயிலே அகப்பட்டு ஆற்றமாட்டாமை முடிந்துபோனான் இந்த்ரஜித்து. (நம்பியநுமா) மஹாராஜர் (க) "ஸ்வேதாஸி - வத்த்யதாம்" என்றாலும் இத்தேசத்திலே இக்காலத்திலே வந்தானென்று சொல்லுமவரோடு மலைந்து கைக்கொள்ளப்பண்ணும்படியன்றோ உன்பூர்த்தி. (கும்பகர்ணனித்யாதி) எங்களுக்குமேவேறே சில ரக்ஷகருண்டென்று நினைத்து நலியவேண்டுவதில்லை. .... (உ)

மூ,—ஞாலமாளு முங்கள்கோமானெங்களிராவணற்குக்
காலனாகி வந்தவா கண்டஞ்சிக் கருமுகில்போல்
நீலன்வாழ்கச் சுடேணன்வாழ்க வங்கதன் வாழ்கவென்று
கோலமாக வாடுகின்றோம் குழமணிதூரமே. .... (௩)

"நம்பி" என்று-அநுமானை விசேஷித்ததுக்கு ப்ரகருதோபயோகம் காட்டுகிறார் (மஹாராஜரித்யாதி). (மலைந்து) மறுதலைத்து. ... ... (உ)

அ௫;—மூன்றாம்பாட்டு. (ஞாலமித்யாதி) கீழ்ப்பாட்டிலே "எம்பிரானே! என்னையாள்வானே" என்று இந்த்ரஜித் ப்ரப்ருதிகள் சேராமை துரபிமாநராவானென்னென்ன; "ராஜதர்மமன்றோ" என்று ஸோபஹாஸோக்தி பண்ண, இந்தப் பூமிக்கெல்லாமவரேயன்றோ ராஜா; அத்தை அறியாதே அவர்கள்துரபிமாநப்பட்டார்கள் ; நாங்கள் அறிந்தோமாகையால் உங்கள் ஸம்ருத்தியை ஆஶாஸித்துக்கொண்டு நாங்கள் ஆட ; நீங்கள் கண்டு மகிழவேணுமென்கிறார்களென்று ஸங்கதி.

(க) ரா-யு-கஎ-உக.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஞாலம்	பூமிப்பரப்பையடைய	நீலன்	நீலனானவன்
ஆளும்	ரக்ஷித்தருளா நின்றவராய்	வாழ்க	(பல்லாண்டு பல்லாண்டாய் வாழ்ந்திருக்கவேணும்;
உங்கள்	(வாநரவீரர்களான) உங்களுக்கு	சுடேணன்	ஸுஷேணனானவன்
கோமான்	ஸ்வாமியான பெருமான்	வாழ்க	வாழ்ந்திருக்கவேணும்;
எங்கள்	எங்களுக்கு நியாமகனான	அங்கதன்	அங்கதனானவன்
இராவணற்கு	ராவணனுக்கு	வாழ்க	வாழ்ந்திருக்கவேணும்"
காலனாகி	ஸாக்ஷாத்-யமனாய்	என்று	என்று பல்லாண்டு பாடிக்கொண்டு
வந்தது	வந்தபடியை	கோலமாக	அழகிதாக
கண்டு	பார்த்து		குழமணிதூரமாடுகின்றோம். (௩)
அஞ்சி	பயப்பட்டு, (நாங்கள்)		
கருமுகில்போல்	"காளமேகம்போன்ற		

வ்யா;—மூன்றாம்பாட்டு. (ஞாலமித்யாதி) பூமிப்பரப்படைய ஒருவர்மூலையடியே நடவாதபடி ரக்ஷிக்குமவரிறேபெருமாள். (௧) "இக்ஷ்வாகூணாம் - இக்ஷ்வாகூணும்" இத்யாதி. இப்படியிருக்கிறபெருமாள், எங்களுக்குக் கடவனாய்ப் போந்த ராவணனுக்குக் கூற்றமாய் வந்தபடிகண்டு அஞ்சி; நாங்கள் போக்கற்ற வழிமாத்ரமல்ல;உங்கள் ஸம்ருத்தி(ஸம்ருத்தி)எங்களுக்கு ப்ரயோஜநமாம்படியானோம். (கோலமாக) எங்களைக்கொல்லுகைக்கு ப்ரயோஜந முண்டோ?; கண்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி இத்தைக் காணலாகாதோ?; .... (௩)

மூ;—மணங்கள் நாறும் வார்குழலார் மாதர்களா தரத்தைப்
புணர்ந்த சிந்தைப் புன்மையாளன் பொன்றவரிசிலையால்
கணங்களுண்ண வாளியாண்ட காவலனுக்கிளையோன்
குணங்கள்பாடி யாடுகின்றோம் குழமணிதூரமே. .... (௪)

"கோலமாக" என்று-விசேஷித்ததுக்குக் கருத்தருளுகிறார் (எங்களித்யாதி). ... ... (௩)

அ௫.—நாலாம்பாட்டு. (மணங்களித்யாதி) கீழ்ப்பாட்டில் நீலாதிகளை எத்தினார்களாகிலும், ராமாநுஜாபிமாநம்வேணுமென்று, தங்கள்ராவணனுடைய தௌஷ்ட்யத்தையும் சொல்லி உகந்தாட ஒருப்படுகிறார்களென்று ஸங்கதி.

(௧) ரா-கிஷ்கி-௧அ-௫.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மணங்கள்	எல்லா கந்தங்களும்	கணங்கள்	(பிசாசங்களின்)திரளானது [யாகவும்,
நாறும்	பரிமளியாநின்றுள்ள	உண்ண	(அவனை) புஜிக்கும்படி
வார்	நீண்டிருக்கிற [தாய்	வரி	தர்ஶநீயமான
குழலார்	கூந்தலையுடைய	சிலையால்	வில்லிலே
மாதர்கள்	ஸ்த்ரீகள்பக்கலுண்டா	வாளி	அம்புகளை
ஆதரத்தை	அபிநிவேஶத்தை [ன	ஆண்ட	தொடுத்தருளின
புணர்ந்த	எப்போதும் விடாதே யிருக்கிற	காவலனுக்கு	ரக்ஷகரான, பெருமாளுடைய
சிந்தை	நெஞ்சையுடையனும்,	இளையோன்	திருத்தம்பியாரான இளையபெருமாளுடைய
புன்மையாளன்	அதிக்ஷுத்ரனை ராவணன்	குணங்கள்பாடி	குணங்களைப்பாடி
பொன்ற	முடியும்படியாகவும்,		குழமணிதூரமாடுகின்றோம்.

வ்யா;—நாலாம்பாட்டு. (மணங்கள் நாறுமித்யாதி) எல்லாமணத்தையு முடைத்தாய், நீண்டிருக்கிற குழலையுடைய ஸ்த்ரீகள் பக்கலுண்டான் ஆதரத்தை எப்போதும் விடாதேயிருக்கிற நெஞ்சையுடையனுகையாலே க்ஷுத்ரனை ராவணன்முடிய. (கணங்களித்யாதி) பச்சிறச்சிதின்னும் ம்ருகாதிகள் அவனைபுஜிக்க, தர்ஶநீயமானவில்லிலே அம்பைத்தொடுத்த பெருமாள் தம்பியாருடைய குணங்கள்பாடி ஆடுகின்றோம். .... (௪)

மூ;—வென்றிதந்தோம் மானம்வேண்டோம் தானமெமக்காக
இன்றுதம்பினெங்கள்வாணா ளெம்பெருமான்தமர்காள்
நின்றுகாணீர்கண்களார நீரெம்மைக்கொல்லாதே
குன்றுபோலவாடுகின்றோம் குழமணிதூரமே. (௫)

"பொன்ற" என்றதினர்த்தம் (முடிய) என்றது. (பச்சிறச்சி) புதுமாம்ஸம்.

அரு;—அஞ்சாம்பாட்டு. (வென்றியித்யாதி) நீங்கள் "இளையபெருமாள் குணங்களையும் பாடி ஆடுகின்றோம்" என்று இங்ஙனே இப்போது இப்படி சொல்லுமத்தனையிறே. பூர்வவாஸனை அநுவர்த்தித்து எதிரிகளாய் விட்டீர்களோ வென்ன ; எங்களுக்கு இனி அங்ஙனே யிருப்பது ஒரு துரபிமாநம் வேண்டுவதில்லை யென்கிறார்களென்று ஸங்கதி.

பதம்.	உரை.	பதம்.	உரை.
எம்பெருமான் தமர்காள்	ராமபக்தர்களான வாநர வீரர்களே!	வாழ்நாள்	ஆயுஸ்ஸை
வென்றி	ஜயத்தை	எமக்கு	எங்களுக்கு
தந்தோம்	(வெற்றிக்காக எங்களை நலிய நினைக்கிற உங்களுக்குக்) கொடுத்து விட்டோம்;	தானம்ஆக	தாநமாக
		இன்று	இப்போது
		தம்மின்	தாருங்கோள்;
		நீர்	நீங்கள்
		எம்மை	எங்களை
மானம்	(நாங்களுமாண்பிள்ளையென்றிருக்கைக் குடலான) துர்மாநத்தை	கொல்லாதே	கொல்லாமல்
		கண்கள்ஆர	கண்படைத்த ப்ரயோஜநம் பெறும்படி
		நின்றுகாணீர்	நின்றுகாணுங்கோள்;
வேண்டோம்	கைவிடாநின்றோம்;	குன்றுபோல	மலைபுரிந்தாற்போலே குழமணிதூரமாடுகின்றோம்.
எங்கள	எங்களுடைய		

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (வென்றிதந்தோம்) நீங்கள்தான் எங்களைக் கொல்லுகிறது வெற்றிக்காகவிறே. அத்தை உங்களுக்கு நாங்கள்தந்தோம். (மானம்வேண்டோம்) நாங்களும் ஆண்பிள்ளைகளென்றிருக்கிறது-துர்மாநத்தாலேயிறே. எங்களை நலிகிற துர்மாநத்தை வேண்டோம். (தானமித்யாதி) வெற்றிக்குமேலெழுத்திடவும் வேணும்; இதுக்கு நசைபண்ணுதொழியவும் வேணுமிறே. உங்களுக்குஎல்லாம் வாய்ச்சுதிறே. எங்கள்ஜீவநம் நீங்கள்இட்டவழக்காகையாலே எங்களாயுஸ்ஸை எங்களுக்குதா(ந)நமாக இன்றுதாருங்கோள். (எம்பெருமான்தமர்காள்) உங்களுக்கும் எங்களுக்கும் இங்ஙனே ஒருஸம்பந்தமுண்டு. அந்த ஸம்பந்தமுண்டாங்காட்டில்தர வேண்டுகிறதென்னென்னில்; (நின்றுகாணீர்) நின்று காணமாட்டிகோளோ, கண்படைத்த ப்ரயோஜநம்பெறும்படி. எத்தையென்ன; (குன்றுபோல) மலைபுரிந்தாப்போலே நின்று ஆடுகின்றோம். (௫)

"வென்றிதந்தோம்" "மானம் வேண்டாம்" என்கிற பதங்களிலே லப்யமான அர்த்தத்தை ஹேதுவாக்கிக் கொண்டு தாத்பர்ய மருளுகிறார் (வெற்றி... யாதி வாக்யசதுஷ்டயத்தாலே). "எம்" என்று விசேஷித்ததுக்குத் தாத்பர்யம் (உங்களுக்கு மித்யாதி). (காட்டில்) என்றவநந்தரம் "இனி" என்று சேஷம். "காணீர்" என்றவநந்தரம் "ஆகில்" என்று சேஷம். (௫)

ஃமூ;—கல்லின்முந்நீர்மாற்றிவந்து காவல்கடந்திலங்கை
அல்லல்செய்தானுங்கள்கோமா னெம்மையமர்க்களத்து
வெல்கிலாதஞ்சினோம்காண் வெங்கதிரோன் சிறுவா
கொல்லவேண்டாவாடுகின்றோம் குழமணிதூரமே. (௬).

பதம்.	உரை.
உங்கள்கோமான்	உங்களுக்கு ஸ்வாமியான பெருமாள்,
கல்லில்	கற்களாலே [குன்றுகளாலே]
முந்நீர்	கடலை
மாற்றிவந்து	(அணைகட்டித்) தகைந்து வந்து
இலங்கை	லங்கையிலுள்ள
காவல்	அரணகளையும்
கடந்து	அதிக்ரமித்து
எம்மை	(வீரச்சோறுண்டுவளர்ந்த) எங்களை
அமர்க்களத்து	யுத்தரங்கத்திலே
அல்லல்செய்தான்	மிகவும் அந்தரப்படுத்தினார்;
வெம்	வெவ்விய
கதிரோன்	கிரணங்களை யுடையனான ஸூர்யனுடைய
சிறுவா	மகனான ஸுக்ரீவனே!
வெல்கில்லாது	(உங்களை) ஜயிக்கமாட்டாமல்
அஞ்சினோம் காண்	பயப்பட்டோம்;
கொல்லவேண்டா	(எங்களைக்) கொல்லவேண்டா;
	குழமணிதூரமாடுகின்றோம்.

வ்யா.—ஆறும்பாட்டு. (கல்லித்யாதி) நீரிலே ஆழும்கல்லைக் கொண்டு (க) "𑌅𑌪𑍍𑌰𑌮𑍇𑌯𑍋 𑌮𑌹𑍋𑌦𑌧𑌿𑌃 - அப்ரமேயோமஹோததி:" என்கிறகடலை அணைகட்டி. (அல்லலித்யாதி) வீரச்சோறுண்டு போந்தவெங்களை ஒருவர்பட்டறியாத அல்லலை விளைத்தார் உங்கள் பெருமாள். பூசல்களத்திலே வெல்லமாட்டாமை அஞ்சினோம். பராபிபவநஸாமர்த்த்ய முடையவன் மகனன்றோ?. (கொல்லவித்யாதி) எங்களைக் கொல்லவேண்டா. காரியம்கொள்ளவமையும்.

அந;—ஆறும்பாட்டு. (கல்லித்யாதி) "எம்பெருமான் தமர்காள்" என்று எல்லாரையும் பார்த்து "வாணுள்தம்மின்" என்று ப்ரார்த்தித்தவுடன், மஹாராஜர் ஸந்நிதியிலே "நம்மேல் வினைகள் வாராமுன்" என்று எம்பெருமானுடைய பராக்ரமங்களைச் சொல்லி ஆடத்துடங்கினார்களென்று ஸங்கதி.

"கல்லில்" என்கிறஸப்தமியை-வேற்றுமைமாருட்டத்தாலேத்ருதீயையாக்கி "கல்லாலேமுந்நீரை,மாற்றி-தகைந்துவந்து, இலங்கையைக்காவல்கடந்து" என்றந்வயித்துப் பலிதார்த்த மருளுகிறார் (நீரிலேயித்யாதி). ... ... (௬

(க) ரா-யு-௧௩-௩௧.

மூ;—மாற்றமாவதித்தனையே வம்மினரக்கருள்ளீர்
சீற்றம்நும்மேல்தீரவேண்டில் சேவகம்பேசாதே
ஆற்றல்சான்றதொல்பிறப்பி லநுமனைவாழ்கவென்று
கூற்றமன்னார்காணவாடீர் குழமணிதூரமே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அரக்கர்உள்ளீர்	ராக்ஷஸ ஜந்மத்துக்குத் தக்கபடி வணங்கா முடிகளா யிருப்பவர்களே!	சேவகம்	வீரப்பாடு தோன்றும் படியான மிடுக்குப் பேச்சுக்களை
		பேசாதே	பேசாமல்,
வம்மின்	(எம்மைப்போலே ஸுக்ரீவ ஸந்நிதாநத்திலே) வந்து கிட்டுங்கோள்;	தொல்	அநாதியான (அடிகாணவொண்ணாத)
		பிறப்பில்	பிறப்பே பிடித்து
		ஆற்றல்சான்ற	மிக்க வலியை யுடையரான
மாற்றம் ஆவது	(நீங்கள் உஜ்ஜீவிக்கச் சொல்லவேண்டும்) வார்த்தையாவது	அனுமனை	சிறிய திருவடியை
		வாழ்க என்று	"பல்லாண்டுபல்லாண்டு" என்று மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு,
இத்தனையே	இதொன்றுமே;		
நும்மேல்	உங்கள் பக்கலிலே	கூற்றம்அன்னார்	ம்ருத்யு ஸத்ருசரான மற்றுமுள் வாநரர்க[ள்]
சீற்றம்	(ஸுக்ரீவாதிகளுக்குண்டான) கோபமானது	காண	காணும்படியாக
		குழமணிதூரம்	குழமணிதூரமாடுங்
தீரவேண்டில்	தவிரவேணுமாகில்,	ஆடீர்	கோள். (௭)

வ்யா;—ஏழாம்பாட்டு. (மாற்றமாவதித்தனையே) சிலர்உஜ்ஜீவிக்கச்சொல்லவேண்டும் வார்த்தை இதொன்றுமே. (வம்மின்) ஸமதமாத்யுபேதனை அழைக்குமாபோலேஅழைக்கிறதாயிற்று இவர்களை. உங்களுக்குக்கடவ ராவணன்செய்த அநீதிகள் அறிவிகோளிறே. அத்தால்உங்கள்பக்கல் பிறந்த சீற்றந்தவிர வேணுமாகில்,

அந;—ஏழாம்பாட்டு. (மாற்றமித்யாதி) கீழ்ப்பாட்டிலே மஹாராஜர் ஸந்நிதாநம் பெற்றார் சிலர்- மற்றுமுள்ள ராக்ஷஸரை எல்லா மழைத்து உஜ்ஜீவநோபாயம் சொல்லுகிறார்கள் மேலிரண்டு பாட்டாலே என்று ஸங்கதி.

ராவணவதாநந்தரம் எல்லார்க்கும் அச்சமொத்திருக்க, சிலரை அழைக்க வேண்டுவா னென்னென்னில்; அவர்கள் அரக்கராகையாலே வணங்காமுடிகளாயிருக்க, அவர்களுக்கு வருமநர்த்தம் கண்டு அழைக்கிறார்களென்று விவக்ஷித்துக்கருத்தருளுகிறார் (சமதமேத்யாதி).

முந்துற முன்னம் சேவகப்பாடு சொல்லாதேகொள்ளுங்கோள்.

(ஆற்றலித்யாதி) வலியையுடையனுகைனயப் பிறப்பேயுடைய திருவடிவாழ்வானென்று. பரிகரமடையஅவன்பக்கலிலே ப்ராவண்யம். இவனைவாழ்த்தவே கொல்லுவாரில்லை. (கூற்றம்) திருவடியைச் சொன்னோமாகில் ம்ருத்யு ஸத்ருஸராயிருப்பாரும் விலங்குவர்கள் போலேகாணும். .... (எ)

மூ;—கவளயானைப்பாய் புரவித் தேரோடரக்கரெல்லாம்
துவளவென்ற வென்றியாளன்தன் றமர்கொல்லாமே
தவளமாடநீடயோத்தி காவலன்றன்சிறுவன்
குவளைவண்ணர்காண வாடீர் குழமணிதூரமே, (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கவளயானை	மதித்த யானைகளும்	தமர்	கிங்கரர்களான வாநர வீரர்கள்
பாய்புரவி	பாய்ந்து வருகிற குதிரைகளும்	கொல்லாமே	கொல்லாதபடி,
தேரோடு	தேர்களோடே	குவளை	கருநெய்தல் போன்ற
அரக்கர்எல்லாம்	ராக்ஷஸர்களெல்லாரும்	வண்ணர்	திருநிறத்தை யுடையராயும்,
துவள	சுவறிப் போம்படியாக	தவளம்	வெள்ளையிட்டும்
வென்ற	ஜயித்த	நீடு	ஓங்கியுமிருக்கிற
வென்றியாளன்தன்	ஆண்பிள்ளையானபெருமாளுடைய	மாடம்	மாடங்களையுடைய

"அரக்கருள்ளீர்" என்று-தாங்களும் அரக்கராயிருக்கவும் விசேஷிக்கையாலே, தாங்கள் வேறுபட்டமை ஸூசிதமென்று திருவுள்ளம். "உங்களுக்குக் கடவன்" என்றதுக்கு, தாங்கள் அருள்பெற்றவராகையாலே ராவணஸம்பந்த மற்றபடி தோற்றச்சொன்னார்களென்று கருத்து. அன்றிக்கே; கீழே ஸுக்ரீவ மஹாராஜர் தசக்ரீவ பரிகரத்தின் கூத்தைக்கண்டு தாமும் ஏகக்ரீவராய், "நீங்கள்-ராமகார்ய துரந்தரரான ஹநுமானைப் புகழ்ந்து கொண்டு பெருமாள் காணக் கூத்தாடுங்கோள்" என்று சொன்ன பாசுரத்தைத், தாமும் அவர்தசைபிறந்து இந்த இரண்டுபாட்டாலே அருளுகிறாரென்ற ஸங்கதியாகவுமாம்.

"தொல்-அநாதியாய், நம்மால் அடிகாணாத படியான, பிறப்பில், ஆற்றல் சான்ற-மிடுக்குச்சேர்ந்த, அநுமன்" என்று சப்தார்த்தமாய் தாத்பர்ய மருளுகிறார்(வலியையித்யாதி). திருவடியை வாழ்த்தினால், வாநரம் கொல்லாதிருக்குமோ வென்ன; (பரிகரமித்யாதி). (திருவடியை) என்றவநந்தரம் 'வாழ்த்து" என்று சேஷம். ... ... (எ)

அயோத்தி	அயோத்யைக்கு	சிறுவன்	திருமகனுருமான பெருமாள்
காவலன்தன்	நிர்வாஹகனுன சக்ரவர்த்தியின்	காண	கடாக்ஷித்தருளும்படி குழமணிதூரம் ஆடீர். (அ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (கவளயானை) மதித்தஆனை, பாய்ந்து வருகிறகுதிரை. (துவள) நாமே நாமாம்படி சுவறிப்போம்படி வென்ற ஆண்பிள்ளை. (தவளமாடமித்யாதி) வெள்ளையிட்டு ஓங்கின மாடங்களையுடைய திருவயோத்த்யைக்குக்கடவ சக்ரவர்த்தித் திருமகன். (குவளையித்யாதி) ஶ்யாமமான நிறத்தையுடையவர் காண, ஆடிகோள்; ராஜா கூத்துக்காணுநின்றுனென்று உங்களை விடும்படி. .... (அ)

மூ;—எடொத்தேந்தும் நீணிலைவே லெங்களிராவணனூர்
ஓடிப்போனூர் நாங்களெய்த்தோ முய்வதோர் காரணத்தால்
கூடிப்போந்தோ முங்கள்கோமானுணை தொடரேன்மின்
கூடிக்கூடி யாடுகின்றோம் குழமணிதூரமே. (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
எடு ஒத்து	பனையோலை விரிந்தாப்போலே அகன்றும்	எய்த்தோம்	(கொல்லவொண்ணுதபடி) இளைத்தோம்;
நீண்	நீண்டுமிருக்கிற	உய்வதோர்காரணத்தால்	(நாங்கள்) உஜ்ஜீவிக்கைக்காக
இலை	இலையையுடைய	உங்கள்கோமான்	உங்களுக்கு ஸ்வாமியானபெருமாளுடைய
வேல்	வேலை	ஆணை	ஆஜ்ஞையை
ஏந்தும்	கையிலேதரித்திருந்த,	கூடிப்போந்தோம்	ப்ரஸாவஹித்துக்கொண்டுபோந்தோம்;
எங்கள்	எங்களுக்கு நியந்தாவான	தொடரேல்மின்	(எங்களை நலியத்) தொடரவேண்டாம்;
இராவணனூர்	ராவணனுனவன்	கூடிக்கூடி	திரள்திரளாக விருந்து குழமணிதூரமாடுகின்றோம். (௯)
ஓடிப்போனூர்	முதுகு காட்டி ஓடிப்போனுன்;		
நாங்கள்	நாங்களோ		

அ௩;—எட்டாம்பாட்டு. (கவளமித்யாதி) எல்லாம்துவளவென்கையாலே வணங்கா முடிகள் ஒருவருமில்லாதபடி என்று பலிக்கையாலே அத்தை அருளுகிறுர் (நாமேயித்யாதி). "கூற்ற மன்னூர்காண வாடும்படி எங்ஙனே, அவர்கள் வென்றியாளன் தமரன்றே?; ஸ்வாதந்த்ர்யேண கூத்துக்காண்பரோ" என்று சங்கையிலே இப்பாட்டென்னுமது தோற்றத் தொகுத்தபாவமருளுகிறுர் (ராஜேத்யாதி). ... ... (அ)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (ஏடொத்தேந்தும்) அகலத்தை யுடைத்தாய், நீண்ட இலையையுடைய வேலைக்கையிலே தரித்து அத்தால் வந்த மதிப்பையுடையராவணன்; ஆயுதங்களும் அறப்புண்டு முதுகுகாட்டி ஓடிப்போனான். (நாங்களெய்த்தோம்) எங்களைக் கொல்லவொண்ணாதபடி இளைத்தோம். (உய்வதித்யாதி) நாங்கள் உஜ்ஜீவிக்கைக்காக (௧) "గచ్ఛానుజానామి-கச்சாநுஜாநாமி" என்று விட்டடித்தவருடைய ஆஜ்ஞையே சிரஸாவஹித்துக்கொண்டு போந்தோம். (தொடரேன்மின்) ஓடுவாரையிறே தொடரலாவது. (கூடிக்கூடியித்யாதி) எங்களைத் திரளாகக்கண்டது பூசலுக்கிறே என்று நினைக்கவேண்டா. .... (௯)

மூ;—வென்றதொல்சீர் தென்னிலங்கை வெஞ்சமத்தன்றரக்கர்
குன்றமன்னாராடியுய்ந்த குழமணிதூரத்தைக்
கன்றிநெய்நீர்நின்ற வேற்கைக் கலியனொலிமாலை
ஒன்றுமொன்று மைந்துமூன்றும் பாடிநின்றாடுமினே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

அரு;—ஒன்பதாம்பாட்டு. (எடுத்யாதி) "குவளைவண்ணர் காணவாடீர்" என்று சொன்னஉபதேசத்தைக்கேட்டு கூத்தாடுவதாக எல்லாருங்கூட,வாநர ஸேநையானது அரக்கர்கூட்டம் கண்டமையிலேஅதிசங்கையாலே துடர்ந்து அடிக்கவர; அவர்களைப்பார்த்து "எங்கள் ராவணன் ப்ரதமயுத்தத்திலே தானே(௨) 'చచాలచాపఞ్చముమోచ- சசாலசாபஞ்சமுமோச' என்றுமூர்ச்சிதனாக உங்கள் கோமான் *ரிபூணாமபிவத்ஸலனாகையாலே (௧) 'గచ్ఛానుజానామి-கச்சாநுஜாநாமி' என்றபோதே 'நமக்கு இவரே ரக்ஷகர்' என்று நிர்ணயித்தோம்; இனிராவணன் பட்டபின்பு, நாங்கள் கூடிற்றுக் கூத்துக்காக வித்தனை, எங்களைத்துடர வேண்டா" என்கிறார்களென்று ஸங்கதி.

எடு-பனையோலையாய், அத்தாலே அகலம் விவக்ஷிதமென்றது (அகலத்தையித்யாதி). மேலே நீட்சி சொல்லுகையாலே, பனையோலை விரித்தால் அகன்றிருக்குமே, அதுவே உசிதமென்று திருவுள்ளம். "ராவணனார்" என்று - பஹுவசநவிவக்ஷிதம் (மதிப்பையுடைய) என்றது. (அடித்தவர்) அடித்து விடுமவரென்றபடி. ... ... (௯)

---

(௧) ரா-யு-ருக-௧௪௪. (௨) ரா-யு-ருக-௧௪௦.

பதம்.	உரை.
வென்ற	வெற்றியை விளைப்ப
தொல்	ஸ்வாபாவிகமான[தாய்
சீர்	வீரஸ்ரீயையுடைய
தென் இலங்கை	லங்காபுரியில்
வெம்சத்து	பூசற்களத்திலே
அன்று	அப்போது
அரக்கர்	ராக்ஷஸர்கள்
குன்றம் அன்னார்	மலைபோன்ற பெரியவடிவுடையராய்
ஆடி உய்ந்த	ஆடி உஜ்ஜீவித்த
குழமணிதூரத்தை	'குழமணிதூரம்' என்னும் கூத்தின்விஷயமாக,
கன்றி	(எதிரிகள் ரக்தங்களாலே) கன்றி
நெய்ந்நின்ற	நெய்யிட்டிருக்கையையே ஸ்வபாவமாகவுடைய
வேல்	வேலை

பதம்.	உரை.
கை	திருக்கையிலே தரித்த
கலியன்	ஆழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	சொல்மாலையான
ஒன்றும் ஒன்றும்	(மஹாராஜரை நோக்கிச்சொன்ன) இரண்டு பாட்டுக்களும்,
ஐந்தும்	(வாநரமுதலிகளைக் குறித்துச்சொன்ன) ஐந்துபாட்டுக்களும்,
மூன்றும்	(பரோபதேசரூபமான) மூன்றுபாட்டும் (ஆகிய இப்) பத்துப் பாட்டை
பாடிநின்று	பாடிக்கொண்டு [யும்)
ஆடுமின்	(ஹர்ஷத்துக்குப் போக்குவீடாகக்) கூத்தாடுங்கோள்.

வ்யா;—பத்தாம்பாட்டு. (வென்றதொல்சீரித்யாதி) வெற்றியை விளைப்பதாய், ஸ்வாபாவிகமான வீரஸ்ரீயையுடைய லங்கையில் பூசல்களத்தில் ராக்ஷஸர் பெரியவடிகளோடே ஆடி உஜ்ஜீவித்துக் குழமணிதூரத்தைப்பேசிற்று. (கன்றிநெய்) எதிரிகள் ரக்தங்களாலே கன்றி நெய்யிட்டிருக்கையே - ஸ்வபாவமாகவுடைய வேலைக் கையிலே தரித்ததிருமங்கையாழ்வாரருளிச் செய்தது. ஆக ஆண்

அ௫;—பத்தாம்பாட்டு. (வென்றவித்யாதி) "கலியன்" என்றவநந்தரம் "பேசின" என்று அத்யாஹாரம் வேணுமென்று திருவுள்ளம்பற்றி (பேசிற்று) என்றது. ஆழ்வார் தம்முடைய வீரத்தை இப்போது சொல்லுகை - தோற்றோர் பாசுரத்தைச்சொல்லும் ப்ரகரணத்துக்குச் சேரும்படிஎன்னென்ன வருளுகிறார் (ஆகவித்யாதி), வீரர்கூத்தைப்பாட வீரர்கூத்தையாடத்துண்ண

பிள்ளை கவிபாடுகிறார்; ஆண்பிள்ளைகள் தோற்றுடுகிறார்கள். (ஒன்று மொன்றுமித்யாதி) இப்பத்தையும் பாடிக்கொண்டாட, உங்களுக்கு இனிவரக்கடவதொரு பயமில்லை. (௧) "நாவலிட்டுழிதருகின்றோம்" என்று வேண்டினபடி ஆடித்திரியுங்கோள். .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து மூன்றாந்திருமொழி முற்றிற்று.

பத்தாம்பத்து நாலாந்திருமொழி
சந்தமலர் ப்ரவேசம்.

வ்யா;—சந்தமலர்ப்ரவேசம். ராமாவதாரத்தில் பிறபட்டார்க்கும் இழவாமைக்கிறே-க்ருஷ்ணாவதாரம்; த்வேஷத்துக்கெல்லையானார்க்கும் இசையவேண்டும்படி யிருக்கிற ராமாவதாரத்தில் விஜயத்துக்குத் தோற்றவர்கள் பாசுரத்தாலே அநுபவித்தார்கீழ்; ராகத்துக்கெல்லையான யசோதைப்பிராட்டி பாசுரத்தாலே க்ருஷ்ணாவதாரத்தை அநுபவிக்கிறார் இதில். ....

மூ;—சந்தமலர்க்குழல்தாழத் தானுகந்தோடித்தனியே
வந்தென்முலைத்தடந்தன்னை வாங்கிநின்வாயில்மடுத்து
நந்தன்பிறப்பெற்றநம்பி நானுகந்துண்ணுமமுதே
எந்தைபெருமானே யுண்ணா யென்னம்மஞ்சேமமுண்ணாயே.

இங்ஙனேயும் ஒருரஸம்தோற்றத்தம்முடையவீரத்வம்பேசினாரென்றுகருத்து;

இத்திருமொழி தான்-முதல்பாட்டும், ஆறும்பாட்டும்-கேவலம் மஹாராஜரைப் பார்த்துச்சொல்லுகிறதாயிருக்கையாலே அவற்றை "ஒன்றுமொன்றும்" என்று கூட்டியும், இரண்டாம்பாட்டுத் துடங்கி-ஒருநாலும், ஒன்பதாம்பாட்டும்-வாநரமுதலிகளைக் குறித்துச் சொல்லுகையாலே "ஐந்தும்" என்று தொகுத்தும், மேல் ஏழாம்பாட்டும், எட்டாம்பாட்டும், பத்தாம்பாட்டும் - பரோபதேச ரூபமாகையாலே "மூன்றும்" என்று சேர்த்தும் ஆழ்வார் அநுபவித்தாராகத் திருவுள்ளம்பற்றி, ச(ஃ)காரத்தாலே இதினேற்றத்தை ஸூசிப்பிக்கிறார் (இப்பத்தையும்) என்று. ... ... (௧௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அரு;—சந்தமலர் ப்ரவேசம். ஸங்க்ரஹேண ஸங்கதியருளிச் செய்து அதின் ப்ரகாரத்தை விவரிக்கிறார் (த்வேஷத்துக்கித்யாதி). ... *

---

(௧) திருமாலை-௧.

பதம்.	உரை.
நந்தன்	நந்தகோபரானவர்
பெறப்பெற்ற	(உன்னைப்) பிள்ளையாகப்பெறும்படியான ஏற்றத்தை யுடைய
நம்பீ	பூர்ணனே!
நான்	நான்
உகந்து	ப்ரீதிபுரஸ்ஸரமாக
உண்ணும்	புஜிக்கிற
அமுதே	அம்ருதம்போல் ரஸ்யனானவனே!
எந்தைபெருமானே	என்குலநாதனான கண்ணனே!
சந்தமலர்	செவ்விப்பூக்களணிந்த
குழல்	மயிர்முடியானது
தாழ	அலைந்துவர,
தான்	தான் [நீ]

பதம்.	உரை.
தனியே	(பலராமனையொழியத்) தனியே
உகந்து	அபிநிவேசத்தோடே
ஓடிவந்து	ஓடி (என்னிடம்)வந்து
என்	என்னுடைய
முலைத்தடந் தன்னை	(பாலாலே நிரம்பின) முலையை
வாங்கி	கையில்வாங்கி
நின்	உன்னுடைய
வாயில்	வாயிலே
மடுத்து	நிறைத்துக்கொண்டு
உண்ணாய்	உண்ணவேணும்;
சேமம்	க்ஷேமத்தை விளைக்கக் கடவ
என் அம்மம்	என்முலைப்பாலை
உண்ணாய்	உண்ணக்கடவை. (க)

வ்யா;—முதற்பாட்டு. (சந்தமலர்க்குழல் தாழத்தான்) செவ்விப்பூக்களாலே அலங்கரித்து வைப்பார்களிறே திருக்குழல்களை. "சந்தம்" என்று-அழகாயிற்று. வெறும்புறத்திலே ஆகர்ஷகமான குழல். (தாழ) பூவாலே அலங்க்ருதமாய், பேணாமையாலே அலைந்துவர. (உகந்தோடி) ஆதரித்து அபிநிவேசத்தாலே ஓடி. (தனியே வந்து) (க) "பலதேவனென்னும் தன் நம்பியோடப் பின் கூடச் செல்வான்" என்கிறபடியே இருவரும் கூடவாயிற்று முலையுண்ண வருவது. கூடவரில் இருவருக்கும் ஓரோமுலையாமென்று தனியே வந்து. (என்முலையித்யாதி) அவை தனக்கு போக(भोग्य)மாயிருக்கிறபடி. பாலாலே நிரம்பினமுலையை.

அ௩;—முதற்பாட்டு. (சந்தமலரித்யாதி) "சந்தம்" என்றது - மலருக்கு விசேஷணமாக்கி அருளிச்செய்து, குழலுக்கு விசேஷணமாக்கி யருளுகிறார் (சந்தமென்றதித்யாதி). சந்தமலர்க்குழலானால் தாழக்கூடுமோ வென்ன (பூவாலித்யாதி). (பேணாமையாலே) அத்தைப்பேணிக்கொண்டிராதே ஓடித்திரிகையாலே. "மடுத்து" என்றதுக்குத்தாத்பர்யம் (அவையித்யாதி). (தனக்கு) க்ருஷ்ணன் தனக்கு. "தடத்தை" என்னாதே "தன்னை" என்றதுக்குக் கருத்து (பாலாலேயித்யாதி).

(க) பெரி-தி-க-அ-ரு.

(நந்தனித்யாதி) (க) [[illegible]- குணைர்தசரதோபம:] "பரமபதத்திலுள்ள ஸ்வாபாவிககுணங்களும், அவதரித்து ஆர்ஜித்த குணங்களும் கூடிஞல் சக்ரவர்த்தியோடு உபமாநம் மார்மட்டமாய் நிற்குமித்தனை" என்று இத்தை ஜீயரருளிச்செய்ய, "பரமபுருஷனுக்கு ஓரிடத்தே பிறந்து ஒருகுணம் தேடவேணுமோ?" என்ருர் ஸுந்தரபாண்டியதேவர். "நாமோடுகிற நரம்பு இவனறிந்திலன்" என்றத்தைவிட்டு, "பரமபுருஷனென்றபோதை அழகிருந்தபடியென்" என்ருராம். ' எம்பெருமாஞர் ஸ்ரீபாதத்திலே அந்வயமில்லாதார், பகவத்விஷயத்தில் சொன்ன எற்றமெல்லாம் அர்த்தவாதமென்றிருப்பர்கள். அதுடையவர்கள் பகவத் ப்ரபாவத்துக்கு அவதியில்லாமையாலே சொன்னவை சில சொன்னவித்தனை; சொல்லாததுவேபெரிது" என்றிருப்பர்கள். (உ) "[illegible]-ஸத்யே நாதிவததி" யிறே.

(நந்தன்பிறப்பெற்றநம்பி) ஈஸ்வரனுக்கு இது அலப்யலாபமாயிருக்கிறபடி. இவர்பிள்ளையாகப்பெற்ற வேற்றமுடையவனே! (ங) "[illegible] - பிதரம்ரோசயாமாஸ" என்று அவனை ஆசைப்பட்டிறே பிறந்தது. தனக்குக் கிடையாதது பெறுகையிறே -

---

நந்தன் பெற்றத்தால் "நம்பி" என்று விவக்ஷித்து, அதுக்கு ஸம்வாதம் காட்டுகிருர் (குணைரித்யாதி). (ச) "[illegible] - பஹவோந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்யஸந்திதே" நாட்டார் கொண்டாடும்படி * ஸமஸ்த கல்யாணகுணாம்ருதோததியாயிருக்குமவரை தசரதஞேடு ஸாம்யம் சொல்லும்படி அமைத்துக் கொண்டிருக்கையாலே * மஹதோமந்தைஸ்ஸஹ நீரந்த்ரேண ஸம்ஸ்லேஷரூப குணம் ஸூசிதமென்று தாத்பர்யமருளுகிருர் (பரமபதத்திலித்யாதி). (நரம்பறிந்திலன்) ரஸதாரை அறிந்திலனென்றபடி. (அத்தை) ஸௌசீல்யகுணத்தை. இந்த அழகை அவனறியாதே போனுனென்று கருத்து. "தசரதாதிகளோடு ஸாம்யம் ஸௌசீல்யமென்று சொல்லக்கூடுமோ? அபிநயமாமத்தனையன்ருே" என்றும் சங்கையிலருளுகிருர் (எம்பெருமாஞரித்யாதி).

"நந்தன் பெற்ற" என்னுதே, "பிறப்பெற்ற" என்றதுக்குக் கருத்தருளுகிருர் (ஈஸ்வரனுக்கித்யாதி-பெறுகையுமென்னுமளவும்). ... ... (க)

(க) ரா-அ-க-கூ. (உ) சா-௭-கரு-க. (ங) ரா-பா-கரு-ஙo. (ச) ரா-அ-உ-உரு.

அலப்ப்யலாபமாவது. பிறக்கிற ஸம்ஸாரிக்குப் பிறவாமை ஏற்றமாமோபாதியிறே, அவனுக்குப் பிறக்கப்பெறுகையும். (நாணித்யாதி) தேவர்கள் தாங்கள் புஜிக்கும் அம்ருதத்தில்வாசி. என்குலநாதனே; "நந்தன் பிறப்பெற்ற" என்று தொடங்கி இவனுதரித்து முலையுண்கைக்காக ஸ்தோத்ரம் பண்ணுகிறாள். (என்னம்மம் சேமமுண்ணாயே) என்னுடைய அம்மமாகிற-சேமத்தை. (க)"சேமமெடுத்தது" என்னக் கடவதிறே. ராஜாக்களுக்குக்காவலோடேவரும் சோறாயிற்றுச் சேமமாகிறது.

மூ;—வங்கமறிகடல்வண்ணா மாமுகிலே யொக்குநம்பி
செங்கணெடியதிருவே செங்கமலம்புரைவாயா
கொங்கைசுரந்திட வுன்னைக்கூவியும் காணாதிருந்தேன்
எங்கிருந்தாயர்தங்களோ டென்விளையாடுகின்றாயே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வங்கம்	கப்பல்களோடேகூடி	வாயா	திருமுகத்தையுடையவனே!
மறி	ஓதங்கிளர்ந்த	கொங்கை	(என்) முலைகளிலே
கடல்	கடல் போன்ற	சுரந்திட	பால்சுரவாநின்ற வளவிலே
வண்ணா	வடிவையுடையவனே!	உன்னை	உன்னை
மாமுகிலேஒக்கும்	காளமேகத்தை ஒத்திரா நின்றுள்ள	கூவியும்	அழைத்தும்
நம்பீ	பூர்ணனே!	காணாதிருந்தேன்	(நீ) வரக்காண்கிறிலேன்;
செம்	சிவந்து	ஆயர்தங்களோடும்	இடைப்பிள்ளைகளோடு
நெடிய	நீண்டிராநின்றுள்ள	இருந்து	கூடியிருந்து
கண்	கண்களையுடைய	எங்கு	எவ்விடத்தில்
திருவே	ஸர்வாதிகனானவனே!	என்விளையாடுகின்றாய்	என்னவிளையாட்டு விளையாடாநின்றாய்.
செங்கமலம்புரை	செந்தாமரைப் பூப்போன்ற		

வ்யா;—இரண்டாம்பாட்டு. (வங்கம்) மரக்கலங்களோடுகூடி

அநு:—இரண்டாம்பாட்டு. (வங்கமித்யாதி) கீழ்ப்பாட்டில் "முலைத்தடம் தன்னை நின்வாயில் மடுத்துண்ணாய்" என்னச்செய்தேயும் அவன் தோழரோடு விளையாட்டைவிடாமலிருக்க, இவள் முலைக்கடுப்பாலே தேடிப்பிடித்தழைக்கிறாளென்று ஸங்கதி.

"வங்கங்களையுடைத்தாய், மறியாநிற்கிற கடல்" என்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யம் (மரக்கலமித்யாதி). வடிவுக்கொரு த்ருஷ்டாந்தம் சொல்லி

ஓதம்கிளர்ந்த கடல்போன்றவடிவையுடையவனே!. வடிவழகுக்குப் போலிதேடப்புக்கால் அங்குமிங்கும் கதிர்பொறுக்க வேண்டும்படியான பூர்த்தியை யுடையவனே!. (செங்கண்) அவயவசோபையோ தான் சொல்லிமுடியலாயிருக்கிறது. (திருவே) ஸர்வாதிகவஸ்துவை "திரு" என்று போலேகாணும் சொல்லுவது. (செங்கமலமித்யாதி) எல்லா அவயவமும் அப்படியேயாயிருப்பது.

(கொங்கையித்யாதி) நீயேபா(ஞ)வஜ்ஞனுய், தாய்முலை சுரந்து பார்த்திருக்குமன்று வருகையன்றிக்கே, நான் அழைத்தும் வரக்காணுதிருந்தேன். (எங்கித்யாதி) எங்கே புக்கிருந்து உன் பக்கல் நிரபேக்ஷராஞரோடே, ஸாபேக்ஷையாய் நான் பார்த்திருக்க, என்னவிளையாட்டு விளையாடுகிறது. .... (௨)

மூ;—திருவில்பொலிந்த வெழிலா ராயர்தம்பிள்ளைகளோடு
தெருவில்திளைக்கின்றநம்பீ செய்கின்ற தீமைகள்கண்டிட்டு
உருகியென்கொங்கையின்தீம்பா லோட்டந்து பாய்ந்திடுகின்ற
மருவிக்குடங்காலிருந்து வாய்முலையுண்ண நீவாராய். (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
திருவில்	ஸம்பத்தால்	நம்பீ	பூர்ணனே!
பொலிந்த	மிக்கவர்களாய்	செய்கின்ற	(நீ) செய்து போரா நின்ற [களை
எழில்	வடிவழகிலும்	தீமைகள்	(விளையாட்டுத்) தீம்பு
ஆர்	உன்னேடு ஒத்திரா நின்றுள்ள	கண்டிட்டு	(நான்) பார்த்து, (அந்த)உகப்பாலே),
ஆயர்தம் பிள்ளைகளோடு	இடைப்பிள்ளைகளோடே	என்	என்னுடைய
தெருவில்	தெருவிலேயிருந்து	கொங்கையின்	முலையிலுண்டான
திளைக்கின்ற	விளையாடுகிற		

மீளவும் ஒருத்ருஷ்டாந்தம் சொன்னதுக்குக் கருத்து (வடிவித்யாதி). "நெடிய செங்கண்" என்றருளுகிறுர் (அவயவேத்யாதி). "வாய்" என்றது திருக்கைகளுக்கும் உபலக்ஷண மென்றருளுகிறுர் (எல்லாவித்யாதி).

"கூடியும்" என்ற ச(ஃ)காரத்தை உட்கொண்டருளுகிறுர் (நீயேயித்யாதி). "ஆயர்களோடும்" என்கையாலே அவர்களுக்கு விளையாடுகையில் அபேக்ஷையின்றிக்கேயிருக்க, நீயே அவர்களையும் கூட்டிக்கொண்டு "என்ன விளையாடுகிருய் என்றுய்" என்கிறுளென்று விவக்ஷித்து அருளுகிறுர் (எங்கேயித்யாதி). ... ... (௨)

தீம்பால்	இனியபாலானது	குடங்கால்	(என்) மடியிலே
உருகி	(தானே) உருகி	மருவி இருந்து	பொருந்தியிருந்து
ஓட்டந்து	வெள்ளமிட்டு	வாய்	வாயாலே
பாய்ந்திடுகின்ற	பாய்ந்து பாழேபோகாநின்றது; (ஆகையால்)	முலை	முலைப்பாலை
		உண்ண	உண்பதற்கு
		நீவாராய்	நீவரவேணும். (ந)

வ்யா;—மூன்றாம்பாட்டு. (திருவில்பொலிந்த) ஸம்பத்தால் மிக்கு, வடிவழகிலும் உன்னோடொத்த * தன்னேராயிரம் பிள்ளைகளோடே தெருவிலேயிருந்து விளையாடுகிற விளையாட்டுக்கு அவதி (ஒ)யில்லாதவனே! முலையுண்ணுகையையும் விட்டிறே அத்தைவிரும்புகிறது. போக(ஒ)த்தையும்விட்டு லீலையைவிரும்புமவன் நீ.(செய்கின்ற) விளையாடுகிறபடியை ஒளித்துக்கண்டு நின்றாள்போலே. (உருகியித்யாதி) உன்ஸ்வம்மடையவன்றோ பாழேபோகிறது. (தீம்பால்) இனியபால். (மருவியித்யாதி) அவயவங்கள்தோறும் முழுசாமுகத்தைப்பாரா முலைசுரக்கப்பண்ணுமல் மடியிலே இருந்தாயிற்று உண்பது. இதடையத் தரையிலே போகாமே உன்வாயிலேயாம்படி முலையுண்ண வாராய். .... (ந)

மூ;—மக்கள்பெறுதவம்போலும் வையத்துவாழும் மடவார்
மக்கள்பிறர்கண்ணுக்கொக்கும் முதல்வாமதக்களிறன்னாய்
செக்கரிளம்பிறைதன்னை வாங்கி நின்கையில்தருவன்
ஒக்கலைமேலிருந்தம்ம முகந்தினிதுண்ணநீவாராய். (ச)

அரு;—மூன்றாம்பாட்டு. (திருவிலித்யாதி) கீழ்ப்பாட்டிலே "என் விளையாடுகின்றாயே" என்னச்செய்தேயும் லீலாரஸப்ரதானனாகையாலே தெருவிலே ஓடிநாநாவிதமான லீலைகளைப்பண்ண, அத்தைக்கண்டு அநுராகாதிசயத்தாலே முலைப்பால் வெள்ளமிட, பால்பாழே போகாதபடி போய் அழைக்கிறாளென்று ஸங்கதி.

(க) "ఋషానిరస్తోపికఃప్స్తన్యయోన్యజాతుమాతుశ్చరణ్ జిఘ్నసతి -ருஷாநிரஸ்தோபிஸிகஸ்ஸ்தநந்தயோ ஜாது மாதுஸ்சரணௌ ஜிஹாஸதி" என்றன்றோ லோகத்தில் பிள்ளைகளென்ன வருளுகிறார் (முலையித்யாதி). (விரும்புமவன்) விரும்புமவனன்றோ என்கை. கையும் கோலுமாய்ப் புறப்பட்டும், தாய்பார்க்க அவன் தீமைகள் செய்வனோ? இவள் கண்டபடி யென்னென்ன வருளுகிறார் (விளையாடுகிற வித்யாதி). ... ... (ந)

(க) ஸ்தோ-ர-உகூ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வையத்து	நாட்டிலே	செக்கர்	சிவந்தவானத்திலிருக் [கிற
வாழும்	வர்த்திக்கிற	இளம்பிறைதன்னை	பாலசந்த்ரனை
மடவார்	ஸ்த்ரீகளுடையவும்,	வாங்கி	வாங்கி (பிடித்து)
பிறர்	மற்றுமுள்ள	நின்	உன்னுடைய
மக்கள்	மநுஷ்யர்களுடையவும்	கையில்	கையிலே
கண்ணுக்கு	கண்ணுக்கு,	தருவன்	கொடுப்பேன்;
மக்கள்பெறு	பிள்ளை பெறுகைக்கு	ஒக்கலைமேல்	(என்)இடுப்பின்மேலே
தவம்போலுமொக்கும்	நோற்கும் தபஸ்ஸு தான் ஒருவடிவு கொண்டாற்போலே யிராநின்றுள்ள	இருந்து	இருந்து
		அம்மம்	ஸ்தந்யத்தை
		உவந்து	ஆதரித்து
முதல்வா	ஜகத்காரணபூதனே!	இனிது	இனிதாக
மதக்களிறு	மத்தகஜம்போன்றவ	உண்ண	புஜிக்க
அன்னாய்	வனே!;	நீ வாராய்	நீ வரவேணும். (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (மக்கட்பெறுதவம்) (வையத்துவாழும் மடவார்மக்கள் பிறர்-இவர்கள் கண்ணுக்கு, மக்கள் பெறுதவம்போலொக்கும் முதல்வா) நாட்டிலே வர்த்திக்கிற ஸ்த்ரீகள் - மற்றுண்டானமநுஷ்யர்கள், இவர்கள்கண்ணுக்குப் பிள்ளைபெறுகைக்குநோற்கும் தபஸ்ஸுதான் ஒருவடிவு கொண்டாப்போலே யிருக்கிறவனே! (மதக்களிறன்னாய்) ஸஞ்சாரமே இனிதாயிருக்கிறபடி. சிவந்தஆகாசமிருக்கிறபடி கண்டாயே. அதுக்குப் பரபாக(ஞாக)மான பிறையிருக்கிறபடி கண்டாயே. அப்பிறையைவாங்கி உன்னுடைய சிவந்த கையிலேதருவன். (என்னொக்கலையித்யாதி) என்ஒக்கலையிலே இழியாதிருந்து ஆதரித்து இனிதாக அம்ம முண்ணவாராய். (௪)

அரு;—நாலாம்பாட்டு. (மக்களித்யாதி) கீழ்ப்பாட்டிலே தெருவிலே விளையாடாநிற்கச்செய்தே, அழைத்தவுடனே யானைக்குட்டிபோலே பிடிகொடாதேயிருக்க, "உனக்கு விளையாடுகைக்கு அம்புலியம்மானைப் பிடித்துத் தருகிறேன்வா" என்றழைக்கிறுளென்று ஸங்கதி.

"மக்கள்" என்றதினர்த்தம்-(மநுஷ்யர்) என்றது. "போலும்" என்றும், "ஒக்கும்" என்று மிருக்கையாலே முற்றுவமை தோற்று மென்றருளுகிறுர் (தபஸ்ஸுதானித்யாதி). ... ... (௪)

மூ;—மைத்தகருங்குஞ்சிமைந்தா மாமருதூடு நடந்தாய்
வித்தகனேவிரையாதே வெண்ணெய்விழுங்கும் விகிர்தா
இத்தனைபோதன்றியென்றன் கொங்கைசுரந்திருக்ககில்லா
உத்தமனேயம்மமுண்ணா யுலகளந்தா யம்மமுண்ணாய். (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மைத்த	மையின் தன்மையை யுடைத்தாய்	என்றன்	என்னுடைய
கரு	இருண்டிராநின்றுள்ள	கொங்கை	ஸ்தநமானது
குஞ்சி	குழலையுடைய	சுரந்து	பால்சுரந்து
மைந்தா	முக்த(ஆ)னே!	இத்தனைபோது அன்றி	இத்தனை போதல்லாதே
மா	பெரிய	இருக்ககில்லா	பொறுத்துப் பாடாற்றப் போகாது;
மருதூடு	மருதுகளின் நடுவே		
நடந்தாய்	நடந்தருளினவனே !	உத்தமனே	ஸர்வோத்க்ருஷ்டனே
வித்தகனே	ஆஸ்சர்ய ஶக்தி யுக்தனே!	அம்மம்	ஸ்தந்யத்தை
விரையாதே	த்வரியாமல்	உண்ணாய்	உண்ணவேணும் ;
வெண்ணெய்	வெண்ணெயை	உலகு	உலகங்களை
விழுங்கும்	விழுங்குகிற	அளந்தாய்	(மூவடியால்) அளந்தருளினவனே!
விகிர்தா	விகிர்தமான (வேறுபட்ட) செயலையுடையவனே!,		அம்மம் உண்ணாய். (ரு)

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (மைத்த) மையின்தன்மையை யுடைத்தாய், கண்ணுக்குக்குளிர்ந்து இருண்டகுழலையுடைய முக்த(ஆ)னே!. பெரியமருதுகளின்நடுவே நடந்தாய், பெரியவற்றையெல்லாம் செய்கைக்கிடான ஆஸ்சர்யசக்தியை யுடையவனே! (விரை

அரு;—அஞ்சாம்பாட்டு. (மைத்தகருங்குஞ்சியித்யாதி) கீழ்ப்பாட்டிலே "அம்புலியம்மானை நின்கையில்தருவேன்" என்றுவைத்ததுவே வ்யாஜமாக்கி, மூன்றுற நின்கையில் பிடித்துக்கொடு வந்தாயாகில், நான் வருவேனென்ன; இவள் "அங்ஙனொத்த ஆஸ்சர்யங்களைச் செய்யவல்லாய் நீ யன்றோ" என்று புகழ்ந்து போது போக்காதே, நான் முலைக்கடுப்புப்பொறுக்கமாட்டேனென்று ப்ரார்த்திக்கிறாளென்று ஸங்கதி.

"வித்தகனே" என்றதின் தாத்பர்யம் (பெரியவற்றையித்யாதி). மாமருதூடு நடந்த வித்தகனாகையாலே, விரையாதே வெண்ணெயை விழுங்கத்

யாதே) "இனிஇதுசெய்யான்" என்னும்படி படுக்கையிலே கிடந்து அவள் பேரநின்றவாறே வெண்ணெயை விழுங்கும் விகிர்தமான செயலையுடையவனே! நெடும்போதுண்டாயிற்று முலைக்கடுப்போடே யிருக்கிறது. (இத்தனைபோதன்றி) இத்தனைபோது அல்லாதே, என்னால் பொறுத்துப் பாடாற்றப்போகாது. (உத்தமனே) உன் நோவிலும் தாய் நோவறியுமவனன்றோ? வேண்டுமளவிலே வந்து ஸ்பர்ஶித்த நீயன்றோ?.

மூ;—பிள்ளைகள்செய்வன செய்யாய் பேசில் பெரிதும்வலியை
கள்ள மனத்திலுடையைக் காணவே தீமைகள்செய்தி
உள்ளமுருகியென்கொங்கை யோட்டந்து பாய்ந்திடுகின்ற
பள்ளிக்குறிப்புச்செய்யாதே பாலமுதுண்ண நீவாராய்

பதம்.	உரை.	பதம்.	உரை.
பிள்ளைகள்	(உன்னோடொத்த) பிள்ளைகள்	தீமைகள்	(ஆஶ்சர்யமான) தீம்பு
செய்வன	செய்யுமவற்றை	செய்தி	செய்யாநின்றாய்; [களை
செய்யாய்	நீ செய்கிறிலை;	என்	என்னுடைய
பேசில்	பேசப்புக்கால்	உள்ளம்	நெஞ்சானது
பெரிதும்	மிகவும்	உருகி	உருகி,
வலியை	மிடுக்கையுடையனாயிராநின்றாய்;	கொங்கை	ஸ்தநமானது
மனத்தில்	நெஞ்சிலே	ஓட்டந்து	(பால்) பெருகி
கள்ளம்	கபடத்தை	பாய்ந்திடுகின்ற	பாயாநின்றது;
உடையை	வஹியாநின்றாய்;	நீ	நீ
காணவே	(விலக்குவார்க்கும்) பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்படி	பள்ளிக்குறிப்பு	(கண்கள் சிவப்பது முதலான) நித்ராலக்ஷணங்களை
		செய்யாதே	அபி(ஃ)நயியாமல்
			பாலமுது உண்ண வாராய். (கூ)

தொடங்கினானென்று விவக்ஷித்து, இதுவுமொரு ஆஶ்சர்யமான படியை யருளுகிறார் (இனியித்யாதி). உரலோடு கட்டுண்டவனாகையாலே இனிச்செய்யானென்று தானிருக்க, அதுவே-அவனுக்கு விரையாமைக்கு உடலாமென்று ஆஶ்சர்யப்படுகிறாரென்று திருவுள்ளம். மேலுக்குத் தாத்பர்யம் (நெடும்போதித்யாதி). (வேண்டுமளவிலே)-லோகத்திலே வேண்டுமளவிலே. ... (ரு)

வ்யா;—ஆரும்பாட்டு. (பிள்ளைகள்) உன் பருவத்தில் பிள்ளைகள் செய்வனவன்று நீ செய்வது. (பேசில்பெரிதும்வலியை) கண்ணெச்சிலானவற்றைச் செய்யாநிற்புதி. கண்ணெச்சிலாமென்று சொல்லாதொழியு மித்தனை. சொல்லில் பெரியமிடுக்கையுடைய உன்நெஞ்சில் நினைக்குமவை இன்னதென்று தெரியாது; விலக்குவார்க்கும் .கண்டுகொடுநிற்கவேண்டும் தீமைகள் செய்யாநிற்புதி. கண்டிருக்க ஆகர்ஷகமான தீம்புகளைச் செய்வுதி; அத்தீமைகாண என்ஹ்ருதயம்உருகி முலைவழியே பாலாய்ப்புறப்படாநின்றது. (பள்ளிக்குறிப்புச் செய்யாதே) கண்கள்சிவப்பது, மூரிநிமிர்வது, கொட்டாவிகொள்வது, அழுவதாகாதே. .... (௬)

மூ;—தன்மகனாக வன்பேய்ச்சிதான் முலையுண்ணக்கொடுக்க
வன்மகனாயவளாவிவாங்கி முலையுண்டநம்பீ
நன்மகளாய்மகளோடு நானிலமங்கைமணாளா
என்மகனேயம்மமுண்ணு யென்னம்மம்சேமமுண்ணாயே. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
வல்	நெஞ்சில் க்ரௌர்யத்தை யுடைய	ஆவி	ப்ராணனை
பேய்ச்சி	பூதனையானவள்	வாங்கி	(முலைவழியே)முடித்து
தன்மகனாக	தன் புத்ரனாக அபி	முலை	முலையை
தான்	தான் [நயித்து,	உண்ட	உறிந்தருளின
முலை	முலையை	நம்பீ	(ஆஶ்சர்ய சேஷ்டிதங்களால்) பூர்ணனானவனே!
உண்ண	புஜிக்கும்படி		
கொடுக்க	(வாயில்) வைக்க, (அவ்வளவிலே,)	நல்மகள்	நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடைய
வல் மகனாய்	வலியஆண்பிள்ளையாய்	ஆய்மகளோடு	நப்பின்னைப் பிராட்டிக்கும்,
அவள்	அந்தப் பூதனையினுடைய		

அரு;—ஆரும்பாட்டு. (பிள்ளைகளித்யாதி) கீழ்ப்பாட்டிலே இத்தனைபோது நான் பொறுக்கமாட்டேனென்னச் செய்தே விளையாட்டிலே மிகுதியாலே அலசி உறங்கப்புகுவதி, அது அங்ஙனே செய்யாய்; வாவென்று அழைக்கிறாளென்று ஸங்கதி.

"கள்ளமனத்திலுடையை" என்றதினர்த்தம் (உன் நெஞ்சிலித்யாதி).

நால்நிலமங்கை நால்வகை நிலங்களுக்கபிமாநிநியான ஸ்ரீபூமிப் பிராட்டிக்கும் மணாளா வல்லபனானவனே! என்மகனே எனக்குப் பிள்ளையாகப் பெற்றவனே! சேமம் அம்மம் உண்ணாய்; க்ஷேமத்தை விளைக்கக்கடவ என் அம்மம் உண்ணாய். (எ)

வ்யா;—ஏழாம்பாட்டு. (தன்மகனாக) யசோதைப் பிராட்டியாக வந்தாளாயிற்று. (வன்பேய்ச்சி) இவனைக்கண்டவிடத்திலும் நெகிழாத நெஞ்சில் வன்மையையுடையவள். (தான்முலையுண்ணக் கொடுக்க) பரிவோடே கொடுக்கிறாளென்று தோற்றும்படிகொடுக்க. (வன்மகனித்யாதி) தானும்தாயென்று ப்ர(மு)மியாதே அவளபிஸந்தியை புத்திபண்ணி அப்பருவத்திலேபெரியஆண்பிள்ளையாய் அவள் ப்ராணன்களை முலைவழியே உண்டு அவளை முடித்து இப்படிப்பட்ட செயல்களாலே பூர்ணனானவனே!

(நன்மகளித்யாதி) இப்படி பூதனைகையிலே அகப்பட்ட உன்னை ஆராக நினைத்தாய். நிருபாதிக ஸ்த்ரீத்வத்தையுடைய நப்பின்னைப் பிராட்டிக்கும் ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும் வல்லபனானவனே! (என்மகனே) அப்படியே ஓரேத்தம்போலே காணும் இவள் மகனானதுவும். (சேமமுண்ணாயே) அம்மம் என்று - புஜிக்கப்படுமவை எல்லாவற்றுக்கும்பேர். .... (எ)

மூ;—உந்தமடிகள்முனிவருன்னை நானென்கையில் கோலால்
நொந்திடமோதவுங்கில்லே னுங்கள்தமா நிரையெல்லாம்
வந்துபுகுதரும்போது வானிடைத்தெய்வங்கள்காண
அந்தியம்போதங்குநில்லே லாழியங்கையனேவாராய். (அ)

அரு;—ஏழாம்பாட்டு. (தன்மகனித்யாதி) "நீ காணவே தீமைகள் செய்தி" என்று நின்றாய்; நான் செய்த தீமைகளில் ஒன்றைச் சொல்லிக்காணாயென்ன; பூதனை முலைப்பாலுண்டு தீம்பு செய்தாயில்லையோ வென்கிறாளென்று ஸங்கதி.

வேற்றுமுலையறிந்து உண்கை தீம்பென்றுகருத்து. "தான்" என்றதின் பலிதம் (பரிவோடேயித்யாதி).

நாலுவகைப்பட்ட நிலத்துக்கு அபிமாநிநியானமங்கை யென்றருளுகிறார் (ஸ்ரீ பூமிப்பிராட்டிக்கும்) என்று. ... ... (எ)

அரு;—எட்டாம்பாட்டு. (உந்தமித்யாதி) கீழ்ப்பாட்டில் பூதனை முலையுண்டத்தைத் தீமையாகச் சொல்லுகையாலே நம்மைக்கட்டவும் அடிக்கவு

பதம்.	உரை.
நீ தீமைகள் செய்தால்,	
உந்தம்	உன்னுடைய
அடிகள்	பிதாவான நந்தகோபர்
முனிவர்	சீறுவர்;
உன்னை	(தீம்பிலே கைவளருகிற) உன்னை
நான்	(உன்னை நோக்கக் கடவ) நான்
என்	என்னுடைய
கையில்	கையிலிராநின்றுள்ள
கோலால்	கோலாலே
நொந்திட	நோம்படியாக
மோதவும்	அடிக்கவும்
கில்லேன்	ஶக்தையாகிறிலேன்;
உங்கள்தம்	உங்களுடைய
ஆநிரை எல்லாம்	பசுக்கூட்டமெல்லாம்

பதம்.	உரை.
வந்து	(காடுகளில் மேய்ந்து) மீண்டுவந்து
புகுதரும்போது	(ஊருக்குள்ளே) புகும்போது
வானிடை	ஆகாஶத்திலுள்ள
தெய்வங்கள்	தேவதைகள்
காண	(எச்சில் கண்ணால்) காணும்படி
அந்தியம்போது	(அஸுரர்களுக்கு பலம் வளரக்கடவ) ஸந்த்யா காலத்திலே
அங்கு	நாற்சந்தியிலே
நில்லேல்	நில்லாதே கொள்;
ஆழி	திருவாழியாழ்வானாலே
அம்	அழகிய
கையனே	திருக்கையை யுடையவனே!
வாராய்	(என்னருகே)வா. (௮)

வ்யா;—எட்டாம்பாட்டு. (உந்தமடிகள் முனிவர்) தாயாரைக்கண்டால் தீமையிலே ஒன்று பத்தாகப் பணைக்கும். ஸ்ரீநந்தகோபர்க்காயிற்று அஞ்சுவது. அத்தாலே அவனுக்கு அச்சமுறுத்துகைக்காக யசோதைப்பிராட்டி சொல்லும் பாசுரமாயிற்று. உங்கள் முதலியார் சீறுவர்கிடீர். (உன்னைநான்) தீம்பிலே கைவளருகிற உன்னைநோக்கவிருக்கிறநான். (என்கையில்கோலால்) கண்டாயிறே-இதின்பேர். இப்போதே சிவிட்கென்ன அடிக்கலாமிறே. அதுமாட்டுகிறிலேன்.

அடிக்கவேண்டும்படி செய்ததீமைதானென்னென்ன; (உங்கள்தமி

மழைக்கிருளாக வேணும்; "அம்ம முண்ண" என்று வ்யாஜமாத்ர மென்று நாலடி ஓட, கோலும் கையுமாய் பின்தொடர்ந்து அச்சமுறுத்தி அழைக்கிறாளென்று ஸங்கதி.

கோலும் கையுமாய்த் தான் நிற்க, "உந்தமடிகள் முனிவர்" என்பானென்னென்ன வருளுகிறார் (தாயாரையித்யாதி).

"நிரை எல்லாம்" என்று ஸமூஹ பாஹுள்யம் சொல்லுகைக்குத் தாத்

த்யாதி) உபயவிபூதியோபாதியும் பரப்புப்போருமாயிற்று. இவன் தன்னையொழியவேயும் கண்ணெச்சிலாம்படியாயிற்று அவை வந்து புகுரும்போதிருப்பது. இங்குகாண்கின்றருண்டோ வென்ன வேண்டா; (வானிடைத்தெய்வங்கள் காண) எத்தனை தேவதைகள் ஆகாசத்திலே பார்த்து நிற்கக்கடவது. அசுரர்களுக்கு ப(ப)லம் வர்த்திக்கும்போது அங்குநில்லாதேகொள். (அங்கு) "இவை இவனின" என்று உன்னோடே சேர்த்துச் சொல்லலாம்படி அங்கு நில்லாதேகொள். (ஆழியித்யாதி) இவற்றையொழியவேயும் (க) "வடிவார்சோதி வலத்துறையும் சுடராழியும் பல்லாண்டு" என்னும்படியாயிற்றிருப்பது. .... (அ)

மூ;—பெற்றத்தலைவனெங்கோமான் பேரருளாளன்மதலாய்
சுற்றக்குழாத்திளங்கோவே தோன்றியதொல்புகழாளா
கற்றினம்தோறும்மறித்துக் கானம்திரிந்தகளிறே
எற்றுக்கென்னம்மமுண்ணுதே யெம்பெருமானிருந்தாயே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெற்றம்	பசுக்களுக்கு	தோன்றிய	எங்கும் ப்ரஸித்தமாய்
தலைவன்	ப்ரதாநனானவனே!	தொல்	ஸ்வாபாவிகமாய்
என்கோமான்	எனக்குஸ்வாமியானவனே!	புகழாளா	ஏத்தும்படியானஅபதாநமுடையவனே!
பேர் அருளாளன்	மஹாதயாளுவான நந்தகோபருடைய	கானந்தோறும்	காடுதோறும்
மதலாய்	திருமகனே!	கன்றுஇனம்	பசுக்களின் திரளை
சுற்றக்குழாம்	பந்துவர்க்கத்துக்கெல்லாம்	மறித்து	மேய்த்து
இளங்கோவே	யுவராஜாவானவனே!,	திரிந்த	உலாவின
		களிறே	மத்தகஜம் போன்றவனே!

பர்யமருளுகிறார் (உபயேத்யாதி). நின்றால் குற்றமென்னென்ன; அங்கு நின்றால் "க்ருஷ்ணன் மாட்டுத் திறமித்தனையோ?" என்று ஸம்ருத்தியைக் கண்டால் த்ருஷ்டி தோஷமாமென்று கருத்தருளுகிறார் (இவனித்யாதி). நீயும் நின்றால் கேட்க வேண்டாவிறே என்று கருத்து. "ஆநிரைவரும்போது" என்றத்தாலே, அந்தி என்னுமதுபலிக்கவும், "அந்தி" என்றருளிச்செய்ததுக்குக்கருத்தருளுகிறார்(அஸுரர்களுக்கித்யாதி)."அங்கு" என்று-நாற்சந்தி. அங்குநின்றால் குற்றமானமையையருளுகிறார் (இவையித்யாதி)·(இவனின) இவனுடையவை. ... ... (அ)

(க) திருப்பல்லா-உ.

எம்பெருமான்	எனக்குப்பெருமையை விளக்கத்தக்கவ[னே!	அம்மம்	ஸ்தந்யத்தை
		உண்ணுதே	உண்ணமல்
எற்றுக்கு	எதுக்காக	இருந்தாய்	இராநின்றாய். (௯)
என்	என்னுடைய		

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (பெற்றத்தலைவனெங்கோமான்) பசுக்களுக்கு ப்ரதாநனானவனே!. மேல்விழுந்து முலையுண்ண எத்துகிறாள். எனக்குஸ்வாமியானவனே!. இத்தால் ஐஶ்வர்யம்சொல்லுகிறது. (பேரருளித்யாதி) அருளால் குறைவற்றவன் மகனன்றோ நீ. அவன்படி உனக்குமுண்டாகவேண்டாவோ?. (சுற்ற) பந்துவர்க்கத்துக்கெல்லாம் யுவராஜாவானவனே! (தோன்றிய) எங்குமொக்கப்ரஸித்தமான ஸ்வாபாவிகமான புகழினுடையவார்த்தைப்பாட்டையுமுடையவனே!. (கற்றினம்) கன்றினுடையதிரள். ஒன்றிரண்டுபோராது. கன்றுகளைத்திரளாக மறித்துக்காட்டிலே அங்கே இங்கேதட்டித்திரியும்போது ஒருமத்தகஜம் உலாவுமாபோலேயாயிற்றிருப்பது. (எற்றுக்கு) உனக்கு விடாய்இல்லாமையோ?, உனக்கு முலைதாராதொழிந்தபோது நான் தரிப்பனோயோ?. .... (௯)

மூ;—இம்மையிடர்கெடவேண்டி யேந்தெழில்தோள்கலிகன்றி
செம்மைப்பனுவல்நூல்கொண்டு செங்கணெடியவன்றன்னை
அம்மமுண்ணென்றுரைக்கின்ற பாடலிவையைந்துமைந்தும்
மெய்ம்மைமனத்துவைத்தேத்த விண்ணவராகலுமாமே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஏந்து	பெருமையான (மிகுந்த)	கெடவேண்டி	நசிக்கவேண்டி,
எழில்	அழகையுடைய	செம்மை	ஸர்வலக்ஷணஸம்பந்நமாய்
தோள்	தோளையுடையரான		
கலிகன்றி	ஆழ்வார்,	நூல்	(இவ்வருகுள்ளார்க்கு) ஶாஸ்த்ரம்போன்ற
இம்மை	இந்தஸம்ஸாரத்திலுள்[ள		
இடர்	துன்பமானது		

அநு;—ஒன்பதாம்பாட்டு. (பெற்றமித்யாதி) கீழே அச்சமுறுத்திப்பார்த்தாள்; அது கார்யகரமாகாமையாலே மிகவும் கொண்டாடி அழைக்கிறாளென்று ஸங்கதி.

"எற்றுக்கு" என்றதுக்கு-நாநாகோடிகள் சொல்லவென்றாகையாலே அருளுகிறார் (உனக்கித்யாதி). ... ... (௯)

பனுவல்கொண்டு	அருளிச்செயல்களைக் கொண்டு,	மெய்ம்மை	யதார்த்தமான (அந்த பா(ஃ)வத்தோடே
செம்கண்	புண்டரீகாக்ஷனை	மனத்து	மநஸ்ஸில் [கூடின)
நெடியவன் தன்னை	ஸர்வேஶ்வரனை	வைத்து	தரித்து
அம்மம்உண் என்று	"அம்மமுண்ணவா" என்று	ஏத்த	அநுஸந்திக்க (அவர்கள்)
உரைக்கின்ற	அழைத்தமையைச் சொல்லாநின்ற	விண்ணவர்	நித்யஸூரிகளாக
பாடல்இவை	இப்பத்துப்பாட்டுக்க	ஆகலுமாம்	ஆவர்கள்; (அவர்களோடொக்கப் பெறுவர்கள்). (௧௦)
ஐந்தும் ஐந்தும்	ளையும்		

வ்யா;—பத்தாம்பாட்டு. (இம்மையித்யாதி) இவள் முலை கொடுத்தல்லது தரியாதாப்போலே, கவிபாடியல்லது தரியாதாராய்ப்பாடின கவியாயிற்று. மிக்கஎழிலையுடைத்தான தோளையுடைய ஆழ்வார். (செம்மைப்பனுவல்நூல்கொண்டு) சாஸ்த்ரங்களில் பரக்கச்சொல்லுகிற லக்ஷணங்களிலே ஒன்றும் குறையாமல் செய்ததுவுமாய், இதுதான் இவ்வருகுள்ளார்க்கு ஶாஸ்த்ரமாக எழுதிக்கொள்ளலாயிருக்கிற இவற்றைக்கொண்டு. "பனுவல்" என்றும் - "நூல்" என்றும் - சாஸ்த்ரமாகையாலே சொல்லிற்று. புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரனை "அம்மமுண்"என்று சொன்ன இப்பத்தையும் அந்த பா(ஃ)வவ்ருத்தியோடே சொல்லுவார்க்கு வந்தேறியான முக்தரா

அ௫;—பத்தாம்பாட்டு. (இம்மையித்யாதி). "இடர்கெடவேண்டி-அம்மமுண்ணென்று உரைக்கின்ற" என்றந்வயம் திருவுள்ளம்பற்றி ஸமபிவ்யாஹார தாத்பர்யமருளுகிறார் (இவளித்யாதி).யசோதைக்கு முலைக்கடுப்பும், இவருக்கு நாக்கு வரட்சியும் இடரென்று கருத்து. சாஸ்த்ரமாகையாலே அர்த்த பேக்ஷஜமென்று சேஷம். இரண்டாம்பாட்டும், மூன்றும்பாட்டும், அஞ்சாம் பாட்டும், ஆறும்பாட்டும், ஒன்பதாம்பாட்டுமாக - ஐந்துபாட்டும்-முலைக்கடுப்பாலே அவஸாதம் தோற்றச்சொன்னவையுமாய்,மற்றவைந்தும்-அங்ஙனேயன்றிக்கே சொன்னவையென்று இரண்டு வகையாக வருளிச் செய்தாரென்னுமதுதோற்ற, (இப்பத்தையும்) என்றுகூட்டி அருளிச்செய்தாரென்று கொள்வது. "ஐந்து மைந்தும்" என்றது - இப்பத்தையும் என்றபடி. (அந்த பாவ

வர்களன்றிக்கே, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரிகளான நித்ய ஸூரிகளோடொக்கத் தரம் பெறலாம். .... (க௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து நாலாந்திருமொழி முற்றிற்று.

பத்தாம்பத்து அஞ்சாந்திருமொழி
பூங்கோதை ப்ரவேசம்.

வ்யா;—முலையில் வாசியறிந்துண்ணும் பிள்ளைப்பருவத்தை அநுபவித்து இனியராணூர்கீழ்; அதுக்கநந்தரம் லீலையிலே இழிந்து சப்பாணிகொட்டும் பருவத்தை அநுபவித்து இனியராகிறார்.

மூ;—பூங்கோதையாய்ச்சி கடைவெண்ணெய்புக்குண்ண
ஆங்கவளார்த்துப்புடைக்கப் புடையுண்டு
ஏங்கியிருந்து சிணுங்கி விளையாடும் [பாணி)
ஓங்கோதவண்ணனேசப்பாணி யொளிமணிவண்ணனேசப்

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ	மாலையாலே அலங்கரிக்கப்பட்ட	ஆங்கு	அவ்விடத்திலேயே
கோதை	மயிர்முடியையுடைய	ஆர்த்து	(தாம்பால்) கட்டி
ஆய்ச்சி	யசோதைப்பிராட்டி	புடைக்க	அடிக்க
கடை	கடைகிற [யானவள்	புடைஉண்டு	அவ்வடியையுண்டு,
வெண்ணெய்	வெண்ணெயை	ஏங்கிஇருந்து	(சற்றுப்போது) அழுது கொண்டிருந்து (அநந்தரம்)
புக்கு	(அங்கேறப்) புகுந்து		
உண்ண	அமுதுசெய்தவளவில்	சிணுங்கி	சீராட்டப்பெற்று
அவள்	அந்தயசோதைப்பிராட்டி	விளையாடும்	விளையாடாநிற்கிற,

வ்ருத்தி)என்றது-அர்த்தயாதார்த்ய நிபந்தநமான இருவகைப்பட்ட பாவவ்ருத்தி என்கை. ... ... (க௦)

ஜீயர்திருவடிகளே சரணம்.

அநு;—பூங்கோதைப்ரவேசம். "அம்மமுண்ணாய்" என்றத்தையும், "சப்பாணிகொட்டாய்" என்றத்தையும் கடாக்ஷித்தருளுகிறார் (முலையிலித்யாதி).

ஓங்குஓதம்	கிளர்ந்த கடல்போன்ற [னே!	ஒளி	புகரையுடைத்தான
		மணி	மணிபோன்ற
வண்ணனே	வடிவையுடையவ	வண்ணனே	திருநிறத்தையுடைய
சப்பாணி	சப்பாணிகொட்டவேணும்;		வனே! சப்பாணி.

வ்யா;—முதற்பாட்டு, (பூங்கோதையித்யாதி) செவ்விமாலையாலே அலங்க்ருதமான மயிர்முடியையுடைய யசோதைப்பிராட்டி கடைகிற வெண்ணெயை. ஒப்பித்து நின்றாயிற்றுத் தயிர்கடைவது. (க) "வாசநறுங்குழலாய்ச்சியர்". (கடைவெண்ணெய்புக்குண்ண) கடைந்து திரட்டிச்சேமித்துவைத்தால் களவு காண்கை பன்றிக்கே, கடைகிறபோதே நிழலிலே ஒதுங்கிக் களவுகண்டாயிற்று அமுதுசெய்வது. (ஆங்கவளித்யாதி) அவளுக்குத் தயிர் கடைகையிலன்றே அந்யபரதை; இவனை நோக்குகையிலேயிறே. ஆகையாலே அவள்கண்டு பிடித்துக் கட்டியடிக்க அடியுண்டு.

(ஏங்கியித்யாதி) ப்ரதமபரிபவமாகையாலே முந்துற ஏங்கி, அநந்தரம் அது ஆறிச் சீராட்டிப்பின்னை லீலையோடே தலைக்கட்டும். தேங்கின கடல்போலேயாயிற்று அப்போதிருக்குமிருப்பு. (உ) "விரலொடித்யாதி" (ஒளி) அவ்வளவேயன்றிக்கே புகரையுடைத்தான மணிபோலே யிருக்கிறவனே! (சப்பாணி) வடிவைக்காட்டி வாழ்வித்ததுவேயன்றிக்கே, சப்பாணிகொட்டி வாழ்விக்கவேணும். (க)

மூ;—தாயர்மனங்கள்தடிப்பத் தயிர் நெய்யுண்
டேயெம்பிராக்க ளிருநிலத்தெங்கள்தம்
ஆயரழக வடிகளரவிந்த [சப்பாணி.
வாயவனேகொட்டாய்சப்பாணி மால்வண்ணனேகொட்டாய்

அரு;—முதற்பாட்டு. (பூங்கோதையித்யாதி). யசோதைப்பிராட்டி தசை இவருக்கு இருந்தபோதிலும், அதீதாபதாநங்களிலும் மேல்செய்யும் சேஷ்டிதங்களே இவருக்கு அநுபாவ்யங்களாயிருக்கையாலே (யசோதைப்பிராட்டி கடைகிற)என்றருளிச்செய்தது."வெண்ணெய்" என்ன அமைந்திருக்க, "கடை" என்றதுக்குத் தாத்பர்யம் (கடைந்தித்யாதி).

"சிணுங்கி" என்றதினர்த்தம் (சீராட்டி) என்றது. விளையாடும்போது ஓங்கோத வண்ணனாகில்,ஏங்கியிருந்தபோது எப்படியிருப்பனென்ன வருளுகிறார் (தேங்கினவித்யாதி). ... ... (க)

(க) திருப்பாவை-எ. (உ) க-திருவ-உச.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாயர்	தாய்மார்களுடைய	எங்கள்தம் ஆயர்	எங்கள் இடைஜாதியிலுள்ளாரில்
மனங்கள்	நெஞ்சுகளானவை	அழக	மிக்கஅழகையுடையவனே!
தடிப்ப	(ஹர்ஷத்தால்) துடிக்கும்படி	அரவிந்தம்	செந்தாமரைமலர் போன்ற
தயிர்	தயிரையும்	அடிகள்	திருவடிகளையும்
நெய்	நெய்யையும்	வாயவனே	திருவதரத்தையுமுடையவனே!
உண்டு	அமுதுசெய்து,	சப்பாணிகொட்டாய்;—	
எய்	இது தனக்குப்பொருந்தின செயலென்றிருந்துள்ள	மால்வண்ணனே	கறுத்தநிறத்தையுடையனே!
எம்பிராக்கள்	எம்பெருமானே!,	சப்பாணிகொட்டாய்.	
இரு	பரப்பையுடைய		
நிலத்து	பூமியில்வர்த்திக்கிற		

வ்யா;—இரண்டாம்பாட்டு. (தாயர்மனங்கள்தடிப்ப) பெற்று வளர்த்த தன்னோடொத்த ப்ராப்தியையுடையவர்கள். (மனங்கள் தடிப்ப) அமூர்த்தமானநெஞ்சு-கண்ணுக்குத் தோற்றும்படி துடியாநின்றது. சரீரத்வாராதோற்றுமிறே. தயிரையும்நெய்யையுமுண்டு. (எயெம்பிராக்கள்) தயிரையும் நெய்யையும் களவுகண்டு புஜிக்கை போராததொரு செயலிறே. இப்படிபோராத செயலைச் செய்தோமென்று லஜ்ஜிக்கவுமறியாதே தனக்குப்பொருந்தின செயலைச்செய்தானாய், அத்தாலே என்னை எழுதிக்கொண்டிருக்கிறவனே!. தனக்குத் தகுதியான செயலைச்செய்தானாய் செய்ததுக்கு லஜ்ஜிக்கவும் கூடவறியாத மௌக்த்யத்திலேயாயிற்று இவனும் தோற்றது.

(இருநிலத்தெங்கள்தமாயரழக) பரப்பையுடைத்தான பூமியில் எங்களிடை ஜாதியிலுள்ளாரில் மிக்க அழகையுடையவனே! (அடிகளரவிந்தவாயவனே) திருவடிகளும் திருவதரமும் செவ்வித்

அரு;—இரண்டாம்பாட்டு. (தாயரித்யாதி) கீழ்ப்பாட்டில் தான் மகிழச் சப்பாணி கொட்டச் சொன்னாளாய், இதில்மற்றும் தாய்முறையாரெல்லாரும் சப்பாணி கொட்டச் சொன்னார்களாயிருக்கிறதென்று ஸங்கதி.

(சரீரத்வாரா)என்றவநந்தரம்"ஹர்ஷம்"என்றுசேஷம்."எய்"என்றதுக்கு ஒத்திருக்கையாய், ஆயருக்குக் கருத்தருளுகிறார் (தயிரையுமித்யாதி). விவரணம் (தனக்கித்யாதி). ... ... (௨)

தாமரைபோலே யிருக்கிறவனே!, அன்றிக்கே, "அடிகளரவிந்தமா யவனே" என்றுபாடமாகில், திருவடிகள் தாமரையாயிருக்கிறவ னென்றுகிறது. "எம்பிராக்கள்" என்பானென்?;"அழக""வாயவன்" என்று ஏகவசநமாயிருக்க வென்னில்; (க) "பத்துடையடியவர்க் கெளியவன்" "அரும்பெறலடிகள்" என்றுப்போலே. (மால்வண்ண னே) அதுக்குப்பரபாக (ரூ^) மான நிறத்தையுடையவனே! சப் பாணி கொட்டவேணும். .... (உ)

மூ;—தாமோருருட்டித் தயிர்நெய்விழுங்கிட்டுத்
தாமோதவழ்வரென் றுய்ச்சியர் தாம்பிறைல்
தாம்மோதரக்கையாலார்க்கத் தழும்பிருந்த
தாமோதரா கொட்டாய்சப்பாணி தாமரைக்கண்ணனேசப்பாணி. (ங)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தாம்	தாம்	ஆய்ச்சியர்தாம்	இடைச்சிகளானவர்கள்
மோர்	மோரை	தாம்பிறைல்	தாம்பாலே
உருட்டி	உருட்டிவிட்டு,	மோதர	அடிக்கவும்
தயிர்	தயிரையும்	கையால்	கைகளாலே
நெய்	நெய்யையும்	ஆர்க்க	கட்டவும்
விழுங்கிட்டு	விழுங்கிவிட்டு,	தழும்பிருந்த	தழும்பேறிக்கிடவாநின்ற
தாமோ	"இப்படி பெருத்தகார்யத்தைச் செய்த அவர் தாமேயோ	தாமோதரா	(அதுக்குநிரூபகமான) "தாமோதரன்"என்னும் திருநாமத்தையுடையவனே!
தவழ்வர்	அறியாதவர்போல்) தவழாநின்றார்"		சப்பாணிகொட்டாய்;
என்று	என்று சொல்லிக் கொண்டு		தாமரைக்கண்ணனே! சப்பாணி.

வ்யா;—மூன்றும்பாட்டு.(தாமோருருட்டியித்யாதி)தயிரையும் நெய்யையும்மோரையும் சேரவைப்பர்கள்-பாகவதர்களோடேஅபாக (ரூ^)வதர்கள்கலந்திருக்குமாபோலே; இங்ஙனேதாவா மோரைஉரு ட்டி ப்ரயோஜநபரமான தயிரையும் நெய்யையும் அமுது செய்யுமா

அரு;—மூன்றும்பாட்டு. (தாமோரித்யாதி) கீழ்ப்பாட்டில் தயிர் நெய் உண்டது பொருந்தின செயலாய், அத்தைப்பொருந்தப்பண்ணிக் கொண்டு சப்பாணி கொட்டச் சொல்லுகிறுளென்று ஸங்கதி.

(தாவா) தாவி. (ப்ரயோஜந பரமான) என்றது-ப்ரயோஜநங்களில் பரமெ

(க) தி-வாய்-க-ங-க.

யிற்று. (தாமோதவழ்வர்) அப்பெரியசெயலைச்செய்யாப் பின்னைத் தவழாநிற்பர். முன்பெல்லாம் கிடந்து உறங்கி, அவர்கள் பேரநின்ற வநந்தரம் இவற்றை அமுதுசெய்து, அநந்தரம் "இவனை இங்ஙனே சொல்லும்படி யெங்ஙனே" என்னும்படி தவழாநிற்கும்.

"நீ எல்லாம் செய்து மறைக்கப்பார்த்தாலும் உன்னையொழிய இச்செயல் செய்வாருண்டோ?" என்று இடைச்சிகள்தாங்கள் தாம்பாலே,(மோதர)கையாலேசட்ட என்னுதல்; அன்றியே-அலங்க்ருதமான கைகளாலே கட்ட."தாம்மோதரக்கையால்"என்று பிரித்து, மோதரத்தை "மோதிரம்"என்று வ்யவஹரிக்கிறவித்தனை. "படாகை, கணாறு" என்கிற இவற்றை "பிடாகை, கிணாறு" என்கிறாப் போலே. (தழும்பித்யாதி) உடம்பிலே தழும்புகிடக்கையாலே "தாமோதரன்" என்னும் திருநாமத்தை யுடையவனே!. எனக்குக்கட்டலாம்படி பவ்யனான நீ இத்தையும் செய்யப்பாராய். .... (௩)

மூ;—பெற்றார்தளைகழலப் பேர்ந்தங்கயலிடத்து
உற்றாரொருவருமின்றி யுலகினில்
மற்றாருமஞ்சப்போய் வஞ்சப்பெண் நஞ்சுண்ட
கற்றாயனேகொட்டாய் சப்பாணிகார்வண்ணனே கொட்டாய்சப்பாணி.

பதம்.	உரை.	பதம்.	உரை.
பெற்றார்	மாதாபிதாக்களுடைய	ஒருவரும் இன்றி	ஒருவருமின்றிக்கே,
தளை	காலில் விலங்கானது	உலகினில்	லோகத்திலும்
கழல	கழன்று விழும்படி	மற்றாரும்	(உறவு முறையின்றிக்கே யிருக்கிற) மற்றுள்ளாரும்
பேர்ந்து	வந்து அவதரித்து,	அஞ்ச	அஞ்சும்படியாக
அங்கு	அவ்விடத்தில்		
அயலிடத்து	கிட்டின [பார்		
உற்றார்	உறவுமுறையா யிருப்		

ன்றாய், பரம ப்ரயோஜநமான வென்றபடி."தாமோ" என்றது-வ்யங்க்யபரமாய், அத்தையருளுகிறார் (அப்பெரியவித்யாதி). பெரிய செயலானபடி எங்ஙனே யென்னவருளுகிறார் (முன்பெல்லாமித்யாதி).

"ஆய்ச்சியர்-தாம்-தாம்பினால் மோதரக் கையாலே ஆர்க்க" என்றந்வயித்து, ஆய்ச்சியருக்குத்தாமான தன்மை நிரூபண சாதுரியென்று, அத்தை அருளுகிறார் (நீ எல்லாமித்யாதி). "போதர" என்னுமாபோலே, "மோதர" என்று கிடக்கிறதென்றர்த்த மருளுகிறார் (மோதர) என்று. (க) "இங்கே போதக்கண்டீரே" என்னுமாபோலே, 'மோத" என்றாகிறது. ... (௩)

(க) நா-தி-க௪-௩.

போய்	திருவாய்ப்பாடியேறப் போய்	கன்று	கன்றுகளை மேய்க்கைக்கு
வஞ்சம்	வஞ்சனை செய்யவந்த	ஆயனே	இடைக்குலத்தில் வந்தவதரித்தவனே !
பெண்	பூதனையின்		சப்பாணி கொட்டாய் ;
நஞ்சு	(முலையில் தடவின) விஷத்தை	கார்	காளமேகம்போன்ற
உண்ட	அமுது செய்தருளின	வண்ணனே	வடிவையுடையவனே ! சப்பாணிகொட்டாய். (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) மாதா பிதாக்கள் காலில் விலங்கு கழலும்படி வந்தவதரித்து, பேருகையாவது -முன்பிருந்த விருப்பு நினைவும்போருகை. (க) " నాగపర్యఙ్కముత్సృజ్య హ్యాగతో మధురాం పురీమ్ - நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" இத்யாதி. (அங்கித்யாதி) அங்கு அருகும் உறவுமுறையாயிருப்பாரொருவருமின்றிக்கே, லோகத்திலும் உறவுமுறை யின்றிக்கேயிருக்கிற மற்றுள்ளாருமெல்லாம் அஞ்சும்படியாகப்போய். (கற்றாயனே) ஜாத்யுசிதமான வ்ருத்தியையுடையவனே! கன்றுகள்மேய்க்குமவனே !. (௪)

மூ;—சோத்தென நின்னைத்தொழுவன் வரந்தரப்
பேய்ச்சி முலையுண்ட பிள்ளாய் பெரியன
ஆய்ச்சிய ரப்பந்தருவ ரவர்க்காகச்
சாற்றியோராயிரம் சப்பாணி தடம்கைகளால் கொட்டாய் சப்பாணி.

அரு;—நாலாம்பாட்டு. (பெற்றாரித்யாதி) கீழ்ப்பாட்டில் நெய்உண்டது பொருந்தாத செயல் என்றத்தை உபபாதித்தருளி, அவ்வளவேயோ? நஞ்சுண்டதும் †பொருந்தாத செயல் என்னக்கோலி அடியே பிடித்துச் செய்த செயல்களை யருளுகிறார் என்று ஸங்கதி.

(அங்கு) நந்தர்திருமாளிகை. (அருகும்)-அசலகம். (போய்)என்றது-திருவாய்ப்பாடியில் போயென்றபடி; அதாவது-வந்தென்றபடி. ... ... (௪)

அரு;—அஞ்சாம்பாட்டு. (சோத்தெனவித்யாதி) நஞ்சுண்கையாகிற பொருந்தாத செயலை எனக்கு உபகரித்தபடியைச் சொல்லிக்கொண்டு சப்பாணி கொட்டுகைக்காக அப்படிகளை நினைப்பிட்டு ப்ரார்த்திக்கிறா ளென்று ஸங்கதி.

---

† (பா) பொருந்தின.   (க) ஹரிவம்ஶ.

பதம்.	உரை.
பேய்ச்சி	பூதனையின்
முலை	(விஷஸம்மிஶ்ரமான) ஸ்தந்யத்தை
உண்ட	அமுதுசெய்த
பிள்ளாய்	கண்ணபிரானே!
வரம்	என்னால் ப்ரார்த்திக்கப் பட்டதை
தர	நீ தருகைக்காக
நின்னை	உன்னை
சோத்தெனை	‘சோத்தம்’என்று சொல்லிக்கொண்டு
தொழுவன்	தொழாநின்றேன்;
ஆய்ச்சியர்	இடைச்சிகளானவர்
பெரியன	மிகப்பெரிதான [கள்
அப்பம்	அப்பங்களை
தருவர்	(உனக்குக்) கொடுப்பர்கள்;
அவர்க்காகச்சாத்தி	அவர்களுக் கென்று வ்யாஜமிட்டு ஓர் ஆயிரம் சப்பாணி;
தட	போக்யதை மிக்கிருந்துள்ள
கைகளால்	திருக்கைகளால் சப்பாணிகொட்டாய். (ரு)

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (சோத்தெனவித்யாதி) “சோத்தம்” என்று வாயாலே சொல்லாநின்றுகொண்டு உன்னைத் தொழுவன். எதுக்காகவென்னில்; (வரம்தர) என்னுடைய ப்ரார்த்திதங்களை நீ தருகைக்காக. (பேய்ச்சி முலையுண்டபிள்ளாய்) பருவம் நிரம்பாத வளவிலே உபகரித்தவனே! உனக்குப்பருத்த அப்பங்களை இடைச்சிகள் தருவர்கள். (அவர்க்காகச் சாத்தி) அவர்கள் பேரிட்டு எங்களை வாழ்விக்கவேணும். (தடம் கைகளால்) கண்டுகொண்டிருக்க வேண்டும் கைகளால் சப்பாணி கொட்டவேணும். .... (ரு)

மூ;—கேவலமன்றுன்வயிறு வயிற்றுக்கு
நானவலப்பம் தருவன் கருவிளைப்
பூவலர் நீண்முடி நந்தன்றன் போரேறே
கோவலனே கொட்டாய் சப்பாணி குடமாடீ கொட்டாய் சப்பாணி.

“என” என்றது-எனாஎன்றாய், அதினர்த்தம் (சொல்லாநின்றுகொண்டு) என்றது. (ப்ரார்த்திதங்கள்) ஆசைப்படப் பட்டவை. (பேரிட்டு) வ்யாஜமாக்கி. சிறுகைகளை தடமென்னக் கூடுமோவென்ன, போக்யதாதிக்யம் விவக்ஷித மென்றருளுகிறார் (கண்டுகொண்டித்யாதி). ... ... (ரு)

அரு;—ஆறும்பாட்டு. (கேவலமித்யாதி) “ஆய்ச்சியரப்பம் தருவர்” என்னவே, இவன்கையில் தந்தவற்றை அமுது செய்து வெறுமனேயிருக்க, தான்

பதம்.	உரை.	பதம்.	உரை.
கருவிளைப் பூவலர்	காகணம் பூப்போன்ற நிறத்தை யுடையையாய்	உன்	உன்னுடைய
நீள்	ஆதிராஜ்யஸூசகமான	வயிறு	வயிறானது
முடி	திருவபிஷேகத்தையு முடையையாய்	கேவலம் அன்று	ஸாதாரணமானதன்று;
நந்தன்தன்	ஸ்ரீநந்த கோபர் வளர்க்க வளர்ந்த	நான்	நான்
போர்	செருக்கின	வயிற்றுக்கு	(உன்) வயிற்றுக்குப்
ஏறே	வ்ருஷபம் போன்ற	அவல்	அவலையும் [போரும்படி
கோவலனே	பசுமேய்க்கப் பிறந்த கண்ணனே!,	அப்பம்	அப்பத்தையும்
		தருவன்	கொடுப்பேன்;
		சப்பாணி கொட்டாய்	
		குடமாடீ	குடக்கூத்தாடினவனே!
		சப்பாணி கொட்டாய்;	(௬)

வ்யா;—ஆறும்பாட்டு. (கேவலமன்றுன் வயிறு) "ஓரப்பம் தந்தோம்" என்றுகைவாங்கியிருக்கவொண்ணாது. (உன்னித்யாதி) உன் வயிற்றுக்குப் போரும்படி நான் அவல் அப்பம்தருவன். (கருவிளையித்யாதி) கருவிளைப்பூவைக் காட்டாநின்றுள்ள நிறத்தையும், ஆதி(த்)ராஜ்யஸூசகமான முடியையுமுடையையாய்க்கொண்டு ஸ்ரீநந்த கோபர் கொண்டாடிவளர்க்க வளர்ந்த செருக்கையுடையவனே! (கோவலனேயித்யாதி) ஜாத்யுசிதமாம்படி குடமாடி வாழ்வித்த நீ சப்பாணிகொட்டி வாழ்விக்கவேணும். .... (௬)

மூ;—புள்ளினைவாய்பிளந்து பூங்குருந்தம்சாய்த்துத்
துள்ளிவிளையாடித் தூங்குறிவெண்ணெயை
அள்ளியகையா லடியேன்முலைநெருடும் [சப்பாணி.
பிள்ளைப்பிரான்கொட்டாய் சப்பாணிபேய்முலையுண்டானே

அவலையும் அப்பத்தையும் தன்கையிலே வைத்துக்கொண்டு காட்டி சப்பாணி கொட்டச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"நான்வலவப்பம்" என்று வ்யாக்யாநங்களிலே பாடபேதமுண்டு. (கருவிளைப்பூவை) காக்கணம்பூவை. ... ... (௬)

அந;—ஏழாம்பாட்டு. (புள்ளித்யாதி) "நான்வேண்டின அப்பம்தருவன்" என்னச்செய்தேயும், சிறுபிள்ளையாய், சப்பாணி கொட்ட அறியாதவனைப்

பதம்.	உரை.
புள்ளினை	பகா (ஐ ஸ) ஸுரனுடைய
வாய்	வாயை
பிளந்து	கிழித்துப்பொகட்டு,
பூ	பூத்துக்கிடந்த
குருந்தம்	குருந்தமரத்தை
சாய்த்து	வேரோடே பறித்து,
துள்ளி	ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணி
விளையாடி	லீலாரஸமநுபவித்து,
தூங்கு	தொங்கா நின்றுள்ள
உறி	உறியிலே சேமித்து வைத்திருந்த

பதம்.	உரை.
வெண்ணெயை	வெண்ணெயை
அள்ளிய	அள்ளி அமுது செய்த
கையால்	திருக்கைகளாலே
அடியேன்	என்னுடைய
முலை	முலையை
நெருடும்	(பால்சுரக்கைக்காக) நெருடுகிற
பிள்ளைப்பிரான்	பிள்ளைத்தனத்திலேயே உபகரித்தருளின கண்ணனே!

சப்பாணி கொட்டாய்;
பேய்முலை உண்டானே! சப்பாணி.

வ்யா.—ஏழாம்பாட்டு. (புள்ளினையித்யாதி) வாயைஅங்காந்துகொண்டுவந்த பகாஸுரன்வாயைக்கிழித்து, அடியேதுடங்கித்தலையளவும் தர்ஶநீயமாகப்பூத்துநின்ற குருந்தை வேரோடே பறித்து, ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி லீலாரஸமநுபவித்து. (தூங்குறியித்யாதி) தூங்காநின்றுள்ள உறியிலே சேமித்துவைத்த வெண்ணெயை அள்ளிஅமுதுசெய்தகையில் முடைநாற்றத்தோடேகூடி, உன்னுடைய செயலிலே மோஹிக்கிற என்னுடைய முலைக்கண்களைப் பால் சுரக்கைக்காக நெருடுகிற, (பிள்ளைப்பிரான் கொட்டாய் சப்பாணி) பிள்ளைத்தனத்திலே கண்ணழிவற்றிருக்கச்செய்தே உன்னை நோக்கித்தந்து உபகரித்தவனே! (பேய்முலையுண்டானே சப்பாணி) அன்றுபூதனைதன்னை முடித்து உன்னைநோக்கித்தந்த நீ இன்று நான் சொல்லிற்றுச்செய்ய வேண்டாவோ?. .... (எ)

மூ;—யாயும்பிறரு மறியாதயாமத்து
மாயவலவைப் பெண்வந்து முலைதரப்
பேயென்றவளைப் பிடித்துயிருண்ட [சப்பாணி.
வாயவனேகொட்டாய் சப்பாணிமால்வண்ணனே கொட்டாய்-

போலே முலை வேண்டிப்போக, முலைகொடுத்து மீளவும் சப்பாணி கொட்டச் சொல்லி ப்ரார்த்திக்கிறுளென்று ஸங்கதி.

"சாய்த்து" என்ற பதவாஸனை (வேரோடேயித்யாதி). ... ... (எ)

பதம்.	உரை.
யாயும்	பெற்றதாயாரும்
பிறரும்	மற்றுமுள்ளவர்களும்
அறியாத	அறியாத
யாமத்து	நடுச்சாமத்திலே,
மாய	வஞ்சநபரையாயும்
அலவை	பரிவுதோன்றபஹுஜல்பங்களை யுடையளுமான
பெண்	பூதனையானவள்
வந்து	வந்து
முலைதர	முலைகொடுக்க,
அவளை	அவளை
பேயென்று	பேயென்று புத்திபண்ணி,
பிடித்து	(முலைவழியே)பிடித்து
உயிரைஉண்ட	(அவளுடைய)ப்ராணனை யமுது செய்தருளின
வாயவனே	திருப்பவளத்தையுடையவனே!

சப்பாணி கொட்டாய். (அ)
மால்வண்ணனே சப்பாணிகொட்டாய்

வ்யா;—எட்டாம்பாட்டு. (யாயுமித்யாதி) பெற்றதாயும் மற்றுமுள்ளவரொருவரும்; இவர்களொருவருமறியாத நடுச்சாமத்திலே. (மாயவலவை) வஞ்சநத்தையுடையளாயிருக்கச் செய்தேயும் யசோதைப்பிராட்டி பரிவுதோற்ற ஏத்திக்கொண்டு வருமாபோலே பூதனையானவள் ஜல்பித்துக்கொண்டு வந்து முலையைக்கொடுக்க; (பேயென்றித்யாதி) "பேய்" என்று-அவளைபுத்திபண்ணி முலைவழியே அவளைப்பிடித்து முலையுண்டு, அவளை முடித்ததிருப்பவளத்தை யுடையவனே! (மால்வண்ணனே கொட்டாய்) உகவாதாரை அழியச்செய்வுதி, உகப்பார்சொல்லிற்றும் செய்யவேண்டாவோ?. (அ)

மூ;—கள்ளக்குழவியாய்க் காலால்சகடத்தை
தள்ளியுதைத்திட்டுத் தாயாய்வருவாளை
மெள்ளத்தொடர்ந்து பிடித்தாருயிருண்ட [சப்பாணி.
வள்ளலேகொட்டாய்சப்பாணி மால்வண்ணனேகொட்டாய்

அரு;—எட்டாம்பாட்டு. (யாயுமித்யாதி) கீழ்ப்பாட்டிலே "பேய் முலையுண்டானே!" என்றது பின் நாட்டி அதின்படியை யடையச் சொல்லுகிறுரென்று ஸங்கதி.

அலவை-ஜல்பிக்கையாய், அத்தை ப்ரக்ருதோபயுக்தமாக விசேஷிக்கிறுர் (யசோதையித்யாதி). ... ... (அ)

அரு.—ஒன்பதாம்பாட்டு. (கள்ளவித்யாதி) வாயால் பேயை வென்றவளவேயோ? சிறு காலாலே சகடத்தையும் சாடிஞயென்றுஅவன் படியையும்சொல்லி சப்பாணி கொட்ட ப்ரார்த்திக்கிறுரென்று ஸங்கதி.

பதம்.	உரை.
கள்ளம்	க்ருத்ரிமச்செய்கைகள் அமைந்த
குழவியாய்	பிள்ளைப்பருவத்தை யுடையையாய்,
சகடத்தை	(அஸுராவிஷ்டமான) சகடத்தை
காலால்	திருவடியாலே
தள்ளிஉதைத்திட்டு	தள்ளியுதைத்து,
தாயாய்	தாயின்வடிவையுடையளாய்

பதம்.	உரை.
வருவாளை	வந்து தோற்றின பூதனையை
மெள்ளத்தொடர்ந்து	க்ரமத்திலே கிட்டிக்கொண்டு
பிடித்து	மேல்விழுந்து பிடித்து
ஆர்	அருமையான
உயிர்	(அவளுடைய) ப்ராணனை
உண்ட	அமுது செய்தருளின
வள்ளலே	பரமோதாரனே!

சப்பாணி கொட்டாய்;
மால்வண்ணனே சப்பாணிகொட்டாய்.

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (கள்ளக்குழவியாய்) பிள்ளைப்பருவத்திலே க்ருத்ரிமத்தை யுடையையாய். (காலால்சகடத்தை) "முலைவரவுதாழ்த்தது" என்று திருவடிகளை நீட்டின வ்யாஜத்தாலே கவியக்கோலி, மேலிட்ட சகடத்தைப் பொடியாம்படி தள்ளி உதைத்து. யசோதைப்பிராட்டி வடிவுடையளாய் வந்து தோற்றின பூதனையை அவள்வருமளவும் ஆறியிருந்து கிட்டக்கொண்டு, தப்பாதபடி மேல்விழுந்து பிடித்து முலையுண்டு அவளைமுடித்துத் தன்னைக்காத்தமஹோதாரனே!, உதாரராயிருப்பார்க்கு அபேக்ஷிதங்களெல்லாம் செய்யவேண்டாவோ?. .... (௯)

மூ;—காரார்புயல்கைக்கலிகன்றி மங்கையர்கோன்
பேராளன்நெஞ்சில் பிரியாதிடம்கொண்ட
சீராளா செந்தாமரைக்கண்ணா தண்டுழாய்த்
தாராளாகொட்டாய்சப்பாணி தடமார்வாகொட்டாய் சப்பாணி.

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

—ooo—

பதம்.	உரை.
கார்	மேகம்போலே
ஆர்	பூர்ணமாக
புயல்	கொடாநின்ற

பதம்.	உரை.
கை	திருக்கைகளையுடையராய்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு

"வள்ளலே" என்றதுக்கு ப்ரக்ருதோபயோகம் (உதாரராயித்யாதி). (௯)

கோன்	நிர்வாஹகராய் [க்கு
பேராளன்	மஹாயஶஸ்வியான
கலிகன்றி	ஆழ்வாருடைய
நெஞ்சில்	திருவுள்ளத்திலே
பிரியாது	க்ஷணகாலமும்விட்டுப் பிரியாமல்
இடங்கொண்ட	நித்யவாஸம் பண்ணி நின்றுள்ள
சீராளா	ஸம்பத்தை யுடையவனே! [ன்ற
செந்தாமரை	செந்தாமரைப்பூப்போ
கண்ணா	திருக்கண்களையுடைய [வனே
தண்	குளிர்ந்த
துழாய்	திருத்துழாயாலே தொடுக்கப்பட்ட
தாராளா	மாலையை அணிந்தவனே [னே
	சப்பாணி கொட்டாய்;
தடம்	விசாலமான
மார்பா	திருமார்பை யுடையவனே!
	சப்பாணி கொட்டாய். (௧௦)

வ்யா;—பத்தாம்பாட்டு. (காராரித்யாதி) கார்காலத்திலே கழுத்தேகட்டளையாக நீரைப்பருகின காளமேகம்போலே ஸர்வாதிகாரமாம்படி ப்ரபந்தத்தைப்பண்ணின மஹோதாரராய், திருமங்கையிலுள்ளாருக்கு நிர்வாஹகருமான. (பேராளன்) நம்மாழ்வார்-(௧) "சொல்லுமாறமைக்கவல்லேற்கு" என்று; அநந்தரம் "யாவர் நிகர்" என்றாப்போலே கவிபாடப்பெற்ற ப்ரீதிப்ரகர்ஷத்தாலே தாமே தம்மைப் புகழ்ந்தாப்போலே "பேராளன்" என்கிறார்.

(பேராளன்நெஞ்சில் பிரியாதிடங்கொண்ட சீராளா) இவருடைய திருவுள்ளத்தைவிட்டுப் பிரியாதே இங்கே நித்யவாஸம் பண்ணுகையாலுள்ள ஸம்பத்தையுடையனானவிது-பிராட்டியைத் தனக்குஉடையனானதுக்குமேலே ஒன்றாயிற்று. (செந்தாமரையித்யாதி) இவையுமெல்லாம் ஐஶ்வர்யஸூசகமாயிருக்கிறது. இதுக்கு பல

அநு;—பத்தாம்பாட்டு. (காராரித்யாதி) கார்போலே-மேகம்போலே, ஆர்-பூர்ணமாக, புயல்-கொடுக்கிற கையையுடையவரென்று சப்தார்த்தமாய், தாத்பர்யமருளுகிறார் (கார்காலத்திலித்யாதி).

சீர்-ஸம்பத்தும், பிராட்டியும் என்றிரண்டர்த்தமாய், இரண்டையு மருளுகிறார் (இவளுடைய வித்யாதி). "தம்மைத்தாமறியாமை" என்றது - இப்பாட்டிலும் யசோதாபாவனை நடக்கையாலே என்கை. ஆனால் (௨) "இரக்கமின்றி" என்கிற திருமொழியில் பத்தாம்பாட்டிலேயும் தோற்ற ராக்ஷஸபாவனை அநுவர்த்திக்கவும், "தங்குமூரண்டமே கண்டுகொண்மின்" என்ற

(௧) தி-வாய்-௪-௫-௮. (௨) ௯-௨.

ஶ்ருதிசொல்லாவிட்டது தம்மை அறியாமை இவ்வநுபவந்தானே பிறர்க்கும் பலமாயிருக்கிறது. .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து அஞ்சாம் திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து ஆறுந்திருமொழி
எங்காணும் ப்ரவேசம்.

வ்யா:—சப்பாணி கொட்டி விளையாடும் பருவத்தை அநுபவித்தார்கீழ்; அதுக்கநந்தரமாக வெண்ணெயும் தயிரையும் களவுகண்டமுது செய்தபடியைப் பரிவுடையயசோதைப்பிராட்டிபாசுரத்தாலே அநுபவிக்கவென்ற வார்த்தைமறந்து, தாம் அதிலேஈடுபட்டு, அவனுடைய ஸர்வேஶ்வரத்வத்தையும், பராபிபவநஸாமர்த்த்யத்தையும், வேண்டப்பாட்டையும், ஸர்வப்ரகாரத்தாலுண்டான உத்கர்ஷத்தையுமடைய அநுபவித்து, "அப்படிப்பட்ட மேன்மையை யுடையவன் இன்று இங்ஙனே ஓரபலைகையாலேகட்டுண்டு அடியுண்டு நோவுபடுவதே?" என்று இவன் ஸௌலப்யத்தை அநுஸந்தித்து இரிகிறார்.

பலம் சொல்லவில்லையோ? இங்கேயும் பலம் சொன்னுலோ வென்ன வருளுகிறார் (இவ்வநுபவமித்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அரு;—எங்கானும் ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலும் யசோதாபாவனை அநுவர்த்திக்கவும், இத்திருமொழியும் க்ருஷ்ணாவதாரபதாநாநு ஸந்தாநமாயிருக்க, தானான தன்மையாலே பேசுவானென்னென்ன (சப்பாணியித்யாதி). பிறர் வாயாலேபேசுவாரைப்போலே †ஆழ்வார் ஈடுபட்டாப்போலே பேசும்படி ஈடுபடுத்திற்று அவன் படி என்று கருத்து. *

---

† "அந்த யசோதை தானே" என்று அதிக பாடம்.

மூ;—எங்கானுமீதொப்ப தோர்மாயமுண்டே
நரநாரணனா யுலகத்தறநூல்
சிங்காமைவிரித்தவ னெம்பெருமான்
அதுவன்றியும் செஞ்சுடரும் நிலனும்
பொங்கார்கடலும் பொருப்புநெருப்பும்
நெருக்கிப்புகப் பொன்மிட றத்தனைபோது
அங்காந்தவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே! (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நரநாரணன்ஆய்	நரநாராயண ரூபியாய்க்கொண்டு	மிடறு	திருமிடற்றை
உலகத்து	லோகத்திலே	அத்தனைபோது	இவை உள்ளேபுகுமளவும்
அறம்	தர்மப்ரகாசகமான	அங்காந்தவன் காண்மின்	விவரித்துக்கொண்டிருந்தவன் கிடீர்!
நூல்	வேதஶாஸ்த்ரமானது	இன்று	இப்போது
சிங்காமை	ஸங்குசிதமாகாதபடி	அளை	கடைந்து திரட்டின
விரித்தவன்	(அத்தை) விஸ்தரிப்பித்தவனாய்,	வெண்ணெய்	வெண்ணெயை
எம்பெருமான்	எமக்கு ஸ்வாமியாய்;	உண்டு	(களவுகண்டு) அமுது செய்து
அதுஅன்றியும்	அவ்வளவு மன்றிக்கே	ஆய்ச்சியரால்	இடைச்சிகளாலே
செம்சுடரும்	சந்த்ரஸூர்யர்களும்	ஆப்புண்டிருந்தவன்	தாம்பால் கட்டுண்டிராநின்றான்;
நிலனும்	பூமியும்	ஈது ஒப்பது ஓர்	இத்தோடொத்திருப்பதொரு
பொங்கார்	திரைக்கிளப்பத்தையுடைய	மாயம்	ஆஶ்சர்யம்
கடலும்	ஸமுத்ரமும்	எங்கானும்	எங்கேனுமோரிடத்திலே தான்
பொருப்பும்	மலைகளும்	உண்டே	கண்டதுண்டோ? (௧)
நெருப்பும்	அக்நியும் (ஆகிய இவையடங்கலும்)		
நெருக்கி	நெருக்கிக்கொண்டு		
புக	புகும்படியாக		
பொன்	ஸ்ப்ருஹணீயமான		

வ்யா;—முதற்பாட்டு. (எங்கானும்) எங்கேனுமோரிடத்திலே தான் இத்தோடொத்திருப்பதோ ராஶ்சர்யமுண்டே? இப்படிப் பட்ட ஆஶ்சர்யந்தானேதென்னில்; (நரனித்யாதி) நரநாராயணரூபி

யாய்க்கொண்டு லோகத்திலே, அறநூலுண்டு - ஹிதாநுசாஸநம் பண்ணப்போந்தவேதம்; அது சிந்தாதபடியாக - அதுஸங்குசிதமாகாமே விஸ்த்ருதமாம்படி பண்ணினவனே,! உபதேசத்தாலும் அநுஷ்டாநத்தாலுமாக விஸ்த்ருதமாம்படி பண்ணினான். (எம்பெருமான்) தான் ஹிதகாமனாயிருக்கு மிருப்பைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவனே. (அதுவன்றியும்) அத்தையொழியவேயும்.

(செஞ்சுடரித்யாதி)சந்த்ரஸூர்யர்களும், பூமியும், திரைக்கிளப்பத்தையுடைத்தான பெரியகடலும், மலைகளும், அக்நியும், இவையடைய நெருக்கிக் கொடுபுகும்படியாக ஶ்லாக்யமான மிடற்றை இவைபுகுமளவும் விரித்துக்கொண்டிருந்தவன்கிடீர், இன்றுதயிரையும் வெண்ணெயும் களவுகண்டு அமுதுசெய்து ஓரிடைச்சிகையாலே கட்டுண்டு அடியுண்டு ஒருப்ரதிக்ரியை அற்றுப்போகமாட்டாதேயிருக்கிறான். (க) "காரேழ்" என்கிறபாட்டின்படியே. .... (க)

மூ;—குன்றொன்றுமத்தா வரவமளவிக்

குரைமாகடலைக் கடைந்திட்டொருகால்

நின்றுண்டைகொண்டோட்டிவன்கூன்நிமிர

நினைந்தபெருமா னதுவன்றியும்முன்

நன்றுண்டதொல்சீர் மகரக்கடலேழ்

மலையேழுலகே ழொழியாமைநம்பி

அன்றுண்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்

அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே.

அ;—முதற்பாட்டு. (எங்கானுமித்யாதி) (ஹிதாநுசாஸநம் பண்ணப்போந்த வேதம்) என்றது-வேதஸாரமான திருமந்த்ரமென்றபடி. நாராயணனாய் விரித்தால் போராதோ? நரனுமாவானென்னென்ன ; (உபதேசத்தாலுமித்யாதி). "இருந்தவனே" என்றவிடத்தில் ஏவகாரத்தை "எம்பெருமான்" என்ற விடத்திலே கூட்டவேணுமென்று திருவுள்ளமாயருளுகிறார் (எழுதிக்கொண்டவனே) என்று. ... ... (க)

அ;—இரண்டாம்பாட்டு. (குன்றித்யாதி) வேதஸமுத்ரமதநம் பண்ணித் திருமந்த்ரமாகிற அம்ருதத்தை பூ(பூ)ஸுரர்களுக்குக் கொடுத்தவன் கிடீர் வெண்ணெய்க்காகக் கட்டுண்டானென்று ஈடுபட்டாள் அதில்; க்ஷீரஸமுத்ரமதநம்பண்ணி ஸாக்ஷாதம்ருதத்தை ஸுரருக்குக் கொடுத்தவனே - வெண்ணெய்க்காகக் கட்டுண்டானென்று ஈடுபடுகிறாரென்றுஸங்கதி.

(க)தி-வாய்-கo-அ-உ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒன்று	அத்விதீயமான	நன்று	அழகிதாக
குன்று	மந்தரபர்வதத்தை	உண்ட	தன்னுள்ளே அடங்கிக் கிடக்கிற
மத்தா	மத்தாகக்கொண்டு	தொல்	நிரவதிகமான
அரவம்	வாஸுகியை	சீர்	ஸம்பத்தையுடைத்தாய்
அளவி	(கடைகயிறுகச்) சுற்றி,	மகர	முதலைகளையுடைத்தான
குரை	கோஷத்தை யுடைத்தான	கடல் ஏழ்	கடல்களேழும்
மாகடலை	பெருங்கடலை	மலை ஏழ்	மலைகளேழும்
கடைந்திட்டு	கடைந்தருளி,	உலகு ஏழ்	உலகங்களேழும்
ஒருகால்	மற்றொருகாலத்திலே	ஒழியாமை	(ஆகிய இவையொன்றும்) தப்பாதபடி
நின்று	முன்புநின்ற நிலையிலே நின்று	நம்பி	ஆதரித்து
உண்டைகொண்டோட்டி	(வில்லிலுள்ள) உண்டைகளை நடத்தி	உண்டவன் காண்மின்	தன் திருவயிற்றிலே வைத்துக்காத்தருளினவன்கிடீர்
வன்கூன்	வலியகூனது		
நிமிர	நிமிரும்படி		
நினைந்த	திருவுள்ளமாயருளின		
பெருமான்	ஸர்வேஶ்வரனாய்,		
அதுஅன்றியும்;—			
முன்	முன்னே		
அன்று	அந்தமஹாப்ரளயத்திலே,		

இன்று ஆய்ச்சியரால் அளை வெண்ணெயுண்டுஆப்புண்டிருந்தவன். (௨)

வ்யா;—இரண்டாம்பாட்டு. (குன்றொன்றுமத்தா) அத்விதீயமான மலையை மத்தாகக்கொண்டு, வாஸுகியினுடைய உடலை அங்கே கடைகயிறுகச்சுற்றி, கோ (கோ) ஷத்தையுடைத்தான பெருங்கடலைக்கடைந்தான். முன்பு நின்ற நிலையிலேநின்று வில்லினுண்டான உண்டைகளை நடத்தி வலியகூன் நிமிரும்படிசெய்த ஸர்வேஶ்வரன். அதுக்குமேலே. (நன்றித்யாதி) அங்கே இங்கே சிலபிறிகதிர்படாமே அழகிதாகத்தன்னுள்ளே அடங்குகையாகிற நிரவதிக ஸம்பத்தையுடைத்தாய், மகரங்களையுடைத்தான கடலேழும் மலையேழும் உலகேழும் இவையொன்றும் தப்பாதபடியாக ஆதரித்துத்தன்

"அளவி" என்றதினர்த்தம் (சுற்றி) என்றது. (முன்பு நின்ற நிலை) என்றது-ராமாவதாரத்திலே என்கை. (௧)"கூனேசிதைய" என்றவிடத்திலே ராமாவதார விஷயமாக ஒருயோஜனை யுண்டிறே, "நம்பி" என்றதினர்த்தம்

(௧) தி-வாய்-௧-௫-௫.

திருவயிற்றிலே வைத்தவன்கிடீர். (இன்றித்யாதி) அந்தப்ரளயகாலத்து அவை தன்வயிற்றிலே புகாதபோதுண்டான தளர்த்தியெல்லாம் இவ்வெண்ணெய் பெறாதபோது உடையனாய்க்கொண்டு அழுது செய்தான். .... (௨)

மூ;—உளைந்திட்டெழுந்த மதுகைடவர்கள்
உலப்பில்வலியா லவர்பால்வயிரம்
விளைந்திட்டதென்றெண்ணி விண்ணோர்பரவ
அவர்நாளொழித்த பெருமான்முனநாள்
வளைந்திட்டவில்லாளி வல்வாளெயிற்று
மலைபோலவுண னுடல்வள்ளுகிரால்
அளைந்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண்டாப்புண்டிருந்தவனே. (௩)

பதம்.	உரை.
உலப்புஇல்	நிரவதிகமான
வலியால்	பலத்தினால்
எழுந்த	பெரியகிளர்த்தியோடே தோன்றின
மதுகைடவர்கள் அவர்பால்	மதுகைடபர்களோடே
வயிரம்	ஶாத்ரவமானது
விளைந்திட்டது என்று	உண்டாய்விட்டதென்று
எண்ணி	புத்திபண்ணி
உளைந்திட்டு	அஞ்சி (நடுங்கி)
விண்ணோர்	தேவர்கள்
பரவ	(திருவடிகளிலே விழுந்து) ஏத்த,
	(அவர்களுக்காக)
அவர்	அந்தமதுகைடபர்களுடைய
நாள்	ஆயுஸ்ஸை
ஒழித்த	முடித்த

பதம்.	உரை.
பெருமான்	ஸர்வேஶ்வரனாய்,
	(அதுவுமல்லாமல்,)
முனநாள்	முன்னாள்
வளைந்திட்ட	வளைந்திருந்துள்ள
வில்லாளி	வில்லைக்கையிலேயுடையனாய்,
வல்	வன்மையையுடைத்தாய்
வாள்	ஒளிபொருந்திய
எயிற்று	பற்களையுளையுடையனாய்
மலைபோல்	மலைபோன்ற வடிவையுடையனான
அவுணன்	ஹிரண்யாஸுரனுடைய
உடல்	ஶரீரத்தை
வள் உகிரால்	வளைந்த நகங்களாலே
அளைந்திட்டவன்	இரண்டாகக் கிழித்தவன்
காண்மின்	கண்டீர்!

இன்று இத்யாதி பூர்வவத். (௩)

(ஆதரித்த)என்றது.கீழ்ப்பாட்டில் ''அங்காந்தவன்'' என்றத்தாலே-உண்டத்தைச் சொல்லி, இப்பாட்டிலும் அத்தையே சொன்னதுக்குக் கருத்தருளுகிறார் (அந்தவித்யாதி). ... ... (௨)

வ்யா;—மூன்ரும்பாட்டு. (உளைந்தித்யாதி) உலப்பில்வலிய ராய்க்கொண்டு எழுந்தமதுகைடபரோடே வைரம்விளைந்ததென் றெண்ணி விண்ணோர் உளைந்திட்டுப்பரவ. மிக்கப(ப)லத்தையுடை யராய்க்கொண்டு பெரியகிளற்றியோடே தோன்றின மதுகைடபர் களோடே நிலைநின்ற பாத்ரவமானது விளைந்ததென்று புத்தி பண்ணி, தேவர்கள் நடுங்கி வந்து திருவடிகளிலே விழுந்தேத்த, அவர்களுக்காக அந்த மதுகைடபர்கள் ஆயுஸ்ஸைக்கழித்தஸர்வேஶ் வரன். (வளைந்திட்டவித்யாதி). சத்ருபக்ஷமானது முடியும்படி வளைந்தவில்லைக்கையிலேயுடைய பெரியமிடுக்கன். வன்மையையும் ஒளியையு முடைத்தான எயிற்றையுடையனாய், மலைபோலேயிருக் கிற வடிவையுடையனான ஹிரண்யாஸுரனுடைய முருட்டுடலை வளைந்த உகிராலே இரண்டாகக்கிழித்தவன்கிடீர்; பெருமிடுக்கனான ஹிரண்யனை நிரஸித்தவன்கிடீர், இன்று ஓர் அப(ப)லைகையிலே கட் டுண்டிருக்கிறான். .... (௩)

மூ;—தளர்ந்திட்டிமையோர் சரண்தாவெனத்தான்
சரணாய் முரணாயவனையுகிரால்
பிளந்திட்டமரர்க் கருள்செய்துகந்த
பெருமான் திருமால்விரிநீருலகை
வளர்ந்திட்டதொல்சீர் விறல்மாவலியை
மண்கொள்ளவஞ்சித் தொருமாண்குறளாய்
அளந்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௪)

அ;—மூன்ரும்பாட்டு. (உளைந்தித்யாதி) கீழ் இரண்டு பாட்டாலும் அம்ருதப்ரதனாய், ஆபத்ஸகனானவன் கிடீர் வெண்ணெய்க்கு ஆப்புண்டானெ ன்றார்; இதில்-விரோதிகளைக் கிழங்கெடுத்தவன் கிடீர் கட்டுண்டா னென்கிறா ரென்று ஸங்கதி.

அந்வயத்தைக் காட்டி, ததநுகுணமாக வர்த்தம். (மிக்கவித்யாதி). "ஆய்ச்சியர்" என்றது-ஆத்மநிபஹு வசநமாக்கி (ஓரபலைகையாலே) என்றது.

அ;—நாலாம்பாட்டு. (தளர்ந்திட்டித்யாதி) கீழ்ப்பாட்டில் ஹிரண்ய நிர ஸநம் பின்னாட்ட, அவன்-வம்ஶ்யனான ப(ம)லியை வஞ்சித்து மண்ணை அடிப் படுத்தின விரகன் கிடீர் வெண்ணெய் களவு காணப்புக்குத் தலைக்கட்டமாட் டாதே ஆப்புண்டானென்று ஈடுபடுகிறாரென்று ஸங்கதி.

பதம்.	உரை.	பதம்.	உரை.
இமையோர்	தேவர்களானவர்கள்	வளர்ந்திட்ட	மேன்மேலே வளராநின்றுள்ள
தளர்ந்திட்டு	(அஸுரர்களாலே நெருக்குண்டு) மிகவும் ஶிதிலராய்	தொல்	நிரவதிகமான
சரண்தா என	"நீ எமக்கு ரக்ஷகனாக வேணும்" என்ன,	சீர்	ஸம்பத்தையுடையனாய்
தான்சரண்ஆய்	தான்ரக்ஷகனாகநின்று	விறல்	பெருமிடுக்கனான
முரணாயவனை	பெருமிடுக்கனான ஹிரண்யனை	மாவலியை	மஹாபலியை
உகிரால்	திருவுகிர்களாலே	மண்கொள்ள	பூமியைக்கொள்ளுகைக்காக
பிளந்திட்டு	கிழித்துப்பொகட்டு	வஞ்சித்து	க்ருத்ரிமித்து
அமரர்க்கு	தேவர்களுக்கு	ஒரு	அத்விதீயமாய்
அருள்செய்து	க்ருபை பண்ணி	மாண்	தர்ஶநீயமான
உகந்த	திருவுள்ள முகந்தருளின	குறள் ஆய்	வாமந வேஷத்தை யுடையனாய்க் கொண்டு
பெருமான்	ஸர்வேஶ்வரனாய்,	விரிநீர்	கடல்சூழ்ந்த
திருமால்	ஶ்ரிய:பதியாய்,	உலகை	லோகத்தை
		அளந்திட்டவன்	அளந்து கொண்டவன்
		காண்மின்	கிடீர்!
		இன்று இத்யாதி பூர்வவத். (௪)	

வ்யா.—நாலாம்பாட்டு. (தளர்ந்தித்யாதி) தேவர்கள் அஸுரர்களாலே நெருக்குண்டு போரத்தளர்ந்துவந்து "நீ எனக்கு ரக்ஷகனாகவேணும்" என்ன; ரக்ஷகனாய். (முரணாயவனை) பெருமிடுக்கனான ஹிரண்யனைத் திருவுகிராலே பிளந்து தேவர்களுக்கு க்ருபைபண்ணி "அவர்கள் விரோதிபோகப் பெற்றோமிறே" என்று உகந்த ஸர்வேஶ்வரன். அதுக்கு நிபந்தநமென்னென்னில்; ஶ்ரிய:பதியாகை. கடல்சூழ்ந்த பூமியை. (வளர்ந்திட்டதொல் சீர்விறல்மாவலியை) மேன்மேலெனவளராநின்றுள்ள நிரவதிக ஸம்பத்தையுடைய பெருமிடுக்கனான மஹாபலியை, பூமியைக்கொள்ளுகைக்காக தர்ஶநீயமான வாமநவேஷத்தையுடையனாய்க்கொண்டு க்ருத்ரிமித்து லோகத்தை அளந்தவன்கிடீர்; மஹாபலியைச் சிறையிலிட்ட ஆண்பிள்ளை கிடீர் 'ஓரபலையிட்ட சிறை விட்டுக்கொள்ளமாட்டாதேயிருக்கிறான்.

"சரண்தா" என்று பதவிபாக ([illegible])மாய்அருளுகிறார் (நீஎமக்கித்யாதி).

மூ;—நீண்டான்குறளாய் நெடுவானளவும்
அடியார்படுமாழ் துயராயவெல்லாம்
தீண்டாமைநினைந் திமையோரளவும்
செலவைத்தபிரா னதுவன்றியும்முன்
வேண்டாமை நமன்தமரென்தமரை
வினவப்பெறுவாரல ரென்றுலகேழ்
ஆண்டானவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (௫)

பதம்.	உரை.
குறள் ஆய்	வாமநவேஷத்தோடே வந்து தோற்றி
நெடு	பரப்பை யுடைத்தான
வான் அளவும்	ஆகாச மெங்கு மிடமடையும்படி
நீண்டான்	வளர்ந்தவனாய்,
அடியார்	தன்திருவடிகளில் ஆஶ்ரயித்தவர்கள்
படும்	அநுபவியா நின்ற
ஆழ்	ஸம்ஸாரத்தில் அழுந்தப் பண்ணுவதான
துயராயஎல்லாம்	பாபங்களெல்லாம்
தீண்டாமை	(அவர்களை) ஸ்பர்ஶியாதபடி
நினைந்து	மநோரதித்து
இமையோர் அளவும்	நித்யஸூரிகளளவும்
செல	செல்லும்படியாக

பதம்.	உரை.
வைத்த	(திருவடிகளை) வைத்தருளின
பிரான்	உபகாரகனாய்,
அது அன்றியும்;—	
முன்	முன்னே
வேண்டாமை	("எல்லாரையும் யமபடர்களாராயக்கடவர்கள்" என்றதன் நியமநத்தை) வேண்டாதபடியாலே
நமன்தமர்	"யமபடர்களானவர்கள்
என்தமரை	எம்மடியாரை
வினவப்பெறுவார்அலர்	ஆராயக் கடவர்களல்லர்"
என்று	என்றிப்படியாலே
உலகு ஏழ்	லோகங்களேழையும்
ஆண்டான் அவன்காண்மின்	தன் ஆஜ்ஞையிலே நடத்தினவன்கிடீர்!
இன்று இத்யாதி பூர்வவத். (௫)	

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (நீண்டானித்யாதி) வாமநவேஷத்தோடேவந்துதோற்றி, பரப்புடைத்தான ஆகாசமெங்குமிடமடையும்படி வளர்ந்தான். (அடியாரித்யாதி) தன் திருவடிகளை ஆஶ்ரயித்திருக்கும் சேஷபூதர்க்கு அநுபவித்தாலல்லது நசியாதபாபங்க

ளெல்லாம் அவர்களை ஸ்பர்ஶியாதபடியாக மநோரதித்து விரோ தியைப் போக்கிக் கொடுத்து, அவ்வளவேயன்றிக்கே நித்யஸூ ரிகளாவும் செல்லும்படியாகவைத்த உபகாரகன். (வேண்டாமை யித்யாதி) யமனுடையார் நம்முடையாரை ஆராயக்கடவரல்லர். அதுக்கு ஹேதுவென்னென்னில்; வேண்டாமை. "அல்லாதாரை இவன் ஆராய்க்கடவன், என்றிட்டகாமே இத்தைக் கழித்துக்கொடு த்தோம்" என்று இப்படியாலே லோகங்களெல்லாம் தன்ஆஜ்ஞை யிலேநடத்தினவன்கிடீர் இன்று தன் ஆஜ்ஞைஅழிந்து ஓர்அபலைகையி லே கட்டுண்டு அடியுண்கிறான். .... (ரு)

மூ;—பழித்திட்டவின்பப்பயன் பற்றறுத்துப்
பணிந்தேத்தவல்லார் துயராயவெல்லாம்
ஒழித்திட்டவரைத் தனக்காக்கவல்ல
பெருமான்திருமா லதுவன்றியும்முன்
தெழித்திட்டெழுந்தே யெதிர்நின்றமன்னன்
சினத்தோளவையாயிரமும் மழுவால்
அழித்திட்டவன்காண்மி னின்றுய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பழித்திட்ட	ஶாஸ்த்ரங்களிலே தூஷிக்கப்பட்ட	துயராயஎல்லாம்	பாபங்களை யெல்லாம்
இன்பம்	ஐஹிகஸுகமாகிற	ஒழித்திட்டு	கழித்து
பயன்	ப்ரயோஜநத்தை	அவரை	அவர்களை
பற்றறுத்து	ஸவாஸநமாகக் கழித்துவிட்டு	தனக்கு ஆக்கவல்ல	தனக்கு நித்ய கிங்கரர்களாகச் செய்யவல்ல
பணிந்து	திருவடிகளிலே விழுந்து	பெருமான்	ஸ்வாமியாய்,
ஏத்தவல்லார்	ஸ்துதிக்கவல்லவர்களுடைய	திருமால்	ஶ்ரியஃபதியாய்,
		அது அன்றியும் முன்;—	

அ;—அஞ்சாம்பாட்டு. (நீண்டாணித்யாதி) கீழ்ப்பாட்டில் ப்ரஸ்துத மான வாமநாவதாரத்தை அடியொத்திக்கொண்டு ஆஶ்ரிதர்க்கு யமபாசங்களை யடைய விடுவிப்பான்தானே ஆப்புண்டானென்றுக்கி யருளுகிறார் (அல்லாதா ரையித்யாதி). (இத்தை) ஆஶ்ரிதவர்க்கத்தை. ... ... (ரு)

தெழித்திட்டு	பெரிய ஆரவாரத்தைப் பண்ணிக்கொண்டு	சினம்	கோபத்தாலே துடியா நின்றுள்ள
எழுந்து	மிக்க கிளர்த்திகொண்டு	தோள் அவை ஆயிரமும்	தோள்களாயிரத்தையும்
எதிர்நின்ற	("நானெதிரி" என்று பொருவதாக) முன்னே வந்து நின்ற	மழுவால்	"பரசு" என்னும் ஆயுதத்தினால்
மன்னன்	ஸஹஸ்ர பாஹுவர்ஜுநனுடைய	அழித்திட்டவன் காண்மின்	துணித்துப் பொகட்டவன்கிடீர்!
			இன்று இத்யாதி பூர்வவத். (௬)

வ்யா;—ஆறும்பாட்டு. (பழித்திட்டவித்யாதி) ஶாஸ்த்ரங்களிலே நிஷேதிக்கப்பட்ட ஐஹிகஸுகமாகிற ப்ரயோஜநங்களைவாஸனையோடேகழித்துத் திருவடிகளிலே விழுந்தேத்த வல்லவர்களுக்குக் காலதத்வமுள்ளதனையும் அநுபவித்து முடியவொண்ணாதபடியான பாபங்களையடையக் கழித்து, அவர்கள்தாங்களே (௧) "தனக்கேயாக வெனைக்கொள்ளுமீதே" என்னப்பண்ணவல்ல ஸர்வேஶ்வரன். அதுக்கு நிபந்தநம்- ஶ்ரிய:பதியாகையாலே. (தெழித்தித்யாதி)பெரிய ஆரவாரத்தைப்பண்ணிக்கொண்டு மிக்ககிளர்த்தியோடே "நானெதிரி" என்று பொருவதாக முன்னேவந்து நின்ற மன்னனுண்டு-ஸஹஸ்ரபாஹுவர்ஜுநன்; அவனுடைய சினத்தையுடைத்தான தோள்களாயிரத்தையும் அழகுக்குப்பிடித்தமழுவாலே துணித்துப்பொகட்டவன் கிடீர் இன்றோரபலகையிலே கட்டுண்டிருந்தான். .... (௬)

அநு;—ஆறும்பாட்டு. (பழித்திட்டவித்யாதி) கீழ்ப்பாட்டில் ஆஶ்ரித விஷயத்தில் ப்ரீதியுக்ததையும், வாமநாவதாராபதாநமும் சொல்லிற்று. அந்த ஆஶ்ரிதரை ஆளும்படியும், அந்த வாமநாவதாரத்துக்கு அநந்தராவதாரமான பரசுராம விஜயத்தையும் அநுஸந்தித்து, "இப்படிப்பட்டவன் இப்படி ஆப்புண்டிருப்பதே" என்று ஈடுபடுகிறாரென்று ஸங்கதி.

(நிபந்தநம்) என்றவநந்தரம் "எங்ஙனே யென்னில்" என்று சேஷம்.

(சினத்தை) பணைத்தலை. ... ... (௬)

அநு;—ஏழாம்பாட்டு. (படைத்தித்யாதி) கீழ்ப்பாட்டிலே பரசுராமாவதாரத்தை அநுஸந்தித்தார்; அவர் மிடுக்கையும் விஞ்சின சக்ரவர்த்தித் திரு

---

(௧) தி-வாய்-௨-௯-௪.

மூ;—படைத்திட் டதிவ்வையமுய்ய முனநாள்
பணிந்தேத்தவல்லார் துயராயவெல்லாம்
துடைத்திட்டவரைத் தனக்காக்கவென்னத்
தெளியா வரக்கர்திறல் போயவிய
மிடைத்திட்டெழுந்த குரங்கைப்படையா
விலங்கல்புகப்பாய்ச்சி விம்மக்கடலை
அடைத்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே.

பதம்.	உரை.
முனநாள்	ப்ரளயங்கொண்ட காலத்தில்
இவ்வையம்	இவ்வுலகங்களை
படைத்திட்டு	(கரணகளேபரங்களோடு) ஸ்ருஷ்டித்
அது	அவைகளானவை [து
உய்ய	வழிபடுகைக்குடலாக,
பணிந்து	(அநுபவித்து) திருவடிகளிலே விழுந்து
ஏத்தவல்லார்	ஸ்துதிக்க வல்லவர்களுடைய
துயராயஎல்லாம்	பாபங்களையெல்லாம்
துடைத்திட்டு	போக்கி
அவரை	"அவர்களையடைய
தனக்கு ஆக்க என்ன	தனக்கேசேஷமாக்க வேணும்" என்ற ஈஶ்வராபிப்ராயத்தை

பதம்.	உரை.
தெளியா	அறிந்துகொள்ளாத
அரக்கர்	ராக்ஷஸர்களுடைய
திறல்	மிடுக்கானது
போய் அவிய	அழிந்துபோம்படியாக
மிடைத்திட்டு	நெருக்கிக்கொண்டு
எழுந்த	கிளர்ந்த
குரங்கை	வாநரவீரர்களையே
படையா	ஸேனையாகக்கொண்டு
விம்ம	(கடல்) நிரம்பும்படி
விலங்கல்	மலைகளை
புகப்பாய்ச்சி	பரப்பியிட்டு
கடலை	ஸமுத்ரத்தை
அடைத்திட்டவன்காண்மின்	அடைத்தவன் கிடீர்!

இன்று இத்யாதி பூர்வவத். (௭)

வ்யா;—ஏழாம்பாட்டு. (படைத்திட்டு) முன்பு இதடங்கலும்ப்ரளயம்கொண்டு உபஸம்ஹ்ருதமாய்க்கிடக்க, இவற்றுக்குக்கரண களேபரங்களைக்கொடுத்து ஸ்ருஷ்டித்து அவைவழிபடுகைக்குஉடலாக, அதுபவித்துத் திருவடிகளிலே விழுந்தேத்துமவர்களுடைய பாபமென்று பேர்பெற்றவற்றையடையப்போக்கி, அவர்களையடையத்

மகன் செய்த அதிமாநுஷ சேஷ்டிதத்தை அநுஸந்தித்து வித்த (ஷ்) ராகிறாரென்று ஸங்கதி.

முன்னாள் இவ்வையம்படைத்திட்டு, அது உய்யும்படியாக "தனக்காக்க" என்று அந்வயம் திருவுள்ளம்பற்றியருளுகிறார் (முன்பித்யாதி). "தனக்காக்க

தானிட்டவழக்காக்கவென்ன. (தெளியாவித்யாதி) "ஈஶ்வராபிப்ராயம் இதுவாகாதே" என்றுதெளியமாட்டாத துஷ்ப்ருக்ருதிகளான ராக்ஷஸர்மிடுக்கழியும்படியாக நெருக்கிக்கொண்டு தோற்றின ஶ்ரீவாநரவீரர்களையே ஸேனையாகக்கொண்டு மலைகளையிட்டு நிரம்பும்படியாகப்பாய்ச்சி கடலை அணைசெய்தவன்கிடீர்; மஹாத்தத்வமான கடலை அணைகட்டினவன் கிடீர் இன்றொருத்தி கட்டவிட்கமாட்டாதே யிருக்கிறான். .... (எ)

மூ;—நெறித்திட்டமென்கூழை நன்னேரிழையோ
டுடனாயவில்லென்ன வல்லேயதனை
இறுத்திட்டவளின்ப மன்போடணைந்திட்
டிளங்கொற்றவனாய்த் துளங்காதமுந்நீர்
செறித்திட் டிலங்கைமலங்க வரக்கன்
செழுநீண்முடி தோளொடுதாள்துணிய
அறுத்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நெறித்திட்ட	நெறித்திரா நின்றுள்ள	அவள் இன்பம்	அவளோட்டைஸம்ஶ்லேஷ ஸுகத்தை
மென்	ம்ருதுவான [தாய்	அன்போடு	ப்ரீதியோடே
கூழை	மயிர்முடியை யுடைய	அணைந்திட்டு	லபித்து
நல்	விலக்ஷணமாய் [ளாய்	இளங்கொற்றவனாய்	யுவராஜாவாய்
நேர்	அழகியதான	துளங்காத	ஒருவராலும் சலிப்பிக்கவொண்ணாத
இழையோடு	ஆபரணங்களாலே அலங்க்ருதையான பிராட்டியோடே	முந்நீர்	கடலை
உடனாய	கூடப்பிறந்த	செறித்திட்டு	அணைகட்டி
வில்லென்ன	த(ஃ)நுஃப்ரஸித்தியை யுடைத்தாய்	இலங்கை	லங்கையானது
வல் எய்	மிடுக்கையுடைத்தா யிருந்துள்ள	மலங்க	கலங்கும்படியாக
அதனை	அந்தவில்லை	அரக்கன்	ராவணனுடைய
இறுத்திட்டு	முறித்து விட்டு	செழு	செழித்து
		நீள்	ஆதிராஜ்யஸூசகமான
		முடியோடு	முடிகளோடு

வென்ன" என்றது-என்று நினைக்கவு மென்றபடி. "விம்ம" என்றதினர்த்தம் (நிரம்பும்படி) என்றது. ... ... (எ)

தோள்	தோள்களும்	அறுத்திட்ட அறுத்தவன்கிடீர்!
தாள்	தாள்களும்	வன்காண்மின்
துணிய	துணியும்படி	இன்று இத்யாதி பூர்வவத். (அ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (நெறித்தித்யாதி) நெறித்து ம்ருதுவான மயிர்முடியை யுடையளாய், விலக்ஷணமானஆபரணங்களாலே அலங்க்ருதையான பிராட்டியோடே ஒக்கப்பிறந்த த(ஒ)நுః ப்ரஸித்தியை யுடைத்தாய், மிடுக்கையுடைத்தாயிருக்கிற அந்தவில்லை. இவ்வில்லை முறித்தார்க்கு இவளைக்கொடுக்கக்கடவதாக நியமித்தபடியாலே "உடையனாய்" என்கிறது. "அல்" என்று-இருளாய், இருண்டவில்லென்னுமாம். அந்தவில்லைமுறித்து அவளோட்டை ஸம்ஶ்லேஷஸுகத்தை ப்ரீதியோடே லபித்து யுவராஜாவாய், ஒருவராலும் சலிப்பிக்கவொண்ணாதகடலை அணைகட்டி, லங்கையானது ஒருவர்கூறை எழுவருடுக்கும்படியாக ராவணனுடைய முடியோடே தோள்தாளிவை துணியும்படி அறுத்தவன்கிடீர் இன்று ஓரபலை கட்டவிழ்க்கமாட்டாதிருக்கிறான். .... (அ)

அரு;—எட்டாம்பாட்டு. (நெறித்தித்யாதி) கீழே கடலை அணைகட்டினபடி சொல்லிற்று. இவ்வளவேயோ? வில்லை முறித்த வீர்யமும், பூசலால் செய்த ஶௌர்யமும் குறைவற்றவனானவன்கிடீர் * கண்ணிநுண் சிறுத்தாம்பைஅறுக்கமாட்டாதேயிருக்கிறானென்று ஆஶ்சர்யப்படுகிறாரென்று ஸங்கதி.

"நெறித்து" என்றது - (௧) "கூழை முடிகொடா" என்கிறபடியே முடிகொடாமையாலே. இத்தால் பருவத்திளமை சொல்லிற்று. (நன்றாய) - பணியில் நேரிய ; ஸூக்ஷ்மபுத்தி க்ருதமான இழை என்றாய் பலிதம் (விலக்ஷணமான) என்றது. "யுவராஜாவாய்" என்றதுக்கு-சக்ரவர்த்தி யௌவராஜ்யத்திலே வைக்கக் கோலினதுக்கு விக்நம் வர, ஸ்ரீ பரதாழ்வான் "மஹாராஜராகவேணும்" என்று சரணம்புகச் செய்தேயும், பித்ருவாக்ய பரிபாலநபரராகையாலே பாதுகாத்வாரா ஸங்கல்பித்த யௌவராஜ்யத்தை நடத்தியபடியாலே என்று கருத்து. மீண்டுவந்த பின்பிறே பெருமாள் மஹாராஜாவாய் ஸ்ரீ பரதாழ்வான் யுவராஜாவுமானது. ... ... (அ)

அரு;—ஒன்பதாம்பாட்டு. (சுரிந்திட்டவித்யாதி) கீழ் இரண்டு பாட்டிலும் ப்ரஸ்துதங்களான குரங்கைப் படையாக்குகைக்கும், அரக்கன் முடிகளை அறுக்குகைக்கும் அடியான ஸாலபஞ்ஜந கர்ணநாஸாச்சேதங்களைச்சொல்

(௧) அ-௨-௬.

மூ;—சுரிந்திட்டசெங்கே ழுளைப்பொங்கரிமாத்
துலையப்பிரியாது சென்றெய்தியெய்தா
திரிந்திட் டிடங்கொண்டடங்கா ததன்வா
யிருகூறுசெய்த பெருமான்முனநாள்
வரிந்திட்டவில்லால் மரமேழுமெய்து
மலைபோலுருவத் தொரிராக்கதிமூக்கு
அரிந்திட்டவன்காண்மி னின்றாய்ச்சியரால்
அளைவெண்ணெயுண் டாப்புண்டிருந்தவனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
சுரிந்திட்ட	சுருண்டிரா நிற்பனவாய்	அதன்	அந்தக் கேசியினுடைய
செம் கேழ்	சிவந்தநிறத்தை யுடையனவான	வாய்	வாயை
உளை	பிடரி மயிர்களையுடைத்தாய்க்கொண்டு	இருகூறுசெய்	இருபிளவாம்படி பண்ணின
பொங்கு	களித்து வாராநின்றுள்ள	பெருமான்	ஸ்வாமியாய்,
அரி	சாத்ரவம் பொருந்திய	முனநாள்	ராமாவதாரத்திலே
மா	குதிரைவடிவம் கொண்டகேசியானவன்	வரிந்திட்ட	கட்டுடைத்தான
துலைய	முடிந்துபோம்படியாக	வில்லால்	வில்லாலே
பிரியாது	(அத்தை) விடாதே	மரம் எழும்	மராமரங்களேழையும்
சென்று எய்தி	சென்று கிட்டி,	எய்து	முறித்து,
எய்தா	ஒருகாலும்வந்து கிட்டாததாய்	மலைபோல்	மலைபோன்ற
திரிந்திட்டு	அங்குமிங்கும் திரிந்து	உருவம்	வடிவையுடையளான
இடங்கொண்	அவகாசம் கொடாதே	ஒரு இராக்கதி	சூர்ப்பணகை யென்பாளொரு ராக்ஷஸியின்
டடங்காது	அப(த்ர)வ்யமாய்க்கிடந்த	மூக்கு	மூக்கை
		அரிந்திட்டவ	அறுத்தெறிந்தவன் கின்காண்மின் டீர்!
			இன்று இத்யாதி பூர்வவத். (௯)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (சுரிந்திட்டவித்யாதி) சுருண்டு சிவந்த நிறத்தையுடைத்தாய், "கேழ்" என்று-நிறம். உளைமயிரை,

லா நின்றுகொண்டு, கட்டுண்ட க்ருஷ்ணனுடைய வீர்யந்தானும் அத்புதமா யிருக்கையாலே கேசிநிரஸநத்தையும் அநுஸந்தித்து வித்த(ர்)ராகிறாரென்று. ஸங்கதி.

யுடைத்தாய்க்கொண்டு களித்துவருகிற கேசிமுடியும்படியாக அத்தைவிடாதே சென்றுகிட்டி. (எய்தாதித்யாதி) ஒருகாலும்வந்து கிட்டாதே அங்கேயிங்கேதிரிந்து. (இடங்கொண்டடங்காது) அவகாசம்கொடாதே அபவ்யமாய்த்திரிகிற அதினுடையவாயை இருபிளவாம்படிபண்ணின ஸர்வேஶ்வரன். (வாந்தித்யாதி) கட்டுடைத்தானவில்லாலே மஹாராஜரை விஶ்வஸிப்பிக்கைக்காகமராமரங்களேழையுமெய்து, மலைபோலேயிருக்கிற வடிவையுடையளாயிருக்கச்செய்தேயும், பிராட்டிபோலே தன்னை ஸமானையாக புத்திபண்ணிவந்த சூர்பணகிக்கு வைரூப்யத்தைப்பண்ணி விட்டவன்கிடீர். ப்ரதிகூலையாய் வருகையாலேயிறே வைரூப்யத்தை விளைத்துவிட்டது. அநுகூலைக்கு அகப்படாமை யில்லையிறே. .... (கூ)

மூ;—நின்றார்முகப்புச் சிறிதும்நினையான்
வயிற்றைநிறைப்பா னுறிப்பால்தயிர்நெய்
அன்றாய்ச்சியர்வெண்ணெய் விழுங்கியுரலோ
டாப்புண்டிருந்த பெருமானடிமேல்
நன்றாயதொல்சீர் வயல்மங்கையர்கோன்
கலியனொலிசெய் தமிழ்மாலைவல்லார்
என்றானுமெய்தா ரிடரின்பமெய்தி
யிமையோர்க்குமப்பால் செலவெய்துவாரே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நின்றார்	(வெண்ணெய் களவு செய்து கட்டுண்டிருந்த வாஶ்சர்யத்தைப்பார்க்கவந்து) நின்றவர்களுடைய	உறி	உறிகளிலே சேமித்து
		பால்	பாலையும் [வைத்த
		தயிர்	தயிரையும்
		நெய்	நெய்யையும்
		வெண்ணெய்	வெண்ணெயையும்
முகப்பு	முன்பே	விழுங்கி	(களவுகண்டு) அமுது
சிறிதும்	ஏகதேசமும்	அன்று	அப்போது [செய்து,
நினையான்	லஜ்ஜிக்கமாட்டாதவ	உரலோடு	உரலோடே
வயிற்றை	வயிற்றை [னாய்,	ஆப்புண்டிருந்	கட்டுண்டிருந்த
நிறைப்பான்	நிறைக்கையொன்றிலுமே ஒருப்பட்டவ	பெருமான்	கண்ணபிரானுடைய
ஆய்ச்சியர்	இடைச்சிகள் [னாய்	அடிமேல்	திருவடிகளின் மேலே

"அரிமா"-சத்ருவான குதிரையாயருளுகிறார் (கேசி) என்று. ... (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நன்றாய	விலக்ஷணமாய்	என்றனும்	ஒருகாலும்
தொல்	நிரவதிகமான	இடர்	துன்பத்தை
சீர்	ஸம்பத்தை யுடைய	எய்தார்	அடையமாட்டார்கள்;
வயல்	வயல்சூழ்ந்த [ராய்	இன்பம்	நிரதிசயாநந்தத்தை
மங்கையர்	திருமங்கையி லுள்ளார்	எய்தி	அடைந்து
கோன்	நிர்வாஹகரான [க்கு	இமையோர்க்கும்	ப்ரஹ்மாதிகள் குடியிருப்புக்கும்
கலியன்	ஆழ்வார்	அப்பால்	அவ்வருகான பரமபதத்தை
ஒலிசெய்	அருளிச்செய்த	செலஎய்துவா	ப்ராபிக்கப்பெறுவர்கள்.
தமிழ்	த்ராவிட பாஷா ரூப		
மாலை	சொல்மாலையை [மான		
வல்லார்	ஓதவல்லவர்கள்		(௧0)

வ்யா;—பத்தாம்பாட்டு. (நின்றாரித்யாதி) களவோடேகண்டு பிடித்துக்கட்டினவாறே பலரும் பார்க்கவருவர்களே; அவர்கள் முகத்தைப் பார்த்து லஜ்ஜிக்குமது ஏகதேசமுமில்லை. (வயிற்றை நிறைப்பான்) இதொன்றையுமாயிற்று எப்போதும் நினைத்திருப்பது. உறிகளிலே இடைச்சிகள் சேமித்துவைத்த பால்தயிர்நெய் வெண்ணெய் இவற்றை அமுதுசெய்து, அவர்கள் உரலோடே சேர்த்துக்கட்டக் கட்டுண்டவன்மேலே சொல்லிற்று. (என்றனுமித்யாதி) ஒருகாலும் துக்கத்தை ப்ராபியார்கள். நிரதிசயாநந்தத்தை ப்ராபித்து ப்ரஹ்மாதிகள் குடியிருப்புக்குமவ்வருகான பரமபதத்தைப்ராபிப்பர். .... (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து ஆறாந்திருமொழி முற்றிற்று.

அந;—பத்தாம்பாட்டு. (நின்றாரித்யாதி) "சிறிதும் நினையானுமாய், வயிற்றை நிறைப்பானுமாய், ஆப்புண்டிருந்த" என்றந்வயம். ... ... (௧0)

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து ஏழாந்திருமொழி

மானம் ப்ரவேசம்.

வ்யா;—வெண்ணெய் களவுகாணும் பருவத்தைத்தப்பி, வெண்ணெயும் பெண்களையும்ஒக்கக்களவுகாணும் பருவமாயிருக்கிறபடியை அநுஸந்தித்து, யசோதைப்பிராட்டியானவள் விளைவதறியாமையாலே "இது எவ்வளவாய்ப்புகுகிறதோ?" என்று அஞ்சியிருக்க, இவனாலே நோவுபட்டு ஊரிலுள்ளாரடங்கலும் "அதுபோயிற்று, இதுபோயிற்று" என்று இங்ஙனே முறைப்பட, அவளும், அவர்களுமாகப் பரிமாறின அப்பெரிய குழாங்களைத்தாமநுபவிக்கிறார்.

அவ;—ஒருத்தியைப்பார்த்து வார்த்தைசொல்லுகிறார். .... ❋

மூ;—

மானமுடைத்துங்களாயர்குல மதனால்பிறர்மக்கள்தம்மை
ஊனமுடையனசெய்யப்பெறுமென் றிரப்பனுரப்பகில்லேன் [கேண்
நானுமுரைத்திலேன் நந்தன்பணித்திலன் நங்கைகாள்நானென்செய்
தானுமோர்கன்னியும் கீழையகத்துத் தயிர்கடைகின்றான்போலும்.

அநு;—மானத்தின்ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே யசோதைப் பிராட்டி பா(ஞ)வனையிருக்கச் செய்தே, அவள் பிறர் வாயாலே சொல்லுமா போலே திருமங்கையாழ்வார் ஈடுபட்டாராகப்பேசி வித்தாராயிருந்தார்; அவள் தானும்-இவன் பருவம் அல்பம் முற்றின வளவிலே பெண்களைக் களவுகாணக் கண்டு வித்தை(ஷ்டீ)யாயிருக்க, அவ்வூரிலெல்லாரும் முறைப்பட்ட வளவிலே அத்தை அநுஸந்தித்து அத்தனைபேருடைய தசையையுமுடையராய், அநுபவிக்கிறாரென்று ஸங்கதி யருளுகிறார் (வெண்ணெயித்யாதி). ❋

அநு;—முதற்பாட்டு. (மானமித்யாதி) "நங்கைகாள்" என்று-பஹு வசநமாகப் பாட்டிலே யிருந்தாலும், பிள்ளையின் தூ(ர்த்த)ர்த்த சேஷ்டிதத்தைப் பலர் கேட்கச் சொல்லுமது சேராமையாலே அந்தரங்கையானாளொருத்தியை உபசரித்து பூஜ்யதைதோற்றச்சொல்லுகிறாளென்றருளுகிறார் (ஒருத்தியை யித்யாதி).

பதம்.	உரை.
உங்கள்	"உங்களுடைய
ஆயர்குலம்	இடைக்குலமானது
மானம்உடைத்து அதனால்	மாநத்தையுடையதாகையால்
பிறர்	அயலாருடைய
மக்கள்தம்மை	பெண்கள்பக்கலிலே
ஊனமுடையன	இழிதொழில்களை
செய்யப்பெறாய் என்று	செய்யாதொழியவேணும்" என்று
இரப்பன்	(காலைப்பிடித்து) ப்ரார்த்திப்பேன்; (அத்தனைபோக்கி)
உரப்ப	பொடிந்துவார்த்தை சொல்ல
கில்லேன்	சக்தையாகிறிலேன்;
நானும்	(தாயான) நானும்
உரைத்திலேன்	(ஒன்று) சொல்லப் பெற்றிலேன்;

பதம்.	உரை.
நந்தன்	(தமப்பனாரான) ஸ்ரீநந்தகோபரும்
பணித்திலன்	(ஒன்று) அருளிச்செய்யப் பெற்றிலர்;
நங்கைகாள்	ப (ஜ) வ்யரான பிள்ளைகளைப்பெற்று வளர்க்கும் பூர்த்தியையுடைய பெண்காள்!
நான்என்செய்கேன்	நான்செய்யக்கடவதென்?; (இக்கண்ணபிரானானவன்,)
தானும்	தானும்
ஓர்கன்னியும்	ஒருகன்னியுமாய்க் கொண்டு
கீழைஅகத்து	கீழண்டைவீட்டில்
தயிர்	தயிரை
கடைகின்றான் போலும்	கடைந்துகொண்டிராநின்றான் போலும்.

வ்யா;—முதற்பாட்டு. (மானமித்யாதி) எங்கேனுமோரிடத்திலே "சுருசுரு" என்னக்கேட்டால் பின்னைக்கொண்டு ஜீவியார்கள் மாநத்தாலே; ஆகையால் பிறருடையபெண்களை ஸம்போகசிஹ்நங்களை விளைத்துவிடப்பெறாயென்று இங்ஙனே இரப்பன். (உரப்பகில்லேன்) பொடியில் தீம்பிலே இரட்டிக்குமே; காலைப்பிடித்துஇரப்பன்;. பொடிகிறிலேன்; நான் சொல்லிற்றைச்செய்தல், தமப்பனார் சொல்லிற்றைச்செய்தல் செய்யாதபருவமிறே உன்பருவம். நானும்

"உங்களாயர் குலம் - மானமுடைத்தாகையாலே - பிறர்மக்கள் தம்மை ஊன முடையன செய்யப்பெறாய்" என்றந்வயம் திருவுள்ளம் பற்றித்தாத்பர்யமருளுகிறார். (எங்கேனுமித்யாதி). (சுருசுரு) ஏகாந்தமாகஅபவாதம் சொல்லுகை. உரப்புதல் இரட்டிக்கைக்கு ஹேதுவாமோவென்ன; அவன் பருவம் அப்படிப்பட்டதென்று மேலுக்குத் தாத்பர்யம் (நானித்யாதி).

சொல்லிற்றிலேன்; தமப்பனாரும் அருளிச்செய்திலர்; (நங்கைகாள்) நீங்களுமெல்லாம் பிள்ளைபெற்றுவளர்க்கிறீர்களே, நான் இனிச் செய்வதென்? (தானுமித்யாதி) ஸூசகமாத்ரமேயன்றிக்கே காரகமுமுண்டாயிருந்தது. .... (௧)

மூ;—

காலையெழுந்துகடைந்தவிம்மோர்விற்கப் போகின்றேன்கண்டே போனேன்
மாலைநறுங்குஞ்சி நந்தன்மகனல்லால் மற்றுவந்தாருமில்லை
மேலையகத்து நங்காய் வந்துகாண்மின்கள் வெண்ணெயேயன்றிருந்த
பாலும்பதின்குடம் கண்டிலேன் பாவியேனென்செய்கேனென்செய்கேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
காலைஎழுந்து	ப்ராதஃகாலத்திலெழுந்து	வந்தாரும்இல்லை	(என்அகத்தில்) வந்ததில்லை;
கடைந்த	கடைந்த	மேலைஅகத்து	மேலண்டையகத்திலுள்ள
இம்மோர்	இந்தமோரை	நங்காய்	யசோதைப்பிராட்டீ!
விற்க	விற்பதற்காக	வந்து	(என் அகமேற) வந்து
போகின்றேன்	(தெருவேறப்) போகாநின்ற நான், (எனக்கெதிராகவந்த கண்ணபிரானை)	காண்மின்கள்	(கண்ணன்செய்ததைப்)பார்க்கக்கடவை;
கண்டே	பார்த்தே	வெண்ணெயே அன்று	(கடைந்துவைத்த) வெண்ணெயையேயன்றிக்கே
போனேன்	இனி எவ்வளவாய் விளையுமோ வென்றஞ்சிப்)போனேன்;	பதின்குடம்	பத்துக்குடங்களிலே
மாலை	பூமாலையாலே	இருந்த	(கடைகைக்காக) சேமித்துவைத்திருந்த
நறு	பரிமளியாநின்றுள்ள	பாலும்	பாலையும்
குஞ்சி	மயிர்முடியையுடையனாய்	கண்டிலேன்	காண்கிறிலேன்;
நந்தன்	ஸ்ரீநந்தகோபருடைய	பாவியேன்	மஹா பாபத்தைப்பண்ணின நான்
மகன்அல்லால்	குமாரனான கண்ணனொருவனொழிய	என்செய்கேன் என்செய்கேன்.	என்ன செய்யக்கடவேன்?
மற்று	மற்றொருவரும்		

சுருசுருகேட்டு நீ "இங்ஙனே என் செய்கேன்" என்கிறதென்னென்ன வருளுகிறார் (ஸூசகேத்யாதி). (காரகம்)காரணம். பெண்ணும் பிள்ளையுமாயிருந்து தயிர்கடைந்தபடி கண்டால், இனி ஸம்ஶ்லேஷத்துக்கு ஸம்பாவனையுண்டோவென்று கருத்து. ... ... (௨)

வ்யா:—இரண்டாம்பாட்டு. (காலையெழுந்து) ப்ராஹ்மே முஹூர்த்தத்திலே எழுந்திருந்து ஹிதசிந்தைபண்ணுவாரைப்போலே. (கடைந்த) இவையடையப் பாழிலே போக்கவொண்ணுதே, போகாநிற்கச்செய்தே நடுவழியிலேகண்டு "இது எவ்வளவாய் விளையக்கடவதோ?" என்று அஞ்சிப்போனேன்; (மாலையித்யாதி) ரக்ஷகத்வத்துக்குத் தனிமாலையிட்டிருக்கிறவனை யொழிய; செய்ததுக்கு நிவாரகரில்லாதவனையொழிய இதுசெய்யக்கடவாரில்லை; (மேலையகத்துநங்காய்) வந்தார்க்கு அறிவிக்குமது தவிர்ந்து அழைத்துக்காட்ட வேண்டுமளவாய்வந்து விழுந்தது. கடைந்து சேமித்துவைத்த வெண்ணெயயன்றிக்கே கடைகைக்கு யோக்யமான பாலுங்கூடக் கண்டிலேன். (பாவியேனித்யாதி) கோத(ரீ)ராகையாலே உபஜீவ்யம் கவ்யமாயிருக்குமிறே. அத்தை இழந்தால் பின்னைப்பொறுக்க மாட்டார்களிறே. .... (௨)

மூ;—

தெள்ளியவாசிறியான் நங்கைகாணுறிமேலத்தடாநிறைந்த

வெள்ளிமலையிருந்தாலொத்த வெண்ணெயைவாரிவிழுங்கியிட்டு

கள்வனுறங்குகின்றான் வந்துகாண்மின்கள் கையெல்லாம்நெய்வயிறு

பிள்ளைபரமன்றிவ்வேழுலகும் கொள்ளும்பேதையேனென்செய்கேனே

அந;—இரண்டாம்பாட்டு. (காலையித்யாதி) ஆனைச்சாத்தன் எழுந்திருக்கும்காலத்திலே*வாசநறுங்குழலாய்ச்சியொருத்தி-தயிர்கடைய, அவளோடே தயிர்கடைந்து புறப்பட்டபடியைக்கண்டு, தாயானவள் அந்தரங்கையான ஒருத்தியோடே சொல்லி விசாரப்பட்டுக் கொண்டிருக்க, அநந்தரம் கடைந்த மோரை விற்கவேணுமென்று கீழையகத்து குடும்பிநியானவள் புறப்பட்டுப் போய் வந்து வெண்ணெயும் பாலுமிழந்த க்லேசாதிசயத்தாலே மேலையகத்து நங்கையானயசோதையோடே முறைப்பட, அந்த தசையையுடையராய்த்தாமநுபவிக்கிருரென்று ஸங்கதி.

(ஒண்ணுதே) என்றவநந்தரம் "என்று" என்று சேஷம். "அழைத்துக் காட்ட" என்றதுக்கு-மேலையகத்து நங்கையான யசோதையைத்தானே அழைக்குமளவாய், அத்தனை க்லேசமென்று கருத்து. "பதின் குடமிருந்தபாலும்" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யம் (கடைந்தவித்யாதி). (௨)

அந;—மூன்றும்பாட்டு. (தெள்ளியவித்யாதி) கீழ்ப்பாட்டிலே கீழையகத்துநங்கை யசோதையோடே முறைப்பட்டிருக்க, அங்கே பெருங்கூட்டமாக

பதம்.	உரை.
	நங்கைகாள் ! — ;
தெள்ளிய	(அமுதவூறலினாலே) தெளிந்திரா நின்றுள்ள
வாய்	திருப்பவளத்தையுடையனான
சிறியான்	இச்சிறுப் பிள்ளையானவன்,
உறிமேல	உறியின்மேல் வைக்கப்
தடா	மிடாவிலே [பட்ட
நிறைந்த	நிறைக்கப்பட்டும்
வெள்ளிமலை	வெள்ளிமலையானது
இருந்தாலொத்த	இருந்தாற்போலிரா நின்றுள்ளதுமான
வெண்ணெயை	வெண்ணெயை
வாரி	(தன்தடங்கையார)வாரி
விழுங்கியிட்டு	விழுங்கிவிட்டு
கள்வன்	கள்ளத்தனத்தைக் காட்டா நின்றவனாய்

பதம்.	உரை.
உறங்குகின்றான்	உறங்கா நின்றான்;
வந்து காண்மின்கள்; —	
	(செய்த களவை மறைக்கவொண்ணாதபடி)
கை எல்லாம்	கைத்தலங்களடங்கலும்
நெய்	நெய்யாயிரா நின்றன ;
வயிறு	(இவனுடைய) வயிறானது
பிள்ளைபரமன்று	பிள்ளைப் பருவத்துக்குரிய திறமுடைத்தாயிருந்ததில்லை ;
இவ்வேழுலகும்	இந்த ஸப்த லோகங்களையும் [ளும்;
கொள்ளும்	உள்ளேயடங்கக்கொள்
பேதையேன்	அறிவிலியான நான்
என்செய்கேன்	என்ன செய்யக் கடவேன். (௩)

வ்யா;—மூன்றாம்பாட்டு. (தெள்ளியவாய்ச் சிறியான்) கண்ணுக்கு இருக்கிறபடியும் செயலிருக்கிறபடியும்காண். (நங்கைகாளித்யாதி) மேலே தடாத்தன்னிலே வெள்ளிமலைபோலே சேமித்துவைத்த வெண்ணெயை வாரி அமுதுசெய்து "இவனையெங்ஙனே இதுசொல்லும்படி" என்னும்படியாகத்தான் அறியாதாரைப்போலே கிடந்து உறங்கா நின்றான். நீங்களெல்லாம் இத்தை வந்துபாருங்கோள். இவன் மறைக்கப்பார்த்தாலும் ப்ரயோஜநமில்லை, கையெல்லாம் நெய்யாயிருக்க; (பிள்ளைபரமன்று) இவன் பருவத்தளவல்ல வயிற்றின்பெருமை. வெண்ணெயயன்றிக்கே இவ்வேழுலகும் கொள்

விருப்பாரை யெல்லாரையும் பார்த்து யசோதைதான் அவன் செய்தவதுக்கு முறைப்பட்டபடியைத்தா மநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

"தெள்ளியவாயில் அமுதவூறல் தெளிவுறலுடைய சிறியான்" என்று சப்தார்த்தமாய், "வந்து காண்மின்கள்" என்னுமளவுக்கும் கருத்தருளுகிறார் (கண்ணுக்கித்யாதி). கேட்ட பெருங்கூட்டத்திலே நீயும் எங்களைப்போலே

ளும். "இத்தயிரும்பாலும் பாழ்போகாமே ஒருபிள்ளைவேணுமென்றன்றோ நீபெற்றது. அவன் இப்போது அமுதுசெய்தானாகில் நீ இப்படிபடுகிறதென்" என்ன; (பேதையேனென் செய்கேனோ) "அவனுக்கு இது ஸாத்மியா தொழியில் செய்வதென்" என்றன்றோ அஞ்சுகிறது நான். .... (௩)

மூ;—

மைந்நம்புவேல்கண்நல்லாள் முன்னம்பெற்றவளைவண்ணநன் மா
தன்நம்பிநம்பியுமிங்கு வளர்ந்த தவனிவைசெய்தறியான் [மேனி
பொய்ந்நம்பிபுள்ளுவன் கள்வம்பொதியறைப் போகின்றவாதவழ்ந்திட்டு
இந்நம்பிநம்பியா ஆய்ச்சியர்க் குய்வில்லை யென்செய்கேனென்செய்கேனோ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மை நம்பு	அஞ்ஜனமணிந்த	இவை	இவ்வாறான தீம்புகளை
வேல்	வேல்போன்ற	செய்தறியான்	செய்ததில்லை;
கண்	கண்களையுடையளாய்,	பொய் நம்பி	பொய்யால் குறைவற்றவனாய்
நல்லாள்	ஆத்ம குணங்களையுடையளான தேவகிப் பிராட்டி	புள்ளுவன்	வஞ்சகரில் தலைவனாய்
பெற்ற	பெற்ற	கள்வம்	கள்ளத்தனத்துக்கு
வளைவண்ணம்	சங்க (ஶங்க) த்தின் நிறத்தை யுடைத்தாய்	பொதியறை	ஒரு கொள்கலமாயிருந்துள்ள இக்கண்ணபிரான், (தான் களவு செய்யாதவன் போலே)
நல்	விலக்ஷணமாய்		
மா	மாண்மையை யுடைத்தான	தவழ்ந்திட்டு	தவழ்ந்து
		போகின்ற ஆ	போகிறபடிஎன்தான்!;
மேனி	திருமேனியை யுடைய	இந்நம்பி	நிரபேக்ஷனான இவன்
தன்நம்பி நம்பியும்	நம்பி மூத்தபிரானும்	நம்பியா	(இப்படி தீம்பால்) பூர்ணனும் போதைக்கு
முன்னம்	முற்காலத்திலே	ஆய்ச்சியர்க்கு	(அபலைகளான)இடைச்சிகளுக்கு
இங்கு	இவ்வாய்ப்பாடியில்		
வளர்ந்தது	வளர்ந்ததுண்டு;	உய்வு இல்லை	உஜ்ஜீவிக்கவழியில்லை;
அவன்	அவன்	என்செய்கேன்	என்செய்கேனோ. (௪)

வெண்ணெய்க்காக முறையிடப்போமோ? என்ன; "அதுவன்று என்கருத்து" என்று சொல்லுகையிலே தாத்பர்யம் "பேதையேனித்யாதிக்கு" என்றருளுகிறார் (இத்தயிருமித்யாதி). ... ... (௩)

வ்யா;—காலாம்பாட்டு. (மைநம்பித்யாதி) மைபற்றின - அஞ்ஜநம் பற்றின வேல்போலேயாயிற்றுக் கண்ணில் † கருமையும் புகருமிருக்கிறபடி. அவ்வளவல்லாத ஆத்மகுணத்தையுடையவள்பெற்ற. (வளைவண்ண நன்மாமேனி) சங்கவர்ணனுயிறே நம்பிமூத்தபிரானிருப்பது. தன்தமையன் தீம்பால் குறையற்றுனொருவனிறே. அவன் மூற்காலத்திலே இங்கு விளையாடித்திரியும்போது நாங்கள் இப்பாடுபட்டறியோம்.

(பொய்நம்பி) பொய்யால் குறைவற்றிருக்கிறவன். (புள்ளுவன்) கண்ணி வைப்பாரைப்போலே கடைகிறபோதேதுடங்கி "இவர்கள் எங்கேவைப்பர்களோ?" என்று அடியொற்றிக்கொண்டு திரியாநிற்குமாயிற்று. (கள்வம்பொதியறை) களவிட்டு வைக்கைக்கொருகொள்கலம். (போகின்றவாதவழ்ந்து) இக்களவைச்செய்து தானல்லாதாரைப்போலே தவழாநிற்கும். (இந்நம்பி நம்பியாலாய்ச்சியர்க்குய்வில்லை) நிரபேக்ஷனை இவன் இவனுக, இவ்வூரில் இடைச்சிகளுக்கு உஜ்ஜீவிக்கவிரகில்லை. (என்செய்கேனித்யாதி) இவர்கள்கீழே எங்ஙனே நான் இவ்வூரில் குடிகிடக்கும்படி. .... (௪)

மூ;—

தந்தைபுகுந்திலன் நானிங்கிருந்திலேன் தோழிமாராருமில்லை
சந்தமலர்க்குழலாள் தனியேவிளையாடு மிடம்குறுகிப்
பந்துபறித்துத் துகில் பற்றிக்கீறிப் படிறன்படிறுசெய்யும்
நந்தன்மதலைக்கிங்கென் கடவோம் நங்காயென் செய்கேனென்செய்கேனோ?

அரு;—காலாம்பாட்டு. (மையித்யாதி) கீழ்ப்பாட்டிலே யசோதைப்பிராட்டி கீழையகத்துநங்கைக்கு உத்தரமாம்படி எல்லாரையும் பார்த்துத் தானும் இழந்தபடி சொல்லிவிட்டார்; அத்தைக் கேட்டுக் கீழையகத்து நங்கை மறுமாற்றம் காணுமையாலே, வாய்வந்தபடி பழித்துக்கொண்டு நம்பிமூத்தபிரானைக்கொண்டாடி, "இனி ஒருத்தருக்கும் இங்கேயிருந்து பிழைக்கவிரகில்லை" என்று கொண்டு, வெறுத்துக்கொள்ளுகிற படியைத் தாமநுபவிக்கிறுரென்று ஸங்கதி.

"நல்லாள்" என்றதுக்கு - தாத்பர்யம் (அவ்வளவித்யாதி).

(கண்ணிவைப்பார்) வலைவைப்பார். (இவர்கள்) ராமக்ருஷ்ணர்கள். (௪)

---

† (பா) பெருமையும் கூர்மையும்.

பதம்.	உரை.
நங்காய்	பூர்ணையான யசோதாய்!
தந்தை	(இப்பெண்பிள்ளையின்) தமப்பனார்
புகுந்திலன்	வீட்டில் ப்ரவேசித்தி[லர்;
நான்	(தாயான) நானும்
இங்கு	இந்த வீட்டில்
இருந்திலேன்	இருந்தேனில்லை;
தோழிமார்	தோழிமார்களில்
ஆரும்	ஒருத்தியும்
இல்லை	(அருகில்) இருந்திலள்;
சந்தம்	பரிமளம்மிக்க
மலர்	பூக்களணிந்த
குழலாள்	மயிர்முடியை யுடைய என் பெண்பிள்ளை
தனியே	அத்விதீயையாய்
விளையாடும்	விளையாடாநின்ற

பதம்.	உரை.
இடம்	ப்ரதேசத்திலே
குறுகி	சென்றுகிட்டி, (அவள் அடித்துக் கொண்[டிருந்த)
பந்து	பந்தை
பறித்து	பறித்தும்
துகில்	பரியட்டத்தை
பற்றிக்கீறி	பிடித்துக் கிழித்தும் (ஆகஇப்படிப்பட்ட)
படிறு	தீம்புகளை
செய்யும்	செய்யாநின்ற
படிறன்	தூ(தூ)ர்த்தனாய்
நந்தன்மதலைக்கு	நந்தகோபர் குமாரனான கண்ணனிடையாட்டத்திலே
இங்கு	இவ்விடத்தில்
என்கடவோம்	என்செய்யக்கடவோம்;
என்செய்கேன்!	என்செய்கேனோ? (௫)

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (தந்தையித்யாதி) சொன்னபடியே தலைக்கட்டிற்று. இவர்கள் தமப்பனார் புகுந்திலர்; நானும் இங்கிருந்திலேன்; (தோழிமாராருமில்லை) கூட்டிக்கொடுக்கைக்குத் தோழிமாருமில்லை. இவன்தான் பெண்பிறந்தார் தனியே விளையாடுமிடம்

அரு;—அஞ்சாம்பாட்டு. (தந்தையித்யாதி) கீழ்ப்பாட்டில் கீழையகத்து நங்கைமுறையிட்டுக் கொண்டிருக்கச்செய்தே ஏதேனும் சொல்லி, அசலகத்தார் ஏதேனும்பேசக்கேட்க மாட்டாத வந்தயசோதைப்பிராட்டியோடே மற்றும் அசலகத்தொருத்தி பெண்ணைக்களவு கண்டபடியைச்சொல்லி முறைப்பட அத்தசையையு மநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

பாட்டில் ப்ரமேயத்தையெல்லாம் கடாக்ஷித்து, கீழ்ப்பாட்டில் "ஆய்ச்சியர்க்கு உய்வில்லை" என்றதுவும் திருவுள்ளத்திலோடி வ்யாக்க்யாதாவின் ஈடுபாடாகத் தாத்பர்யம் (சொன்னவித்யாதி). "இங்கென்கடவோம்" என்று பஹுவசநமாயிருக்கையாலே தன் பெண்ணைப் படுத்தினபடி எல்லார்க்குமொக்குமென்கிறாளாகையாலே அருளுகிறார் (இவர்களென்று); - பெண்களென்றபடி. ... ... (௫)

பார்த்துக்கொடுதிரியும். அவர்களோடே சென்றுகிட்டிப் பந்தைப் பறித்தும், பரியட்டங்களைக்கிழித்தும். (படிறன்) பின்பு சொல்ல வொண்ணுதபடி களவுசெய்யும். (நந்தன்மதலைக்கு) ப்ரபுக்கள் கீழ் குடியிருக்க வொண்ணுதே ஸாதுக்களுக்கு. .... (ரு)

மூ;—

மண்மகள்கேள்வன் மலர்மங்கைநாயகன் நந்தன்பெற்றமதலை
அண்ணலிலைக்குழலூதி நம்சேரிக்கே † யல்லில்தான் வந்தபின்னைக்
கண்மலர்சோர்ந்து முலைவந்துவிம்மிக் கமலச் செவ்வாய்வெளுப்ப
என்மகள்வண்ணமிருக்கின்றவா நங்கா யென்செய்கே னென்செய்கேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நங்காய்	பூர்ணையான யசோதா	வந்தபின்னை	வந்தபிறகு,
மண்மகள்	ஸ்ரீபூமிப்பிராட்டிக்கு[ய்!	கண்மலர்	நயநகமலமானது
கேள்வன்	வல்லபனாய்,	சோர்ந்து	மிகவும் வதங்கி
மலர்மங்கை	தாமரைமலரில் திருவவதரித்தருளின ஸ்ரீ	முலை	முலைகளானவை
		வந்து விம்மி	நெறித்துக்கிளர்ந்து
நாயகன்	நாயகனாய், [தேவிக்கு	கமலம்	தாமரைபோலே
நந்தன்	ஸ்ரீநந்தகோபர்	செம்	சிவந்திருந்துள்ள
பெற்ற	பெற்ற	வாய்	அதரமானது
மதலை	சிறுப்பிள்ளையாய்,	வெளுப்ப	(ஆத்தஸாரமாய்ப் போகையாலே) வெளுமையைக் காட்ட
அண்ணல் தான்	ஸர்வசேஷியான கண்ணபிரானானவன்,		
இலை	இலையாலான	என் மகள்	என்னுடைய பெண்பிள்ளையின்
குழல்	முரளியை	வண்ணம்	நிறமானது [ள்ளையின்
ஊதி	ஊதிக்கொண்டு	இருக்கின்றஆ	(வைவர்ண்யப்பட்டு) இருந்தபடி பாராய்;
அல்லில்	இரவில் [ற		
நம் சேரிக்கே	நம்முடைய சேரியே	என் செய்கேன்!	என்செய்கேனே.

வ்யா.—ஆறும்பாட்டு. (மண்மகளித்யாதி) தாய்மாரும் தாய்

அநு;—ஆறும்பாட்டு. (மண்மகளித்யாதி) கீழை அசலகத்தாள் பூசவிட்டாள்; அப்போதே அசல்சேரியில் நங்கை தன்மகளிருக்கின்றவற்றைச் சொல்லிக்கூப்பிட, அந்தத் தசையையடைந்து அநுபவிக்கிறுரென்றுஸங்கதி.

அசல்சேரியானவளுக்கு ஸ்ரீபூவல்லபனென்னுமது தெரிந்தபடியென்னென்ன; அதுக்கு இரண்டுவகையாக வருளுகிறுர் (தாய்மாரித்யாதி). தாலா

† (பா) அல்லுற்றுன்.

மாரோடு ஒருகோவையாயிருப்பாரும் உகக்கும் பாசுரம். "மண்மகள்நாதனே? மாமலராள் நாயகனே?" என்றாயிற்று உகப்பது. அன்றிக்கே, ப்ரணயதா(ஞ)ரையில் அவர்களுக்கு தேசிகனாவன்கிடீர் இவளை இப்படிப்படுத்தினானென்னவுமாம். (நந்தன்பெற்றமதலை) அதுக்குமேலே பிறப்பாலுண்டான ஏற்றம். (அண்ணல்) தன்னுடைய சேஷித்வத்தைக்காட்டி எல்லாரையும் எழுதிக்கொண்டிருக்குமவன். (இலைக்குழலூதி) குழலையும் ஊதிக்கொண்டு ராத்ரியிலே வந்தபின்னை. (கண்மலர்சோர்ந்து) ஸம்போகாநந்தரம் விளைந்த கலவிக்குறிகள். (கமலச்செவ்வாய்) தாமரைபோலேயிருக்கிற அதரமானது. (வெளுப்ப) வெளுத்த என்றபடி. (என்மகள்வண்ணம்) இவள்நிறம் பெறுகைக்கு நான் எத்தைச்செய்வேன். .... (௯)

மூ;—

ஆயிரங்கண்ணுடை யிந்திரனாருக் கன்றாயர் விழவெடுப்பப்
பாசனநல்லன பண்டிகளால் புகப்பெய்தவதனையெல்லாம்
போயிருந்தங்கொரு பூதவடிவுகொண் டுன்மகனின்றுநங்காய்
மாயனதனையெல்லாம்முற்ற வாரிவளைத்துண்டிருந்தான் போலும்.

பதம்.	உரை.
நங்காய்!—;	
அன்று	முற்காலத்தில்
ஆயர்	இடையர்கள்
ஆயிரம் கண் உடை	ஸஹஸ்ராக்ஷனை
இந்திரனாருக்கு	தேவேந்த்ரனுக்காக
விழவு எடுப்ப	அந்நத்தினால்உத்ஸவம் செய்வதற்கு
நல்லன	நல்லவையான
பாசனம்	பாத்ரங்களிலே (சேமித்து வைத்து)
பண்டிகளால்	வண்டிகளாலே
புகப்பெய்த	கொண்டுவந்து தள்ளப்பட்ட
அதனை எல்லாம்	அந்த அந்நராசி யடங்கலும்,

பதம்.	உரை.
இன்று	இன்றையதினம்
அங்கு	அவ்விடத்தில்
போயிருந்து	போயிருந்து,
ஒரு	அத்புதமானதொரு
பூதம்	பூதத்தின்
வடிவுகொண்டு	வடிவைப்பூண்டு
மாயன்	(அமுது செய்தருளின) ஆஸ்சர்யசேஷ்டிதமுடைய
உன்மகன்	உன் பிள்ளையானகண்ணன்,
அதனை எல்லாம் முற்ற	அந்த அந்நராசி முற்றும்
வாரி	(கைகளால்) வாரி
உண்டு	அமுது செய்து
வளைத்திருந் தான்போலும்	(அல்லாதாரைப்போலே) சூழ்ந்து கொண்டிருந்தான்போலும். (௭)

ட்டுப் பாட்டுப்பாடும்போது பிள்ளை இங்ஙன்சொல்லுவாரென்று கருத்து. (௯)

வ்யா;—ஏழாம்பாட்டு. (ஆயிரங்கண்ணித்யாதி) தான் ஆயிரங் கண்ணையுடையனாகையாலே இதரவிஸஜாதீயனாய், தான் தேவயோநியிலே பிறந்தவனாய், அத்தாலே துர்மாநியாயிருக்கிறவனுக்கு இடையர் உத்ஸவமாகப்போத்தி நல்ல பா (ஜ) ஜநங்களிலே சோற்றையெடுத்து சகடத்தாலே கொடுவந்துதள்ள, அத்தையடங்கலும் "கோவர்த்தநோஸ்மி" என்று தான் அமுதுசெய்த ஆஸ்சர்யசக்தியுக்தன். (அதனையித்யாதி)அத்தையடங்கலும் அமுது செய்தானாய், அல்லாதாரைப்போலே இருந்தானாயிற்று. .... (எ)

மூ;—

தோய்த்ததயிரும் நறுநெய்யும்பாலு மோரோகுடம்துற்றிடுமென்று
ஆய்ச்சியர் கூடி யழைக்கவும் நானிதற்கெள்கியிவனை நங்காய்
சோத்தம்பிரானிவை செய்யப்பெறா யென்றிரப்பனுரப்பகில்லேன்
பேய்ச்சிமுலையுண்டபின்னை யிப்பிள்ளையைப் பேசுவதஞ்சுவனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	நங்காய்!-	ஆய்ச்சியர்	இடைச்சிகளுடைய
தோய்த்த	"தோய்த்து வார்த்த	கூடி	திரளாகக்கூடி
தயிரும்	தயிரையும்	அழைக்கவும்	கூப்பிடச்செய்தேயும்
நறு	(புதிதாக உருக்கப் பட்டு) பரிமளித [மான	நான்	(அவனைப்பெற்ற தாயான) நான்
நெய்யும்	நெய்யையும்	இதற்கு	இந்தச்செயலுக்கு
பாலும்	பாலையும்	எள்கி	ஈடுபட்டு,
ஓரோகுடம்	ஒவ்வொரு தடாக்களினின்றும்		(அநந்தரம்)
துற்றிடும் என்று	(கண்ணபிரான்) அமுது செய்துவிடுவன்" என்று		

அநு;—ஏழாம்பாட்டு. (ஆயிரமித்யாதி) அசலகத்தாரும் அசல்சேரியாரும் எல்லாரும் ஏககாலத்திலே முறைப்பட்டபடியைக்கண்டு, "என்னபுதுமை, நீங்களும் பிள்ளைபெற்றதில்லையோ? என்மகனித்தனை செய்யவல்லனோ?" என்றுயசோதைப் பிராட்டிசொல்ல, அத்தைக்கேட்டு எல்லாரும் ஒருமிடறாய்ச் சேர்ந்து, "பருப்பதத்தை யுண்டவனன்றோ? அவன் செய்யமாட்டாததுமொன்றுண்டோ?" என்கிறவர்கள்படியாலே, அநுபவிக்கிறாரென்று ஸங்கதி.

(பாஜநங்களிலே)- பாத்ரங்களிலே. "பூதவடிவுகொண்டு" என்றவநந்தரம் "உண்ட" என்றுசேஷம். ... ... (எ)

இவனை	இப்பிள்ளையை நோக்கி	(இப்பிள்ளையானவன்)	
பிரான்	"உபகாரகனே!	பேய்ச்சி	பூதனையின்
சோத்தம்	உனக்கோரஞ்ஜலி;	முலை	(விஷமிஸ்ரமான) முலையை
இவை	இவ்வாறுனதீம்புகளை	உண்டபின்னை	அமுதுசெய்தபின்பு, இப்பிள்ளையை இப்பிள்ளையிடையாட்டத்திலே
செய்யப்பெறுய்	(இனி) செய்யாதொழியவேணும்"	பேசுவது	பொடிந்து வார்த்தை சொல்லுவதைப் பற்றி
என்று	என்று அநுநயம்பண்ணிக் கொண்டு	அஞ்சுவனே	மிகவும் பயப்படாநின்றேன். (அ)
இரப்பன்	(காலைப்பிடித்து) ப்ரார்த்திப்பேன்; (அத்தனைபோக்கி,)		
உரப்பகில்லேன்	சீறிப்பேசமாட்டுகிறிலேன்;		

வ்யா;—எட்டாம்பாட்டு. (தோய்த்தவித்யாதி) நின்ற நின்ற அவஸ்த்தைகள்தோறும் சேஷியாதபடி பண்ணினுயிற்று. தோய்த்து அட்டின தயிரையும், புத்துருக்கு நெய்யையும், நெய்வாங்குகைக்கு யோக்யமானபாலையும் சேஷியாதபடியாக அமுது செய்யுமென்று ஆய்ச்சியரெல்லாரும் கூப்பிடச்செய்தேயும். (நானிதற்கெள்கி) நான் இதுக்கீடுபட்டு, இவனை ஆக்ரஹியாதே (பிரானே சோத்தம்) "இங்ஙனே செய்யலாகாதுகாண்" என்றும் இரவாநிற்பன். என்செய்ய, உன்மகனைபின்பு நிக்ரஹிக்கலாகாதோவென்ன; இவன் பூதனையுடையமுலையை அமுதுசெய்தபின்பு என்னுடைய பிள்ளையென்றிருக்க அஞ்சுவன். .... (அ)

அநு;—எட்டாம்பாட்டு. (தோய்த்தவித்யாதி) கீழ்ப்பாட்டிலே எல்லாரும்கூடி, "இந்த்ரனுக்கிட்ட சோற்றையெல்லாமுண்டவனுக்கு இவ்வூர்பால் வெண்ணெய் முதலானவை சேஷிக்க விரகுண்டோ? தீம்பிலே கைவளரும்படி பண்ணினுய் நீயன்றே" என்று கூசவிட, அத்தையெல்லாம்கேட்டு ஆரவாரமடங்கவிட்டு எல்லாரும் கேட்கும்படி அதிலே ஒருத்தியைப்பார்த்துப் "பேய்முலையுண்டவனை நான்உரப்பஅஞ்சுவன், இங்குஎன்னைக் குற்றம்சொல்லவேண்டா" என்ற அவன் தாயாயநுபவிக்கிறுரென்று ஸங்கதி.

(நின்றநின்ற அவஸ்த்தைகள்) என்றது - ஒருகவ்யத்துக்கே தயிராகை முதலானவெல்லாத் தசைகளென்கை. (அட்டின) வார்த்த. (ஆக்ரஹியாதே) கோபியாதே. ... ... (அ)

மூ;—ஈடும்வலியுமுடையவிந்நம்பி பிறந்தவெழுதிங்களில்
ஏடலர்கண்ணியினானை வளர்த்தி யமுனைநீராடப்போனேன்
சேடன்திருமறுமார்வன் கிடந்துதிருவடியால் மலைபோல்
ஓடும்சகடத்தைச்சாடியபின்னை யுரப்புவதஞ்சுவனே. (கூ)

பதம்.	உரை.
ஈடும்	சரீரபலத்தையும்
வலியும்	மிடுக்கையும்
உடைய	உடையனாய்
இந்நம்பி	பூர்ணனான இப்பிள்ளை
பிறந்த	அவரித்த
எழுதிங்களில்	ஏழாம்மாஸத்திலே,
ஏடு	இதழ்களானவை
அலர்	அலராநின்றுள்ள
கண்ணியினானை	மாலையாலே அலங்கரிக்கப்பட்டுள்ள இப்பிள்ளையை
வளர்த்தி	(குளிப்பாட்டித்) தூங்கப்பண்ணிவிட்டு,
யமுனை	யமுநாநதியிலே
நீராட	நீராடுவதற்காக
போனேன்	போனேன்;
சேடன்	மிகவும்இளையனாய்
திரு	பிராட்டியையும்
மறு	ஸ்ரீவத்ஸத்தையும்
மார்பன்	திருமார்விலே உடையனான இவன்,
மலைபோல்	ஒருமலைபோலே
ஓடும்	ஊர்கின்ற
சகடத்தை	(அஸுராவிஷ்டமான) சகடத்தை
கிடந்து	தான் கிடந்த கிடைமாறாதே
திருவடியால்	திருவடியாலே
சாடியபின்னை	முறித்துத் துகளாக்கின பிறகு
உரப்புவது	(இவனைச்) சீறிப்பேசுவதிலேயத்திலே
அஞ்சுவன்	பயப்படாநின்றேன். (கூ)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (ஈடுமித்யாதி) கனமுடைமையும் மிடுக்குமுடைய இப்பிள்ளை ஏழாமாஸத்திலேகுளிப்பாட்டிச்செவ்வியுடைத்தான மாலையைச்சூட்டி வளர்த்திவைத்துப்போனேன், யமுனையிலே நீராட. (சேடன்) அத்யந்த சைசவத்தையுடையவன்; இவ

அரு;—ஒன்பதாம்பாட்டு. (ஈடுமித்யாதி) எல்லாருங்கூடி "பேய்ச்சிமுலையுண்டத்தை நினைத்தஞ்சுவன்" என்றாய்; பிள்ளையினுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே அவள் முடிந்தாள்; அத்தைக்கண்டு நீ அஞ்சுகைக்குப் போருமோவென்ன; அது ஒன்றுமேயோ? சகடுதைத்தபடியைக் கேளுங்கோளென்கிறாளென்று ஸங்கதி.

(கனமுடைமை)-காயபலம். (மிடுக்கு)-பராபிபவநஸாமர்த்த்யம். (ஏடு)-தளமாய், (அலர்)புஷ்பமாய், இப்படி விசேஷித்ததுக்குக்கருத்து (செவ்வியித்யாதி). ... ... (கூ)

ன் செய்யும் செயல்களடைய ஸர்வேஸ்வரனோடொக்கும். (திருவடியால்) திருவடிகளாலே மலைபோலே ஊருகிற சகடத்தைச்சாடித்துகளாக்கினபின்பு இவனைப்பொடிய அஞ்சுவன். .... (௯)

மூ;—

அஞ்சுவன்சொல்லி யழைத்திட நங்கைகாளாயிர நாழிநெய்யை
பஞ்சியமெல்லடிப்பிள்ளைகளுண்கின்ற பாகந்தான் வையார்களே
கஞ்சன்கடியன் கறவெட்டுநாளி லென்கைவலத்தாதுமில்லை
நெஞ்சத்திருப்பனசெய்துவைத்தாய்நம்பீ யென்செய்கேனென்செய்கேனே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நங்கைகாள்	பூர்ணைகளான பெண்காள்!	கடியன்	மிகவும் க்ரூரனுயிரா நின்றான்;
சொல்லி	(இவன் செய்த தீம்புகளைச்) சொல்லி	கறவு	(அவனுக்குக் கட்டவேண்டிய)கப்பமானது
அழைத்திட	(இவனை) அழைக்க	எட்டுநாளில்	எட்டு நாளைக்குள் கட்டவேண்டும்படி ஸமீபித்தது;
அஞ்சுவன்	பயப்படாநின்றேன்;		
நம்பீ	கண்ணபிரானே!		
பஞ்சியம்	பஞ்சுபோலே	என்	எனக்கு
மெல்	ம்ருதுவான	கைவலம்	கைம்முதல்
அடி	அடிகளையுடைய	ஆதும் இல்லை	ஒன்றுமில்லை; (ஆனபின்பு)
பிள்ளைகள்	(உன்னோடொத்த ஆயிரம்) பிள்ளைகள்		
உண்கின்ற	புஜியாநின்ற	நெஞ்சத்திருப்பன	(என்னுடைய) நெஞ்சில்புண்பட்டிருக்கும்படியான கார்யங்களை
ஆயிரநாழிநெய்யை	ஆயிரநாழிகளிலே நிறைக்கப்பட்டநெய்யில்		
பாகந்தான்	பாதிபாகத்தையும்	செய்துவைத்தாய்	பண்ணிவைத்தாய்;
வையார்கள்	சேஷித்து வைக்கிறிலர் [கள்;	என்செய்கேன் என்செய்கேனே. (௰)	
கஞ்சன்	கம்ஸனானவன்		

அரு;—பத்தாம்பாட்டு. (அஞ்சுவனித்யாதி) கீழ் இரண்டு பாட்டிலும், பிள்ளைச் செவ்வைக் கேட்டைக்கேட்டுத் தங்களெல்லாரும் முகங்களைப்பார்த்துக்கொண்டு இனி மறுமாற்றமுண்டோ வென்று திகைத்திருக்க, அவர்களெல்லாரையும் பார்த்து, "நீங்கள் எது சொல்லிலும், இவனைக்கூப்பிட நான் அஞ்சுவன்;" என்று நிருத்தரமாகச்சொல்ல, எல்லாரும் "இப்படியுண்டோ? உனக்குக் கட்டவுமடிக்கவும் எளியனுயிருக்க, உரப்ப அஞ்சுவன்" என்கிற,

வ்யா;—பத்தாம்பாட்டு. (அஞ்சுவன் சொல்லியழைத்திட) (பஞ்சியமித்யாதி) பஞ்சுபோல ம்ருதுவான அடியையுடையராயிருக்கிற ;பிள்ளைகள் ஆயிரநாழி நெய்யை உண்கிறவிடத்தில் பாதியும் சேஷியாதபடியாயிற்று புஜித்தது. (கஞ்சன்கடியன்) கம்ஸனானவன் சாலக்கொடியவன். (கறவெட்டுநாளில்) கறவென்று-இறைக்குப்பேர். எட்டுநாளில் இறை இடையர் பாலிருக்கக் கடவதாயிருக்குமிறே. (என்கைவலத்தாதுமில்லை) எனக்குக் கைம்முதலொன்றுமில்லை. அன்றிக்கே, என்கையில் பலமில்லை என்னவுமாம். (நெஞ்சத்திருப்பன செய்துவைத்தாய்நம்பீ) என் நெஞ்சுப்புண்மாறுதபடியாகப் பண்ணினாய்; நான் இக்கார்ஹஸ்த்ய தர்மத்தை எங்ஙனே அநுஷ்டிக்கும்படி. .... (௰)

மூ;—

அங்ஙனும்தீமைகள்செய்வர்களோநம்பீ ஆயர் மடமக்களைப்
பங்கயநீர்குடைந்தாடுகின்றார்கள்பின்னே சென்றொளித்திருந்து
அங்கவர்பூந்துகில்வாரிக்கொண்டிட் டரவேரிடையாரிரப்ப
மங்கைநல்லீர்வந்துகொள்மினென்று மரமேறியிருந்தாய்போலும்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
நம்பீ	கண்ணபிரானே !	செய்வர்களோ	செய்யக் கடவதோ ? ;
ஆயர்	இடையர்களுக்கு	பங்கயநீர்	தாமரைப் பொய்கை [யிலே
மடம்	பவ்யைகளான	குடைந்து	அவகாஹித்து
மக்கள்	பெண்கள் திறத்திலே	ஆடுகின்றார்கள்	நீராடப்புக்க ஸ்த்ரீகளுடைய
அங்ஙனும்	அப்படியுங்கூட		
தீமைகள்	தீம்புகளை		

விதில் நாம் குடிவாங்குமித்தனை. பெண்களைப் புடைவைகளை உரிவது முதலான தீமைகளுக்கு ஒரு கணக்கில்லையென்று முறைப்பட, அவர்களை விட்டு அவர்கள் முன்னே தன்பிள்ளையை நியமிக்க ஒருப்படுகிறாள் மேல்நாலு பாட்டென்ற ஸங்கதி.

*சோறே அறம்செய்யும் நந்தகோபாலன்பிள்ளையாகையாலே" நீதான் *தன்னேராயிரம் பிள்ளைகளல்லது உண்பதில்லை; அவர்களெல்லார்க்கும்-ஆயிரநாழி நெய்யைத்தாராதே தீராது; அவர்களுண்ணும்போது சேஷித்ததை யாகிலும் இறைக்குக்கூட்டிவைக்கவிரகில்லை. கொண்டுவிற்கைக்குக்கைம்முதலுமில்லை; நீயோ என்னகத்திலே இத்தனை தீம்புசெய்கிறாய்''என்று வெறுக்கிறாளென்று விகல்பித்து உட்கருத்தருளுகிறார் (என் நெஞ்சித்யாதி வாக்யத்வயத்தாலே).

பின்னைசென் று	பின்னே போய்
ஒளித்திருந்து	மறைந்து கொண்டிருந்து
அங்கு	அவ்விடத்தில்
அவர்	அந்த ஸ்திரீகளுடைய
பூ	அழகிய
துகில்	பரியட்டங்களை யடையட்டு
வாரிக்கொண் டிட்டு	வாரிக்கொண்டு,
	(அவ்வளவிலே)
அரவு ஏர்	அரவு போலே நுண்ணிதான
இடையார்	இடையையுடைய அப்பெண் பிள்ளைகள்
இரப்ப	(தந்தாம் பரியட்டங்களை) யாசிக்க,
நல் மங்கைமீர்	"அழகிய பெண்காள்!
வந்து	நானிருக்கு மிடமேற வந்து
கொண்மின்	உங்கள் துகில்களைப் பெற்றுப்போங்கோள்"
என்று	என்றுசொல்லிக்கொண்டு
மரம்	மரத்தினுச்சியிலே
ஏறியிருந்தாய் போலும்	ஏறியிருந்தாய். (௧௧)

வ்யா;—பதினோராம்பாட்டு. (அங்ஙனுமித்யாதி) சொல்லவொண்ணுதபடியான தீம்புகளை விளக்கக்கடவதோ? ஒரு குடியிலே பிறந்த பெண்பிள்ளைகளைச்செய்யும் தீம்பு. தாமரைப் பொய்கையிலே சென்று ஒளித்திருந்து அவர்களுடைய பரியட்டங்களையடைய வாரிக்கொண்டு. (அரவேரிடையாரித்யாதி) அரவுபோலே நுண்ணிய இடையையுடைய ஸ்த்ரீகள் இரக்க, (மங்கைநல்லீர் துகில் கொண்மினென்று மரமேறியிருந்தாய்போலும்) வேணுமாகில் இங்ஙனே ஏறிவாங்கிக்கொள்ளுங்கள் என்றிருந்தாய். .... (௧௧)

மூ;—

அச்சந்தினைத்தினையுமில்லையிப்பிள்ளைக் காண்மையுஞ்சேவகமும்
உச்சியில்முத்திவளர்த்தெடுத்தேனுக்குரைத்திலன்தானின்றுபோய்
பக்கிலைப்பூங்கடம்பேறி விசைகொண்டுபாய்ந்துபுக் காயிரவாய்
நச்சழல்பொய்கையில்நாகத்தினோடுபிணங்கிநீவந்தாய்போலும். (௧௨)

அந;—பதினோராம்பாட்டு. (அங்ஙனுமித்யாதி) கீழ்ப்பாட்டிலே "என் செய்கேன்" என்று தன்னைப்பார்த்துவேறேயும் சிலரைப்பாரா அச்சம்தோற்ற நிற்க, அநந்தரம் நங்கைகள் சொன்ன தீம்புகளைத்தான் சொல்லி இப்படி செய்ய வடுக்குமோ வென்று கேட்கிறுளென்று ஸங்கதி.

(செய்யும் தீம்பு) என்றவநந்தரம் "ஏதென்று" என்று சேஷம்; இதுக்கு "கொள்ளுங்களென்று, இருந்தாய்" என்றத்தோடே அந்வயம். (௧௧)

பதம்	உரை.
இப்பிள்ளைக்கு	இந்தப்பிள்ளைக்கு
தினைத்தினை	ஈஷத்தும்
அச்சம் இல்லை	பயமில்லை ;
ஆண்மையும்	பௌருஷமும் [து ;
சேவகமும்	சேவகப்பாடுமே யுள்ள
உச்சியில்முத்தி	உச்சிமோந்து
வளர்த்தஎடுத்தேனுக்கு	வளர்த்தெடுத்ததாயான எனக்கு
தான்	தான்
உரைத்திலன்	(செய்யப்புகும் செய்கைகளைச்) சொல்லுகிறிலன் ;
இன்று போய்	இன்றைக்குப்போய்
பச்சிலை	பசுமையான இலைகளை யுடைத்தாய்

பதம்.	உரை.
பூ	பூத்துக்கிடந்த [றி
கடம்பு ஏறி	கடப்பமரத்தின்மேலே
விசைகொண்டு	பெரியவேகத்தோடே
பாய்ந்துபுக்கு	(மடுவிலே)ஏறப்பாய்ந்து,
ஆயிரம் வாய்	ஆயிரம் வாயாலும்
நச்சு அழல்	விஷத்தை உமிழாநிற்பானாய் [கிடக்கிற
பொய்கையில்	நச்சுப் பொய்கையிலே
நாகத்தினோடு	காளிய நாகத்தினோடு
நீ	இளம்பருவத்தனான நீ
பிணங்கி	போர்செய்து
வந்தாய்போலும்	வந்தாயோதான். (௧உ)

வ்யா;—பன்னிரண்டாம்பாட்டு. (அச்சமித்யாதி) பயமேகதேசமும் கூட வில்லை, இப்பிள்ளைக்கு. (ஆண்மையித்யாதி) ஆண்பிள்ளைத்தனமும் சேவகப்பாடுமேயாயிற்று உள்ளது. (உச்சியில்முத்தி) உச்சி மோந்து வளர்த்தெடுத்தேனுக்கு, ஒன்றுமுரைத்திலன்தான். இன்றுபோய், (பச்சிலையித்யாதி) திருவடிகளோடுண்டான ஸ்பர்ஶத்தாலே தழைத்துப் பூத்தகடம்பிலே ஏறிப்பெரிய வேகத்தாலே மடுவிலே ஏறப்பாஞ்சு; (ஆயிரவாயித்யாதி) ஆயிரம் வாயாலும் விஷத்தை உமிழாநிற்பானாய் தான் நச்சுப்பொய்கையிலே கிடக்கிற காளியனோடே பிணங்கி வந்தாய்போலே இருந்தது. .... (௧உ)

அரு;—பன்னிரண்டாம்பாட்டு. (அச்சமித்யாதி) கீழ்ப்பாட்டிலே பொய்கையிலே பெண்களோடு பிணங்கினபடியைச் சொல்லச்செய்தே, நச்சுப்பொய்கையிலே போனது ஸ்ம்ருதிவிஷயமாய், அதுக்கு வயிறு மறுகியத்தைச் சொல்லி வெறுக்கிறுளென்று ஸங்கதி.

"தினைத்தினை"-எள்ளத்தனையென்னுமாபோலே, அல்பத்தைச்சொல்லுகிற தென்கிறுர் (பயமித்யாதி). தினை-க்ஷுத்ரதாந்யம்; "இப்பிள்ளைக்கு" என்கையாலே நங்கைகளையும் ஒருகண்ணாலே பார்த்துச்சொல்லி, மேலே இவனை ஒருகண்ணாலே பார்த்துச் சொல்லுகிறுளென்று கொள்வது. ... (௧உ)

மூ;—

தம்பரமல்லனவாண்மைகளைத் தனியேநின்றுதாம்செய்வரோ?
எம்பெருமானுன்னைப்பெற்றவயிறுடையேனினியானென்செய்கேன்
அம்பரமேழுமதிருமிடிகுர லங்கனல்செங்கணுடை
வம்பவிழ்கானத்துமால்விடையோடு பிணங்கிநீவந்தாய்போலும்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
எம்பெருமான்	எனக்குப்பெருமையை விளைவிக்கக் கடவ கண்ணனே!	இனி என்செய்கேன்;—	
தாம்	ஓரோ காரியங்களிலே யிழிவார்	அம்பரம் ஏழும்	உபரிதந லோகங்களெல்லாம்
தம்பரம் அல்லன	தந்தாமால் செய்து தலைக்கட்ட வொண்ணாத	அதிரும்	அதிரும்படியாக
ஆண்மைகளை	வீரச்செயல்களை	இடி	முழங்காநின்றுள்ள
தனியேநின்று	தனித்து நின்று	குரல்	த்வநியையுடைத்தாய்
செய்வரோ	செய்யக்கடவர்களோ?;	அனல்	நெருப்புப்போலே
உன்னை	இப்படி அஸாத்யமான செயலைச் செய்கிற உன்னை	செம்	சிவந்த
பெற்ற	பெற்ற	கண் உடை	கண்களை யுடைத்தாய்
வயிறுஉடையேன்	வயிற்றை யுடையளான	மால்	கறுத்திருந்துள்ள
யான்	நான்	விடையோடு	ரிஷபங்களோடே
		வம்பு அவிழ்	மணம்மாறுதேநித்ய வஸந்தமான
		கானத்து	அச்சோலைக்குள்ளே
		பிணங்கிநீவந்தாய்போலும். (௧௩)	

வ்யா;—பதின்மூன்றாம்பாட்டு. (தம்பரமித்யாதி) ஓரோகாரியங்களிலே இழிவார் தந்தாமால் செய்து தலைக்கட்டலாம் கார்யங்களிலே யன்றோ இழிவது. (ஆண்மைகள்) ஓரோவொன்றையே

அரு;—பதின்மூன்றாம்பாட்டு. (தம்பரமித்யாதி) கீழ்ப்பாட்டில் "நாகத்தினோடு பிணங்கி நீ வந்தாய்" என்னக்கேட்டு, நீ இதுக்கஞ்சவேணுமோ? சிறுப்பிள்ளையாயிருக்கச் செய்தே நான் நச்சுமுலையுண்டதாகச் சொன்னாயே, இவ்விஷயம் எனக்கு ரஸ்யமானது ஆஜந்மஸித்தமென்று ப்ரஸித்தமா யிருக்கையாலே "விஷமேறாத ப்ரக்ருதி இவன்" என்று தேறியிருக்கலாமே யென்ன; அதுவொன்றுமோ தேறியிருக்கைக்கு; மலைபோலே பெரியவிடைகளின்மேல் விழுந்ததுக்கு நானென்செய்கே னென்கிறாளென்று ஸங்கதி.

கார்யங்களை என்னவேண்டியிருக்க, "ஆண்மை" என்று விசேஷசப்தத்தாலே சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (ஓரோவென்று தொடங்கி).

தலைகாணவொண்ணுதபடியிருக்கை. (தனியே நின்று) நம்பி மூத்த பிரானோடே கூடநின்று செய்தானாகில் கண்ணெச்சில் வாராதபடி அவன் தலையிலே ஏறிடலாம். (தாம்செய்வரோ) தந்தாமையும் பார்க்கவேண்டாவோ? (எம்பெருமான்) உன்னைப்பெற்றவிதுவே அமையாதோ வயிற்றெரிச்சலுக்கு வேண்டுவது. நீ ஒருசெயலைச் செய்யவேணுமோ? (அம்பரமேழும்) உபரிதநலோகங்கள் அதிரும்படியான த்வநியையுடைத்தாய், அகவாயில் மரமெல்லாம் தெரியும்படி நெருப்புப்போலே சிவந்தகண்ணையுடைத்தாயிருக்கிற வ்ருஷபங்களோடு கூட நித்யவஸந்தமான சோலைக்குள்ளே பிணங்கிவந்தாய் போலேயிருந்தது என்கிருள். .... (௧௩)

மூ;—அன்னநடைமடவாய்ச்சி வயிறடித்தஞ்சஅருவரைபோல்
மன்னுகருங்களிற்றருயிர்வவ்விய மைந்தனைமாகடல்சூழ்
கன்னிநன்மாமதிள்மங்கையர்காவலன் காமருசீர்கலிகன்றி
இன்னிசைமாலைகளீரேழும்வல்லவர்க் கேதுமிடரில்லையே

திருமங்கையாழ்வார் திருவடிகளேசரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்னநடை	ஹம்ஸகதியையும்	மைந்தனை	மிடுக்கனான கண்ணபிரான் விஷயமாக,
மடம்	ஆத்மகுணத்தையுமுடையளான	மாகடல்	அகழாகப் போரும்படியான கடலாலே
ஆய்ச்சி	யசோதைப் பிராட்டியானவள்	சூழ்	சூழப்பட்டதாய்,
வயிறு அடித்து	வயிற்றிலே அடித்துக்[கொண்டு	கன்னி	ஶாஶ்வதமாய்
அஞ்ச	அஞ்சும்படி,	நல்	விலக்ஷணமாய்
அருவரைபோல்	பெரியதொருமலைபோலே	மா	அரணாகப் போரும்படியான ஒக்கத்தையுடைத்தான
மன்னு	பொருந்தியிருக்கிற		
கரு	கருமையையுடைய	மதிள்	மதிளையுடைய
களிறு	குவலயாபீடத்தின்	மங்கையர்	திருமங்கையிலுள்ளார்[க்கு
ஆருயிர்	அருமையான உயிரை	காவலன்	நிர்வாஹகராய்
வவ்விய	அபஹரித்த	காமரு	ஸ்ப்ருஹணீயமான

(தலைகாண)எல்லைகாண. வ்யாக்யாத்ருவாக்யம் (நம்பியித்யாதி). (தந்தாமை) தன் ஸௌகுமார்யத்தைத் யென்கை. ... ... (௧௩)

சீர்	கல்யாணகுணங்களையுடையரான	மாலைகளீரேழும் சொல்மாலையான பதினான்கு பாசுரங்களை
கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்[த)	வல்லவர்க்கு ஓதவல்லவர்களுக்கு[யும்
இன்	இனிதான	இடர் துன்பமானது
இசை	இசையையுடைய	ஏதும் இல்லை ஈஷத்துமில்லை. (௧௪)

வ்யா;—பதினாலாம்பாட்டு. (அன்னமித்யாதி) ஆகர்ஷகமான நடையையுடையளாய், ஆத்மகுணோபேதையாயிருக்கிற யசோதைப் பிராட்டியானவள் வயிற்றிலே அடித்துக்கொள்ள. (அருவரை போல்) மலை கால்கொண்டு நடந்தாப்போலேயாய், கண்டார்கண்கள் பிணிப்படும்படியிருக்கிற ஆனையை முடித்துப் பொகட்டமிடுக்கனை. (மாகடல்) கடலை அகழாகவுடைத்தாய் அரணாகப்போரும்படியான மதிளையுடைத்தான திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார். (இன்னிசையித்யாதி) இத்திருமொழியை வல்லவர்களுக்கு யசோ

அந்;—பதினாலாம்பாட்டு. (அன்னமித்யாதி) இவ்வாழ்வாருக்கு யசோதைப்பிராட்டி தசைபிறந்து க்ருஷ்ணன் தீம்புகளையும் அதிமாநுஷசேஷ்டிதங்களையும் ஸாக்ஷாத்கரித்து அநுபவிக்கும்போது, பத்தாம்பாட்டிலே நேரே அவனோடு வார்த்தை சொல்லுகையாலுண்டான அநுபவாதிசயத்தாலும், வயிறுமறுகும்படியான ஆண்மைகளையும் திருமேனிஸௌகுமார்யாதிகளையும் கண்டு வயிறடித்துக்கொள்ளும்படியான ப்ரேமத்தாலும், கீழ்த்திருமொழிகளின் கணக்கிலே பத்துப்பாட்டாக வருளிச்செய்யும் கட்டளையும் மறந்தும் ஈரேழாக வநுஸந்தித்தாரென்று கண்டுகொள்வது.

கீழ்ஸௌகுமார்யத்துக்கு அஞ்சினபடி சொல்லி, இதில் வயிறுபிடித்தபடி சொல்லிற்றென்று ஸங்கதி. அந்தஅச்சம் திரும்பபடிக்குக் குவலயாபீடத்தைக் கொன்று பெருமிடுக்கைக்காட்டத் தெளிந்தவநந்தரம், இத்திருமொழிக்குப் பலம்சொல்லுகிறாரென்று மேலுக்கு ஸங்கதி.

தீம்புகளைச்சொல்லிப் பழியிடுகிறபாட்டுக்கள் ஓரேழும், சேவகத்தைப் பேசுகைப்ராதாந்யேந தோற்றும்படியான தோரேழுமாகப் பிரித்து "ஈரேழுமென்றார்" என்று விவக்ஷித்து, ப்ரக்ருதோபயுக்தமாக வருளுகிறார் (இத்திருமொழியை யித்யாதி). ... ... (௧௪)

ஜீயர்திருவடிகளே சரணம்.

தைப்பிராட்டியுடைய அநுபவத்தில் குறைய அநுபவிக்கவேண்டா வென்கிறார். .... (கச)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி பத்தாம்பத்து ஏழாந்திருமொழி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து எட்டாந்திருமொழி

காதில் ப்ரவேசம்.

வ்யா;—வெண்ணெயையும் பெண்களையுமொக்கக் களவுகாணு மது தவிர்ந்து அவர்களும் கைபுகுந்து நினைத்தபடியே ஸம்ஶ்லேஷ மும் ப்ரவ்ருத்தமாய் நின்றதுகிழ்; இனி இது ப்ரஸித்தமாம்படியான வாறே அகலநின்றான்; இவர்களுக்கு ப்ரணயரோஷம் தலையெடுத்து ஸம்ஶ்லேஷத்தினுடைய மத்யந்திநமாய், அறமுறுடுகொளுத்தியி ருக்க, அவனும் வருந்தி காலைக்கையைப்பிடித்து ஸம்ஶ்லேஷித்தபடி யைப் பேசுகிறதாயிருக்கிறது.

மூ;—காதில்கடிப்பிட்டுக் கலிங்கமுடுத்துத்
தாதுநல்ல தண்ணந்துழாய்கொ டணிந்து
போதுமறுத்துப் புறமேவந்துநின்றீர்
ஏதுக்கிதுவென் னிதுவென் னிதுவென்னோ. (க)

அரு;—காதில் ப்ரவேசம். "நந்தன்பெற்றமதலை நஞ்சேரிக்கே அல்லில் தான் வந்தபின்னை, கண்மலர் சோர்ந்தித்யாதி - என்மகள்வண்ணமிருக்கின்ற வாநங்காய், என்செய்கேன்" என்கையாலும், "அங்ஙனம் தீமைகள்செய்வர்க ளோநம்பீ" என்றுதாயும் ஆணைவிட்டபடியாலும், உந்மஸ்தகரஸம் தலையெ டுக்கும்படி ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாக, அதுஸாத்மிக்கவேணுமென்று, பிரி ந்தவநந்தரம், பிரிவுபொறுக்கமாட்டாமல் ஊடுதல்தலையெடுத்ததென்றும் ஸங்கதியை யருளுகிறார் (வெண்ணெயையுமித்யாதி). (ப்ரஸித்தமாம்படி) மிகவும் உந்மஸ்தகமாம்படி கைபுகுந்ததென்னும்படி. (மத்யந்திநம்) நாளுக்கு மத்யம்-ஸாயங்காலமென்றபடியாய், அத்தாலே ஸம்ஶ்லேஷத்துக்கு ஸாயங் காலமாவது-கேவலம் விஶ்லேஷமுமன்றிக்கே, ஸம்ஶ்லேஷமுமன்றிக்கே, முன்னேநிற்கிறநிலையானவாறே யென்கை. ... ... *

பதம்.	உரை.	பதம்.	உரை.
காதில்	காதிலே	அணிந்து	(திருமுடியை) அலங்கரித்து
கடிப்பு	கர்ணபூஷணத்தை	போது	(வருகைக்குக் குறிப்பிட்டுச் சொன்ன) காலத்தை
இட்டு	சாத்திக்கொண்டு,	மறந்து	அதிக்ரமித்து
கலிங்கம்	கறுப்புத் திருப்பரியட்டத்தை	புறமே	பின்புறத்தில்
உடுத்து	தரித்துக்கொண்டு,	ஏதுக்கு	எதுக்காக
தாது	இதழ்களையுடைத்தாய்	வந்து நின்றீர்	வந்துநின்றீர்?
நல்ல	விலக்ஷணமாய்	இது என்	இதென்னகாரியம்;
தண்	குளிர்ந்த		இது என்? இது என்னோ! (க)
அம்	அழகிய		
துழாய்கொடு	திருத்துழாய் மாலையைக்கொண்டு		

வ்யா;—முதற்பாட்டு. (காதில் கடிப்பிட்டு) பெண்களோடே ஸம்ஶ்லேஷிக்க வருகிறவன் கடிப்பிட்டு வருகையாவதென்னென்னில்; பால்யாவஸ்த்தையில் பிடிகொடாதே தீம்பில் கைவளர்ந்து திரிகையாலே காதுகுத்த அவஸரமில்லை; பின்பு பருவம் நிறைந்து விளையாடப்புக்கவாறே பெண்களுடைய "விடுகாதழகியார்" என்றும், "சொணையழகியார்" என்றும் சொல்லுகிற க்ஷேபவசநம் பொறுக்கமாட்டாமையாலே பின்புகாணும் காதுகுத்தப்புக்கது. அதுபெருக்கிவரப் பற்றுகிறதில்லைகாணும்.

அந;—முதற்பாட்டு. (காதிலித்யாதி) (க) "காதில்கடிப்பை நோவத்திரிகிலுணக்கிங்கு இருக்குற்றென்காதுகள் நொந்திடுகில்லேன்" என்றத்தைத் திருவுள்ளத்திலே வைத்துக்கொண்டருளுகிறார் (பால்யேத்யாதி). (உ) "கையில்திரியை இடுகிடாயிந்நின்ற காரிகையார் சிரியாமே" என்ற தாய்வாய்சொல் தன் நெஞ்சுக்கேற அநுபூதமானவாறே காதில்கடிப்பிட ஒருப்பட்டானென்கிறார் (பின்பித்யாதி). ஆனால் (௩) "மகரக்குழைகொண்டு வைத்தேன்" என்றாளே; காதுபெருக்கி * மகரநெடுங் குழைக்காதனாயன்றோவர அடுப்பது. கடிப்பிட்டுவரவேண்டுவானென்னென்ன வருளுகிறார் (அதித்யாதி). கடிப்பிட்டதுக்கே போதுமறித்ததாய் குற்றமாய்விழச்செய்தே, மகரக்குழையிட்டு வருமளவுதாழ்த்தால் முகம்பெறவிரகுண்டோவென்று கருத்து.

(க) பெரி-தி-உ-௩-௧உ. (உ) பெரி-தி-உ-௩-௯. (௩) பெரி-தி-உ-௩-௩.

"காதில்" என்கையாலே வெறும்புறத்திலே பெண்பிறந்தாரை அநங்யார்ஹைகளாக்கிக் கொள்ளவற்றாயிற்று. அதுக்குமேலே கடிப்பையுமிட்டானாயிற்று. யுவாக்களாயிருப்பார்க்கு ஆராட்சிதோற்றச்செய்யும் செயலாயிற்று. (கலிங்கமுடுத்து) நல்லபுடவைகளையும் உடுக்கமாட்டாதவர்கள் உடுக்கப்புக்கவாறே பொல்லாதாயிருக்குமாயிற்று. அங்ஙனன்றிக்கே, உடைவாய்ப்பாலே நெஞ்சுபிணிப்புண்ணும்படியாகவாயிற்று உடுப்பது. (தாதுநல்ல) பரிமளத்தையும் செவ்வியையும் குளிர்த்தியையுமுடைத்தான திருத்துழாய் மாலையை முடிக்கவல்லன்; முடித்தவாறே கண்ணுக்கு ஆகர்ஷகமாயிருக்குமிறே.

(போதுமறுத்து) காலத்தைத் தப்பினானாயிற்று, ஒப்பித்துவரவேண்டுகையாலே. இவர்களுக்குஉடலாக ஒப்பிக்கிறத்தோடு இவர்களோடே ஸம்ஶ்லேஷிக்கிறத்தோடு வாசியென்னென்றாயிற்று அவன்படி. இருந்தபடியே உகக்கிற எங்களுக்கு ஒப்பிக்கவேணுமோ? புதியநிலங்களை அழிக்கைக்காகவன்றோ என்றாயிற்று இவர்கள்படி. கிட்டிவரச்செய்தேயும் காலத்தைத் தப்பிவருகையாலே ஓரடியிலே பத்தடியிட்டானாயிற்று. (நின்றீர்) ஸாபராதனாகையாலே கிட்டி

கடிப்பிட்டுவருவது காதிலன்றோ? மூக்கிலிடுவாருண்டோ? காதிலென்று விசேஷித்ததுக்குக்கருத்தென்னென்னவருளுகிறார்(காதிலித்யாதி). அவன்மிகவும் ஆகர்ஷகமாகக்கடிப்பிட்டுவந்தால், இதுவுமொரு குற்றம்சொல்லுமாபோலே சொல்லக்கருத்தென்னென்ன வருளுகிறார் (யுவாக்களித்யாதி). (ஆராட்சி) என்றது-இத்தனைநாளும் காதுகுத்தப்பொறாத இவன் இன்றைக்காகவேயோ காதுகுத்திக்கடிப்பிட்டானென்று விசாரிக்கையென்கை. பெண்கள் ஏச காதில் கடிப்பிட்டானென்று நாலுபேரும் சொல்லும்படி நீ இருக்கைகுற்றமேயன்றோ வென்கிறாளென்று கருத்து. "கலிங்கம்" கறுப்புத்திரிப்பரியட்டமாய், இத்தை உடுத்தென்றதுக்கு பா (ஞா) வமேதென்ன வருளுகிறார் (நல்லவித்யாதி).

(காலத்தை) வருகிறேனென்று சொன்னகாலத்தை. காலம்தப்பும்படி ஒப்பிக்கவேணுமோ? ஏற்கவே ஒப்பிக்கலாகாதோ வென்ன வருளுகிறார் (இவர்களுக்கித்யாதி). ஆனால் அதுவேகுற்றமாக்கி இவர்கள் வெறுப்பானென்னென் ‴வருளுகிறார் (கிட்டியித்யாதி). ஆனால் நிற்பானென்னென்ன(ஸாபராதனித்

வரமாட்டுகிறிலன். ஆற்றாமையாலே புறம்புபோகமாட்டுகிறிலன். (எதுக்கிது) பசியில்கிடையாத சோறென்றிய. (என்னிதுவென்னிதுவென்னோ) ஒப்பித்துக் கொடுவரவேணுமோ?. காலத்தைத் தப்பிவரவேணுமோ? ஸாபராதனானால் மேல் விழவன்றோ வடுப்பது.

மூ;—துவராடையுடுத் தொருசெண்டுசிலுப்பிக்
கவராகமுடித்துக் கலிக்கச்சுக்கட்டிச்
சுவரார்கதவின்புறமே வந்துநின்றீர்
இவராரிதுவென்னிது வென்னிதுவென்னோ. (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
துவர் ஆடை	சிவப்பு நிறப்புடைவையொன்றை	கலி	வலியையுடைய
உடுத்து	திருவரையில் சாத்திக்கொண்டு	கச்சு	கச்சுப்பட்டையை
ஒரு செண்டு	ஒரு செண்டையும்	கட்டி	(திருவரையிலே) டிக்கொண்டு,
சிலுப்பி	(கையால்) சலிப்பித்துக்கொண்டு(திருக்குழல்களை)	சுவர் ஆர்	சுவரோடிணைந்த
கவராக	இரண்டு ப்ரகாரமாக	கதவின்புறமே	கதவின்பக்கமாக வந்துநின்றீர்;
முடித்து	முடித்துக்கொண்டு,	இவர் ஆர்	இங்ஙனே வந்து நின்றவர் ஆர் கொல்?
			இதுவென்! இதுவென்? இதுவென்னோ

வ்யா:—இரண்டாம்பாட்டு. (துவராடையித்யாதி) முற்படயாதி). ஆனால்நடக்கலாகாதோவென்ன வருளுகிறார் (ஆற்றாமையித்யாதி). (என்றிய)-கிமர்த்தம் என்றபடி; உன்உறவுக்கு ப்ரயோஜநமென்னென்றபடி. போது மறுத்துவந்தது-குற்றமானாப்போலே, நின்றதும் குற்றமென்று விவக்ஷித்து "என்னோ" என்கிறஸ்வரத்துக் குக்கருத்தருளுகிறார் (ஸாபராதனித்யாதி).

அ;—இரண்டாம்பாட்டு. (துவரித்யாதி). கீழ்ப்பாட்டிலே "எதுக்கிது வென்" என்று ப்ரணயரோஷம் முற்றினபடியைக்கண்டு நின்றநிலையிலே தானேவேறொரு வேஷம்கொண்டுஉள்ளேயுள்ளே ஓடும்படிகடந்துநிற்க, அதிலீடுபட்டு இன்னாரென்றறியாதே மயங்கி, பின்னையும் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"கலிங்கமுடுத்து" என்று சொல்லியிருக்க, "துவராடையுடுத்து" என்னக்கூடுமோ வென்னவருளுகிறார் (முற்படவித்யாதி). (சிவப்புநிறப்புடவை)

உடுத்ததுக்கு ஈடுபடாமையாலே அதுக்குமேலே ஒருசிவப்புநிறப் புடவைச் சிமிழ்த்துக்கொண்டு வந்தாளாயிற்று. (ஒருசெண்டுசிலுப்பி) புறம்பே அந்யபரனென்றுதோற்றுகைக்காகக் கையிலே ஒரு செண்டையும் சிலுப்பிக்கொடுவந்தானாயிற்று. (கவராகமுடித்து) கிண்ணகத்தில் இழிவாரைப்போலே மயிரைப்புகுந்துமுடித்து நழுக்தி, வலியுடைத்தான கச்சையிட்டுக்கட்டி.

(சுவரார்கதவின்புறமே வந்து) சுவரார்ந்தகதவுக்குப் புறமே வந்து, தள்ளவும் போகாதே நின்றானாயிற்று. ப்ரத்யபிஜ்ஞார்ஹமல்லாதகாலத்திலேவந்தார்இவர், அந்யபரதைபாவித்துவரவேணுமோ? கதவுக்குப்புறம்பே நிற்கவேணுமோ? தள்ளவும் போகாதொழியவேணுமோ? .... (௨)

மூ;—கருளக்கொடியொன்றுடையீர் தனிப்பாகீர்
உருளச்சகடமதுறக்கில் நிமிர்த்தீர்
மருளைக்கொடுபொடி வந்தில்லம்புகுந்தீர்
இருளத்திதுவென்னிது வென்னிதுவென்னோ. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஒன்று	அத்விதீயமான	உறக்கில்	கள்ளநித்திரை கொள்கின்ற காலத்திலே
கருளக்கொடி	கருடத்வஜத்தை	சகடம் அது	அஸுராவிஷ்டமான சகடமானது
உடையீர்	நிருபகமாக உடையவரே!	உருள	உருண்டு துகளாம்படி
தனி பாகீர்	(அந்தப் பெரியதிருவடியை) அத்விதீயமாக நடத்தவல்லவரே!,	நிமிர்த்தீர்	(திருவடியை) நிமிர்த்தருளினவரே!

என்றது-சிவப்புச்சாயமேற்றினபுடவை. (சிமிழ்த்துக்கொண்டு) சுற்றிக்கொண்டு. மயிரைப்பேணுகைக்கும் கச்சுக்கட்டுகைக்கும் தாத்பர்யமென்னென்ன வருளுகிறார் (கிண்ணகத்திலித்யாதி). ப்ரவாஹத்திலிழிவார் மயிரைப்பேணி கச்சுக்கட்டி உத்யுக்தராய்இறங்குமாபோலே, இவன் ஒருபோக (ஸு?) ப்ரவாஹத்திலிழிகைக்கு ஒருப்பாடு தோற்றி நின்றானென்கை.

(தள்ளவும்) என்றது - கதவைத்தள்ளவு மென்றபடி. அவனைத்தொட்டவளாகில் தள்ளமாட்டாளிறே. கீழே "வந்துநின்றீர்" என்றுவைத்து "இவரார்" என்கைகூடுமோவென்னவருளுகிறார் (ப்ரதயபிஜ்ஞேத்யாதி). அன்றிக்கே, ஸந்தேஹிக்கிறாளென்று விவக்ஷித்தருளுகிறார் (ப்ரத்யபிஜ்ஞேத்யாதி). (கதவுக்குப் புறம்பே) என்றது-சுவரோடே சேர்ந்தகதவுக்கும் வாசற்படிக்கும் நடுவே என்கை. ... ... (௨)

இருளத்து	இராக்காலத்திலே	இல்லம்	அகத்துக்குள்ளே
மருளை	(பெண்பிறந்தாரை) மயக்கவல்லபாட்டை	புகுந்தீர்	ப்ரவேசித்தீரே!;
பாடிக்கொடு வந்து	(மெள்ளப்) பாடிக்கொண்டு வந்து	இதுவென்? இதுவென்? இதுவென்[னோ?	(ச)

வ்யா;—மூன்றாம்பாட்டு (கருளக்கொடி) ஜகத்ப்ரஸித்தராயிருப்பார் அப்ரஸித்தரைப்போலே வரக்கடவதோ?. (தனிப்பாகீர்) எல்லார் பக்கலிலும் பண்ணும் ரக்ஷணமடைய அவரொருவனுக்குமே பண்ணவேண்டும்படியன்றோ உமக்கிருக்கிறது. (உருளச்சகடம்) அதிஸாஹஸங்களையன்றோ நீர்செய்வது. அஸுராவேசத்தாலே நின்ற சகடம் முலைவரவு தாழ்த்தவாறே சீறி நிமிர்த்ததிருவடிகளுக்கு இலக்காய்த்துகளாய்ப் போயிற்று.

(மருளை) பெண்பிறந்தாரடைய நஞ்சுண்டாரைப்போலே மோஹிக்கும்படியாகப் பண்ணை நனுங்கிக்கொண்டுவந்து ராத்ரியிலே, ப்ரஸித்தராயிருப்பார் அப்ரஸித்தரைப்போலே வரக்கடவதோ?; பண்ணைநனுங்கிக்கொடுவரக்கடவதோ?; ராத்ரியிலேவரக்கடவதோ?.

மூ;—நாமம்பலவுமுடை நாரணநம்பீ
தாமத்துளவம் மிக நாறிடுகின்றீர்
காமனெனப்பாடிவந் தில்லம்புகுந்தீர்
ஏமத்திதுவென்னிது வென்னிதுவென்னோ. (ச)

அந;—மூன்றாம்பாட்டு. (கருளவித்யாதி) கீழ்ப்பாட்டில் வாசல்படிக்குள்ளே அடியிட்டவளவிலே தயிர் கடையமாட்டாதே யிருக்கக்கண்டு கண்ணுக்கு இருண்டவாறே உள்ளேபுக, அத்தைக்கண்டு அவள் "கள்ளனைப்போலே வருகை-கொடிகட்டிக்கொண்டிருக்கிற உமக்கு உசிதமோ" என்கிறாளென்று ஸங்கதி.

"கருளத்தனிப்பாகீர்" என்றநவயித்து அவ்வருகுமேற்கொள்ளுகை ரக்ஷணமென்று தாத்பர்யமென்றருளுகிறார் (எல்லாரித்யாதி). நான் உங்கள் வீட்டுக்கு அடியிட்டுவர, என்னை கருளப்பாகனுகச் சொல்லுகிறதென்னென்னும் ப்ரஶ்நத்திலே "உருளவித்யாதி" என்றுவிவக்ஷித்தருளுகிறார் (அதிஸாஹஸேத்யாதி). அதாவது - திருவடிமேலே வருதி; நீர்அடியிட்டுவருகை ஸாஹஸம். இது உனக்கு அடியே பிடித்து உண்டென்று கருத்தென்கை.

"மருளை, மருளப்பண்ணும்பாட்டை-பாடிக்கொண்டு" என்றநவயித்து அர்த்த மருளுகிறார் (பண்ணித்யாதி). (நனுங்குகை) மெள்ளப்பாடுகை. ... (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நாமம்பலவும்உடை	ஸஹஸ்ர நாமங்களையுடைய	ஏமத்து	இராக்காலத்திலே
நாரண நம்பீ	ஒன்றாலும் குறைவில்லாத ஸ்ரீமந்நாராயணனே!,	காமன் என	"மந்மதனேஇவன்' ன்னும்படியாக
துளவத்தாமம்	திருத்துழாய் மாலையாலே	பாடி	பாட்டைப்பாடிக்கொண்டு
மிக	மூக்கறும்படி	வந்து	(அரணையழித்து)வந்து
நாறிடுகின்றீர்	வாஸித்துப்போராநின்றீர்;	இல்லம்	அகத்துக்குள்ளே
		புகுந்தீர்	ப்ரவேசித்தீரே!;

இதுஎன்? இதுஎன்? இதுஎன்னோ?.

வ்யா;—நாலாம்பாட்டு. (நாமம்பலவுமுடை நாரணநம்பீ) "இன்னாருக்குசேஷபூதன், இன்னாருக்கு சேஷபூதன்" என்று நீ படைத்தபேருக்கு எல்லையுண்டோ? சொல்லவேணுமோ? நீர் ஊர் பொது வல்லீரோ? நீர்நிரபேக்ஷரல்லீரோ?. (தாமமித்யாதி) கலக்க வருவார் மாணிகைச்சாந்து நாற்றத்தோடேயோ வருவது.

(காமனெனப்பாடிவந்து) காமன் பாட்டாலே பெண்களை

அ௫;—நாலாம்பாட்டு. (நாமமித்யாதி) கீழ்ப்பாட்டிலே மருளைக் கொடு பாடினபடியைச்சொல்லுகிறவிடத்தில், "பெண்பிறந்தாரை யெல்லாம் பிச்சேற்றுமவன்"என்று சொல்லக்கேட்டு "நான் உன்னையல்லதுவேறு அறிவனோ" என்று நின்றுகொண்டு பெருந்தானத்திலே பாடத் துடங்கினான். அதிலே ஈடுபட்டு மாமிமார் முதலானாரறிய இப்படி பாடுவாருண்டோ என்று அதுவே குற்றமாக்கிச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

நாராயணபதத்துக்கு பஹுவ்ரீஹி ஸமாஸபலித ஸௌலப்யத்தைப் பற்ற ஒரு தாத்பர்யமருளிச்செய்து, தத்புருஷ ஸமாஸபலித பரத்வத்தைப் பற்ற வருளுகிறார் (நீர்நிரபேக்ஷரல்லீரோ) என்று. "மிக" என்கையாலே துளவத்துக்குள்ள பரிமளமேயன்றிக்கே, பெண்களுடைய கொங்கைத்தலத்தின் கோயில் சாந்து நாறுநின்றதென்று சொன்னமை தோற்றுகையாலே அருளுகிறார் (கலக்கவித்யாதி). இங்கே கலக்கவரும் போது இட்டமாலை சருகாயன்றோ இருக்கவேண்டுவது என்று கருத்து.

இப்படி அவள் "குறிகள் காணத்துடங்கினாள்"என்று மிகவும் மருளேற்ற வேணுமென்று பாடத்துடங்க, அதுதானும்அகத்தார் அறியில் குற்றமாமென்று அதுக்கு வெறுக்கிறாளென்று தாத்பர்யமருளுகிறார் (காமனித்யாதி). (ச)

வருத்துமாபோலேயாயிற்று, இவனும் ஈடுபடுத்தினபடி. (ஏமத்து) அரணழித்துவருவார் ஆதரமுடையாரன்றோ? பூர்ணராயிருப்பார் அபூர்ணரைப்போலே வரக்கடவதோ? கலக்கவருவார் அப்ரஸித்தமாகவன்றோவருவது; அரணழித்து வரவேணுமோ?. .... (௪)

மூ;—சுற்றும்குழல்தாழச் சுரிகையணைத்து
மற்றும்பலமாமணி பொன்கொடணிந்து
முற்றம்புகுந்து முறுவல்செய்து நின்றீர்
எற்றுக்கிதுவென்னிது வென்னிதுவென்னே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குழல்	திருக்குழல்களானவை	பொன்	திருவாபரணங்களையும்
சுற்றும்	பிடரியைச்சுற்றிலும்	அணிந்துகொடு	சாத்திக்கொண்டு
தாழ	தாழ்ந்தலைய, (அழகுக்குடலாக)	முற்றம்புகுந்து	எங்களகத்து முற்றத்துள்ளே புகுந்து
சுரிகை	உடைவாளை,	முறுவல்செய்து	மந்தஸ்மிதம் பண்ணிக்கொண்டு
அணைத்து	தரித்துக்கொண்டு,	நின்றீர்	நில்லாநின்றீர்;
மற்றும்	மற்றுமுள்ள	எற்றுக்கு	இது எதுக்காக?;
பல	பலவகைப்பட்ட	இது என்? இதுஎன்? இது என்னே?.	
மா	பெருவிலையுள்ள		
மணி	ரத்நங்களால் சமைக்கப்பட்ட		

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (சுற்றும்குழல்தாழ) மயிர்முடித்து அதில் ஈடுபடாமையாலே, குழலைப்பேணாதே வந்தானாயிற்று. (சுரிகையணைத்து) உகப்பார்க்கும் உகவாதார்க்கும் கருவி ஒன்றாயிற்று. சத்ருக்களை இருதுண்டமாகவிட்டு முடிக்கும்; அநுகூலரை அழகாலே கொல்லும். (மற்றும்பலமாமணி) ஆபரணகோடியோடொக்கச்

அரு;—அஞ்சாம்பாட்டு. (சுற்றுமித்யாதி) கீழ்ப்பாட்டிலே காமனெனப்பாடின பாட்டுக்கு இசையாதே, இப்படி பாடுகை ஏதென்னச்சொல்லுகையாலே, அத்தைவிட்டு, சிறுப்பிள்ளைப்பருவம் தோற்ற எட்டுமெட்டாத திருக்குழலோடே மெள்ளவடியிட்டு முற்றத்திலே போகப்பெற்றதாலே க்ருதார்த்தனாய்முறுவல்செய்து நிற்க, "இவன் க்ருதார்த்தனைப்போலேமுறுவல்செய்தான்; இதென்ன" என்று அத்தையும் வெறுக்கிறாளென்று ஸங்கதி.

கீழே "கவராகமுடித்து" என்றிருக்க, இங்கே "குழல்தாழ" என்னக்கூடுமோவென்ன வருளுகிறார், மயிரித்யாதி). (கருவி) ஸாதநம். இப்போது சுரிகைக்கு ப்ரயோஜநமென்னென்ன (ஆபரணேத்யாதி).

சொல்லுகையாலே அதுவும் அழகுக்கு உடலாமத்தனை. பெரு விலையனான ரத்நங்களையுடைத்தான திருவாபரணங்களைச்சாத்தி.

(முற்றம்புகுந்து) (௧) "ஸஸ்த்ரைவ - கஸ்த்தஏவ வ்யதிஷ்ட்டத" போலே. (முறுவலித்யாதி) புக்கவயஸ்ஸுக்கு மரணமில்லையிறே யென்றிருந்தானாயிற்று. (முறுவல்செய்து) எங்களையும் தோற்பித்தாலன்றோ உனக்கு இதுவெற்றியாவதும். (எற்றுக்கிது) மயிர்முடிபேணாதேவரவேணுமோ? ஆயுதத்தோடே வரவேணுமோ? பின்னை வெற்றிகொண்டாடி நிற்கவேணுமோ?. .... (ரு)

மூ;—ஆனுயருமாநிரையு மங்கொழியக்
கூனுயதோர்கொற்ற வில்லொன்றுகையேந்திப்
போனாரிருந்தாரையும் பார்த்துப்புகுதீர்
ஏனோர்கள்முன்னென்னிது வென்னிதுவென்னோ. (சு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஆன் ஆயரும்	கோரக்ஷணபரரான இடையர்களும்	ஏந்தி	ஏந்திக்கொண்டு,
ஆநிரையும்	பசுக்களின் திரளும்	போனார்	போகுமவர்களையும்
அங்கு ஒழிய	இங்கின்றிக்கே வேறிடத்திலே கிடக்க,	இருந்தாரையும்	இருக்குமவர்களையும்
கூனுயது	வளைந்திருப்பதுமாய்	பார்த்து	(மெள்ள மெள்ளப்) பார்த்துக்கொண்டு
கொற்றம்	ஐஶ்வர்ய ஸூசகமுமா[ய்	புகுதீர்	உள்ளே புகாநின்றீர்;
ஓர்	ஒப்பற்றதுமான	ஏனோர்கள்	போக (ப்ரதிகூல) விரோதிகளாயிருப்பார் மு
வில் ஒன்று	ஒரு தநுஸ்ஸை	முன்	ன்னே
கை	திருக்கையிலே	என் இது என்? இது என்னோ? (சு)	

இத்தனை ஒப்பனையோடே வருமவன் முற்றத்திலே நிற்பானென்? உள்ளே புகலாமேஎன்ன; இவ்வொப்பனைக்கு அவர்கள் ஒப்பமிட்டாலிறே உள்ளே புகுரலாவது; என்று ஸ்ரீவிபீஷணாழ்வான் அநுமதிஸாபேக்ஷராய் நின்றாப்போலே நின்றானென்கிறார் (௧(ஸ)ஸ்த்தஇத்யாதி). உள்ளேபுகப் பெறாதே முற்றத்திலே நிற்பானுக்கு முறுவல்வர ப்ரஸங்கமென்னென்ன வருளுகிறார் (புக்கவித்யாதி). "மரணபயம் கீழ்நாளிலே உண்டாகாதே ஜீவித்தோமே, இனிமேலேஅன்றோ உள்ளது" என்றுஸந்துஷ்டராயிருப்பாரைப் போலே "கதவையடைத்துப் புறத்திண்ணையிலே கிடவாதே, முற்றத்திலே இவர்களைப்பார்த்துக்கொண்டு நிற்கப்பெற்றோமே" என்றுசிரித்திருந்தானென்று கருத்து. அவன் முறுவல்தானே இவர்களுக்கு அறமுருடுபண்ணுகைக்கு உடலாயிற்றென்றருளுகிறார் (எங்களையுமித்யாதி). (நிற்கவேணுமோ) என்றநந்தரம், "சொன்னபோது தப்பாதே வந்தாலாகாதோ" என்றுசேஷம். (ரு)

(௧) ரா-யு-௧௭-௧௰.

வ்யா;—ஆறும்பாட்டு. (ஆளுயரும்) உம்மையொழியச் செல்லாதார்க்கன்றோநீர் உதவுவது. வ்யதிரேகத்தில் முடியும் பதார்த்தங்களையன்றோ நீர் ரக்ஷிப்பது. (கூறுயதோர் கொற்றவில்லொன்று கையேந்தி) நரம்புபடைத்து வளைந்து ஐஶ்வர்யஸூசகமான வில்லை ஏந்தி. ப்ரணயிநிபக்கல் ஆயுதங்களெல்லாம்கொண்டுவரவேண்டாவே.

(போனாரிருந்தாரையும் பார்த்து) உமக்கு முன்னடி தோற்றுதிற்ற. இருந்தாரையும் போனாரையும் தெரியாதிறே. (ஏனோர்கள் முன்) சத்ருக்கள் முன்பே. உமக்காசையில்லையிறே. பழிவிளைக்கை

அரு;—ஆறும்பாட்டு. (ஆளுயரித்யாதி) கீழ்ப்பாட்டில் முறுவலாலே மிகவும் ஊடல் தலையெடுத்துநிற்க, "தம்குணம் காணாதாரையெல்லாம்வணங்கப்பண்ணுவது வில்லிறே" என்று, (௧) 'चापमानय - சாபமாநய' என்று கைகண்டவராகையாலே, 'காலைப்பிடித்து உள்ளே புகக்கடவோம்' என்னும் சங்கையின்றிக்கே, இருந்தாரையும் போனாரையுமெண்ணாதே புகுகிற நீர் இங்கே ஆரைரக்ஷிக்கவருகிறீர்; ரக்ஷ்யவர்க்கம் உமக்கு அங்கேயிருக்க, புகுவானேன்" என்று வெறுக்கிறாளென்று ஸங்கதி.

"ஆளுயரும் ஆநிரையும் உம்மையொழிய அங்குநிற்க" என்றந்வயம் திருவுள்ளம்பற்றித் தாத்பர்யமருளுகிறார் (உம்மையித்யாதி). விவரணம் (வ்யதிரேகத்திலித்யாதி). நீ, சொன்னபோது வாராதிருக்கவும்பிழைத்திருந்த எங்களை ரக்ஷிக்கவந்தாயோ? என்று கருத்து. நரம்புடைத்தானவில்லை நாணேறிட்டுக் கையும் வில்லுமாய்நின்ற அழகில் ஈடுபடவேணுமென்று அவன்வர, இவளுக்கு அதுவே குற்றமாய், யுத்தரங்கத்தில் வேண்டின செயலை அந்தரங்கத்திலே செய்யாநின்றாய், அது என்னபிச்சென்கிறாளென்று தாத்பர்யம். (ப்ரணயீத்யாதி).

பழிவிளைக்கப்போனாரையும், மேல்நடக்கிறகார்யமாய் இருக்கிற நாத்தனார் முதலானாரையும் பார்த்துப்புகுகையாலே, உனக்குக்கண்ணும் நெஞ்சும்எங்கே ஓடுகிறதென்று சொல்லுகிறாளென்று விவக்ஷித்தருளுகிறார் (உமக்கித்யாதி). "தங்கள் தங்கள் கார்யங்களுக்குப் போவாரும் இருப்பாருமாயிரார்களோ; இதுவும் குற்றமாகவேணுமோ?. நீ அறியாயோ 'படிறன்படிறு செய்தான்' என்று பூசலிடுவாரை. இப்போது அவர்கள்முன்னேவருகை நல்லதுக்கோ? எங்களைப் பொடியவேணும் என்றன்றோவருவது" என்னும் பாவத்தாலே "ஏனோர்கள் முன்" என்கிறாளென்றருளுகிறார் (உமக்கித்யாதி). ... ... (௬)

---

(௧) ரா-யு--௨௧-௨௨.

க்கு வேண்டுவதேயிறே உள்ளது. (என்னிதுவித்யாதி) வ்யதிரேகத்தில் முடிவார்க்கன்றோ நீ உதவுவது. ப்ரணயிநிபக்கல் ஆயுதத்தோடே வரவேணுமோ? இடமறிந்தன்றோவருவது. .... (௬)

மூ;—மல்லேபொருததிரடோள் மணவாளீர்
அல்லேயறிந்தோம் நும்மனத்தின்கருத்தைச்
சொல்லாதொழியீர் சொன்னபோதினால்வாரீர்
எல்லேயிதுவென்னிது வென்னிதுவென்னோ. (௭)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்	மல்லர்களோடே	சொன்னபோ	அப்படி குறிப்பிட்டுச்
பொருத	போர்செய்த	தினால்	சொன்னகாலம் கடவாதபடி
திரள்	திரண்ட	வாரீர்	வருகிறீருமில்லை ;
தோள்	பு(bhu)ஜங்களையுடைய	எல்லே	இதோராஶ்சர்யமே!;
மணவாளீர்	மணவாளப்பிள்ளாய் !	இது என்	ஸ்வதந்த்ரரான நீர் பரதந்த்ரரைப்போலே காலம்குறிப்பிட்டுப் போகிறதென்?
நும்	உம்முடைய	இது என்	குறித்த காலத்தில் வாராதொழிந்ததென்!
மனத்தின்	ஹ்ருதயத்திலுள்ள	இது என்னோ	நிரபராதரைப் போலே நிர்ப்பயமாய் நிற்கிறபடியென்? (௭)
கருத்தை	அபிப்ராயத்தை		
அல்லே	நேற்றிரவு (ஸம்ஶ்லேஷிக்கும்போதே)		
அறிந்தோம்	அறிந்துகொண்டோம் ;		
சொல்லாது	(இன்னபோது வருவேனென்றொரு குறிப்பிட்டுச்) சொல்லா		
ஒழியீர்	போகிறீரில்லை ; [மல்		

வ்யா;—ஏழாம்பாட்டு. (மல்லேயித்யாதி) முருடராயிருப்பாரன்றோ உம்முடைய செவ்விக்கு இட்டுப்பிறந்தவர்கள். ஆசையுடை

அரு;—ஏழாம்பாட்டு. (மல்லேயித்யாதி) கீழ்ப்பாட்டிலே எங்களுக்கு அவத்யத்தை விளைக்கவேணுமென்று வந்தீரென்று குற்றம்சொல்ல, இனி இதுக்கு மறுமாற்றமுண்டோவென்று கவிழ்ந்துகொடு, "நீங்கள் இத்தனை வெறுக்க நாம்செய்தகுற்றமென்" என்றுகேட்கமாட்டாமலிருக்க, அதுபொறுக்கமாட்டாதே வில்வழியே தோளழகிலே கண்வைத்து ப்ரணயம் விஞ்சின ரோஷகாரணத்தையும் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"மல்லரோடே பொருததிரண்டதோளையுடையமணவாளப்பிள்ளை" என்று சப்தார்த்தமாய், உபகாரதாத்பர்யமருளுகிறார் (முருடரித்யாதி). "அல்லே"-

யார்க்குக்கிடையாதிறே. (அல்லேயித்யாதி) இரவுகலக்கிறபோதே "நினைவொன்றும், செயலொன்றுமாயிருந்தது" என்னு மிடமறிந்தோம்.

(சொல்லாதொழியீர் சொன்னபோதினால் வாரீர்) உம்மை நீரறிந்தால் காலத்தைக் குறித்தோபோவது. எங்களையறிந்தால் சொன்னபோதிலேவரவேண்டாவோ?(எல்லே) உறவுமுறையாரைப் போலே நீர்கவிழ்ந்திருக்கிறதென். இங்கேவாரீர். (இதுவென்னிது) உம்மை நீர் அறியவேண்டாவோ ?, எங்களை அறியவேண்டாவோ?

மூ;—புக்காடரவம் பிடித்தாட்டும் புனிதீர்
இக்காலங்கள் யாமுமக்கேதொன்றுமல்லோம்
தக்கார்பலர்தேவிமார் சாலவுடையீர்
எக்கேயிதுவென்னிது வென்னிதுவென்னோ. (அ)

பதம்	உரை.	பதம்.	உரை.
புக்கு	பொய்கையிலே ஏறப் பாய்ந்து,	ஏதொன்றும் அல்லோம்	ஒரு சரக்காகவு மெண்ணப்படுகிறிலோம்;
ஆடு அரவம்	படமெடுத்தாடா நின்றகாளிய நாகத்தை	தக்கார்	(உமக்குத்) தகுந்திருப்பவர்களாய்
பிடித்து	பிடித்து	பலர்	அளவற்றவர்களுமான
ஆட்டும்	(அதன் உயிர்வாடும்படி) ஆட்டின	தேவிமார்	மஹிஷிகளை
		சால	பெரும்பாலும்
புனிதீர்	பா(வ)வசுத்தியை யுடையவரே!	உடையீர்	பட்டங்கட்டி வைத்திராநின்றீர்;
இக்காலங்கள்	இப்போது	எக்கே	இது என்ன கஷ்டம்!;
யாம்	நாங்கள்	இதுஎன்?, இதுஎன்?, இதுஎன்னோ?.	
உமக்கு	உமக்கு		

முன்பேகலக்கிற ராத்ரியிலே தானே, * நகரஸ்த்ரீ கலாலாபாம்ருத பாநார்த்தமாக "முருடர்" என்றுபாராதே ஸுகுமாரமான திருத்தோள்களைக் கொண்டு அவர்கள்கண்டு மகிழவேணுமென்றுபோக ஒருப்பட்ட கள்ளத்தன மறிந்தோமென்கிறுளென்று விவக்ஷித்தருளுகிறுர் (இரவித்யாதி).

"உம்மைஅறிந்தால்" என்றதுக்கு நகரஸ்த்ரீகள் பக்கல்போகவேணுமென்று மறைத்துக்கொண்டிருக்கிற கபடந்தானறியிலென்றபடி. "எல்லே" என்றுஸம் போதிக்கைக்கு இத்தாத்பர்ய மருளுகிறுர் (உறவித்யாதி). (வாரீர்) வாராதே போனீரென்றபடி. ... ... (எ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (புக்காடரவம்) ப்ரமாதத்தாலே காலிலே தட்டுகையன்றிக்கே அதின்மேலேபாய்ந்து ஸாஹஸமான செயல்களன்றோ நீர் செய்யுமவை. இடையர்க்கும் இடைச்சிகளுக்குமுண்டான ரக்ஷணத்திலன்றோ நீர் சுத்தபா(ஞ)வராய்ப் பரிமாறுவது. (இக்காலங்கள்) எனக்கு உங்களை யொழியவும் வேறே சிலருண்டோவென்றான்; அதெல்லாம் பண்டைக்காலத்தில் வார்த்தையன்றோ என்கிறாள்.

நான் வேறேயும் சிலரைஅறிவேனோவென்ன; உமக்கு ஸத்ருஶராயிருப்பார் பலருமில்லையோ?. இது தன்னைக் கொண்டாடுமவர்களன்றோ அவர்கள். (எக்கே) இதுவென்ன கஷ்டமோ? ஸாஹஸங்களைச் செய்யக்கடவநீர் இங்குவந்தென்? குறைவற்ற நீர் இங்கு வந்தென்? மேன்மையுடையார் வரக்கடவதோ? .... (அ)

மூ;—ஆடியசைந் தாய்மடவாரொடு நீபோய்க்
கூடிக்குரவைபிணை கோமளப்பிள்ளாய்
தேடித்திருமாமகள் மண்மகள்நிற்ப
ஏடீயிதுவென்னிதுவென்னிது வென்னோ?. (௯)

பதம்.	உரை.
திருமாமகள்	பெரிய பிராட்டியாரும்
மண்மகள்	ஸ்ரீ பூமிப்பிராட்டியும்
தேடிநிற்ப	தேடிக்கொண்டிருக்க,
நீபோய்	நீ அவர்களை அகன்று போய்
ஆய்மடவாரொடு	ப(ஃ)வ்யைகளான இடைப் பெண்களோ
கூடி	ஸம்ஶ்லேஷித்து [டே
ஆடி அசைந்து	ஆடி அசைந்து
குரவைபிணை	திருக்குரவைகோத்த
கோமளப்பிள்ளாய்	அழகியபிள்ளாய்! (என்று மற்றும் சில வார்த்தைசொல்வதற்கு முன்காலைப்பிடிக்க)
ஏடீ	வாராய்தோழீ!
இது என்	இவரை உள்ளே புகரவிட்டதென்?

இது என்? இது என்? என்கிறாள். (௯)

அநு;—எட்டாம்பாட்டு. (புக்காடரவமித்யாதி) "சொன்னபடியே வரப்போமோ? ப்ராமாதிகத்துக்குப் பொறுத்துக்கொள்ள வேண்டாவோ?நான் இத்தனைஸாஹஸத்திலே ஒருப்படுவேனோ? எனக்குவேறே சிலர்தானுண்டோ உங்களையொழிய" என்று சிலவிநயபாஷணங்களைப்பண்ண, அவ்வார்த்தைகள் ரோஷநிவர்த்தகங்களாகையாலே நொந்து கொள்ளுகிறாளென்று ஸங்கதி.

(இது தன்னை)எங்களைவிட்டிருக்கிறத்தை. விவரணம் (மேன்மையித்யாதி).

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (ஆடியசைந்து) (திருமாமகள் மண்மகள் தேடிநிற்ப) (௧) "அகலகில்லேனிறையும்" என்று அவர்கள் ஆசைப்பட்டுநிற்க. "ஆய்மடவாரோடேகூடி ஆடி அசைந்துகுரவை பிணைக்கோமளப்பிள்ளாய்" என்றதுக்குக்கருத்து - ஒருவார்த்தை சொல்லுவர்களாக நினைத்து, "வ்யதிரேகத்தால் தரியாதவர்களிருக்க, உன்னைக்கொண்டு கார்யமின்றிக்கே யிருப்பார்க்கன்றோ நீ உதவுவது". என்று சொல்லப்புக்காள்; "இவ்வார்த்தை சொல்வித் தலைக்கட்டினால் பின்னை தனக்கு அவகாசமறும்" என்று பார்த்து அதுக்கு முன்னே காலைப்பிடித்தான்; (ஏடீ) என்று - தோழியைப்பார்த்து "நீயன்றோ புகுரவிட்டுக்கொடுத்தாய்" என்கிறாள். அவன் அதுக்குமேலே சிலவிநயாதிப்ரஸங்கங்களைப் பண்ணினான். (இதுவென்) காலைப்பிடிக்கிறதென்? மார்வத்தெழுத்தென்கிறதென்? வாயிதுவிரலென்கிறதென் ?. (௯)

மூ;—அல்லிக்கமலக்கண்ணனை யங்கோராய்ச்சி
எல்லிப்பொழுதாடியவூடல் திறத்தைக்
கல்லின்மலிதோள் கலியன்சொன்னமாலை
சொல்லித்துதிப்பாரவர் துக்கமிலரே. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அல்லி	தாதுகளையுடைய	கண்ணனை	திருக்கண்களையுடைய
கமலம்	தாமரைப்பூப்போன்ற		கண்ணபிரானை

அரு;—ஒன்பதாம்பாட்டு. (ஆடியித்யாதி) கீழ்ப்பாட்டிலே "பலதேவிமார் சாலவுடையீர்" என்றவிதுக்கு வழியுண்டோ? நீங்கள்ரோஷத்தாலே கல்பிக்கிறவித்தனையிறே" என்றான்; அதுக்கு "நித்யாநபாயிநிகளையும்விட்டு எங்களை விரும்பினதில்லையோ? ராஸக்ரீடை பண்ணினதுபொய்யோ?" என்று மூதலித்துவிடவேணுமென்று அத்தைச்சொல்லி ஸம்போதிக்கிறாளென்று ஸங்கதி.

"குரவைபிணைந்த கோமளப்பிள்ளாய்" என்றுஸம்போதித்து, மேலொரு வார்த்தையும் சொல்லாதே, தோழியை ஸம்போதிக்கைக்கு ஸங்கதியருளுகிறார் (வ்யதிரேகத்தாலித்யாதி). விநயாதிப்ரஸங்கத்தை வெளியிடுகிறார் (மார்வத்தித்யாதி). "उरोविन्यस्तमक्षरम् - உரோவிந்யஸ்த மக்ஷரம்" என்கிறபடியே எழுதிக்கொள்ளுகிறேன், காலில் பெருவிரலைக்கவ்வுகிறேன்" என்கிற உக்திகளென்று கருத்து. ... ... (௯)

(௧) தி-வாய்-௬-௧0-௧0.

அங்கு	அங்கு	தோள்	திருத்தோள்களையுடை
ஓர்ஆய்ச்சி	ஓரிடைச்சி	கலியன்	ஆழ்வார் [யரான
எல்லிப்பொழுது	இராக்காலத்தில் [பேசின	சொன்ன	அருளிச்செய்த
ஊடிய	ப்ரணய கலஹமாகப்	மாலை	சப்தஸந்தர்ப்பரூபமான இப்பத்துப் பாட்டையும்
ஊடல் திறத்தை	வெறுப்பு வார்த்தை விஷயமாக,	சொல்லி	(வாயாலே) சொல்லி
கல்லில்	மலையைக்காட்டிலும்	துதிப்பாரவர்	எம்பெருமானை ஏத்துமவர்கள்
மலி	அதிசயித்த (பலமுடைய)	துக்கம் இலரே	துன்பமற்று வாழப்பெறுவர்கள். (௧௦)

வ்யா;—பத்தாம்பாட்டு. (அல்லிக்கமலக்கண்ணனை) அரைக்ஷணம் மாறிநிற்கில் கண்ணுஞ்சுழலை யிடும்படியான நோக்கையுடையவன். (அங்கோராய்ச்சி) அவன்தன்னை நூறுபட்டினி கொள்ளுமவளாயிற்று. (எல்லிப்பொழுதூடிய வூடல்திறத்தை) விலக்குவாரில்லாதகாலத்திலே ஈடுபட்டு உரைத்த மஹாபாரதப்பரப்பை. (கல்லின் மலிதோள்) விநயாதி ப்ரஸங்கங்களுக்கெல்லாம் பாடாற்றின தோள் வலியையுடையவர். (சொல்லித்துதிப்பார்) இவருடைய பா(ஞ)வவ்ருத்தி உண்டாகாதிறே. (துக்கமிலர்) அவன்தான்வந்து மேல்விழச்செய்தேயும் இவர்களுக்கு பா(ஞ)வபந்தம் கனத்திருக்கச்செய்தேயும் ஏறிட்டுக்கொண்ட ஸங்கல்பம் குலையாதபடி நின்றதொரு நிலையுண்டிறே. இதுகற்றூர்க்கு அந்தமிறுக்கில்லை. .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாம்பத்து எட்டாந்திருமொழி முற்றிற்று.

அரு;—பத்தாம்பாட்டு. (அல்லியித்யாதி) "ஓர்"என்றதுக்குத்தாத்பர்யம் (நூறுபட்டினியித்யாதி). "திறத்தை" என்றதுக்குத் தாத்பர்யம் (விலக்குவாரித்யாதி). *வாள்வலியால் மந்திரம் கொண்டவர் வார்த்தையாகையாலே, ஈச்வரனையும் பரதந்த்ரனுக்க வல்லமைதோற்ற விசேஷித்தாரென்று தாத்பர்யமருளுகிறூர் (விநயேத்யாதி). ... ... (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து ஒன்பதாந்திருமொழி

புள்ளுருவின் ப்ரவேசம்.

வ்யா;—புள்ளுருவின் ப்ரவேசம். (௧) "ஊடல் கூடலுணர்தல்" என்கிறபடியே முன்பு விஸ்லேஷமாய், அநந்தரம் ஸம்ஸ்லேஷமாய், அது தான்விஸ்லேஷாந்தமாய் நின்றது. ஆற்றாமைகரைபுரண்டு அவன் வருமளவும் கண்டு ஆறியிருக்கவொண்ணாதபடி ஆசைமிகுத்து, இவர்க்ரமப்ராப்தி பற்றாதபடியாயிருக்கிற இவள்தசையை அநுஸந்தித்திருக்கிற திருத்தாயார் "இவளாபத்துக்கு இரையிடுவதோ? அவனை அழைப்பிப்பதோ? ஊரார் சொல்லுகிறபழியைப் பரிஹரிப்பதோ?" என்று பார்த்து, "இனி அவிருத்தமாகப் போகலாம் வழியென்" என்று நினைத்து, "மிடுக்கனல்லலேனோ? நினைத்த கார்யங்கள்செய்து தலைக்கட்டுமவனல்லலேனோ? குணவானல்லலேனோ?

அரு;—புள்ளுருவின் ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே ஊடல் தலையெடுத்திருக்கையாலே காலைப்பிடித்து ஸம்ஸ்லேஷித்து, * அல்லிக்கமலக்கண்ணனாய் அவனிருக்க, மீளவும் இத்திருமொழி தொடங்கி "மன்றிலங்கு பாரதத்து" என்னுமளவும், விஸ்லேஷமான போதைக்கு ப்ரஸக்தி யென்னென்ன வருளுகிறார் (ஊடல் கூடலித்யாதி). "மானமுடைத்து" என்றதிலே "அல்லில்தான் வந்தபின்னை" என்றத்தாலே ஸம்ஸ்லேஷம்நடந்து, அது ஸாத்மிக்க வேணுமென்று பிரிய, ஊடல் தலையெடுக்க, அத்தைத்தவிர்த்து ஸம்ஸ்லேஷிக்க, அது தானும் அதிமாத்ரமென்றறிந்து பிரிந்திருக்க, அநந்தரம் (௨) "பொன்னம் சேவடிமேல் போதணியப்பெற்றேனே" என்று இவர்வாய்விட்டு ஹர்ஷிக்கும்படி நடந்ததென்னும்படி திருவுள்ளம். (உணர்த)ல்ஸம்ஸ்லேஷம் ஸாத்மியாதென்றறிகை.

அதில் இத்திருமொழிக்கு ப்ரதிபாத்யத்தை அருளுகிறார் (ஆற்றாமையித்யாதி). (இவர் க்ரமப்ராப்தி)நாயகனுடைய க்ரமப்ராப்தி. (இரையிடுகை)நோவுபட வேண்டாவென்கை. அப்படி சொன்னால் ஆற்றாமை மிகுமிறே, (அவிருத்தமாக) என்றதுக்கு பா(வ)வம், நோவுபட வேண்டாவென்றால் அதிகமாய் படிகடந்து புறப்படுவள்; நோவுபடக்கடவை யென்றாலும் பழிறு விளையும்; அவனை அழைப்பித்தால்அஷ்டகர்ணமாகாமையாலேஅதுவும்பழிக்கு

---

(௧) நா-தி-௪-௧௧. (௨) ௧௧-௫-௯.

வடிவழகிலே துவக்கவல்லவனன்றோ?, என்று நினைத்திருக்கிறாயோ'' என்றுலோகத்தில் ஆற்றாமையுடையாரெல்லாரும் சொல்லிக் கூப்பிட்ட பாசுரத்தை இவளுடைய வ்யஸநத்துக்கு நிதர்ஶநமாகச் சொல்லி, "இவள் இப்பாடுபட நீ ஆறியிருப்பாயே?'' என்று இவள் தசையை அநுஸந்தித்த திருத்தாயார் பாசுரமாயிருக்கிறது. *

மூ;—

புள்ளுருவாகிநள்ளிருள்வந்த பூதனைமாளவிலங்கை
ஒள்ளெரிமண்டியுண்ணப்பணித்த வூக்கமதனைநினைந்தோ
கள்ளவிழ்கோதைகாதலுமெங்கள் காரிகைமாதர்கருத்தும்
பிள்ளைதன்கையில்கிண்ணமேயொக்கப் பேசுவதெந்தைபிரானே.

பதம்.	உரை.
எந்தை	எமக்குஸ்வாமியுமாய்
பிரானே	உபகாரகனுமானவனே !
எங்கள்	எங்களுடைய
கள் அவிழ்	மதுஸ்யந்தியான
கோதை	மயிர்முடியையுடைய பெண்ணின்
காதலும்	அபி(நி)நிவேசத்தையும்
காரிகைமாதர்	அழகு மிக்க பெண்களுடைய
கருத்தும்	(இவள்காதலைப் பழிக்கையில் துணிவையும் (புத்தி பண்ணுதே)
பிள்ளைதன்	சிறுப்பிள்ளைகளுடைய
கையில்	கையிலுள்ள
கிண்ணமேஒக்	கிண்ணியை நினைத்த போதுவாங்கக் கூடுமென்றாப் போலே (ஆறியிருப்பதுடன்,)
பேசுவது	அவ்விருப்புத்தோற்றப் பேசுகிறவிது,
புள் உருவு ஆகி	பிள்ளைகளை அனுங்கப் பண்ணும், சந்திக் காக்கைகள் வடிவுடையளாகி
நள்ளிருள்	மத்யராத்ரத்திலே
வந்த	(வஞ்சகம் செய்ய) வந்
பூதனை	பூதனையானவள் [த
மாள	முடியும்படியாகவும்,
ஒள் எரி	ஒளிபொருந்திய அக்நி பகவான்
இலங்கை	லங்கையை
மண்டி	பொருந்தி
உண்ண	புஜிக்கும்படியாகவும்
பணித்த	செய்தருளின
ஊக்கமதனை	மிடுக்கை
நினைந்தோ	திருவுள்ளம்பற்றியோ?

(௧)

உடலாமென்று, தானே போய்ப் பெண்பழியை அப்போது அறிவித்தமை. (ஆறியிருப்பாயே என்று) என்றவநந்தரம், "திருமுன்பே விண்ணப்பம் செய்தாரகையால்'' என்று கூட்டுவது; இல்லாவிடில் "திருத்தாயார்'' என்றதுக்கு க்ரியை இல்லையிறே. ... ... *

வ்யா;—முதற்பாட்டு. (புள்ளுருவித்யாதி) கண்காணவொண்ணாத ஆபத்தைப் பரிஹரித்த நமக்கு இதொன்றும் பழியாய்த்தலைக்கட்டப் புகுகிறதோ? என்று கொண்டிருக்கிறாயோ?. (புள்ளுரு) "புள்" என்று சிலவுண்டாயிற்று. அவை மேலேஸஞ்சரிக்க, பிள்ளைகள் அனுங்குவர்களாயிற்று. அப்படியே புள்ளினுடையப்ரகாரத்தையுடையளாய்க்கொண்டு மத்த்யராத்ரத்திலே வந்த பூதனையானவள் முடியும்படியாகப் பண்ணின. "ஊக்கமதனைநினைந்தோ" என்றுக்ரியை. (நள்ளிருள்) பிறரும் பரிஹரிப்பாரன்றிக்கே தானுமறியாத காலத்திலே யாயிற்றுவந்தது. (இலங்கையித்யாதி) அக்நியானது இவனுடைய தோளை அண்டைகொள்ளுமதுக்குமுன்பு ராவணனுக்கு அஞ்சி, சோற்றுக்குவேண்டுமளவும்ஸஞ்சரித்து உடம்பு வெளுத்தாயிற்றுத்திரிவது. இவன்தோளை அண்டைகொண்ட அக்நியானது தன் நிறம்பெற்றது. "வயிறுநிரம்ப புஜிப்பிற்றிலோமோ" என்று உன் மிடுக்கை நினைத்தோ நீ ஆறியிருக்கிறது.

(கள்ளவிழித்யாதி) இவள் மாலையையும், மயிர் முடியையும் கண்டு நீர்காதலிக்கக்கடவ வித்தையன்றோ இவள் காதலிக்கிறது. (காரிகையித்யாதி) "ப்ராப்தவிஷயத்தில் காதலன்றோ" என்றிராதே இத்தைப் பழியாகச் சொல்லுகிற ஊரில் ஸ்த்ரீகளுடைய துணிவையும்புத்திபண்ணாதே. (பிள்ளையித்யாதி) "பலவான்கள்கையில்கிண்ணியிறே வாங்கவரிது; பாலராயிருப்பார் கையிலது நினைத்தபோது வாங்குகிறோம்" என்றிருக்கிறப்போலே ஆறியிருக்கிறாயோ?. (க)

மூ;—

மன்றில்மலிந்துகூத்துவந்தாடி மால்விடையேழுமடர்த்தாயர்
அன்றுநடுங்கவாநிரைகாத்தவாண்மைகொலோவறியேன்நான்
நின்றபிரானேநீள்கடல்வண்ணா நீயிவள்தன்னைநின்கோயில்
முன்றிலெழுந்தமுருங்கையில்தேனும் முன்கைவளைகவர்ந்தாயே.

அரு;—முதற்பாட்டு. (புள்ளித்யாதி) ஸ்வாபதேச தாத்பர்யம் (கண்காணவித்யாதி). (இதொன்றும்) நாலுநாள் இவ்விபூதியிலே வைக்கை. (சில) சந்திக்காக்கைகள். "பணித்த" என்றதினர்த்தம் (பண்ணின) என்றது. "ஒள்ளெரி" என்றதுக்குத் தாத்பர்யம் (அக்நியித்யாதி). உட்கருத்தை விசேஷித்தருளுகிறார் (வயிறித்யாதி).

(இத்தை) என்றவநந்தரம் "மறந்துன்னை" என்று சேஷம், "எந்தைபிரானே" என்றத்தைக்கடாக்ஷித்து. "காரிகை மாதர்" ஸுந்தரிகளான ஸ்த்ரீகள்; அவர்கள் கருத்து இன்னதென்றருளுகிறார் (ப்ராப்தேத்யாதி). (க)

பதம்.	உரை.
நின்ற	(திருமலையிலே) நின்றருளின.
பிரானே	உபகாரகனே !
நீள்	விசாலமான
கடல்	கடல்போன்ற
வண்ணா	வடிவையுடையவனே!
நீ	க்ருஷ்ணவதாரம் பண்ணினநீ,
மன்றில்	நாற்சந்தியிலே
மலிந்து	பொருந்திநின்று
உவந்து	திருவுள்ளமுகந்து
கூத்து ஆடி	(குடக்கூத்துமுதலிய) கூத்துக்களையாடி,
மால்	கறுத்தநிறத்தையுடைய
விடை ஏழும்	ரிஷபங்களேழையும்
அடர்த்து	நிரஸித்து,
அன்று	இந்த்ரன் கல்மாரிபொழியும் காலத்திலே
ஆயர்	இடையர்களுடைய
நடுங்க	வருந்திநிற்க,

பதம்.	உரை.
ஆநிரை	பசுக்களின் திரளை
காத்த	ரக்ஷித்தருளின
ஆண்மைகொலோ	பௌருஷத்தைத் (திருவுள்ளம்பற்றியோ),
நின்	உன்னுடைய
கோயில்முன்றில்	கோயில் முற்றத்திலேல்
எழுந்த	உண்டான
முருங்கையில்	முருங்கை மரத்தின்
தேனும்	தேன் எளிதானுப்போலே
இவள் தன்னை	இப் பெண்பிள்ளையையும் (எளியளாக நினைத்து)
முன் கைவளை	(இவளுடைய) முன்கையிலுள்ள வளையை
கவர்ந்தாய்	கைக்கொண்டருளி[னாய்]
நான்அறியேன்	(உன்கருத்தை) நான் அறிகிறிலேன்.

வ்யா;—இரண்டாம்பாட்டு. (மன்றிலித்யாதி). "ஒருவர்இரு[வர]வரன்றிக்கே, ஊராக அநுபவிக்கும்படி குருகுலவாஸம் பண்ணினார்க்[கு]ம் ஆடவொண்ணாத கூத்துக்களையன்றோ நாம் உபகரித்தது; ஆ[ன]பின்பு நமக்கு இதுவொன்றும்பழியாகப்புகுகிறதோ?" என்றிருக்கி

அ௩;—இரண்டாம்பாட்டு. (மன்றிலித்யாதி)கீழ்ப்பாட்டிலே "பூதனையை முடித்துப் பஞ்சலக்ஷங்குடிப் பெண்களுக்கும் என்னைக் கொடுத்தேனே" என்னவே "அதுவே பெருமையாக என்பெண்ணையிட்டுப்பழியில்லை" என்றிருக்கிறாயோ? என்றாள். இத்தைக்கேட்டு "நான் இவ்வூரில் பெண்களுக்காகக் கூத்தும் ஆடவில்லையோ? விடைகொன்றது தானில்லையோ? மலைசுமந்ததில்லையோ? ஒருமலையேறி வருவாருண்டோ? என்று எதிர்பார்த்து நின்றதில்லையோ" என்று, இவற்றையெல்லாமறியும்படி நிற்க, அத்தாலேயோ இப்படி ஆறியிருக்கிறாயென்று சொல்லுகிறாரென்று ஸங்கதி.

ளுயோ?. (உவந்தாடி) (௧) "ஸ்ர்ஞா- பக்தாநாம்" என்கிறபடியே "இவர்களறிந்து கொண்டாடிற்றிலர்களேயாகிலும் நாம்தாம் இவர்களுக்காகப்பெற்றோமிறே" என்று உகந்தாளுயிற்று. (மால்விடையித்யாதி) ஊருக்காக உபகரித்தபடி சொல்லிற்று. இனி ஒருத்திக்காக உபகரித்தபடி சொல்லுகிறது. "நப்பின்னைப்பிராட்டியோட்டை கலவிக்கு இடைச்சுவராயிருந்த வ்ருஷபங்களேழையும் அழியச்செய்த மஹாகுணத்திலே, இந்தகுணஹாநியொன்றும் நிரவிப்போகாதோ" என்றிருக்கிறுயோ? (ஆயரன்றுநடுங்க) (௨) "கோகோபீஜநஸங்குலம்-அதீவார்த்தம்" - கோகோபீஜநஸங்குலம் - அதீவார்த்தம்" என்கிறபடியே பசுக்களும் இடையரும் நோவுபடாதபடி ரக்ஷித்த ஆண்பிள்ளைத்தனத்தை நினைத்தோ? அறிகிறிலேன்.

(நின்றபிரானே) அவ்வவதாரத்திலே இழந்தார்க்கும் இழக்கவேண்டாதபடி திருமலையிலேவந்து நிற்கிறவனே! (௩) "குன்றமேந்திக் குளிர்மழைகாத்தவன்" (௪) "நின்றவேங்கடம்" (௫) "வானவர்கள் சந்திசெய்யநின்றான்" என்னக்கடவதிறே. (நீள்கடல்வண்ணா) ஒருகடல் செவ்வேநின்றாப்போலேயாயிற்று எழுந்தருளிநிற்கும் நிலை. (நீ இவள்தன்னை) ரக்ஷகத்வத்தில் முற்பாடனுயிருக்கிற நீ உன்னுடைய ரக்ஷக்த்வமும் போராதபடியான த்வரையையுடைய இவளை. கையும் வளையுமான சேர்த்தி கண்டு கொண்டாடும் நீயே அநுபவித்து விடப்புக்காயோ?. .... (௨)

கூத்துப்பார்ப்பாரன்றோ உகக்க அடுப்பது; ஆடுவார் உகக்கையைச்சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (பக்தாநாமித்யாதி).

"நின்ற பிரான்" என்றால், "திருமலை" என்கைக்கு ஜ்ஞாபகமென்னென்ன வருளுகிறார் (குன்றமித்யாதி), *மயர்வற மதிநலம்பெற்ற திருத்தாயாராகையாலே க்ருஷ்ணனை வேங்கடத்தானுகவும் சொன்னுளென்று திருவுள்ளம். "உன்னுடையகோயில், முன்னிலே-முற்றத்திலே, எழுந்தமுருங்கைமரத்தில் தேன் எளிதானுப்போலே, இவளையும் எளிதே வளைகழலப் பண்ணினுயோ" என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளுகிறார் (கையுமித்யாதி). (அநுபவித்து-விட) இவளை அநுபவிக்கவேண்டாவோ என்று கருத்து. ... ... (௨)

---

(௧) ஜிதந்தா-௧-௫. (௨) வி-பு-௫-௧௧-௧௩. (௩) தி-வாய்-௩-௩-௮.
(௪) தி-வாய்-௯-௩-௮. (௫) அமலனு-௩.

மூ;—

ஆர்மலியாழிசங்கைகொடுபற்றி யாற்றலையாற்றல்மிகுத்துக்
கார்முகில்வண்ணாகஞ்சனை முன்னம் கடந்தநின் கடுந்திறல்தானே
நேரிழைமாதைநித்திலத்தொத்தை நெடுங்கடலமுதனையாளை
ஆரெழில்வண்ணா வங்கையில் வட்டாமிவளெனக்கருதுகின்றாயே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கார்முகில்	காளமேகம்போன்ற	நேர்	விலக்ஷணமான
வண்ணா	திருநிறத்தை யுடையவனே!	இழை	ஆபரணங்களையுடையவளாய்
ஆர் எழில்	மிக்க அழகையுடைய	நித்திலத்தொத்தை	முத்துமாலை போன்றவளாய்
வண்ணா	வடிவையுடையவனே!	நெடு	மிகவும் பரம்பின
முன்னம்	க்ருஷ்ணவதாரத்திலே	கடல்	ஸமுத்ரத்திலுண்டான
ஆர்மலி	கூர்மைமிக்கிருந்துள்ள	அமுது அனையாளை	அம்ருதம் போன்றவளுமான
ஆழியொடு	திருவாழியோடே	மாதை	இப்பெண்பிள்ளையை
சங்கு	ஸ்ரீ பாஞ்சஜந்யத்தையும்	இவள்	"இவள்
பற்றி	(திருக்கைகளில்)ஏந்தி,	அங்கையில்	அழகிய கையிலுள்ள
ஆற்றலை	மிடுக்கை	வட்டாமென	கருப்புக்கட்டி போல் அநுபவிக்கவும் உபேக்ஷிக்கவும் தக்கவள்" என்று
ஆற்றல்மிகுத்து	மிகவும்ப்ரபலப்படுத்தி	கருதுகின்றாய்	நினைத்திருக்கிறாய்?
கஞ்சனை	கம்ஸனை		
கடந்த	நிரஸித்துப்போகட்ட		
நின்	உன்னுடைய		
கடு	பலிஷ்டமான		
திறல்தானோ	பராபிபவநஸாமர்த்யத்தை நினைத்தோ,		

வ்யா;—மூன்றாம்பாட்டு. (ஆர்மலியாழி சங்கொடுபற்றி) கூர்மை மிக்கிருந்துள்ள திருவாழியோடே ஶ்ரீபாஞ்ச ஜந்யத்தையும் கூடப்பிடித்து. (ஆறறலை) "ஆற்றல்" என்று - மிடுக்காகவுமாம்;

அ;—மூன்றாம்பாட்டு. கீழ்ப்பாட்டிலே நீயே இவளை அநுபவித்துக் கொண்டிருக்கிறிலை யென்றாள்; அத்தைக் கேட்டு "நான்கையும் திருவாழியுமாய், மற்றை ஆழ்வார்களுமாய் வந்து பிறந்து அநுபவ விரோதிகளைக் காற்கடை கொண்டதும்முன்பு உனக்காகவன்றோ" என்ன; "அத்தைநினைத்தோ பரமபோக்யதையை இப்படிப்பட விட்டு வைத்தது" என்று உபாலம்பநம் தோற்றச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

பொறையாகவுமாம். (ஆற்றல் மிகுத்து) ஒருஜகதுபஸம்ஹாரத்துக்குப் போந்திருக்கச்செய்தே கம்ஸனளவிலேயாம்படி அமைத்து. (கார்முகில்வண்ணு) கம்ஸனை அமுக்கி, மேலேஏறிநின்றபோதை வடிவழகு. (கஞ்சனித்யாதி) அவன்தான் நினைத்தசெயலை அவன்றன்னோடே போம்படியாகப் பண்ணின பராபிபவந ஸாமர்த்யத்தை நினைத்தோ?

(நேரிழைமாதை) விலக்ஷணமான ஆபரணத்தை யுடையவளை. (நித்திலத்தொத்தை) அணைத்தால் தாபமெல்லாம் ஆற்றவற்றாயிருக்கை. (நெடுங்கடலமுதனையாளை) பெறுதற்கரியளானவளை. (ஆரெழில்வண்ணு) இவளை இப்படிப்பண்ணவல்ல வடிவழகையுடையவனே! (அங்கையில் வட்டாம்) கையிலிருந்த கருப்புக்கட்டி-தின்னவுமாய், பொகடவுமாயிருக்குமிறே. அப்படியே நினைத்திருக்கிறாயோ இவளையும். .... (௯.)

மூ;—

மல்கியதோளும் மானுரியதளு முடையவர்தமக்குமோர்பாகம்
நல்கியநலமோநரகனைத் துலைத்தகரதலத்தமைதியின்கருத்தோ [ய்
அல்லியங்கோதையணிநிறங்கொண்டு வந்துமுன்னேநின்றுபோகா
சொல்லியென்நம்பி இவளை நீ யுங்கள்தொண்டர்கைத் தண்டென்றவாறே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்கியதோளும்	மிகுந்ததோள்களையும்	நல்கிய	(இருப்பிடமாகக்) கொடுத்த
மான்உரிஅதளும்	மானின் உடலில்உரிக்கப்பட்ட தோலையும்	நலமோ	சீலாதிசயத்தை (நினைத்தோ,) (அல்லது)
உடையவர்தமக்கும்	உடையனான ருத்ரனுக்கும் கூட	நரகனை	நரகாஸுரனை
		துலைத்த	நிரஸித்த [டான
ஓர்பாகம்	(தன்திருமேனியில்) ஒரு பாக (ஜ்ஜ) த்தை	கரதலத்து	திருக்கையிலே யுண்
		அமைதியின் கருத்தோ	மிடுக்கைநினைத்தோ ;

"ஆற்றலை-மிடுக்கை, ஆற்றல்மிகுத்து-பொறுமை மிகுத்து" என்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யமருளுகிறார் (ஒருவித்யாதி).

"நித்திலம்-முத்துக்களையுடைய, தொத்தை-மாலையை" என்றருளுகிறார் (அணைத்தாலித்யாதி). ... ... (௯.)

அல்லி	செவ்விமாலையாலே	போகாய்	போகிருயில்லை ;
அம்	அழகிதான	நீ	நீ [த்திலே
கோதை	மயிர்முடியை யுடைய இப்பெண் பிள்ளை	இவளை	இப்பெண்பிள்ளை திற
அணி	விலக்ஷமான [யின்	உங்கள்தொண்டர்	உமது சேஷபூதர்க்ளுடைய
நிறம்	நிறத்தை	கை	கையிலுள்ள
கொண்டு	அபஹரித்துக் கொண்டுபோனது மன்றி,	தண்டு என்று ஆறு	வில்லைப்போலே (வேண்டும்போது பெறலாம்) என்றப்ரகாரம் நினைத்திரா நின்
முன்னே	இவள்முன்னே	நம்பீ	பூர்ணனுனவனே! [ருய்;
வந்துநின்று	(ஒருகால்) வந்துநின்று (உன்வடிவழகைக்காட்டி)	சொல்லிஎன்	பரக்கச்சொல்லிப் பயனென்? ; (ச)

வ்யா;—நாலாம்பாட்டு. (மல்கியவித்யாதி) பலதோள்களை யுடையனுய், மானினுடைய தோலென்னுதல்; அன்றிக்கே, மஹானுன ஆனையினுடைய தோலையுடையனுய், "தன் தபோபலத்தாலே நான் என் கார்யம்செய்து கொள்ளவல்லேன்" என்றுகொண்டு துர்மாநத்தை யுடையனுயிருக்கிற ருத்ரனுக்கும் திருமேனியிலே இடம்கொடுத்த சீலாதிசயத்தை நினைத்திருக்கிருயோ? (நரகனைத் துலைத்த) நரகனுகிறவஸுரனை நிரஸித்த கையில் மிடுக்கைநினைத்தோ?.

(அல்லியங்கோதை) செவ்விமாலையையுடைத்தான மயிர்முடியை யுடைய இவள் விலக்ஷணமான நிறத்தைக் கொண்டு. (முன்னே நின்று போகாய்) உன்னுடைய வடிவழகை ஒருகால் காட்டிக் கொண்டு போகிறிலை. பாவநாப்ரகர்ஷத்தாலே உருவு வெளிப்பாட்

அரு;—நாலாம்பாட்டு. (மல்கியவித்யாதி) "நிரதிசய போக்ய பூதையானவளை அங்கையில் வட்டாக நான் நினைத்தேன்" என்ருய் ; "நான், தோளும் தோலுமாயிருக்கிற ஓடெடுப்பானுக்கும் உடம்பு கொடுத்திருக்கும் குணவானன்ருே? பதினுறுயிரம் பெண்களுக்காக நரகாஸுரனை வென்றதில்லையோ? இப்படி பெண்பித்தனுன என்னை இப்படி சொன்னுல் கேள்வியுண்டோ" என்ன; ஓம், அத்தை நினைத்தோ என் பெண்ணை உருவுவெளிப்பாட்டிலே நின்று நலிகிருயென்று வெறுக்கிருளென்று ஸங்கதி.

"தமக்கும்" என்றதுக்குத் தாத்பர்யம் (துர்மாநத்தை யித்யாதி). (ச)

டாய் முன்னேநின்று போகிறிலை. (சொல்லியென்நம்பி) பரக்கச் சொன்னத்தால் என்னகார்யமுண்டு. (இவளை நீ உங்கள் தொண்டர்கைத் தண்டென்றவாறே) (௧) "சாபமாநய ஸௌமித்ரே - சாப மாநயஸௌமித்ரே" என்று நினைத்தபோது வாங்கிக்கார்யம் கொள்ளலாம்படி உரியவடியார்கையில் ஆயுதத்தோபாதியாக நினைத்திரா நின்றாய். .... (௪)

௫;—

செருவழியாதமன்னர்கள்மாளத் தேர்வலங் கொண்டவர்செல்லும்
அருவழிவானமதர்படக்கண்ட வாண்மைகொலோவறியேன்நான்
திருமொழியெங்கள்தேமலர்கோதை சீர்மையைநினைந்திலையந்தோ
பெருவழிநாவல்கனியிலுமெளிய ளிவளெனப் பேசுகின்றாயே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
செரு	யுத்தரங்கத்திலே	தேன்மலர்	மதுஸ்யந்தியான மலர்களையுடைய
அழியாத	(இதற்குமுன்பு) தோல்வியடையாத	கோதை	மாலையையணிந்த இப்பெண்பிள்ளையின்
மன்னர்கள்	ராஜாக்களுடைய	சீர்மையை	வைலக்ஷண்யத்தை
மாள	முடியும்படியாக, (ஆயுதந்தரியோமென்ற ஸங்கல்பத்தால்)	நினைந்திலை	புத்திபண்ண மாட்டிற்றிலை;
தேர்வலம்கொண்டு	அத்தேரின் மிடுக்கையே கொண்டு,	இவள்	"இப்பெண்பிள்ளையானவள்
அவர்	அந்தராஜாக்கள்	பெருவழி	பெருவழிக்கரையில் விழுந்துள்ள
செல்லும்	போகும்படி, (வெகுநாள் போவாரில்லாமே புல்லெழுந்து கிடப்ப	நாவல்கனியிலும்	நாவற்பழத்திலும்
அரு	அரிதான [தனல்)	எளியள்என	எளியவளென்று (அபேக்ஷிக்கவும் உபேக்ஷிக்கவும்கூட அநர்ஹை என்று)
வழி	வழியையுடைத்தான		
வானம்	வீரஸ்வர்க்கத்தை		
அதர்பட	பெருவழியாம்படியாக		
கண்ட	கடாக்ஷித்தருளின	பேசுகின்றாய்	பேசாநின்றாய்?;
ஆண்மைகொலோ	ஆண்பிள்ளைத்தனத்தை நினைத்தோ,	நான்	நான்
		அறியேன்	(உன்கருத்தை) அறிய மாட்டிற்றிலேன்;
எங்கள்	எங்களுக்கு பவ்யையாய் [ளாய்	அந்தோ	இப்படியுமொருபாபமே!. (௫)
திருமொழி	இனியபேச்சையுடைய		

(௧) ரா-யு-௨௧-௨௨.

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (செருவழியாத) இதுக்கு முன்பு பூசலில் முதுகுகாட்டிப்போகாத ராஜாக்களுடைய முடியும்படியாக, (தேர்வலங்கொண்டு) ஆயுதமெடுக்க வொட்டாமே, அத்தேரின் மிடுக்கையே கொண்டு கேவலம்போகவரிய வீரஸ்வர்கத்துக்குப் போவாரில்லாமையாலே புல்லெழுந்து கிடந்தவற்றைப் பெருவழியாம்படிகண்ட ஆண்பிள்ளைத் தனத்தை நினைத்தோ செய்தது.

(திருமொழி) (௧) "मधुरा मधुरालापा-மதுரா மதுராலாபா" என்னும்படியான பேச்சையுடையவளை. செவ்விமாறாத மாலையையுமுடையவளை. (சீர்மையை நினைந்திலை) இவள்வாசி ஒன்றையும் புத்திபண்ணிற்றிலை. (அந்தோ) இதுக்கு நான் எத்தைச் செய்வேன். (பெருவழிநாவல்) பெருவழிக்கரையில் நாவலில் விழுந்தபழமானது குனிந்தெடுக்கவுமாய், தவிரவுமாயிருக்குமிறே. அவ்வோபாதியும் நினைத்திருக்கிறிலையாயிற்று இவளையும். .... (௫)

மூ;—
அரக்கியராகம்புல்லென வில்லாலணிமதிளிலங்கையார் கோனைச்
செருக்கழித்தமரர்பணிய முன்னின்றசேவகமோ செய்ததின்று
முருக்கிதழ்வாய்ச்சி முன்கைவெண்சங்கம்கொண்டு முன்னேநின்றுபோகாய்
எருக்கிலைக்காக வெறிமழுவோச்ச லென்செய்வதெந்தை பிரானே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அரக்கியர்	ராக்ஷஸஸ்த்ரீகளுடைய	மதிள்	மதிள்களாலே சூழப்பட்ட
ஆகம்	மார்பானது	இலங்கையார்	லங்கையிலுள்ள ராக்ஷஸர்களுக்கு
புல்லென	ஶூந்யமாய்த் தோற்றும்படியாக, (மங்கள ஸூத்ர ஹீநமா[க)	கோனை	நிர்வாஹகனான ராவணனை
அணி	அழகிய		

அநு;—அஞ்சாம்பாட்டு. (செருவித்யாதி). "சொல்லினன்நம்பி" என்று, நான் எத்தைச் சொன்னாலும், நீர் சொன்னத்தைச் சொல்லிற்றத்தனை போக்கி, என்னிடத்தில் குணக்ரஹணம் பண்ணிற்றிலை; நான் ஒருத்திக்காக மஹாபாரதமெல்லாம் நடத்தினது லோகப்ரஸித்தமன்றோ? நீ ஒருத்தி-குற்றமாகக்கொள்ளில் நான் செய்வதென்னென்ன; இங்கே ஒருமஹாபாரதம் நடக்க வேண்டியிருக்க, இத்தை உபேக்ஷித்தத்தாலே †குறைப்பட்டிருக்கிறாயோ வென்கிறாளென்று ஸங்கதி.

தேமலர் - தேனையுடைய மலரென்றருளுகிறார் (செவ்வியித்யாதி). (௫)

(௧) ரா-ஸு-௬௬-௧௫. † அநந்விதம்.

வில்லால்	ஒருவில்லாலே	வெண்	வெள்ளிதான
செருக்கு அழித்து	செருக்கற்றவனுக்கி (பின்பு பிராட்டிக்	சங்கம்	வளைகை
அமரர்	தேவஜாதிகள் [காக)	கொண்டு	கழற்றிக்கொண்டு போனதுமன்றி
முன்	திருமுன்பே	முன்னே நின்று	(ஒருகால்) இவள் முன்னே வந்து நின்று (வடிவைக் காட்டி)
பணிய	(எத்தாநின்று கொண்டு)தொழச்செய்தேயும்	போகாய்	போகிறிலை;
நின்ற	(அவர்களுக்கு முகங் காட்டாதே) நின்ற	எந்தை பிரானே	எங்களுக்கு உபகாரகனே!
சேவகமோ	வீரப்பாட்டையோ	எருக்கிலைக்காக	(தன்னடையே பழுத்து நெகிழ்ந்து விழுகிற) எருக்கிலைக்காக
இன்று செய்தது	இப்போது (இப்பெண் பிள்ளை பக்கலில்) செய்து போருவது;	எறி	எறியப் படும் தன்மையையுடைய
முருக்கிதழ்	முருக்கம்பூப்போலே (செவ்விதான)	மழு	கோடாலியை
வாய்ச்சி	அதரத்தையுடையளான இவளுடைய	ஓச்சல்	போட எடுக்குகை
முன்கை	முன்கையிலணியப்பட்டிருந்த	என் செய்வது	ஏதுக்காக? (௬)

வ்யா;—ஆறும்பாட்டு. (அரக்கியராகம்) ராக்ஷஸஸ்த்ரீகளுடைய கழுத்திலே மாங்கல்ய ஸூத்ரமானது போக. (வில்லால்) ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கும் அழியாதவூரை வில்லாலே அழித்தான். (அணி மதிளிலங்கையார்கோனை) "அவ்வூருக்கு நான்கடவேன்" என்று அபிமாநித்திருக்கிறவனை. (செருக்கழித்து) முன்னடிதோற்றாதே மூலையடியே வர்த்தித்தசெருக்கை அழித்து. (அமரர்பணிய முன்னின்ற)

அரு;—ஆறும்பாட்டு. (அரக்கியரித்யாதி) "சீர்மையை நினைந்திலையந்தோ" என்று மிகவும் குற்றம்சொல்லாநின்றாய்; உன்பெண், கருத்தறிந்து பரிமாறவல்லளோ" என்று அச்சமுறுத்த; உன்கருத்தை நித்யாநபாயிநியானவள் அறிந்தாளோ? அவள்மேலே சீறினாற்போலே, சீறுகைக்குப் போராது கிடாயென்கிறாளென்று ஸங்கதி.

"அரக்கியருடைய ஆகம் - சரீரமானது, புல்லெண-க்ஷுத்ரமாகத் தோற்றும்படி" என்று சப்தார்த்தமாய், பலிதார்த்தமருளுகிறார் (ராக்ஷஸேத்யாதி).

ராவணவதாநந்தரம் பிராட்டி எழுந்தருளிவர, பெருமாள் முகங்கொடாதேயொழிய, தேவஜாதிவந்து (க) "𑌭𑌵𑌾𑌨𑍍𑌨𑌾𑌰𑌾𑌯𑌣𑍋 𑌦𑍇𑌵𑌃 - பவாந்நாராயணோதேவ:" என்றும், (உ) "𑌸𑍀𑌤𑌾𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌰𑍍𑌭𑌵𑌾𑌨𑍍 𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌃-ஸீதாலக்ஷ்மீர் பவாந்விஷ்ணு:" என்றும் உணர்த்த, முகம்கொடாதே நின்ற அச்சேவகம்போலேயிருந்தது இச்சேவகமும்.

(முருக்கிதழ்வாய்ச்சி) முருக்கம்பூப்போலேயிருக்கிற அதரத்தையுடையளாயிருக்கிறவள் கையில் வளையைக்கொண்டு. (முன்னே நின்றுபோகாய்) ஒருகால் வடிவைக்காட்டிப்போகிறிலையென்னுதல்; உருவு வெளிப்பாட்டாலே முன்னே நின்றுபோகிறிலையென்னுதல். (எருக்கிலைக்காக) தன்னடையே பழுத்து நெகிழ்ந்து விழுகிறத்தை எறிமழுவைக்கொண்டு வ்யாபரிக்கவேணுமோ?. .... (சு)

மூ;—

ஆழியந்திண்டோரரசர் வந்திறைஞ்ச வலைகடலுலகுமுறுண்ட
பாழியந்தோளோராயிரம்வீழப் படைமழுப்பற்றியவலியோ [ய்
மாழைமென்னோக்கிமணிநிறங்கொண்டுவந்துமுன்னேநின்றுபோகா
கோழிவெண்முட்டைக்கென்செய்வதெந்தாய் குறுந்தடிநெடுங்கடல்வண்ணா.

(முகங்கொடாதே) என்றவநந்தரம் "நின்றார்" என்று சேஷம். இல்லாவிடில் "பெருமாள்" என்கிறது அந்வயியாதிறே.

"எறி-எறியப்படும், மழு-பரசுவை, ஓச்சல்-போட எடுக்கை" என்று சப்தார்த்தமாய், விச்லேஷத்தாலே க்ருசையாயிருக்கிறவள்மேலே "கருத்தறியாதவள்" என்று குற்றம் சொல்லவேணுமோவென்று தாத்பர்யமருளுகிறார் (தன்னடையேயித்யாதி). ... ... (சு)

அரு;—ஏழாம்பாட்டு. (ஆழியித்யாதி) எருக்கிலைக்குக் கோடாலிவேணுமோ என்றாய், உன்னுடைய பெண்ணினுடைய மேன்மையும், "எனக்கெதிருண்டோ" என்கிற கர்வமும் குறைவற்று, "லோகத்தில் என்னைப்போலே அழகியாரில்லை" என்று நான் வந்தபோது முகம்கொடாதே, "பெண் என்னைப் படுத்தினபாடு நீ அறியாய்" என்றுகொண்டு, மழுகொண்டு எனக்கெதிரில்லையென்று உலகமெல்லாம் கொண்டவலியை அறியாயோ? என்ன; மிகவும் அஞ்சி, என் பெண்பிள்ளை ஒன்றுமறியாப்பெண்; அதிஸுகுமாரி, பவ்யமான நெஞ்சுஉடைந்துபோகவித்தனை நீ சொல்லவொண்ணுமென்றுப்ப்ரார்த்திக்கிறாளென்று ஸங்கதி.

(க) ரா-யு-கஉo-கங. (உ) ரா-யு-கஉo-உஅ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
திண்	வலிமை பொருந்திய	நோக்கி	நோக்கையுடையளான இவளுடைய
ஆழி	உருளையோடு கூடின	மணிநிறம்	அழகியமேனிநிறத்தை
அம் தேர்	அழகிய தேரை நடத்தி	கொண்டு	அபஹரித்துக்கொண்டு (போனதுமன்றி)
அரசர்	ராஜாக்களுடைய[வல்ல	வந்து	(ஒருகால்) வந்து (உருக்காட்டி)
வந்து	(பராஜிதர்களாய்)வந்து	முன்னேநின்று	(இப்பெண் பிள்ளைக்கெதிரில்) முன்னடி தோற்ற நின்று
இறைஞ்ச	காலிலே விழுந்துபணிய,	போகாய்	போகிறிலை?!
அலை	திரைக்கிளப்பத்தை யுடைய	நெடுங்கடல்	பரம்பினகடல்போன்ற
கடல்	கடலாலே சூழப்பட்ட	வண்ணா	வடிவையுடையவனாய்
உலகம்	உலகத்தை	எந்தாய்	எமக்கு ஸ்வாமியுமானவனே !
முன்	முன்னே	கோழி வெண் முட்டைக்கு	(தன்னடையே உடைந்து போகக்கடவ) கோழிமுட்டைக்கு
ஆண்ட	அரசாண்ட (கார்த்தவீர்யார்ஜுநனுடைய)	குறுந்தடி	சிறியதொரு தடியெடுக்கை
பாழியம்	மிக்க வலியையுடைய	என் செய்வது	என்னபயன்பெறும்.?
ஓராயிரந்தோள்	ஆயிரந்தோள்களும்		
வீழ	துணியும்படி		
மழுப்படை	'பரசு' என்னுமாயுதத்தை [ற		
பற்றிய	கையிலே தரிக்கப்பெற்		
வலியோ	மிடுக்கை நினைத்தோ?		
மென்	முக்த(ஃ)மான [ன்ற		
மாழை	மானினது நோக்குபோ		

வ்யா;—ஏழாம்பாட்டு. (ஆழியந்திண்டேரரசர்) எங்குமொக்க ஸஞ்சரிக்கும்படி மிடுக்கையுடைத்தான உருளையோடே கூடின தேரையுடைய ராஜாக்கள் காலிலே வந்துபணிய. (அலைகடல்) கடல் சூழ்ந்த பூமிப்பரப்புக்கெல்லாம் தானே கடவனும்படியான தோள் வலியையுடைய ராஜாவினுடைய தோள்கள் துணியும்படி மிடுக்குடைத்தான மழுவைக்கையிலே யுடையராயிருக்கிறத்தாலுள்ள வலியோ?.

(மாழைமென்னோக்கி) முக்த்த (ஃ) மான மானினுடையநோக்கோடொத்த நோக்கையுடையளாய், விலக்ஷணமானநிறத்தையுடை

"மணிநிறங்கொண்டு - அழகியநிறத்தைக் கொண்டுபோன நீ வந்து" என்றர்த்தமாய் பலிதார்த்தம் (விலக்ஷணேத்யாதி). ... ... (௭)

யளாயிருக்கிற இவளுடையமுன்னே உன்னுடைய வடிவை ஒரு கால் காட்டிப்போகிறிலை. (கோழி வெண்முட்டைக்கென் செய்வது) தன்னடையே உடைந்துபோகிறவித்தைத் தடியையிட்டுத் தகர்க்க வேணுமோ? .... (எ)

மூ;—

பொருந்தலனாகம்புள்ளுவந்தேற வள்ளுகிரால் பிளந்தன்று [ன்று
பெருந்தகைக்கிரங்கி வாலியைமுனிந்தபெருமைகொலோசெய்தது
பெருந்தடங்கண்ணி சுரும்புறுகோதைபெருமையை நினைந்திலைபேசில்
கருங்கடல்வண்ணா கவுள்கொண்டநீராமிவளெனக் கருதுகின்றாயே.

பதம்.	உரை.
பொருந்தலன்	பொருந்தாமையையே ப்ரக்ருதியாகவுடைய ஹிரண்யனுடைய
ஆகம்	சரீரத்திலே
புள்	கழுகு, பருந்து முதலான பக்ஷிகள்
உவந்து	மிகுந்த ப்ரீதியோடே
ஏற	ஏறி வர்த்திக்கும்படியாக (அந்தச்சரீரத்தை)
வள்ளுகிரால்	கூர்மையான நகங்களாலே
பிளந்து	இருதுண்டமாகக் கிழித்து, (அதுவுமன்றி)
அன்று	ஸுக்ரீவன் ரிச்யமூக பர்வதத்தில் வருந்தினவன்று
பெருந்தகைக்கு	கம்பீர ஸ்வபாவனான (அந்த) ஸுக்ரீவனுக்கு
இரங்கி	திருவுள்ளமிரங்கி
வாலியை	(அவனுக்கு)சத்ருவான வாலியை
முனிந்த	நிரஸிக்கையினாலுண்டான
பெருமை கொலோ	மிடுக்கைநினைத்தோ ?
இன்றுசெய்தது	இப்போது (இவள் திறத்தில் இப்படி) செய்து போந்தது?;
பெருந்தடம்	மிகவும் விசாலமான
கண்ணி	கண்களையுடையளாய்
சுரும்பு உறு	வண்டுகள் மாறாதே படிந்து கிடக்கிற
கோதை	மயிர் முடியையுடையளான இவளுடைய
பெருமையை	வைலக்ஷண்யத்தை
நினைந்திலை	புத்திபண்ணிற்றிலை;
கருங்கடல் வண்ணா!—;	
பேசில்	(உன்கருத்தைப்) பேசப்புக்கால்,
இவள்	"இப்பெண்பிள்ளையானவள்,
கவுள்கொண்ட	வாயில் பொகட்ட
நீர் ஆம் என	நீர் போலே அபேக்ஷிக்கவும் உபேக்ஷிக்கவும் தக்கவள்" என்று
கருதுகின்றாய்	நினைத்திருக்கிறாயத்தனை.

வ்யா;—எட்டாம்பாட்டு. (பொருந்தலன்) மநுஷ்யஜந்மமாய் ஆஸுர பா(ஸ்)வத்தையுடையனுயிருக்கையன்றிக்கே, பொருந்தாமையை ப்ரக்ருதியாக வுடையனுயிருக்கை. (ஆகம்புள்ளுவந்தேற) ஸ்த்ரீகள் பேணிப்போந்த சரீரத்திலே கழுகும்பருந்தும் உகந்தேற. (வள்ளுகிரால்) கூரிய உகிராலே நிரஸித்து. (அன்று பெருந்தகைக்கிரங்கி) என்றுமொக்கப்†பொருந்திப்போருகிற ஸுக்ரீவமஹாராஜர்க்கு ராஜ்யத்தைக்கொடுத்து வாலியை அம்பாலே வேண்டோமென்றுனுயிற்று. (பெருமைகொலோ) அன்று ஆஶ்ரித விஷயத்தில் பண்ணின பக்ஷபாதமெல்லாம் இங்கேகண்டோமிறே.

(பெருந்தடங்கண்ணி) போர(ஸ்)ஜ(தாக்களளவல்லாதபடி மிக்கப் பரப்பை யுடைத்தானகண். (சுரும்புறுகோதை) வண்டுகள்மாருத மாலேயோடுகூடின மயிர்முடியையுடையவள். (பெருமையைநினைந்திலே) இவளுடைய வைலக்ஷண்யமொன்றையும் புத்திபண்ணிற்றிலே. (கருங்கடலித்யாதி) வாயில் பொகட்டினநீர் இழிச்சவுமாய் கொப்பளிக்கவுமாயிருக்கும். அவ்வோபாதியாக நினையாநின்ருய் இவளேயும்.

மூ;—

நீரழல்வாளுய் நெடுநிலங்காலாய் நின்றநின்நீர்மையை நினைந்தோ
சீர்கெழுகோதை யென்னலதிலளென்றன்னதோர் தேற்றன்மைதானே
பார்கெழுபவ்வத் தாரமுதனைய பாவையைப் பாவம்செய்தேனுக்கு
ஆரழலோம்புமந்தணன்தோட்டமாக நின்மனத்து வைத்தாயே.

அந;—எட்டாம்பாட்டு. (பொருந்தலனித்யாதி) "நீ உன்பெண்ணைக் கோழிவெண்முட்டையாகவெண்ணியிருக்கிறுய்; அவள்என்னை எப்போதும் மறந்தேனென்று சொல்லத்தக்கதெல்லாம் சொல்லிவேண்டப்பண்ணினுளன்றே? சிறுக்கனுக்கு*ஸமயஸமுத்பவனுய் உதவினதில்லேயோ? ஒருகுரங்குக்கு நானேபோய் உதவினதில்லேயோ" என்றுசொல்ல, அப்படி ஆஶ்ரிதபவ்யனுகில் நான் வேண்டும்படி இப்படி யிருக்கவடுக்குமோ? உனக்குத்தக்க வைலக்ஷண்யமுடையவளாகையாலே (க)"இறையுமகலகில்லேன்" என்று ஊடினுல், அதுவெல்லாம் ஏற்றமன்றே? உபேக்ஷிக்கப்படாதென்கிருளென்றுஸங்கதி.

இரணியன் என்றுதே "பொருந்தலன்" என்றதுக்குக் கருத்தருளுகிருர் (மநுஷ்யேத்யாதி). "பெருந்தகை" பேரளவுடையவர் என்றுசப்தார்த்தமாய், "பொருந்தலன்" என்றதுக்கு எதிர்த்தட்டாக வருளுகிருர்(என்றுமித்யாதி).

"பேசில் பெருந்தடங்கண்ணி" இத்யாத்யந்வயஃ. ... ... (அ)

† (பா) பெருத்திருக்கிற. (க) தி-வாய்-௬-௧௦-௧௦.

பதம்	உரை.
நீர்	ஜலத்தையும்
அழல்	அக்நியையும்
வானாய்	ஆகாசத்தையும் சரீரமாகவுடையனாகவும்
நெடுநிலம்	மஹாப்ருதிவியையும்
காலாய்	வாயுவையும் சரீரயாகவுடையனாகவும்
நின்ற	நிற்கப்பெற்ற
நின்	தேவரீருடைய
நீர்மையை	ஸ்வபாவத்தை
நினைந்தோ	திருவுள்ளம் பற்றியோ? (அல்லது,)
சீர்கெழு	"கல்யாண குணங்களால் குறைவற்ற
கோதை	இப்பெண்ணானவள்
என் அலதுஇலள்	நம்மையொழிய வேறொருஆஶ்ரயமுடையளல்லள்"
என்றன்னதோர்	என்றிப்படிப்பட்டதொரு நினைவாலுண்டான
தேற்றன்மை தானோ	திருவுள்ளத்தில்தெளிவை நினைத்தோ?

பதம்.	உரை.
பாவம்செய்தேனுக்கு	இவளையிழக்கைக்கீடான மஹாபாபத்தைப் பண்ணின என்னுடைய,
பார்கெழு	பூமியைச்சுற்றிச் சூழ்ந்து கிடக்கிற
பௌவத்து	கடலிலுண்டான
ஆரமுதுஅனைய	அருமையான அம்ருதம்போலே போக்ய பூதையான
பாவையை	இப்பெண்பிள்ளையை,
ஆரழல் ஓம்பும்	அக்நிபரிசர்யைக்கே காலம்போந்திருக்கிற
அந்தணன்	ப்ராஹ்மணனானவன்
தோட்டமாக	அஹோராத்ரம் ஶ்ரமஸாத்யமான சோலையை உபேக்ஷையாலே பாழ்படுத்துமாபோலே
நின்மனத்து	(உபேக்ஷிப்பதாக)தேவரீர் திருவுள்ளத்திலே
வைத்தாய்	நினைப்பிட்டாய்? (௯)

௯;—ஒன்பதாம்பாட்டு. (நீரழலித்யாதி) "கவுள்கொண்டநீராக உபேக்ஷித்தாயென்னவேண்டா; நாம் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகள் பண்ணும் ஸ்வபாவராயிருப்பதோம்; நம்மையொழிய இவளுக்கு வேறு கதியில்லாதிருந்தால் அப்படியே இருக்கிறோம். நீர் போக அடுக்கும்" என்ன; போக்யபூதையான இவளை இப்படி வைத்து, ஸ்ருஷ்ட்யாதிகளைப்பண்ணி நீர் ஸாதிக்கிற ப்ரயோஜநமென்? இவளுடைய போக்யதையை வ்யர்த்தமே யாக்காதே என்று சொல்லி, "ஒருத்தரைச் சொல்லுவதென்" என்று தன்னைவெறுத்துக் கொள்ளுகிறாளென்று ஸங்கதி,

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (நீரழலித்யாதி) ப்ருதி (ஸூஃ) வ்யாதி பஞ்ச பூதங்கள் நாம் இட்டவழக்காகில், இப்படி இருப்பதொருவ்யக்தியை நாம்உண்டாக்கிக்கொள்ளுகிறோமென்றிருக்கிறாயோ? விசித்ர ஸ்ருஷ்டிபண்ணவல்லோமென்றோ நினைத்திருக்கிறது. (சீர்கெழுகோதை) கல்யாணகுணங்களால் குறைவற்றிருந்தவள். அதாகிறது - நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்றுப்போலேசொல்லப்படுகிற ஸ்த்ரீத்வாதிகளால் குறைவற்றிருக்கிற இவளுக்கு நம்மையொழிய ஓராபாஶ்ரயமில்லை; அநந்யகதி, அபலை என்றுகொண்டு இத்தாலே வருகிற நெஞ்சில் தெளிவோ நீ ஆறியிருக்கிறது.

(பார்கெழுபவ்வமித்யாதி) பூமியைச்சூழ்ந்த கடலைக் கடைந்து வாங்கினவதில் ப்ரயோஜநரூபமான அம்ருதம்போலே நிரதிசய போக்யையாயுள்ளவளை. (பாவஞ்செய்தேன்) இவளுடைய ஶ்லாக்யதையில் குறையுண்டாய் இழந்திறேனல்லேன். இதுக்கடிநான் பண்ணினபாபமிறே. (ஆரழலித்யாதி) அக்நிபரிசர்யை பண்ணவே காலம் போந்திருக்கிற ப்ராஹ்மணன் தோட்டமாக நினைத்தாயே. (உன்மனத்துவைத்தாயே) வேறேயும் ஒருகர்தவ்யமுண்டாக நினைத்திராநின்றாய். .... (௯)

மூ;—

வேட்டத்தைக்கருதாதடியிணைவணங்கி மெய்ம்மைநின்றெம்பெரு
வான்திறல்தானை மங்கையர்தலைவன் மானவேல் கலியன்வாயொலிகள் [யானை
தோட்டலர்பைந்தார்சுடர்முடியானைப் பழமொழியால்பணிந்துரைத்த
பாட்டிவைபாடப்பத்திமை பெருகிச்சித்தமும் திருவொடுமிகுமே.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

—o—

பதம்.	உரை.	பதம்.	உரை.
வேட்டத்தை	அபிநிவேஶ விஷயமானபகவத்விஷயத்தை	மெய்ம்மைநின்று	பாரதந்த்ர்யத்திலே நிலைநின்று
கருதாது	(இப்போதேபெறவேணுமென்று) ஆசைப்படாதே	அடியிணைவணங்கி	ப்ரபத்திபண்ணியிருக்கிற
		எம்	எமக்கு
		பெருமானை	உபகாரகனாய்,

விவரணம் (விசித்ரேத்யாதி). "பாவம் செய்தேனுக்காக பார் கெழு வித்யாதி வைத்தாய்" என்றந்வயம். ... ... (௯)

தோடு	தொடுக்கப்பட்ட	கலியன்	ஆழ்வார்
அலர்	அலரையுடைத்தாய்	பழமொழியால்	முன்புள்ளார் சொன்ன பாசுரத்தாலே
பைந்தார்	பசுமையான திருத்துழாய் மாலையாலே	உரைத்த	அருளிச்செய்த
சுடர்	விளங்காநின்ற	வாய்ஒலிகள்	திருவாய் மொழியான
முடியானை	திருவபிஷேகத்தை யுடையனான ஸர்வேஸ்வரனை,	இவைபாட்டு	இப்பத்துப் பாட்டுக்களையும்
பணிந்து	அடிபணிந்து	பாட	பாடப்பெறில (அவர்களுடைய)
வாள்	வாளால்வந்த	சித்தமும்	மநஸ்ஸும்
திறல்	மிடுக்கையுடைய [ய்	பத்திமை பெ	பரமபக்திதலையெடுகி
தானை	ஸேனையையுடையரா		
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்		
தலைவன்	நிர்வாஹகராய் [க்கு	திருவொடு	கைங்கர்ய லக்ஷ்மியை
மானவேல்	இலையகன்றவேலையுடையரான	மிகும்	யும் பெற்று விஸ்த்ருதமாம். (௧௦)

வ்யா;—பத்தாம்பாட்டு. (வேட்டத்தையித்யாதி) மேன்மேலே பெருகிவருகிற அபிநிவேசாதிசயத்தை அமைத்து, உபாஸநத்தில் தப்பாதபடி ஆஸ்ரயிக்குமவர்களுக்கு உபகாரகனாயிருக்குமவனை. (வாள்திறல்தானை) வாளால்வந்தமிடுக்கையுடையஸேனையையுடையராய் திருமங்கைக்கு நிர்வாஹகரான ஆழ்வார். (மான

அரு;—பத்தாம்பாட்டு. (வேட்டத்தையித்யாதி) "வேட்டத்தை-அபிநிவேசவிஷயத்தை; அதாவது-பகவத் விஷயத்தை, கருதாது-இப்போதே பெறவேணுமென்று ஆசைப்படாதே, மெய்ம்மைநின்று-(க) "[illegible]-தத்தஸ்ய ஸத்ருஸம்" என்று ஸ்வபாரதந்த்ர்யத்திலே நிலைநின்று; அடியிணைவணங்கி-ப்ரபத்தி பண்ணியிருக்கிற எமக்கு, எமபெருமானை" என்று சப்தார்த்தமாய் தாத்பர்யமருளுகிறார்(மேன்மேலே இத்யாதி); (உபாஸநத்தில்தப்பாதபடி)என்றது - பக்திகார்யமான ப்ரபத்தியிலும் ஸ்வரூபவிரோதம் வாராதபடி என்கை. இங்ஙனன்றாகில் திருத்தாயாரான உபாயாத்யவஸாயத்தின்படியைச்சொன்ன இத்திருமொழியில், பெண்ணுக்காகத்தான் ப்ரயத்நம்பண்ணியும் கார்யமாகாதே, "பாவியேனுக்கு" என்றுதான் கைவாங்கினஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தியைச் சொன்னது கூடாதிறே. "தானை" என்றது-ஸேனை என்றது;

(க) ரா-ஸு-௬-௧-௬-பு;

வேல்) இலை அகன்றவேலென்னுதல்; அங்ஙனன்றிக்கே, ஆரேனும் பிடிக்கிலும் தம்மைப்போலேஆக்கும். அதாகிறது-வைஷ்ணவாபிமா நமிறே.

(தோட்டலர்பைந்தார் சுடர்முடியானை) மிக்க செவ்வியை யுடைத்தாய் குளிர்ந்ததிருத்துழாய்த்தாரையுடைய ஆதிராஜ்ய ஸூசகமான திருவபிஷேகத்தை யுடையவனை. (பழமொழியால் பணிந்துரைத்த) தான் ஒன்று கண்டு சொல்லுகையன்றிக்கே முன்புள்ளார் சொன்னபாசுரத்தையாயிற்றுச் சொல்லிற்று. (க) "యస్యాఙ్గం సుపర్ణస్య వినతా కల్పయత్పురా। అమృతం ప్రార్థయానస్య తత్తే భవతు మఙ్గళమ్- யங்மங்களம் ஸுபர்ணஸ்ய விநதாகல்பயத்புரா । அம்ருதம் ப்ரார்த்தயாநஸ்யதத்தேபவதுமங்களம்." என்னக்கடவதிறே. (பாட்டிவைபாடப் பத்திமை பெருகிச்சித்தமும்)(சித்தம் பத்திமைபெருகி)அதாகிறது-பரமபக்தியிருந்த படியைச் சொன்னபடி. (திருவொடுமிகும்) அதுக் கநந்தர முண்டாம் கைங்கர்ய லக்ஷ்மியைப் பெற்று விஸ்த்ருதமாம்.

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

பெரிய திருமொழி
பத்து ஒன்பதாம்திருமொழி முற்றிற்று.

†தொடுத்த அலருடைய பசுத்தமாலை யென்றுதல்; அலர்ந்ததோடுகளை-இதளையுடைய பசுத்த புஷ்பமென்றுதல் சப்தார்த்தம் விவக்ஷித்துப் பலிதார்த்த மருளுகிறார் (செவ்வியித்யாதி). முந்தினபக்ஷத்தில் கலப்பில் "தோட்டலர்என்று" நீட்டிக்கிடக்கிறது; இரண்டாம்பக்ஷத்தில் வல்லொத்தென்று கொள்ளவேணும். எடுத்ததுக்கு அந்வயம், (சித்தம்பத்திமை பெருகி) என்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

அ௩;—திருத்தாயின் ப்ரவேசம். கீழ்த்திருமொழியிலே திருத்தாயார் அவன் வார்த்தையை விஶ்வஸித்துத், தான் கைவாங்கி வந்து பெண்பிள்ளையோடே "வருகிறேனென்று சொன்னான்"என்று சொல்லியிருக்க, அநந்தரம்

† (பா) தோட்டத்திலிருப்பதே அலருடைய பசுத்தத்தார் என்றுதல், அலர்ந்ததோடு-தேனையுடைய பசுத்தத்தாரென்றுதல்.

(க) ரா-அ-உ௫-௩௯;

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பத்தாம்பத்து பத்தாம்திருமொழி

திருத்தாயின் ப்ரவேசம்.

அவ;—திருத்தாயார் ஓரளவிலே கூப்பிட்டுக்கைவாங்கினளாய் நின்றது கீழ்த்திருமொழியில்; இதில் இப்பிராட்டி தான் தன்னுடைய ஆற்றாமையாலே அவனை என்றோடே சேர்க்கவேணுமென்று, கண்ணால் கண்ட பக்ஷிகளின் காலிலே விழுகிறாள். இனி இவை தான் ஸம்ச்லேஷமாகை யன்றிக்கே க்ராகமாகவும் வற்றென்றிருக்கிறாள் காணும்.

மூ;—திருத்தாய் செம்போத்தே
திருமாமகள்தன் கணவன்
மருத்தார் தொல்புகழ் மாதவனைவரத்
திருத்தாய் செம்போத்தே. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
செம்போத்தே	ஓ! செம்போத்துப் பறவையே!	மாதவனை	இத்தனைக்கு மடியான மாதவனென்ற திருநாமத்தையுடையனை ஸர்வேச்வரனை
திருமாமகள்தன்	பெரியபிராட்டியாருக்கு		
கணவன்	வல்லபனாய்	வர	(என்னளவு மொருகால்) வரும்படியாக
மரு	மணம்மாறாத [னாய்		
தார்	மாலையை யணிந்தவ	திருத்தாய்	அநுகூலிக்கவேணும்;
தொல்	அநாதிஸித்தமான		செம்போத்தே! திருத்தாய்.
புகழ்	ஆச்ரிதரக்ஷகத்வப்ரதையையுடையனாய்		[ஆதராத்புநருக்தி.] (௧)

வ்யா;—முதற்பாட்டு. (திருத்தாய்) போத்துத் திருத்துகையாவது - அநுகூலிக்கை - (திருமாமகள் தன்கணவன்) உனக்

வரவுக்கு சகுனங்களைப் பார்க்கிறானென்று ஸங்கதியருளுகிறார் (திருத்தாயாரித்யாதி). ஸம்சகங்களாமித்தனை யொழிய அவை சேர்க்கவற்றோ, அதின்காலில் விழுவானென்னென்ன வருளுகிறார் (இனியித்யாதி). ... ...

அநு;—முதற்பாட்டு. (திருத்தாயித்யாதி) திருத்தாயார் வந்து 'க்ருஷ்ணன் வருகிறான்'' என்று சொன்னபின்பு இவள் புறப்பட்டுப்போகவேண்டுவதில்லையே; செம்போத்தை வலமாகச் சொல்லுகிறதென்னென்ன வருளுகிறார் (போத்தித்யாதி). இருக்கிறவிடத்திலிருந்து வலமாகப் போனால் அவன் வருவனென்று குறித்துக்கொள்ளுகிறாளென்று கருத்து. உன் குற்றம் கயாமி

ரூத் திருத்துகைகையென்றொரு வருத்தமில்லை. இத்தலையில் அபராத ஸஹத்வத்துக்கு அடியான லக்ஷ்மீபதித்வத்தையு முடையனாயிருக் கும். (மருத்தார்) ரக்ஷணத்துக்கு உறுப்பாகத் தனிமாலையிட்டுக் கொண்டிருக்கிறவன். தேன்மாருதத்தாரென்றபடி. (தொல்புகழ்)என் று மொக்க இவற்றினுடைய ரக்ஷணமே பண்ணிப்போருகையாலே வந்த குணவத்தாப்ரதை(த)யையுடையவன். (மாதவனைவர) லக்ஷ்மீபதி யென்கையன்றிக்கே, இது தானே தனக்குப் பேராயிருக்கை. (திருத்தாய் செம்போத்தே) ஒருகால் சொன்னால் ஆதரம் மட்ட மென்றிருக்கிறதாய்க்கொண்டு இருகால் மட்டுச்சொல்லுகிறாள். (க)

மூ;—கரையாய் காக்கைப் பிள்ளாய்
கருமாமுகில்போல் நிறத்தன்
உரையார் தொல்புகழுத்தமனை வரக்
கரையாய் காக்கைப்பிள்ளாய். (உ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காக்கைப் பிள் ளாய்	மஹோபகாரகனைகாக் காய்!;	தொல்	நித்யமான
கருமாமுகில் போல்	காளமேகம்போன்ற	புகழ்	புகழையுடையனாய்,
நிறத்தன்	திருநிறத்தை யுடைய னாய்	உத்தமனை	தீரோதாத்த நாயகனை சக்ரவர்த்தித் திருமகனை
உரைஆர்	சப்தபூர்த்தியையுடை த்தாய்	வர	(என்னளவும்) வரும் படியாக
		கரையாய்	கூப்பிடவேணும்;
			காக்கைப்பிள்ளாய்!கரையாய், (உ)

வ்யா;—இரண்டாம்பாட்டு. (கரையாய்க் காக்கைப்பிள்ளாய்)

வராவிடில் வலயானது வ்யர்த்தமாகாதோ என்று நிற்கிறதாகச் சொல்லுகிறு ளென்றருளுகிறார் (உனக்கித்யாதி). கீழே"திருமாமகள் தன்கணவன்"என்று சொல்லிவைத்து"மாதவன்"என்றால்புநருக்தியாமே என்னவருளுகிறார் (லக்ஷ்மீபதீத்யாதி), ... (க)

அரு;—இரண்டாம்பாட்டு. (கரையித்யாதி)செம்போத்தானது ".நீ என் னைத் திருத்தச்சொன்னாய்; அத்தாலே நீ புறப்பட்டுப்போக ஒருப்பட்டாப் போலே யிருக்கிறது. அத்தால் எனக்கும் கூடப்பழிவிளையும்" என்று இருக் கிறதாகக்கொண்டு, அருகிருக்கிற காக்கையின் கட்டுரை கேட்கிறுளென்று ஸங்கதி

காக்கையை "பிள்ளை" என்று கொண்டாடவேணுமோ வென்னவருளுகி

பகவத் விஷயத்தில் உபகாரகராயிருப்பாரை ஸ்தோத்ரம் பண்ணக் கடவதாயிறே இருப்பது. (௧) "ప్రశ్శంసమహాకపిమ్- ப்ரஶசம்ஸமஹா கபிம்'' என்னக்கடவதிறே. (கருமாமுகில்போல் நிறத்தன்) கரைந்து கூட்டிற்றில்லையாகிலும் இழக்கவொண்ணாதபடியான வடிவு படைத்தவன். (உரையார் தொல்புகழ்) சப்த பூர்த்தியை யுடைத்தாய் நித்யமான புகழையுடையவனாயிருக்கிறவனை. " உரை " என்கிறது- ஶ்ரீ ராமாயணத்துக்கு ப்ரதிபாத்யனாயிருக்கிறவனை. (புகழ்) ரக்ஷிக்கையால் வந்த புகழையுடையவனை. (உத்தமனை) பிராட்டிக்காகத் தன்மார்விலே அம்பேற்ற தீரோதாத்த நாயகனை, (வரக்கரையாய்).

மூ;—கூவாய் பூங்குயிலே
குளிர்மாரி தடுத் துகந்த
மாவாய்கீண்ட மணிவண்ணனை வரக்
கூவாய் பூங்குயிலே. .... (௬)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பூ	தர்ஶநீயமான	வாய்	வாயை
குயிலே	கோகிலமே!,	கீண்ட	கிழித்துப் பொகட்டவனாய்
குளிர்	(பசுக்களுக்கு மிடையர்க்கும்) மிக்க குளிரையுண்டாக்கக்	மணி	ஸ்ப்ருஹணீயமான
மாரி	கல்வர்ஷத்தை [கடவ	வண்ணனை	வடிவையுடையனான கண்ணபிரானை
தடுத்து	(கோவர்த்தநத்தால்) தடுத்து(அதனால்)	வர	வரும்படியாக
உகந்த	ஸந்தோஷித்தவனாய்,	கூவாய்	கூவவேணும்;
மா	ப(ஒ) காஸுரனுடைய		பூங்குயிலே! கூவாய். (௬)

ரார் (பகவத்விஷயத்திலித்யாதி). (சப்தபூர்த்தியையுடைத்தாய்) என்றதுக்கு, அவனுடைய புகழுக்கு வாசகங்களான சப்தங்கள் பூர்ணமாயிருக்கையென்று கருத்து. அர்த்தாந்தரம் (உரையித்யாதி). (ஶ்ரீ ராமாயணத்துக்கு) என்ற வநந்தரம் "பேர்;அதுக்கு'' என்று கூட்டுவது,(ரக்ஷிக்கையால்வந்த)என்றது-*ஸபித்ராசேத் யாதிப்படியே, உன்வம்சத்தானான காக்கையை ரக்ஷிக்கையாலுண்டான வென்கை. காக்கையைக்குறித்துச் சொல்லுகிற பாசுரமாகையாலே "உத்தமன்'' என்றதுக்கு -காக்கையை ரக்ஷித்த காகுஸ்த்தனே யாக வேணுமென்று திருவுள்ளம். ... ... (௨)

(௧) ரா-

வ்யா;—மூன்றாம்பாட்டு. (கூவாய்) தர்ஶநீயமான உன்படியைக்காட்டி கண்ணுக்கிரையிட்டாப்போலே செவிக்கும் இரையிடப்பாராய். (குளிர்மாரி தடுத்துகந்த) பசுக்களும் இடையரும் வர்ஷத்திலே துலையப்புக, கைக்கெட்டிற்றொரு மலையை எடுத்து அவற்றை ரக்ஷித்து "இவை நோவுபடாதொழியப் பெற்றோமே" என்று அத்தாலே தானேஉகந்தானாயிற்று. (மாவாய் கீண்ட) பகாஸுரனுடைய வாயைக்கிழித்த. (மணிவண்ணனை) விரோதியைப் போக்கிற்றிலனேயாகிலும் விடவொண்ணாதபடியாயிற்று வடிவழகு. (௩)

மூ;—கொட்டாய் பல்லிக்குட்டி
குடமாடி யுலகளந்த
மட்டார்பூங்குழல் மாதவனைவர
கொட்டாய் பல்லிக்குட்டி. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பல்லிக்குட்டி	ஓ பல்லிக்குட்டீ!	பூ	பூக்களை அணிந்த
குடம்ஆடி	குடக்கூத்தாடி	குழல்	திருக்குழலையுடையனாய்
உலகுஅளந்த	(த்ரைவிக்ரமாபதாநத்திலே) லோகங்களையெல்லாமளந்தருளினவனாய்	மாதவனை	ஶ்ரியஃபதியான ஸர்வேஶ்வரனை
		வர	வரும்படியாக
		கொட்டாய்	கொட்டவேணும்;
மட்டுஆர்	தேன்மாறாத	பல்லிக்குட்டீ!	கொட்டாய். (௪)

அரு;—மூன்றாம்பாட்டு. (கூவாயித்யாதி). * பிண்டத்திரளையும் பேய்க்கிட்ட நீர் சோறும் உண்டற்கு வேண்டி ஓடித்திரிகிறதாகையாலே அது பறந்துபோக, அருகில் பூங்குயில்களைப்பார்த்துக் கூவச்சொல்லுகிறாளென்று ஸங்கதி.

"பூம்" என்றதுக்குத் தாத்பர்யம் (தர்ஶநீயேத்யாதி). ஆபத்திலே உதவுமவன் என்னும் தாத்பர்யமருளுகிறார் (பசுக்களித்யாதி). ... (௩)

அரு;—நாலாம்பாட்டு. (கொட்டாயித்யாதி) (க) "వసన్తకాలే సంప్రాప్తే కాకః కాకః పికః పికః - வஸந்தகாலே ஸம்ப்ராப்தே காகஃ காகஃ பிகஃ பிகஃ" "தான் கூவினால், தன்னைப் போஷிக்கிறகாக்கைக்கும் தனக்கும் வைஜாத்யம் தோற்றி வாயில் சோறு இழக்கவேண்டிவரும்" என்றுஇருந்ததாகக்கொண்டு, தனக்குஅடிக்கடி சுபஸூசகமான தக்ஷிணகௌளியை ஆசைப்படுகிறாளென்று ஸங்கதி.

வ்யா;—நாலாம்பாட்டு. (கொட்டாய் பல்லிக்குட்டி) என்று மொக்கப் பரஹிதமே பண்ணிப்போருகை உனக்கு ஸத்தாப்ரயுக்த மன்றோ? (க) "बाल्यात्प्रभृति सुस्निग्धः - பால்யாத்ப்ரப்ருதி ஸுஸ்நிக்த்த:" என்னுமாபோலே இருக்கிறது. (குடமாடியுலகளந்த) ஒரு ஊரில்: மன்றுபாழ் தீரும்படியாகக் குடக்கூத்தாடினான். ஒருலோகத்தில் பாழ்தீருப்படியாகவும் ஒருகூத்தாடினானாயிற்று. (மட்டார் பூங்குழல்) தேன்மாறாத பூமலரையுடைத்தான திருக்குழலையுடையவனை. (மாதவனை) பரமப்ரணயியானவனை. .... (௪)

மூ;—சொல்லாய் பைங்கிளியே

சுடராழி வலனுயர்த்த

மல்லார்தோள் வடவேங்கடவனை வரச்

சொல்லாய் பைங்கிளியே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பை	பசுமைநிறம் மாறாத	தோள்	திருத்தோள்களையுடையனாய்
கிளியே	ஓ கிளிப்பிள்ளாய்!,	வடவேங்கடவனை	வடக்குத் திருமலையிலே நின்றருளுமவனை ஸர்வேச்வரனை
சுடர்	ஒளிமிக்க	வர	வரும்படியாக[வேணும்;
ஆழி	திருவாழியாழ்வானை	சொல்லாய்	ஒருவார்த்தை சொல்ல
வலன்	வலதுதிருக்கையிலே	பைங்கிளியே! சொல்லாய். (ரு)	
உயர்த்த	ஏந்தாநின்றுள்ளவனாய்,		
மல் ஆர்	மிக்கவலியையுடைய		

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (சொல்லாய் பைங்கிளியே) உன் வடிவைக் காட்டி ரக்ஷித்தாப்போலே, உன்னுடைய பேச்சாலும் ரக்ஷிக்கப்பாராய். (சுடராழி வலனுயர்த்த) ஒருவிரோதி வந்த போதாக ஏந்துகையன்றிக்கே, ஏற்கவேகோலித்திருவாழியைவலவருகே

நன்மைசொன்னால் செய்யவும், தீமை சொன்னால் தவிரவுமாயிருக்கையாலே அருளுகிறார் (என்று மொக்கவித்யாதி). ... ... (௪)

அரு;—அஞ்சாம்பாட்டு. (சொல்லாயித்யாதி) பல்லியானது பலிசமானதாகையாலே "நினைத்தபோது கொட்டவேணுமென்றுநமக்கு நிர்பந்தமென்" என்றிருந்ததாகக்கொண்டு, கூட்டிலிருந்தகிளியைப்பார்த்துப் பேச்சுக்கொள்ளுகிறாளென்று ஸங்கதி.

பசுமைசொன்னதுக்குத் தாத்பர்யம் (உன்னித்யாதி). ... ... (ரு)

(க) ரா-பா-கஅ-உஎ.

ஏந்திக்கொண்டிருக்கிறனாயிற்று. (மல்லார்தோள்) ஆயுதம் தானும் மிகையாம்படியான திண்ணிய தோளையுடையவன். (வட வேங்கடவனைவர) ரக்ஷணத்துக்குறுப்பாக முதலடியிட்டுக்கொண்டு நிற்கிறவனை. .... (ரு)

மூ;—கோழி கூவென்னுமால்
தோழி நானென்செய்கேன்
ஆழிவண்ணர் வரும் பொழுதாயிற்றுக்
கோழி, கூவென்னுமால். (சா)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தோழி	வாராய் தோழீ!	கோழி	(உடனே)விஸ்லேஷ ஸூசகமான கோழி யானது
கோழி	(வரவைஸூசிப்பிக்கும்) சாமக்கோழியானது	கூ என்னும்	"கூ" என்று கூவா நிற்கும்.
கூ என்னும்	'கூ' என்று கூவாநின்	ஆல்	கஷ்டம்; (இனி அவன் பிரிந்துபோமாகையால்,)
ஆல்	ஸந்தோஷம். [றது		
ஆழி	கடல்போன்ற		
வண்ணர்	திருநிறத்தை யுடைய னை கண்ணபிரான்		
வரும்பொழுது	வரக்கடவ காலமானது	நான்என்செய்கேன்	நான்என்னசெய்வேன். (சா)
ஆயிற்று	அணுகப்பெற்றது;		

வ்யா;—ஆறும்பாட்டு. (கோழியித்யாதி) "தோழி" என்று ஸமாநதுக்கையாய் உடன்கேடியானவளை ஸம்போதித்து "கோழி கூவென்னுமால், ஆழிவண்ணர் வரும்பொழுதாயிற்று, கோழி

அரு;—ஆறும்பாட்டு. (கோழியித்யாதி) கிளியைப்பார்த்து "சொல்லாய்" என்று சொல்லுவது-(க)"கண்ணன் நாமமே குழறிக்கொன்றீர்" என்கிற பாசுரத்தை நினைக்கிற இத்தசையிலே நாம் பேசவொண்ணுதென்றிருக்க, கோழியானது காலஜ்ஞாநியாகையாலே வரவுக்கு ஸூசகமாக "கூ" என்ன; திடுக்கிட்டெழுந்திருந்து கோழியருகேவந்து "இனிவந்தால் உடனே கோழிகூவென்னுமே? மேல் வரும்பிரிவுக்கு என்செய்வேன்" என்கிறாளென்று ஸங்கதி.

க்ருஷ்ணன் பசுமேய்த்துவந்து குளித்து ஒப்பித்துஉண்டு உறங்கஒருசாமமும், பெண்களிருந்தவிடம்தேடி வர ஒருசாமமும், ஒருவரறியாதபடி மீண்டு போய் பசுவின் சிறுவீடுமேய்க்க ஒருசாமமுமாய், த்ரியாமா இப்படி கழியுமாகையால், நடுச்சாமத்தில் கோழிகூவிற்றன, கோழிகூவிற்று வந்தானென்று உகந்து, உடனே கூவுகிறபடியாலே சாமம் க்ஷணமாய்கூவுதலால்க்லேசமும்

(க) தி-வாய்-கூ-ரு-அ.

கூவென்னுமால், என்செய்கேன்'' என்கிறாள். இதுக்குப் பொருளாக ஜீயர் அருளிச்செய்தாராகப் பிள்ளை அருளிச்செய்யும்படி; - "க்ருஷ்ணன் கோழிகூவினவாறே வருமாய், மீண்டு கோழிகூவினவாறே போமாய், வரவைஸூசிப்பிக்கிற கோழி கூவாநின்றது. பிரிவில் தரிக்கவொண்ணாதபடி கடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவர் வருங்காலமாயிற்று; மீண்டு கோழிகூவப் போவர். நடுவுஸம்ஶ்லேஷத்துக்குக் காலமில்லை. நான் என் செய்கேன் என்கிறாள்'' என்று. "க்ருஷ்ணன் கோழியை மடியிலே இட்டுக்கொண்டுவரும் போலேகாணும்'' என்று பட்டர் அருளிச்செய்தாரென்று ப்ரஸித்தமிறே. .... (சு)

மூ;—காமற் கென் கடவேன்

கருமாமுகில் வண்ணற் கல்லால்
பூமே லைங்கணைகோத்துப் புகுந்தெய்யக்
காமற் கென்கடவேன்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
கருமாமுகில்	காளமேகம்போன்ற	ஐங்கணை	பஞ்சபாணங்களை [த்து
வண்ணற்கு	திருநிறத்தையுடைய கண்ணபிரானுக்கு	கோத்து	(கருப்புவில்லில்)தொடு
		புகுந்து	உள்ளேபுகுந்து
		எய்ய	ப்ரயோகியாநிற்க,
அல்லால்	கடமைப்பட்டிருக்கை யொழிய[னமந்மதன்)	காமற்கு	(அப்படிப்பட்ட)மன்மதனுக்கு [ன்?;
மேல்	அதற்குமேலே (புத்ரனு	என்கடவேன்	என்னசெய்யவல்லேனே
பூ	புஷ்பங்களாகிற		காமற்கு என்கடவேன்?. (எ)

நடக்கிறதென்றுஅதுக்கு ஒருஸம்வாதமருளுகிறார் (இதுக்கித்யாதி), (க்ருஷ்ணன் கோழியையித்யாதி). ... ... (சு)

அந;—ஏழாம்பாட்டு. (காமற்கித்யாதி). தோழியானவள் நீ"வரும்பொழுதானால் உகந்ததுக்கநுகுணமாக ஒப்பித்திருக்கவிறே அடுப்பது. மேல்வரும் பிரிவை நினைத்தஞ்ச, அடுக்குமோ''என்ன, "ஸாக்ஷாந்மந்மதமந்மதனானவன் வடிவாகையாலே உடனே ஆற்றாமையைவிளைவிக்கும், அதுக்குமேலே (தாய்) என்று பாராதே காமன்கணைதொடுப்பனே; நான் அஞ்சாதேயிருக்க வழிஎன் தோழி''என்கிறாளென்று ஸங்கதி.

வ்யா;—ஏழாம்பாட்டு. (காமனித்யாதி) வயிற்றில்பிறந்த காமனுக்குஎன்கடவேன்; மாமணவாளரான கறுத்துப்பெரிய முகில் வண்ணற்கொழிய. "கருமாமுகில் வண்ணர்" என்கையாலே இதர விஷயத்துக்கிறே அவன் ப்ரேரகன். இவ்விஷயத்துக்கு அவன் ப்ரேரிக்கவேண்டா; அவன் வடிவுதானேயிறே ப்ரேரகம். (௧) "பேரமர்காதல் கடல்புரையவிளைவித்தகாரமர்மேனி" என்னக்கடவதிறே. கருப்புவில்லிலே புஷ்பபாணங்களைந்தையும் தொடுத்தெய்ய. (எ)

மூ;—இங்கே போதுங்கொலோ
இனவேல் நெடுங்கண்களிப்பக்
கொங்கார்சோலைக் குடந்தைக் கிடந்தமால்
இங்கே போதுங்கொலோ. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
கொங்கு ஆர்	தேன்நிறைந்த	வேல்	வேல்போலே
சோலை	சோலைகளையுடைய	நெடு	நெடிதாயிருந்துள்ள
குடந்தை	திருக்குடந்தையிலே	கண்	(என்) கண்களானவை
கிடந்த	பள்ளி கொண்டருளுமவனை	களிப்ப	களிக்கும்படியாக
		இங்கே	இவ்விடமேற
மால்	ஸர்வேஶ்வரன்,	போதும்கொல்லோ	எழுந்தருளுவனே?
இனம்	ஒன்றுக்கொன்றொப்பாய்		
		இங்கே போதுங்கொலோ?	(அ)

ருக்மணிப்பிராட்டி வயிற்றிற்பிறந்த முறைமையாலே அருளுகிறார் (வயிற்றிலித்யாதி).(மாமணவாளரான) என்றது-பர்த்ருநாமக்ரஹணம் பண்ணாதே வ்யவஹரிக்கும் லோகஸயாதியைப்பற்ற. "மேல் பூவைங்கணை கோத்து" என்றந்வயமாய், அவன்திருமேனி ஆற்றாமையை விளைவிக்கு மென்றதுக்குமேல் பூக்களாகிற பாணங்களைக்கோத்து என்று தாத்பர்யமாய், கறுப்புவில்லியாகையாலே அருளுகிறார் (கறுப்பித்யாதி). ... ... (எ)

அரு;—எட்டாம்பாட்டு. (இங்கேயித்யாதி) "கோழிகூவின மாத்ரம் கொண்டு அவன் வந்தானாகவும், அவன்திருமேனி ஆற்றாமையை விளைவிக்குமென்று விசாரப்படுகிறாய்; இன்னம்தானே வருகிறானோ? ஆள்வரவிடுகிறானோ? இரண்டுக்கு மொக்கும் இக்கோழி கூவுதல்" என்ன; "நீ நல்லநிரூபகையிறே. எனக்கும் அத்தை நிஶ்சயித்துத் தரவேணும்" என்று ப்ரார்த்திக்கிறாளென்று ஸங்கதி.

(௧) தி-வாய்-ு-௩-௪.

வ்யா;—எட்டாம்பாட்டு. (இங்கேபோதுங்கொலோ) இரண்டு தலைக்கும் ஸ்வரூபஹாநியாக நான் அங்கே செல்லாமே, தான் இங்கே வரவல்லனேயோ? வந்தால் கொள்ளும் ப்ரயோஜநமிருக்கிறபடி, ஒன்றுக்கொன்று ஒப்பாய், வேல்போலே நெடிதாயிருந்துள்ள கண்கள் களிப்ப; தேனூர்ந்து சோலையை யுடைத்தான திருக்குடந்தையிலே சாய்ந்தருளின வ்யாமுக்த(ஃ)ன். .... (அ)

மூ;—இன்னு ரென்றறியேன்
அன்னே யாழியொடும்
பொன்னார் சார்ங்கமுடையவடிகளை
இன்னு ரென்றறியேன். (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்னே	அம்மே!	உடைய	திருக்கையிலேயுடைய
ஆழியொடும்	திருவாழி யாழ்வானையும்	அடிகளை	ஸ்வாமியை [ரான
பொன் ஆர்	ஸ்ப்ருஹணீயமான	இன்னார்என்று	இன்ன ஜாதீயரென்று
சார்ங்கம்	சார்ங்கமென்னும் தநுஸ்ஸையும்	அறியேன்	அறிகிறிலேன்;
		இன்னார் என்று அறியேன்.	(கூ)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (இன்னுரித்யாதி). தேவனோ? மநுஷ்யனோ? அறிகிறிலேன். தேவத்வ ஸூசகமான திருவாழியையும், மநுஷ்யத்வைகாந்தமாய், ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீஸார்ங்கத்தையுமுடைய ஸ்வாமிகளை. அடையாளம் சொல்லாநிற்கச்செய்தே "அறியேன்" என்னப்பண்ணுகிறதிறே. அவன் வைலக்ஷண்யம். .... (கூ)

அன்றிக்கே, பின்னையும் வரக்காணுமையால் நாமேஆற்ருமைவிஞ்சிப்புறப்படவேண்டி வருமோவென்று ஸங்கதியாகவுமாம். ... ... (அ)

அரு;—ஒன்பதாம்பாட்டு, (இன்னுரித்யாதி) திருக்குடந்தையில் கிடந்தவர் சார்ங்கபாணியின் படியும், ஆராவமுதாழ்வாரையும் அநுபவித்தாராகையாலே, அவருடைய போக்யதை நெஞ்சில் ஊற்றிருந்து முன்னிலையாக வந்தாப்போலே தோற்றக்கண்டு உகக்கிருளென்று ஸங்கதி.

மநுஷ்யத்வே பரத்வம் இவருக்கு அடையாளமென்று சொல்லிக்கொண்டும் ஆஸ்சர்யப்படுகிருள், போக்யதையாலே என்றுகருத்தருளுகிருர் (அடையாளமித்யாதி). ... ... (கூ)

மூ;—தொண்டீர் பாடுமினோ

சுரும்பார்பொழில் மங்கையர்கோன்
ஒண்டார்வேல் கலியனொலிமாலைகள்
தொண்டீர் பாடுமினோ. (௧0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தொண்டீர்	ஓ பாகவதர்களே!	தார்	மாலையையும்
சுரும்பு ஆர்	வண்டுகள்மாறாதே கிடக்கிற	வேல்	வேலையும் உடையரான
பொழில்	சோலையையுடைய	கலியன்	ஆழ்வார்
மங்கையர்	திருமங்கையிலுள்ளார்க்கு	ஒலி	அருளிச்செய்த
கோன்	நிர்வாஹகரரய்,	மாலைகள்	சொல் மாலையான இப் பாசுரங்களை
ஒண்	அழகிய	பாடுமின்	(வாயாரப்) பாடுங்கோள்!;

தொண்டீர்! பாடுமினோ—. (௧0)

வ்யா;—பத்தாம்பாட்டு. (தொண்டீரித்யாதி) பகவத்விஷயத்தில் சாபலமுடையாரெல்லாரும் பாடுங்கோள். வண்டுகளார்ந்த பொழிலையுடைய திருமங்கையிலுள்ளார்க்கு நிர்வாஹகரான அழகிய மாலையையுடைய வேலை நிரூபகமாகவுடைய ஆழ்வாரருளிச்செய்த மாலைகள். ப(ஃ)லஶ்ருதி சொல்லாதொழிந்தது இதுதானேப்ரயோஜநமாகையாலே. .... (௧0)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பத்தாபத்து பத்தாந்திருமொழி முற்றிற்று.

அரு;—பத்தாம்பாட்டு. (தொண்டீரித்யாதி) "சுரும்பு" என்றதினர்த்தம் (வண்டுகள்) என்றது. ... ... (௧0)

ஜீயர்திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
பதினோராம்பத்து முதல்திருமொழி
குன்றம் ப்ரவேசம்.

வ்யா;—குன்றம்ப்ரவேசம். பக்ஷிகளின் காலிலே விழுந்து என்னையும் அவனையும் சேரவிடவேணுமென்றாள் கீழ்த்திருமொழியில்; அவை இது செய்தனவில்லை. அதுக்குமேலே தென்றல்துடக்கமான பாத (ஸ்ரீ) கபதார்த்தங்களின் கீழே ஜீவிக்கப் போகாமையாலே, ஜீவநத்தில் நசையற்று நோவுபட்டுச் சொல்லுகிற பிராட்டி பாசுரத்தாலே தத்தசையைப் பேசுகிறார். .... *

மூ;—குன்றமொன்றெடுத்தேந்தி மாமழை
அன்றுகாத்த வம்மா னரக்கரை
வென்றவில்லியார் வீரமேகொலோ
தென்றல்வந்து தீவீசு மென்செய்கேன். (க)

பதம்.	உரை.
அன்று	பசுக்களுமிடையரும் கல்வர்ஷத்தால் நோவுபட்டவன்று
குன்றம்ஒன்று	ஒருகோவர்த்தந பர்வதத்தை
எடுத்து	ஸமூலமாகக் களைந்தெடுத்து,
ஏந்தி	குடையாகத்தரித்து,
மாமழை	பெருத்த மழையில்
காத்த	(அவர்களைரக்ஷித்தரு)
அம்மான்	ஸ்வாமியாய், [ளின
அரக்கரை	ராக்ஷஸஜாதியரையடைய
வென்ற	ஜயித்த
வில்லியார்	வில்லையுடையரான பெருமாளுடைய
வீரமேகொலோ	வீரப்பாட்டைப் பின்சென்றோ,
தென்றல்	தென்றல்காற்றானது
வந்து	நானிருக்குமிடமேற வந்து
தீ	எரியை
வீசும்	வீசாநின்றது?;
என்செய்கேன்	(இதற்குநான்) என்னசெய்யக்கடவேன்?

வ்யா;—முதற்பாட்டு. (குன்றமொன்றெடுத்து) வர்ஷத்துக்குப் பரிஹாரமாகவெடுப்பது - குடையாயிருக்க, மலையை ஏடுத்தா

அரு;—குன்றம்ப்ரவேசம். (சேரவிடுகை) வருகைக்குஸூசகமாகை.

அரு;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி)(பரிஹாரமாக) - நிவர்த்தகமாக,

யிற்றுப் பரிஹரித்தது. ஒருவரால் சலிப்பிக்க வொண்ணுதாய், அத்விதீயமாயிருக்கிற மலையை எடுத்து. (ஏந்தி) மலையைத்தரித்துக் கொண்டு நிற்கிறவிடத்தில் பரார்த்தமான செயலாகையாலே வருத்தமற்று, இதுதானே போதுபோக்காக நின்றநிலை. (மாமழை) ப்ராப்தகாலத்தில் மழையன்றிக்கே, அகாலத்திலே வர்ஷத்துக்கு நிர்வாஹகனான இந்த்ரன் குபிதனாய் வர்ஷிப்பிக்கவந்ததாயிற்று. (அன்றுகாத்த) (௧) "ஸீதாக்ஷுப்தபஸு - மஸீதாந்தம் - கோகோபீஜந ஸங்குலம் - அதிவார்த்தம்" என்கிறபடியே பசுக்களும் இடையரும் நோவுபடுகிறவன்று பரிஹரித்த ஸர்வேஶ்வரன்.

(அரக்கரைவென்ற வில்லியார்) ஒருத்தன் அபகாரம்பண்ண, ராக்ஷஸஜாதியாக நிரஸித்தான். (வீரமேகொலோ தென்றல்வந்து தீவீசும்) பசுக்களும் இடையரும் நோவுபட அத்தைப் பரிஹரித்தான். ஒருவன் அபகாரம் பண்ண, ஜாதியாக அழியச்செய்தான்; அப்படியிருக்கிறவனுடைய வீரம் நமக்குப் பலித்தபடியோ, இத்தென்றல் இப்படி பாத(பாத)கமாகிறது. (தீவீசும்) நெருப்புச்சுடப் புக்கால் (௨) "ஶீதோ பவ" என்று குளிரும்படிபண்ணவல்லவன் தன்பக்கலிலே குளிர்த்தியையுடைத்தான தென்றல் நெருப்புத்தூவும்போது அவர்பண்ணிவிட்டதாகவேணும். (என்செய்கேன்) பசுக்களும் இடையரும் வர்ஷத்தைப் பரிஹரித்துக்கொள்ளுதல்; பிராட்டி "அதார்மிகனான ராவணன் நஷ்டனுவான்" என்று சபித்துப் போருமன்றுயிற்று, இவளுக்குத் தென்றல் பரிஹரித்துக் கொள்ள ப்ராப்தியுள்ளது. .... (௧)

"ஒன்று" என்றதுக்குத் தாத்பர்யமருளுகிறார் (ஒருவரித்யாதி). "எடுத்து" என்று சொல்லியிருக்கவும் "ஏந்தி" என்பானென்னென்ன வருளுகிறார் (மலையித்யாதி). "மா" என்று விசேஷித்ததுக்குக் கருத்து (ப்ராப்தேத்யாதி).

(ஒருத்தன்) ராவணன். விரஹிணிகளுக்குத் தென்றல் தீயாயிருக்கை ஸித்தமாயிருக்க, அவர் வீரத்தை இதுக்கு ஹேதுவாகச் சொல்லுவானென்னென்ன வருளுகிறார் (நெருப்பித்யாதி). அவன் வாசியாலே நானே ஸந்நிதியிலேபோய் பரிஹரிக்கப் போருகிறதில்லை என்றுகருத்து. பாத (பாத) கமானால் நெருப்பையும் குளிரப்பண்ணுகிறவர், குளிர்ந்ததைக் குளிரப்பண்ணுகைக்கு விசாரப்படவேணுமோவென்னென்ன வருளுகிறார் (பசுக்களுமித்யாதி). (௧)

---

(௧) வி-பு-௫-௧௧-௧௩. (௨) ரா-ஸு-௩-௫௩-௩௦.

மூ;—காரும் வார்பனிக்கடலு மன்னவன்
தாரு மார்வமும் கண்டதண்டமோ
சோரு மாமுகில் துளியினூடுவந்து
ஈரவாடைதா னீருமென்னையே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
காரும்	காளமேகத்தையும்	சோரும்	வர்ஷியாநின்ற
வார்	குறைவறநிறைந்து	மாமுகில்	மேகங்களினுடைய
பனி	குளிர்ந்திருந்துள்ள	துளியின் ஊடு வந்து	துளிகளுள் குளிர்ச்சியை யூட்டிக்கொண்டு வந்து(அத்தாலே)
கடலும்	ஸமுத்ரத்தையும்		
அன்னவன்	ஒத்திருந்துள்ளஸர்வேஸ்வரனுடைய[யும்	ஈரம்	மிகவும் சைத்யத்தை விளைக்கக்கடவ
தாரும்	திருத்துழாய்மாலையை		
மார்வமும்	திருமார்பையும்[ததற்கு	வாடைதான்	காற்றனது
கண்ட	ஆசைப்பட்டுப் போந்	என்னை	(விரஹக்ருசையான) என்னை
தண்டமோ	(அவன்) தண்டம் செய்தபடி என்தான்!;	ஈருமே	நலியாநின்றதே. (௨)

வ்யா;—இரண்டாம்பாட்டு. (காரும்) மேகமும். (௧) "மேகஶ்யாமம் - மேகஶ்யாமம்" என்னும்படியாயிறே வடிவுதானிருப்பது. (வார்பனிக்கடலும்) குறைவற நிறைந்து குளிர்ந்திருக்கிறகடலும். (அன்னவன்) ஒன்றேப்பாக மாட்டாமையாலே கதிர்பொறுக்கிப்பலவற்றையுமொப்பாகப் பிடிக்கிறது. (தாரித்யாதி) தோளும் தோள்மாலையுமான மார்வும்கண்டு ஆசைப்பட்டுவந்த தண்டமோ? இதரவிஷயப்ரவணர்பட்டது படாநின்றோம். (௨) "புத்திநாஶாத்ப்ரணஶ்யதி- புத்திநாஶாத் ப்ரணஶ்யதி" என்கிறபடியே விநாஶத்தைப்பலிப்பித்தான். இதரவிஷயப்ரவணர்பட்டது படாநின்றோம், இப்ப்ராப்த

அரு;—இரண்டாம்பாட்டு (காருமித்யாதி) அந்தி தென்றல் நெருப்பைச்சொரிவதுக்குமேல், குணதிசைமாருதமான வாடை ஈரும்படியைச் சொல்லுகிறுரென்று ஸங்கதி.

"தண்டமோ" என்று யமதண்டமென்று தோற்றுகையாலே, இதுக்குத் தாத்பர்யமருளுகிறுர் (இதரேத்யாதி).

(௧) ரா-அயோ-அரு-அ (௨) கீ-௨-௬௩-

விஷயத்தை ஆசைப்பட்டநாங்களும்.

(சோருமித்யாதி) வர்ஷிக்கிற மஹாமேகங்களினுடைய துளிக்குள்ளிட்டுக்குளிர்த்தியையூட்டிக்கொடுவருகிற ஈரவாடையானது விரஹத்தாலே க்ருஶமாயிருக்கிற என்னுடலை ஈர்ந்து போகடாநின்றது. நற்கொலையாகாதே உயிர்க்கொலையாக்கி நலியாநின்றது.(௨)

மூ;—சங்குமாமையும் தளருமேனிமேல்
திங்கள்வெங்கதிர் சீறுமென்செய்கேன்
பொங்குவெண்டிரைப் புணரிவண்ணனார்
கொங்கலர்ந்ததார் கூவுமென்னையே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சங்கும்	கையில் வளையும்	வண்ணனார்	வடிவை யுடையனான ஸர்வேஶ்வரனுடைய
மாமையும்	நிறமும்	கொங்கு அலர்ந்த	பரிமளப்ரசுரமான
தளரும்	தளராநின்றுள்ள	தார்	திருத்துழாய்மாலையானது
மேனி மேல்	என் உடம்பின்மேலே	என்னை	(ஸ்த்ரீத்வத்தை நோக்கிக்கொண்டிருக்கிற) என்னை
திங்கள்	சந்த்ரனுடைய	கூவும்	(இங்ஙனே புறப்படாயோ என்று) அறை கூவாநின்றது. (௩)
வெம்கதிர்	வெவ்விய கிரணங்களானவை		
சீறும்	சீறுநின்றன;		
என் செய்கேன்?-;			
பொங்கு	கிளராநின்றும்		
வெண்	வெளுத்துமிருக்கிற		
திரை	அலைகளையுடைய		
புணரி	கடல் போன்ற		

வ்யா;—மூன்றாம்பாட்டு. (சங்கித்யாதி) நிறமும் வளையும் தொங்குகைக்கு ஆஶ்ரயமின்றிக்கேயிருக்கிற உடம்பின்மேலே. (திங்களித்யாதி) நிலா உடம்பிலே படாநின்றால், பெண்பிறந்தார் எங்ஙனே ஜீவிக்கும்படி. (பொங்கித்யாதி) ஓதம் கிளர்ந்தகடல்போலே

கொல்லும் என்னாதே "ஈரும்" என்றதுக்குபா(ஞ)வம்(நற்கொலையித்யாதி).

அரு;—மூன்றாம்பாட்டு. (சங்குமித்யாதி) "கண்ணுக்குத்தோற்றாதே ஓடித்திரிகிற காற்று எவ்வளவு" என்று, "எம்பெருமான்" என்கிற நல்திங்கள் கண்ணுக்கிலக்காய் கைகளாலே நெருப்பை இறைக்கிறதென்று க்லேசிக்கிறாளென்று ஸங்கதி.

என்செய்கேனென்கிறதென்? நீ நிலாமுற்றத்தை விட்டு உள்ளே புகுரலாகாதோ? என்னும் சங்கையிலே "பொங்கித்யாதி" என்று தாத்பர்யமருளுகிறார் (ஓதமித்யாதி). ... ... (௩)

ஶ்ரமஹரமான வடிவையுடையராயிருக்கிறவருடைய பரிமளப்ரசுரமாயிருக்கிறதாரானது உள்ளேபுக்கு "ஸ்த்ரீத்வத்தை நோக்கிக் கொண்டு மறையவிருக்கிறதென்? இங்ஙனே புறப்படாயோ" என்று அறைகூவாநின்றது. .... (௩)

மூ;—அங்கோராய்க்குலத்துள் வளர்ந்துசென்று
அங்கோர்தாயுருவாகி வந்தவள்
கொங்கைநஞ்சுண்ட கோயின்மைகொலோ
திங்கள்வெங்கதிர் சீறுகின்றதே. (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அங்கு	கம்ஸபயமும் இருளுமாய்க்கிடந்த ஸமயத்திலே	வந்தவள்	வந்தவளான பூதனையின்
ஓர் ஆய்ச்குலத்துள்	திருவாய்ப்பாடியேற	கொங்கை	ஸ்தநத்திலே தடவிக்கிடந்த
சென்று	எழுந்தருளி	நஞ்சு	விஷத்தை
வளர்ந்து	வளர்ந்தருளாநிற்க	உண்ட	அமுது செய்த
அங்கு	அவ்விடத்திலும்	கோயின்மை கோலோ	ஆராய்ச்சியில்லாத செயலைப்பின்சென்றோ,
ஓர்	க்ருத்ரிமத்தில் ஒப்பற்றவளாய்	திங்கள்	சந்த்ரனுடைய
தாய் உரு ஆகி	தாயின் வடிவைக்கொண்டு	வெங்கதிர்	வெவ்விய கிரணங்களானவை
		சீறுகின்றதே	சீறுகின்றனவே. (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (அங்கோராய்க் குலத்துள்வளர்ந்து சென்று) அவ்வளவிலே ஒதுங்குகைக்கு ஒரு ஊருண்டாயிற்று. கம்ஸபயமும் இருளுமாய் ஸ்ரீவஸுதேவரும் தேவகியாரும் நோவு படுகிற ஸமயத்திலே அது, ஒரு அஞ்சினான் புகலிடமுண்டாயிற்று. கம்ஸனுக்குக் குடிமக்களாய் இரை இருந்திருக்கச்செய்தே அவனுக்கஞ்சாதே பிள்ளைகளை நோக்கிக் கொடுக்கவல்ல ஊரிறே.

அ௩;—நாலாம்பாட்டு. (அங்கோரித்யாதி) போது விடியாதோ? தானே மதி கெட்டுப் போகிறுளென்று தோழிசொல்ல, "ஒரு நிலையாக நின்றன்றோ இவன் பாதிக்கிறான்; எனக்கு விடிவது எப்போதோ" என்று மீளவும் அதுக்க நோவு படுகிறாளென்று ஸங்கதி.

கீழ்வாக்ய விவரணம் (கம்ஸேத்யாதி). அஞ்சினான் புகலிடமானபடியென்னென்ன (கம்ஸனுக்கித்யாதி). ... ... (௪)

(அங்கித்யாதி) போனவிடத்திலே நலியவேணுமென்று தாய் வடிவுகொண்டு வந்தவளை, அநுகூலையென்று புத்திபண்ணாதே, அவளை ப்ரதிகூலையென்றே அறிந்து, அவள்முலையைஉண்டு முடித்த ஆராட்சியில்லாத செயலோ? (திங்களித்யாதி) சந்த்ரன் இங்ஙனே பாதகனாகிறது, தனக்குக் குளிர்ச்சியையும் தர்ஶநீயதையையும் கொடுத்துவிட்டு, அவன் கருத்தைப் பின்சென்றோ இவன் நம்மை இப்போது நலிகிறது; (௧)"ஶ்ரேயஶ்ச ஸம்ப்ரதே- மேஷா மேதேதி ஸாசார்யஸ்" என்றவனைப் பின்செல்லவேணுமிறே அவற்றுக்கு. .... (௪)

மூ;—அங்கோராளரி யாயவுணனைப்
பங்கமா விருகூறு செய்தவன்
மங்குல் மாமதி வாங்கவேசொலோ
பொங்குமாகடல் புலம்புகின்றதே. (௫)

பதம்.	உரை.	பதம்.	உரை.
அங்கு	ப்ரஹ்லாதாழ்வானுடைய ப்ரதிஜ்ஞா ஸமகாலத்திலே	மாமதி	சந்த்ரனை
		மங்குல்	ஆகாஶத்திலே (வர்த்திக்கும்படியாக)
ஓர் ஆளரியாய்	அத்விதீயமான நரஸிம்ஹரூபியாய்(தூணிலே தோன்றி)	வாங்கவே சொலோ	(கடலைக் கடைந்து உள்ளின்றும்) வெளிக்கிளப்பினானென்ற வருத்தத்தினாலேயோ
அவுணனை	ஹிரண்யனை		
பங்கமா	மாநபங்கமு(ண்டா)ம்பண்ணி		
இருகூறுசெய்தவன்	இருதுண்டமாகக் கிழித்துப்பொகட்ட ஸர்வேஶ்வரன்	பொங்கு	திரைக்கிளப்பத்தையுடைய
		மாகடல்	ஸமுத்ரமானது
		புலம்புகின்றது	கோஷியாநின்றது.(௫)

அந;—அஞ்சாம்பாட்டு. (அங்கோரித்யாதி) தான் இப்படி மதிக் கொடுங்கி மதிகெட்டுக் கூப்பிட்டுக் கொண்டிருக்கச்செய்தே, கடல் தான் கோஷிக்கக்கேட்டு, இதுவும் என்ன மதி இழந்ததோ வென்கிறாளென்று ஸங்கதி.

நான் * சந்த்ரகாந்தாநநத்தைக் காணாதே மதிகெடுவது, இது சந்த்ரனைக்கண்டு மட்டாதே கூப்பிடுகிறதாக எண்ணுகிறாளென்று கருத்து; சந்த்ரனைக்கண்டால் கடல் மிகவும் கோஷிக்குமிறே. ... ... (௫)

(௧) தை-ஆந-அ.

வ்யா,—அஞ்சாம்பாட்டு. (அங்கித்யாதி) ஸ்ரீப்ரஹ்லாதாழ்வானுடைய ப்ரதிஜ்ஞாஸமகாலத்திலே நரஸிம்ஹரூமாய்) ஆஸுரப்ரக்ருதியான ஹிரண்யனையும் மதிப்பறுத்து அநாயஸேந கிழித்துப் பொகட்டான். அவனை எதிரியாக்கி ஆயுத மெடுக்கையன்றிக்கே வெறுங்கையே புறப்பட்டுத் திருவுகிராலே கிழித்துப் பொகட்டான்.

(மங்குலித்யாதி) இப்படி அரியவற்றை வருத்தமறச் செய்து தலைக்கட்ட வல்லவன், தன்னை நெருக்கிக்கடைந்து உள்ளுண்டான மதியை வாங்குகையோ இக்கடல் இங்ஙனே கிடந்து கூப்பிடுகிறது, என்னைப்போலே மதி இழந்தோ இக்கடலும் கூப்பிடுகிறது.※(க)மதியெல்லா முள்கலங்கியிறே இவளும் கிடக்கிறது. ஒன்றுக்கும்விக்ருதையாகாத நான் கலங்கிக் கூப்பிடுகிறப்போலேயிருந்தது இக்கடலும்தன் காம்பீர்யமெல்லாம் அழிந்துகூப்பிடுகிறபடியும்.(மங்குல்) ஆகாசம். .... (ரு)

மூ;—சென்றுவார்சிலை வளைத்திலங்கையை
வென்றவில்லியார்வீர மேகொலோ
முன்றில் பெண்ணைமேல் முளரிகூட்டகத்து
அன்றிலின்குர லடருமென்னையே. (கா)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சென்று	எதிரிகளிருக்குமிடமே றப்போய்	முன்றில்	வாசலிலே நிற்கிற
வார்	நெடிதான	பெண்ணைமேல்	பனைமரத்தின்மேலே
சிலை	தனுஸ்ஸை	முளரி	தாமரைப்பூவாலும் தாதாலும் தண்டாலும்(பிணைக்கப்பட்ட)
வளைத்து	(நாணேற்றி)வளைத்து,		
இலங்கையை	லங்கையிலுள்ள ராக்ஷஸர்களை	கூட்டகத்து	கூட்டிலே கிடக்கிற
வென்ற	அழித்த	அன்றிலின்	அன்றில் பக்ஷியின்
வில்லியார்	பெருமானுடைய	குரல்	த்வநியானது
வீரமேகொலோ	ஆண்பிள்ளைத் தனத்தைப்பின்சென்றோ,	என்னை	என்னை
		அடரும்	வருத்தாநின்றது?.(கா)

அ;—ஆறும்பாட்டு. (சென்றித்யாதி) திங்கள் நீலீச, ஸமுத்ரத்தைப்போலே தான் புலம்புகிறபடியைக் கண்டு, அன்றில்அருகே நெருப்பை உருக்கி வார்த்தாப்போலே செவிபடக்கூப்பிட, அதுக்கும் நொந்துபடுகிறாளென்று ஸங்கதி.

(க) தி-வாய்-க-அ-ரு.

வ்யா;—ஆரும்பாட்டு (சென்று) எதிரிகள் வரப்போர விருக்கை யன்றிக்கே (க) "அபியாதா - அபியாதா" என்கிறபடியே அவர்கள் இருந்த விடங்களிலே சென்று (உ) "அவஷ்டப்யமஹத்தநு: - அவஷ்டப்யமஹத்தநு:" என்கிறபடியே, ஒருவர்க்கு அடக்கவொண்ணாதே நெடிதாயிருக்கிற வில்லை வளைத்து லங்கையை அழியச்செய்தவருடைய ஆண்பிள்ளைத்தனமோ. (முன்றிலித்யாதி) வாசலிலே நிற்கிற பெண்ணையின்மேலே, தாமரைப்பூவாலும் தாதாலும் தண்டாலும் செய்த கூட்டிலே கிடக்கிற அன்றிலினுடைய த்வநி எனக்கு பாதகமாகாநின்றது. நான் இதுக்கு எத்தைச்செய்வேன். நான் இதுக்குமார்விலே அப்பேறகவோ? .... (சு)

மூ;—பூவைவண்ணனார் புள்ளின்மேல்வர
மேவிநின்று நான் கண்டதண்டமோ
வீவிலைங்கணைவில்லி யம்பு கோத்து
ஆவியே யிலக்காக வெய்வதே. (எ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
ஐங்கணைவில்லி	பஞ்சபாணனான மந்மதன்	வண்ணனார்	திரு நிறத்தையுடைய ஸர்வேஶ்வரன்
வீவு இல்	க்ஷணகாலமும் ஒழிவில்லாமல்	புள்ளின்மேல்	பெரிய திருவடியின் மேலே
அம்பு கோத்து	பாணங்களைத் தொடுத்து	வர	எழுந்தருளாநிற்க,
ஆவியே	என்னுடைய மர்மஸ்தாநத்தையே	நான்	நான்
இலக்காக	லக்ஷ்யமாகக்கொண்டு (அநுதுடிக்கும்படி)	மேவி நின்று	பிரிகிலேயாகாதேநின்று
எய்வது	ப்ரஹரிக்கையாகிறவிது,	கண்ட	ஸேவித்ததற்கு
பூவை	காயாம்பூப்போன்ற	தண்டமோ	தண்டம் செய்தபடியோ; (எ)

(போர) யுத்தம் பண்ண. "வார்" என்று நீட்சியைச்சொல்லுகையாலே பலிதார்த்தம்ருளுகிறார் (அவஷ்டப்யேத்யாதி). "பெண்ணை" பனை. "முளரி" தாமரையாகையாலே அருளுகிறார் (தாமரையித்யாதி). "ஏ" என்கிறது விஷாதஸூசகமான அவ்யயமாயருளுகிறார் (நானிதற்கித்யாதி). அம்(போர்கை) யுத்தம் பண்ணுகை; அதாவது - வில்லியார் வீரங்கொண்ட வித்தைக்கண்டு, ஒட்டினால் அது ஒழியுமோவென்று கருத்து. (சு)

(க) ரா-அ-யோ ௧-உ-௬- (உ) ரா-யு-க௦-கக-

வ்யா;—எழாம்பாட்டு. (பூவைவண்ணனார்) வைத்தகண்மாறாதே கண்டுகொண்டிருக்க வேண்டும்படி ஆகர்ஷகமான வடிவையுடையவர், ஒருநேரமும் விடாதேநோக்கினாற்போலே பெரிய திருவடி திருத்தோளிலே வர. (மேவியித்யாதி) சிதிலையாகாதே நின்று நான் கண்டதுக்குத் தண்டமோ?. (வீவிலித்யாதி) காமனானவன் தன்னுடைய புஷ்ப பாணங்களாலே தோல் புரையேயன்றியே மர்மத்திலே எய்கிறவிது. .... (எ)

மூ;—மாலினம் துழாய்வரு மென்னெஞ்சகம்
மாலினந்துழாய் வந்தென்னுள் புகக்
கோலவாடையும் கொண்டுவந்ததோர்
ஆலிவந்ததாலரிது காவலே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
என்	என்னுடைய	கோலம்	பரிமளப்ரசுரமான
நெஞ்சகம்	நெஞ்சானது	வாடையும்கொண்டு	வாடைக்காற்றையுங் கூடக்கொண்டு
மால்	(எனக்கவன்பக்கலுண்டான) வ்யாமோஹ	வந்தது ஓர்	(நிலம் பார்த்துப்போகைக்கு) முன்பே வந்ததொரு
இனம்	அநுரூபமாக [த்துக்கு	ஆலி	சிறுதுளியானது
துழாய்வரும்	இங்குமங்கும் தேடித்திரிந்து வாராநின்றது.	வந்தது	(மீண்டும்) வாராநின்றது;
மாலின்	ஸர்வேச்வரனுடைய	ஆல்	கஷ்டம்;
அம் துழாய்	அழகிய திருத்துழாய்த்தாரானது	காவல்	(இதற்குத்தப்பி) உயிரைக் காத்துக்கொள்ளுகை [தகி.
என்னுள்வந்துபுக	எனக்கு ஸ்ம்ருதி விஷயமாக,	அரிதே	அஸாத்ய(ஈஜ)மாயிருந்

வ்யா;—எழாம்பாட்டு. (பூவையித்யாதி) தோல் புரையே பாதிக்கிற காற்றும், கண்ணுக்குத்தோற்றின மாத்ரமானமதியும், செவியிலே நோவுபடுத்தின அன்றிலும், பாதித்தாலும் இவற்றால் இவள் ஈடுபடவில்லை. இப்படி பரிகரங்களுக்கும் இடையாத இவளை நேரே போய் நெஞ்சிலேபட எய்யச்சொல்லிவிட, வந்த காமனுக்கு அஞ்சி நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

“ஐங்கணைவில்லி - வீவில்லாதே, அம்பு கோத்து” என்றந்வயம் திருவுள்ளம் பற்றியருளுகிறார் (காயனித்யாதி). ... ... (எ)

வ்யா;—எட்டாம்பாட்டு. (மாலித்யாதி) என்னுடைய நெஞ்சானது எனக்கு அவன்பக்கலுண்டான மாலுக்குஇனமாகத்துழாவி வாராநின்றது. (மாலித்யாதி) ஸர்வேஸ்வரனுடைய திருமேனியின் ஸ்பர்ஶத்தையுடைய திருத்துழாயானது வந்து எனக்கு ஸ்ம்ருதிவிஷயமாக,பரிமளத்தை யுடைத்தான வாடையைக்கொண்டு. (வந்ததோராலி வந்ததால்) பண்டே நிலம் பார்த்துப்போன சிறுதுளியானது வாராநின்றது. (ஆர்து காவலே) தேசிகனான ஶ்ரீ விபீஷணாழ்வானே நின்று வழியிட்டுக் கொடுக்கையாலே ராக்ஷஸர்கள் வெல்லமாட்டிற்றிலர்களிறே. அப்படியே நிலவரே வழிகாட்டிக்கொடுவந்து நலியாநிற்க நம்மால் பரிஹரிக்கப்போமோ? (அ)

மூ;—கெண்டையொண்கணுந் துயிலுமென்னிறம்
பண்டு பண்டுபோ லொக்கும்மிக்கசீர்
தொண்டரிட்டபூந் துளவின் வாசமே
வண்டுகொண்டு வந்தூது மாகில். (௯)

பதம்.	உரை.	பதம்.	உரை.
சீர்	(அநந்யப்ரயோஜநரை யாகிற) கல்யாணகுணத்தாலே	என்	என்னுடைய
மிக்க	சிரியர்களான	கெண்டை	கெண்டை மத்ஸ்யம் போல்
தொண்டர்	ஸ்ரீவைஷ்ணவர்கள்	ஒண்	தர்ஶநீயமான
இட்ட	ஸமர்ப்பித்த	கண்ணும்	கண்களும்
பூந்துளவின்	திருத்துழாயலரின்	துயிலும்	உறங்கப்பெறும்;
வாசம்	பரிமளத்தை	நிறம்	(என்னுடைய) மாமை நிறமும்
கொண்டுவந்து	கொண்டுவந்து	பண்டு பண்டு போல் ஒக்கும்	பழைய படியே அவிகலமா யிருக்கப் பெறும். (௯)
வண்டு	வண்டானது		
ஊதுமாகில்	(என்னருகில்) ஊதினல்		

அநு;—எட்டாம்பாட்டு. (மாலித்யாதி). கீழ்ப்பாட்டிலே காமன் சரங்களாலே எய்ய, அவற்றாலே நெஞ்சு சிதிலமாய் யாலேறிவர, கீழே கூவுகின்ற கொங்கலர்ந்திருக்க அவகாசமுண்டாய் உள்ளே புக்கது, எதிராளின் நெஞ்சு அஞ்சுமளபடியாலே முன்னே வந்தவாடையும்துளியும் மீளவந்தபடியைச்சொல்லி மிகவும் அஞ்சுகிறுளென்று ஸங்கதி.

(மாலுக்கு) வ்யாமோஹத்துக்கு. (இனமாக) ஒத்ததாக; இன்த்தார் ஸன்னக்கடவதிறே ஸ்நிக்த்தரை. "வந்ததோராலி" என்கையாலே முன்னே நிலவரமுண்டானதென்று தோற்றுகையாலேஅருளுகிருர் (தேசிகரித்யாதி). ... ... (அ)

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (செண்டையித்யாதி) முக்த்த(ஃ)மாய் தர்ஶநீயமாய் உறக்கத்தாலல்லது போதுபோக்குகையரிதான கண்ணுமுறங்கப் பெறலாம். (என்னிறம்) அவன் வாய் புலற்றும் நிறம், அறப்பண்டுபோலேயாம். கலக்கையாகிறது பிரிவிக்கு அங்குரமிறே. கலந்து பிரிந்து லாபாலாபங்களறியாதே பூர்ணையாயிருந்தபோதை நிறம் போலேயாம்.

கண்ணுமுறங்கி நிறமும் வருவதுதானென்செய்தாலென்னில்; (மிக்க ஸித்யாதி) அநந்ய ப்ரயோஜனரான ஸ்ரீ வைஷ்ணவர்கள் இட்ட திருத்துழாயில் பரிமளத்தை வண்டு கொண்டுவந்து ஊதுமாகில், திருத்துழாயில்பரிமளம் உத்தேஸ்யமாகில், "தொண்டரிட்ட" என்ன அமையாதோ? "மிக்கசீர் தொண்டரிட்ட" என்றானென்னென்னில்; "அங்குத்தைக்குப் பரிவருண்டு" என்றறிந்தாலாயிற்று இவளுக்குக்கண் உறங்குவதும், பழைய நிறம் வருவதும். (௧) "ஸதாஸ்ரமநுவ்ரஜ-ஆத்வாரமநுவ்ரஜ" என்றிருக்குமவளாகையாலே அநந்யப்ரயோஜநரான ஸ்ரீவைஷ்ணவர்கள் அங்குத்தைக்குப் பரியாநின்றார்கள்" என்றுகேட்டவாறே, இனி நடக்கொரு குறையில்லை என்று கண் உறங்கா நிற்கும்; நிறமும் பழையபடியேயாம். .... (௯)

மூ;—அன்று பாரதத்தைவர் தூதனாய்ச்
சென்றமாயனைச் செங்கண்மாலினை
மன்றிலார் புகழ் மங்கைவாள் கலி
கன்றிசொல் வல்லார்க் கல்லலில்லையே. (௧௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

அரு;—ஒன்பதாம்பாட்டு. (செண்டையித்யாதி) "அரிது-காவலே" என்றுமிகவும் க்லேசிக்கக்கண்ட தோழியானவள் பொறுக்கமாட்டாதே உனக்கு துக்கமேசெப்பமின்றிக்கே கண்ணுறங்கி யிருக்கைக்கு நானென்ன செய்கேன், நாயகன் - ஸ்வதந்த்ரன்; நீ பொறுக்கவல்லைபல்லை; இனி நானும் இங்ஙனே உன்னைக்கண்டு துக்கிக்குமத்தனை யன்றோ? என்றுக்லேசிக்க, அது - பொறுக்கமாட்டாதவளாகையாலே எங்கேயிருந்தாலும் அவனுக்குப் பரிவருண்டு என்றுமது தோற்ற, * மிக்கசீர் தொண்டரிட்ட மாலையின் மணத்தைக்கொண்டு வரும்படி பண்ணுமாகில், நான் கன்னியா யிருக்கும்போலே யிருக்கிறேனென்று சொல்லுகிறாளென்று ஸங்கதி.

(அறப்பண்டுபோலே)அன்பானென்னென்னவருளுகிறார்(கலக்கையித்யாதி).

(௧) ரா-அ-௧௯-௨௧.

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்று	பாண்டவர் நோவுபடுகிறவன்று	ஆர்	வ்யாபித்துக்கிடக்கிற
பாரதத்து	பாரத யுத்தத்திலே	புகழ்	புகழையும்
ஐவர்	அவ்வைவர்களுக்கும்	மங்கை	திருமங்கை யென்னும் திருநகரியையும்
தூதனாய்	தூதனாய்	வாள்	வாளையுமுடையரான
சென்ற	எழுந்தருளின	கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்த
மாயனை	ஆஸ்சர்ய சீலனாய்,	சொல்	இப்பாசுரங்களை
செம்கண்	செவ்விய திருக்கண்களை யுடையனான	வல்லார்க்கு	ஓதவல்லார்களுக்கு
மாலினை	ஸர்வேஸ்வரன் விஷயமாக,	அல்லல்	பகவத் விஸ்லேஷ வ்யஸநமானது.
மன்றில்	நாற்சந்திகள் தோறும்	இல்லை	உண்டாக மாட்டாது.

வ்யா;—பத்தாம்பாட்டு. (அன்றித்யாதி) புண்டரீகாக்ஷனை ஸர்வேஸ்வரனாய் தன்னை யொழிந்ததுக்கடங்கலும் தான் நியாமகனாயிருந்து வைத்துப் பாண்டவர்கள் நோவுபடுகிறவன்று. பாரத ஸமரத்திலே "இன்னார் தூதன்" எனனும்படி தன்னைத் தாழவிட்டு தூதனாய் நின்ற ஆஸ்சர்யத்தையாயிற்றுக் கவிபாடிற்று. (மன்றிலார் புகழ்) நால்வர் திரண்டவிடமெங்கும் திருமங்கையாழ்வார் வார்த்தையே. ஆழ்வார் அருளிச்செய்த வித்தை அப்யஸிக்க வல்லவர்களுக்கு பாத ([illegible])கபதார்த்தங்களால் நோவுபடவேண்டாமே நித்யஸம்ஸ்லேஷத்தோடே காலம்செல்லப் பெறுவர். அல்லலாகிறது - இத்திருமொழியில் பட்டக்லேசம் .... (௧௦)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி
பதினோராம்பத்து முதல் திருமொழி முற்றிற்று.

அரு;—பத்தாம்பாட்டு. (அன்றித்யாதி) "செங்கண்மாலினை - அன்றித்யாதி கலி கன்றி சொல்" என்றந்வயித்துத் தாத்பர்ய மருளுகிறார் (புண்டரீகேத்யாதி). தன்னை இப்படி காற்றுக்கும் காமனுக்கும் இலக்காக்கிவைத்ததுக்கு, நங்கொடுமையாலே அவன் விரவிட்டதாகச் சொல்லுமித்தனைபோக்கி தத்வமன்றிறே. நான் ஊடினபோது கையைக்காலைப் பிடித்துச் சேரவிட்டுக்கொண்டவன் இப்படி செய்யானிறே. இனிவாராமைக்குஹேது ஆஸ்ரிதர்

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பதினோராம் பத்து இரண்டாந் திருமொழி

குன்றமெடுத்து ப்ரவேசம்.

அவ;—குன்றமெடுத்துப்ரவேசம். "என்செய்கேன்" என்ற விடத்திலும்இரங்காதேபாதக (ஞாத) பதார்த்தங்கள் மிகைத்தன; ரக்ஷகனானவன் கைவிட்டான்; என் கார்யம் ஸ்வயத்ந ஸித்தமா யிருந்தது. எனக்கு இனி ரக்ஷகராக வல்லாருண்டோ என்கிறார் *.

மூ;—குன்றமெடுத்து மழை தடுத்திளையாரோடும்
மன்றில் குரவை பிணைந்தமாலென்னை மால்செய்தான்
முன்றில் தனிநின்ற பெண்ணைமேல் கிடந்தீர்கின்ற
அன்றிலின் கூட்டைப் பிரிக்ககிற் பவராரகொலோ. (௧)

பதம்.	உரை.	பதம்.	உரை.
குன்றம்	கோவர்த்தன பர்வதத்தை	மால்	ஸர்வேஶ்வரன்
எடுத்து	குடையாக எடுத்து	என்னை	என்னை
மழை	(இந்த்ரன்பெய்வித்த கல்வர்ஷத்தால் வந்த நலிவை	மால்செய்தான்	மதி மயங்கப் பண்ணிவிட்டான்;
தடுத்து	நிரஸித்து,	முன்றில்	வாசலிலே
மன்றில்	நாற்சந்தியிலே [டே	தனிநின்ற	ஒப்பற்று நின்ற
இளையாரொடும்	இடைப்பெண்களோ	பெண்ணைமேல்	பனைமரத்திலே
குரவைபிணைந்த	திருக்குரவைகோத்தருளின	கிடந்து	(அஞ்சாதே) கிடந்து
		ஈர்கின்ற	(ஶஸ்த்ரம்போலே) உயிரை நலியா நின்ற

சொல்லிற்றுச்செய்வானுகையாலே, அதிலே அந்யபரனுகயிருக்கவேணுமென்று நினைத்து துளவின் வாசமே வண்டு கொண்டுவந்து ஊதினுலமையுமென்று ளாசையாலே, இவ்வாஶ்ரித பாரதந்த்ர்யத்தைச்ய கவிபாடி னுரென்னலாமென்று திருவுள்ளம். (௧௦)

ஜீயர் திருவடிகளே சரணம்.

அந;—குன்றமெடுத்தின் ப்ரவேசம், கீழ்த்திருமொழியிலே சில பாதகங்களுக்கஞ்சி, அவன் துளவின் வாசத்தைஆசைப்பட்டிருந்தாள். அதுவே ஹேதுவாகப் பின்னையும் அன்றில் முதலானவை நலிய, பொறுக்கமாட்டாதே தானே யத்நம்பண்ணுகைக்கு ஒருப்படுகிறுளென்று ஸங்கதியருளுகிறார் (என் செய்கேனித்யாதி). தூமலரித்யாதியைப் பற்ற (ஸ்வயத்ந ஸித்தமாய்)என்றது. ... ... *

பதம்.	உரை.	பதம்.	உரை.
அன்றிலை	அன்றில் பக்ஷிகளை	நிற்பவர்	ஸமர்த்தராகக் கடவார்
கூட்டின்	கூட்டில்நின்றும்	ஆர்கொலோ	எந்த மஹாநுபாவரோ
பிரிக்க	பிரித்துவிட		தான்!. (க)

வ்யா;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி) அரிய செயலைச்செய்து தன்னை எல்லாரும் காணும்படியாக மன்றிலே இட்டவன், அச்செயலாலே என்னை மன்றிலே நிறுத்தினான். (மூன்றிலித்யாதி) பழையதாக நலிந்துப்போருகிற இத்தைப் பரிஹரிப்பாரரென்கிறார்கள், ஏலக்கோலி நலிவுதாக மன்றிலேபெரிய ஆர்ப்பரவத்தோடே நின்றபெண்ணை மேலேகிடந்து ஈருகின்ற. பெண்ணை-பனை. சஸ்த்ரம்போலே கடுக முடித்துவிடாதேசேர்ந்து நலியாநின்றதாயிற்று. பிரிப்பனபிரித்து கூடுவன கூட்டித்திரிகிறாளன்றிறே. இனி இத்தால் சொல்லிற்றாயிற் றென்னென்றால், இவ்வன்றிலின் த்வநி பாதகமாகாதபடி அவனை என் முலையோடே கொடுவந்து சேர்க்க வல்லாரில்லையோ வென்கிறாள். .... (க)

மூ;—பூங்குருந் தொசித்தானை காய்ந்தரிமாச்செகுத்து
ஆங்கு வேழத்தின் கொம்புகொண்டுவன் பேய்முலை
வாங்கியுண்ட வவ்வாயன்நிற்க விவ்வாயன்வாய்
ஏங்குவேய்ங்குழ லென்னோடாடு மிளமையே. (உ)

அரு;—முதற்பாட்டு. (குன்றமித்யாதி) மால் செய்தானென்றதுக்குத் தாத்பர்யம் (அச்செயலாலே யித்யாதி). "முளரிக்கூட்டத்து" என்று கீழ்த் திருமொழியிலும் சொன்னதாகையாலே அருளுகிறார் (பழையதாக வித்யாதி). (ஏலக்கோலி) முந்துற உத்யோகித்து. கூட்டைப் பிரிக்கையாவது-தான் முற்றத்திலேநில்லாதே உள்ளேநாயகனோடே கண்ணுறங்கிக்கிடந்தால், இந்த கூண்டுக்கும் தனக்கும் பிரிவுண்டாமென்றே சொல்லவேணுமென்று, யதாஶ்ருதம் கூடாதென்று அருளுகிறார் (பிரிப்பனவித்யாதி). ... (க)

அரு,—இரண்டாம்பாட்டு. (பூமித்யாதி) கீழே அன்றிலின் குரலுக்கு நொந்து கூட்டவல்லராரோவென்று இருக்க, அவ்வளவிலே மாமணிவண்ணர் வாராமையாலே பெண் இப்படி பெண்ணைமேல் அன்றிலின்கையிலே அகப்பட்டு நொந்தாளென்று உடம்புவெளுத்து பண்டலந்தவனைப்போலே குழலூதினானாகில் வந்தானென்று ஆறியிருப்பாளென்று குழலூத; இவள் குழல் வாசியறிந்தவளாகையாலே இதுக்கு நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

பதம்.	உரை.
பூ	(தர்ஶநீயமாகப்) பூத்திருந்த
குருந்து	குருந்தமரத்தை
ஒசித்து	முறித்து,
ஆனை	வ்ருஷபங்களை
காய்ந்து	நிரஸித்து,
அரிமா	ஸாத்ரவமே வடிவாய் வந்த கேசியை
செகுத்து	(வாயைக்) கிழித்து
ஆங்கு	அங்கே (பயங்கரமாய் வந்து தோற்றின)
வேழத்தின்	குவலயாபீடத்தின்
கொம்பு	தந்தங்களை
கொண்டு	முறித்தெறிந்து,
வன்	நெஞ்சில் க்ரௌர்யத்தையுடைய
பேய்	பூதனையின்
முலை	(விஷதிக்த(க)மான) முலைகளை

பதம்.	உரை.
வாங்கி	(ஸாதரமாகக்) கையில் வாங்கி
உண்ட	சுவைத்து (அவளை முடித்த)
அவ்வாயன்	அப்படிப்பட்டவாயையுடையனான கண்ணபிரான்
நிற்க	விப்ரக்ருஷ்டனாய்நிற்க
இவ் ஆயன்	(நம்பி மூத்த பிரானாகிற) இந்த இடையனானவன்
வாய்	வாயிலே (வைத்து)
ஏங்கு	ஏங்கி ஊதுகிற
வேய்ங்குழல்	வேய்ங்குழலானது
என்னோடு	என்னிடையாட்டத்திலே (அணுகி)

இளமை ஆடும் சிலபாலிஶசேஷ்டைகளைப்பண்ணுகின்றது.

வ்யா;—இரண்டாம்பாட்டு. (பூங்குருந்தித்யாதி) அடியேபிடித்துத் தலையளவும் செல்ல தர்ஶநீயமாம்படி பூத்து நின்ற குருந்தை முறித்து ருஷபங்களை நிரஸித்து கேசிவாயை அநாயாஸேந கிழித்து, அங்கே பயாவஹமாம்படி வந்து தோன்றின குவலயாபீடத்தை நிரஸித்து, அதின் கொம்பை வாங்கி, அவனைக்கண்டு வைத்தும கலிய வேணுமென்று வந்த நெஞ்சில் திண்மையையுடைய பூதனை முலையை ஸாதரமாக உண்டு, அவ்வழியே அவள் ப்ராணனை முடித்தவன் நிற்க, இந்த இடையனானவன் வாயிலே வைத்து ஸத்தாஸேத்தாயே நின்று ஏங்கி ஊதுகிற குழலானது என்னோடே பாலிசமான வ்யாபாரங்களைப் பண்ணுகின்றது. .... (உ)

(க) "ஸ்நேஹஸ்வமதுரைஃ ஸங்கீதகைஸ்ஸாமதுரைஃ" என்கிற நம்பி மூத்தபிரானிருப்பது. (பாலிசமான வ்யாபாரங்களை) என்றதுக்கு, மாமணி வண்ணனுக்காக நான் நேர்பட்டபோது ஸாதிக்க ஆமையாதென்றதே, மூத்தனாயிருக்கவும் இளமையாலே இப்படி ஊதுகிறது பாலிசக்ருத்யமிறே என்று கருத்து. ... ... (உ)

(க) வி-பு-ரு-உச-உஉ.

மூ;—மல்லொடு கஞ்சனும் துஞ்ச வென்றமணி வண்ணன்
அல்லிமலர்த் தண்டுழாயை நினைந்திருந்தேனையே
எல்லியின் மாருதம் வந்தடு மதுவன்றியும்
கொல்லை வல்லேற்றின் மணியும் கோயின்மை செய்யுமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மல்லொடு	(கம்ஸன் ஏவிவந்த) மல்லவர்க்களும்	மாருதம்	தென்றலானது
கஞ்சனும்	கம்ஸனும்	வந்து	நானிருக்குமிடமே வந்து
துஞ்ச	உயிர்மாள	அடும்	நலியாநின்றது;
வென்ற	வெற்றிபெற்ற	அதுவன்றியும்	அதுவுமன்றிக்கே
மணிவண்ணன்	எம்பெருமானுடைய	கொல்லை	வெளிநிலங்களிலே (ஸஞ்சரிக்கிற)
அல்லி	இதழ்களை யுடைத்தாய்	வல்	வலிய
தண்	குளிர்ந்திருந்துள்ள	ஏற்றின்	வ்ருஷபங்களின்
துழாய்மலரை	திருத்துழாய்மாலையை (விரும்பி, அத்தையே)	மணியும்	(கழுத்தில்கட்டப்பட்டுள்ள) மணியின் ஓசையும்
நினைந்திருந்தேனை	நெஞ்சில் நினைத்துக்கொண்டிருக்கிறவென்னை	கோயின்மைசெய்யும்	ஆராட்சியில்லாத செயலைச் செய்யாநின்றது. (௩)
எல்லியில்	ஸந்த்யாகாலத்திலே		

வ்யா;—மூன்றாம்பாட்டு (மல்லீத்யாதி) அவன் வரவிட்ட மல்லவர்களோடே கம்ஸன் முடியும்படி வென்று விரோதிபோகப்பெற்றதாலே ஸ்ரமஹரமான வடிவும் தானுமாயிருக்கிறவன், அப்போதிட்ட வெற்றிமாலையைப் பெறவேணுமென்று ஆசைப்பட்டத்தையே நினைத்துக்கொண்டிருக்கிற வென்னை, ஸந்த்யாஸமயத்திலே தென்றலானது வந்து நலியாநின்றது. அதுக்குமேலே வெளிநிலத்திலே நரகைத்தொடர்ந்து அது கைபுகுந்தாலல்லது மீளாதபடியிருக்கிற வ்ருஷபத்தினுடைய கழுத்தில் மணியோசையானது ஆராட்சியில்லாதவிடத்தில் செயலைச்செய்யாநின்றது. .... (௩)

ஈடு;—மூன்றாம்பாட்டு. (மல்லீத்யாதி) நம்பி மூத்தபிரான் குழலோசையோடன்றிக்கே காற்றுகொடுக்கின என்னை அவர் மேய்க்கிற பசுக்களில் விடைகளும் பாதிக்கிறன வென்கிறாளென்று ஸங்கதி.

"மல்லொடு" என்று ப்ராதாந்யம் சொன்னதுக்குக் கருத்து (அவன் வரவிட்ட) என்றது. (ஆராட்சியில்லாதவிடத்திலே) அராஜகமாகையாலே விசாரிப்பாரில்லாத விடத்திலே. ... ... (௩)

மூ;—பொருந்து மாமர மேழுமெய்த புனிதனார்
திருந்து சேவடி யென்மனத்து நினைதோறும்
கருந்தண் மாகடல் கங்குலார்க்கு மதுவன்றியும்
வருந்த வாடை வருமிதற்கினி யென்செய்கேன். (௪)

பதம்.	உரை.	பதம்.	உரை.
பொருந்து	தன்னிலே பொருந்து நின்ற	தண்	ஶ்ரமஹரமாயிருந்துள்ள
மாமரம் ஏழும்	ஸால வ்ருக்ஷங்களேழையும்	மாகடல்	ஸமுத்ரமானது
எய்த	முறித்தெறிந்த	கங்குல்	இராமுற்றும்
புனிதனார்	பரமபாவநரான பெருமானுடைய	ஆர்க்கும்	கோஷியாநிற்கும்; அதுவன்றியும்-;
திரு உந்து	ஐஶ்வர்ய ப்ரகாஶகமான	வாடை	வாடைக்காற்றானது
சேவடி	திருவடிகளை	வருந்த	(நான்) க்லேஶிக்கும்படி
என்மனத்து	என் மனஸ்ஸிலே	வரும்	வந்து வீசாநிற்கும்;
நினைதொறும்	அநுஸந்திக்கும் போதெல்லாம்,	இதற்கு	இதற்குப்(பரிகாரமாக)
கரு	கறுத்து	இனி	இனிமேல்
		என்செய்கேன்	(நான்)என்னசெய்யக்கடவேன். (௪)

வ்யா;—நாலாம்பாட்டு. (பொருந்தித்யாதி) அடிகுறிக்கவொண்ணாதபடி குவிபாநிற்கிற மராமரங்களேழையும் எய்து ஆஶ்ரிதவிஷயத்தில் தமக்குண்டான ஓரம் தரைகாணவொண்ணாதபடியிருக்கிற அவருடைய ஐஶ்வர்ய ப்ரகாசகமான திருவடிகளை அநுஸந்திக்கும்போதெல்லாம் கறுத்த தன்மையை உடைத்தாயிருக்கிற கடல், ராத்திரியிலே என் எளிமை கண்டு மிசைத்துக் கூப்பிடாநிற்கும். அதுக்குமேலே நான் வருந்தும்படியாக பலவானாயிருக்கிற வாடையானது வாராநின்றது. (இதற்கினி யென்செய்கேன்) ஓரபலை இதுக்குக்கடவேனோ? .... (௪)

அநு;—நாலாம்பாட்டு. (பொருந்தித்யாதி) கீழ்ப்பாட்டில் அந்தியில் தென்றலும் மணியோசையும்போய் ராத்ரியுமாய் கடலாலே நோவுபட்ட வென்னை ஸந்த்யாகாலத்திற் குளிர் காற்றும் நலிகிறதென்கிறதொன்றுஸங்கதி.

ஆஶ்ரித விஷயத்தில் பக்ஷபாதமில்லாமை - அபாவநத்வமாய், அதில்லாதவரென்றருளுகிறார் (ஆஶ்ரிதேத்யாதி) திருவுந்து என்றது - குறைந்து, "திருந்து" என்று கிடக்கிறதாய், திருவை உந்துகை - முன்னே தள்ளுகையாய், ப்ரகாசிப்பிக்கையென்றருளுகிறார் (ஐஶ்வர்யேத்யாதி) (வருந்துமபடியாக) க்லேசிக்கும்படியாக.... ... ... (௪)

மூ;—அன்னை முனிவது மன்றிலின் குரலீர்வதும்
மன்னு மறிகடலார்ப்பதும் வளைசோர்வதும்
பொன்னங்கலையல்கு லன்னமென்னடைப்பூங்குழல்
பின்னை மணாளர் திறத்தமாயின பின்னையே. (ரு)

பதம்.	உரை.	பதம்.	உரை,
அன்னை	பெற்ற தாயானவள்	அல்குல்	அல்குலையும் [று
முனிவதும்	சீறுவதும்,	அன்னம்	ஹம்ஸத்தினதுபோன்
அன்றிலின்	அன்றில் பக்ஷியின்	மென்	விலக்ஷணமான
குரல்	த்வநியானது	நடை	நடையையும்
ஈர்வதும்	நலிகிறதும்,	பூ	தர்சநீயமான
மன்னு	பூமியைச்சுற்றி வேலியாகப் போரக் கடவதாய்	குழல்	கூந்தலையு முடையளான [கு
மறி	ரக்ஷகமுமான	பின்னை	நப்பின்னைப்பிராட்டிக்
கடல்	ஸமுத்ரமானது	மணாளர்	வல்லபரான பெருமாளுடைய
ஆர்ப்பதும்	கோஷிக்கிறதும், [வை	திறத்தம்	இடையாட்டத்தில்
வளை	கையில் வளைகளான	ஆயினபின்னையே	ஈடுபட்டோமான பின்பிறே (நமக்கு நேர்ந்தன). (ரு)
சோர்வதும்	கழலுவதும் (ஆகிற இவையெல்லாம்),		
அம்	அழகிதான [ந்த		
பொன்கலை	பீதாம்பரத்தை யணி		

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (அன்னையித்யாதி) அவன் ஊர்பகை விளைத்து விட்டானாகில் நாம்இவற்றைவெறுக்கிறதென்? பரிவுடைய தாய் முனிகிறதும், நானும் அவனுமாயிருந்தபோது அநுகூலமான அன்றிலுடைய த்வநி பாதகமாகிறதும், பூமிக்கு வேலியாக ரக்ஷகமாயிருக்கிற கடல் கூப்பிடுகிறதும், ஆபரணமான வளைகழலுகிறதும், பொன்னாலே செய்யப்பட்டு தர்சநீயமாயிருக்கிற பரியட்டத்தை யுடைத்தான அல்குலையுடையளாய், அன்னம்போலே யிருக்கிற நடையையுடையளாய், வைத்தகண் வாங்காதே கண்டுகொண்டிருக்கவேண்டும்படி தர்சநீயமான திருக்குழலையுடையளான நப்பின்னைப்பிராட்டிக்கு வல்லபரான வவ ரிடையாட்டத்தோமான

அரு;—அஞ்சாம்பாட்டு. (அன்னையித்யாதி) ஒருகாலே பாதகபதார்த்தங்களையெல்லாம் அடுக்கினதுக்குத் தாத்பர்யகதநமுகேந ஸங்கதியையும் ஸூசிப்பிக்கிறார் (அவனித்யாதி), ச(ங்)காரங்கள்-விரோதஸூசகங்களென்றுவிவக்ஷித்து அதுக்கதுக்குத் த க்ஷிணதைக்கூட்டி அருளுகிறார் (பரிவித்யாதி). இப்பா

பின்பிறே இவை நமக்கு இப்படியாகப் புக்கது. அவருடைய ப்ரணயித்வங்கண்டு நாம் அகப்பட்டபின்பிறே இவை நமக்கு பாதகமாகப்புக்கது. பூர்வாபரங்களுக்குச் சேர்த்திபோராதாகிலும், பிள்ளையுறங்காவில்லி தாஸர் " பின்னை மணாளன் திறத்தோமான பின்பன்றோ இவை இப்படியாயிற்று; ஸாமாந்யனென்று ஈடுமீடெல்லாம் இடவமையும் என்பாரைப்போலே, அவளோடே ஒருஸம்பந்தம் சொல்லி நலிகிறவை நலிந்தாலென்" என்பராம். .... (௫)

மூ;—ஆழியும் சங்குமுடைய நங்களடிகள் தாம்
பாழிமையான கனவில் நம்மைப் பகர்வித்தார்
தோழியும் நானு மொழிய வையம் துயின்றது
கோழியும் கூகின்றதில்லைக் கூரிருளாயிற்றே. (௬)

பதம்.	உரை.
ஆழியும்	திருவாழி யாழ்வானையும் [னையும்
சங்கும்	ஸ்ரீ பாஞ்சஜந் யாழ்வா
உடைய	(நிரூபகமாக) உடையராய்
நங்கள்	நமக்கு [ஸ்வரன்
அடிகள்தாம்	ஸ்வாமியுமான ஸர்வே
நம்மை	நம்மை
பாழிமையான	(கரைகாணவொண்ணாதபடி) பரம்பி யிருந்துள்ள
கனவில்	ஸ்வப்நத்தின் அபரபர்யாயமான ஸம்ஶ்லேஷத்தில்
பகர்வித்தார்	கூப்பிடுவித்தான்;
தோழியும்	(ஸமதுக்க ஸுகைகளான) தோழிமார்களும்
நானும் ஒழிய	நானும் தவிர,
வையம்	(மற்றை) உலகத்தாரனைவரும்
துயின்றது	உறங்காநின்றார்கள்;
கோழியும்	கோழியும்
கூகின்றதில்லை	(விடிவுக்கு ஸூசகமாகக்) கூவுகின்ற தில்லை;
கூர் இருள்	காடா (ஸாந்த்ர)ந்தகாரமானது
ஆயிற்றே	விடிந்த பின்பும் கால் வாங்கப் பெற்ற தில்லையே. (௬)

ட்டுக்கு க்ரியை காட்டுகிறார் (இவையித்யாதி). உத்தரார்த்தத்தை அநுஸந்தித்து பூர்வார்த்தமநுஸந்திப்பது அந்வயமென்று திருவுள்ளம்பற்றி, தொகுத்தபா(பா)வம்(அவருடையவித்யாதி).(பூர்வாபரங்களுக்கு)பாதகங்களாகநோவுபடுகிற கீழ்மேல்பாட்டுக்களுக்கு. இப்பக்ஷத்திலே சகாரங்களெல்லாம்"வந்து நலியப்பெறும்"என்றுகருத்து."சோர்வதுமாகத்தக்கதே"என்றுக்ரியைக்கூட்டிக்கொள்வது. "பின்னையே" பின்னையன்றோவென்று சப்தார்த்தம்.... (௫)

வ்யா;—ஆறும்பாட்டு. (ஆழியித்யாதி) ஸர்வேஶ்வர லக்ஷண மாயிற்றுத் திருவாழி யாழ்வானும் ஸ்ரீபாஞ்சஜந்யமும்.(பாழிமை யான கனவில் நம்மைப் பகர்வித்தார்) பெரிய மேன்மையையுடைய வர் கையைக்காலைப் பிடித்துத் தாழாநின்று பரிமாறின பரிமாற்ற மாகையாலே, அநுஸந்திக்கப் புக்கால் கரைகாண வொண்ணுதபடி யாயிருக்கிற அபர்யாப்த ஸம்ஶ்லேஷ ஸூகத்தாலே நம்மைக்கூப் பிடுவித்தார். (நம்மை) ராஜ்யநிமித்தமாக †சக்ரவர்த்தித் திருமகனை ச்சொல்லாததில்லை. (க) "தேநதுக்கேந - தேநதுக்கேந" என்கிறப டியே ஒரு படியாலும் வாய்திறவாதே, பெருமாள் தாபஸவேஷத் தைப் பார்த்துக் கவர்ந்து நின்று கண்ணநீரை விழவிட்டாளிறே. இப்படியிருக்கை ப்ராப்தமாயிருக்க, நம்மைக்கூப்பிடுவித்தார்.(தோ ழியித்யாதி) ஸமாநஸூக து:க்கைகளான எங்களை யொழிய எல்லா ரும் உறங்கிற்று. விடிவுக்கு ப்ராப்தமான இதுவுங்கூட அரிதாகா நின்றது. (கூரிருளாயிற்றே) விடிந்த பின்பும் இருள் கால் வாங்கு கிறதுமில்லை. .... (சா)

மூ;—காமன்றனக்கு முறையல்லேன் கடல்வண்ணனார்
மாமணவாளரெனக்குத்தான் மகன் சொல்லில்
யாமங்கள்தோ றெரிவீசு மென்னிளங்கொங்கைகள்
மாமணிவண்ணர்திறத்தவாய் வளர்கின்றவே. (எ)

அந;— ஆறும்பாட்டு. (ஆழியித்யாதி) பகலெல்லாம் அன்னே முனிவ தும், ஸந்த்யையில் அன்றில்முதலானவைபாதிப்பதும், ராத்ரியெல்லாம் கடல் நலிவதும், விடியுங்காலத்தில்காலால் துகையுண்கிறதுமாயிருக்கிறவற்றையெ ல்லாம் சொல்லிக் கூப்பிட்டாள். அது பொறுக்கமாட்டாதே புறப்பட்டுலோக யாத்ரையைப் பார்க்க ஒருப்படவும் "த்ருடியுகாயதே - த்ருடியுகாயதே" என்கிற கணக்கிலே இருள்விரியாமையாலே அதுக்கும் நோவுபடுகிறுளென்று ஸங்கதி.

"பாழிமை" என்றது-பாப்பாம், "கனவில்" என்றது - ஸ்வப்நமென்ன லாம்படியான ஸம்ஶ்லேஷமாய்த்தாத்பர்யமருளுகிறுர் (பெரியவித்யாதி). என் னை என்னுதே, "நம்மை" என்று ஆத்மநி பஹுவசநமாகச் சொல்லுகைக்குத் தாத்பர்ய மருளுகிறுர் (ராஜ்யமித்யாதி). கோழிகூவென்னும் என்று வெளிப்போம். "கோழியும் கூகின்றதில்லை"என்கிறது-விடிவைஸூசிப்பிக்கிற கோழியை என்று தாத்பர்யமருளுகிறுர் (விடிவுக்கித்யாதி).... ... (சு)

(க) ரா-　　　† (பா) சக்ரவர்த்திமகன்

பதம்.	உரை.	பதம்.	உரை.
காமன்தனக்கு	மந்மதனுக்கு	யாமங்கள்தோறு	சாமங்கள்தோறும்
முறையல்லேன்	(நான் நலியப்படுகைக்கு) ப்ராப்தி யுடையேனல்லேன்;	எரி	காமாக்நியை
கடல்	கடல் போலே (ஶ்ரமஹரமான)	வீசும்	தூவாநின்றான்;
வண்ணனூர்	வடிவை யுடைய கண்ணபிரான்	என்	என்னுடைய
மாமணவாளர்	(எனக்கு) ஶ்லாக்யரான வல்லபர், (இவ்வழியாலே)	இளங்கொங்கைகள்	இளமுலைகளானவை
தான்	அந்த மந்மதனானவன்	மாமணி	நீலமணிபோன்ற
எனக்கு	எனக்கு	வண்ணர்	திருநிறத்தையுடைய ஸர்வேஶ்வரனுடைய
மகன்	மகனாகப்பெற்றான்;	திறத்த ஆய்	திறத்தில் படுகையையே பயனாக வுடையனவாய்
சொல்லில்	(இவன் என்னை நலிகிறபடியைச்)சொல்லப்புக்கால்	வளர்கின்ற	வளராநின்றன. (எ)

வ்யா.—ஏழாம்பாட்டு. (காமன்றனக்கு முறையல்லேன்) காமனுக்கு நான்பாத்ய(ஜந்ய)கோடியிலே யாகைக்கு ஒருப்ராப்தியில்லை. (கடலித்யாதி) எனக்கு ஶ்லாக்யரான வல்லபராய் ஶ்ரமஹரமான வடிவையுடையவர். அவ்வழியாலே தான் எனக்கு நன்மகன். மாதாபிதாக்களைச்சேரவைத்து ரக்ஷிக்குமதிறே புத்ரக்ருத்யமாகிறது. அரியன வெல்லாம் செய்தாகிலும் மாதாவை நோக்க வேணுமே? (சொல்லில்) இப்படி ரக்ஷிக்கை முறையாயிருக்க, அதுக்கு விபரீதமாக நலிகிறபடியைச் சொல்லப்புகில் அதுக்கு இவனோடு எனக்கு ஒருப்ராப்தியில்லை.

இவன் இப்படி விபரீதமாகச்செய்கிற செயலேதென்னில்? (யாமங்கள்தோறெரிவீசும்) சாமங்கள்தோறும் காமாக்நியைத்

அரு.—ஏழாம்பாட்டு. (காமனித்யாதி) முறைமையில்லாத அன்றில் முதலானவற்றையும் பருவம்கழிந்ததாயையும் சொல்லுகிறதென்? வயிற்றில் பிறந்தாரும், இணைபிரியாதே உரமேறியிருக்குமவையும் அவன் பக்ஷத்தையே பற்றி என்னை நலிகிறபடி வாசாமகோசரமென்றதைச்சொல்லி நோவுபடுகிறாளென்று ஸங்கதி.

(அரியன) என்றது-பிதாவாகிலும் அவர்மேலே அம்பைத் தொடுக்கை. (மாதாவைநோக்குகை), அவளைஅழைத்துக்கொண்டு சேர்க்கை. அவனுக்குப்

தூவாநின்றான். தனக்கு நான் அநுவர்த்தநீயையான ஆகாரங்கிடக்கச்செய்தே, என்னுடைய இம் முலைகள் தான் அவனுக்கென்றேயாயிற்று வளருகிறது. .... (எ)

மூ;—மஞ்சுறு மாலிருஞ்சோலை நின்ற மணாளனார்
நெஞ்சுநிறைகொண்டு போயினார்நினைக்கின்றிலர்
வெஞ்சுடர் போய் விடியாம லெவ்விடம்புக்கதோ
நைஞ்சுடலம்துயின்றால் நமக்கினிநல்லதே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மஞ்சு உறு	மேகபதத்தளவு மோங்கின	விடியாமல்	உதியாமல்
மாலிருஞ்சோலை	திருமாலிருஞ்சோலை மலையிலே	எவ்விடம்	எவ்விடத்திலே
நின்ற	எழுந்தருளியிருக்கிற	போய்புக்கதோ	சென்றொளித்தானோ?;
மணாளனார்	எம்பெருமான்	இனி	இப்படி பாத(?)க ஸாமக்ரிகள் மிகைத்தபின்பு
நெஞ்சில்	(என்னுடைய) நெஞ்சிலுள்ள	உடலம்	(நம்முடைய) ஶரீரமானது
நிறை	அடக்கத்தை		
கொண்டு	அபஹரித்துக் கொண்டு	நைஞ்சு	ஶிதிலமாய்
போயினார்	எழுந்தருளிவிட்டார்	துயின்றால்	முடியப்பெறில்
நினைக்கின்றிலர்	(இத்தலையை ஒருகாலும்) நினைக்கிறிலர்;	நமக்கு	நமக்கு
வெஞ்சுடர்	ஸூர்யனானவன்	நல்லதே	நல்லவாழ்ச்சியே. (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (மஞ்சித்யாதி) மேகபதத்தளவும் செல்லவோங்கின சிகரத்தையுடைத்தான திருமலையிலே, தமக்குக்கலவிருக்கையான ஸ்ரீவைகுண்டத்தைவிட்டு, இங்கே நம்முடையசெவ்வி

பிள்ளையான முறைமையால் பிள்ளையென்னலாம்படியான காமனேயோ? என்மார்விலே வளர்ந்த இவையும் எனக்கு அடங்காதே படுத்துகிற பாடென்னென்கிறாளென்று விவக்ஷித்தருளிச் செய்கிறார் (என்னுடைய வித்யாதி).

அரு.—எட்டாம்பாட்டு. (மஞ்சுறுவித்யாதி) வயிற்றில்பிறந்தாரை வெறுக்கவேணுமோ? கைப்பற்றின கணவனுக்குக் கண்ணோட்டமில்லை; நாட்டுக்குக் கண்காட்டியான லோக சக்ஷுஸ்ஸும் போனவிடம் தெரிந்ததில்லை. இனி நான் செய்வதென்னென்று விசாரப்பட்டு, விரஹம் தின்ற உடம்பு இனி இருக்கப்புகுகிறதோ? தானேபோமே; அதுபோனால் இனி நமக்கு து:க்கமே இல்லை என்று உடம்பில் நைராஶ்யத்தைச் சொல்லுகிறாளென்று ஸங்கதி.

யறிந்து புஜிக்கைக்கு அவஸர ப்ரதீக்ஷரா யிருக்கிறவர், நெஞ்சிலடக்கத்தைக் கொண்டுபோனார். "இத்தலையை இப்படி ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினோமாகாதே" என்று நெஞ்சில் இத்தனை இரக்கமுமின்றிக்கே இராநின்றார்.

(வெஞ்சுடரித்யாதி) ரக்ஷகன் பாதகனானவாறே, அவன் பரிகரமும் பாத (ஃ) கமாமத்தனையாகாதே?; அவன்பாதகமாகப்புக்கவாறே அவனை அநுவர்த்தித்த அவன் பரிகரமும் பாத(ஃ)கமாகப்புக்கது. இவள் ஸந்நிதியிலே வர்த்திக்கில் இவளை அநுவர்த்தித்துக்கொண்டு †ப்ராப்தகாலத்திலே விடியவேணுமென்று நினைத்தது செய்யாதே போனவிடம் தெரியாதபடிபோனான். (எவ்விடம்புக்கதோ?) இவன் ஆஜ்ஞைநடையாடாததோரிடம் தேடிப்போனானே அவன். அவன்பாதகனானபின்பு பரிகரமும் பாதகமாயிற்று. இனி இருந்தபடியாலே சரீரமானது சிதிலமாய் முடிந்து பிழைக்குமித்தனைபோக்கி, இனிநமக்கொரு ஜீவிக்கையென்றொரு பொருளில்லையாகாதே? .... (அ)

மூ;—காமன்கணைக் கோரிலக்கமாய் நலத்தின்மிகு
பூமருகோல நம்பெண்மை சிந்தித்திராதுபோய்
தூமலர்நீர்கொடு தோழீ நாம்தொழு தேத்தினால்
கார்முகில்வண்ணரைக் கண்களால்காணலாங்கொலோ.

பதம்.	உரை.	பதம்.	உரை.
தோழீ,	வாராய் தோழீ!;	கோலம்	ஒப்பனை யழகாலும்
காமன்	மந்மதனுடைய	மிகு	மிக்கவை லக்ஷண்யத்தையுடைய
கணைக்கு	பாண மென்று பேர் பெற்ற வற்றுக்கெல்லாம்	நம்	நம்முடைய
		பெண்மை	ஸ்த்ரீத்வத்தை
ஓர் இலக்கமாய்	ஓர் லக்ஷ்யமாய் (நோவுபடுவதிற்காட்டில்)	சிந்தித்து	புத்திபண்ணி
நலத்தில்	ஆத்ம குணங்களாலும்	இராது	"தத்தஸ்ய ஸத்ருஶம்" என்றிருக்குமிருப்பு தவிர்ந்து
பூமரு	ஸ்ப்ருஹணீயமான		

விடியாதென்னலாயிருக்க, "எவ்விடம்புக்கதோ" என்பானென்னென்ன வருளுகிறார் (இவனித்யாதி). ஸ்வாமி ஸந்நிதியிலிருந்தால் ஸ்வாமிநியானதான் சொன்னது செய்யவேண்டிவருமென்று, உபயவிபூதியைவிட்டு எங்கே போயிற்றோவென்று கருத்து. ... ... (அ)

† (பா) ப்ராதக்காலத்திலே.

பதம்.	உரை.	பதம்.	உரை.
போய்	அவனிருக்குமிடமே றப்போய்	வண்ணரை	வடிவை யுடைய எம் பெருமானை
தூ	பரிசுத்தமான	தொழுது	வணங்கி [றால்,
மலர்	புஷ்பங்களையும் [ம்	எத்திறல்	ஸ்தோத்ரம் பண்ணி
நீர்	புண்ய தீர்த்தத்தையு	கண்களால்	(அவரைக்) கண்களாலே
கொடு	கையில் கொண்டு புக்கு		
நாம்	நாமிருவருமாக	காணலாம்கொலோ	ஸேவிக்கப் பெறுவோமோ?. (கூ)
கார்முகில்	காளமேகம்போன்ற		

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (காமனித்யாதி) அவன் முறை தப்பிநின்றான். அவன் பரிகரமும் முறைதப்பி நின்றது. இனி நாமும் முறைதப்பி நின்றாகிலும் ஜீவிக்குமத்தனையென்கிறாள்.

"காமனுடையஅம்பு" என்று பேர்பெற்றவற்றுக்கெல்லாம் ஓரிலக்காய். அவன்றன்னை (க) "ஐங்கணைவில்லி" என்னக்கடவதிறே. ஓரம்பை விடும்போதும் ஐந்தும்போடும்கூடியிறேயிருப்பது. காமனுடையசர வர்ஷத்துக்கு இலக்காய் நோவுபடாநிற்க. (நலமித்யாதி) நலம் மிக்க வாத்மகுணங்களோடும் மிக்க ஒப்பனையோடும் கூடியிருக்கிறநாம், அவன்றானே வரும்படி யிருக்கையொழிய, அவனிருந்தவிடத்தேற நாமே புறப்பட்டுப்போகையாகிறவிது, நம்முடையநாண் மடம் அச்சம் துடக்கமான ஆத்மகுணங்களுக்குப்போராது. ஒப்பனையழகுக்

அரு;— ஒன்பதாம்பாட்டு. (காமன்கணைக்கித்யாதி) கீழேஉடம்பில்வைரா ஸ்யம் பிறந்தாலும், ஆசை முடிய வொட்டாமையாலே முறையழித்தாகிலும் பெறுவோமென்கிறாளென்ற ஸங்கதியை உட்கொண்டு தோழியின் சித்த ஸமாதாநம் பண்ணும் முகத்தாலே அருளுகிறார் (அவனித்யாதி).

"கணை" என்றத்தை ஜாத்யபிப்ராயமாக்கி அருளுகிறார் (காமனுடையவித்யாதி). இவனுக்குள்ளபாணங்களெல்லாம்கூடி ஐந்தேயன்றோ? ஜாத்யேகவசந மாக பஹுவாகச்சொல்லுவானென்னென்னவருளுகிறார் (ஐங்கணையித்யாதி). இவனுக்கு இதுவே நிரூபகமாக விருக்கையாலே, ஓரம்புபொகட்டாலும் ஐங்கணையோடு கூடியே யிருக்கும்படி, அரவிந்தாதிகள் கனத்திருக்கையாலே, அவை யெல்லா வற்றுக்கும் இலக்கானே னென்கிறாளென்று விவக்ஷித்து எடுத்த பாசுரத்துக்குத் தாத்பர்ய மருளுகிறார் (ஓரித்யாதி). பலிதார்த்தம் (காமனுடையவித்யாதி).

(க) தி-மொ-கூ-ரு-எ.

கும்போராது. நம்முடையநிருபாதிக ஸ்த்ரீத்வத்துக்கும்போராது. என்றுஇவற்றை மறைத்துக்கொண்டிராதே,(போய்) அவன்வரவிருக்கை தவிர்ந்து இனி நாய்போய்.

(தூமலரித்யாதி) உபாஸநத்தைவிதிக்கிற சாஸ்த்ரத்தில் சொல்லுகிறக்ரமம்தப்பாதபடி நாம் உபாஸித்தால். (நாம்) அவன்செய்யக் கடவற்றை நாமும் செய்தால், அவன்தொழுமத்தை நீ கொள்ள வேணுமென்று என்னைஇசைவிக்கைக்கு நீபடும்பாடறிதியே? ப்ரணயிநியான ஏற்றத்தோடேயிருந்து பெறுமது தவிர்ந்தாலும், பக்திமான்கள் பெறும்பேறு பெறத்தட்டில்லையே. முந்துற (க)"భక్త్యాత్వనన్యయాశక్యః - பக்த்யா த்வநந்யயாசக்ய:" என்றானே; (உ)"నమే మోఘం వచో భవేత్ - நமேமோகம் வசோபவேத்"என்றுமுண்டே. அவன்பக்கலிலே, ஶ்ரமஹரமான வடிவை யுடையவரைக் காண வேணுமென்று விடாய்த்துப் பட்டினிவிடுகிற கண்களாலே காணலாமாகில்ஒருமுறைபார்த்திருக்கிறது தானென்? .... (கூ)

மூ;—வென்றுவிடையுட னேழடர்த்தவடிகளை
மன்றின்மலிபுகழ் மங்கைமன்கலிகன்றிசொல்
ஒன்றுநின்றவொன்பது முரைப்பவர்தங்கள்மேல்
என்று நில்லாவினையொன்றும் சொல்லிலுலகிலே. (க0)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.	பதம்.	உரை.
வென்றி	ஜயிஷ்ணுவாய்,	ஒன்று நின்ற ஒன்பதும்	இப் பத்துப் பாட்டுக்களையும்
விடை ஏழ்	வ்ருஷபங்களேழையும்	உரைப்பவர் தங்கள்மேல்	அநுஸந்திப்பார் பக்கலில் [மும்
உடன்அடர்த்த	ஸமூலமாக நிரஸித்தருளின	வினைஒன்றும்	ஒரு விதமான துன்ப
அடிகளை	எம்பெருமான் விஷயமாக,	என்றும்	என்றைக்கும்
மன்றில்	நாற்சந்திகள் தோறும்	நில்லா	இருக்கப்பெறாது ; (இவ்வளவேயன்றிக்கே,)
மலி	நிறைந்த	சொல்லில்	(மேல் பெறப் புகுகிற பேற்றின் பெருமையைச்) சொல்லப்புக்கால்
புகழ்	புகழையுடையராய்		
மங்கை	திருமங்கைக்கு		
மன்	நிர்வாஹகரான	உலகிலே	அவர்களிருந்த தேசத்திலுங்கூட
கலிகன்றி	ஆழ்வார்		
சொல்	அருளிச்செய்த		[வினை ஒன்றும் நில்லா-.] (க0)

(க) கீ-கக-ருச. (உ) பாரத.

வ்யா.—பத்தாம்பாட்டு. (வென்றியித்யாதி) மிக்கசெயலையுடையவாய், புக்ககார்யத்தில் பிற்காலிக்கையன்றிக்கே யிருக்கிற வ்ருஷபங்களேழையும் ஊட்டியாகநிரஸித்துத் தன்னைக்கொண்டு தப்பினவ்வாமியை. (மன்றிலித்யாதி) நால்வர் இருவர் திரண்டவிடமெங்கும் "இவ்வாழ்வார், பாத(க)க பதார்த்தங்களின்கையிலேபட்டபாடே?" என்று இவர் வார்த்தையேயாயிருக்கும். கீழ் ஒன்பதுபாட்டாலும் பட்டநலிவும், இதொருபாட்டில் நலிவுமானால் இதுவே மிக்கு வாசாமகோசரமாயிருக்கையாலே சொல்லிற்றில்லை.

(என்றுநில்லாவினையொன்றும்) ப்ராப்திப்ரதிபந்தகமான கர்மங்கள் சிலநாள்போய் சிலநாள்நிற்கையன்றிக்கே ஒருநாளும் ஒன்றும் நில்லாது. (சொல்லில்) இவ்வளவன்றிக்கேமேல் பெறப்புகுகிற பேற்றின்கனத்தைச் சொல்லப்புகில். (உலகிலே) வருந்தி பனைநிழல்போலேதங்களளவில் போகையன்றிக்கே இவர்கள் இருந்ததேசத்திலும் கூடவின்றிக்கே ஒழியும். பாதகபதார்த்தங்களின் கையிலே நோவுபடாதே, அவைதானே அநுகூலமாம்படி அவனோடே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணப்பெறுவர். .... (கo)

பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளேசரணம்.

பெரியதிருமொழி
பதினோராம்பத்து இரண்டாந்திருமொழி
முற்றிற்று.

அரு;— பத்தாம்பாட்டு. (வென்றி யித்யாதி). "பத்தும்" என்று கூட்டிச் சொல்லாதே, பிரித்துச்சொல்லுவா னென்னென்ன வருளுகிறார் (கீழேயித்யாதி). கீழெல்லாம் அவனைத்தாம்பெருமையாலேபாத(க)கபதார்த்தங்கள் கையிலேநோவுபட்டு வ்யஸநத்தைச் சொல்லிக்கூப்பிட, கண்ணன் மர்மஜ்ஞனுகையாலே நப்பின்னைக்காகத் தான் கருமாரிபாய ஒருப்பட்டத்தை நினைப்பூட்டத்திடுக்கிட்டுவா, ளேறுகாணத்தேளேறிமாயுமாபோலே நோவுபட்டிருக்க, அநந்தரம்விடைகள்வென்றபடியை, க(ரு)தஞ்சித்ப்ரதிஸந்தாநம் பண்ணி, பலஶ்ருதி சொல்லித் தலைக்கட்டுகிறாரென்று திருவுள்ளம். (சொல்லிற்றில்லை) பத்தென்று கூட்டிச்சொல்லிற்றில்லை. ... ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பதினோராம்பத்து மூன்றாந் திருமொழி

மன்னிலங்கு ப்ரவேசம்.

வ்யா;—மன்னிலங்கு ப்ரவேசம். பிரிந்தவன்று தொடங்கி பாதக பதார்த்தங்களாலே நோவுபட்டு, அத்தாலே மிகவும் அவஸந்நையாய், நம்மை உபாஸ்யகோடியிலே நினைத்து, அவன் தான் "வேணுமாகில் நம்மை உபாஸித்துவந்து பெறுகிறான்" என்று நாம் தலைமைகொண்டாடி யிருந்தது அமையும்; அவனை உபாஸ்யனாகக் கொண்டு நாம் உபாஸித்துப் போருமித்தனையென்று அதிலேயொருப் பட்டார் கீழ்.

(க) "'காமன்கணைக்கோரிலக்கமாய்' என்கிறபடியே இத்தனை பொறுப்பாரொருவனல்லனே அவன், அநந்தரம் வந்துமுகம்காட்டி அரைக்ஷணம் தாழ்க்கும் காட்டில் இத்தனை ஸாஹஸத்திலே ஒருப் படக்கடவதோ? இத்தலை பெறுகைக்கு எதிர் சூழல் புக்குத் திரிந் தேன் நானல்லேனோ? என்னதன்றோக்லேசம்; ஜந்மவ்ருத்தாதி களால் குறையநின்றார்களேயாகிலும் நம்மையொழியச் செல்லாமை யுண்டானால் பின்னை அவர்களையொழிய ஜீவிப்பனோ நான். ஆஸ்ரித ஸ்பர்ஸமுள்ளத்ரவ்யமொழிய எனக்குத் தாரகமுண்டோ" என்று அவன் செல்லாமை யடங்கலும்காட்ட, அவற்றையடைய அநுஸந் தித்து, பிபாஸிதனுக்குக் குடித்ததண்ணீர் தாஹசாந்திக்கு உட லாகை தவிர்ந்து மேன்மேலென விடாய்க்குடலாமாபோலே, அவ் வநுஸந்தானந்தான் மேலே விடாயைப் பிறப்பிக்க, அத்தாலேபோர நோவுபட்டுப்பின்னையும் அவனைக்கிட்டி நித்யாநுபவம் பண்ணப்

அரு;— மன்னிலங்கின் ப்ரவேசம். கீழிரண்டு திருமொழிக்கும் ஸங் கதி யருளுகிறார் (பிரிந்தவித்யாதி).

"இப்படிபரத்வத்தையும், அவதாரங்களையும்,அவதரித்துப்பண் ணும் வ்யாபாரங்களையும், இவ்விடத்தேயுண்டான மநுஷ்யத்வேபர த்வத்தையும்அநுஸந்தித்துத்தனக்காக்கிக்கொண்டிருக்குமிவ்விருப் பையும்தனக்குஉதவுகைக்கும், உறுப்பாகவந்தவதரிக்கும் அவதாரத் தையும் அநுஸந்தித்து, இப்படி அவதரித்து வ்யாபரிக்கிறதும் ஆஶ் ரிதரக்ஷணர்த்தமாக. அவன் பராவஸ்தனு யிருக்கிறதும் ஆஶ்ரிதர் குறை தீர்க்கைக்காக. இப்படி இதுடைய ஆஶ்ரிதார்த்தமானபின்பு நமக்கொருகுறையுண்டோ?"என்றநுஸந்தித்த வித்தால் பிறந்தப்ரீ திப்ரகர்ஷம்ஓராஶ்ரயத்தில் அடங்காதாயிருக்கையாலே, அந்தஃபுர பரிகரமாய் தங்களில் தோழமையாயிருப்பார் ஒருவர்க்கொருவர் பரத்வாவதரங்களிரண்டிலேயும்தனித்தனி ஊன்றி,அவற்றை அநு ஸந்தித்துக்களித்துப்பேசுகிற விவர்கள் பேச்சாலே தாம் அவற்றை யேபேசி அநுபவிக்கிறர்.

(தனக்காக்கிக்கொண்டு) நாயகியான தனக்காக்கிக்கொண்டென்கை. இது "மன்னிலங்கு பாரதத்து" என்கிற திருமொழியிலே (க) "அண்ணல் மலையுமரங்கமும் பாடோமே" என்றத்தைப்பற்ற. (தனக்கு உதவுகைக்கு) இத்யாதியும், அதிலே "அணியாலிகை தொழுது" என்கிறத்தைப்பற்ற. "போதணியப்பெற்றேமே" என்று களிப்புப்பிறந்தது அங்கேயிறே.

ஆக க்கீ ழி ர ண் டு திருமொழியோடு ஸங்கதி சொல்லிற்றுயிற்று. (உ)"స్వరూపం స్వాతన్త్ర్యం భగవతః- ஸ்வரூபம்ஸ்வாதந்த்ர்யம்பகவதஃ" என்றி ருக்க இவ்வாஶ்ரித பாரதந்த்ர்யாநுஸந்தாநம் ப்ரீதிப்ரகர்ஷத்தைஉண்டாக்கக்

(க) கக-ரு-எ. (உ) ஶ்ரீகுணரத்நகோ-

இவ்வாத்மாவின்ஸ்வரூபத்தை அநுஸந்தித்தால், தனக்காயிருக்கை-ஸ்வரூப விரோதியாய், அவனதாயிருக்குமிருப்பு-ஸ்வரூபாநுரூபமாயிருக்குமாபோலே, அவன்ஸ்வரூபத்தை அநுஸந்திக்கப்புக்காலும் அதடைய ஆஶ்ரிதார்த்தமாக விருக்கிறவிருப்பை அநுஸந்தித்தால், ஆநந்தநிர்பரராய்க் களிக்கும்படியாய் இருக்குமிறே. இப்படிபரத்வஸௌலப்ய்யங்களிரண்டையும் மாறிமாறி அநுபவிக்கிறார்.

மூ;—மானமருமென்னோக்கிவைதேவி யின்துணையாக்
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்தான் காணேடீ
கானமரும் கல்லதர்போய்க்காடுறைந்த பொன்னடிக்கள்
வானவர்தம்சென்னிமலர்க் கண்டாய்சாழலே.

பதம்.	உரை.
ஏடீ	தோழீ!,
மான்அமரும்	மானினது போன்று
மென்நோக்கி	முக்த (X)மான நோக்கை யுடையளா[ன
வைதேவி	பிராட்டியை
இன்துணையா	இனியதுணையாகக் கொண்டு,
கான்அமரும்	காடுகள் நிறைந்த
கல் அதர்போய்	கல்வழியேபோய்
காடு	நீருநிழலுமற்ற வநங்களிலே
உறைந்தான் காண்!	வஸித்திருந்தான்; (என்று ஒருத்தி இகழ்ந்து பேச;)

பதம்.	உரை.
சாழலே	தோழீ!
கான்அமரும் கல்அதர்போய்-;	
காடு	காடுகளிலே
உறைந்த	ஸஞ்சரித்த
பொன்அடிக்கள்	திருவடிகளானவை
வானவர்தம்	தேவதைகளுடைய
சென்னி	முடியிலணியக்கடவ
மலர்கண்டாய்	பூக்களாயிராநின்றன காண்;

[என்று மற்றொருத்தி புகழ்ந்து பேசி னபடி]. (க

கூடுமோவென்ன வருளுகிறார் (இவ்வாத்மாவினித்யாதி). இவனுடைய ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநம் ப்ரீதிஜநகமானுப்போலே, அவனுடைய ஸ்வரூபயாதாத்ம்யஜ்ஞாநமும் ப்ரீதிப்ரகர்ஷஜநகமென்று கருத்து; ஆக, ஸ்வாதந்த்ர்ய கார்யமே இப்பாரதந்த்ர்யமென்றதாயிற்று. ... ...

அரு;—முதற்பாட்டு. (மானமருமித்யாதி). "கொடியோனிலங்கை பொடியாச் சிலைகெழு செஞ்சரங்கள் செலவுய்த்தநங்கள் திருமால்" என்று பாரதந்த்ர்ய ஸூசகமான ஶ்ரிய:பதித்வத்தையும் அநுஸந்தித்தவுடனே *மானமருமித்யாதியை அநுஸந்திக்கையாலே ஸௌலப்ய்யம் ஈடுபடுத்துமெ

வ்யா;—முதற்பாட்டு (மானமருமித்யாதி) (௧) "ஒண்டொடியாள்திருமகளும் நீயுமேநிலாநிற்ப," என்கிறபடியே தனக்கும் அவளுக்கும் யோக்யமான நிலத்திலே நிரதிஶயாநந்தயுக்தனாயிருக்கக் கடவவன், அங்கு நின்றும் போந்து அவதரித்துத்திருவயோத்யையும், அவ்விடத்தோபாதி காற்கடைகொண்டு, தங்களுக்கு அயோக்யமான காட்டிலே, மானோடொத்திருப்பதாய் ம்ருதுவான நோக்கையுடைய விதேஹராஜன் புத்ரியைத் தனக்கு இனியதுணையாக, காட்டிலே, முளைத்தாப்போலே யிருக்கிற கல்வழியேபோய், இவ்வெய்யில் வெம்மைக்கும் பாலைநிலத்தின் வெம்மைக்கும் பரிஹாரமான நீரும் நிழலுமெல்லாம் இவளேயாய்ப் போனார்.

(காணேடீயித்யாதி) தோழமையாலே "ஏடீ" என்கிறதாதல்; பிராட்டியைக் கண்டப்ரீதியாலே ததிமுகனைக் குத்தினாப்போலே ஹர்ஷத்தாலே சொல்லுகிறாளாதல். விநயமேஸ்வரூபமாயிருக்கக் கடவதிருவடியிறே (௨)"𑌅𑌹𑌮𑌾𑌵𑌾𑌰𑌯𑌿𑌷𑍍𑌯𑌾𑌮𑌿-அஹமாவாரயிஷ்யாமி" என்றான்; நீங்கள் வேண்டினபடி மதுபாநத்தைப் பண்ணுங்கோள். நான் காத்திருந்த ததிமுகாதிகளைத்தொட்டுத்தருகிறேனென்றான்.

(காடுறைந்தான்) ரிஷிகளுடைய ரக்ஷணத்துக்காகக்காட்டிலே வர்த்தித்தான் காண். (௩) [𑌰𑌕𑍍𑌷𑌿𑌤𑌵𑍍𑌯𑌾𑌸𑍍𑌤𑍍𑌵𑌯𑌾 𑌶𑌶𑍍𑌵𑌦𑍍𑌗𑌰𑍍𑌭𑌭𑍂𑌤𑌾𑌸𑍍𑌤𑌪𑍋𑌧𑌨𑌾𑌃-

---

கைக்காக அடியேபிடித்துக் கூட்டித்தாத்பர்யமருளுகிறார் (ஒண்டொடியாளித்யாதி).

ஒருபிராட்டிஸம்போதிக்கும்போது விநயமாகச்சொல்ல வேணுமொழிய, இப்படி ஏகவசநமாக ஒருகாலைப்போலே பத்துத்தரமும் சொல்லக்கூடுமோ வென்கிற சங்கைக்காக பத்துப்பாட்டுப் பதங்களை உபாதாநம்பண்ணுகிறார் (காணேடீஇத்யாதி) என்று.இதுக்கு இரண்டுவிதமாகப்பரிஹரிக்கிறார்(ஏடீயித்யாதி). ஸாபத்ந்யகந்தமில்லாதபடி ஸௌஹார்தாதிசயமாதல், ஸௌலப்யாநு ஸந்தாநஜநிதஹர்ஷப்ரகர்ஷமாதல் இப்படிசொல்லப் பண்ணிற்று,என்று கருத்து. ஹர்ஷத்தாலே விநயத்தைவிட்டவருண்டோ வென்ன வருளுகிறார் (விநயமேயித்யாதி).

"காடுறைந்தான்" என்றது-ஈடுபாட்டுக்குஉறுப்பாவானென்னென்ன வருளுகிறார் (ருஷிகளித்யாதி). பித்ருவசநத்தாலேயன்றோபோனது; ரக்ஷணார்த்தமென்கைக்கு நியாமகமென்னென்ன ; (ரக்ஷிதவ்யாஇத்யாதி). அதுவ்யாஜம், இதுவேப்ரதாநஹேது வென்று கருத்து. தவ்யப்ரத்யயார்த்தம்

---

(௧) தி-வாய்-௭-௬-௧௦ (௨) ரா-ஸு-௬௨-௨. (௩) ரா-ஆ-௧-௨௧.

ரக்ஷிதவ்யாஸ்த்வயாஸர்வத்கர்பபூதாஸ்தபோதநா:] எங்களுடைய ரக்ஷணம் - உமக்குத்தவிர வொண்ணாது. உமக்குத் தலையோட்டில் பொறி. "உங்கள்தபஸ்ஸாம்ப்ரபாவமும்கிடக்க, நான்ரக்ஷிக்கவேண்டு கிறதென்?" என்ன; [கர்ப்பபூதா:] எங்களுக்குக்கைம் முதலுண்டானா லும்ரக்ஷணத்தில் ப்ராப்தியில்லைகாணும். ராஜமஹிஷியானவள்சக்தி யுண்டென்று, அவகா(ஹ்ய) தம் பண்ணுளிறே. ஜநநிதானே கைச்ச தும் புளித்ததும் தவிர்ந்து நோக்குமத்தனையன்றோ? இவ்வாத்மா வின் ஸ்வரூபத்தை உணர்ந்தாலும் உம்மைக்குறித்து நித்யஸ்தநந்த யமாய்க்காணுமிருப்பது. இப்படிச்சொன்ன வார்த்தைக்கு ஒருமறு மாற்றமில்லாமையிறே(௧) "ப்ரஸீதந்து-ப்ரஸீதந்து" என்றது.

"பூர்ணராயிருக்கிற நீங்கள் குறைவாளரளவில்இரங்குமத்தனை யன்றோ? நாங்களும் பிறர்கையிலே நோவுபட்டு நிற்கையாலே கு றைவாளரன்றோ" என்ன; உங்களுக்கு நோவுவந்தது உங்களாலன் றே. நோவுபட்ட உங்களளவல்ல நோவுக்கு ஹேதுபூதரான நம் முடையலஜ்ஜை; (௧) "யதீத்ருஸைரஹம்விப்ரை:" "யதீத்ருஸைரஹம்விப்ரை:" ஈத்ருஸமான விலக்ஷண புத்தியை யுடையவர்களாலே "நெரு ப்பைக்குளிருக" என்றவாயைக்கொண்டு ராவணனை "நஷ்டமா வாய்" என்று சொல்லமாட்டாமையன்றிறே இருந்தது. நம்மு டையரக்ஷணத்திலேநமக்குப்ராப்தியில்லை. உ"தத்தஸ்ய-தத்தஸ்ய" என் றிருந்தவளைப்போலேயிறேஇவர்களும்சிலர். நோவுபட்டால்அங்கே

(எங்களித்யாதி). ருஷிகள் சொன்னவார்த்தைகொண்டேரக்ஷணம்ப்ரயோ ஜநமென்று ஸாதிப்பதென்ன; பெருமாளுக்கும் அதுவே நினைவென்றதுக்கு ப்ரமாணம்காட்டக்கோலி அவதாரிகை (இப்படியித்யாதி).

(௧) "ஹ்ரீரேஷாஹிமமாதுலா-ஹ்ரீரேஷாஹிமமாதுலா" என்றதுக்குத் தா த்பர்யம் (நாங்களுமித்யாதி). "தாத்ருஸை:-தாத்ருஸை:" என்றுதே "ஈத்ருஸை:-ஈத்ருஸை:" என்றதுக்கு அபிப்ராயம் பிராட்டியைப்போலே யாமவர்களென் று தாத்பர்யமாக்கி, அத்தைஉபபாதிக்கிறார் (நெருப்பையித்யாதி). "உபஸ்தேயைருபஸ்த்தித:-உபஸ்த்தேயைருபஸ்த்திதஃ'இதியத்" என்றதுக்குபாவம்(சிலரித்

(௧) ரா-ஆ-௪௦-௧. (உ) ரா-ஸு-௩௧-௩௦.

வந்துஅவர்கள் குறைதீர்க்கை ரக்ஷணத்துக்கு ஸ்வரூபமாயிருக்க, நோவுபடுவதிகோளும் நீங்களாய், பட்டகுறை அறிவிப்பிகோளும் நீங்களாம்படி நாம் பிற்பாடரானோமென்பது யாதொன்று.

பின்பு (க)"ஶாஶாநாஸி-பாபாநாம்" என்கிற பிராட்டி, "காட்டிலே வர்த்திக்கிறநாளிலே, ஆயுதம் வேண்டா; நீர்ஸாயுதராய்த் திரியப்புக்கவாறே நிழல்மரமாய்த் தோற்றுவீர். ஆர்த்தராய் சரண்யன் தேட்டமாய்த் திரிகிறவர்கள், உம்மை "நிழல் மரம்" என்றுஒதுங்குவர்கள்; சரணாகதரைக் கைவிடாமைஉமக்கு ஸ்வபாவமாயிருக்குமாகையாலே, ராக்ஷஸரை அழியச்செய்வீர்; அதுதானே ஸத்தைக்குக் கைம்முதலாகநினைத்திருக்கிறஉம்முடையஸத்தையுமழியும்படி, தலைக்கட்டவடுக்கும், ஆன பின்பு காட்டில்வர்த்திக்கும் நாளித்தனையும் ஆயுதத்தைப் பொகட்டுக் கண்டார் இரங்கும்படி தாபஸவேஷத்தோடே திரிய அமையாதோ?" என்று அவள் ப்ரஜைகளுடைய ரக்ஷணத்தில் நிருகும் ஊற்றத்தினெல்லை அறிகைக்காகச்சொல்ல;(உ)[அப்யஹம்-த்வாம்வா-அப்யஹம், த்வாம்வா]அஸாதாரணராய்த்தங்களோடு அநந்யராயிருப்பாரைவைத்தோ தந்தாமை விடுவார்விடுவது. உண்டாமன்று ஒக்கவுண்டாய், இல்லையாமன்று ஒக்கவில்லையாம்படியன்றோவிருப்பது [நகு-நது]நான்துடங்கினவற்றில் தவிரமாட்டாதது, ஈதொன்றுமே. அதுதன்னில் ஸாயுதராய் ஸ்வரக்ஷணத்தில் அயோக்யதை யுடையராயிருக்கையன்றிக்கே,

---

யாதி). (யாதொன்று) என்றவநந்தரம் "அத்தர்லே என்லஜ்ஜை அதுலையென்கிறார்" என்று பூரிப்பது.

காடுறைந்தது-ரக்ஷணார்த்தமாகில், *வைதேவி, இன்துணையாகப்போவானென்னென்ன; "அவளும்அவருடைய ரக்ஷணத்தை * ஸ்த்ரூணிகாநங்யாயே நஸ்த்திரீகரிக்கிறளாகையாலே, "இன்துணையாளுள்" என்றத்தைப்பரக்க உபபாதிக்கிறார் (பின்பித்யாதி-தவிரமாட்டோம்) என்னுமளவும்.

(ஸத்தையுமழியும்) என்றது - திருமேனிக்கு வாட்டம் வருமென்கை. "திருமேனிக்கு வாட்டமென்றுகையில்வில்லைபொகடு" என்றோநின்றாய், (௩) "ப்ராணேப்யோபிகரீயஸீ- ப்ராணேப்யோபிகரீயஸீ" என்னும்படியான உன்னையும் விடவேண்டிவரிலும், ஆஶ்ரிதரக்ஷண ப்ரதிஜ்ஞையை விடுவதில்லையென்னும் தாத்பர்யமருளுகிறார் (அஸாதாரணராயித்யாதி).

(க) ரா-யு-௧௧௯-௪௪. (உ) ரா-ஆ-௩௦-௧௧. (௩) ரா-ஆ-௩௦-௨௨.

நம்மைபார்த்திருக்கும் ப்ராஹ்மணரை ரக்ஷிக்கிறோமென்று சொல்லிவைத்துத் தவிரமாட்டோம்.

(கானித்யாதி) காட்டில் கல்வழியேபோய் காடுறைந்த ஸௌகுமார்யமான திருவடிகள்-அமரர் சென்னிப்பூக்கிடாய். (மானமருமித்யாதி)இப்படி தன்ஸ்வரூபத்தை அழியமாறி ஆஸ்ரிதரக்ஷணத்துக்காக க்லேசப்படக்கடவனானால் இவ்வாத்மாவுக்கு ஒருகுறையுண்டோ? (கானமருமித்யாதி) அவன் நிரதிசயாநந்த பரிபூர்ணனாயிருக்கிறது நமக்காகவாயிருந்த பின்பு, இவ்வாத்மாவுக்கு ஒருகுறையுண்டோ?.

மூ;—தந்தைதளைகழலத் தோன்றிப்போயாய்ப்பாடி
நந்தன்குலமதலையாய் வளர்ந்தான்காணேடீ
நந்தன்குலமதலையாய் வளர்ந்தான்நான்முகற்கு
தந்தை காணெந்தைபெருமான் காண்சாழலே. (௨)

பதம்.	உரை.
தந்தை	பிதாவான வஸுதேவருடைய
தளை	விலங்கானது
கழல	கழன்று விழும்படியாக
தோன்றி	அவதரித்து,
போய்	அவ்விடத்தினின்றும் பெயர்ந்து போய்
ஆய்ப்பாடி	திருவாய்ப்பாடியில்
நந்தன்	ஸ்ரீ நந்தகோபருடைய
குலம்	குலத்துக்கு (உத்தாரகனை)
மதலையாய்	

பதம்.	உரை.
வளர்ந்தான்காண்	(இப்படி தாயும் தந்தையும் மாற) வளர்ந்தான் காண்;
சாழலே;—	
நந்தன்குலமதலையாய்;—	
வளர்ந்தான்	வளர்ந்தருளினவன்
நான்முகற்கு	ப்ரஹ்மாவுக்கு
தந்தைகாண்	உத்பாதகன்காண்;
எந்தை	எமக்கு ஸ்வாமியாகப் போரும்படிக்கீடான
பெருமான்காண்	பெருமை பொருந்தியவன் காண். (௨)

வ்யா;—இரண்டாம்பாட்டு. (தந்தைதளைகழல) நெடுநாள் பட்ட ஸ்ரீவஸுதேவர் காலில் தளை, அவதரித்த தத்க்ஷணத்திலே

"சாழலே" என்று தோழியை ஸம்போதிக்கிறதாகத் திருவுள்ளம்பற்றியருளுகிறார் (காட்டிலித்யாதி). ஸ்வாபதேசம் (இப்படியித்யாதி), (௧)

அநு;—இரண்டாம்பாட்டு. (தந்தையித்யாதி) கீழ்ப்பாட்டில் சக்ரவர்த்தித் திருமகன் ஸௌலப்யத்தை அநுஸந்தித்து ஈடுபட்டார்கள். அதிலும் விஞ்சினது கண்ணனுடைய ஸௌலப்யமாகையாலே, அவதாரம்துடங்கி ஸாரத்யம்பண்ணினவளவும் க்ருஷ்ணாவதாராபதானங்களைப்பேசி ஈடுபடுகிறார்கள் என்று, இப்பாட்டுத்தொடங்கி எட்டாம்பாட்டளவும் ஸங்கதி.

கழன்றதாயிற்று. அவருடைய கம்ஸபயத்துக்குப் பரிஹாரமாக விரஹதாபத்தைப் பண்ணுதே வழியில் அழாதேபோய், பின்பு பருவம் நிரம்புமளவும்செல்ல, "தானேஉடன்படவிருந்தாளுகில் வரி இறுத்தியிருக்கிறோம். அன்றுகில் உழக்கோலாலே அடித்துப் பொகடுகிறோம்" என்கிறவூரிலே ஸ்ரீநந்தகோபர் குலத்துக்கு உத்தாரகனாய் வளர்ந்தான் காண். இப்படி ஓரிடத்திலேபிறந்து ஓரிடத்திலே போய் வளருகிறவன், பிறப்புமோரிடத்திலே வ்யவஸ்த்திதமாய், நாட்டார் "அஜன்" என்று சொல்லும்படியிருக்கிற ப்ரஹ்மாவுக்கும் ஜநகன்காண். இஸ்ஸ்வபாவத்தை அநுஸந்தியா என் குலநாதனென்கிறாள். அவன் அகர்மவஶ்யனாயிருந்துவைத்து கர்மவஶ்யருடைய ரக்ஷணத்துக்குவந்து பிறக்குமவனாகையாலும், அவன்தான் ஸர்வகாரண பூதனாகையாலும் நமக்கொரு குறையுண்டோ வென்கிறது. .... (உ)

மூ;—ஆழ்கடல்சூழ் வையகத்தாரேசப் போயாய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்ததயி ருண்டான்காணேடீ
தாழ்குழலார்வைத்த தயிருண்டபொன்வயிறிவ்
வேழுலகுமுண்டு மிடமுடைத்தால் சாழலே. (ந)

பதம்.	உரை.
	ஏடீ
ஆழ்	ஆழ்ந்த
கடல்	கடலாலே
சூழ்	சூழப்பட்ட
வையகத்தார்	பூமியிலுள்ளாரடைய
ஏச	ஏசும்படியாக
ஆய்ப்பாடிபோய்	திருவாய்ப்பாடியிலே போய்
தாழ்	தாழ்ந்த
குழலார்	கூந்தலையுடைய ஆய்ப் பெண்கள்

பதம்.	உரை.
வைத்த	சேமித்துவைத்த
தயிர்	தயிரை
உண்டான்காண்	அமுதுசெய்தான் காண்;
	சாழலே!—;
	தாழ்குழலார் வைத்ததயிர்;—
உண்ட	அமுதுசெய்த
பொன்	ஶ்லாக்யமான
வயிறு	திருவயிறனது

(பரிஹாரமாக) என்றதுக்கு (வளர்ந்தான் காண்) என்றத்தோடே அந்வயம். (விரஹதாபத்தைப்பண்ணுதே) என்றது முன்புபிறந்தமக்கள் அறுவரும் கம்ஸன்கையிலே அகப்பட்டுப் புத்ரவிரஹத்தைப் பண்ணினாப்போலாகாதபடியென்கை. (தானே) என்றது-கம்ஸனே. நான்முகனுக்கு என்னாதே, "நான்முகற்கு" என்று பூஜித்தருளிச்செய்ததுக்குத் தாத்பர்யம் (பிறப்புமித்யாதி). (உ)

பதம்.	உரை.
இவ்வேழுலகும்	இவ்வுலகங்களேழையும்
உண்டும்	அமுதுசெய்தவளவிலும்
இடம் உடைத்து	(இன்னும் பல உலகங்களடங்குகைக்கீடான) அவகாசத்தை யுடைத்தாயிருக்கும்;
ஆல்	இவ்வாஶ்சர்யமிருந்தபடி கண்டாயே.

வ்யா;—மூன்றாம்பாட்டு. (ஆழ்கடல்சூழ்) சிசுபாலாதிகளேயன்றிக்கே "நீ இடையன், எனக்குப்பூசல்போரத் தாம்போராய்," என்றானிறே ஜராஸந்தன். (தாழ்குழல்) தங்கள் குழலைப்பேணாதே தேடிவைத்த தயிரையுண்டான். அத்தயிரை அமுதுசெய்த ஶ்லாக்யமான வயிறும் ரக்ஷணத்தில் பர்யாப்தமாகவிராது காண். ஆக அவன் ஆஶ்ரித ஸ்பர்ஶமுள்ள த்ரவ்யம் நேரேகிடையாவிட்டால் களவுகண்டாகிலும் ஜீவிக்குமவனாகையாலும், ரக்ஷணத்தில் பர்யாப்தி பிறந்திராதவனாகையாலும் நமக்கொருகுறையுண்டோ? (௩)

மூ;—அறியாதார்க்கானாயனாகிப் போயாய்ப்பாடி
உறியார்நறுவெண்ணெ யுண்டுகந்தான் காணேடீ
உறியார்நறுவெண்ணெயுண்டுகந்த பொன்வயிற்றுக்கு
எறிநீருலகனைத்து மெய்தாதால்சாழலே. (௪)

பதம்.	உரை.
	ஏடீ!—;
அறியாதார்க்கு	மநுஷ்யத்வேபரத்வமென்றறியாதவர்களுக்கு
ஆன்ஆயனாகி	கோ (ஜா) பகுலாவதீர்ணனாய்
ஆய்ப்பாடி	திருவாய்ப்பாடியேற
போய்	எழுந்தருளி
உறி	உறிகளிலே
ஆர்	சேமித்திருந்த
நறு	பரிமளிதமான
வெண்ணெய்	வெண்ணெயை
உண்டு	(களவிலே) அமுதுசெய்து
உகந்தான் காண்	ஸந்தோஷிக்கப் பெற்றான் காண் (என்ன;)
	சாழலே!—;
உறி ஆர்நறுவெண்ணெய் உண்டு உகந்த;—	
பொன்	ஸ்ப்ருஹணீயமான
வயிற்றுக்கு	திருவயிற்றுக்கு
எறிநீர்	கடல்சூழ்ந்த
உலகுஅனைத்தும்	லோகங்களெல்லாம்
எய்தாதால்	போதாதுகாண் என்கிறாள். (௪)

அ௫;—மூன்றாம்பாட்டு. (ஆழித்யாதி) தயிர்கடைகிற வாஸனையாலே தாழ்குழலென்கிற தென்றருளுகிறார் (தங்களித்யாதி). ... (௩)

வ்யா;—நாலாம்பாட்டு. (அறியாதார்க்கு) க்ருஷ்ணாவதாரத்திலே ப்ரவணராகையாலே அதுபின்னாட்டுகிறபடி.

மநுஷ்யத்வே பரத்வமறியாதார்க்குத் தயிரை வருந்திக்கடைந்து உறியிலே சேமித்துவைத்தவன்று கடைந்த வெண்ணெயை உண்டுகந்தான். ஸம்ஸாரிக்கு பகவல்லாபம்போலே அவனுக்கு இது; அவ்வயிற்றுக்குக் கடல் சூழ்ந்தலோகமடையப்போராதுகாண். (ச)

மூ;—வண்ணக்கருங்குழ லாச்சியால் மொத்துண்டு
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான்காணேடீ
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும்
எண்ணற்கரிய னிமையோர்க்கும் சாழலே. (ரு)

பதம்.	உரை.
	ஏடீ!—;
வண்ணம்	அழகியதாய்
கரு	கருத்திருந்துள்ள
குழல்	கூந்தலையுடைய
ஆய்ச்சியால்	யசோதைப்பிராட்டி கையாலே
மொத்துண்டு	அடியுண்டு
கண்ணி	முடிகளையுடைத்தாய்
குறு	(எட்டம்போராதபடி) குறிதான
கயிற்றால்	கயிற்றினாலே
கட்டுண்டான் காண்	கட்டுண்டு கிடந்தான் காண். (என்ன;)
	சாழலே!—;
கண்ணிக்குறுங்கயிற்றால் கட்டுண்டானாகிலும்;—	
இமையோர்க்கும்	தேவதைகளுக்கும்
எண்ணற்கு	"இப்படிப்பட்டவன்" என்று நினைக்கவும் கூட
அரியன்	அஸாத்யன்என்கிறாள்.

வ்யா;—அஞ்சாம்பாட்டு. (வண்ணக்கருங்குழல்) "அவனைப் பெற்றவள்" என்னுமத்தாலே அவளுடைய அவயவங்களில் அழகும் உத்தேஶ்யமாயிருக்கிறதாயிற்று இவர்க்கும். (மொத்து) எடுத்தது அடியாக மோதினளாயிற்று. இவனகப்பட்டவப்போதாக ஒரு

அரு;—நாலாம்பாட்டு. (அறியாதார்க்கித்யாதி) இப்படியே இப்பாட்டாலும் க்ருஷ்ணனை அநுபவிக்கைக்கு ஹேதுவைக்காட்டுகிறார் (க்ருஷ்ணேத்யாதி). ... ... (ச)

அரு;—அஞ்சாம்பாட்டு. (வண்ணமித்யாதி) அங்கேயிருந்து மோதலும் கண்ணியால் கட்டுகிறதுமான இவளை வர்ணிப்பாரென்னென்ன வருளுகிறார் (அவனையித்யாதி). ... ... (ரு)

நெடுங்கயிறு தேடப்போகாதே, பல பிணைகளையுடைய குறள் கயிற்றாலே. கயிறு குறுத்தால் உரலில் இடம்காணவொண்ணாதே, அவன் உடம்பிலே இடம்கண்டு நெருங்கிக் கட்டினாள். (கட்டுண்டானாகிலும்) (க) "ஸஜ்ஜேஷ்ட்ய திசக்நோஷி" என்னும்படியிருந்தானாகிலும். "இவனுக்கு சக்தியில்லை" என்று தோற்றும்படி பரிச்சிந்நனாயிருந்தானாகிலும். இடைச்சிக்கு பரிச்சிந்நனாயிருந்தானாகிலும், ஸ்வயத்நத்தாலறியும் ப்ரஹ்மாதிகளுக்கு அபரிச்சிந்நனாயிருக்கும். .... (ரு)

மூ.—கன்றப்பறை கறங்கக் கண்டவர்தம் கண்களிப்ப
மன்றில் மரக்கால்கூத் தாடினான்காணேடீ
மன்றில் மரக்கால்கூத் தாடினானாகிலும்
என்றுமரியனிமையோர்க்கும் சாழலே. (சா)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஏடீ!;—	மன்றில்	நால்சந்தியிலே
கன்ற	(உகவாதார் நெஞ்சு) கன்றும்படி	மரக்கால்கூத்து ஆடினான் காண்	
பறை	பறைகளானவை	சாழலே!—;	(என்ன;)
கறங்க	த்வ (நி) நிக்கவும்,	மன்றில்மரக்கால்கூத்தாடினானாகிலும்;-	
கண்டவர்தம்	பார்த்த பார்த்த ஜநங்களுடைய வெல் [லாம்	இமையோர்க்கும்	தேவதைகளுக்கும்
கண்	கண்களானவை	என்றும்	என்றைக்கும்
களிப்ப	களிக்கவும்,	அரியன்	துர்லபன் என்கிறாள்.

வ்யா.—ஆறும்பாட்டு. (கன்றப்பறை) (பறைகறங்க) கேட்டார் நெஞ்சு ஈரும்படி த்வநிக்க, இடையர் மநஸ்ஸு களிப்ப, மன்றிலே மரத்தைக்காலிலே கட்டி ஆடினான்காண். இப்படி இடையர்கண் வட்டத்திலே நிற்கிற வஸ்துவை ப்ரஹ்மாதிகள் கண்வட்டத்திலே கண்டறிவாரில்லை. .... (சா)

மூ;—கோதைவேலைவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான்
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான்காணேடீ
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டானாகிலும்
ஓதநீர்வையகம் முன்னுண்டுமிழ்ந்தான்சாழலே. (எ)

அரு;—ஆறும்பாட்டு. (கன்றவித்யாதி) "உகவாதார் நெஞ்சுகன்றும்படி பறையானது கறங்க" என்றாய் அதுக்குத்தாத்பர்யம் (கேட்டாரித்யாதி)(சா.)

(க) வி-பு-ரு.

பதம்.	உரை.	பதம்.	உரை.
	ஏடீ!—;	சொல்லுண்டான்	அதி(ரு) க்ஷேபிக்கப் பெற்றான்காண்; (என்ன;)
கோதை	(ராஜசிஹ்நமான) மாலையையும்		சாழலே!—;
வேல்	வேலையுமுடைய		தூதனாய்மன்னவனால்சொல்லுண்டானாகிலும்;-
ஐவர்க்காய்	பஞ்ச பாண்டவர்களுக்கு விதே(ஹ்)யனாய்	முன்	முற்காலத்திலே
மண் அகலம்	பூமிப்பரப்பை	ஓதநீர்	கடல்சூழ்ந்த
கூறிடுவான்	(அவர்களுக்கு) விபஜித்துத்தருகைக்காக	வையகம்	உலகத்தையெல்லாம்
தூதனாய்	தூதக்ருத்யத்திலே அதிகரித்தவனாய்	உண்டு	திருவயிற்றிலே வைத்து நோக்கி (பின்பு)
மன்னவனால்	துர்யோதநனால்	உமிழ்ந்தான்	(வெளிநாடுகாண) உமிழ்ந்தான் என்கிறாள்.

வ்யா.—ஏழாம்பாட்டு. (கோதைவேல்) ராஜசிஹ்நமாக மாலையையும் வேலையுமுடைய அவர்கள் சேஷிகளாய், தான் சேஷபூதனாய், பூமிப்பரப்பைக்கூறிட்டு அவர்களுக்குக் கூறுகொடுக்கைக்காக தூத்யத்திலே அதிகரித்துத் தன்னை ராஜாவாக அபிமாநித்திருக்கிற துர்யோதநனாலே "வ்ருஷலபோஜநம் பண்ணினான்" என்று சொல்லப்பட்டு அவ்தயனாயிருந்தான்காண். [యత్ర సూక్తమ్ - யத்ரஸூக்தம்] இத்யாதி "என்னையாஸ்ரயித்தவர்களை ஏதேனுமொருபடி இதிலே அந்வயிப்பித்தல்லது விடேன். அவர்களுக்கு ப்ராப்தாம்ஸத்தைப் பெறவேணும்" என்றுநீர் சொல்லுகிறசீரியவார்த்தையும், "என்பந்துக்கள் ஜீவிக்க ஜீவியேன்" என்று அவன் சொல்லுகிற புல்லியவார்த்தையுமொத்து "அவனுக்குச்சிலசொன்னான். இவனுக்குச்சிலசொன்னான்" என்று ஒத்துவிடும் யாதோரிடத்தில் [ప్రలపేత్ - ப்ரலபேத்] அர்த்தமில்லாதவார்த்தையோடொத்து விட்டதிறே. (தூதனாயித்யாதி) இப்படி துருக்திபண்ணுவதற்கொருவருமில்லாத ஸமயத்திலே துர்

அரு.—ஏழாம்பாட்டு. (கோதையித்யாதி) வாசியறியாத கோஷ்டியில் தூது நிஷ்ப்ரயோஜநமான மாத்ரமன்றிக்கே, அவத்யாவஹமென்னுமதுக்கு ப்ரமாணம் காட்டுகிறார் (யத்ரேத்யாதி). ப்ரமாணார்த்தம் (என்னையித்யாதி), (இதிலே) ராஜ்யத்திலே. ... ... (௭)

யோதநனில் குறைந்தாரில்லாத இஜ்ஜகத்தை வயிற்றிலேவைத்து ரக்ஷித்தான் காண். .... (எ)

மூ.—பார்மன்னர்மங்கப் படைதொட்டுவெஞ்சமத்துத்
தேர்மன்னர்க்காயன்று தேரூர்ந்தான்காண்மடீ
தேர்மன்னர்க்காயன்று தேரூர்ந்தானாகிலும்
தார்மன்னர்தங்கள் தலைமேலான்சாழலே. (அ)

பதம்.	உரை.
	ஏடீ!—
அன்று	பாரதஸமரம் விளைந்த காலத்திலே
பார்	பூமியிலுள்ள
மன்னர்	ராஜலோகமடைய
மங்க	மாளும்படியாக
வெம்சமத்து	யுத்த (ரூ) பூமியிலே
படைதொட்டு	ஆயுதமெடுத்து,
தேர்	ரதி(ஞ)யாய் நின்ற
மன்னற்கு	அர்ஜுநனுக்கு
ஆய்	துணையாய்
தேர்	தேரை

பதம்.	உரை.
ஊர்ந்தான்காண்	நடத்தினான் காண்;
	சாழலே!—
தேர்மன்னற்காய்அன்றுதேர் ஊர்ந்தான் ஆகிலும்;—	
தார்	(ஜயஸூசகமான) தோள் மாலையையுடைய
மன்னர்தங்கள்	அரசர்களின்
தலைமேலான்	தலைமேலே வீற்றிரா நின்றான் காண். (அ)

வ்யா.—எட்டாம்பாட்டு. (பார்மன்னர்) தாமல்லாதார் பண்ணின துருக்திகளைப் பொறுத்தமாத்ரமேயோ? தாமல்லாத தாழ்ந்த செயலைச்செய்தானென்கிறது. பூமியடைய நெளியும்படிவந்த ராஜலோகமடையத்தரையாம்படி "ஆயுதமெடேன்" என்றுவைத்து ஆயுதத்தை யெடுத்து, எல்லாரும் காணும்படி யுத்தபூமியிலே அவன் ரதியாய்த்தான் ஸாரதியாய்,அவ்விழிதொழிலைச்செய்தான்காண். சல்யன் ஸாரத்யம்பண்ணவிருக்க; "தாழ்ந்தார்க்கும் உயர்ந்தார் செய்வர்கள்காண்; ப்ரஹ்மாவன்றோருத்ரனுக்குஸாரதியானான்" என்றதிறே. இப்படி தாழ்வுசெய்தவன், லோகத்தில் ராஜாக்களானார்

அரு;—எட்டாம்பாட்டு. (பாரித்யாதி) மன்னர் என்னவமைந்திருக்க, "பார்" என்றதுக்குத் தாத்பர்யம் (பூமியித்யாதி). (இருக்க) என்றதுக்கு, (செய்தான் காண்) என்று கீழ்வாக்யத்தோடந்வயம். சல்யன் "இழிதொழில்" என்று, "மாட்டோம்" என்ன, துர்யோதநன் நிர்பந்தித்துச் செய்வித்துக் கொண்டானென்னுமத்தை யருளுகிறார் (தாழ்ந்தார்க்கித்யாதி). ... (அ)

முடிமேல் மாலையிலே காண் திருவடிகளை வைத்துக்கொண்டிருப்பது. (க) "𑌰𑌾𑌜𑌾𑌧𑌿𑌰𑌾𑌜𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌮𑍍 - ராஜாதி ராஜஸ்ஸர்வேஷாம்" இத்யாதி. .... (அ)

மூ;—கண்டாரிரங்கக் கழியக்குற ளுருவாய்
வண்டாரான் வேள்வியில் மண்ணிரந்தான் காணேடீ
வண்டாரான் வேள்வியில் மண்ணிரந்தா னாகிலும்
விண்டேழுலகுக்கும் மிக்கான் காண் சாழலே. (கூ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
	எடீ!—;	மண்	(மூவடி) மண்ணை
கண்டார்	பார்த்தவர்களுடைய	இரந்தான்	யாசித்தான்காண்;
இரங்க	மனமிரங்கும்படி	காண்	
கழிய	மிகவும்		சாழலே!—;
குறள்உருஆய்	ஹ்ருஸ்வமான வடிவையுடையனாய்	வண்டாரான் வேள்வியில் மண் இரந்தானாகிலும்;—	
வண்	ஔதார்யஸூசகமான	விண்டு	விபு(பூ)வாய்
தாரான்	தோள்மாலையையுடைய மஹாபலியின்	ஏழ்உலகுக்கும்	லோகங்களுக்கெல்லாம்
வேள்வியில்	யஜ்ஞவாடத்திலே	மிக்கான்காண்	விஞ்சினவன்காண்.

வ்யா;—ஒன்பதாம்பாட்டு. (கண்டாரிரங்க) வடிவழகாலும் வரையாதே தீண்டும்படியாலும், ஆஶ்ரிதர்க்குத் தாழ்வுசெய்யும்படியாலும், க்ருஷ்ணாவதாரத்தோடு போலியாயிறே ஶ்ரீவாமநாவதாரமிருப்பது. சுக்ராதிகள் வார்த்தைக்கும் கேளாதே இரங்கும்படியாக "நாட்டில் வாமநர்கள் வளர்ந்தவிடத்தோ பாதி" என்னும்படி அறக்குறளாய், ராஜாவாய் மாலையிட்டு உதாரனாயிருக்கிற மஹாபலியஜ்ஞபூமியிலே, அவன் கண் வட்டத்துக்குள்ளே நின்று மூன்றடி மண்ணை இரந்தான் காண்; அவன் கண்வட்டத்தே நின்ற இவனை நாட்டில் கண்டவரில்லை கிடாய். .... (கூ)

அரு;—ஒன்பதாம்பாட்டு. (கண்டாரித்யாதி) தன்னைத் தாழவிட்டு ஸாரத்யம் பண்ணினது போலே, தன்னை இரப்பாளனாக்கினதும் ஈடுபடுத்துகைக்காகையாலே, அத்தையும் சொல்லுகிறார்களென்னும் ஸங்கதியருளுகிறார் (வடிவழகாலுமித்யாதி). "கழிய"லோகத்தில் குறளெல்லா மொவ்வாதே கழியவென்று சப்தார்த்தமாயருளுகிறார் (நாட்டிலித்யாதி). "விண்டு-விரிந்து-விபுவான, மிக்கான் - விஞ்சினான்" என்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யமருளுகிறார் (நாட்டிலித்யாதி). ... ... (கூ)

க) பார-உத்யோ.

மூ;—கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான்
வெள்ளத்தான் வேங்கடத்தானென்பரால் காணேடீ
வெள்ளத்தான் வேங்கடத்தானேலுங் கலிகன்றி
உள்ளத்தினுள்ளே யுளன்கண்டாய் சாழலே. (கo)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
	ஏடீ!
கள்ளத்தால	க்ருத்ரிமவேஷத்தாலே
மாவலியை	மஹாபலிபக்கலிலே
மூவடிமண்	மூன்றடிமண்ணை
கொண்டு	(யாசித்தும்) பெற்று
அளந்தான்	(த்ரிலோகத்தையும்) அளந்தவன் (ஒருவர்க்கும் எளியனாகாதபடி)
வெள்ளத்தான்	திருப்பாற்கடலிலே கிடவாநின்றான்;
வேங்கடத்தான்	திருவேங்கடமலையில் நில்லாநின்றான்,
என்பர்காண்	என்று சொல்லாநிற்பர்காண்;
	சாழலே!—;
வெள்ளத்தான் வேங்கடத்தானேலும்	
கலிகன்று	ஆழ்வாருடைய
உள்ளத்தினுள்ளே	ஹ்ருதயத்திலே (நின்று)
உளன்கண்டாய்	(நீக்கினும் நீங்காதபடி) கிடக்கிறான் காண். (கo)

வ்யா;—பத்தாம்பாட்டு. (கள்ளத்தால்) க்ருத்ரிமவேஷத்தைக்கொண்டு சிலர்க்குச் சென்று "கிட்டவொண்ணாதபடி திருப்பாற்கடலிலே காண் அவன் கிடப்பது, சடக்கெனச் சென்று காணவொண்ணாதபடி திருமலையிலே காண் அவன் நிற்பது" என்பர்கள் காண்; அப்படியிருக்கிறவன் காண், ஆழ்வார் ஹ்ருதயத்தில் நின்றும் புறப்படத் தள்ளினாலும் புறப்படாதே கிடக்கிறான். .... (கo)

பெரியவாச்சான் பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரியதிருமொழி
பதினோராம்பத்து அஞ்சாந்திருமொழிமுற்றிற்று.

அரு.—பத்தாம்பாட்டு. (கள்ளத்தாலித்யாதி) ப்ரீதிப்ரகர்ஷத்தால் பிறந்த வநுபவம் உபஸ்தகமாகையாலே, பலம் சொல்லுகையும் மறந்து அந்யாபதேசமாய் விட்டது. கீழ்ச்சொன்ன ராமக்ருஷ்ணவாமநாவதாரங்களுக் கடியான வ்யூஹத்திலும், பலஸாதநீயமான திருவேங்கடத்திலுமிருந்தவன், (க)"பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும்" என்கிறபடியே தபஸ்ஸைப்பண்ணி ஆழ்வார் திருவுள்ளமாகிற கலங்காப் பெருநகரத்தைப் பெற்றானென்று அநுஸந்தித்து, இக்குணிக்யத்திலே ஈடுபடுகிறார்களென்று ஸங்கதி.

" உள் ", என்றத்தாலேபலிதம் (புறப்படவித்யாதி). ... (கo)

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆழ்வார்திருவடிகளேசரணம்.

பதினோராம்பத்து ஆறாந்திருமொழி

மைந்நின்ற ப்ரவேசம்.

வ்யா;—ஸர்வேஶ்வரனுடைய வைலக்ஷண்யத்தையும் ஸௌலப்யத்தையும் சேர ஒரொன்றே கரைகாணவொண்ணாத இரண்டையும் சேர அநுபவித்தார்; அநந்தரம் (௧)"* బోధయన్తః పరస్పరమ్ - போதயந்தஃ பரஸ்பரம் பண்ணுகைக்குச் சிலர் தேட்டமாயிற்று. அதுக்கு ஆவாரார்" என்று லோகத்திலே ஆராய்ந்தார்; அவர்களுடைய ஸ்ருஜ்யத்வ கர்மவஶ்யத்வாதிகளாலே, தங்களோட்டையாரான இதர தேவதையை ஆஶ்ரயிப்பாரும் ஸ்துதிப்பாருமாய்ச் செல்லாநின்றது; "இவர்கள் இப்படிச் செய்கிறது-ஸர்வேஶ்வரனுடைய ஸர்வேஶ்வரத்வ விஷயமாயும், ஸௌலப்ய விஷயமாயும், ப்ராப்தி விஷயமாயுமுள்ள ஜ்ஞாநமில்லாமை" என்று பார்த்து, "கெடுவிகாள்! நீங்கள் ஆஶ்ரயிக்கிற தேவதைகளோடு உங்களோடு வாசியில்லை காணுங்கோள் அவனுக்குக் குழைச்சரக்காமிடத்தில்; ஆனபின்பு அவனையே ஆஶ்ரயிக்கப் பாருங்கோள்" என்கிறார். .... *

மூ;—மைந்நின்ற கருங்கடல்வா யுலகின்றி
வானவரும் யாமுமெல்லாம்
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்ததோரீர்
எந்நன்றி செய்தாரா வேதிலோர்
தெய்வத்தை யேத்துகின்றீர்
செய்ந்நன்றி குன்றேல்மின் தொண்டர்காள்
அண்டனையே யேத்தீர்களே. (௧)

பதம்,	உரை.	பதம்.	உரை.
தொண்டர்காள்	(அப்ராப்தவிஷயத்திலே) தொண்டு பூண்டிருப்பீர்காள்!	மைநின்ற	மைமாறுதே நின்றாப்போலே
		கரு	கறுத்திருந்துள்ள
		கடல்வாய்	கடலிடத்து [திக்கே
		உலகு இன்றி	லோகமொன்றுமின்

அநு;—மைநின்றவின் ப்ரவேசம். கீழிரண்டு திருமொழியாலும் தோழியோம், இதுக்கு ஸங்கதியருளுகிறார் (ஸர்வேஶ்வரனித்யாதி). (சேர) என்றவநந்தரம், "நிலையிடமெங்குமின்றியிலே அநுபவித்தவர்" என்று சேஷம்.

(௧) கீ-௧௦-௬.

வானவரும்	தேவதைகளும்
யாமும்	(மநுஷ்யர்களான) நாமும்
எல்லாம்	(ஆகிய) கார்யவர்க்க மடங்கலும்
நெய் நின்ற	நெய்யிட்டு விளாங்கா நின்ற
சக்கரத்தன்	திருவாழியை அணிந்த எம்பெருமானுடைய
திருவயிற்றில்	திருவயிற்றிலே
நெடுங்காலம்	நெடுநாளளவும்
கிடந்தது	அடங்கிக்கிடந்தமையை
ஓரீர்	அறிகிறீரில்லையே;
ஏதிலோர்	விரோதிகளான தாமஸர்களுடைய
தெய்வத்தை	தேவதைகளை
எந்நன்றி செய் தாரா	என்ன உபகாரம்செய்தாராகக் கொண்டு
ஏத்துகின்றீர்	ஸ்துதிசெய்யாநின்றீர்?
செய்நன்றி	உபகாரஸ்ம்ருதியை
குன்றேல்மின்	குறைக்காதே கொள்ளுங்கோள்;
அண்டனையே	ஸர்வேஶ்வரனையே
ஏத்தீர்கள்	ஏத்தக்கடவீர்கள்.

வ்யா;—முதற்பாட்டு. (மைநின்றவித்யாதி) மைமாறாதே நின்றாப் போலேஒத்த அந்தக் கடலிடத்தே லோகமொன்று மின்றிக்கே. (வானவரும் யாமுமெல்லாம்) விபூதியழிகிற தென்று அழியாமல் நோக்குகைக்குக் கடைந்து நெய்யிட்ட திருவாழியை யுடையவன் திருவயிற்றிலேநெடுங்காலம்கிடந்தது, (ஓரீர்) அறிகிறிலீர். பத்துமாஸம் சுமந்ததுக்காகத் "தாய்"என்று நின்றிகோள். (எந்நன்றி யித்யாதி) உபகாரஸ்ம்ருதி கிடக்க ஸ்வாராத தேவதையைப்பற்ற வேண்டாவோ? (ஏதிலோர் தெய்வத்தை) "ஏதிலோர்" என்று-சத்ருக்கள்; "சத்ருக்களுடைய தேவதை" என்கிறது ஸத்வத்துக்கு தமஸ்ஸு விரோதியாகையாலே, தாமஸருடைய தெய்வமென்று "ஏதிலோர் தெய்வம்"என்கிறது. (செய்நன்றி குன்றேல்மின்) உபகாரஸ்ம்ருதியை விடாதே கொள்ளுங்கோள். (தொண்டர்காளித்யாதி) மைநின்ற-கறுத்துக்கொண்டு விபூதியை

அரு;—முதற்பாட்டு. (மையித்யாதி) மைநின்ற-மையோடொத்த தாகையாலே, கருங்கடலிடத்தென்று சப்தார்த்தமாய்த் தாத்பர்யமருளுகிறார் (மைம்மாறாதேயித்யாதி). (அந்த) என்றது - கருமையை ப்ரகாசிப்பிக்கிறது. "நெடுங்காலம்" என்றதுக்கு வ்யாவர்த்யம் (பத்தித்யாதி). "மைந்நின்ற" என்ற பதத்துக்கும், "கரும்"என்றதுக்கும் புநருக்தி நேரே பரிஹரிக்கவேண்டியும், முன்பு அவிசதமான வர்த்தங்களை விசதீகரிக்கவும் திருவுள்ளம்பற்றி மீளவும் வ்யாக்யாநம் செய்கிறார் (மைநின்றவித்யாதி). இப்பக்ஷத்தில் கறுப்பாலே கருவுதலைச்சொல்லுகிறது. ... ... (௧)

அழிக்க ஒருப்பட்ட கடலிடத்து, ம்ருத்யுவின் வாயென்னுமா போலே.

(வானவரித்யாதி) ஆஶ்ரயணீயரானவர்களும் ஆஶ்ரயிக்கிற நாமும் மற்றுமுண்டான பதார்த்தங்களும். (எந்நன்றியித்யாதி) ஏதேனும் நன்மை செய்தாலும் ஆராதே "அட்டு திருக்கச்சுட்டு தருவாய்" என்னும் தேவதைகளை (௧) [மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் ந த்யஜேயம் கதஞ்சந-மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந] "பொய்யேயாகிலும் ஓரடிவரநின்றவனைவிடில் நான் பிழையேன்" என்னுமவனைப்பற்றுகிறிகோளோ? (ஏதிலோர்தெய்வத்தை) தமோகுணாபிபூதராயிருக்கையாலே பரமாத்மாவுக்குச் சரீரமென்று உபாஸிக்கப் போகாதவர்களை. (தொண்டர்காள்) அப்ராப்த விஷயங்களிலே தாழ்வுசெய்ய வாசைப்பட்டநீங்கள். (அண்டனையேயேத்தீர்களே) ஸர்வேஶ்வரனையே ஏத்தப்பாருங்கோள். இரண்டு விபூதிக்கும் அண்டமென்று பெயர்.

மூ.—நில்லாத பெருவெள்ளம் நெடுவிசும்பின்
மீதோடி நிமிர்ந்தகாலம்
மல்லாண்ட தடக்கையால் பகிரண்ட
மகப்படுத்தகாலத்தன்று
எல்லாரு மறியாரோ வெம்பெருமா
னுண்டுமிழ்ந்த வெச்சில்தேவர்
அல்லாதார் தா முளரே யவனருளே
யுலகாவ தறியீர்களே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நில்லாத	ஓரிடத்தில் நிலையில்லாத	தட	பெரிதான
பெருவெள்ளம்	பெருவெள்ளமானது	கையால்	திருக்கையினாலே
நெடு	அபரிச்சிந்நமான	பகிரண்டம்	பரமபதத்தை (ப்ரளயம் கொள்ளாதபடி)
விசும்பின்மீது	ஆகாசத்துக்குமேலே	அகப்படுத்தகாலத்து	பாதுகாத்தருளின காலமாகிற
ஓடி	வழிந்தோடி [யும்,	அன்று	அக்காலத்தையும்
நிமிர்ந்தகாலம்	ப்ரவஹித்தகாலத்தை	எல்லாரும்	எல்லாரும்
மல் ஆண்ட	மிடுக்கையுடைத்தாய்		

(௧) ரா-யு-௧௮-௩.

அறியாரோ	அறியாதிரா நின்றார்களோ?	தேவர்தாம்	தேவதைகள் தாம்
எம்பெருமான்	ஸர்வேஶ்வரன்	உளரே	இராநின்றார்களோ?
உண்டு	அமுதுசெய்து	உலகு	லோகமானது
உமிழ்ந்த	(பின்பு) உமிழ்ந்த	ஆவது	ஸத்தைபெற்றிருப்பது
எச்சில் அல்	உச்சிஷ்டமாகாத	அவன்அருளே	அவனுடைய ப்ரஸாதாதீநமென்பதை
லாதார்		அறியீர்களே	அறியமாட்டீர்களோ?,

வ்யா.—இரண்டாம்பாட்டு. (நில்லாத) ஓரிடத்தில் நிலைநில்லாத பெருவெள்ளமானது, அபரிச்சிந்நமான ஆகாசத்துக்கு மேலே போய்ப் போருகிறகாலம். (மல்லாண்டித்யாதி) மிடுக்கையுடைத்தான திண்டோளாகிற பெரியகையாலே பஹிரண்டங்களையு மகப்படுத்தினகாலம். அன்றிக்கே; ஸர்வேஶ்வரன் ப்ரளயஞ்சென்று அடராதபடி தன் திருக்கையாலே பரமபதத்தைத் தன் கைக்கீழே யிட்டுக்கொண்டு நின்றகாலமென்னவுமாம்.

அரு;—இரண்டாம்பாட்டு. (நில்லாதவித்யாதி) பத்துமாஸம் தாய்வயிற்றிலே இருந்தும் நாட்டாரறிந்து சொன்னபடியாலே "தாய்"என்று ப்ரதிபத்தி பண்ணலாயிருக்கிறது. "அவன் திருவயிற்றிலே நெடுங்காலம் கிடந்தும் அறிவாரார்" என்னு மபேக்ஷையிலே அருளிச்செய்கிறாரென்று ஸங்கதி.

(திண்டோளாகிற) என்றது-"மல்லாண்ட"என்ற பதத்தாலேஸ்மாரிதமான (க)"திண்டோள் மணிவண்ணா" என்கிறபாசுரத்தினர்த்தம்; இத்தால் ப்ரமாண ப்ரதர்ஶநம் பண்ணினபடி. (பஹிரண்டங்களையு மகப்படுத்தின காலம்) என்றது-(உ)"அண்டரண்ட பகிரண்டத் தொருமாநில மெழுமால்வரைமுற்று மூண்ட கண்டங்கண்டவர்" என்கிறபடியே மஹாப்ரளயத்தைச்சொல்லுகிறது. இப்போது, "நில்லாதவித்யாதி - நிமிர்ந்த காலம்" என்றது - அவாந்தரப்ரளயமாய், அக்காலத்திலே "எம்பெருமானுண்டுமிழ்ந்த எச்சில் தேவரல்லாதார் தாமுளரே" என்றந்வயிப்பது. "அகப்படுத்த காலத்து" மஹாப்ரளயத்திலே, "அவனருளே-உலகாவதறியீர்கள்" என்றந்வயிப்பது.

"அன்று எல்லாருமறியாரோ?" என்றதுக்கு - வேதாதிகள் ப்ரவ்ருத்தமான காலத்திலே ருஷிகளெல்லாரு மறியாரோவென்று பொருள். இப்படியன்றிக்கே,"கேவலம் அவாந்தரப்ரளயம் தானேயாக்கி,வெள்ளம் நிமிர்ந்தகாலமுமாய் அகப்படுத்த காலமுமானவன்று" என்று ஏகமாக அந்வயமேயாகத் திருவுள்ளம்பற்றி பகிரண்டபதத்துக்கு அர்த்தாந்தரமருளுகிறார் (அன்றிக்கே

(க)திருப்பல்லாண்டு-க. (உ) அமல-ரு.

(அன்றெல்லாருமறியாரோ)இவ்வர்த்தமறியாதாருண்டோ? (எம்பெருமானுண்டுமிழ்ந்த) இவனுக்குப் புறம்பாயிருப்பதொன்றைப்பற்றி இவனைக்கைவிட்டிகளோ ? (அவனருளே) லோகத்தினுடைய ஸத்தை அவனுடைய ப்ரஸாதாயத்தமென்னுமிடம் அறியீர்களோ? (உ)

மூ.—நெற்றிமேல்கண்ணனும் நிறைமொழிவாய்
நான்முகனும் நீண்டநால்வாய்
ஒற்றைக்கை வெண்பகட்டி லொருவனையு
முள்ளிட்ட வமரரோடும்
வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கொற்றப்போராழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடியவாறே. (ங)

பதம்.	உரை.
நெற்றிமேல் கண்ணனும்	நெற்றிக்கண்ணனான ருத்ரனையும்
நிறை	அர்த்தங்களால் நிறைந்த
மொழி	வேதங்களை
வாய்	வாயாலே உச்சரியாநின்றுள்ள
நான்முகனும்	சதுர்முகப்ரஹ்மாவையும்,
நீண்ட	தீர்க்கமாய்
நால்	தொங்காநின்றுள்ள
வாய்	வாயையும்
ஒற்றைக்கை	ஒற்றைத்துதிக்கையையுமுடைய
வெண்பகட்டில் ஒருவனையும்	(ஐராவதமென்கிற) வெள்ளானைக்குப்பாகனான இந்த்ரனையும்

பதம்.	உரை.
உள்ளிட்ட	உள்ளீடாகவுடைய
அமரரோடும்	மற்றதேவதைகளையும்
வெற்றிப்போர்	யுத்தஜயிஷ்ணுவான
கடலரையன்	ஸமுத்ராபிமாநிதேவதை
விழுங்காமல்	விழுங்கவொண்ணாதபடி வைத்து
தான்விழுங்கி	தான் திருவயிற்றில்
உய்யக்கொண்ட	நோக்கியருளினவனும்
கொற்றம்	ஐஶ்வர்யஸூசகமாய்
போர்	எதிரிகளை எதிர்ந்து பொருகிற

யித்யாதி). அப்போது-"அத்து" என்றது-சாரியைச்சொல்லு. பரமபதத்துக்கு ப்ரளயம் வர ப்ரஸக்தியில்லையாகிலும், ரஸோக்தியாக இதின் கொடுமையைச் சொல்லுகையிலே தாத்பர்யம். "அல்லாதார் - தாமுளரே" என்கிற ஸ்வரத்துக்கு உட்கருத்தருளுகிறார் (இவனுக்கித்யாதி). ... ... (உ)

ஆழியான்	திருவாழியாழ்வானைக் கையிலே யுடைய ஞானஎம்பெருமானுடைய
குணம்	திருக்கல்யாணகுணங்களை
பரவா	ஸ்துதிசெய்யாத
சிறுதொண்டர்	க்ஷுத்ர ஸங்கர்களுடைய
கொடியஆறே	கொடுமையிருந்தபடி என்தான்!

(என்று ஆஸ்சர்யப்படுகிறார்.) (ங)

வ்யா. — மூன்றும்பாட்டு. (நெற்றியித்யாதி) லலாடநேத்ரனும், அர்த்தத்தாலே பூர்ணமான வேதத்தை உச்சரியாநின்றுள்ள சதுர்முகனும், நீண்டு நான்றிருக்கிற வாயையும் ஒருகையையுமுடைத்தான வெள்ளையானையையுடைய இந்த்ரனுள்ளிட்டவமரரோடும். (வெற்றிப்போரித்யாதி) கடலுக்கபிமாநியானவன் விழுங்காதபடி தன்வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, ஐஸ்வர்யஸூசகமாய், எதிரிகளை முடிக்கவற்றான திருவாழியை யுடையவனுடைய குணங்களை, அடைவுகெடச்சொல்லாத தண்ணிய க்ஷுத்ரங்களை ஸஹிக்க வரிதாயிருக்கிற வவர்கள் க்ரௌர்ய மிருந்தபடியென்? (ங)

மூ.—பனிப்பரவைத்திரை ததும்பப் பாரெல்லாம்
நெடுங்கடலேயான காலம்
இனிக்களைக ணிவர்க்கில்லையென்றுலக
மேழினையுமூழில்வாங்கி
முனித்தலைவன் முழங்கொளிசேர் திருவயிற்றில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
கனிக்களவத் திருவுருவத் தொருவனையே
கழல்தொழுமா கல்லீர்களே. (ச)

அநு;—மூன்றும்பாட்டு. (நெற்றியித்யாதி) "'அல்லாதார் தாமுளரே'என்று நீர் சொல்லா நின்றீர்; முக்கண்ணன் முதலானாரைப் பரதெய்வங்களாகச் சொல்லுவாரு முண்டாயிருந்ததே" என்ன, அத்தை எடுத்துக் கழிக்கிறாரென்று ஸங்கதி.

(நான்றிருக்கிற) தொங்காநிற்கிற. "பகடு" - ஆனை. இந்த ப்ரளயத்திலே ப்ரஹ்மாதிகளைக் கடலரையன்விழுங்க ப்ரஸக்தியுண்டோவென்னும் சங்கையிலே, அவர்களபிமாநாந் தர்ப்பூதமான லோகத்திலுள்ளாரை விழுங்குவதே, அவர்களுக்கு மொக்கு மென்றருளிச்செய்ததென்று திருவுள்ளம்பற்றியருளுகிறார் (கடலுக்கித்யாதி). ... ... (ங)

பதம்.	உரை.
பார்எல்லாம்	பூமியடங்கலும்
பனி	குளிர்ந்து
பரவை	பரந்திருக்கிற
திரை	அலைகளானவை
ததும்ப	எறியும்படி
நெடுங்கடலே யானகாலம்	பெரிய கடலானது வ்யாபித்தகாலத்திலே
இவர்க்கு	"இவ்வுலகத்தார்க்கு
இனி	இனிமேல்
களைகண்இல்லை என்று	ரக்ஷகரா வார்ஆருமில்லை" என்று
உலகம் ஏழினை யும்	உலகங்களெல்லாவற்றையும்
ஊழில்வாங்கி	முறையாலேவாங்கி
மூழ்குழ்ந்கு	முழங்காநின்றுள்ளதாய்
ஒளிசேர்	ஒளிசேர்ந்திருப்பதுமான

பதம்.	உரை.
திருவயிற்றில் வைத்து	திருவயிற்றிலே வைத்து
உம்மை	உங்களை
உய்யக்கொண்ட	உஜ்ஜீவிப்பித்தருளினவனாய்,
முனி	ஸாத்விகர்களுக்கு
தலைவன்	தலைவனாய்
கனி	கனிந்திருந்துள்ள
களவம்	களாம்பழம்போன்ற
திருஉருவம்	வடிவுடையனாய்,
ஒருவனையே	அத்விதீயனான ஸர்வேஶ்வரனையே
கழல்தொழும் ஆ	அடிதொழும்படியை
கல்லீர்களே	கற்கமாட்டீகோளே.

வ்யா.—காலம்பாட்டு. (பனிப்பரவை) குளிர்ந்து பரந்திருக்கிற திரைகளாலே அலையெறிந்துள்ள கடலானது ஸர்வலோகங்களும் தானேயானகாலம். (இனிக்களைகணிவரித்யாதி) "இனி இவர்களுக்கு ரக்ஷகர் ஆருமில்லை" என்று த்ரைலோக்யத்தையும் முறைபாலே, ஸத்வஸ்த்தனான ஸர்வேஶ்வரன், மூழங்கா நின்றுள்ள ஒளி சேர்ந்திருந்துள்ள திருவயிற்றில்வைத்து, உம்மையுய்யக்கொண்ட. கனிந்திருந்து களாம்போலேயிருந்துள்ள திருவுடம்பையுடைய ஒருவனையே கழல்தொழமாகல்லீர்களே. .... (௪)

அரு;—காலம்பாட்டு. (பனியித்யாதி) "சிறுதொண்டர்கொடியவாறே" என்று வெறுத்தவாறே, எங்களுக்கு அவன் குணம்பரவும்படி நீர்வழி சொல்ல வேணுமென்ன, அவன் திருவடிகளைத் தொழுங்கோளென்கிறாரென்று ஸங்கதி.

"பரவை" என்றதினர்த்தம் (பரந்திருந்துள்ள)என்றது. "ஊழில்" என்றதினர்த்தம்-(முறையாலே)என்றது;"வாங்க"என்றுசேஷம். "களவம்போலே" பானை போலே யென்னுதல். ... ... (௪)

மூ,—பாராருங்காணாமே பரவைமா
நெடுங்கடலே யானகாலம்
ஆரானுமவனுடைய திருவயிற்றில்
நெடுங்காலங் கிடந்ததுள்ளத்து
ஓராதவுணர்விலீ ருணருதிரேல்
உலகளந்தவும்பர்கோமான்
பேராளன் பேரான பேர்களாயிரங்
களுமே பேசீர்களே. (௫)

பதம்.	உரை.
பார்	பூமியிலே
ஆரும்	ஒருத்தரையும்
காணாமே	காணவொண்ணாதபடி
மா நெடுங்கடலே	மஹாஸமுத்ரந்தானே
பரவை ஆன காலம்	பரந்து (ப்ரளயம்)கொண்ட காலத்திலே
ஆரானும்	எவரும்
அவனுடைய	அந்த எம்பெருமானுடைய
திருவயிற்றில்	திருவயிற்றிலே
நெடுங்காலம்	நெடுநாள்வரை
கிடந்தது	அடங்கிக்கிடந்தமையை
உள்ளத்து	நெஞ்சிலே
ஓராத	அநுஸந்திக்கப்பெறாத
உணர்வு இலீர்	அறிவுகேடர்களே! (நீங்கள்)
உணருதிரேல்	சேதநராயிருந்தீர்களாகில்,
உலகு அளந்த	திருவுலகளந்தருளினவனாய்
உம்பர்	நித்யஸூரிகளுக்கு
கோமான்	நிர்வாஹகனாய்
பேராளன்	மஹாநுபாவனான ஸர்வேச்வரனுக்கு
பேரான	வாசகங்களான
பேர்கள் ஆயிரங்களுமே	ஸஹஸ்ரநாமத்தையே
பேசீர்கள்	பேசுங்கள். (௫)

வ்யா.—அஞ்சாம்பாட்டு. (பாராருங்காணாமே) பூமியிலொருத்தரையும் காணவொண்ணாதபடி எங்குந் தானேயாய்க் கொண்டு கடல் பரந்தகாலம். ஒருத்தரும் அவன் திருவயிற்றிலே நெடுங்காலம் கிடந்ததை ஓராத அறிவுகேடர்காள்! (உணருதிரேல்) சைதந்ய

அரு;—அஞ்சாம்பாட்டு. (பாரித்யாதி) "திருவயிற்றிலேவைத்து உய்யக்கொண்டவன் கழல்களை நாங்கள் தொழுகை எங்ஙனே கண்டன்றோ தொழுவது என்ன; நீங்கள் தொழமாட்டிகோளாகிலும் உங்கள் தலையிலே அடியிட்டான்; அவனுடைய பேராயிரத்தைப் பேசலாமே யென்கிறாரென்று ஸங்கதி. ... ... (௫)

முண்டாகில் வரையாதே எல்லார்தலையிலும் திருவடிகளைவைத்து, அத்தாலே ப்ரஹ்மாதிகளுக்கு நிர்வாஹகனாய் அளவுடையவனா யிருந்துள்ளவனுடைய பெயரான திருநாமங்களைப்பேசீர்களே. (ரு)

மூ.—பேயிருக்குநெடுவெள்ளம் பெருவிசும்பின்
மீதோடிப் பெருகுகாலம்
தாயிருக்கும்வண்ணமே யும்மைத்தன்
வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்
போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வம்
கொண்டாடும் தொண்டீர் பெற்ற
தாயிருக்க மணைவெந்நீராட்டுதிரோ
மாட்டாத தகவற்றீரே. (சு)

பதம்.	உரை.
பேய்இருக்கும்	மநுஷ்யர்களொருவரு(மில்லாதபடி) வெறும்பேய்களேயிருக்கக்கடவ
நெடுவெள்ளம்	மஹாப்ரவாஹமானது
பெருவிசும்பின்மீது ஓடி;—	
பெருகுகாலம்	ப்ரவஹித்தகாலத்திலே
தாய்இருக்கும் வண்ணமே	நோன்புநோற்றுப்ரஜையை வயிற்றிலேவைத்து நோக்கும் தாயைப்போலே
உம்மை	உங்களை
தன்வயிற்று	தன் திருவயிற்றிலே
இருத்தி	வைத்து
உய்யக்கொண்டான்	உஜ்ஜீவிப்பித்தருளின ஸர்வேஶ்வரன் (இவைநம்மைமப்பற்றாமல் புறம்புபோயிற்றனவென்று)
போயிருக்க	வெறுத்திருக்க,
இங்கு	இங்கே
மற்றுஓர்புதுத் தெய்வம்	மற்றொருக்ஷுத்ரதேவதையை
கொண்டாடும்	கொண்டாடுகிற
தொண்டீர்	தொண்டர்காள் !
பெற்றதாய்	(வருந்திப்) பெற்றதாய்
இருக்க	விளங்காநிற்க (அவளை அநாதரித்து)
மணை	(அசேதநமானதொரு மணைக்கட்டையை)
வெந்நீர் ஆட்டுதிரோ	உபசரியாநின்றிகோளோ ?;
மாட்டாத	செய்யமாட்டாத
தகவுஅற்றீரே	இரக்கமற்றிகோளே.

அ௫;—ஆறும்பாட்டு. (பேயித்யாதி) "பேர்களாயிரங்களைப் பேசீர்களே" என்று சொல்லச் செய்தே ஒருவரும் சொல்லமாட்டாதே வாஸநாபலத்தாலே தேவதாந்தரபஜநத்திலே ஒருப்படுகிற படியைக்கண்டு, "ஐயோ ! நீங்கள் இப்படிச் செய்யுமது ந்யாயமோ" என்று சிவிட்கொள்கிறாரென்று ஸங்கதி.

வ்யா.—ஆறும்பாட்டு. (பேயிருக்குமித்யாதி) பேயிருக்கும் என்னவே - மநுஷ்யர்கள் ஒருவருமில்லை யென்னுமிடம் தோற்றுகிறது. (தாயிருக்கும்) ப்ரஜையைப் பெறுகைக்கு நோன்பு நோற்று, அப்ப்ரஜையை வயிற்றிலே வைத்துக்கொடிருக்கும் தாயைப்போலே, உம்மை வயிற்றிலே வைத்துஉய்யக் கொண்டவன், "நாம் கொடுத்த கரணங்களைக்கொண்டு நம்மைப்பற்றப்பாராதே புறம்பே போயிற்றனே" என்று வெறுத்துப்போயிருக்க, அங்கே புதுசாயிருக்கிற தேவதைகளைக் கொண்டாடுகிற தொண்டர்!. (பெற்றதாயித்யாதி) அசேதநமாயிருப்ப தொன்றை வெந்நீராட்டுதிரோ? செய்யமாட்டாத க்ருபையற்றீரே. .... (௬)

மூ.—மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
தானவரும் மற்றுமெல்லாம்
உண்ணாதபெருவெள்ள முண்ணாமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட
கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி யவனையுள்ளத்து
எண்ணாதமானிடத்தை யெண்ணாத
போதெல்லா மினியவாறே. (௭)

பதம்.	உரை.
மண்ணாடும்	பூலோகமும்
விண்ணாடும்	ஸ்வர்க்கமும்
வானவரும்	தேவர்களும்
தானவரும்	அஸுரர்களும்
மற்றும் எல்லாம்	மற்றுமுண்டான பதார்த்தங்களெல்லாம் (கூடி முயன்றாலும்)
உண்ணாத	தகையவொண்ணாத
பெருவெள்ளம்	மஹாப்ரவாஹமானது
உண்ணாமல்	(உலகத்தை) விழுங்காதபடி [வைத்து
தான்விழுங்கி	தான் திருவயிற்றிலே
உய்யக்கொண்ட	உஜ்ஜீவிப்பித்தருளினவனாய்

"போயிருக்க" என்றதுக்குத் தாத்பர்யம் (நாமித்யாதி). "ஈன்றோளிருக்க மணைவெந்நீராட்டுதிரோ" என்று, அவளிருந்து பெற்ற மணையை நீராட்டிப் பூச் சூட்டுவாரைப் போலே, அவனுக்குச் சேஷபூதரை ஆராதிக்கக் கூடுமோ என்றுவிவக்ஷித்தருளுகிறார் (அசேதநேத்யாதி). (க்ருபையற்றீரே) என்றதுக்கு எம்பெருமானுடைய வெறுப்பை எண்ணி, அநுகூலிக்க வேணுமென்று இரங்காதே போனீர்களே, அது ந்யாயமோ வென்று கருத்து. ... (௬)

கண்ணாளன்	மஹாக்ருபாளுவாய்	அவனை	அந்த எம்பெருமானை
கண்ணமங்கை நகராளன்	திருக்கண்ணமங்கைக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரனுடைய	உள்ளத்து	நெஞ்சிலே
		எண்ணாத	அநுஸந்தியாத
		மானிடத்தை	மநுஷ்யரை
கழல்	திருவடிகளை [ந்து	எண்ணாதபோது எல்லாம்	ஸ்மரியாத காலமெல்லாம்
சூடி	(தம்தலையிலே) அணி	இனியஆறே	(எனக்கு) இனிதாகச் செல்லாநின்றபடி.

வ்யா.—ஏழாம்பாட்டு. (மண்ணுமித்யாதி) பூமியும் ஸ்வர்க்கமும், தேவர்களும், அஸுரர்களும், மற்றுமுண்டானபதார்த்தங்களுமெல்லாங்கூட "உண்ணப்போகாதுஎன்று" தகையவொண்ணுதென்று பெருவெள்ளம் உண்ணுதபடிக்கிடாகத் தான்விழுங்கி உய்யக்கொண்ட ஜகந்நிர்வாஹகன்; க்ருபாவானென்னவுமாம். இப்படி க்ருபை பண்ணி ஸந்நிஹிதனுய்க்கொண்டு திருக்கண்ணமங்கைக்கு நிர்வாஹகனானவனுடைய திருவடிகளைப்பேணி, அவனை ஹ்ருதயத்திலே எண்ணாத மநுஷ்யரை. (எண்ணாத போதெல்லாமினியவாறே) பகவத்ஜ்ஞாநமும் வேண்டா; வைஷ்ணவ ஸஹவாஸமும் வேண்டா; அவைஷ்ணவர்களை நினையாதபோது - இனிதென்கை. .... (எ)

மூ.—மறங்கிளர்ந்த கருங்கடல்நீருரந்துரந்து
பரந்தேறி யண்டத்தப்பால்
புறங்கிளர்ந்தகாலத்துப் பொன்னுலக
மேழினையு மூழில்வாங்கி

அ;—ஏழாம்பாட்டு. (மண்ணுமித்யாதி) கீழ்ப்பாட்டிலே "தகவற்றீரே" என்று ஸவிநயமாகச் சொன்னாலும், குரங்குப் பிடிபோலே பிடித்ததையே பிடித்துக்கொண்டு மூர்க்கராயிருக்கும் படியைக் கண்டு, "இவர்களோடு நாம் வார்த்தையிடுகை நமக்கு துக்க மித்தனை போக்கி பலிப்பதில்லை" என்று கைவாங்குகிறுரென்றுஸங்கதி.

(உண்ணப்போகாது) என்றதுக்கு விவரணம் (தகையவொண்ணுதென்று) என்கிறது. அதாவது - இவையெல்லாம் கூடியும் ப்ரளயத்தைத் தகையமாட்டாதென்று விசாரித்தென்றபடி. ... ... (எ)

அறங்கிளர்ந்த திருவயிற்றினகம்படியில்
வைத்துன்மை யுய்யக்கொண்ட
நிறங்கிளர்ந்தகருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர்தாமே. (அ)

பதம்.	உரை.	பதம்.	உரை.
மறங்கிளர்ந்த	கொடுமைபொருந்திய	அறம்	ரக்ஷணதர்மத்தாலே
கருங்கடல்	கருங்கடலின்	கிளர்ந்த	விஞ்சின
நீர்	ப்ரவாஹமானது	திருவயிற்றின் அகம்படியில்	திருவயிற்றினுள்ளே
உரம்	வேகத்தாலே	வைத்து	வைத்து
துரந்து	ஓடி	உம்மை	உய்யக்கொண்ட;
பரந்து	சுற்றும்பரம்பி	கருநிறங்கிளர்ந்த	கருமைமிக்கிருந்துள்ள
அண்டத்து அப்பாற்புறம்	அண்டகடாஹத்துக்கு அவ்வருகாக	சோதி	தேஜஸ்ஸையுடைய
ஏறி	வ்யாபித்து	நெடுந்தகையை	ஸர்வேஶ்வரனை
கிளர்ந்தகாலத்து	கிளர்ந்த ஸமயத்திலே	நினையாதார் தாம்	நினைக்கப்பெருதவர்கள்
பொன்	ஸ்ப்ருஹணீயமான	நீசர்	மிகத்தண்ணியர்கள். (அ)
உலகம்எழினையும்	உலகங்களனைத்தையும்		
ஊழில்வாங்கி	முறையாலேவாங்கி,		

வ்யா.—எட்டாம்பாட்டு. (மறங்கிளர்ந்த கருங்கடல் நீருரந் துரந்து பரந்தேறி) உரத்தாலேயோட்டி அண்டத்துக்கவ்வருகாக. புறங்கிளர்ந்த காலத்து, ஸ்ப்ருஹணீயமான லோகங்களை முறையிலே வாங்கி ரக்ஷ்யத்தினளவல்லாத ரக்ஷணதர்மத்தாலே விஞ்சின திருவயிற்றினுடைய உள்ளேவைத்து உம்மை உய்யக்கொண்ட. (நிறங்கிளர்ந்த) கறுத்திருந்துள்ள தேஜஸ்ஸையுடைய ஸர்வேஶ்வரனை நினையாதார் தண்ணியவர்கள். .... (அ)

அ.ரு—எட்டாம்பாட்டு. (மறமித்யாதி) தாம் உபதேசித்ததிலும் கை வாங்க ஒருப்படவும் க்ருபை காற்கட்டுகையாலே “இன்னும் மீள்வர்களோ” என்னும் நோயாசையாலே நிந்திக்கிறரென்றுஸங்கதி. மீளவேணுமென்றிறே இவர் நிந்திக்குமது.

“துரந்து” என்றதினர்த்தம் (ஓட்டி)என்றது. “அறங்கிளர்ந்த” என்றதினர்த்தம் (ரக்ஷ்யத்தினித்யாதி). ... ... (அ)

மூ.—அண்டத்தின்முகடழுந்த வலைமுந்நீர்த்
திரைததும்ப வாவாவென்று
தொண்டர்க்கு மமரர்க்கும் முனிவர்க்கும்
தானருளி யுலகமேழும்
உண்டொத்த திருவயிற்றினகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட
கொண்டற்கை மணிவண்ணன்தண்
குடந்தைநகர் பாடி யாடீர்களே. (௯)

பதம்.	உரை.
அண்டத்தின் முகடு	அண்டபி(ரு)த்தியானது
அழுந்த	உள்ளே அழுந்த,
அலை	அலையையுடைய
முந்நீர்	கடலானது
திரை	திரைக்கிளப்பத்தாலே
ததும்ப	செறிய,
ஆ ஆ என்று	அய்யோ! அய்யோ! என்று
தொண்டர்க்கும்	(தன்னிடத்தில்) பக்திபண்ணினவர்களுக்கும்
அமரர்க்கும்	தேவர்களுக்கும்
முனிவர்க்கும்	ருஷிகளுக்கும்
தான் அருளி	தான் க்ருபைசெய்து
உலகம்எழும் உண்டு;—	
ஒத்த	(மற்றஅவயவத்தோடு) ஒத்திராநின்றுள்ள
திருவயிற்றின் அகம்படியில் வைத்து	
உம்மை உய்யக்கொண்ட;—	
கொண்டல்	மேகம்போலே (உதாரமான)
கை	கையையுடையனாய்
மணிவண்ணன்	மணி போன்ற நிறத்தையுடையனான) எம்பெருமானுடை[ய
தண்	ப்ரமஹரமான
குடந்தைநகர்	திருக்குடந்தை என்னும் திருப்பதியை
பாடி	(வாயாரப்) பாடி
ஆடீர்கள்	ஆடுங்கள். (௯)

அநு.—ஒன்பதாம்பாட்டு. (அண்டத்தினித்யாதி) இவர், நீசரென்று நிந்திக்க, "நீர் எங்களை நிந்திப்பானென்? நீர் ஒருகால் சொன்னப்போலே ஒன்பதின்கால் சொன்னாலும் ருசிபிறவாமைக்கடி எங்கள்பாபமன்றோ? அதுதீரும் வழி என்" என்ன; (௧)"சொல்லுகேன் வம்மின்சூழ் புனல்குடந்தையே தொழுமின்" என்று அடியிலேதானே சொன்னபடியே, "திருக்குடந்தையைப் பாடி ஆடுங்கோள், பாபங்களும் அழியும்" என்று உபதேசிக்க, உபக்ரமித்தபடியைத் தலைக்கட்டுகிறாரென்று ஸங்கதி.

"కుమ్భకోణేకృతం పాపం కుమ్భకోణేవినశ్యతి- கும்பகோணேக்ருதம் பாபம் கும்பகோணேவிநஶ்யதி" என்றிறே அதினேற்றம்.

(௧) ௧-௧-எ.

வ்யா.—ஒன்பதாம்பாட்டு. (அண்டத்தின் முகடழுந்த) அண்டபித்தியானது உள்ளே அழுந்த. அலையையுடைத்தான முந்நீரானது திரைகளாலே செறிய, "ஐயோ, ஐயோ" என்று தன்பக்கலிலே பக்திபண்ணினவர்களுக்கும், மநநம்பண்ணினவர்களுக்கும், தேவர்களுக்கும் தானருளி, உலகமேழையுமுண்டு ப்ரளயம்தேடுகிறதென்று இளைத்துக்காட்டி அல்லாத வவயவத்தோடொத்த திருவயிற்றினுள்ளேவைத்து உம்மை உய்யக்கொண்ட. மேகம்போலே உதாரமான கையையுடையனாய் மணிபோலே ஸ்ரமஹரமானநிறத்தையுடையவன் ஸ்ரமஹரமான திருக்குடந்தையைப்பாடி ஆடீர்களே.

மூ.—தேவரையு மசுரரையும் திசைகளையும்
கடல்களையும் மற்றும்முற்றும்
யாவரையுமொழியாமே யெம்பெருமானு
ண்டுமிழ்ந்த தறிந்துசொன்ன
காவளரும்பொழில் மங்கைக் கலிகன்றி
யொலிமாலை கற்றுவல்லார்
பூவளரும்திருமகளா லருள்பெற்றுப்
பொன்னுலகில் பொலிவர்தாமே. (க௦)

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்.

பதம்.	உரை.
தேவரையும்	தேவர்களையும்
அசுரரையும்	அஸுரர்களையும்
திசைகளையும்	திக்குக்களையும்
கடல்களையும்	ஸப்தஸாகரங்களையும்
மற்றும்முற்றும்	மற்றுமுள்ள
யாவரையும் ஒழியாமே	ஸமஸ்த பதார்த்தங்களையும் ஒன்றுதப்பாமல்
எம்பெருமான்	ஸர்வேஸ்வரன்
உண்டு	அமுதுசெய்து
உமிழ்ந்தது	(பின்பு) உமிழ்ந்தருளினதை
அறிந்து	உள்ளபடி அறிந்து
சொன்ன	அருளிச்செய்த
காவளரும்	பூஞ்சோலைகள் வளரப்பெற்ற
பொழில்	வயல்களையுடைய
மங்கை	திருமங்கைக்கு நிர்வாஹகரான
கலிகன்றி	ஆழ்வாருடைய
ஒலிமாலை	சொல்மாலையான இப்பாட்டுக்களை
கற்று	அப்யஸித்து
வல்லார்	(அர்த்தஜ்ஞாநத்திலே) ஸமர்த்தராமவர்கள்
பூவளரும் திருமகளால்	பெரியபிராட்டியாராலே
அருள்பெற்று	அருளைப்பெற்று
பொன்உலகில்	நித்யவிபூதியிலே
பொலிவர்	விளங்கப்பெறுவர்கள்.

(க௦)

வ்யா.—பத்தாம்பாட்டு. (தேவரையுமித்யாதி) இப்பாட்டுக்கு இடையே பொருள். (காவளரும்) திரண்டுபரந்த சோலைகள். (க௦)
பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழி
பதினோராம்பத்து ஆறுந்திருமொழி
முற்றிற்று.

ஆழ்வார்திருவடிகளே சரணம்.

பதினோராம்பத்து ஏழாந்திருமொழி
நீணகம்ப்ரவேசம்.

வ்யா;—ஸர்வேஸ்வரன் தன்னை அநுபவிக்கக்கொடுத்த கரணங்களைக் கொண்டு வ்யர்த்தமே திரிகிறவர்களை, அவனுடைய செயல்களை அநுபவியாதவர்கள் கரணங்கள் ஒன்றுமன்றென்கிறார்.

மூ;—நீணகம் சுற்றி நெடுவரைநட் டாழ்கடலைப்
பேணான்கடைந் தமுதம்கொண்டுகந்த பெம்மானைப்
பூணாரமார்வனைப் புள்ளூரும் பொன்மலையைக்
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே. (க)

அரு;—பத்தாம்பாட்டு. (தேவரித்யாதி) இப்பாட்டுக்கு வ்யாக்யாநத்துக்கு அவகாசம் காணாமையாலே அருளுகிறார் (இப்பாட்டுக்கித்யாதி). (இடையே) என்றது - த்வயத்தின் க்ரமத்திலே யென்னவுமாம்; அதாவது- "திருமகளாலருள்பெற்று" என்றத்தால் "த்வயத்தில்பெரியபிராட்டியாராலே பேறு" என்கிறபடியே, பலஸ்ருதியிருக்கிறதே யென்கை. (க௦)
ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

நீணகம்ப்ரவேசம்;-"சூழ்புனல்குடந்தையே தொழுது என்நாவினாலுய்ய நான் கண்டு கொண்டேன்" என்று தொழுதவராமத்தையே "குடந்தையே தொழுமின்" என்று அடியிலே உபதேசித்து, அத்தைக்கீழ்த்திருமொழியிலும் "தண்குடந்தை நகர் பாடியாடீர்களே" என்றுஉபதேசித்துத் தலைக்கட்டினபின்பும், க்ஷுத்ரபுருஷார்த்தங்களில் நப்பாசையாலே விஷயாந்தரங்களிலே ப்ரவணராய், கரணகளேபரங்களை அதுக்கு உறுப்பாக்குவராயிருக்கையாலே நிந்திக்கிறாரென்று ஸங்கதியை உட்கொண்டு, திருமொழி ப்ரமேயத்தை ஸங்க்ரஹேணவருளுகிறார் (ஸர்வேஸ்வரனித்யாதி). (வ்யர்த்தமே திரிகிறவர்களை,)என்றவநந்தரம் "நிந்தித்து" என்று சேஷம். *

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீள்	தீர்க்கமான	மார்வனை	திருமார்பையுடையனுய்
நாகம்	வாஸுகியை	புள்	பெரியதிருவடியை
சுற்றி	(கடைகயிறாகச்) சுற்றி	ஊரும்	ஏறிநடத்தவல்லானுய்
நெடுவரை	மந்தரத்தை	பொன்மலையை	பொன்மலைபோலே
நட்டு	(மத்தாக) நாட்டி		போ(லு)ம் ஈச்வரனை ஸர்வேஶ்வரனை
ஆழ்கடலை	கம்பீரமான கடலை	காணுதார்	ஸேவிக்கப்பெருதவர் களுடைய
பேணான்	(நமக்குப்படுக்கையன்றோ என்று) பேணு	கண்	கண்களானவை
கடைந்து	கடைந்து [தவனுய்	என்றும்	ஒருநாளும்
அமுதம்	அம்ருதத்தை	கண் அல்ல	கண்களாகமாட்டா;
கொண்டு	(தேவர்களுக்கு) எடுத்துத்தந்து	கண்டாமே	(இதைநாம்) அறிவோமே. (க)
உகந்த	திருவுள்ளமுகக்கப் பெ		
பெம்மானை	ஸ்வாமியாய் [ற்ற		
ஆரம்பூண்	ஹாராலங்க்ருதமான		

வ்யா,—முதற்பாட்டு. (நீணாகம்சுற்றி) மஹாமேருவிலே சுற்றியும் பின்னையும் வாஸுகி நீண்டபடி. (நெடுவரைநட்டு) சுற்றுடைத்தாய் நீண்டிருந்துள்ள மஹாமேரு ஒருவரால் பேர்க்கும்படியன்றிறே யிருப்பது; அத்தைக்கொடுவந்து ஸமுத்ரத்துக்குக் கண்செறியிட்டாப் போலே நாட்டி. (ஆழ்கடலை) ஒன்றாலும் சலிப்பிக்கவொண்ணுத பெரிய பதார்த்தத்தை. (பேணான் கடைந்து) இரப்பாரைப் பெற்றால் படுக்கையென்றும் பாரான். (அமுதம் கொண்டுகந்த) பிறர்க்கு உபகரித்தானுயிராதே தன் பேறாக உகந்தான். (பெம்மானை) இப்படிச் செய்கிறது உடையவனுகையாலே.

(பூணாரமார்வனை) இவர் தம்முடைய அம்ருதம். (புள்ளூரும் பொன்மலையை) ஸர்வாபரண பூஷிதனுய், பெரியதிருவடிதோளிலிருந்த விருப்பு-ஒரு பொன்மலைமேலே ஒருபொன்மலை யிருந்தாப்

அரு;—முதற்பாட்டு. (நீணாகமித்யாதி). (மஹாமேருவை) என்றது-மந்தரத்தை. மந்தரம் மேருவினுடைய 'ஏகதேசமிறே.

"பூண்களார்ந்தமார்வனை என்று" சப்தார்த்த முட்கொண்டு, ஸமபிவ்யாஹார தாத்பர்யமருளுகிருர் (ஸர்வேத்யாதி). "மகன்" என்று சொல்லிவைத்து

போலே. (காணாதார்கண்ணென்றும் கண்ணல்ல) இதுக்கு முன்பு கண்டவை என்றும் கண்ணல்ல. (கண்டாமே) க்ஷேபமாகக் கண்டாமே யென்கிறார். (௧)

மூ;—நீள்வான்குறளுருவாய் நின்றிரந்துமாவலிமண்
தாளாலளவிட்ட தக்கணைக்குமிக்கானைத்
தோளாதமாமணியைத் தொண்டர்க்கினியானை
கேளாச்செவிகள் செவியல்லகேட்டாமே. (௨)

பதம்.	உரை.	பதம்.	உரை.
நீள்வான்	நீண்டுவளருவதற்காக	மாமணியை	நீலமணிபோன்றவனாய்
குறள்உருஆய்	வாமநவேஷதா(ரூ)ரியாய்	தொண்டர்க்கு	பாகவதர்களுக்கு
நின்று	(யஜ்ஞவாடத்திலே) நின்று	இனியானை	போக்யபூதனான ஸர்வேஶ்வரனை
மாவலி	மஹாபலியிடத்தில்	கேளா	ஶ்ரவணம் பண்ணப்பெறாத
மண்	(மூவடி) மண்ணை		
இரந்து	யாசித்து,	செவிகள்	காதுகள்
தாளால்	திருவடிகளாலே	செவிஅல்ல	காதுகளாகமாட்டா; (இவ்வர்த்தத்தை,
அளவிட்ட	அளந்தருளினவனாய்,		
தக்கணைக்கு	தக்ஷிணாதாநத்துக்கு	கேட்டாம்	பலகால் பெரியோர்கள் பக்கலிலே) கேட்டிரா நின்றோம்.
மிக்கானை	அப்ய(ர்த்)ர்ஹிதபாத்ரபூதனாய் [காத		
தோளாத	துளைபட்டு ஒளிமழுங்		(௨)

கண்ணல்லவென்று சொல்லக்கூடுமோ வென்னவருளுகிறார் (இதுக்கித்யாதி). பொன்மலை காண்கைக்கு முன்னாக விஷயங்களைக் காண வல்லதுகளாயிருந்தாலும், காலமெல்லாம் "கண்" என்றுசொல்லவொண்ணாது, "பீலிக்கண்" என்றாப்போலே உபசரித்துச் சொன்னதாக வேணுமென்று கருத்து. "கண்டாமே" தாமும் மற்றும்ஶ்ரீவைஷ்ணவர்களையும் கூட்டிக்கொண்டு அவர்களைக்ஷேபிக்கவேண்டி இசைவிக்கிறாரென்றருளுகிறார் (க்ஷேபேத்யாதி). (௧)

அரு;—இரண்டாம்பாட்டு. (நீள்வானித்யாதி) பொன்மலையைப் போய் காணமாட்டாரே யாகிலும், இருந்தவிடத்திலிருந்து தங்களை அடிக்கீழிட்ட படியைக் கேட்கச் செவிதாழ்க்கலாமே, அதுவும் செய்யாதார் செவி-செவியன்றென்று செப்புவாருண்டே, அதுவும் கேட்டோமே யென்று க்ஷேபிக்கிறாரென்று ஸங்கதி.

வ்யா;—இரண்டாம்பாட்டு. (நீள்வான்) நீளுகைக்கு நரிப்பூணூ விட்டாப்போலே நின்றபடி. அன்று செய்தகீர்த்தி கொண்டாட நீளவென்னுமாம். (குறளுருவாய்) சுருங்க நின்றதனையும் பெருக்கவளருகைக்கு உறுப்பாக. (நின்றிரந்து) வடிவே அமைந்திருக்கச்செய்தே அதுக்குமேலே அவனைஇரந்து. (மாவலிமண்) அவன் என்னதென்றபிமாநித்தபூமி. (தாளாலளவிட்ட) திருவடிகளுக்கிடாகக் கீழே இட்டுக்கொண்டு நின்றபடி. (தக்கணைக்கு மிக்கானை) தக்ஷிணையாக மஹாபலிகொடுத்த கொடை இன்னம் போராதென்னும்படி யிருந்தவன். பூஜ்யதமனானவனை.

(தேராளாத மாமணியை) துளைபட்டுச் சிலர் விநியோகம் கொண்டன்றிக்கே அநுபபு(ஃ)க்தமாய் ஒளிமழுங்காதே ஜாதியான ரத்நத்தை. (தொண்டர்க்கினியானை) (க)"உன்னைப்பிரமாணித்தார் பெற்றபேறு" என்று ஆஶ்ரிதர் ஈடுபட்டு நெஞ்சிலே எப்போதும் அநுபவித்திருக்குமவன். (கேளாச்செவிகள்) அவனுடைய கீர்த்தி கேட்கவென்றால், "கேளோம்" என்னுமவர்செவி-செவியல்ல-; (கேட்டாமே) க்ஷேபம். .... (உ)

மூ;—தூயானைத் தூயமறையானைத்தென்னாலி
மேயானை மேவாருயிருண்டமுதுண்ட
வாயானை மாலைவணங்கி யவன்பெருமை
பேசாதார் பேச்சென்றும் பேச்சல்லகேட்டாமே. (௩)

பதம்.	உரை.	பதம்.	உரை.
தூயானை	பவித்ராணும் பவித்ரனுய்,	மேவார்	தன்பக்கல்பொருந்தாதபூதனையின்
தூய	(அபௌருஷேயத்வாதிகளால்) பரிசுத்தமான	உயிர்	ப்ராணனை
மறையானை	வேதங்களாலே ப்ரதிபாதிக்கப்படுமவனுய்,	உண்டு	(விஷமிஶ்ரஸ்தந்யபானத்தினுல்) முடித்தருளி
தென்	அழகிய	அமுது	(அதற்குப்பரிஹாரமாக) தாயின்ஸ்தந்யத்தை
ஆலி	திருவாலியிலே		
மேயானை	பொருந்திவர்த்திக்குமவனுய்,	உண்ட	அமுதுசெய்த

(நரிப்பூண்நூலிட்டாப்போலே) என்றது - உத்யோகித்தாப்போலே என்றபடி. முந்தினபக்ஷத்திலே தாத்பர்யம் (சுருங்க வித்யாதி) ,கீழ்வாக்ய பலிதம் (பூஜ்யேத்யாதி). அர்த்தாந்தரமாதல். ... ... (உ)

(க) உ-திருவ-சுக.

வாயானை	வாயையுடையனாய்	பெருமை	மாஹாத்ம்யத்தை
மாலை	ஆஶ்ரிதவ்யாமுக்த(ஜ)னை ஸர்வேஶ்வரனை	பேசாதார்	பேசப்பெறாதவர்களுடைய
வணங்கி	திருவடிதொழுது	பேச்சு	பேச்சுக்களானவை
அவன்	அந்தஎம்பெருமானுடைய	என்றும் பேச்சல்ல கேட்டாம்- (ந)	

